தாய்வீடு

THAIVEEDU | JUNE 2019 ஜூன் | HOME & LIVING | One Dollar | www.thaiveedu.com | info@thaiveedu.com

வீட்டின் சக்தி விரயக் கட்டுப்பாடு

அரங்கியற் கலையின் தலைமகன் ஏ.சி. தாசீசியஸ்

படம்: K. கிருஷ்ணராஜா

ISSN 2369-3657

NAVA WILSON LLP BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210 Toronto, ON M1B 3C6
416.321.1100 | 416.321.1107 | info@navawilson.law | www.navawilson.law

RAMAN HOME COMFORT INC HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராறியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah, Sales Person, 647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success 500+ Agents
Selva Vettyvel, Broker of Record, HomeLife/Future Realty Inc., Brokerage 416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel, Barrister and Solicitor, Real Estate Law 416.261.1544

AEREN Thiyagarajah BEng, Realtor, aeren.realtor@gmail.com, Dir: 647-888 3500
DILEEP Thangavel, Realtor, dileep.realtor@gmail.com, Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

BonaFide Mortgage Solutions Inc. the true freedom...
Brokerage Lic# 10216
Suren Nathan AMP, Mortgage Broker, License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம் வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam, Sales Representative
Sujatha Kunasegar, Sales Representative
416.402.4545

J&L JURIANSZ & LI
VITHU RAMACHANDRAN, BARRISTER & SOLICITOR
Litigation, Real Estate, Employment, Family, Estate, Corporate
Tel: 416-505-3350 | Email: vithu@jurianszli.com
Address: 1100 - 5700 Yonge St., Toronto ON

Ahilan Thanabalasingham, Sales Representative
RE/MAX Royal Properties
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH 416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMID GROUP

• வீடு • ... • இலக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்வீடு
THAIVEEDU HOME & LIVING

வன்மம் வளரும் உலகம்

இன்றைய உலகமும் உலக ஒழுங்குகளும் மனிதநேயத்தை விட்டொதுக்கிவிட்டு வெறுப்பு உமிழ்வனவாக மாறி வருகின்றனவோ எனும் அச்சம் வலுவாகவே ஏற்பட்டு வருகின்றது.

புதிய ஆழமான அற விழுமியங்களை நோக்கி மானுடம் உயர வேண்டும் என்பதற்காகவே, செழுமையான கல்விச் சூழல்களும் மானுடத்தைப் போற்றும் உரிமைகளும் சட்டங்களும் உலக நிறுவனங்கள் பலவும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றை மேம்படுத்தும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

எனினும் அவை பெரிய தாக்கங்களை ஏற்படுத்துவதில்லை. ஏன் என்பதற்கான விடை மிக எளிது: மானுட நலன்களை விட, பொருள் மேட்டிமையையும் நிகரற்ற இலாபத்தையும் குறிக்கோளாகக் கொண்ட அரசியல், பொருளாதார ஒழுங்கே இப்போது உலகாளும் பொறிமுறை.

இந்தப் பொறிமுறையின் தருக்கரீதியான உப விளைவே மனிதநேய சிந்தனைகளைச் சிதைத்தபடி வன்ம உணர்வுகள் உலகெங்கும் படர்ந்து பயங்கரமாகவும் எழுவது.

கடந்த பல ஆண்டுகளாகவே மதவாதத் தாக்குதல்களும் வெறுப்பரசியல் உருவாக்கும் வன்முறைகளும் உலகெங்கும் பெருகி வருகின்றன. இவற்றுக்கான கருத்தியல், நிறுவன ஆதரவை மத நிறுவனங்களும் பல அரசாங்கங்களும் தருகின்றன. இனவாதத்தையும் வெள்ளையின மேலாண்மையையும் வெளிப்படையாகப் பேசுவது, அதற்காகத் தாக்குதல்கள் நிகழ்த்துவது என்பன டொனால்ட் ட்றம்ப் அமெரிக்க அதிபராக வந்த பிற்பாடு சாதாரண விடயங்களாகிவிட்டன.

கனடாவிலும் எப்போதுமே இல்லாத அளவுக்கு வெள்ளை இனவெறிக் குழுக்கள் அதிகரித்து விட்டன. டக் ஃபோர்ட் ஒன்ராறியோவின் முதல்வராக வந்த பிற்பாடு நிலைமை இன்னும் மோசமாகி வருகிறது. பகிரங்கமாகவே வெள்ளை இனவெறியையும் சிறுபான்மை எதிர்ப்பையும் பரப்பி வரும் ஃபெய்த் கோல்டி போன்றவர்களுக்கு 25,000 வாக்குகள் இங்கே மேயர் தேர்தலில் கிடைக்கின்றது.

நியுசிலாந்தில் நடைபெற்ற பள்ளிவாசல் தாக்குதலும் கடந்த ஆண்டு கியூபெக் மாகாணத்தில் நடைபெற்ற தாக்குதலும் இவை போன்ற வேறும் பல தாக்குதல்களும் எவ்வாறு தனிநபர்கள் இத்தகைய வெறுப்பரசியலால் உந்தப்பட்டு, வன்முறைகளில் ஈடுபடுகிறார்களென்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

அமெரிக்காவில் ஏற்பட்ட மாற்றங்களைப் போலவே, உலகின் பல நாடுகளிலும் ஏற்படும் மாற்றங்களும் தீவிர இனவெறிப் போக்குகளைக் கொண்ட அரசுகளையே ஏற்படுத்துகின்றன. ஹங்கேரி, பிரேசில், அவுஸ்திரியா, போலந்து, இந்தியா, மியன்மார், அவுஸ்திரேலியா போன்ற பல நாடுகளைக் குறிப்பிடலாம்.

உலகெங்கும் வாழும் பன்னூறு கோடி மக்களின் பாதுகாப்பான வாழ்வு வன்முறையற்ற உலகத்திலேயே உறுதிப்படுத்தப்படும். வன்முறைகள் பெருகிவரும் இக்காலகட்டத்தில் பெருந்தொகை மக்களின் பாதுகாப்பான வாழ்வு அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றது.

வன்முறைகளை நோக்கிச் செல்லும் உலகளாவிய போக்குகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மதவாதத் தாக்குதல்களுக்கும் இனவெறித் தாக்குதல்களுக்கும் எதிரான செயற்பாடுகளை அரசுகள் தீவிரமாக முன்னெடுக்கும் என எதிர்பார்க்க முடியாது. சிவில் சமூகத்துக்கும் இவற்றை நிறுத்துவதிலும் இவற்றுக்கு எதிரான கருத்தியலைப் பரப்புரை செய்வதிலும் முக்கிய பங்கு இருக்கிறது. ஊடகங்களுக்கும்தான்.

எந்நிலையிலும் மனித நேயத்தையும் உயர்ந்த மானுடப் பண்புகளையும் மறுதலித்துச் செயற்பட முற்படுவோரும் சமூகப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்களே. அவர்கள் பலமானவர்கள். நமது போராட்டமும் கடினமானது. ஆனால் வேறு வழியில்லை.

முகப்பு படம்: K. கிருஷ்ணராஜா

Publisher & Editor : PJ. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

நிறுவன வரைகலைஞர் : கருணா

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், பொன்னையா விவேகானந்தன், ரவிச்சந்திரிகா.

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை), டிராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), ரமணி (இலங்கை), சௌந்தர் (இங்கிலாந்து), றஷ்மி (இங்கிலாந்து).

புகைப்படங்கள் : K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : ஜீவா, சாம் டானியல்.

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

பொது உறவுத் தொடர்பு : குமணன் தம்பிஐயா

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி, மெய்யழகன்.

மொன்றியால் தொடர்பு : சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்பு : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

Printed on recycled paper

அரங்கியற் கலையின் தலைமகன் ஏ.சி. தாசீசியஸ்

ஈழத்தமிழர் அரங்கை அனைத்துலக அளவில் பரிணாமம் அடையவைத்தோருள் மிகமுக்கியமான ஆளுமையான நாடகர், ஊடகர், ஏடகர் ஏ.சி. தாசீசியஸ் அவர்களின் பவளவிழா மலர் ரொறன்ரோவில் வெளியீடு காண்பதை முன்னிட்டு, இச்சிறப்புப் பகுதி வெளியாகின்றது.

தீவிரவாதம் பயங்கரவாதமாகி நுழைந்த ஒட்டை

- முஸ்டீன்

இலங்கைத் தொடர் குண்டு வெடிப்புப் பற்றிய பல்கோணப் பார்வை.

குரக்கன் சமையல்

- P. பிரியா பாஸ்கர்

நம் பாரம்பரிய ஆரோக்கிய உணவும் செய்முறையும்.



வீட்டின் சக்தி விரயக் கட்டுப்பாடு

- பிரபா சின்னா

நம் வீட்டில் ஏற்படும் சக்தி விரயத்தை, கட்டுப்படுத்துவதற்கான பல வழிமுறைகள்.

ஆபிரிக்கப் புழுதியும் அறியப்படாத உண்மைகளும்

- உமை பற்குணரஞ்சன்

பண்டைய நாகரிகம் இன்று புழுதிகளால் மூடிய ஒரு பாலைவனம்.

ஒய்ந்து கொண்டிருக்கும் ஐ.எஸ். தீவிரவாதமும் இலங்கையில் சிறுபான்மையினர் மீதான வன்முறையும் 4
அ. கணபதிப்பிள்ளை

இந்தியாவைத் தாக்கிய மோடி சுனாமி - தப்பியது தமிழகம் 5
நேரு குணரட்ணம்

முள்ளிவாய்க்காலும் கனடிய அரசியலும் 11
நேரு குணரட்ணம்

இதய நோய்கள் 12
ரவிச்சந்திரிகா

ஆண்மை நஞ்சாகுமா? ஆண்கள் உளநல சிகிச்சைக்கான வழிகாட்டி 13
புஷ்பா கனகரட்ணம்

மனம் என்னும் மந்திரக்கோல் 15
பாதுசா ஆனந்தநடராசா

பார்வைக் கண்ணாடிகள் 19
எஸ். பத்மநாதன்

வீட்டை உயர்ந்த விலைக்கு விற்பது எப்படி? 25
வேலா சுப்ரமணியம்

கோடைகாலமும் வாகன ஓட்டமும் 32
செந்தூரன் புனிதவேல்

உறுப்பு மற்றும் இழையம் தானம் செய்யுங்கள் 34

பெற்றோர் பிள்ளை உறவும் கற்பதில் பங்கெடுத்தலும் 36
த. சிவபாலு

பிரச்சினைகளற்ற கோடை விடுமுறை 38
ஜீவா திசைராஜா

பாரிஸ் ஈபெல் கோபுரம் 45
குரு அரவிந்தன்

Funded by the Government of Canada | Canada

மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்ந்துகொண்டிருக்கும் ஐ.எஸ். தீவிரவாதமும் இலங்கையில் சிறுபான்மையினர் மீதான வன்முறையும்

- அ. கணபதிப்பிள்ளை -

சிறுபான்மை இனங்களையும் சிறுபான்மை மதங்களையும் இலங்கை அரசாங்கங்கள் பாதுகாக்கத் தவறிவிட்டன என்ற பொது வான குற்றச்சாட்டு குண்டு வெடிப்பின் பின்னர் பல சர்வதேச ஊடகங்களூடாகச் சொல்லப்பட்டிருந்ததனைக் காணமுடிந் தது.

அரசாங்கங்களினதும் செல்வாக்குள்ள அரசியல்வாதிகளினதும் பாதுகாப்புக் கிடைத்துக் கொண்டிருக்கும் எந்த இன மும் மற்றைய இனத்தின் மீதோ அல்லது இனத்தின் ஒருபிரிவினர் மீதோ வன்முறை யினைப் பிரயோகிக்கத் தயங்குவதில்லை. இதுவே இலங்கையில் பலதசாப்தங்களாக நிகழ்ந்துகொண்டிருக்கும் சிறுபான்மையி னர் மீதான வன்முறை வட்டத்துக்கு அடிப் படையாக அமைந்திருக்கிறது. அதனைத் தடுத்து நிறுத்தவும் இதயசுத்தியுடன் செயற்படவும் இன்றுவரை அரசியல்வாதி கள் தயாராயில்லை.

சிறுபான்மை இனங்களைப் பிரித்து, உதி ரிகளை உயர்வுநிலையில் வைத்துப் பிரித்தாளும் கொள்கையினைப் பின்பற் றும் பெரும்பான்மை இன அரசியற் தலை மைகளுக்கெதிராக முஸ்லிம்களோ தமி ழர்களோ ஒன்றுபட்டுச் செயற்படத் தயா ராயில்லை. இப்படியான தனிநபர் முதன் மைக் குழுக்கள் முரண்பாடுகளைத் தோற் றுவித்துக் கொண்டிருக்கின்றன. அரசாங் கங்களுடன் கூட்டணிபோட்ட சில தமிழ், முஸ்லிம், தனிநபர்கள் ஒட்டுண்ணி அரசி யலுக்காகவே தவறுகளைத் தட்டிக்கேட் கும் திராணியற்றவர்களாக மாறிவிடுகின் றனர்.

ஏப்பிரல் 21ந் திகதி உயிர்த்த ஞாயிறு தினம், குறிப்பாக இலங்கையில் வாழும் தமிழ்க் கிறிஸ்தவ மக்களுடைய துக்க நாள். காலையில் மூன்று தேவாலயங்களில் நிகழ்த்தப்பட்ட மனிதக்குண்டு வெடிப்பில் பலியாக்கப்பட்டவர்களில் பெரும்பாலா னவர்கள் தமிழர்கள். இந்த நிகழ்வுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற பயங்கரவாத அமைப்பு முன்வந்து உரிமைகோரியிருந் தாலும் நிகழ்த்தப்பட்டவை எல்லாமே இலங்கையின் தயாரிப்புகள் தான் என்ற ஊகமே ஆய்வுக்குரியதாக முன்வைக்கப் பட்டிருந்தது.

இலங்கைத் தேசிய தௌஹீத் ஜமாஅத் என்ற தீவரவாத இயக்கம் குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருந்ததுடன் ஐ.எஸ் பயங்கரவாத சித்தாந்தத்தினை உள்வாங்கிப் புதியமு றையிலான கட்டமைப்பினை உருவாக்கி யிருந்ததாகச் சொல்லப்படுகிறது. பல பயிற்சி முகாம்கள் ஆயுதப் பயிற்சிக் கன்றி அடிப்படைக் கல்விப் போதனைக் கூடங்களாக இருந்தன என்ற கூற்று நம் பத்தக்கதாக இல்லாதிருப்பினும் போதிய ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படாத வரை யில் அத்தகைய ஊகத்தினை ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலையிலேயே மக்க ளிருக்கிறார்கள். கத்திகளும் வாள்களும் கைப்பற்றப்படுவதனைப் பார்த்தால் விட யம் மிகப் பெரிதானதாகக் காட்டப்பட வில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

17 பயிற்சி முகாம்களில் பயிற்சி கொடுக் கப்பட்டதாகவும் விடயம் வெளியில் தெரி யாதவகையில் குடும்பங்களை உள்ளடக் கிய வலையமைப்பினைக் கொண்ட தீவி ரவாதப் பயிற்சி முறை பின்பற்றப்பட்ட தாகவும் சொல்லப்பட்டதன் மூலம் ஐஎஸ் தீவிரவாதம் இலகுவில் அடக்கப்பட்டு விட்டதாகப் பாதுகாப்புப் பிரிவு சொல்லத் தொடங்கியிருக்கிறது. அத்துடன் தற்கொ லைக் குண்டுதாரியான தேசிய தௌஹீத் ஜமாஅத்தின் தலைவர் சஹரான் ஹாசிம் இறந்து விட்டதை மரபணு ஆய்வு உறுதி செய்துவிட்டதாகவும் சொல்லப்பட்டதால் இலங்கையில் ஐ.எஸ் தீவிரவாதம் பற் றிய பயம் இனி இல்லை எனவும் சொல் லப்பட்டிருக்கிறது.

குண்டு வெடிப்பு உள்ளூர் முஸ்லிம்களின் செயல் என்ற குற்றச்சாட்டினை அரசாங்க மும் ஏற்றுக் கொள்ளவில்லை. முஸ்லிம் அரசியற்தலைவர்களும் கூட உள்வாங் கப்பட்ட பயங்கரவாதம் என்ற கருத்தினை உறுதிப்படச் சொல்லத் தொடங்கிவிட்ட னர். உள்ளூர் இயக்கங்களது செயல் தொடர்பான ஆய்வில் அரசாங்கப் புல னாய்வுப் பிரிவுகளின் கண்டுபிடிப்புகள் வெளிக் கொணரப்பட முன்பாகவே ஊகத் தின் அடிப்படையில் பெரும்பான்மையி னப் பொதுமக்களின் இனவெறுப்புக் குற் றங்கள் உருவாகத் தொடங்கிவிட்டன.

இதனைச் சாட்டாக வைத்து முஸ்லிம்க ளின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் பெரும்பான்மையினர் சிலரது முயற்சிகள் வடமேல், வடமத்திய மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டன. அரசியல்வாதிக ளைத் தொடர்புபடுத்தியே அந்த நிகழ் வுகளும் சொல்லப்பட்டன.

இந்த நிலையில் அரசாங்கம் பொருத்த மான முடிவுகளைச் சரியான நேரத்தில் எடுக்கத் தவறியிருந்ததால் முஸ்லிம்களது உடமைகள் சேதப்படுத்தப்படுவதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த முடிய வில்லை. பயங்கரவாதச் செயற்பாடு நிகழ்த் தப்பட்ட பொழுது பாதுகாப்புப் பொறுப் பினைப் பெற்றுக் கொண்டிருந்த ஜனாதி பதி உள்நாட்டில் இருக்கவில்லை. பெரும் பான்மை மக்கள் குளப்பமடைந்து கொண் டிருக்கையில் சனாதிபதி சீனாவுக்குப்



தொடர்தல் 14ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவைத் தாக்கிய மோடி சுனாமி தப்பியது தமிழகம்

- நேரு குணரட்ணம் -

இந்தியாவின் 17வது மக்களவைக்காக நடைபெற்ற தேர்தலின் முடிவுகள் வெளியாகியுள்ளன. மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சி (பா.ஜ.க) மீண்டும் ஆட்சியமைக்கிறது. இந்நிலையில் தேர்தல் முடிவுகள் சொல்லும் செய்திகள் என்ன? எனப் பார்ப்போம்.

இந்தியாவின் 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களில் உள்ள 543 தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெறுவது வழக்கம். எனினும் தமிழகத்தில் ரத்துச் செய்யப்பட்ட ஒரு தொகுதித் தேர்தல் தவிர, ஏழு கட்டங்களாக நடைபெற்ற 542 தொகுதிகளிலான தேர்தல்களில், அளிக்கப்பட்ட மக்கள் வாக்குகளே கடந்த மே 23ம் நாள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டன.

30 ஆண்டுகளின் பின், அதாவது 1984 தேர்தலுக்குப் பின் தனித்து ஒரு கட்சியால் ஆட்சியமைக்க முடியாது என்ற நிலை மாறி, கடந்த 2014 தேர்தலில் 427 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்ட பா.ஜ.க, அக்கட்சியின் வரலாறாக 282 தொகுதிகளை வென்று, ஆட்சியமைக்கத் தேவையான 272 பெரும்பான்மையை தனிப்பெரும் கட்சியாகக் கொண்டு ஆட்சிக்கட்டில் ஏறியது. இச்சாதனையின் களநாயகனாக மோடி மகுடம் சூடப்பட்டார்.

இம்முறை ஐந்தாண்டுகள் ஆட்சியின் பின், தேர்தலை சந்திக்கும் பா.ஜ.கவால் அந்நிலையை எட்டமுடியாது என்றே கணிப்புகளும், களநிலைகளும் தெரிவித்தன. கூட்டணி சேர்த்த கட்சிகளுடன் இணைந்தே ஆட்சியமைக்கும் நிலை ஏற்படும் என்றெல்லாம் கருதப்பட்டது. இந்நிலையில், தனது இறுதிப்பரப்புரைகளில் இந்துத்துவா நிலைப்பாட்டில் கடும்போக்கு கருத்துகைள வெளியிட்டு, தேசிய ஒருமைப்பாடு சார்ந்த உணர்வை தட்டியெழுப்புவதில் மோடி வெற்றி பெற்றார் என்பதின் வெளிப்பாடு, இம்முறை 437 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்ட பா.ஜ.க வலாறாக 303 தொகுதிகளில் தனித்து வெற்றி பெற்று, கடந்த முறையிலும் பார்க்க 21 ஆசனங்கள் அதிகரித்த பெரும்பான்மையுடன் தனித்து மீண்டும் ஆட்சியமைக்கிறது.

புரட்டிப் போட்ட மோடி சுனாமி:

அதாவது கடந்த 2014 தேர்தலில், போட்டியிட்ட தொகுதிகளில் 66.04 சதவீத தொகுதிகளில் வெற்றியைப் பெற்றுக் கொண்ட பா.ஜ.க, இம்முறை தனது போட்டியிட்ட தொகுதிகளிலான வெற்றியை 69.34 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேவேளை கூட்டணியாக கடந்தமுறை வென்ற 336 தொகுதிகளில் இருந்து, கூட்டணியாக வென்ற தொகுதிகளின் எண்ணிக்கை வேறு இம்முறை 353 ஆக அதிகரித்துள்ளது. இதில் ஒன்றை நோக்கலாம். கடந்தமுறை 54 தொகுதிகளில் வெற்றி பெற்ற பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சிகள், இம்முறை 50 தொகுதிகளிலேயே வெற்றி பெற்றுள்ளன. சிவசேனா 18, ஐக்கிய ஜனதா தல் 16, லோக் ஜான் சக்தி 6, சிரோன்மணி அக்காலி தல் 2, அபனா தல் 2, அ.தி.மு.க உட்பட ஆறு கட்சிகள் தலா 1.

அத்துடன் கடந்த 2014 தேர்தலில், தனித்து இந்தியா தழுவி அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 31.34 சதவீதத்தைப் பெற்ற பா.ஜ.க, இம்முறை 6.12 சதவீத அதிகரித்த வாக்குகளுடன் 37.46 சதவித வாக்குகளைத் தனிக்கட்சியாக பெற்றுள்ளது. அதேபோன்று கூட்டணியாக கடந்தமுறை பெற்ற 38.5 சதவீதத்தில் இருந்து, இம்முறை 6.5 சதவீத வாக்குகளை அதிகம் பெற்று இந்தியா தழுவிய மொத்த வாக்குகளில் 45 சதவீதத்தை தன்னகப்படுத்தியுள்ளது.

இத்தேர்தல் மோடி மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு என்று கருதப்பட்ட நிலையில், அதில் மோடி பெருவெற்றி பெற்றுள்ளார் என்றே சொல்லலாம். இது அவரின் கட்சி மீதான பிடியையும், இந்தியாவில் தன்னிகரில்லாத் தலைமை நிலையையும், சர்வதேச அரங்கிலான அவரின் வலுநிலையையும் மேலும் வலுப்படுத்தியுள்ளது என்றே சொல்லலாம். இந்நிலையில் இவ்வாறான வெற்றி எங்கெல்லாம் கனிந்தது? கடந்தமுறை பெரு வெற்றி பெற்ற மாநிலங்களில், அந்நிலையை இம்முறையும் பா.ஜ.க தக்கவைத்தது என்றே சொல்லாம்.

சரிவு உண்டு என எதிர்பார்க்கப்பட்ட, 80 தொகுதிகளைக் கொண்ட பெரு மாநிலமான உத்திரபிரதேசத்தில், வெறும் ஒன்பது தொகுதிகளையே பா.ஜ.க இழந்தது. கடந்த முறை பெற்ற 71ல் இருந்து 62ற்கே அது கீழிறங்கியது. ஆனால் கடந்த முறை பெற்ற 42.30 சதவீத வாக்குகளில் இருந்து, அம்மாநிலத்தில் இம்முறை 7.26 சதவீத அதிகரித்த வாக்குகளுடன் 49.56 சதவீத வாக்குகளை எட்டியது என்பது இங்கு முக்கிய கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

தொடர்தல் 6ம் பக்கம்

வீட்டினுள்ளே இன்னும் வருபவை...

பஞ்சாங்கம் - புத்தாண்டு - புதுப்பொங்கல் 46
பால. சிவகடாட்சம்

கல்வி அழகே அழகு 53
நற்குணலிங்கம்

இன்ப இரகசியம் 56
குமார் புனிதவேல்

வானொலிப் பிரவேசம் 65
சோக்கல்லோ சண்முகநாதன்

ஈழத்தின் நவீன கல்வி வரலாறு குறித்த முருகேசு பாக்கியநாதனின் முன்னோடித் தொகுப்பு 69
அருண்மொழிவர்மன்

நிரூபாவின் இடாவேணி: கதைகளும் கதை சொல்லப்படும் பாங்கும் 70
மைதிலி தயாநிதி

திருட்டுப்போன சேவல்! 74
நெடுந்தீவு மகேஷ்

துட்டகைமுனுவின் வீர வரலாறும் அதன் புராணவியல் முக்கியத்துவமும் 75
க. சண்முகலிங்கம்

அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை அமிர்தநாயகம் 79
அ. றொனிராஜன்

எழுத்தறிவித்தவன் 84
ஞானம் லெம்பட்

பேனா முனையின் வீரியத்தையும் சமூகப் பொறுப்பையும் கற்றுத் தந்த ஆசான் 85
மாறன்

தன்னை அர்ப்பணித்த சாதனையாளர் 86
குழந்தை ம. சண்முகலிங்கம்

தாசீசியஸ் மாஸ்ரர் 87
டிராட்ஸ்கி மருது

முதலை தண்ணீருக்கு வெளியில் உள்ளதா? 88
த. சர்வேந்திரா

ஈழக்கூத்தன் அ. தாசீசியஸ்: அளவுகளை மீறிய ஆளுமை 89
பொன்னையா விவேகானந்தன்

தாசீசியஸ்: தோப்பான ஒரு தனி மரம் 90
பொன்ராசா அன்ரன்

ஈழக்கூத்தன் தாசீசியஸ் 91
ப. சிறீஸ்கந்தன்

மனித ஒலிப்பதிவுக்கருவி 95
- ஜொனதன் ரெல்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

ஆளுமை விருத்தியின் சில படிகள் 105
P. விக்னேஸ்வரன்

சோழர்கால இலக்கியம்: கம்பராமாயணம் 109
நா. சுப்பிரமணியன்

தமிழ்வலை - 43 111

அரசியல் காட்டூன்களும், காட்டுனிஸ்டுகளும் இராசிபுரம் கிருஷ்ணசுவாமி லக்ஷ்மன் 113
எஸ். தர்மதாஸ்

மண் கடன்! 115
செல்வம் அருளானந்தம்

இங்கே நிறுத்தக்கூடாது 119
அ. முத்துலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவைத்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

இறுகக் கால் பதிந்த புதிய மாநிலங்கள்:

அடுத்து இரண்டாவது பெருமாநிலமான மகாராஸ்ராவின் 48 தொகுதிகளில் கடந்த முறை தனித்து பெற்ற 23 மற்றும் சிவசேனாவுடன் இணைந்து பெற்ற 42 தொகுதிகளையும் அது அவ்வாறே தக்கவைத்தது. இங்கும் இழப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டன. ஆனால் அது ஏற்படவில்லை. இதைக்கடந்து பா.ஜ.க மூன்றாவது பெருமாநிலமான மேற்கு வங்காளத்தில் கண்ட முன்னேற்றம் தான் ஆச்சரியப்படும் வகையில் அமைந்தது. அங்கு 2009 தேர்தலில் வெறும் 5.94 சதவீத வாக்குகளுடன் 1 தொகுதியையே வென்ற பா.ஜ.க, கடந்த 2014 தேர்தலில் 10.9 சதவீத அதிகரித்த வாக்குகளுடன் 16.84 சதவீத வாக்குகளைப் பெற்று 2 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இம்முறை மேலும் 23.41 சதவீத அதிகரித்த வாக்குகளுடன் 40.25 சதவீத வாக்குகளைப் பெற்று 16 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

கடந்தமுறை 34 தொகுதிகளில் வெற்றி பெற்ற திருமல் காங்கிரஸ், இம்முறை கடந்தமுறையிலும் பார்க்க 3.48 சதவீத வாக்குகளை அதிகம் பெற்று 43.28 சதவீத வாக்குகளைப் பெற்றாலும், 22 தொகுதிகளிலேயே வெற்றி பெற்றது. மோடி சுனாமி ஆட்படுத்திய புதிய மாநிலங்களில் ஒன்றாக இம்முறை மேற்கு வங்காளமும் இணைந்து கொண்டது. கம்மினியூஸ்ட்டுகளின் கோட்டையாக நீண்டகாலம் திகழ்ந்த இம்மாநிலத்தில் இம்முறையுடன் கம்மினியூட்டுக்கள் துடைத்தழிக்கப்பட்டுள்ளர் என்றே சொல்லலாம்.

அதேபோன்று கர்நாடகா மாநிலம், தென் மாநிலங்களில் பா.ஜ.க சார்ந்த சுனாமியின் வெளிப்பாடாக இம்முறை மாறியுள்ளது. அங்கு கடந்தமுறை 43 சதவீத வாக்குகளுடன் வென்ற 17 தொகுதிகளில் இருந்து, இம்முறை 51.38 சதவீத வாக்குகளுடன் கர்நாடகாவில உள்ள 28 தொகுதிகளில் 25ஐ பா.ஜ.க வென்று சாதனை படைத்துள்ளது. கடந்த 2014 தேர்தலில் 21.5 சதவீத வாக்குகளுடன் ஒரு தொகுதியையே வென்ற ஒடிசா மாநிலத்தில், பா.ஜ.க இம்முறை 38.37 சதவீத வாக்குகளை வரலாறாகப் பெற்று, அங்குள்ள 21 தொகுதிகளில் 8 தொகுதிகளை தன்னகப்படுத்தி வரலாறு படைத்துள்ளது. இவ்வெற்றிகளே அதனை மேலும் வலுநிலைக்குத் தள்ளியுள்ளது எனலாம்.

காணாமல் போகும் காங்கிரஸ்:

இந்திய சுதந்திர வரலாற்றில் அழிக்க முடியாத இடத்தை கொண்டிருந்த காங்கிரஸ் கட்சி, இந்திய அரசியல் வானில் இருந்தே காணாமல் போய்விடுமா? என்ற அச்சத்தை இத் தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ளன. 2009 தேர்தலில் 206 தொகுதிகளில் வென்று கூட்டாச்சி அமைத்த காங்கிரஸ், கடந்த 2014 தேர்தலில் 44 தொகுதிகளிலேயே வென்றது. இந்திய பாராளுமன்றத்தில் உத்தியோகபூர்வ எதிர்கட்சியாக இருக்க வேண்டிய 55 ஆசனங்களை கூட அதனால் வெல்ல முடியவில்லை. இம்முறை அது தனது ஆசனங்களின் எண்ணிக்கையை 52 ஆக அதிகரித்தாலும் அது இத்தேர்தலில் படுதோல்வியையே சந்திதுள்ளது என்பது ஆழ நோக்கின் புலனாகும். அதுமட்டுமன்றி இம்முறையும் எதிர்க்கட்சி அந்தஸ்து இழக்கப்பட்டள்ளது.

இம்முறை காங்கிரஸ் கேரளா மாநிலத்தில் அது முன்னர் கொண்டிருந்த 8 ஆசனங்களில் இருந்து, 15 ஆசனங்களிற்கு முன்னேறியது. அதேபோன்று தமிழகத்தில் கடந்தமுறை தனித்துப் போட்டியிட்டு படுதோல்வி அடைந்த நிலையில், இம்முறை தி.மு.க வுடன் கூட்டுச் சேர்ந்து தமிழகம் மற்றும் புதுச்சேரியில், 9 தொகுதிகளை புதிதாக வென்றுள்ளது. இவ்விரண்டு மாநிலங்களில் புதிதாக வென்ற 16 தொகுதிகளை எடுத்துவிட்டால், அது வென்ற மற்றைய 36 தொகுதிகளும், அது கடந்தமுறை வென்ற 44ஐ விட குறைந்தவை என்பது புலனாகும். தவிர கேரளா (15), தமிழ்நாடு-புதுச்சேரி (9), பஞ்சாப் (8) ஆகிய மூன்று மாநிலங்களில் மட்டும் காங்கிரஸ் வென்ற 32 தொகுதிகளை எடுத்துவிட்டால், அது நாடு தழுவி ஏனைய இடங்களில் வென்றவை வெறும் 20 தொகுதிகளே என்பது, அது தேசியக் கட்சி அந்தஸ்தையே இழந்துவிட்டதை துல்லியமாக காட்டுகிறது.

உத்திரப்பிரதேசத்தின் அமேதி தொகுதியில் போட்டியிட்ட காங்ரிஸ் தலைவர் ராகுல் காந்தி, அங்கு 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியுள்ளார். 39 ஆண்டுகளின் பின் அமேதியையே காங்கிரஸ் இழந்துள்ளது. தோல்விப் பயம் காரணமாக கேரளாவிலும் போட்டியிட்ட ராகுல் அங்கு பெற்ற வெற்றியினூடாகவே தற்போது பாராளுமன்றத்தினுள் பிரவேசிக்கிறார். இது காங்கிரசின் தற்போதைய பரிதாப நிலையை வெளிப்படையாக காட்டுகிறது. ஏற்பட்ட படுதோல்வி காங்கிரசினுள் தலைமைப் பதவி குறித்தே பெரும் பூகம்பத்தை வளர்த்துள்ளது. தான் எதிர்கொள்ளும் பாரிய சவாலை எதிர்கொள்ள திராணியுமின்றி, வழியும் தெரியாது காங்கிரஸ் அல்லாடுகிறது.

தனது முடிவுரையை எழுதிய கம்மினியூட்டுக்கள்:

இந்தியாவின் மூன்றாவது அணி என வலம் வந்த கம்மினியூஸ்டுக்கள் தமது அஸ்தமனத்தை இத்தேர்தலில் முரசறைந்து கூறியுள்ளனர். 2004 தேர்தலில் 53 தொகுதிகளில் கூட்டாக வென்றவர்கள், 2009 தேர்தலிலோ 20 தொகுதிகளிலேயே வெல்ல, அது 2014 தேர்தலில் 10 ஆக வீழ்ச்சியடைய, இம்முறையோ வெறும் 5 தொகுதிகளிலேயே இந்தியா தழுவி வெற்றி பெற்றுள்ளனர். அதுவும் அதில் 4 தொகுதிகள் தி.மு.கவுடனான கூட்டினூடாக தமிழகத்தில் மட்டும் வெற்றி பெற்றது. மற்றையது கேரளாவில் பெற்ற வெற்றி. ஒரு காலத்தில் அசையாத கோட்டையாக இருந்த மேற்கு வங்காளத்தில் கம்மினியூஸ்டுக்கள் இம்முறை முதல்முறையாக துடைத்தழிக்கப்பட்டது மட்டுமன்றி, வெறும் 6.28 சதவீத மக்கள் ஆதரவையே பெறும் அளவிற்கு காணாமலே போயுள்ளனர்.

மோடி சுனாமியை அரணமைத்துத் தடுத்த தமிழகம்:

மோடி சுனாமி வட இந்தியாவைப் புரட்டிப் போட்டு கர்நாடகா வரை ஆக்கிரோசத்துடன் முன்னேறினாலும், அதனால் ஏனைய தென் மாநிலங்களில் தரை தட்ட முடியவில்லை. கடந்த 2014 தேர்தலில் தனித்துப் போட்டியிட்டே ஒரு தொகுதியை வென்ற பா.ஜ.க, இம்முறை அ.தி.மு.க வுடன் கூட்டுச் சேர்ந்தும், அதனால் ஒரு தொகுதியில் கூட வெல்ல முடியவில்லை. கடந்த தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட ஜெயலலிதா, 37 தொகுதிகளில் அ.தி.மு.க வெற்றி பெற வலிகோலினார். இம்முறை முதல்முறையாக ஜெயலலிதா மற்றும் கலைஞர் அற்றுக் களம் இறங்கிய கட்சிகளில் தி.மு.க கூட்டு தேர்தல் நடைபெற்ற தமிழகம் மற்றும் புதுச்சேரியிலான 39 தொகுதிகளில் 38ஐ வென்றுள்ளன. அ.தி.மு.க ஒரு தொகுதியில் வென்றுள்ளது.

கடந்தமுறை பா.ஜ.கவுடன் இணைந்து போட்டியிட்டு பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் வெற்றி பெற்ற அன்புமணி ராமதாஸ், இம்முறை அ.தி.மு.க மெகா கூட்டணியில் இடம் பெற்றும் தோல்வியைத் தழுவியுள்ளார். அது மட்டுமன்றி தி.மு.க கூட்டணியில் இடம்பெற்ற சிறுகட்சிகள் தி.மு.க சின்னத்திலேயே போட்டியிட்ட நிலையில், தி.மு.க 23 தொகுதிகளில் வென்ற நிலையில், பா.ஜ.க மற்றும் காங்கிரசிற்கு அடுத்து மூன்றாவது பெரும் கட்சியாக இந்தியப் பாராளுமன்றத்தில் அது உருவெடுத்துள்ளது. கடந்தமுறை 37 ஆசனங்களுடன் அ.தி.மு.க அந்நிலையில் இருந்தமை இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

பா.ஜ.க தமிழகத்தில் மட்டுமல்ல, கேரளாவின் 20 தொகுதிகளில் கூட ஒன்றையும் கடந்தமுறைபோல் வெல்லவில்லை என்பதைக் கடந்து, கடந்தமுறை ஆந்திரப் பிரதேசத்தில் வென்ற இரண்டு தொகுதிகளையும் இழந்து, அங்குள்ள 25 தொகுதிகளிலும் எத்தொகுதியையும் வெல்லவில்லை. அத்துடன் கடந்தமுறை அங்கு கொண்டிருந்த வாக்குவங்கியிலும் 7.56 சதவீதத்தை இழந்து ஒரு சதவீதத்திற்கு குறைந்த ஆதரவு என்ற இழிநிலைக்கு ஆந்திரப்பிரதேசத்தில் கீழிறங்கியுள்ளது. அதேபோன்று தமிழகத்திலும் மக்கள் ஆதரவில் வீழ்ச்சியைக் கண்டுள்ளது. மாறாக தென் மாநிலமான தெலுங்கானாவில் 11 சதவீத அதிகரித்த ஆதரவுடன் ஒரு ஆசனத்தில் இருந்து 4 ஆசனங்களிற்கு பா.ஜ.க முன்னெறியுள்ளது. தென் மாநிலங்களிலான இத் தொடர் பின்னடைவே மோடி தொடர்ந்தும் எதிர்கொள்ளும் பெரும் சவால் எனலாம்.

சட்டசபைத்தேர்தல்கள் தி.மு.க விற்கு தொடர்ந்தும் சவாலே:

பாராளுமன்றத் தேர்தல்களுடன் தமிழகத்தில் வெற்றிடமாக இருந்த 22 சட்டசபைகளுக்கான இடைத்தேர்தல்களும் நடைபெற்றன. அதிலும் பெரு வெற்றியை திமுக பெறும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அவ்வாறு அது அத்தேர்தலிலும் முழுமையான வெற்றியைப் பெற்றால், அது தமிழக ஆட்சியுரிமை வாய்ப்பைப் பெறும் நிலை இருந்தது. ஆனால் அதனால் 13 தொகுதிகளிலேயே வெற்றி பெற முடிந்தது. ஏனைய 9 தொகுதிகளிலும் வெற்றி பெற்றதினூடாக அ.தி.மு.க தனது ஆட்சியை தமிழகத்தில் தக்க வைத்துள்ளது. ஜெயலலிதாவிற்கு பின்னரான காலத்தில் ஏற்பட்ட கட்சிப் பிளவுகளைத் தொடர்ந்து அ.தி.மு.க சிதைந்துவிடுமா? என்ற கேள்விக்கு அது தற்போதைய நிலையில் சாத்தியமில்லை என்பதையே இடைத்தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

அ.தி.மு.கவில் இருந்து பிரிந்து சென்ற தினகரன் அணி தமிழகம் தழுவி ஆதிக்கம் செலுத்துமா? என்ற கேள்விக்கு இல்லை என்பதே பதிலாக இத்தேர்தலினூடாக வெளிப்பட்டுள்ளது. அதேவேளை அ.தி.மு.கவின் சில வெற்றிகளை தினகரனின் அ.ம.மு.க, வாக்குகளைப் பிரித்ததினூடாக தடுத்து விட்டது என்பதுவும் உண்மை. இத் தேர்தலைத் தொடர்ந்து அ.ம.மு.க வின் வளர்ச்சி தடைப்படுமானால், அது அ.தி.மு.க மீண்டும் வலுப்பெற வழிகோலலாம். இம்முறை முதல்முறையாக களம் கண்ட கமலகாசனின் மக்கள் நீதி மையம், முதல் களத்திலேயே நகரப்பகுதிகளில் சிறப்பாக செய்துள்ளது. எனினும் கிராமப்புறங்களில் பின்தங்கியே உள்ளது. முதல் களப்பெறுபேறுகள் அதற்கு உற்சாகம் அளிக்கலாம். அதேபோன்று தனித்துப் போட்டியிட்ட சீமானின் நாம் தமிழர் கட்சி தொடர்ந்தும் அதிகரித்த ஆதரவை வெளிப்படுத்துகிறது. எனினும் அது வெளிப்படுத்தும் வளர்ச்சி வீதத்தை கருத்தில் கொள்ளுமிடத்து வரும் தேர்தல்களில் அது பல புதிய மூலோபாயங்களை, கூட்டணி உட்பட கருத்தில் கொள்வதே அதன் அடுத்த படிநிலை முன்னேற்றத்திற்கான வழிவகையாக அமையும் என்பதே சகப்பான நிலையாகும்.

தீவிரவாதமும், சர்வாதிகாரமும் வலுப்பெறுமா?

பாரதீக ஜனதா கட்சியின் இப்பெரும் வெற்றி, மதச்சார்பு தீவிரவாதத்தை இந்தியாவில் அதிகரிக்குமா? என்ற கரிசனையை ஏற்படுத்தியுள்ளது. இறுதிக்கால பரப்புரைகளில் இதற்கான பல்வேறு சமிக்கைகள் வேறு வெளிப்பட்டன. மதச்சார்பற்ற இந்தியா என்ற நிலை மாறுவதற்கான பல அறிகுறிகள் தென்படுகின்றன. அதேபோன்று பெரும்பான்மை கொண்டு மத்திய அரசு மாநிலங்களின் உரிமைகளை நசுக்கும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டுகிறது என்ற கூக்குரல்கள் ஏற்கனவே எழுந்துள்ள நிலையில், அவ்வாறான சர்வாதிகாரப் போக்கு இன்றைய பெரும்பான்மை நிலையில் மேலும் தீவிரமடையுமா? என்பதெல்லாம் நாம் இத்தேர்தலின் பின்னான காலத்தில் அக்கறையுடன் கவனத்தில் கொள்ளும் விடயங்களாக இருக்கப் போகின்றன.



nehru.g@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Lower rates.
Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

Senthooran Punithavel

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

797 Milner Avenue, Unit 200
Scarborough, ON M1B 3C3

குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரவாதம் பயங்கரவாதமாகி நுழைந்த ஓட்டை

திரு. முஸ்டீன்

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஓர் ஊடகவியலாளர். இவரின் பல கவிதைகள், சிறுகதைகள், நாவல் ஆகியன நூல்களாக வெளிவந்துள்ளன. இதுவரை 12 ஆவணப்படங்கள் இயக்கியுள்ளதுடன் சிறந்த ஆவணப்பட விருதையும் பெற்றுள்ளார்.

இலங்கையின் ஒரு தசாப்த சமாதான சூழ்நிலைக்கு சடுதியாக விழுந்த அடி தேசத்தின் மூலை முடுக்கெங்கும் அச்சத்தை விதைத்து, இயல்பு நிலையைக் குழப்பி, மக்களின் நிம்மதியைச் சூரையாடி, இனவாதப் பிசாசுகளைத் தட்டியெழுப்பி விட்டு, அனைத்து விளைவுகளையும் காலத்திடம் ஒப்படைத்துவிட்டு மறைந்து விட்டது. அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும் போது எழுத்தும் தனது முழுமையான சுதந்திரத்தை இழந்தேவிடுகின்றது என்பதை உள்வாங்கிக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

பயங்கரவாதம் எங்கெல்லாம் நிலைகொள்கின்றதோ அங்கெல்லாம் உள்ளக வேலைத்திட்டமொன்று மக்களின் எண்ணங்களைத் திசை திருப்பி தனது காரியத்தைச் சாதிக்க முனைகின்றது என்பதைதான் அர்த்தமாகக் கொள்ளவேண்டியிருக்கின்றது. ஏப்ரல் 21ம் திகதி இலங்கையில் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து மிக முக்கியமான நான்கு பரப்புகளை அடையாளப்படுத்தி எழுதலாம்

- வஹாப்வாதம் மற்றும் தாக்குதலுடன் தொடர்புடைய தேசிய தௌஹீத் ஜமாஅத் மற்றும் அதன் அங்கத்தவர்கள் ஏனைய துணைப்பயங்கரவாத அமைப்புகளின் சிந்தனை.
- தாக்குதலில் ஈடுபட்ட குழு தொடர்பாக முஸ்லிம் அமைப்புகளால் பாதுகாப்புத் தரப்புக்கு முறையான தகவல் அளிக்கப்பட்டும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அத்தோடு இந்தியா வழங்கிய புலனாய்வுத் தகவலுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படாதது ஏன்?
- பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படுவதற்கான சூழ்நிலை எப்படி உருவாகி இருந்தது, அரசு ஏன் அதைப் பொருட்படுத்தவில்லை?
- இந்தத் தாகுதலுக்கு யார் பொறுப்புக் கூறுவது?

01

இந்தப் பரப்பை விளங்கிக் கொள்வதற்கு வஹாபிசம் பற்றிய புரிதல் மிகவும் அவசியமானது. சவுதியில் மன்னராட்சி நிறுவப்பட்ட பின்னர் மத்திய கிழக்கில் மீண்டும் ஒருமித்த இஸ்லாமிய ஆட்சிக் கனவுகள் சுமந்து யாரும் வெளிப்பட்டுவிடக்கூடாதென்ற தொலைநோக்கில், மத்திய கிழக்கின் ஆட்சிப்பிராந்தியங்கள் இரண்டாம் உலக மகாயுத்த காலத்தோடு பிரிக்கப்பட்டு தமக்குத் தோதான ஆட்சியாளர்கள் அரியாசனங்களைப் பெற்றபின்னர் கிடைத்த பொக்கிசம்தான் எண்ணெய்வளம். 1967களில் சவுதி மன்னர் பைசல் மேற்குக்கு எதிராக எடுத்த முடிவுகள் அவரை நஞ்சூட்டிக் கொலை செய்யும் வரைக் கொண்டு சென்றது. அதன்பின்னர் மத்தியகிழக்கின் மத்தியதளமாக ஈரான் தேர்வுசெய்யப்பட்டு மன்னர் (சாஹ்) ரிழா முஹம்மத் பஹ்லவியின் நெருங்கிய நட்புடன் மேற்கின் எல்லாத் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகையில் 1979ல் ரூஹுல்லா எனப்படும் கொமெய்னியின் நெறிப்படுத்தலில் ஈரானியப் புரட்சி வெற்றி பெற்றது. அதைத் தோற்கடிக்க எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் தோற்றுப் போன பின்னர் சுன்னி-ஷீயா பிளவை முன்னிறுத்தி அரபு நாடுகளின் துணை-யோடு பாரசீக நாட்டின் மீது நீண்ட யுத்தம் சத்தாம் ஹுஸைன் தலைமையில் திணிக்கப்பட்டது. அதன் பின்னர் ஷியா என்ற பதத்தை சர்வதேச அளவில் சிதைக்கும் சிந்தனைக் குழுவின் அவசியம் உணரப்பட்ட போது நிறுவப்பட்ட கருத்தியல்தான் வஹாபிசம். 1980களுக்குப் பின்னர்தான் அது ஒரு Brand ஆக மாற்றப்பட்டு தொண்டர்களை உள்வாங்கும் அமைப்பு முறைச் செயற்பாடாக முன்னெடுக்கப்பட்டது. அதற்காக சவுதியின் ரியால்கள் தர்மம் என்ற பெயரில் வாரியிறைக்கப்பட்டன. இஸ்லாமிய இயக்கங்கள் உருவாக்கப்பட்டு, அது மிகவும் நுணுக்கமாக நிறுவனமயப்படுத்தப்பட்டது.

வஹாப்வாதத்துக்கு எளிய வரைவிலக்கணம் சொல்வதாக இருந்தால் 'சவுதிசார் மன்னராட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இஸ்லாத்தின் அடிப்படைகளை உள்வாங்கி திறம்பட்ட புலனாய்வுச் சக்திகளால் வடிவமைக்கப்பட்ட பிரிவினைக் கூறுகளையும் முரண்பாட்டுக் கையாள்கையையும் கொண்ட ஓர் எதிர்மறைத் தன்மைக் கோட்பாடு' என்று சொல்லலாம். (வேறுபட்ட கருத்துகளும் இருக்கலாம்).

வஹாப்வாதம் ஒருகாலத்திலும் கேள்விக்குட்படுத்தப்பட்டுவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்த கொள்கை வகுப்பாளர்கள் அதை 'ஏகத்துவம்' அல்லது 'ஓர் இறைக் கொள்கை' (தௌஹீத்) என்ற இஸ்லாத்தின் அடிப்படை மீது கட்டமைத்தனர் அதாவது வஹாப் வாதத்தைக் கேள்விக்குட்படுத்துவது என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையை கேள்விக்குட்படுத்துவதற்கு நிகரானது. அதையும் மீறி கேள்விக்குட்படுத்துபவன் ஏகத்துவத்துக்கு எதிரானவன், ஏகத்துவத்துக்கு எதிரானவன் இஸ்லாமில் இருக்க முடியாத எதிரி, என்று அது தீவிரமாக வேறூன்றியது. தனக்கான தொண்டர்களை உள்வாங்க இந்தத் தீவிரச் சிந்தனை சிறப்பான முறையில் செயற்பட்டது. ஆனால் ஏகத்துவக் கொள்ளையின்பால் ஈர்க்கப்படும் ஆழச் சிந்தித்து கேள்விக்குட்படுத்தும் திறனில்லாத எந்தவொரு குடிமகனாலும் வஹாபியத்தின் ஆக்கிரமிப்பை விளங்கிக்கொள்ளவோ புரிந்துகொள்ளவோ முடியாது. அவன் நிச்சயம் புணர்வாழ்வளிக்கப்பட வேண்டியவன். (அதைத்தான் இப்போது சின்ஜியான் மாநிலத்தில் சீனா நிர்ப்பந்தமாக அடக்குமுறைக் கரங்கொண்டு செய்கின்றது - எந்தச் சமரசமும் செய்துகொள்ளாமல். சீனா கைக்கொள்ளும் எல்லை மீறிய வழிமுறை தொடர்பில் வாதப்பிரதி வாதமுண்டு.)

எந்தவொரு தீவிரச் சிந்தனையும் ஒற்றுமையாக இருப்பது கிடையாது. அதனால் "என்னுடைய கருத்தியலோடு உனக்கு உடன்பாடில்லை என்றால் பிரிந்து போ" என்று தொடங்கிய 'பிரிவு' வஹாப்வாதத்தின் செம்மையான இயங்கு தளத்தை நிறுவியது.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே அமைப்பாக இயங்கிய தௌஹீத் இயக்கங்கள் பிரிந்து போதல் என்ற செயற்பாட்டுக்கு இஸ்லாத்தினை மட்டுமே முன்னிறுத்தின. எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பிளவுகளும் இஸ்லாத்தினை முன்னிறுத்தியே நிகழும் இந்தப் பிரிவினை இஸ்லாத்தின் வணக்க வழிபாடுகளில் உள்ள சின்னச் சின்ன முரண்பாடுகளை வாதப்பொருளாக்கி மனிதர்களைக் கூறுபோட்டு தனக்குத் தேவையான மூளைகளையும் உணர்ச்சியாளர்களையும் தூய இஸ்லாமின் பெயரிலும் ஏகத்துவத்தின் பெயரிலும் உள்வாங்கிக் கொண்டே இருந்தது. வருத்தப்பட வேண்டிய விடயம் யாதெனில் இராணுவப் புலனாய்வுச் செயற்பாட்டாளர்களால் மாத்திரமே உள்வாங்கக் கூடிய செயற்பாட்டுக் கட்டமைப்பின் கூறுகளை பொதுமக்களால் அவ்வளவு எளிதில் விளங்க முடியாது. உச்சகட்ட இஸ்லாமியத் தீவிர சிந்தனை கொண்ட செயற்பாட்டாளர்கள் அடுத்த கட்டம் பயங்கரவாதிகளாக மாறுவதுதான். வஹாப்வாதத்தின் பின்னணியில் உருவாகும் ஒவ்வொரு இஸ்லாமியப் பயங்கரவாதிக்குப் பின்னாலும் நிச்சயம் சவுதி ரியால்கள் இருக்கவே செய்யும். (இதுவே செச்சனியா, டாகெஸ்தான், ஈராக், சிரியா விவகாரத்திலும் தாக்கம் செழுத்தியது).

தற்கொலைக் குண்டுதாரியான சஹ்ரான் முன்னர் தலைமை வகித்த 'தேசிய தௌஹீத் ஜமாஅத்', அது போன்று இப்போது தடைசெய்யப்பட்டிருக்கும் 'ஜமாஅத்தே மில்லத்து இப்றாஹீம்', 'விலாயத்தே சிலான்' போன்ற அனைத்தும் வஹாப்வாதத்தின் இறுதிக் கூறான சஹாதத்தை அடைவதற்கான இலகு வழியாக இஸ்திஸ்ஹாத் தாக்குதலைப் பயன்படுத்துதல் (புனிதத் தியாகியாக மரணித்து சுவனத்தை அடைந்துகொள்ள தற்கொடைத் தாக்குதலை மேற்கொள்ளல்) என்ற எல்லையில் வந்து நின்றனர். இங்கு கவனிக்க வேண்டிய அம்சம் 'தற்கொலை' என்ற சொற்பிரயோகத்தில் இருந்து அது 'தற்கொடை' (தன்னை இஸ்லாத்துக்காகத் தியாகம் செய்தல்) என்று திறம்பட மூளைச் சலவை செய்யப்பட்டவர்களாக இருப்பர். சொத்து, செல்வம், பதவி, புகழ் எதனையும் ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ள மாட்டார்கள். மனிதன் ஆசை கொள்ளும் இவை எவற்றின் மீதும் பற்றில்லாத ஒருவன் எவ்வளவு தாக்கமிகு சக்தியாக இருப்பான் என்பதைத் தெளிவுபடுத்தத் தேவையில்லை. (பயங்கரவாதத்தைத் தேர்வு கொள்ளும் அனைத்து மதங்களும் தமது தொண்டர்களை 'இறை சேவை' என்ற மையப்புள்ளியில் வைத்துத்தான் இயக்குகின்றன).

02

சமுதாயத்தின் பொது அலகில் இருந்து பிரிந்து பிரிந்து, பிரச்சினைகளை மட்டுமே பேசுபொருளாக்கி, ஏனைய முஸ்லிம்களை கேள்விக்குட்படுத்தி, அவர்களை தலைகுனியச் செய்ய நியாயமான காரணங்களைத் தேர்வு செய்து, தொடுக்கப்படும் தொடர்கருத்தியல் தாக்குதலால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இவர்கள் பிரச்சினையாகவே தென்பட்டார்கள். அதனால் வஹாப்வாதத்தின் கூறுகளுக்குள் சிக்கிக்கொள்ளாத ஏனைய இயக்கங்கள் இவர்களை அபாயகரமானவர்களாகச் சித்தரித்து, சட்டத்துக்கு முன் நிறுத்தி, இவர்களின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தி, தமக்குச் சவாலாக அமையாத வண்ணம் பார்த்துக்கொள்வதற்காகவே தற்கொலைதாரி சஹ்ரான் உட்பட்டவர்கள் பற்றி இலங்கையின் பாதுகாப்பு தரப்பிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டில் இணைக்கப்பட்ட அடுத்த முக்கியமான ஆவணம் சஹ்ரானுடைய ஆவேசமான பேச்சு. "பௌத்தர்களே! ஒன்றை மட்டும் மனதில் இருத்திக் கொள்ளுங்கள், இறையில்லங்கள் மீது நீங்கள் கைவைத்திருக்கின்றீர்கள், நூற்றுக்கணக்கான இளைஞர்கள் குண்டுகளைக் கட்டிக்கொண்டு வந்து நீங்கள் எதிர்பாராத வண்ணம் உங்களைக் கொன்று குவிப்பார்கள்". இந்த வார்த்தைகள் பாதுகாப்பு தரப்பால் அவ்வளவு 'சீரியசான' பேச்சாக எடுத்துக்கொள்ளப்படாமல் இருப்பதற்கு மற்றுமொரு முக்கிய காரணம், அப்பேச்சை வெறும் உணர்ச்சியூட்டும் பேச்சாக மட்டும் கருதிக்கொண்டதுதான்.

2017ம் ஆண்டு சஹ்ரான் குழுவினரால் காத்தான்குடியில் முன்னெடுக்கப்பட்ட வாள்வெட்டுதாக்குதல் சம்பவத்தில் முக்கிய சந்தேக நபராகக் கொள்ளப்பட்ட போது, காத்தான்குடி பொலிசார் இது குறித்த விசாரனைகளை முன்னெடுக்கையில் சஹ்ரான் தலைமறைவாகி இருந்தமை, மேற்கொண்டு சட்டத்தின் பிடியில் அவர்களைக் கொண்டு வந்து நிறுத்துவதற்கான நிலைமை பெலிசாருக்கு இல்லாமல் போனது. அப்போதே பொலிசார் தீவிரமாகத் தேடி இருக்க வேண்டும். தம்மால் முடியாதபோது சீஐடி விசாரனைக்கேனும் கோப்புகளைச் சமர்ப்பித்திருக்கவேண்டும்.

2017 தொடக்கம் 2019 வரையான இரண்டு வருட காலப் பகுதியில் சஹ்ரானின் தலைமறைவு வாழ்க்கை மேலும் பாதுகாப்பான முறையில் தகவல் வெளியே கசிந்திடாதபடி தொடர்புகளை மேற்கொள்ளவும் தயார்படுத்தல்களை முன்னெடுக்கவும் சிறப்பான அவகாசத்தை வழங்கியது. இக்குறிப்பிட்டகாலப் பகுதியில் இவர்கள் குறித்த முறையான தரம்வாய்ந்த எத்தகைய புலனாய்வுத் தகவல்களையும் இந்தியாவால் வழங்க முடியவில்லை. அதே நேரத்தில் இலங்கையின் புலனாய்வு அமைப்புகள் எதுவுமே இவர்களை இவ்வளவு சீரியசாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. அதை தாக்குதலின் பின்னர் தனது பதவியை ராஜிமானாச் செய்த பாதுகாப்புச் செயலாளரின் வார்த்தைகளே உறுதிப்படுத்துகின்றன. "தாக்குதல் பற்றிய அறிவுறுத்தல் கிடைப்பெற்றிருந்தபோதும் இந்தளவுக்கான தாக்குதலை நாங்கள் எதிர்பார்த்திருக்கவில்லை" என்றார். ஆனால் இறுதிக்கட்டத்தில் இந்தியா வழங்கிய தாக்குதல் பற்றிய புலனாய்வுத் தகவலை சரியான முறையில் செயற்படுத்தி இருந்தால் இந்தத் தாக்குதலைத் தவிர்த்திருக்கலாம் என்றும் அதிகாரம் கொண்ட ஜனாபதி ஒரு பக்கமும் பிரதமர் இன்னொரு பக்கமும் நின்றதனால் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாமல் போனது என்

தொடர்தல் 10ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரவாதம் பயங்கர...

9ம் பக்கத் தொடர்ச்சி...

றும் சொல்லப்படும் வாதங்கள் ஏற்கத்தக்கனவல்ல.

பொதுவாகப் பிறநாட்டுப் புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப்பெறும் போது அதை மறுநாளே ஆய்வுக்குட்படுத்துவது தான் பாதுகாப்புத் தரப்பினரின் பொறுப்பு. அப்பொறுப்பு சரியாக நிறைவேற்றப்பட்டதா என்ற கேள்விக்கு முன்வைக்கப்படும் பதில்கள் காத்திரமானதாகத் தெரியவில்லை. அதற்குப் பிரதான காரணம் 2009 யுத்த முடிவின் பின்னர் கிடைத்த சமாதானத்தின் முழுமையான வாசனையை அனைவரும் தாராளமாக நுகர்ந்தனர். அந்த நுகர்ச்சி எது குறித்தும் யாரையும் அச்சம் கொள்ளச் செய்யவில்லை. மற்றபடி அரசியல் பிரிவினைகள் என்பது பாதுகாப்பில் தாக்கம் செலுத்த முடியாது. ஏனெனில் 2002ம் ஆண்டு இதை மிகவும் கடினமான நிலையில் ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்கா அம்மையார் ஒருகட்சியையும் பிதமர் ரணில் விக்ரமசிங்க வேறோர் கட்சியைச் சேர்ந்தவராகவே இருந்தார்கள். அப்போது நாட்டில் சமாதானம் இருக்கவில்லை. இரு தலைவர்களின் கட்சி பேதங்களுக்கு மத்தியில் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அப்போது எவ்வகையிலும் தேசியபாதுகாப்புக்கு குந்தகம் நேர பாதுகாப்பு தரப்பு இடமளிக்கவில்லை. இக்காலப்பகுதியில் புலிகளின் ஆயுதக்கப்பல்கள் அழிக்கப்பட்டமையையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியா வழங்கிய புலனாய்வுத் தகவல் பிரமுகர் பாதுகாப்புப் பிரிவினர்க்கு கவனத்தில் எடுக்கும்படி அறிவித்தமையோடு நின்றுவிட்டதற்கும் மேலே சொன்ன "இந்தளவுக்கு எதிர்பார்க்கவில்லை" என்ற விடயமே அடிப்படைக்காரணம்.

03

ஏப்பிரல் 21 தாக்குதல்கள் எடுத்த எடுப்பில் தீர்மானிக்கப்பட்டு நடத்தப்படவில்லை. அந்தத் தாக்குதலைச் செய்யவைக்கும் அளவுக்கு அவர்களை இட்டுச் சென்ற காரணிளையும் ஆராயவேண்டும். அதுதான் எதிர்காலத்தை சிறந்த முறையில் நேர்கொள்ள உதவும்.

யுத்தம் முடிந்து நான்கு வருடங்களின் பின்னர் பரவலாக முஸ்லிம்களின் பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் வழிபாட்டுத்தளங்களையும் மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தீவிர பௌத்த இனச் சிந்தனைச் சாயம் பூசப்பட்டு முன்னெடுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டமையும், அதை அரசு பெரிதாகப் பொருட்படுத்தாத நிலைமையினையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அளுத்கமை மற்றும் தர்காநகர் ஆகிய ஊர்களில் முஸ்லிம்களின் வர்த்தக மையங்கள் மட்டும் இலக்கு வைக்கப்பட்டு கலவர சூழ்நிலையில் எரிக்கப்பட்டமையும் வீடுகள் சேதமாக்கப்பட்டு உயிர்சேதம் விளைந்தமையும் மஹிந்த அரசு காலத்தில் இடம்பெற்றபோது முஸ்லிம்கள் பாதுகாப்பில்லாத தன்மையை உணரவேண்டியேற்பட்டது. அதனடியாகவே ஆட்சிமாற்றமும் 2015ல் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்தது. அதன் பின்னர் 2018ல் கண்டி-திகன பகுதியில் இஸ்லாமியர்களின் வர்த்தகத் தளங்களும் வீடுகளும் இலக்கு வைக்கப்பட்டன. எல்லாம் முடிந்த பின்னர் பாதுகாப்புத் தரப்பு பலரைக் கைது செய்தது. ஆயினும் கலவரத்தைத் தடுக்க ஆவண செய்யவில்லை என்பது பொதுவான மக்கள் அபிப்பிராயம். இப்போதுள்ள அரசாங்கத்தின் காலப்பிரிவில் இடம்பெற்ற இத்தாக்குதல் எந்தக் கட்சி அரசமைத்தாலும் சிறுபான்மை முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பில்லை என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கப்போதுமானதாக இருந்தது. அதனடியாகத்தான் தற்கொலைக்குண்டுதாரி சஹ்ரானின் உணர்சியூட்டும் ஆவேசமான பேச்சு வெளிப்படுகின்றது சிலரால் சரிகாணப்படுகின்றது. அது பௌத்தத்தை இலக்கு வைத்தே மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. அவ்வுரை சமூக ஊடகங்கள் வாயிலாக பரப்பப்படுகின்றது. ஆக, சஹ்ரானை வளர்த்துவிட்டதில் இந் நிகழ்வுகளுக்குப் பின்னணியில் இருந்த அனைவருக்கும் பங்கிருக்கின்றது என்பதே உண்மை.

வன்முறையைத் தூண்டும் அச்சுருத்தல் மிகுந்த சஹ்ரானின் பேச்சு இக்காலப்பகுதியில் எடுபடாமல் போனதற்கு மற்றுமொரு காரணம் இருக்கின்றது. 'உலக அளவில் பலம்பொருந்திய அமைப்பாகக் கருதப்பட்ட, தனி அரசு நடத்திய விடுதலைப் புலிகள் இயக்கத்தையே இந்நாட்டில் முற்றுமுழுதாக அழித்தொழித்த பின்னர் இதெல்லாம் எம்மாத்திரம்' என்ற, தம் மீதுள்ள அபரிமிதமான நம்பிக்கைதான் இவர்களையும் பொருட்படுத்தாமல் இருக்கச் செய்தது. அதுதான் வவுனதீவில் இரு பொலிசார் கொல்லப்பட்ட போது பிழையான திசையில் புலிகளை மையப்படுத்தியே விசாரனைகளைச் செய்ய வைத்திருந்தது. சம்பந்தமில்லாத நபர்களை கைது செய்து அவர்களே குற்றவாளிகள் என நம்பவும் வைத்தது. ஆக, முழுக்க முழுக்க இலங்கைப் படைத்தரப்பும் சரி, பொலிஸ் தரப்பும் சரி, சரியான கோணத்தில் தயார்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை மறுக்கவியலாது.

மூன்று தசாப்தங்கள் இந்நாட்டைப் பீடையாகப் பிடித்திருந்த யுத்தம் முடிவுற்ற தருவாயில் கிடைத்த நாட்டைக் கட்டியெழுப்பும் அருமையான சந்தர்ப்பந்தையும் சகவாழ்வை உறுதிப்படுத்தும் சிறப்பான சூழலையும் இந்நாட்டின் இனவாதம் வீணாக்கிவிட்டதென்றே கருத வேண்டும். தாக்குதலின் பின்னர் இப்போது வரையும் நாட்டில் விதைக்கப்பட்டிருக்கும் இனம்புரியாத அச்சத்தை மீளவும் இனவாதம் கையாளத் தொடங்கியிருக்கின்றது. அது மேலும் மேலும் சகவாழ்வை சீரழித்து சஹ்ரான் பயங்கரவாதிகளை சரிகாணும் இளைஞர்களை உருவாக்கிவிடவல்லது. 2012ல் அரசு கடைப்பிடித்த பொருட்படுத்தாமை இப்போதும் தொடருமாயின் இந்நாட்டினை பயங்கரவாதத்தின் சாபம் இன்னும் பல தசாப்தங்களுக்குச் சீரழித்து விடும் என்பதைப் பொறுப்புடன் புரிந்து கொள்ள வேண்டும்.

தாக்குதல்தாரிகளைத் தயார்படுத்தும் மிக இலகுவான சாதக நிலையினை மேற்படி சூழலே ஏற்படுத்தியிருந்தது. ஒருவரை மூளைச்சலவை செய்ய இது போன்ற களம் மிகவும் தோதானது. ஏனெனில் கண்ணுக்கு முன்னால் முகாமிட்டிருக்கும் அபாயத்தைக் காட்டி, அச்சுறுத்தி, எதிர் காலத்தை இருளாக உணரச் செய்வதற்கு பௌத்த மேலாதிக்க இனவாதச் செயற்பாடுகளும் அச்செயற்பாட்டாளர்களால் ஊடகங்களுக்கு அளிக்கப்படும் வீரப் பேச்சுகளுமே போதுமானவை. இன்னும் இலகுவாகச் சொல்வதானால் தற்கொலைப் பயங்கரவாதிகளை உருவாக்குவதற்கான உற்பத்திச் செலவு இந்தச் சூழலில் மிகவும் குறைவானது. அரசாங்கம் இதை மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். ஏனெனில் புதிதான தளத்தில் பயங்கரவாதிகளை முதன்முறையாக உருவாக்கி எடுப்பது மட்டும்தான் மிகவும் சிரமமானது. உருவாகிவிட்ட பின்னர் அதை வளர்ப்பதும் பரிபாலிப்பதும் அவ்வளவு சிரமமானதல்ல. அத்துடன், பயங்கரவாதத்தை ஊக்குவிக்க இன்னுமொரு பயங்கரவாதம் போதுமானது.

04

தற்கொலை செய்பவன் இஸ்லாத்தைச் சார்ந்தவனில்லை. ஓர் உயிரை அநியாயமாகக் கொல்பவன் முழுமனித சமுதாயத்தையும் கொன்றவனாவான். எனவே, அவன் இஸ்லாத்தில் இல்லை. இந்தப் பயங்கரவாத மிலேச்சத்தனமான தாக்குதல் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதல்ல. எனவே குண்டுதாரிக்கும் இஸ்லாத்துக்கும் சம்பந்தமில்லை என்று இலங்கை முஸ்லிம் சமுதாயம் தனது பொறுப்புக்கூறலில் இருந்து இலகுவாகத் தப்பித்துக் கொள்ள முடியாது. முஸ்லிம் சமுதாயம் இஸ்லாம் என்ற சமயத்தின் கூறுகளிலேயே தன்னை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது என்றால், அதன் எந்தப் பகுதி பலவீனமாக இருக்கின்றது என்பதைச் சரிபார்த்து அதைப் பலப்படுத்தி இருக்க வேண்டும். பயங்கரவாதம் வசதியாக நுழைந்து கொள்ளவும் தன்னை அல்லாஹ்வின் பெயரால் தயார்படுத்திக் கொண்டு 'அல்லாஹு அக்பர்' என்று வெடித்துச் சிதறும் வரை திறந்திருந்த கதவுகள் எதிர்மறையான விளைவைத் தந்தவுடன் வசதியாக நலுவிக்கொள்ள முடியாது. எனவே பயங்கரவாதம் அனுமதிக்கப்படாத இஸ்லாத்தில் அது இருப்புக்கொள்ளும் எனச் சந்தேகிக்கும் அனைத்து ஓட்டைகளையும் அடைக்க வேண்டிய பொறுப்பு அதன் சமூகத்துக்கு இருக்கின்றது.

வஹாபியத்தின் அனைத்துக் கூறுகளையும் தமிழ்நாட்டிலிருந்து ஏகத்துவத்தின் பெயரால் இலங்கைக்கு ஏற்றுமதி செய்த அனைத்து இயக்கங்கங்களும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். ஏகத்துவ இயக்கங்களை இந்த வஹாபியத்தின் பிடியிலிருந்து மீட்டெடுக்காவிட்டால் தமிழ்நாடு தனது நிம்தியை விரைவில் இழப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

தாக்குதல்தாரிகள் பயங்கரவாதத்தைத் தேர்வு செய்ய மற்றுமொரு காரணி இனவாதம். இனவாதத்தை கண்டுகொள்ளாமல் விட்டமைக்காக அரசுக்கும் அரச இயந்திரத்துக்கும் இராணுவப் பாதுகாப்புத் துறைக்கும் பொலிஸ் மற்றும் சட்ட அமுலாக்கல் பிரிவினருக்கும் பொறுப்புக் கூற வேண்டிய முக்கியகடப்பாடு இருக்கின்றது. அத்துடன் இதற்குள் இன்னுமொரு விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சிங்களத் இனத்தீவிரத் தரப்பு முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலங்கையின் இஸ்லாமியச் சமுதாயத்தை அரச அதிகார எல்லைக்குள் முரண்பாடுகளைத் தவிர்த்து ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் வடிவமைத்து ஒழுங்குபடுத்தியிருக்க வேண்டும். அது அரசுக்கு முடியாத காரியமுமல்ல. அதற்கு இயலுமையுள்ள புத்திஜீவிகளையும் சிந்தனைச் செயற்பாட்டு வடிவமைப்பாளர்களையும் இனங்கண்டு அவர்களைப் பயன்படுத்தியிருக்கவேண்டும். ஒரு சிறுபான்மைச் சமூகம் தனது இருப்பை அச்சத்துக்குள்ளானதாகக் கருதாதவகையிலும் பெரும்பான்மை சமூகம் அவர்களைக் கொண்டு தனக்கான இனவாத சூழலைக் கட்டமைக்காதவகையிலும் சமரசம் செய்துகொள்ளத் தக்க வகையில் அது வடிவமைக்கப்பட்டால் இந்தளவுக்கு நிலைமை கைமீறிப் போய் இருக்காது. (இந்தியாவில் இந்துப் பெரும்பான்மை, இந்துத்துவா கட்டமைக்கும் தளம், மற்றும் அங்குள்ள சிறுபான்மைச் சமுதாயங்கள் ஆகிய அம்சங்கள் அனைத்திலும் இந்தியா இந்த விடயத்தை அமுல்படுத்தலாம். அதுதான் ஒரு நாட்டின் நிம்மதியை உறுதிப்படுத்தும்.)

"இலங்கையில் யார் மீதும் தாக்குதல் நடத்த வேண்டிய தேவை பௌத்தர்களுக்கு இல்லை. பௌத்தன் பின்னால் இருந்து கல்லெறிபவன் அல்ல. எதையும் தீக்கிரையாக்கும் அவசியம் பௌத்தர்களுக்கு இல்லை" என்று உபதேசம் செய்யும் இலங்கை பௌத்தர்களுக்கு ஒரு முக்கியமான பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் நாட்டில் அவர்களுக்குத் தெரியாமல் கடந்த காலத்தில் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர் உட்பட்ட சிறுபான்மைச் சமுதாயத்தின் மீது வன்முறையைப் பிரயோகித்தது யார் என்பதை அடையாளப்படுத்திட வேண்டும். ஏனெனில் வன்முறையாளர்கள் வேற்றுக்கிரகத்தில் இருந்து வருவதற்கு சாத்தியமில்லை. அதனால் இலங்கையின் பெரும்பான்மைக்கும் பொறுப்புக் கூறலில் பங்குண்டு.

> “ பொதுவாகப் பிறநாட்டுப் புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப்பெறும் போது அதை மறுநாளே ஆய்வுக்குட்படுத்துவது தான் பாதுகாப்புத் தரப்பினரின் பொறுப்பு. அப்பொறுப்பு சரியாக நிறைவேற்றப்பட்டதா என்ற கேள்விக்கு முன்வைக்கப்படும் பதில்கள் காத்திரமானதாகத் தெரியவில்லை. ”

இறுதியாக...

- பௌத்த தீவிர சிந்தனைகொண்ட இனவாத சக்திகளால் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு ஏன் சமபந்தமே இல்லாத கிறிஸ்தவ சமுதாயம் பயங்கரவாதிகளின் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்காகக் கொள்ளப்பட வேண்டும்?
- நட்சத்திர ஹோட்டல்களுக்கும் - கிறிஸ்தவ வழிபாட்டுத்தளங்களும் ஏன் இலக்குகளாகக் கொள்ளப்பட வேண்டும்? இதற்குப் பின்னால் உள்ள தொடர்பு என்ன?
- ISIS அல்லது ISIL பயங்கரவாத அமைப்பு இதற்கு ஏன் உரிமைகோர வேண்டும். அதற்குப் பின்னால் உள்ள மறைகரம் என்ன? தொடர்புகள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டன?
- இந்தியா இறுதிக்கட்டத்தில் தகவல் வழங்குமளவுக்கான தகவல் மூலம் எங்கிருந்து எப்படிப் பெறப்பட்டது?
- சீன - இந்திய - அமெரிக்க பொருளாதார மற்றும் பிராந்திய வல்லமையைத் தக்கவைத்தல் செயற்பாட்டுக்கும் இந்தத் தாக்குதலுக்குமான தொடர்புகள் இருக்குமா?
- இலங்கையின் வடகடல் பகுதி தொடங்கி மேற்கு ஊடாக தென் எல்லை வரைப் பரந்திருக்கும் எண்ணெய் மற்றும் இயற்கை வாயுவை எடுப்பதற்கான சர்வதேச நிறுவனத்தைத் தீர்மானிப்பதற்கான சர்வதேச டெண்டர் மே 09ல் முடிவுற இருக்கும் நிலையில் இடம்பெற்ற இந்தாக்குதல் எதைச் சொல்ல வருகின்றது?
- தற்கொலைத் தாக்குதல் எந்தவிதமான இரண்டாம்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுமில்லாமல் அவசரஅவசரமாக மேற்கொள்ளப்பட்டமைக்கான பின்புலம் என்ன? (மிக மிக விரிவாகவும் அவதானமாகவும் ஆராயப்பட வேண்டியபகுதி).

ISIS அல்லது ISIL ஆட்கொள்ள நினைக்கும் இலங்கை மற்றும் இந்தியப் பிராந்தியத்தில் இனிவரும் நாட்கள் எப்படிப் பட்டவை என்பன குறித்து விரிவாக அலச வேண்டும். அதன் பின்னர்தான் உயிர்த்த ஞாயிறன்று இலங்கையின் நட்சத்திர ஹோட்டல்களிலும் தேவாலயங்களிலும் நடத்தப்பட்ட மனிதாபிமானமற்ற மிலேச்சத்தனமான பயங்கரவாதத் தாக்குதலை நாம் புரிந்துகொள்ள முடியும்.

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிவாய்க்காலும் கனடிய அரசியலும்

- நேரு குணரட்ணம் -

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு நாட்களை முன்னிட்டு கனடாவில் நடைபெற்ற பல்வேறு முன்னெடுப்புகளில், கனடிய மண்ணில் பல்வேறு அரசியல் சார்ந்த முன்னெடுப்புகளும் நடந்தேறின. வெறுமையாக தமிழ் மக்களிற்குள் மட்டும் நின்றுவிடாது, ஏனைய இன மக்கள், அரசியல் மட்டங்கள், கட்சிகள் என இவ்விவகாரம் எடுத்துச் செல்லப்பட்டு வலுப்படுத்தப்படுவதே, ஈழத் தமிழ் மக்கள் மறுக்கப்படும் பரிகார நீதியை பெற்றுக்கொள்ளுவதை உறுதிப்படுத்தும் என்ற நிலையில் இவ்வாறான முன்னெடுப்புகள் அத்தியாவதியமானவையாகும்.

இவ்வகையில் நகரசபை மட்டங்களில் ரொரன்ரோ நகரசபையும், பிராம்டன் நகரசபையும் மே 18ஐ, தமிழ் மக்கள் இனப்படுகொலை நினைவு நாளாக இவ்வருடம் பிரகடனப்படுத்தியமை முன்னேற்றகரமான ஒரு செயற்பாடே. இதற்கு அந்நகரசபைகளின் பிதாக்களான முறையே ஜோன் ரேரியும், பற்றிக் பிரவுனும் முன்னின்று செயற்பட்டமை இங்கு நன்றியுடன் நினைவில் கொள்ளத்தக்கது. இவ்விடயம் ஏனைய நகரசபை வட்டாரங்களிலும் எதிர்காலங்களில் விரிவாக்கப் பெறும் வகையிலான திட்டமிடல் தமிழ் சமூகத்திடம் அவசியம் தேவைப்படுகிறது.

இரண்டாவது, ஒன்ராரியோ மாகாண மட்டத்திலான முன்னெடுப்பு. பழமைவாதக் கட்சியின் ஸ்காபுரோ ரூச்பார்க் தொகுதி உறுப்பினரும், தமிழ் இளையவருமான விஜய் தணிகாசலம் கொண்டு வந்த தமிழின இனப்படுகொலை சம்பந்தமான அறிவூட்டல் கல்வி வாரம் குறித்த சட்டமூலத்தின் மீதான இரண்டாம் வாசிப்பு குறித்த விவாதம், மே 16ம் நாள் ஒன்ராரியோ பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இவ்விவாதத்தில் கலந்து கொண்டு ஆளும் கட்சி சார்பில் ஐந்து பழமைவாதக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி சார்பில் நான்கு புதிய சனநாயகக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் லிபரல் கட்சி சார்பில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அனைத்துப் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழர் விவகாரத்தை ஆதரித்து, அதே வேளை தமிழர் இனப்படுகொலை என்ற பதத்தை பயன்படுத்தியே தமது வாதத்தை முன்வைத்தனர். பாராளுமன்ற பதிவில் வரும் வகையில் அமைந்துவிட்ட இவ்வாறான முயற்சி மிகவும் வரவேற்கத்தக்கதே. அனைத்து கட்சிகள் சார்பிலும் அவ்அவ் கட்சியின் பின் இதில் பங்காற்றியவர்கள் அனைவரும் பாராட்டுதலுக்கு உரியவர்களே.

மூன்றாவது, கனடிய பாராளுமன்ற மட்டத்திலான முன்னெடுப்புகள். முள்ளிவாய்க்கால் அவலத்தின் முக்கிய சாட்சியான டாக்டர் வரதராஜா அவர்களில் நேரடிச் சாட்சியங்களின் பதிவாக வரும் நூல்

மற்றும் விவரணச்சித்திரத்தை மையப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அனுசரணையில் மே 13ம் நாள் முன்னெடுக்கப்பட்ட பாராளுமன்ற நிகழ்வுகள். பாராளுமன்ற அமர்விற்குள்ளே வழங்கப்பட்ட மரியாதையும், பின்னர் வெளியே நடைபெற்ற ஒன்றுகூடலும். இவ்வாறான நிகழ்வுகள் 10 ஆண்டுகள் கழிந்தும் மறுக்கப்படும் தமிழருக்கான பரிகார நீதியையும், நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி நிற்கும்.

அதேவேளை கனடிய பாராளுமன்றத்தில் தமிழர் விவகாரத்தை மையப்படுத்தி கொண்டுவரப்பட்ட இரண்டு தனிநபர் பிரேரணைகள் ஏகோபித்த ஆதரவைப் பெறத் தவறின. கனடிய தேர்தல் காலத்தில் ஆளும் மற்றும் எதிர்கட்சியிடையே தேர்தலை மையப்படுத்தி எழும் வழமையான மோதல்கள் இங்கும் வெளிப்பட்டன. இரண்டும் தமிழர் விவகாரத்தில் ஆதரவு போக்கைக் கொண்டிருந்தாலும், இணைந்து செயலாற்றுவது சிக்கலே. கட்சிகளைக் கடந்து தமிழர் சமூகமாக இவ்விடயம் அணுகப்படாவிட்டால் இவ்வாறான சவால்களை எதிர்கொள்வது கடினமே. தவிர ஹரி ஆனந்தசங்கரி ரொரன்ரோ ஸ்டார் பத்திரிகையில் இக்காலப்பகுதியில் வரைந்த கட்டுரையும் வரவேற்புடன் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

பல வரவேற்றகத்தக்க விடயங்கள் நடைபெற்றாலும், இம்முயற்சிகளில் பல படிப்பினைகளும் இருந்தன. அவற்றை செயற்பாட்டில் உள்ளோர் கவனத்தில் கொள்வார்களேயானால் வருங்கால செயற்பாடுகள் மேலும் நேர்த்தியுடன் அமையும் என்பது மட்டும் திண்ணம். மறுபுறத்தில் இவற்றிற்கு எதிராக கனடிய சிங்கள கடும்கோப்பாளர்களின் நடவடிக்கைகளையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். எதிர்ப்பு ஒன்றுகூடல்கள், மின்அஞ்சல், தொலைபேசி, ஊடகப் பரப்புரை என பல மட்டங்களில் அவர்கள் முனைப்புடன் நகர்ந்தார்கள். இவ்விடயத்தில் தமிழ் மக்களாக மிகவும் பின்தங்கிய நிலையே தென்பட்டது. ஒன்று தமிழ் மக்கள் அணிசேர்க்கப்படவில்லை. இரண்டு அவர்களிடம் இவ்விடயங்கள் முறையாக பகிரப்படவில்லை. மூன்றாவது அவர்கள் இவ்விடயங்களில் ஏனோ தானோ என்றிருப்பது. இது கனடியத் தமிழர்கள் கனடாவிலும் தங்களை இழந்துவிடும் நிலைக்கு இட்டுச் செல்கிறதோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

nehru.g@thaiveedu.com

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்மை நஞ்சாகுமா? ஆண்கள் உளநல சிகிச்சைக்கான புதிய வழிகாட்டி

- புஷ்பா கனகரட்ணம் -

மேற்குலக உளவியலின் அடிப்படை, ஆண்கள். அதுவும் வெள்ளை இன, இயல்பான பாலுணர்வு (heterosexual) கொண்ட ஆண்களின் உளவியலாகத்தான் இருந்து வருகிறது. அதாவது, இந்த வரையறைக்குள் அடங்கும் ஆண்களின் உளவியல், முழு மனித இனத்திற்கும் பொருத்தமானதாகக் கருதப்பட்டு வருகிறது. அதனால் தான், இதுவரை ஆண்கள் உளநலம் சார்ந்து ஒரு வழிகாட்டியும் பிரத்தியேகமாக உருவாக்கப்படவில்லை. மாறாக, பெண்கள், மற்றும் வயது, பால்நிலை, இனம் என்ற அடிப்படையில் எல்லாம் ஒவ்வொரு சாராருக்கான வழிகாட்டிகள் American Psychological Association [APA] இனால் உருவாக்கப்பட்டிருக் கின்றன. அண்மையில், APA இன் ஆண்கள் உளநலத்திற்கான வழிகாட்டி (guidelines) பலரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

இந்த வழிகாட்டி தரும் செய்தி என்னவென்றால், காலம் காலமாக ஆண்மை என நாம் வரையறுக்கும் கருத்தியலுக்குள் வளரும் ஆண்கள் உடல் மற்றும் உளநலம் சார்ந்த பாதிப்புகளை அனுபவிக்க வேண்டி வருகிறது என்பது தான். ஆண்மை பற்றிய பார்வை, இனம், வயது, மற்றும் கலாச்சாரம் சார்ந்து மாறுபடும் என்பதை அங்கீகரிக்கும் துறைசார் நிபுணர்கள், இந்த பிரிவினைகள் எல்லாவற்றையும் கடந்து, ஆண்மை என்பதற்கு உலகளாவிய சில பொதுவான அம்சங்கள் இருப்பதை சுட்டிக் காட்டுகிறார்கள். இவை, பெண்மைத்தன்மையை எதிர்த்தல், சாதித்தல், பலவீனத்தை தவிர்த்தல், துணிவான செய்கைகள், அபாயங்களை சந்தித்தல், மற்றும் வன்முறை எனப் பட்டியல்படுத்தப்படுகின்றன. ஆண்மைத்தன்மையில் இருக்கும் நேர்மறையான அம்சங்களை பலப்படுத்தும் அதே சமயத்தில், இங்கு குறிப்பிட்ட எதிர்மறையான அம்சங்களை, அது தரும் பாதிப்புகளை, நாம் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பது தான் இந்த வழிகாட்டியின் செய்தி.

இந்த வழிகாட்டிக்கு எதிர்ப்புகள் வந்திருக்கின்றன. ஆண்களை ஆண்களாக இருக்க விடுங்கள் என்றும், இந்த வழிகாட்டி ஆண்களை அரக்கத்தனமாக சித்தரிக்கிறது என்றும் எதிர்கருத்துகள் எழுந்திருக்கின்றன. இதற்கு விளக்கம் கொடுக்கும் உளவியல் நிபுணர்கள், சிறுவர்களும் ஆண்களும் மகிழ்வான, ஆரோக்கியமான வாழ்வைக் கொண்டுநடத்துவதற்கு உறுதுணை புரிவதே இந்த வழிகாட்டியின் நோக்கம் என்கிறார்கள். University of Redlands பேராசிரியர் Fredric Rabinowitz சொல்கிறார், 'ஆண்கள் மத்தியில் தற்கொலையின் அளவு மிக அதிகமாக இருக்கிறது. இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் அதிகமாக இருக்கின்றன. வயது அதிகரிக்க, தனிமை உணர்வும் இவர்களில் அதிகரிக்கிறது. ஆண்கள் உணர்வு கையிருப்பை விரிவாக்குவதே எம் நோக்கம். அவர்கள் பலத்தை அழிப்பதல்ல.'

When Boys Become Boys [சிறுவர்கள் சிறுவர்களாகும் போது] என்ற நூலின் ஆசிரியரும், Stanford Universityல் சிறுவர்கள் உள - சமூக வளர்ச்சியை பற்றி கற்பிப்பவருமான Judy Y. Chu, இந்த வழிகாட்டி சிறுவர்கள் உணர்வு வெளிப்பாட்டுக்கு தடை போடும் நமக்கு ஆழ்ந்த அறிவை தருகிறது என்கிறார். 'மனிதர்கள் எல்லோருமே ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கிறோம். நெருக்கமான உறவுகள் எமக்கு ஆரோக்கியமான வாழ்வை தரும். அப்படி இருக்கும் போது, இந்த அடிப்படைத் தேவை சிறுவர்களுக்கு (ஆண்களுக்கு) மட்டும் முக்கியமற்றது என நாம் எப்படிக் கருதமுடியும்?' என்று கேட்கிறார் Chu. சிறுவர்கள் வளர்ப்பில் நாம் உணர்வுகளுக்கும், உறவுகளுக்கும் உரிய முக்கியத்துவத்தை முன்னிறுத்துவதில்லை என்பது இவர் கருத்து.

உணர்வுகளை அடக்கிக்கொள்வது தான் ஆணுக்கு அழகு என்று கற்பிக்கப்படும் போது, பலவீனத்தை வெளிக்காட்டுவது ஆண் என்ற பெயருக்கு களங்கம் என்று தான் தோன்றும். மற்றவர்கள் உணர்வுகளை ஆண்கள் மதிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கும் போது, உணர்வு கல்வியையும், அனுபவத்தையும் எப்படி அவர்களில் இருந்து தள்ளி வைக்கலாம்?

பொதுவாகவே ஆண்கள், உளநல நிபுணர்கள் உட்பட, மற்றவர்களிடம் உதவி கேட்பதை தவிர்க்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டுகிறது இந்த வழிகாட்டி. தம்மை பலவீனமானவர்களாக மற்றவர்கள் பார்ப்பார்கள் என்ற எண்ணமும் இதற்கு காரணம். ஆண்கள் உதவி தேடும் போது கூட, அவர்கள் நோய் அடையாளப்படுத்தலில் உளநல நிபுணர்கள் தவறிழைக்கிறார்கள். உள்நோக்கிய உளச்சோர்வு போன்ற நோய்நிலைகளை புறக்கணித்து, மதுபாவனை போன்ற வெளிக்காரணிகளுடன் தொடர்பு படும் நோய்நிலைகள் தான் ஆண்களில் அதிகமாக அடையாளம் காணப்படுகிறது.

ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடிய காரணிகள் பற்றிய ஆய்வுகளையும் இந்த வழிகாட்டி விளக்குகிறது. உணவுப் பழக்கவழக்கங்களாலும், புகைத்தல் போன்ற ஆபத்தான பழக்கவழக்கங்களாலும் பெண்களை விடவும் ஆண்கள் ஆயுள் காலம் குறைவடைகிறது. இனவேறுபாடின்றி எந்த சமூகத்திலும் பெண்களை விடவும் ஆண்கள் சாதகமான நிலையில் இருக்கிறார்கள். அப்படி இருந்தும், வன்முறைகளில் அதிகம் ஈடுபடுபவர்கள் ஆண்களாகத்தான் இருக்கிறார்கள். தரவுகள் ரீதியாக பார்த்தால், பாதிப்புக்கு உள்ளாகுபவர்களிலும் ஆண்கள் தான் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

ஆண்மை என்று நாம் எதனை நினைக்கிறோம், எங்கள் கண்ணோட்டத்திற்கான காரணம் என்ன என நாம் எல்லோரும் சிந்தித்து பார்க்கவேண்டி இருக்கிறது. சிறுவர்கள் ஆண்களாக வளர்ந்து வரும் காலகட்டம், பல தடைகளையும் கொண்ட காலமாக இருக்கிறது. பெண்கள் மேலான பார்வை உட்பட பல விடயங்கள் பிரச்சனைக்குரியதாகின்றன. நாம் ஆண்பிள்ளைகளை வளர்க்கும் விதம் முற்றுமுழுதாக மாற்றவேண்டும் என்கிறார் ஆண்-உளவியலில் நிபுணத்துவம் பெற்ற Dr. Michael Reichert. ஆண்மை பற்றிய ஒரு ஆரோக்கியமான அணுகுமுறை, எந்தப் பால்நிலையை சார்ந்தவர்களின் ஆரோக்கியத்திற்கும் முக்கியமானது என்கிறார் இவர். ஆண்பிள்ளைகள் இப்படித்தான் வளரவேண்டும் என்ற வரைமுறைகள் ஆண்பிள்ளைகளுக்கு உணர்வு, கல்வி மற்றும் ஆரோக்கியம் சார்ந்து பல பாதிப்புகளை கொண்டுவந்திருக்கின்றன என்கிறார் Dr. Reichert.

ஆய்வுகளின் படி, ஆண்மைக்கான வரையறைகளில் அதீத நம்பிக்கை வைக்கும் ஆண்கள் தம் ஆரோக்கியத்தில் கவனம் குறைந்தவர்களாகவும், மதுபாவனை, புகைத்தல் என்பவற்றில் அதிக நாட்டம் உள்ளவர்களாகவும், உளநல சேவைகள் பற்றி எதிர்மறையான கருத்துக்களை கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். அண்மையில் வெளிவந்திருக்கும் ஒரு ஆய்வு கட்டுரை, நம் கனடிய புலம்பெயர் தமிழ் சமூகத்தில், ஆண்மை, போர், உளநலம், என்பவற்றுக்கிடையிலான தொடர்பு பற்றி தகவல் வெளியிட்டிருக்கிறது (Affleck, Thamotharampillai, Jeyakumar & Whitley, 2018). Culture Medicine and Psychiatry என்ற ஆய்விதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் இந்த ஆய்வு, போரில் தம் அன்புக்குரியவர்களை காப்பாற்றமுடியாமல் போனமை, புலம்பெயர் சூழலில் குடும்பத்திற்கு தகுந்த ஆதரவை வழங்கமுடியாமை, உழைப்பும் வேலையும் சார்ந்த சிக்கல்கள், மற்றும் தம் இயலாமையை குத்திக்காட்டும் துணைவரால் ஏற்படும் தாக்கம் என்று, ஆண்கள் தம் அனுபவத்தில் சிக்கலாக உணர்ந்த 4 விடயங்களை முன்வைக்கிறார்கள். இந்த விடயங்கள் ஆண்களின் பால்நிலை சார்ந்து, முக்கியமாக அவர்கள் ஆண்மை பற்றி கொண்ட பார்வையை சார்ந்து பிரதிபலிக்கின்றன என்பது ஆய்வாளர்கள் கருத்து. எம் சமூகத்தை சேர்ந்த 33 ஆண்களை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்ட இந்த ஆய்வு, ஆண்கள் தம் உளத்தாக்கங்களை வெறுமையான, அல்லது பலம் குறைந்த தம் ஆண்மையோடு [depleted masculinity] தொடர்புபடுத்துவதாக விளக்குகிறது. தம் ஆண்மையை வேறுவிதமாக 'கட்டியெழுப்ப' அல்லது 'நிர்ணயிக்க', இந்த ஆண்கள் சமூகத்தில் மற்றும் பொது அமைப்புகளில் தலைமைத்துவ பதவிகளை தேடி இணைகிறார்கள் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வாளர்கள் பரிந்துரையின் படி, ஆண்மை, மற்றும் ஆண்மையின் அடையாளம் பற்றிய மீளாய்வும், மீள்-கட்டியெழுப்பலும், போரால் பாதிக்கப்பட்டு புலம்பெயர்ந்த ஆண்களின் உளநலத்திற்கு மிகவும் அவசியமாகிறது.

வழி வழி வந்த ஆண்மை சார்ந்த பார்வை தற்பொழுது கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருகிறது. நச்சுத்தன்மையான ஆண்மை [toxic masculinity] போன்ற பதங்கள் பாலியல் வன்முறைக்கு எதிரான சர்வதேச MeToo அமைப்பின் மூலம் பரவலாக பேசுபொருள் ஆகியுள்ளன. MeToo எமக்கு கற்றுத்தந்திருக்கும் பெரிய பாடம் என்னவென்றால், ஒரு சமநிலையான உலகத்தை உருவாக்குவது பெண்கள் கைகளில் மட்டுமில்லை என்பது தான், என்கிறார் Dr Reichert. முன்னெப்பொழுதும் இல்லாதவாறு, பெண்-வன்முறையை எதிர்த்து குரல் எழுப்ப இன்னும் இன்னும் ஆண்கள் முன்வரவேண்டும் என்கிறார். தம் பல கால அதிகார பலத்தை சற்றே தளர்த்தி தோள் கொடுத்தால், அதனால் ஆண்களும் அதிக ஆரோக்கியமான வாழ்வை அனுபவிக்க முடியும் என்பது இவர் கருத்து.

ஆணாதிக்க அடிப்படையில் பால்நிலையை நோக்குவதை கண்டிக்கும் ஆண்கள், பலவீனமானவர்கள் எனவே கருதப்பட்டு வந்தனர். ஆனால் பெண்களும் இந்த ஆணாதிக்கத்தை கேள்வி கேட்க ஆரம்பித்தபோது, ஆண்கள் கூட, தமக்கு இருக்கும் சாதகமான சில விடயங்களை விடுத்து, ஆணாதிக்க அமைப்பு முறை தம்மையும் பாதிக்கிறது என்பதை உணர ஆரம்பித்திருக்கிறார்கள் என்கிறார் Chu. Reichert சொல்கிறார்: பெண்களுக்கான 50 வருட போராட்டத்தின் விளைவாக, பால்நிலை சார்ந்த பாரபட்சங்கள் பற்றிய விளக்கத்தையும், பெண்கள் தாமே தம்மை யார் என நிர்ணயிக்க கூடிய சுதந்திரத்தையும் நாம் அடைந்திருக்கிறோம். ஆனால், ஆண்கள் விடயத்தில் மட்டும், உயிரியலில் விடை தேடி தப்பிக்க பார்க்கிறோம். ஆண்களா? அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள், ஏனென்றால் அது ஹோர்மோன்கள், உயிரியல், என்கிறோம்.

ஆண்கள் போட்டுக்கொள்ளும் முகத்திரையை, பால்நிலை உளவியல் நிபுணர்கள் 'Man Box' என்று அழைக்கிறார்கள். அந்த முகத்திரைக்குள் ஆண்கள் சிக்குண்டு விடுகிறார்கள் என்கிறார் Reichert. சமூக வரையறைகளுக்கேற்ப எப்படி சிந்திக்க வேண்டும், எப்படி நடக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்ப்புகள் அவர்கள் மேல் திணிக்கப்படுகின்றன. எவ்வளவுக்கு இந்த Man Box ற்குள் கட்டுப்படுகிறார்களோ அவ்வளவுக்கு ஆண்கள் வன்முறையில் ஈடுபடுவதும், மதுவை நாடுவதும், உளச்சோர்வு போன்ற உள நோய்களுக்கு ஆளாவதும் அதிகரிக்கிறது. இந்த வேதனை வெளிநோக்கி மட்டுமல்ல, ஆழமாக உள்நோக்கி தாக்குகிறது. ஆணுக்கு எதிராகவே திரும்பிவிடுகிறது.

அப்படியானால், ஒரு இளைஞன் எப்படி தைரியத்தை பெறமுடியும்? தன் உணர்வுகளை அடக்கிவிட்டு, பிடித்த பிடியில், தனக்கு தேவை என கருதுவதை நிலை நிறுத்துவதா? அல்லது, தன் மனதோடு தொடர்பு ஏற்படுத்தி, தன்னை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தி, நெருக்கமான உறவுகள் தரும் ஆதரவில் அந்த பலத்தை, தைரியத்தை பெற முடியுமா? மனிதனுக்கு எது பலம், எது பலவீனம்? பொறுமையும், சவால்களை சமாளித்துப் போகும் சாதுரியமும் வேண்டுமென்றால் என்ன தேவை? பெண் பிள்ளையோ, ஆண் பிள்ளையோ, இந்த கேள்விகளுக்கு விடை காண, எம் பிள்ளைகளுக்கு நாம் உதவ வேண்டும் என்பது Dr Reichert போன்ற உளநல நிபுணர்கள் கருத்து.

சிவனில் பாதி சக்தி என்ற முற்போக்கான சிந்தனையை பண்டைக்காலம் தொட்டு படித்து வளர்ந்த நம் தமிழர்கள் இந்த சவாலை ஏற்றுக்கொள்வார்கள் என நம்புவோம்.

pushpa.k@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதய நோய்கள்

- ரவிச்சந்திரிகா -

நீர் பாய்ச்சும் குழாய்களில் நீர் விசையுடன் ஓடுவது போல நாடிகளில் குருதி பாய்ந்து உடலின் பல அங்கங்களை அடைகின்றது. நாடிகளின் விட்டம் குறைந்தால் அல்லது அவற்றில் அடைப்பு ஏற்பட்டால் உடலின் எல்லா அங்கங்களும் செயல்படத் தேவையான குருதி போய்ச் சேருவதில்லை. இதனால் ஏற்படும் நோய்கள் cardio vascular diseases எனப்படுகின்றன.

இதயத்துக்குக் குருதியை எடுத்துச் செல்லும் நாடிகள் coronary arteries எனப்படுகின்றன. இவை பிராணவாயு, ஊட்டச்சத்துகளை சீராக இதயத்துக்கு வழங்காவிடின் இதயத்தின் செயல்திறன் பாதிக்கப்பட்டு இதயம் நோய் கொள்கிறது. இந் நாடிகளின் விட்டம் குறைவது, நாடிகள் தடித்து இறுக்கமாவது, நாடிகளில் அடைப்பு ஏற்படுவது atheroscelerosis எனப்படுகிறது. இதயத்துக்குச் செல்லும் குருதியின் அளவு குறைவதால் இதயத்தில் ஏற்படும் நோய் coronary artery disease (CAD) எனப்படுகிறது. இதுவே மிகப்

பகுதி: 2

பொதுவான இதய நோய் ஆகும். இது மாரடைப்பு, நெஞ்சு வலி ஆகியவற்றின் முக்கிய காரணி ஆகும். மிகக் கடுமையான விளைவாக இதயம் திடீர் என முற்றாகச் செயல் இழக்கிறது. இது cardiac arrest எனப்படுகிறது.

CAD மூன்று வகையாக உள்ளன:

- Obstructive CAD: நாடிகளின் விட்டம் குறைவடைவது, அல்லது அவற்றில் அடைப்பு ஏற்படுவது.
- Non Obstructive CAD: நாடிகள் கிளைகளாகப் பிரிவதால் அல்லது இதயத் தசைகள் நாடிகளை இறுக்குவதால் நாடிகளின் விட்டம் குறைவடைகிறது.
- Spontaneous CAD: நாடிகள் கிழிவது.

நாடிகளின் விட்டம் குறைவதற்கு நாடிகளின் உட்சுவர்களில் plaque என்னும் ஒரு வகைக் கொழுப்பு படிவது காரணம் ஆகும். இது இளம்பிராயத்திலேயே ஆரம்பிக்கிறது. சிறிது சிறிதாகப் படிந்து காலப்போக்கில் நாடிகளின் விட்டத்தை வெகுவாகக் குறைத்து விடுகிறது. இவ்வாறு படிவதை நாம் நம் கண்களால் அவதானிக்க முடிவதில்லை. ஆரம்பத்தில் வலி இருப்பதில்லை என்பதால் இது கவனிக்கப்படுவதில்லை.

Plaque ஒட்டும் தன்மையுள்ள மஞ்சள் நிறப் பொருள் ஆகும். இது கொலெஸ்ட்ரோல், கல்சியம், கலங்கள் வெளியேற்றும் கழிவுப் பொருட்களால் உருவாக்கப் படுகிறது. உடலில் உள்ள அனைத்து நாடிகளிலும் plaque படிகிறது எனினும், பெரிய நாடிகளையே முதன்மையாகப் பாதிக்கிறது. நாடிகளின் உட்சுவர்களில் ஏற்படும் காயங்கள், கிழிசல்கள் ஆறும்போது அதில் ஏற்படும் வடுக்களின் மீது கொழுப்பு படிவது அதிகரிக்கிறது.

நாடிகளில் காயம் ஏற்பட்டால் அந்த இடத்துக்கு காயத்தை ஆற்றும் பொருட்டு அதிகப் படியான குருதி அனுப்பப்படுகிறது. இக்குருதி கட்டிபடுவதன் மூலம் காயம் ஆற்றப்படுகிறது. ஆனால் அதே குருதிக் கட்டி (blood clot) நாடிகளில் குருதி பாய்வதைத் தடுக்கிறது. இதனால் மாரடைப்பு அல்லது பக்கவாதம் ஏற்படலாம். நாடிகளில் plaque, குருதிக்கட்டிகள் ஏற்படுத்தும் அடைப்புகளினால் ஏற்படும் மரணங்கள் ஐக்கிய அமெரிக்காவில் மரணத்தின் முதற் காரணியாகும்.



நோய் ஏற்படுவதன் சாத்தியக் கூறுகளை அதிகரிக்கும் காரணிகள் risk factors எனப்படும். இவை மாற்றக் கூடியவை, மாற்ற முடியாதவை என இரண்டாகப் பிரிக்கப்படலாம்.



மாற்றக் கூடிய risk factors:

- உயர் குருதி அழுத்தம்.
- குருதியில் கொலெஸ்ட்ரோல் அளவு கூடுதலாக இருத்தல்.
- சர்க்கரை நோய்.
- உடல் எடை கூட இருத்தல்.
- சமச்சீரற்ற, ஆரோக்கியத்தைப் பாதிக்கும் உணவுப் பழக்கங்கள்.
- மது பாவனை.
- புகை பிடித்தல். புகையிலை மெல்லுதல்.
- குறைவான உடல் பயிற்சி.
- மன அழுத்தம்.
- மனச்சோர்வு.

மாற்ற முடியாத risk factors:

- வயது: வயதாகும்போது இதய நோய்கள் ஏற்படும் சாத்தியக் கூறுகள் அதிகரிக்கின்றன.
- பால்: பெண்களுக்கு மாதாந்திர குருதிச் சுழற்சி நிற்கும் menopause காலம்.
- குடும்ப மருத்துவ வரலாறு: ஒருவருடைய குடும்பத்தில் இளவயதிலேயே இதயநோய் உள்ளவர்கள் இருப்பின், அவருக்கு இதயநோய் ஏற்படும் சாத்தியங்கள் அதிகமாகும்.
- சில குறிப்பிட்ட இனத்தவர். கனடாவின் inuit, metis பூர்வீக குடியினர்.
- சில கண்டங்களைச் சேர்ந்தவர்கள்: தெற்காசியா, ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள்.
- வாழும் சூழல், சூழலியல் காரணிகள்: ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள், சமூக சேவைகள் ஆகியன.

களைப்பு, நெஞ்சுவலி, தலைசுற்று ஆகியவை CADயின் ஆரம்ப அறிகுறிகளாகும். நெஞ்சு இறுக்கமாக இருப்பது, நெஞ்சு எரிவது, மூச்சுத் திணறல் ஆகியவை angina எனப்படும் நெஞ்சுவலியின் அறிகுறிகள் ஆகும். நெஞ்சின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கும் இந்த வலி தோள், கழுத்து, முதுகு, தொண்டை, தாடைப் பகுதிகளுக்குப் பரவும்.

பெண்களின் நெஞ்சுவலி அறிகுறிகள் சற்று வேறுபட்டிருக்கும். இன்னவென்று சொல்ல முடியாத ஒரு அசௌகரியம், களைப்பு, சீரற்ற தூக்கம், சமிபாட்டுச் சிக்கல்கள், பதட்டம் ஆகியன உணரப்படும். இவை இதயத்துடன் நேரடியாகச் சம்பந்தப்படாதவை போல் இருப்பதால் பெண்களுக்கு இதய நோய்கள் இருப்பதை இலகுவாகக் கண்டுபிடிக்க முடியாது போகிறது.

சிகிச்சை அளிக்கப்படாத நெஞ்சுவலி - மாரடைப்பு, பக்கவாதம், மரணம் ஆகியவற்றுக்குக் காரணமாகிறது.

மருத்துவர் நோயுற்றவரின் மருத்துவ - குடும்ப வரலாற்றை விரிவாக அறிந்து கொள்வார். X கதிர்ப் படங்களைப் பரிந்துரைப்பார். பின்வரும் பரிசோதனைகள் (ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை) செய்யப்படும்.

- Angiography
- Echocardiogram
- Electrocardiogram (ECG/EKG)
- Stress test
- Nuclear stress test: இவை thallium scan, cardiolite scan, nuclear perfusion imaging, myocardial perfusion scan or myocardial perfusion imaging [MPI], radionuclide test எனப் பலவகைப்படும்.

CAD ஐ சிகிச்சை மூலம் முற்றாகக் குணப்படுத்த முடியாது. மருந்துகள், சத்திரசிகிச்சை, வாழ்க்கைமுறை மாற்றங்கள் ஆகியவற்றின் மூலம் நோய் ஏற்படுவதைத் தள்ளிப் போடலாம். நோயின் கடுமையைக் குறைக்கலாம். ஆபத்தான விளைவுகளைத் தள்ளிப் போடலாம்.

வாழ்க்கை முறை மாற்றங்கள்:

- குருதி அழுத்தம், சர்க்கரை நோய், குருதியில் கொலெஸ்ட்ரோல் அளவு ஆகியவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல்.
- புகை பிடித்தல், புகையிலை பாவனையை முற்றாக நிறுத்துதல்.
- நோய்க்குரிய பிரத்தியேக உணவுமுறையைப் பின்பற்றுதல்.
- உடல் எடையைக் குறைத்தல்.
- மதுபாவனையைக் குறைத்தல்.
- மன அழுத்தத்துக்குரிய காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றுக்குத் தீர்வு காண முயற்சி செய்தல்.

உடல் குணமாக எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுடன் மனநலத்துக்குரிய முயற்சிகளையும் மேற்கொள்வதும் மிக முக்கியமாகும்.

உசாத்துணை:

- Coronary artery disease https://www.heartandstroke.ca/heart/conditions/coronary-artery-disease
- Cholesterol and artpery plaque buildup (2019) https://www.webmd.com/cholesterol-management/cholesterol-and-artery-plaque-buildup#1
- Image of Arteries (2019) https://www.naturalfoodseries.com/9-remedies-atherosclerosis/
- Image of angina (2019) https://www.heartfoundation.org.nz/your-heart/heart-conditions/angina

ravichandrika@thaiveedu.com

STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Our passion is to solve all your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2009 - 2018)
- Appeals, Audits and Adjustments
- Voluntary Disclosure Program (VDP)
- GST/HST New Housing/Rental Rebate (NHR/NRRPR)
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Estate, Trust & Non-Residents
- US Taxes - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒய்ந்துகொண்டிருக்கும்...

4ம் பக்கத் தொடர்ச்சி...

பயணமாகியிருந்தார்.

அவசரகாலச்சட்டத்தைப் பிரகடனப்படுத்தி விட்டு அதிகாரத்தினைப் படையினரிடம் கொடுத்தமை இராணுவத்தின் மீதும் புலனாய்வுத் துறையின் மீதும் போடப்பட்ட போர்க் குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை என்பதனை வெளிஉலகுக்குக் காட்டுவது போலிருந்தது. இது முக்கிய அரசியற் தலைவர்களது அடிப்படை நோக்கம் போலவும் அமைந்திருந்தது.

இலங்கை இராணுவம் கட்டுப்பாட்டுடன் செயற்படுகிறது அது மக்களுக்குப் பாதுகாப்பினை வழங்கவே வடக்கில் குவிக்கப்பட்டிருக்கிறது. என்ற கருத்தினை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதனூடாக உலக அரங்கில் இலங்கை இராணுவத்துக்கிருக்கும் களங்கத்தினைப் போக்கப் போரை முன்னின்று நடத்திய எல்லாப் பெரும்பான்மைக் கட்சித் தலைமைகளும் இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தன.

இலங்கையில் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டதும் அதனை இனங்கண்டு கைகாட்டியவர்கள் தமிழர்கள். ஈழப்போர் நடத்தப்பட்ட காலத்தில் தமிழருக்கு எதிரான இனஅழிப்பில் ஆயுதம் வழங்கப்பட்ட முஸ்லிம் இன இளைஞர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். அதே போலவே போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்ட விடுதலைப்புலிகளது விநாயகமூர்த்தி முரளிதரன் என்ற கருணாவின் பின்னணியிலிருந்த தமிழ் இளைஞர்களும் பயன்படுத்தப்பட்டிருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இதன்பின்னணியிலேயே இலங்கையில் இஸ்லாமிய தீவிரவாதத்தின் தோற்றம், வளர்ச்சி, அதனை வளர்த்தெடுத்தவர்கள், வளர்த்தெடுக்க உதவிய முஸ்லிம் தலைவர்கள் பற்றிய உண்மைகளைக் கிழக்கிலங்கையில் பலருக்குத் தெரிந்திருந்ததும் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தமிழர்கள் சிலர் தான் முதலில் இந்தப் பயங்கரவாதக் குழுபற்றிய உண்மையை வெளியில் சொல்லியிருந்தார்கள்.

சமூக பொருளாதார அரசியற் காரணங்களுக்காக அவர்களால் கொலைசெய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட தமிழர் மற்றும் முஸ்லிமகள் பற்றிய விபரங்களும் கையிருப்பிலிருக்கும் ஆயுதங்கள் பற்றிய விபரங்களும் பாதுகாப்புத் தரப்புக்குத் தெரியப்படுத்தியிருந்ததாகவும் அறிவித்திருந்தார்கள். இவை இன்னமும் புலனாய்வுத் துறையினரால் உறுதி செய்யப்படவில்லை.

உண்மைநிலையை பாராளுமன்றத்தினூடக உலகறியச் சொல்லவேண்டுமென்ற ஆதங்கம் கிழக்கு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிருந்தது. பயங்கரவாதிகளது இச்செயல்களினால் ஆத்திரமடைந்த மட்டக்களப்பில் வாழ்ந்து வரும் முஸ்லிம்களும் தமிழர்களும் பயங்கரவாதிகளுக்கு கடுமையான தண்டனைக் வழங்கப்படவேண்டுமென்ற ஏகோபித்த மனநிலையிலேயே இருந்தார்கள். அது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் ரவூவ் ஹக்கிம் தனது குரலைப் பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் உரக்கக் கூறியிருந்தார்.

கிழக்கிலங்கைச் சியோன் தேவாலயத் தாக்குதல் அமெரிக்க இஸ்ரேல் இரண்டுக்கும் கொடுக்கவிருந்த அடியின் பிரதிபலிப்பெனச் சில ஊடகங்கள் நிறுவ முயற்சி செய்திருந்தன. சியோன் என்ற யூதஇனத்துடன் தொடர்பான வார்த்தையை ஆதாரமாகக் கொண்ட கணிப்பாக அது அமைந்திருந்தது. ஆழமாகச் சிந்தித்தால் மட்டுநகர் தேவாலயத் தாக்குதல் தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையிலான வெறுப்பினை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பம். அது கைமீறிப் போய்விட்ட தொரு செயற்பாடு என்பதனைச் சிறுபான்மையினராகிய தமிழ், முஸ்லிம் இனங்கள் விளங்கிக்கொள்ளும் நாள் வெகுதூரத்தில்லை.

இஸ்லாமிய பயங்கரவாதத்தினைத் தூபம் போட்டு வளர்த்தவர்கள் அரசியற்பலம், பணபலம் ஆகியவற்றுக்குத் துணைநின்றவர்கள் என்ற குற்றச்சாட்டுகள் வடக்கில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மீதும் கிழக்கில் ஆளுனர் ஹிஸ்புல்லா மீதும் மேற்கில் ஆளுனர் அசாத் சாலி மீதும் முன்வைக்கப்பட்டிருந்தன. அரசியலில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிமுக்கியத்துவம் எந்த அரசாங்கத்தினையும் ஆட்டிப்படைக்கத்தக்க வல்லமையினை அவர்கள் பெற்றிருந்தார்கள் என்பதிலிருந்துதான் இந்த ஊகம் உருவாகிறது.

இதே காரணத்தைக்கொண்டு ரிசாத் பதியுதீனைத் தம்வசம் இழுத்துக் கொள்ளுவதற்காக போடப்பட்ட கூட்டு எதிரணியினரது நாடகம் தான் அவர்மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பதனை அவர் மீது மகிந்த ராஜபக்ச உட்படப் பல அரசியல்வாதிகள் அக்கறையுடன் செயற்படுவதிலிருந்து காணமுடிகிறது.

அமைச்சர் ரிசாத்தின் செயற்பாட்டினால் சிறுபான்மையினங்களான தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பல முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டிருந்த பொழுதிலும் கூட்டு எதிரணியின் திட்டமிட்ட வகையில் செயற்படும் இத்தகைய போக்குக்குப் பெரும்பாலான தமிழர்கள் துணைபோகத் தயாராக இருக்கவில்லை.

பலமான அதிகாரத்தையும் இராணுவத்தையும் புலனாய்வுத்துறையினையும் தம்வசம் வைத்திருக்கும் இந்த அரசாங்கம் தீவிரப்படுத்தாத அல்லது தாமதப்படுத்தும் விசாரணை உட்பட்ட எந்த விடயமும் ஆட்சியாளருக்கு ஒப்புதலில்லாத அல்லது விருப்பமில்லாத செயற்பாடுதான் என்பதனைக் கடந்தகால நிகழ்வுகள் தெளிவுபடுத்தியிருக்கின்றன. 'மாமி உடைத்தால் மண்குடம் அதை மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்ற பாகுபாட்டு உத்தியினை இந்த அரசாங்கமும் பல தடவைகளில் பிரயோகித்துத்தானிருக்கிறது. இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை ஆதாரங்காட்டிப் பலர் பாராளுமன்றத்திலும் பேசியிருந்தனர்.

'இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடல்ல. எல்லா இனங்களுக்கும் எல்லா மதத்தினருக்கும் பொதுவான நாடு' என்ற அமைச்சர் மங்கள சமரவீரவின் கூற்றுக்குப் பௌத்த சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்தும் மதத் தலைவர்களிடமிருந்தும் எதிப்புக் கிளம்பியிருக்கிறது. அமைச்சர் மனோகணேசன் 'இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடென்று' பேசியிருப்பது சிறுபான்மைத் தரப்பினரால் கவனத்துக்கெடுக்கப்பட்டிருந்தது.

இனங்களுக்கிடையில் முரண்பாடிருக்கின்ற இத்தருணத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இருவேறு இனத்தவர்கள் தமக்கு எதிரான இனத்தைத் திருப்திப்படுத்த எடுத்துக் கொண்ட முயற்சி போலத் தோன்றும்.

மனோகணேசன் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளதனைச் சட்டரீதியில் பார்த்தார். மங்கள சமரவீர அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ளதனை நியாயத்தின் அடிப்படையில் பார்த்தார். எல்லா அரசியல்தலைவர்களும் இதனை நன்கு விளங்கிக்கொண்டால் இலங்கையில் சிறுபான்மையினம் தொடர்பான பிரச்சினை ஊதிப் பெரிதாக்கப்பட்டிருக்காது. அதேபோலத் தொடரும் சிறுபான்மையினர் மீதான வன்முறை வட்டம் நிகழவும் வாய்ப்பேற்பட்டிருக்காது.

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் என்னும் மந்திரக்கோல்

- பாதுசா ஆனந்தநடராசா -

மனம் என்றால் என்ன? மனம் எப்படி இயங்குகிறது? எங்கு இருக்கிறது? மனம் உயிர்களுக்கு உள்ளாக இருந்து செயற்படுகிறதா? மனம் என்ற ஒன்று உயிர்களிடத்தில் உண்டா? அல்லது வெறும் கற்பனையா? இவ்வாறு பலவிதமான கேள்விகளும் சர்ச்சைகளும் இருந்துகொண்டே இருக்கின்றன.

இருப்பதும் இல்லாதது போலும் எமது வாழ்க்கையைத் தன் வசப்படுத்தி எம்மை பொம்மலாட்டப் பொம்மையைப் போல ஆட்டுவிக்கும் மனம் எமது நண்பனும் எம்மை அடிமையாக்கி வைத்திருக்கும் ஒரு கருவியே மனம் ஆகும். அத்தகு மனம் எம்வயப்படின் எமது வாழ்க்கை பெரும்பாலும் எம் வசப்படுவதுடன் சூழ் நிலைக் கைதியைப் போன்று இராது நாம் நினைத்தபடி இருக்கும். எம்மால் கைகள் கால்கள் இதயம் மூளை போன்ற உறுப்புக்களை எளிமையாக உணர்ந்து இனம் காணமுடியும். ஆனால் மனதின் தன்மை மனதின் செயற்பாட்டை இலகுவாக இனம் காணமுடியாது.

மனம் இருப்பதை நாம் எவ்வாறு உணருகின்றோம்? எவ்வாறு உறுதி செய்கின்றோம்?. மனதைக் கொண்டு எம் மனதையே ஆராய்வதன் மூலம் அதன் செயற்பாட்டையும் எவ்வாறு எம்மைக் கட்டுப்படுத்துகிறது என்பதையும் உணர முடியும். ஒன்றைக்கட்டுப்படுத்த அதன் தன்மையை உணர்ந்து அறியாது எவ்வாறு அதைக் கட்டுப்படுத்தவோ கையாளவோ முடியும்?

மனத்தையும் மனதின் செயல்ப்பாட்டையும் உணர, சித்தம் மற்றும் புத்தியின் செயல்ப்பாட்டை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். சித்தம் என்பது மனதின் அடித்தளம். இங்குதான் எமது சிந்தனைகள் வசிக்கின்றது. எண்ணங்களின் ஒழுங்கும் இங்குதான் அமைந்திருக்கின்றது. சித்தம் கலங்கினால் எமது புத்தியின் செயல்பாடும் குலைந்துவிடும். சித்தம் கலங்கியவர்களால் வாழமுடிந்தாலும், அர்த்தமுள்ள ஒரு வாழ்க்கையை வாழமுடியாது. புத்தியின் தன்மையானது ஒரு முடிவை எடுப்பதாகும். ஒரு முடிவை எடுப்பதற்கு மனம், புத்தி, சித்தம் இவற்றின் செயற்பாடு மிக முக்கியமானதாகும். ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது அது மூளையின் செயற்பாட்டால் மனதிற்கு அனுப்பப்படுகிறது. மனமானது அப்பொருளைப் பற்றித் தெளிவாக அறிவதற்குப் புத்தியின் மூலம் சித்தத்தில் ஆராய்ந்து சரியானதா என முடிவை எடுக்கிறது. தனக்கு சரி என்று படுகின்ற அல்லது தேவை என்று நினைக்கின்ற முடிவுகளை எடுக்கிறது. ஏதாவது ஒரு விடயத்தைப் பற்றியோ பொருளைப் பற்றியோ முடிவு எடுக்க வேண்டுமானால் ஐம் புலன்களின் உதவியுடன் அதனை உள்வாங்கி அதனைப் பற்றிச் சிந்தித்து எமது நினைவின் உதவியுடன் புத்தியின் செயற்பாட்டைக் கொண்டு முடிவுகளை எடுக்கின்றோம். மனம், புத்தி, சித்தம் இவற்றின் ஒருங்கிணைப்பின் செயற்பாட்டால் உள்ளுணர்வு மூலம் தீர்மானத்தை எடுக்கின்றோம்.

எடுத்துக்காட்டாக, நாம் ஒரு உணவைக் காண்கையில் உண்பதா தவிர்ப்பதா என்பதைப் பற்றிய முடிவினை எடுத்து எமது சித்தம், உணர்வு, புத்தியின் செயற்பாடு கொண்டு ஒரு முடிவை எடுத்து அதனை மனதின் மூலமாக உடம்பால் செயற்படுத்தி

தொடர்தல் 16ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் என்னும்...

15ம் பக்கத் தொடர்ச்சி...

உண்ணத் தொடங்குகின்றோம். பார்க்கப் பட்ட பொருளானது நினைவுகளில் இல் லாத ஒன்றாக இருக்குமானால் எமக்கு இப் பொருளைப் பற்றித் தெரியவில்லை என உணர்ந்து கொள்கிறது. அதைப்பற்றி தெரிந்துகொள்ள முற்படுவோம், தெரிந்த பின் கண்ணால் கண்டதை உண்ணு வதா, தவிர்ப்பதா என்ற முடிவை எடுப் போம். அறிவு சார்ந்த நிலையில் மனமா னது முடிவை எடுப்பதற்கு புத்தியின் செயற்பாடு அவசியமாகிறது, சித்தத்தில் இருந்து புத்தி முன் அறிந்தவற்றை நினைவுபடுத்தும், அத்துடன் புலன் அறி வுகள் இணைந்து செயற்படும் புலனறிவின் செயற்பாடும் முக்கியமாகின்றது. கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் மூக்கால் வாசனையை உணர்ந்தும் நாக்கால் சுவைத் தும் தோலால் உணர்ந்து அறிந்தும் எமக் குப் பாதுகாப்பான தன்னை தான் காக் கக்கூடிய முடிவுகளை எடுக்கும். எடுத் துக்காட்டிற்கு ஒரு உணவு தனக்கு உகந் ததா, உணவு கெட்டுப் போனதா, அதை உண்ண முடியுமா என்பதை புலன்களால் அறிந்து முடிவுகளை எடுக்கிறது. அறி வுக்குத் தெரிந்த உணவானாலும் அது உண்ணக் கூடிய நிலையில் உள்ளதா என்பதை அறிய வேண்டும் எனில் நாம் புலனறிவை பயன்படுத்த வேண்டியுள்ளது. நம் ஐம்புலன்களால் உள்வாங்கக் கூடிய அனைத்து விடயங்களும் எமது மனதின் செயற்பாட்டிற்கான காரணியாக அமைகி றது. இதையே மனது ஒழுங்குபடுத்தி முடிவுகளை எடுத்து பிரதிபலிக்கின்றது. ஐம்புலன்களால் உள்வாங்கப்படும் புறச் செயல்களை மனம் உள்வாங்கி புத்தி முடிவுகளை எடுப்பதற்கு ஏதுவாகிறது. புத்தி முடிவுகளை எடுப்பதற்கு முன் அனு பவங்கள் கடந்த கால நினைவுகளையும் கொண்டு முடிவுகளை எடுகின்றது. இந்த முடிவே எமது செயற்பாட்டிற்கு காரண மாகிறது, இது மட்டுமன்றி நம் ஆழ்ம னதில் ஏற்படக்கூடிய பதிவுகளைக் கொண்டு புத்தியின் செயற்பாடு அமைந் திருக்கின்றது. இவாறு உடல் மனம் ஆழ் மனம் புத்தி ஆகியவற்றின் செயற்பாடு ஒன்றை ஒன்று சார்ந்தே செயற்படுவதாக உள்ளது.

இவ்வாறு மனது மூன்று நிலைகளில் செயற்படுகின்றது. வெளி நிலையில் புலன்கள் உள்வாங்குவதை கையாளும் தன்மையையும் உள்நிலையில் சித்தத்தில் பதிந்துள்ளவற்றையும் வைத்தும் இடை நிலையில் புத்தியின் செயற்பாட்டைக் கொண்டு முடிவுகளை எடுக்கும் தன்மை யைக் கொண்டு மூன்று நிலைகளில் செயற் படுகின்றது.

நம் சிந்தனைகளின் ஒவ்வொரு மாற்றமும் ஆழ்மனதில் ஒரு அதிர்வை ஏற்படுத்து கின்றது. அது உடலிற்கு மாற்றப்படும் பொழுது நம் மூளையின் நரம்புகளின் செயலைத் தூண்டுகிறது.

சிந்திக்கும் செயல் தான் மன மாறுதல்க ளுக்குக் காரணமாகின்றது. குறிப்பிட்ட சிந்தனையின் மீது மனம் திருப்பி விடப் பட்டு அது அதனையே நினைக்கிறது. அப்பொழுது ஒரு பொருளின் மீது அல் லது ஒரு விடயத்தின் மீது திட்டமான அதிர்வு உண்டாக்கப்படுகிறது. அடிக்கடி இந்த அதிர்வு அதிகமாக ஏற்பட்டால் மீண்டும் மீண்டும் தானே செயற்படும் பழக்கமாக மாறும்.

அதுவே சுயமாகச் செயற்படும் ஒன்றாக மாறுகிறது. இதுவே பழக்கவழக்கமாக ஆகின்றது. உடல் மனதைப் பின்பற்று கிறது. மனதினுடைய மாற்றங்களை உடல் வெளிப்படுத்துகின்றது. இது எமது செய லாகின்றது.

மனித உடலானது மூன்று வகை உடல்க ளால் ஆனது. பரு உடல், நுண் உடல், காரண உடல். கண்ணிற்குப் புலப்படும் மாமிசத்தால் ஆன அழியும் தன்மை கொண்டது பரு உடல். நுண்ணுடலானது சத்தி, உடல், மனம், புத்தி ஆகியவையின் தொகுப்பே ஆகும். கண்ணால் பார்க்க முடியாததும், எந்தப் புலனறிவாலும் உணர முடியாததுமான ஒன்றே நுண்ணுடல் எனப் படுகின்றது. இந்த நுண்ணுடலில் தான் எமது நாடிகளும் அமைந்திருக்கின்றன. முக்கிய மூன்று நாடிகளான இடகலை, பிங்கலை மற்றும் சுளுமுனை நாடிகள் எமது உடல் மற்றும் மனதின் செயற்பாட் டில் பெரும் பங்கை வகிக்கின்றது. இந் நாடிகளில் நடைபெறும் செயற்பாட்டா- லேயே எமது ஐந்து புலனறிவின் செயற் பாடிற்கும், ஐந்து செயல்களைப்புரியும் வெளி உறுப்புக்களின் செயற்பாடிற்கும் தேவையான சக்தியின் ஓட்டம் அமைகின் றது, இச்சக்தியின் தன்மையையும் ஓட்டத் தையும் ஒழுங்கு படுத்தும் பயிற்சிகளை யோகத்தின் மூலமாகவும் கலைகளின் மூலமாகவும் வீரியப்படுத்தலாம். இச்சக் தியே எமது மனதின் சக்தியாகத் திகழ் கிறது. உடலின் சக்தியின் செயற்பாட்டை ஒழுங்குபடுத்துவதன் மூலமாகவும் அல் லது கற்றல் மற்றும் அனுபவத்தால் பெற்ற புத்தியின் மூலமாகவும் எமது மனதை எம் கட்டுக்குள் கொண்டுவரலாம்.

எமது மனமே எமது நண்பராகவும் எம்மை அடிமைப்படுத்தும் ஒன்றாகவும் திகழக் கூடிய கருவி. இதுவே எம்மை ஆட்டிப் படைத்து ஆழுமொன்றாகவும் விளங்கு கின்றது. அத்தகு மனத்தை நாம் கையா ளும் போது, மனதில் தோன்றும் எதிர்ம றைச் சிந்தனைகளைக் கையாளும் தன் மையிலும், அச்சிந்தனையை புத்தியைக் கொண்டு இரண்டாம், மூன்றாம் முறை அல்லது தேவைப்படும்வரை ஆராய்ந்து முடிவுகளை எடுப்பதன் மூலமுமே எமது உள் மற்றும் வெளிச்சூழ்நிலைகளை மன தைக் கொண்டு கையாண்டு எமக்குகந்த நிலையாக மாற்றமுடியும். இவ்வாறு செயற் படுவதற்கு பயம், நம்பிக்கையின்மை, அதனால் எற்படக்கூடிய தற்பாதுகாப்பு நிலையால் மனம் சிந்திக்கவோ, புத்தியைப் பயன்படுத்தவோ மறுக்கிறது. எமது மன தைக் கையாள்வதில் மேலதிக அக்கறை யைச் செலுத்துவதன் மூலமே மனதிலெ ழும் எதிர்மறைச் சிந்தனைகளுக்கும் பிரச் சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஏற்ப டக்கூடிய தடைகளையும் நீக்க இயலும்.

விழித்தும் உறங்கியும் கனவிலும் நனவி லும் கூடியிருக்கச் செய்வது மனம். ஆழ் மனமும் ஆகும். திருமந்திர தியான முறைகளில் ஒன்று, உள்ளத்தை உணர்ந்து கழுத்து அல்லது புருவமத்தியில் கொண்டு நிறுத்திப் பார்ப்பவர்களுக்கு, தன்னைக் காட்டும் மனம். மனதைக் கண்டு அறிந்து உணர்ந்து போற்றினால் அவரே மனிதர்.

சித்தத்துள் தெளிவு இல்லாது விளங்கும் எண்ணத் தூண்டல்களைக் களைந்து உயர் மன உணர்வில் தூய எண்ணங்க ளாக்கி அற்புதங்கள் செய்யலாம். மனதின் பயன் சிந்தனை தான். சிந்தனைகள் சித றினால் வாழ்க்கையின் முன்னேற்றங்கள் தடைபடும். மனதை ஒருநிலைப்படுத்துவ தன் மூலம் ஆழமான சிந்தனை, சிந்தனை யில் தெளிவு, தன்னம்பிக்கை, ஒழுக்கம், கூர்ந்து கவனிக்கும் தன்மை, நினைத்த வற்றை செயல் படுத்துவதன் மூலம் எண்ணியபடி வாழ்க்கையை அமைக்க முடியும்.

கீழ்வரும் சித்தர் பாடல்கள் மூலம் மன தின் செயற்பாடு எமது வாழ்க்கையை எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை அறியக்கூடியதாக உள்ளது. இவை உங்கள் சிந்தனைக்கு.

கடுவெளிச்சித்தர் சித்தர் பாடல்:

நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி
மெத்தக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு
டைத்தாண்டி

உயிரானது உடலாகிய தாயின் வயிற்றில் பத்து மாதம் தங்கி இவ்வுலகில் பிறவி என்னும் நிலையை அடைந்தபின் உடல் நலத்தைக் கெடுத்துக்கொண்டு. மனிதன் மனம் போன போக்கில் சென்றால் ஏற்ப டும் நிலை விளக்கப்பட்டுள்ளது.

திருமூலர் பாடல்:

தானே தனக்குப் பகவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தனக்கு வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனுமாமே.

பகைவர்களையும் நண்பர்களையும் உரு வாக்குவது நாம் தான். நம் மனதில் பிறக்கும் எண்ணங்களிலிருந்தும் அதனால் வரும் நம் நாவிலிருந்து பிறக்கும் சொற் களின் காரணமாகவும் அதன் விளைவாக நாம் செய்யும் செயல்களிலிருந்தும் தான் நமக்கு நண்பர்களும் பகைவர்களும் உரு வாகிறார்கள். தாமாக வெளியிலிருந்து உருவாவதில்லை. யாவும் நம் மனதின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது.

■ ■ ■

யோகசாலை

ஒரு வளமான சமுதாயத்தை நோக்கி

உடல், மனம் மற்றும் ஆத்ம நலம் பேண
ஆசனப்பயிற்சி
மூச்சுப்பயிற்சி
தியானம்

- சிறுவர்கள் ஆர்வமாக கற்றுக் கொள்ளும் முறையில் அமைந்த யோகா வகுப்புக்கள்
- இளையோருக்கான சிறப்பு குறுகிய கால அறிமுகப்பயிற்சி வகுப்புக்கள்
- ஆரம்ப மற்றும் ஆழ்நிலை வகுப்புக்கள்
- முதியோர் நலம் பேணும் சலுகைக்கட்டண வகுப்புக்கள்

பதினைந்து வருட பயிற்சி அனுபவம் பெற்று
உலகப் பிரசித்தி பெற்ற சிவானந்தா அமைப்பில்
பயிற்றுவிற்கும் ஆசிரியர்கள்

யோகசாலையை ஒரு யோகசமூக சாலையாக
உருவாக்க நீங்களும் இணையவும்

தொடர்புகளுக்கு

Tel: 647 760 8156
Email: yogasalai108@gmail.com
Address: 210 Silver Star Blvd, Unit 850, Scarborough, ON
(Midland Ave/ Finch Ave E)

திருமணம், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள்
அச்சிட தொரன்ரோவில் புதிய காட்சியறையுடன்

MENAKA CARD

மேனகா அழைப்பிதழ்

Invitations for all occasions

80 Nashdene Road, Suite 113, (E Block), Toronto, Ontario, M1V 5E4. Tel : 416.335.1155

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வைக் கண்ணாடிகள் / Spectacles

- எஸ். பத்மநாதன் -

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அந்த சிரசிலும் கண்களின் சிறப்பு அளவிட முடியாததொன்றாகும். கண்கள் புகைப்படக் கருவி போன்று செயல்படுகின்றன. எந்த ஆபத்து வந்தாலும் கண்கள் தானாக மூடிக்கொள்ளும். எந்த நோயையும் கண்கள் காட்டிக் கொடுக்கும்.

வருடமொன்றுக்கு சராசரியாக 4,200,000 தடவைகள் கண்களை சிமிட்டுகிறோம். சாதாரணமாக 100 நிறங்களை அடையாளம் காணும் சக்தி எமது கண்களுக்கு உண்டு. மரபணுவியல் (genetics) முறையில் கண்கள் பல நிறங்களில் அமைவது விந்தை. கர்ப்பம் தரித்து 10 கிழமைகளில் உருவாகும் கண்கள் வாழ்நாள் முழுவதும் எம்முடன் உள்ளன. ஆனால் கண்களின் சிக்கல் வாய்ந்த அமைப்பினால் பல்வேறு பார்வைக் கோளாறுகளை நாம் சந்திக்கிறோம்.

விழி, கண், நேத்திரம் என்றெல்லாம் அழைப்பதுடன் கயல்விழி, மலர்விழி, மீன்விழி, மான்விழி என்றெல்லாம் அழகு பார்க்கும் கண்களில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளை தீர்க்கவே பார்வைக் கண்ணாடிகளை அணிய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. பொதுவாக பார்வைக் குறைபாட்டை சீர் செய்ய வைத்தியர்கள் கண்ணாடியைச் சிபாரிசு செய்யும் போது சிலர் அதனை விரும்புவதில்லை. அதன் முக்கியத்துவத்தை உணராது ஏனோ தானோ என்று இருந்து விடுகிறார்கள்.

சராசரி 24 மில்லிமீட்டர் நீளமுள்ள கண்களில், கண்மணி (pupil) உள்ளது. தொடர்ந்து iris அதன் பின்னால் vitreous humor என்னும் திரவம், விழித்திரை (retina), பார்வை நரம்பு (optic nerve) அமைகின்றன. இவை அனைத்தும் தொழிற்பட்டு எமது பார்வை மூளையில் உள்ள பார்வைப்பகுதிக்கு (visual occipital cortex) ஒளியாக அனுப்பப்படுகிறது.

இப்போது எங்கு பார்த்தாலும் வயது வேறுபாடின்றி கண்ணாடி அணிபவர்களைக் காண முடிகிறது. இரண்டு மூன்று வயதிலேயே கண்ணாடி அணிந்த சிறார்கள் அனுபவிக்கின்ற கஷ்டங்களை வர்ணிக்க முடியாது. படிக்கும்போதும், ஓடும்போதும், ஆடும்போதும் தற்செயலாகக் கண்ணாடி கழன்று விட்டால் பிரச்சினையாகிறது. வயது செல்லச் செல்ல பார்வை குறைவதால் முதியோர்களும் கண்ணாடி அணிகின்றனர். இதனால்தான் பார்வைக் கண்ணாடிகள் இன்று மிகவும் தேவையாகின்றன. கண்ணாடிகளை eyeglasses, field-glasses, noseglasses சுருக்கமாக glass, specs என்கிறோம். தமிழில் மூக்குக்கண்ணாடி, பார்வைக்கண்ணாடி என்கிறோம்.

பார்வையைச் சரி செய்ய (vision correction) கண்ணாடிகள் உதவுகின்றன. ஒவ்வொரு குறைபாட்டின் தன்மைக்கும் ஏற்ப கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன. இவை தவிர சூரிய-பாதுகாப்பு கண்ணாடிகள் (sunglasses), பாதுகாப்பு கண்ணாடிகள் (safety glasses), முப்பரிமாண கண்ணாடிகள் (3D glasses), நிறமூட்டப்பட்ட கண்ணாடிகள் (tinted glasses) என்பனவும் உபயோகத்தில் உள.

பார்வைக் கண்ணாடிகள் வடக்கு இத்தாலியில் உள்ள Pisa நகரில் 1290 களில் ஆரம்பித்திருக்கலாம். படிப்படியாக பல்வேறு வகைகளில் கண்ணாடிகள் தயாரிக்கப்பட்டன. 1604ல் Johannes Kepler என்ற ஜேர்மனியர் முதன்முதலாக பார்வைக்குரிய பரிசோதனைகளையும் அதற்கேற்ற கண்ணாடிகளையும் அறிமுகம் செய்தார்.

படிப்படியாக கண்ணாடி அமைப்புக்கள், வடிவங்கள், சட்டங்கள் என்பனவற்றில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. பிளாஸ்டிக், உலோகம் என அவற்றின் frames மாறின. 1930 களில் கண்ணாடிகள் ஒரு மருந்துவக் கருவிகளாக (medical appliances) மாறின. படிப்படியாக நாகரிக உலகிலும் கண்ணாடிகள் புகுந்து கொண்டன. இதனை stylizes eyewear என்பர். இன்று உலகெங்கிலும் கண்ணாடிகளின் உற்பத்தி அளவுக்கு அதிகமாகியுள்ளன. போட்டிச் சந்தையில் இவை விலை போகின்றன. எத்தனையோ பெயர்களில் விளம்பரங்களில் இவை வெளிவருகின்றன.

எப்போதும் 20/20 என்ற அளவில் பார்வைத்திறன் சோதனையிடப்படுகிறது. அதாவது 20 அடி தூரத்தில் இருப்பதை எம்மால் வாசிக்க முடியுமா என்பதே அதன் பொருளாகும். கிட்டப்பார்வை (nearsightedness - myopia), தூரப்பார்வை (far-sightedness – hyperopia/hypermetropia) ஒரு தளப்பார்வை (astigmatism), வெள்ளெழுத்து (presbyopia) என்பன பொதுவான பார்வைப் பிரச்சினைகளாகும்.

Myopia இருப்பின் அருகில் உள்ள பொருட்கள் நன்றாகத் தெரியும். தூரத்தில் பார்த்தால் தெளிவு இருப்பதில்லை இதற்கு உட்குவி வில்லை (concave Lenses) உபயோகப் படுத்தப்படுகிறது.

தூரப்பார்வையில் விழித்திரைக்கு பின்னால் விம்பங்கள் விழுவதாவல் அருகில் பார்க்க முடிவதில்லை. ஆனால் தொலைவில் தெளிவாகத் தெரியும்.

Astigmatism பிரிவில் விழிவெண்படலம் (cornea) ஒழுங்கில்லாதபடியால் பொருட்களில் நிழல் விழுவது தெரியும், ஓரத்தில் இன்னோர் உருவம் தெரியும். இதனைச் சரி செய்வதற்கு விசேட உருளை வில்லைகள் பயன்படும் (special spherical cylinderical lens).

முதியோர்களுக்கு கண்களில் ஏற்படும் பிரச்சினைகள் கண்புரை (cataract), முதிர்ச்சியினால் மங்கும் பார்வை (age – related macular degeneration-ARMD), கண் அழுத்தம் (glaucoma) என்பனவாகும்.

Cataract: விழிவில்லையில் ஒரு பூ படர்தல் போன்று மெல்லிய சவ்வு தோன்றுவதால் வெளிச்சம் தடுக்கப்படுகின்றது. இதனால் பார்வை மங்கி தெளிவின்மையை தோற்றுவிக்கலாம். இதற்கு சத்திரசிகிச்சையும், கண்ணாடி பாவனையும் தேவைப்படுகிறது.

ARMD: விழித்திரையில் உள்ள மத்திய பகுதியான macula வில் ஏற்படும் தேய்மானம் காரணமாக ஏற்படுகிறது. மத்திய பார்வை இல்லாமல் போகிறது.

Glaucoma: கண்களுக்குள் திரவ அழுத்தம் அதிகமாவதால் ஏற்படுவது. கண்ணீர் வருவதிலும் இது பிரச்சினையை உண்டாக்கும். பார்வை நரம்பு பாதிப்புறும். விழித்திரை இழையங்கள் பாதிப்புறும், முற்றாக பார்வையே போய்விடலாம்.

Presbyopia: சிலருக்கு சராசரி 40 வயது வந்ததும் பார்வை குறைவடைகிறது. இதனை வெள்ளெழுத்து என்பர். சரியான தூரத்தை அளவிட முடியாமல், வெளிச்ச அலைகள் விழித்திரையில் சரியாக விழமாட்டாது. அவர்களால் வாசிக்க முடிவதில்லை.

Amblyopia: சிறுவர்களுக்கு சோர்வான கண் (lazy eye) ஏற்படுகிறது. ஒரு கண் மற்றக் கண்ணுடன் சேர்ந்து செயல்படமாட்டாது. மூளையும் கண்ணும் சேர்ந்து செயல்படமாட்டாது. ஒரு கண் ஒருவிதமாக பார்வையிட மறுகண் வேறுவிதமாக செயல்படும். நம்மவர்கள் இதனை வாக்குக்கண் என்பர். இதனை இலகுவில் அடையாளம் காணலாம். இப்படியான குறைபாடுள்ளவர்களுக்கும் கண்ணாடிகளே உதவுகின்றன.

சிலருக்கு இரட்டை பார்வை (double vision) பனிபடர்ந்த பார்வை (haziness), கண்கூச்சம் (glare), வாக்கு (squint), தலைவலி (headache) கண்வலி (eye strain), இருப்பதாகக் கருதினால் கண்ணாடிகள் உதவுகின்றன. பொதுவாகவுள்ள கதிர் தவறுகள் (refractive errors) நிச்சயமாகச் சரிசெய்யப்படலாம். லேசர், சத்திர சிகிச்சை முறைகள் இருந்தாலும் கண்ணாடிகள் பாதுகாப்பானவை, சுலபமானவை, செலவு குறைந்தவை.

ஒவ்வொரு காலத்திலும் புதிய புதிய தொழில் நுட்பம் பார்வைக் கண்ணாடிகளுக்குள் புகுத்தப்படுகின்றன. வில்லைகண்ணாடிகள் (contact lenses), laser சிகிச்சை முறைகளினால் சாதாரண பார்வைக்கண்ணாடிகளின் பாவனை குறையலாம். லேசர் முறையை சுருக்கமாக LASIK (Laser-Assisted in Situ Keratomileusis) என்பர். தவிர உள்விழி வில்லைகள் (introcular lens) முறையும் உள்ளது.

கண்ணாடி உற்பத்தியாளர்களும் புதுப்புது முறைகளை கையாளத் தொடங்கியுள்ளனர். இதில் முக்கியமானது முப்பரிமாண அமைப்பு (3D painting/3D technology) முறையாகும். பல்வேறு வியாபார நோக்கமுள்ள நிறுவனங்கள் புதிது புதிதாகக் கண்ணாடிகளை உற்பத்தி செய்து மக்களைக் கவர்கின்றன. நாகரிகத்துக்காகவும் கேளிக்கைகளுக்காகவும் சந்தையில் வருகின்ற கண்ணாடிகளை அணிந்து கண்களை பழுதாக்குபவர்களும் உள்ளனர்.

எதிர்கால பார்வைக்கண்ணாடிகளில் ஒளிப்படம் பார்க்கலாம், IPad பார்க்கலாம், தொலைதூரம் பேசலாம், பாட்டு கேட்கலாம். கார்கள் பறக்க போகின்றன. மின்சார கார்கள் தெருவில் உள்ளன. பார்வை கண்ணாடிகள் மட்டும் என்ன குறைவா! தன்னியக்கமாகவே (automatic) இவை செயற்படப்போகின்றன. கண்முன்னே ஒரு கணினி போல் செயல்பட உள்ளன.

எப்படி பார்த்தாலும் சரியான பரிசோதனை செய்யவும், தன்னியக்கமாகச் செயற்படவும், உடையாமல் இருப்பதற்கும், தொலைந்தால் கண்டுபிடிப்பதற்கும், இரவில் பார்ப்பதற்கும் இந்த நவீன கண்டுபிடிப்புகள் உதவப்போகின்றன.

Lions Club International, New Eyes for needy, Unite for sight ஆகிய சங்கங்கள் வசதியற்றவர்களின் பார்வைக் குறைபாடுகளுக்கு சிகிச்சை அளிக்கின்றன. இலவசமாகக் கண்ணாடிகளை வழங்குகின்றன. நீங்கள் பயன்படுத்தாத உங்கள் கண்ணாடிகளை வீசுவதை விட இப்படிப்பட்ட சங்கங்களுக்கு நீங்கள் வழங்க முடியும்.

உசாத்துணை:

- *How often does the eye blink per year (2019) https://www.lens.me/blog/blink*
- *Baby eye development (2019) https://thinkaboutyoureyes.com/articles/kids-vision/baby-eye-development*
- *Diameter of human eye (2019) https://hypertextbook.com/facts/2002/AniciaNdabahaliye1.shtml*
- *Vitreous humor (2019) https://visioneyeinstitute.com.au/eyematters/the-vitreous-humour/*
- *Anatomy of human eye (2019) https://www.webmd.com/eye-health/picture-of-the-eyes#1*
- *History of spectacles https://en.wikipedia.org/wiki/Glasses#History*
- *Facts about Myopia (2019) https://nei.nih.gov/health/errors/myopia*
- *Facts about hyperopia (2019) https://nei.nih.gov/health/errors/hyperopia*
- *Facts about astigmatism (2019) https://nei.nih.gov/health/errors/astigmatism*
- *Facts about age related macular degeneration (2019) https://nei.nih.gov/health/maculardegen/armd_facts*
- *Facts about presbyopia (2019) https://nei.nih.gov/health/errors/presbyopia*
- *Facts about amblyopia (2019) https://nei.nih.gov/health/amblyopia*
- *New eyes for needy (2019) https://new-eyes.org/about-us*
- *Unite for sight (2015) https://www.uniteforsight.org/about-us*
- *Lions club international (2019) https://www.lionsclubs.org/en/start-our-global-causes/vision*

pathmanathan.s@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரக்கன் சமையல்

நம் முன்னோர்களால் பயிரிடப்பட்ட சோளம், குரக்கன், கம்பு, வரவு, தினை, சாமை, குதிரை வாலி போன்ற தானியங்களை நாகரீக மாற்றத்தால் மறந்துவிட்டு, உடல் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் பீட்சா, பேர்கர், நூடில்ஸ், பாஸ்ராவை உண்ணுகிறோம். ஆனால் இப்போதோ நம்மில் பலர் 'Old is Gold' என்பது போல் நம் பாரம்பரிய உணவுகளை தற்சமயம் உண்ணத் தொடங்கியுள்ளோம்.

சிறு தானிய வகைகளில் ஒன்றான குரக்கன், உடல் ஆரோக்கியத்துக்கும், வலிமைக்கும் ஏற்றது. கால்சியம் சத்து நிறைந்த குரக்கன் உடலின் எலும்பு வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றது. Calcium, Iron, Niacin, Zinc, Phosphorous, Jhiamin, Riboflawin போன்ற மினரல்கள் குரக்கனில் நிறைந்துள்ளது.

ராகி, கேப்பை, கேழ்வரகு, நச்சினி, மண்டுவா என பல பெயர்களால் அழைக்கப்படும் குரக்கன் எளிதில் ஜீரணமாகக் கூடிய மிகச் சிறந்த உணவு.

பச்சிளங் குழந்தைக்கு 6 மாத முதலே கூழாகக் கொடுக்கக் கூடிய ஓர் அற்புத உணவு. முளை கட்டிய குரக்கனில் சுமார் 88% சதவித இரும்புச்சத்து அதிகம் உள்ளது. தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கவும், இரத்த சோகை அகலவும் முளை கட்டிய குரக்கனின் உணவு உதவுகிறது.

கோடையில் உடல் சூட்டைக் குறைத்து உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்கும் குரக்கன் உடலி வலிமைக்கு ஏற்றது. உடல் எடையைக் குறைத்து, இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள் வைத்து, உடலில் உள்ள கொலஸ்ட்ராலின் அளவைக் குறைக்கக் கூடிய தன்மை கொண்டது குரக்கன். முக்கியமாக இரத்த சோகை, மலச்சிக்கல், தைராய்டு பிரச்சினை உள்ளவர்களுக்கு குரக்கன் ஒரு அற்புத உணவு. குரக்கன் உடல் எடையைக் கட்டுப்பாட்டில் வைத்து சேதமடைந்த திசுக்களைச் சரிசெய்து, உடலின் நைட்ரஜன் நிலையைச் சமன்படுத்த உதவுகிறது.

குடல் புண்ணைக் குணப்படுத்தி குடலுக்கு வலிமை அளிக்கக் கூடிய சத்துக்கள் கொண்டது குரக்கன்.

பொதுவாக குரக்கனில் கூழ், களி, ரொட்டி செய்து சாப்பிடுவார்கள். பக்கோடா, முறுக்கு, சீடை, தோசை, இட்லி, பிட்டு, சேமியா, பணியாரம், மிக்சர் போன்ற பல வகை ரெசிபீக்களை குரக்கனில் செய்யலாம்.

உடலுக்கு வலிமையும், வளர்ச்சியும் தரக் கூடிய குரக்கனில் சில ஆரோக்கிய சமையல்களைக் காண்போம்.

இலகுவான குரக்கன் பானம்

தேவையான பொருட்கள்:

குரக்கன் மாவு	: 50 கிராம்
தண்ணீர்	: 1 ½ கோப்பை
பொடித்த வெல்லம்	: 1 மே.கரண்டி
குங்குமப்பூ	: ஒரு சிட்டிகை
பால்	: 2 கோப்பை
ஏலக்காய்த்தூள்	: ¼ தேக்கரண்டி
சுக்குத்தூள்	: ¼ தேக்கரண்டி

செய்முறை:

ஒரு பாத்திரத்தில் 1 கோப்பை தண்ணீரையும் 2 கோப்பை பாலையும் ஊற்றி நன்கு கலந்து, சுமார் 2 கோப்பை அளவு வரும் வரை காய்ச்சவும். குரக்கன் மாவை மீதமுள்ள ½ கோப்பைத் தண்ணீரில் கலக்கிக் கொள்ளவும். மாவை வடிகட்டி அதன் கப்பியைத் தனியே எடுக்கவும். வடித்த குரக்கன் மாவைப் பாத்திரத்தில் ஊற்றி அடிப்பிடிக்காமல் கிளறவும். அதனுடன் காய்ச்சிய பால், பொடித்த வெல்

லம், ஏலக்காய்த்தூள், சுக்குத்தூள் சேர்த்து மிதமானச் சூட்டில் லேசாகக் கொதிக்கச் செய்யவும். கூடவே சுமார் 1 மேசைக்கரண்டி தண்ணீரில் கரைத்த குங்குமப்பூவைச் சேர்த்து கலக்கவும். சுவையான ஈஸி குரக்கன் பானத்தைச் சூடாகவோ குளிராகவோ குடிக்கவும்.

குறிப்பு:

- ஒரே அளவு கோப்பையைப் பயன்படுத்தவும். கோப்பை என்பது கப்பாகும்.
- தேவையெனில் பாதாம், முந்திரியை அரைத்து குரக்கன் மாவில் சேர்த்து குரக்கன் பானத்தைச் செய்யலாம்.
- நம் உடலிலுள்ள விட்டமின்களை அழித்து எலும்பு தேய்மானத்தை ஏற்படுத்தும் சீனியை கூடுமானவரை சமையலில் பயன்படுத்த வேண்டாம்.
- முழுக் குரக்கனை வாங்கி, கழுவிச் சுத்தம் செய்து, நீங்கள் அரைத்த குரக்கனைச் சமையலுக்கும் பயன்படுத்தவும். ஒரு சில கடைகளில் பாக்கெட்டில் விற்கும் 'குரக்கன் மாவு' கலப்படமானது. உடலின் ஆரோக்கியத்துக்கு ஏற்றதல்ல.
- பானம் செய்யும் போது, கிளறும் குரக்கன் கெட்டியானால் சிறிதளவு பாலைச் சேர்க்கவும்.

இனிப்பு குரக்கன் உருண்டை

தேவையான பொருட்கள் :

குரக்கன் மாவு	: 1 கோப்பை
பொட்டுக் கடலை	: ½ கோப்பை
வெல்லம்	: ½ கோப்பை
எள்	: 2 மேசைக்கரண்டி
வேர்க்கடலை	: 2 மேசைக்கரண்டி
ஏலக்காய்த்தூள்	: ½ டீஸ்பூன்
தேன்	: 1 மேசைக்கரண்டி
பேரிச்சம்பழம்	: 5 (கொட்டை நீக்கியது)
உலர்ந்த திராட்சை	: 5 - 7

செய்முறை:

தாச்சியில் குரக்கன் மாவை மிதமானச் சூட்டில் குரக்கனின் வாசம் வரும் வரை தீயாமல் வறுக்கவும். வறுத்த குரக்கன் மாவைத் தனியே எடுத்து வைக்கவும். அதே தாச்சியில் எள், வேர்க்கடலையை ஒன்றன் பின் ஒன்றாகச் சேர்த்து வறுக்கவும். தேவையெனில் வேர்க்கடலையின் தோலை நீக்கிக் கொள்ளவும். மிக்ஸியில் வறுத்த குரக்கன் மாவு, பொட்டுக் கடலை, எள், வேர்க்கடலை, வெல்லம், ஏலக்காய்த் தூளைச் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். மிகவும் பொடியாக நறுக்கிய பேரிச்சம்பழம், உலர்ந்த திராட்சையை அரைத்த கலவையில் தேனுடன் சேர்த்து சிறு சிறு உருண்டைகளாகப் பிடிக்கவும். சுவையான இனிப்பு குரக்கன் உருண்டை தயார்.

குறிப்பு:

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு ஏற்ற ஒரு அற்புதமான ஆரோக்கிய ஸ்நேக்ஸ் இனிப்பு குரக்கன் உருண்டை.

குரக்கனை ஊற வைத்து மறுநாள் முளை கட்டி காய வைத்து அரைத்த குரக்கன் மாவையும் கொண்டு குரக்கன் உருண்டை செய்யலாம்.

ஒரு தேக்கரண்டி தேனை எடுத்து அதனுடன் சிறிது தண்ணீரும் 3 துளி வினிகரும் சேர்த்து கலக்கும் போது நுரை வந்தால் தேன் கலப்படம் செய்யப்பட்டுள்ளது என்று அர்த்தம்.

- பிரியா பாஸ்கர் -

குரக்கன் தோசை

தேவையான பொருட்கள்:

குரக்கன் மாவு	: 2 கப்
எண்ணெய்	: தேவையான அளவு
பச்சை மிளகாய்	: 2
மல்லி இலை	: சிறிதளவு
மிளகுத்தூள்	: ½ மேசைக்கரண்டி
உப்பு	: தேவையான அளவு
துருவிய பீட்ரூட்	: ¼ கோப்பை
முட்டைக்கோஸ்	: ¼ கோப்பை
துருவிய கரட்	: ¼ கோப்பை
நறுக்கிய பீன்ஸ்	: 2 மேசைக்கரண்டி
சின்ன வெங்காயம்	: 50 கிராம் (நறுக்கியது)
சீரகம்	: ½ மேசைக்கரண்டி

செய்முறை:

போதுமான தண்ணீரில் குரக்கன் மாவைச் சேர்த்து கரைத்துக் கொள்ளவும். அதனுடன் மிளகுத்தூள், சீரகம், பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய், கொத்தமல்லி

இலை, பட்டாணி, பீன்ஸ், சின்ன வெங்காயத்தைச் சேர்த்து கலக்கவும். சுவைக்குத் தேவையான உப்பைச் சேர்த்து கலக்கவும். கரைத்து வைத்த குரக்கன் மாவு தோசை சுடும் பதத்திற்கு இருக்க வேண்டும். தோசைக்கல்லுச் சூடாக்கியபின் தேவைக்கேற்ப தோசையை இருபுறமும் திருப்பிப் போட்டுச் சுட்டு எடுக்கவும். சுவையான குரக்கன் தோசை தயார். தக்காளி சட்னி - தேங்காய் சட்னியுடன் சுவைக்கவும்.

குறிப்பு:

- குரக்கன் மாவைக் கெட்டியாகப் பிசைந்து காய்கறிகளைச் சேர்த்து ரொட்டியாகச் சுட்டும் சுவைக்கலாம்.
- குரக்கன் மாவில் வெல்லம், தேங்காய்த் துருவல், ஏலக்காய்த்தூளைச் சேர்த்து இனிப்பு குரக்கன் தோசையைச் செய்து ருசிக்கலாம்.
- கரைத்த குரக்கன் மாவைப் புளிக்க விடக்கூடாது. மாவைக் கரைத்தவுடன் தோசையைச் சுடவும். சுவை கூடுதலாக இருக்கும்.
- ஒரு கண்ணாடி டம்ளரில் நீரினை எடுத்து சீரகத்தூளைப் போடும் போது உமி கலந்திருந்தால் நீரின் மேல் மிதக்கும். கலப்படமில்லா சீரகத்தூள் நீரின் அடியில் படிந்து விடும்.
- கூடுமான வரை சமையலுக்கு ரீபெண்ட் ஆயிலைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

p.priya.baskar@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BUYING OR SELLING

#1 RE/MAX

- Residential
- Commercial
- Land & Investment Properties

"BUY WITH CONFIDENCE, SELL WITH SUCCESS"

NORTHGLEN BLVD / MIDDLE ROAD $2,400

FOR LEASE BEDROOMS:4 WASHROOMS:4

7325 MARKHAM ROAD $2,350

FOR LEASE BEDROOMS:2+1 WASHROOMS:2

161 QUEEN MARY DRIVE $3000

BRAMPTON

FOR LEASE BEDROOMS:4 WASHROOMS:4
Detached House

SCARBOROUGH

COMING SOON BEDROOMS:3+1 WASHROOMS:4
Detached House

OSHAWA

COMING SOON BEDROOMS:3 WASHROOMS:2

HARWOOD/CLOVERIDGE $539,000

FOR SALE BEDROOMS:3 WASHROOMS:3

KINGSTON RD/SCARBOROUGH GOLF $599,000

FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3

ALTONA / STROUDS $639,900

FOR SALE BEDROOMS:3 WASHROOMS:3

MORNINGSIDE/OLD FINCH $769,900

FOR SALE BEDROOMS:4+1 WASHROOMS:4

MCCOWAN / LAWRENCE $719,900

FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:32

HWY 2/CHAPMAN $699,900

FOR SALE BEDROOMS:3 WASHROOMS:3

EMPEROR ST/BAYLY ST $650,000

FOR SALE BEDROOMS:4 WASHROOMS:2

GRAND OPENING VIP CONDO SALE



PHASE 3 (SOUTH TOWER)

1 + Dens Starting in the $500,000s
Free Assignment & Free EV Parking Upgrade

- TRANSIT: Steps away from Bessarion TTC Subway Station and Minutes from HWY 401
- AREA AMENITIES: Bayview Village, Fairview Mall, HWY 404/401, TTC Subway

STARTING FROM HIGH High $500,s

The WELL by TRIDEL
Occupancy Date 2022

Condos highlights:
- The Air Canada Centre
- The Rogers Centre
- Ripley's Aquarium
- Bell Lightbox
- SPIN Toronto
- The Princess of Whales Theatre

NITHY
SATHYAKUMAR
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com

SATHY NITHY REALTOR TEAM

SATHY
SIVASUBRAMANIAM
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com

Web: realtorsathy.com

RE/MAX
Remax Realtron Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 905 470 9800

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Forum for Education & Economic Development
கல்வி, பொருளாதார அபிவிருத்தி அமைப்பு

: www.feedtamils.com : info@feedtamils.org : FEED Tamils

இலண்டன் மாநகரில் FEED அறிமுகவிழா

- தாயகமெங்கும், கல்வித்துறையின் வீழ்ச்சியை கட்டுக்குள் கொண்டுவரவும், வறிய குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும்கூடிய செயற்திட்டங்கள்.
- முன்பள்ளிக் கல்வியினை தொலைதூரக் கிராமங்கள்வரை விரிவாக்கி வளப்படுத்தும் நோக்குடனான திட்டங்கள்.
- வறிய மக்கள் அதிகம் வாழும் கிராமங்களில் முன்பள்ளிகளை உருவாக்கி, பராமரித்து, ஆசிரியைகளிற்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கி, கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கி, சத்துணவு வழங்கும் செயற்பாடுகள்.
- மாணவ சமூகம் திசைமாறிப் பயணிப்பதை தடுக்கவும், கல்வியறிவு மட்டத்தினை வளர்க்கவும், கிராமப்புறங்களில் நடாத்தப்படும் மாலைநேர வகுப்புகள்.
- நலிந்த பொருளாதார நிலை காரணமாக, பல்கலைகழகக் கல்வியினை தொடரக் கஷ்டப்படும் மாணவர்களுக்கு மாதாந்த உதவி வழங்கும் செயற்பாடுகள்.
- பண்பாட்டையும், ஒழுக்கநெறிகளையும் பேணும் ஆரோக்கியமான சமூகமாக மாறும் நோக்கில், அறநெறிவகுப்புகள் உருவாக்கப்பட்டு, உதவிகள் வழங்கப்பட்டு, ஆசிரியைகளுக்கு ஊக்குவிப்புகள் வழங்கும் திட்டங்கள்.
- முன்னாள் போராளிகள், மறைந்த போராளிகள், மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் மேம்பாட்டிற்கான பொருளாதார உதவிகள்.
- சமூகப் பொருளாதார மேம்பாட்டில் பங்களிப்பினை வழங்கக்கூடிய வகையிலான பண்ணைகளின் உருவாக்கம்.
- கிராம மட்ட சமூக அமைப்புகளால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை ஆய்வுக்குட்படுத்தி, தேவையான நிதி உதவிகளைப் பெற்று, அவற்றை நிறைவேற்றிக் கொடுக்கும் நடைமுறைகள்.
- செயற்திட்டங்கள் யாவும் வினைத்திறன்மிக்கதாக, நீண்டகாலப் பயன்கொண்டவையாக முன்னெடுக்கப்பட ஆதாரமாக அமைந்த தாயக உறவுகளின் அர்ப்பணிப்பு, பங்களிப்பு, ஆலோசனைகள்.

on Saturday 22th June 2019,07.00 pm–11.30pm

தனிநாயகம் அடிகளார் அரங்கு

at Shiraz Mirza Manor Park Hall Malden Road New Malden KT3 6AU

“கல்லாமை இல்லாமை இல்லாதொழிப்போம் கல்வியும் தொழிலும் எல்லோர்க்குமளிப்போம்”

– விழாக்குழு ஐக்கிய இராச்சியம் –

TOMORROW MIGHT BE TOO LATE. START NOW

உங்கள் வருங்கால உறவுகளை மின்னியவராக்க

BUILD AN INVESTMENT & PROTECTION FOR YOUR LOVED ONES

- முதல் மாதம் $0 கட்டணம். மருத்துவ பரிசோதனையற்ற ஆயுள் காப்புறுதி upto $500.00 (Non- Medical Insurance) tax free money.
- Critical Insurance - 25 கொடிய நோய்க்குரிய காப்புறுதி. நீங்கள் உயிருடன் இருக்கும் பொழுதே. நீங்கள் விண்ணப்பித்த தொகை மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.
- 20 வருடங்கள் கட்டியனால் போதும். உங்கள் வாழ்நாள் முழுவதும் காப்புறுதி இருக்கும். 20 Year Paid off Life Insurance Policy.
- கட்டணம் மாறாத 40 வருடங்களுக்கான ஆயுள் காப்புறுதி. எந்த நேரமும் நிலையான காப்புறுதிக்கு மாற்றலாம் Without Medical Examination (40 years term Policy).
- RESP உங்கள் பிள்ளைகளுக்கான கல்வி சேமிப்புத்திட்டம் $ 25 முதலீட்டுடனேயே ஆரம்பிக்கலாம். இதற்கு கனடிய அரசு மானியமாக $ 9200 சேமித்து கொள்ளலாம்.
- உங்கள் முதலீடுகள் 100% உத்தரவாதம் (for The Death) RRSP, RIFF, LIF, LIRA(Average Return 7 to 10%).
- Super Visa - உங்கள் Visa நிராகரிக்கப்பட்டால் 100% உங்கள் கட்டணம் திருப்பி பெறலாம்.

SUPER VISA | RRSP | RESP | CRITICAL ILLNESS | LIFE | NON - MEDICAL | DISABILITY | TRAVEL | 100 YEAR TERM | 40 YEAR TERM

$500,000 TAX FREE MONEY

AGE	FEMALE			MALE		
	Term 10	Term 20	Term 40	Term 10	Term 20	Term 40
25	$18.00	$23.85	$38.70	$27.45	$33.30	$52.65
30	$18.90	$24.30	$47.25	$27.45	$33.75	$73.80
35	$22.95	$27.00	$80.10	$27.45	$35.55	$108.00
40	$27.90	$37.80	$119.70	$35.10	$53.10	$168.75

SIVA MAILVAGANAM
Insurance & Investment Broker
Dir : 416.230.2991
Fax : 416.298.4664 |
email : rajahsai9@gmail.com.
80 Nashdene Rd Unit B 25-26ON M1V 5E4

TERM PLAN - CONVERTIBLE/RENEWABLE WITHOUT ANY MEDICAL EXAMINATIONS UP TO AGE 70.

RBC Royal Bank | IA Pacific | BMO | Canada Life | Manulife Financial | Assumption Life | Royal Brokers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COLLINGWOOD PLACE

By
Bluesky Properties (Pvt.) Ltd. (Sri Lanka)
Div. of Engenius Group of Companies (Canada)

- 10 Stories
- 28 Apartments
- December 2018 Completion

A stylish collection of 28 Modern two & three bedroom Hotel Style Apartments in COLOMBO 6

Starting at 19.9 Million SLK (Apx. $175,000)
Only 14 left

GUARANTEED RENTAL INCOME

For More Information Call
Sameem Mohamed 416 559 1880
Riyaz Rauf 647 283 1966

Be a part of the fastest growing Century 21 Brokerage...

Century 21 Innovative Realty Inc. Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

Serve more... Earn more... and Keep more...

Many reasons to join Century 21 Innovative Realty?

- Experienced and dedicated Broker of Record
- Six Friendly Managers with many years of experience
- Grand Centurion Office, 4 years in a row
- Top 10 Office in Canada / Chairman's Circle Office
- Three Locations (Scarborough, Ajax and Mississauga)
- Over 250+ Agents and growing...
- Supportive Staff & Multi cultural Environment
- One on One and group training (3 times weekly)
- VIP access to pre-construction condos & new homes
- Land Development & custom home construction advice
- Investment Opportunities to agents
- and More and More...

*within Century21 system

#7 Office in Canada*
#9 Company in Canada*
#15 Office in the World*
3 Locations to Serve you

2250 Markham Road, Unit 3,
Toronto ON M1B 2W4
Tel: 416 298 8383

350 Burnhamthorpe Dr. W. Unit 127
Mississauga, ON L5B 3J1
Tel: 905 270 8100

1995 Salem Road, Unit 11 & 12
Ajax, ON L1T 0J9
Tel: 905 239 8383

REAL ESTATE CLASSES
STARTING FROM FEB 1ST WEEK
CALL 416 298 8383 TO REGISTER

Hiring New & Experienced Agents

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை உயர்ந்த விலைக்கு விற்பது எப்படி?

வீடும் விடியலும் - 156

- வேலா சுப்ரமணியம் -

சிறு சிறு திருத்தங்கள்:

நீங்கள் பலகாலமாகச் செய்ய வேண்டும் என்று நினைத்து நினைத்து மறந்து போன பல சிறுவேலைகள் நிலுவையாக இருக்கும். அவற்றைப் பட்டியலிட்டு இம்முறை யாவது செய்து முடியுங்கள். உதாரணமாக குளியலறையிலும் சமையலறையிலும் குழாய்களிலிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருக்கும் கதவு குமிழ்கள் கைபிடிகள் ஆடிய வண்ணம் இருக்கும். சுட்ட மின்குமிழை மாற்ற மறந்திருப்பீர்கள். தளபாடம் சமப்படுத்தப்படாததால் ஆடிக் கொண்டிருக்கும், ஒரு சிறிய இடத்தில் நிறப்பூச்சுச் செய்ய வேண்டியிருக்கும். இவ்வாறு நீங்களே செய்யக்கூடிய சில வேலைகளைச் செய்து முடித்தல் நல்ல பலனைத் தரும்.

திருத்த வேலைகள், தரமுயர்த்தல்:

பழைய வீடுகளைச் சந்தைப்படுத்தும் போது சில திருத்த வேலைகளை செய்தல் சாலச் சிறந்தது. ஒரு வீட்டின் விற்பனையைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியில் ஒன்று சமையலறை. இரண்டாவது காரணி சிலருக்கு குளியலறை, வேறு சிலருக்கு Family Room. எனவே இத்தகைய இடங்களில் கவனம் செலுத்துவது நன்மை தரும். சமையலறையில் மேற்தட்டு (counter top) Faucet, அலுமாரிகளுக்குரிய கதவுகள், கை பிடிகள், மின்விளக்குகள் காலாவதி ஆகியிருக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே அவற்றுக்கு சிறுதொகைப் பணத்தைச் செலவு செய்வதன் மூலம் அதிக பணத்தை ஈட்ட வாய்ப்பு உள்ளது.

திருத்த வேலையென இறங்கி அதிக அளவிலான பணத்தைக்கொட்டினால் செல வழித்த பணம் முழுவதையும் விற்பனையின் மூலம் மீட்டு எடுக்கமுடியுமா? என்ற கேள்வியும் உள்ளது. எனவே எது பயன்தர வல்லது, எதைத் தவிர்க்கலாம் என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். இந்த இடத்தில் ஒரு அனுபவமுள்ளவரை நாடுதல் மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

ஒவ்வொரு அறைக்கும் உரிய பயன்பாட்டை உறுதி செய்தல்:

பொதுவாக வீடுகள் கட்டப்படும்போது ஒவ்வொரு அறையும் ஒவ்வொரு பயன்பாட்டிற்கு ஏற்றவாறே கட்டப்பட்டிருக்கும். ஆனால் எங்கள் வசதிக்கேற்ப அல்லது எங்களிடம் உள்ள தளபாடத்திற்கேற்ப சாப்பாட்டறையை Family Room ஆக மாற்றியிருப்போம் அல்லது அலுவலகத்திற்காக அமைக்கப்பட்ட அறையைப் படுக்கை அறையாக மாற்றி இருப்போம். ஆனால் ஒரு வீட்டை விற்கும் போது எந்த அறை எந்தத் தேவைக்குப் பொருத்தமானதோ அதற்கேற்பவே காட்சிப்படுத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் குழப்பமடையும் கொள்வனவாளர்களினால் எதிர்மறையான விளைவுகளே ஏற்படும்.

குளியலறைகள்:

வீடுவாங்குபவர்கள் குளியலறையைப் பார்க்கின்றபோது அவை இதமான சௌகரியத்தைக் கொடுக்கக் கூடிய விதத்தில் ஆடம்பரமாக இருப்பது போல் காட்சிப்படுத்தப்படுவது நல்ல பலனைத் தரக்கூடியது. ஏற்கனவே குறிப்பிட்டது போல் சிலவேளைகளில் குளியலறைகூட விற்பனையை தீர்மானிக்கும் காரணியாகக்கூட அமையலாம். எனவே சிறு சிறு தரமுயர்த்தல் செய்வது பொருத்தமான அலங்காரப் பொருட்களை வைப்பது 'நறுமணம்' ஊட்ட வழிசெய்வது என்பன சிபாரிசு செய்யக்கூடியவை. குறிப்பாக உள்ளே செல்லும் போது ஒரு 'SPA' க் குள் நுழைவது போன்ற உணர்வு ஏற்படும் விதத்தில் சில யுக்திகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

வரவேற்பறை:

வரவேற்பறையை குடும்ப அங்கத்தவர்களும் விருந்தாளியாக வருபவர்களும் கூடி இருந்து குலாவக்கூடிய மைய இடமாக அமையும் விதத்தில் ஏற்ற தளபாடங்களையும் அலங்காரப் பொருட்களையும் போட்டுத் தயார் செய்தல் வேண்டும். விருந்தாளிகள் போல உங்கள் வீட்டுக்குள் பிரவேசிக்கும் கொள்வனவாளர்களுக்கு இது ஒரு நல்ல மனநிலையை ஏற்படுத்த வழிவகுக்கும்.

இயற்கை செடிகள், மரங்கள்:

மிகச்சிறிய அளவில் இடத்திற்குப்பொருத்தமான விதத்தில் சாடிகளில் வைக்கக்கூடிய சில தாவரங்களைக் காட்சிப்படுத்தல் நல்லது. வீட்டிற்குள் இயற்கை வளங்களை உள்வாங்க முற்படுகிறீர்கள் என்பதுடன் அத்தகைய அழகான இயற்கைச் செடிகளிலும், பூ மரங்களிலும் தமது மனதைப் பறிகொடுக்காத மனிதர்கள் அரிதாகவே காணப்படுகிறார்கள். அந்த வகையில் உங்கள் வீட்டைப் பார்வையிட வரும் கொள்வனவாளர்களும் விதிவிலக்கல்ல.

உணர்வூட்டும் வாசனை:

வீட்டிற்குள் நுழையும்போது வாங்கோ வாங்கோ என்று கூறாமல் கூறுவது போல மெல்லிய இதமான நறுமணம் உண்டாகும் விதத்தில் வரவேற்பறை இருத்தல் வேண்டும். பலவித பொருட்கள் சந்தையில் இதற்காக உண்டு. குறிப்பாக வீட்டின் நடுப்பகுதியில் 'Baked Cookies'ஐ வைத்தால் அது எல்லோரையும் சமையலறையுடன் தானாகவே இணைத்து விடும். சில வீட்டுரிமையாளர்கள் வீடு விற்கும் காலத்தில் இதன் பொருட்டு தினமும் Cookies Bake பண்ணுவதும் உண்டு.

கழிப்பறை இருக்கை:

வீட்டைக் காட்சிப்படுத்தும் போதும் படங்கள் எடுக்கின்றபோதும் Toilet Seat மூடப்பட்டிருத்தல் வேண்டும் இது ஒரு சிறிய யுத்தி என்றாலும் அழகப்பரிய அனுகூலம் இருப்பதாகக் கணிப்பிடப்படுகிறது.

முக்கிய இடங்களை முதன்மைப்படுத்தல் (Highlight Focal Points):

ஒவ்வொரு வீட்டின் அமைப்பிலும் சில சிறப்பம்சங்கள் இருக்கும். அவற்றை முதன்மைப்படுத்தும் வகையிலும் துல்லியமாக வருவோரின் கவனத்தை உள்வாங்கும் விதத்திலும் சில ஒழுங்குகளையோ அழகுபடுத்தலையோ செய்வது மிக அவசியம். வீடுகளில் இயல்கான சிறப்பம்சங்கள் இல்லாவிட்டாலும் சில இடங்களைச் சிறப்பான முறையில் ஒருங்கு செய்வதன் மூலம் பார்ப்போர் கவனம் திசை திருப்பப்படுதல், சில வீடுகளுக்கும் சந்தைப் படுத்தலுக்கும் மிக அவசியமாகின்றது.

வீட்டை அலங்காரப்படுத்தல் (Staging):

ஒரு வீட்டைச் சந்தைப்படுத்தலிலும், உச்ச அளவிலான விலையைப் பெற வைத்தலிலும், குறுகிய காலத்தில் விற்க வைத்தலி லும் வீட்டின் அலங்காரம் முதலிடம் பெறுகின்றது, திறமையும் விவேகமும் உள்ள வீட்டுரிமையாளர்கள் தாமாகவே வீட்டை அலங்கரிக்கலாம். ஆனால் அதே துறையில் அனுபம் உள்ளவர்கள் அதனைச் செய்வதில் அதிக பயன் பெற வாய்ப்புண்டு. வீட்டலங்காரத்திற்காக ஒரு நிறுவனத்தையோ, தனியாரையோ அமர்த்துகின்றபோது அவர்கள் வீட்டிற்கு ஏற்ற விதத்தில் தளபாடங்களைக் கொண்டு வந்து, அத்துடன் வீட்டிற்குப் பொருத்தமான அலாங்காரப் பொருட்களையும் போட்டு தொழில்ரீதியாக அலங்கரிக்கின்றபோது அதில் பாரிய வேறுபாடிருக்கின்றது. இதற்கென சில ஆயிரங்களைச் செலவிட

தொடர்தல் 27ம் பக்கம்

வீட்டுப் பரிசோதகர் ஒரு வீடு விற்பனை முகவரானால்

வீடு வாங்க:

வீடு விற்க:

வாங்கப்போகின்றீர்களா?
- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய்க் கிடைக்கும்
- வாங்கிய பின் ஏமாற்றங்கள் இருக்காது
- வளம்சேர்க்கும் வாழ்நாள் முதலீட்டின் முதற்படி

விற்கப்போகின்றீர்களா?
- விற்கமுன் வீட்டின் பிழைகள் களைய இலவச ஆலோசனை
- விற்றபின் வரும் தடங்கல்களை விற்கமுன் தவிர்க்கலாம்
- விற்றபின் வரும் பெறுமதி இழப்புக்களைத் தடுக்கலாம்
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதியை ஈட்டலாம்

நம்பிக்கை, நாணயம்
10 வருட வீட்டுப் பரிசோதனை அனுபவத்தடன் கூடிய ஒரு வீடு விற்பனை முகவர்

Highest Standard Agents... Highest Results!

Vela Subramaniam B.A. (Hons)
Experienced Home Inspector
Sales Representative
Direct: 416 786-0760
vela4homes@gmail.com
www.dreamgtahomes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416 264-0101 Fax: 905 201-9229
205 - 7 Eastvale Dr, Markham, ON. L3S 4N8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JRS College

"Committed to providing quality training"

Food Handling Training
(Starting on February 10, 2019)

Personal Support Worker- Evening Class
(Starting on February 11, 2019)

Personal Support Worker Bridging
(Coming soon)

Early Childcare Assistant
(Starting on March 18, 2019)

Accounting and Payroll Administration
(Starting on February 25, 2019)

Health Office Administrator
(Starting on February 25, 2019)

STUDENT TESTIMONIALS

"I have chosen Early Childcare Assistant diploma program which is 36 weeks in length at JRS College of Business and Health Care Inc. To do this diploma program at JRS College, I received over $34, 000 from government."

Mathu

"I have chosen 40 weeks of Health Office Administrator diploma program at JRS College of Business and Health Care Inc. Due to long duration program I received $44, 000 through Second Career to cover my studies, day care, living allowance and transportation."

Thiny

"With the help of JRS College of Business and Health Care Inc., I am able to take Accounting and Payroll Administration diploma program with the government funding of $36, 000. The main reason for me to get high amount is since the program duration is 45 weeks."

Suba

15 Programs

Business

-Accounting & Payroll Admin-PT	(50 Weeks)
-Accounting & Payroll Admin 2017	(44 Weeks)
-Computerized Accounting	(30 Weeks)
-Office Assistant	(16 Weeks)

Health Care

-Community Service Worker	(52 Weeks)
-Early Childcare Assistant	(36 Weeks)
-Health Office Administrator 2017	(39 Weeks)
-NACC PSW 2015-PT (Certificate)	(35 Weeks)
-NACC PSW 2015 (Certificate)	(35 Weeks)
-Pharmacy Assistant	(46 Weeks)

Technology

-3D Animation for Video Games	(72 Weeks)
-Graphic Design	(34 Weeks)
-Web Development	(43 Weeks)
-Computer Network & Security	(40 Weeks)
-Engineering Design and Drafting Technologist	(28 Weeks)

Contact info

330-4168 Finch Ave East (Midland & Finch)
Scarborough, ON M1S 5H6
416-292-2455

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS

Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை உயர்ந்த...

25ம் பக்கத் தொடர்ச்சி...

நேர்ந்தாலும் கூட, இதன் மூலம் பல ஆயிரங்களை மேலதிகமாகப் பெறலாம் என்பது எனது எண்ணம். குறிப்பாக கடந்த சில ஆண்டுகளில் நான் சந்தைப்படுத்திய வீடுகளில் 95%க்கு மேற்பட்டவை குறிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்கப்பட்டமைக்கும் 0-2 வாரத்திற்குள் விற்கப்பட்டமைக்கும் வீட்டின் அலங்காரமும் ஒரு காரணம் என்பது நான் அனுபவத்தில் கண்ட உண்மை. அழகுபடுத்தல் என்பது ஒருகலை அதனை உரியவர்கள் செய்தால்தான் மேலும் அழகாகவும் இருக்கும். அதிகபலனும் கிடைக்கும்.

படங்கள், Virtual Tour:

காலத்திற்கேற்றபடி செயற்படுதல் என்பது இங்கும் மிகத் தேவையான ஒன்று. முன்பிருந்த காலங்களுடன் ஒப்பிடும் போது தற்போதைய சந்தைப்படுத்தலில் கணினியின் பங்கு மிக முக்கியமாக உள்ளது. வீடு வங்குபவர்கள் சகல விபரங்களையும் கணினியின் ஊடாகப் பார்த்து, தங்கள் தெரிவுகளைச் செய்த பின்னரே நிச்சயப்படுத்திக்கொள்ள நேரில் வீட்டைப் பார்க்கச் செல்கிறார்கள். வார்த்தைகளைவிட படங்கள் ஆயிரம் கதைகள் சொல்ல வல்லவை. அந்த வகையில் ஒரு வீட்டைச் சந்தைப்படுத்துகின்ற போது எடுக்கப்படும் நேர்த்தியான படங்களும், மாய வலமும் (Virtual tour) மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. நேரே பார்ப்பதைவிட முறையாக எடுக்கப்பட்ட Virtual tourகள் மிக அழகாகவும், அதே வேளை ஒரு வீட்டை நேரில் பார்ப்பதற்கு உந்து சக்தியைக் கொடுப்பனவாகவும் இருப்பதை நான் எனது அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

சந்தைப்படுத்தல்:

பொதுவாக ஒரு பொருளின் விலை என்பது அது காட்சிப்படுத்தப்படும் விதத்திலும் சந்தைப்படுத்தப்படும் விதத்திலுமே தங்கியுள்ளது. வீடு விற்பனையில் தனியாக MLS Listing ஐ மட்டும் நம்பி இருப்பது பழைய முறைமை. அது எல்லா வேளையிலும் உயரிய பலனைத் தராது. தற்போது சந்தைப்படுத்தலில் ஊடகங்களும், சமூக வலைத்தளங்களும் முக்கிய இடம் வகிக்கின்றன.

நிறைவாகப் பார்க்கின்றபோது சுமார் 21 முக்கிய பொது அம்சங்களைக் குறிப்பிட்டிருக்கிறேன். மேலும் மேலும் இதனை விரித்துக் கூறிக்கொண்டே போகலாம். இவற்றுள் பலதும் பலருக்கும் பொருந்தலாம். உங்களுக்குப் பொருத்தமற்றதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

குறிப்பாகக் கூறுவதனால் வீடுகள் விற்கும் போது வீட்டுரிமையாளர்களின் வெற்றி என்பது சரியானதை சரியான நேரத்தில் செய்வது என்பதிலேயே தங்கி உள்ளது. அதிலும் குறிப்பாகக் கூறுவதானால் நீங்கள் சரியான விற்பனை முகவரைத் தெரிவு செய்வதன் மூலம் உங்களுக்குரிய வெற்றியை நிச்சயப்படுத்திக் கொள்ளும் அதே நேரத்தில் உங்கள் பொறுப்புகளில் பெரும்பாலானவை அவரிடம் கையளிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட 21 அம்சங்களில் பெரும்பாலானவற்றை ஒரு சரியான விற்பனை முகவர் தானே பார்த்துக்கொள்வார். நண்பர், உறவினர் என்ற நிலைகடந்து விவேகமாக நடந்துகொள்ளும் வீட்டுரிமையாளர்கள் இத்தெரிவில் பாரிய வெற்றி பெறுவார்கள். குறைந்த கொமிசனுக்கு - தரகுப் பணத்துக்குப் போவது சரியானதா என்று கேள்வி ஏழலாம்? ஒரு வீடு விற்பனை முகவரினால் உங்கள் வீடு சரியான வழிமுறைகளைக் கையாண்டு உச்சவிலைக்கு விற்கப்படுகின்றபோது உண்மையில் விற்பனைக் கொமிசன் முழுவதும் வீடு வாங்குபவரிடம் மறைமுகமாகத் தள்ளப்படுவது மட்டுமன்றி மேலதிக இலாபமும் உங்களுக்குக் கிடைக்கின்றது. நீங்கள் குறைந்த கெமிசன் மூலம் சேமிப்பதைவிட, உங்கள் இழப்பு அதிகமானது என்பது ஆழமாகச் சிந்தித்தால் புரியும்.

velasubramaniam@thaiveedu.com

வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

Excellent plaza for Sale

தரம் மிக்க நிறுவனங்கள் சிறந்த முதலீடு!

முதன்மை வாய்ந்த இடம்,
பெருமளவு வாடிக்கையாளர்களை
உள்ளடக்கிய வணிகச் சுற்றாடல், அனைத்துப்
பொருட்களையும் கொண்ட உயர்வான
பராமரிப்பில் பேணப்பட்ட நிலையம்,
போதிய வாகனத் தரிப்பிட வசதி,
றொறன்ரோவில் இருந்து
30 நிமிடத் தூரம் மட்டுமே.

Cell: 416 880 8585

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED
#3-1286 Kennedy Rd, Scarborough, ON M1P 2L5

416 270 1111

BASKARAN SINNADURAI
BROKER
Cell:416.880.8585
baskaran.toronto@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் சக்தி விரயக் கட்டுப்பாடு

நம் வீட்டில் நாம் தெரிந்தும் தெரியாமலும் ஏற்படுத்தும் சக்தி விரயத்தை, கட்டுப்படுத்துவதற்கான பல வழிமுறைகளைப் பற்றி ஆராய்கின்றது இவ்வாக்கம்.

- பிரபா சின்னா -

நாம் எமது வீட்டில் நாள் தோறும் பல கட்டுமானப் பொருட்களையும் அதன் செயற்பாடுகளையும் காண்கின்றோம்.

நம் உடம்பிலுள்ள கண், காது, மூக்கு, கை, கால் என்பன எமது கண்ணுக்கு எப்படித் தென்படுகின்றவோ, அவ்வாறே வீட்டிலுள்ள சமையல் அடுப்பு, குளிரூட்டி, வெப்பமூட்டி, யன்னல்கள் போன்ற பல பொருட்கள் எமது கண்களுக்குத் தென்படுகின்றன.

அதேவேளை, எமது கண்களுக்குப் புலப்படாத பல உறுப்புகள் உடலுக்குள் உள்ளிருந்து உடல் இயக்கத்துக்கு உதவுகின்றன. அதைப்போன்றே ஒரு வீட்டுக்குள் இருக்கும் பல மறைபொருட்களும் கண்களுக்குப் புலப்படாது வாழ்வோரின் உடல்நலத்துக்கும் வீட்டின் உறுதிக்கும் பயன்படுகின்றன. சக்தி விரையம் தொடர்பிலும் பெரும் பங்காற்றுகின்றன.

எமது வாழ்நாளில் பொரும்பாலான காலப் பகுதியை நாம் வீட்டுக்குள்ளேயே செலவு செய்கின்றோம். ஆகவே, வீடு மிகவும் தூய்மையானதாகப் பேணப்பட வேண்டும்.

நாம் சுவாசிக்கும் காற்றில் எமது கண்ணுக்கு தென்படாத பல நுண்கிருமிகள் இருக்கின்றன. வீடுக்குள் உலாவும் காற்றில் அவ்வாறான நுண்கிருமிகள் இல்லாதிருக்கும் வகையில் நாம் வீட்டைப் பேணுதல் மிக அவசியமாகும்.

வீட்டுக்குள் உலாவும் காற்றில், நுண்ணுயிர்கள், தூசு, ஈரப்பதம், குளிர், வெப்பம் என்பன கலந்துள்ளன. இவை எமது உடல்நலத்துக்கு பாதிப்பு இல்லாத வகையில் வீசும் காற்றோடு கலந்திருக்க வேண்டும்.

இவற்றைக் கட்டுப்படுத்தும் வழிவகைகளை நோக்குவோம்.

தூசு:

எம் வீட்டுச் சுற்றாடலில் உள்ள தூசுகள் வீட்டில் உள்ள வெடிப்புக்கள் வாயிலாகவும் கதவு, யன்னல்களை திறந்து மூடும் போதும் காற்றின் வழியே உட்புகுந்து விடுகின்றன.

வீட்டில் உள்ள வெடிப்புகளையும் துவாரங்களையும் கண்டறிந்து நிரந்தரமாக அடைப்பதன் மூலம் கட்டுப்பாடற்று உட்புகும் காற்றை நிரந்தரமாகக் கட்டுப்படுத்தலாம்.

யன்னல் கதவு வாயிலாக உட்புகும் காற்றில் உள்ள தூசியை சூடோற்றியில் உள்ள வடிகட்டியின் மூலம் வெளியேற்றலாம்.

இச் செயற்பாட்டிற்காகச் சூடேற்றியில் உள்ள காற்றாடியை எப்பொழுதும் இயங்க விடல் வேண்டும்.

ஈரப்பதன்:

காற்றில் உள்ள ஈரப்பதனின் அளவு எமது சுகாதாரத்திற்கும் வீட்டிற்கும் முக்கியமானது. இதன் அளவு 40% முதல் 60% ஆக இருப்பது சிறந்தது. ஈரப்பதனின் அளவு 40%ற்கு குறைவாக இருக்கும் பொழுது நாம் பல அசௌகரியங்களைச் சந்திக்கின்றோம்.

குளிர்காலத்தில் வெளிப்புற காற்றின் ஈர்ப்பதனானது மிகவும் குறைவானது. அதாவது 40%க்கு குறைவாகவே இருக்கும். எனவே குளிர்காலத்தில் இக்காற்றானது வீட்டிற்குள் வரும்போது உடலுக்கு சில அசௌகரியங்களை ஏற்படுத்தும். குறிப்பாக, எமது தொண்டை வரட்டுத் தன்மையாக இருத்தல், மூக்கில் இருந்து குருதி வடிதல், கண் கடித்தல் போன்ற பல ஆரோக்கியமற்ற நிலையை ஏற்படுத்துகின்றது.

அதேவேளை இந்த ஈரப்பதனானது 60% மேற் செல்லும்போது, வீட்டிற்கும் நமது உடலிற்கும் பல தீமைகளை ஏற்படுத்தும்.

வீட்டில் பூஞ்சணம் உருவாகுவதற்கு உரிய சூழலை உருவாக்கும். கிருமிகள் மேலும் அதிகம் இனவிருத்தி அடைவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும். வீட்டிற்குள் துர்நாற்றத்தை உருவாக்கும். வெப்பத் தடை (Insulation) செயற்பாட்டைக் குறைக்கும். வீட்டின் சுவர்கள் உட்பட பல இடங்களில் நிறங்கள் மாற்றமடையும்.

Hygrometer

மேற்குறிப்பிட்டவை நிகழாதிருக்க காற்றின் ஈரப்பதனை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது அவசியம்.

நம் வீட்டில் ஈரப்பதனை அறிவதற்குரிய பல கருவிகள் உள்ளன. அவற்றை வீட்டின் பல பகுதிகளிலும் பொருத்துவதன் மூலம் (Hygrometer) வீட்டில் நிலவும் ஈரப்பதனின் அளவை, மிகவும் துல்லியமாக அறிந்து கொள்ள முடியும்.

ஈரப்பதனை கட்டுப்படுத்தும் சில வழிமுறைகள்:

சூடேற்றியின் காற்றாடியைத் தொடர்ச்சியாக இயங்க விடுவதன் மூலம் ஈரப்பதனை சீராக வைத்துக்கொள்ள முடியும்.

சமையல் செய்யும் பொழுது சமையலறையின் Exhaust Fan ஐ இயக்க வேண்டும். அத்தோடு சமையல் முடிந்த பின்பும் குறைந்தது 30 நிமிடங்களாவது இயங்க விடவேண்டும். இதே சமயம் சமையல் அறையில் உள்ள யன்னலை சிறிது திறந்து வைப்பதன் மூலம் சக்தி விரையத்தை குறைக்கலாம். இதன் வழியே சமைக்கும் போது ஏற்படுத்தப்பட்ட அளவிற்கதிகமான ஈரப்பதனையும் வெளியேற்றிக் கொள்ளலாம்.

பல வீடுகளில் Humidifier அளவிற்கு அதிகமாக இயங்குவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது வீட்டிற்குள் இயற்கையாக உள்ள ஈரப்பதனின் அளவை அதிகமாக்கிவிடுகிறது. இந்த தருணத்தில் Humidifier இன் அளவுகோலை குறைத்தோ அல்லது நிறுத்திவைப்பதன் மூலம் ஈரப்பதனின் அளவை நாம் சமநிலைப்படுத்த முடியும்.

வீட்டில் உள்ள தாவரங்கள், மீன் தொட்டி, உடை உலர்த்தி (Dryer), குளியலறை போன்றவற்றாலும் வீட்டின் ஈரப்பதனின் அளவு அதிகமாக்கிவிடுவதற்கான வாய்ப்பு உண்டு. அவற்றையும் கட்டுப்பட்டிற்குள் வைத்திருப்பது அவசியம்.

மேற்கூறிய வழிமுறைகள் மூலம் ஈரப்பதனின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாவிடின் Dehumidifier என்னும் கருவியை பாவிப்பது மிகவும் சிறந்தது. இக்கருவி அதிக சக்தி விரையத்தை ஏற்படுத்தும் என்பதனால் மேற்கூறிய வழிமுறைகளை பின்பற்றிய பின்னரே இந்த முறையைத் தேர்வு செய்தல் வேண்டும்.

தொடர்தல் 29ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி விரயக்...

28ம் பக்கத் தொடர்ச்சி...

காற்றுக் கசிவு (Air Leackage):

வீட்டினுள் உள்ள காற்றை காற்றாடி மூலம் வெளியேற்றும் போது வீட்டினுள் காற்றழுத்தம் உருவாகின்றது.

இந்தத் தாழ் அழுத்தத்தைச் சமப்படுத்த, வீட்டிலுள்ள துவாரங்களினூடாக காற்று உள் இழுக்கப்படுகின்றது. காற்று உள் வாங்கப்படும்போது பல தாக்கங்களை யும் அசௌகரியங்களையும் ஏற்படுத்து கின்றது. அவற்றுள் சிலவற்றை இங்கு காண்போம்.

- வெப்பத்தடை (Insulation) இனுள் இருக் கும் நுண்ணிய தூசுகளை வீட்டிற்குள் கொண்டு வருகின்றது.
- வெளியிலிருக்கும் சமாந்தரமற்ற ஈரப் பதனை வீட்டிற்குள் கொண்டு வருகின் றது.
- துவாரங்கள் அதிகமாக இருக்கும் வீட்டின் பகுதியை அதிக குளிராகவோ அல்லது அதிக சூடாகவே மாற்று கிறது.
- யன்னலுக்கு அண்மையில் நிகழும் போது அது ஜன்னலில் நீர் படிவை உண்டாக்குகின்றது.
- வெளியிலுள்ள எதிர் வெப்ப நிலையை வீட்டிற்குள் உட்கொண்டு வருவதனால் வீட்டின் சக்தி விரயத்தை அதிகரிக் கின்றது.
- இத்துவாரங்களினூடாக வீட்டினிலுள்ள காற்று வெளியேறும் போது வீட்டின் ஈரப்பதனை வெளிக் கொண்டு போவ தனால் சுவர்களுக்குள்ளும் Attic (பரண்) போன்ற இடங்களிலும் பூஞ்சணம் (Mold) உண்டாக ஏதுவாகின்றது. அத் தோடு Insulation ஐயும் செயலற்றதாக்கி விடுகின்றது.

நாம் வாகனத்தரிப்பிட அறைக்கு மேலுள்ள பகுதி அதிக குளிர்த்தன்மை உள்ளதாக இருப்பதை உணர்ந்திருப்போம். மேல் குறிப்பிட்டது போல காற்றின் உட்புகு தலே இதற்கு முக்கிய காரணமாகும்.

பல வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகளில் 'Batt' எனும் Insulation வகையே அப்பகுதியில் (Between Garage & the Floor) இடப்பட்டிருக்கின்றது. இவ்வகை யான Insulation காற்று உட்புகுவதைக் கட்டுப்படுத்தாது. வெப்பக் கடத்தலை கட்டுப்படுத்தினாலும் நாம் காற்று உட்பு குதலை கட்டுப்படுத்த முடியாததனால் நாம் சில அசௌகரியங்களைச் சந்திக்கின் றோம். இத் தருணத்தில் இப்பகுதியை Spray Foam எனும் Insulation ஐ பாவிப்ப தன் மூலம் வெப்பத்தடையைக் கட்டுப் படுத்தலாம். காற்று உட்புகுதலையும் முற்றாகக் கட்டுப்படுத்தலாம். அத்தோடு மட்டுமல்லாமல் இப்பிரச்சினையானது காற்றை மட்டுமல்லாமல் Garage இனுள் இருக்கும் Chemical, Gaselin Gas, Carbon Monoxide போன்ற நச்சுத்தன்மையின் உள்வரவும் தடுக்கப்படுகின்றது. வீட்டின் சுகாதாரத்தைப் பேணுவதற்கு இவ்விட- யத்தை துல்லியமாக ஆராய்ந்து அதை நிவர்த்தி செய்துகொள்வது இன்றியமை யாதது.

வீட்டினிலுள்ள மற்றைய துவாரங்களை Caulking, Paint, Wood, Spray Foam போன்றவற்றால் நாம் அடைத்துக் கொள் ளலாம். அத்துவாரங்கள் பல பாகங்களி லும் பல கோணங்களிலும் இருப்பதனால் நாம் விதிமுறையற்ற வகையில் ஏதுவான பொருட்களைக் கொண்டும் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

அத்தோடு வெளியேற்றுக் காற்றாடியை (Exhaust Fan) உபயோகிக்கும் போது இச்செயல்பாடு அதிகரிக்கின்றது. எனவே தான் நாம் முன்னர் குறிப்பிட்டதைப் போல் காற்றாடியின் அருகிலுள்ள ஜன்னலை சிறிதளவு திறந்து விடுவதனால், தேவை யான காற்றை உள்வாங்கி வீட்டின் அமுக்க நிலையை சமன்செய்யலாம். அத்தோடு மட்டுமல்லாமல் வெளியேற் றப்படும் காற்று சூடேற்றப்பட்ட அல்லது குளிராக்கப்பட்ட காற்றல்லாமல் இருப்ப தனால் சக்தி விரயத்தையும் குறைக்கலாம்.

காற்றுக் கசிவு சுவர்களினுடாக ஏற்படும் போது அது சுவர்களுக்குள் நீர்ப்படிவை ஏற்படுத்தி பூச்சணம் (mold) உருவாகக் காரணமாக அமைகின்றது. இவ்வாறான ஒரு செயற்பாடு வீட்டின் கூரைப் பகுதி யில் நிகழும் போது பூஞ்சணம் மட்டுமல் லாது இதர தாக்கங்களையும் ஏற்படுத்த வழிவகுக்கின்றது.

Ice Damming:

குளிர்காலத்தை எடுத்துக் கொள்வோமே யானால், நம் வீட்டின் கூரையில் பனிப் படிவு இருப்பது சாதாரணமானதே. இப்ப னிப்படிவானது விட்டினுள் இருந்து வெளி யேறும் சூடான காற்று படும் போது பனி கரைந்து தண்ணீர்த்தன்மையை அடை- கின்றது. அதாவது, வீட்டினுள் இருந்து

வெளியேறும் காற்று வீட்டின் கூரையின் உட்பக்கத்தை சூடுடாக்குகின்றது. அவ் வாறு சூடு செய்யப்பட்டும் போது கூரை யின் மேலிருக்கும் பனி கரைந்து தண்ணீ ராக மாறுகின்றது. மாற்றப்பட்ட தண்ணீர் 'Shingles' ஊடாக வழிந்தோடி கூரையின் கரையை வந்தடைகின்றது. தண்ணீர் கூரை யின் நுனிப்பக்கத்தில் சூடு அல்லாத குளிர்த்தன்மையை உடனே சந்திக்கின் றது. அது எதுவெனில், வீட்டின் உட்ப குதியில் இருக்கும் கூரைப்பகுதி வீட்டி னிலிருந்து வெளியேறும் வெப்பக் காற் றால் வெப்பமடைகிறது. ஆனால் கூரை யின் நுணிப்பகுதி வீட்டிற்கு வெளியே இருப்பதனால் சுடுகாற்றின் வெப்பத்தை அடையாமல் இருக்கின்றது அவ்வாறு



இருக்கும் அப்பகுதி வெளியிலுள்ள குளிரை தக்கவைத்துக் கொள்கின்றது. இவ்வாறிருக்கும் பகுதியில் வடிந்தோடிய தண்ணீர் படும்போது அது மீண்டும் பனிக் கட்டியாகின்றது.

இச்செயற்பாடு 'Ice Damming' எனப்படு கின்றது. அது மட்டுமல்லாது Icicle எனும் மிக அடர்த்தி வாய்ந்த கட்டியாக மாறி வீட்டின் கூரைப்பகுதியில் தொங்குகின்றது. அப்பனிக்கட்டி சில சமயங்களில் உடைத்து கீழே விழும்போது எமக்கு அபாயங்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. அத்துடன் மட்டுமல்லாமல் 'Shingles' க்கு கீழ் பகுதியில் சிறுசிறு இடைவெளிகளுக் குள்ளும் இருக்கும் தண்ணீர் திடீரென ஏற்படும் கால வெப்ப மாற்றத்தினால் மீண்டும் பனிக்கட்டியாக மாறுகின்றது. இவ்வாறு மாறும்போது அது Shingles இன் ஒட்டுத்தன்மையை அகற்றி ஆங் காங்கே இருப்பைச் சீர்குலைக்கின்றன.

இவ்வாறான செயற்பாடு Shinglesன் ஆயுட்காலத்தை வெகுவாகக் குறைக் கின்றது.

Attic Insulation:

இவ் வகையான பிரச்சினைகளிலிருந்து விடுபட வீட்டின் Attic Insulationஐ சரி- செய்து கொள்ள வேண்டும். இது வீட்டின் கூரைப்பகுதி பழுதுடைவதையும் தாண்டி, வீட்டின் சக்தி விரயத்தை வெகுவாகக் குறைக்கும். புள்ளிவிபரத்தின் படி 90% கும் அதிகமான வீடுகள் வீட்டின் கூரைப்ப குதிக்குள் R-12 to R-20 வரையிலான In- sulationனே இடப்பட்டிருக்கின்றது. இது தற்போதைய நிலவரப்படி R-50 - R60 ஆக இருத்தல் வேண்டும். இக்குறைபாடு பல புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளிலும் காணமுடிகிறது. இவ்வாறு குறைவாக இடப்பட்ட வீடுகளில் ஏற்படும் மாற்றங்க ளைப் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

அதாவது, எமது வீட்டின் மேல் தளத்தி லுள்ள ceiling இன் உட்பகுதி வீட்டின் உள்வெப்பநிலையையும் ceiling இன் மற்றைய பகுதி வீட்டின் வெளியிலுள்ள வெப்ப நிலையையும் கொண்ட தாக இருக்கிறது. உதாரணமாக, ceiling இன் வெளியிலுள்ள பகுதி வெளி வெப்ப நிலையை அடைகிறது. அதாவது, வீட்டி



னுள் 21° ஆக இருக்கும் நேரத்தில் வெளியிலுள்ள வெப்ப நிலை -20° ஆக இருக்குமேயானால் அது ceilingஐ -20° வெப்ப நிலைக்கு தள்ளப்படுகிறது. அவ் வாறு தள்ளப்படும் போது வீட்டினுள் உள்ள சூடேற்றி (Furnace) கடினமாகச் செயற்பட்டு ceilingஐ வெப்பமாக வைத் திருக்கிறது.

வீட்டின் கூரைப்பகுதியில் தக்க அளவு (R-50) Attic Insulation இருப்பதன் மூலம் இப்பிரச்சினையிலிருந்து மீள முடியும். தற்பொழுது எமது பிரதேசத்தின் Attic In- sulation அளவின் குறியீடானது R-50 எனும் அளவை இவ் அரசாங்கம் நிர்மா ணித்திருக்கின்றது. Attic Insulation ஆனது சூடு கடத்துவதை மிகவும் கட்டுப்படுத்து கின்றது. ஆதலினால் கோடை காலங்களில் இவ் Attic Insulation ஆனது கூரைக்குள் இருக்கும் சூட்டை வீட்டிற்குள் உட்பிரவே- வசிப்பதைத் தடுக்கிறது. இதனால் குளிர் காலத்திற்கு மட்டுமல்லாது வெப்பமான கோடைகாலத்திற்கும் முழுமையான பயன் பாட்டைத் தருகின்றது. கோடைகாலங்க ளில் பல நேரங்களில் எமது வீட்டின் மேற்தளம் மற்றைய தளங்களைவிட அதிக வெப்பமாக இருப்பது Attic Insulation பற்றாக்குறையே காரணமாகும். அது சரி யான அளவாக இருக்கும் போதே அதன் முழுப்பயனை அடைய முடியும்.

குளிர் காற்றையும் சூடான காற்றையும் தொடர்புபடுத்தாமல் வைத்திக்கும்போது, சூடு கடத்தலை அல்லது சூடு விரயத்தை கட்டுப்படுத்தி சக்தியை சேமிப்பதோடு மட்டுமல்லாமல் அதனால் ஏற்படும் பக்க விளைவுகளிலிருந்தும் நம்மையும் எமது வீட்டையும் நாம் பாதுகாத்துக் கொள்ள லாம். எனவே வீட்டின் Attic Insulation



இடும்போது அதற்கேற்ப தகுதி வாய்ந்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இத்தொழிலில் அனுபவமும் தகுதியுமுள் ளவர்களைத் தேர்வு செய்து கொள்ள வேண் டும். Attic இனுள் Exhaust Fan, Rafter Vent, Mold, Vermiculite, Attic Ventilation போன்ற இன்னும் பலதரப்பட்ட விடயங்க ளையும் நன்கு அறிந்து அவைகளைப் பூர்த்தி செய்வது மிக முக்கியமானது.

1960க்கு முன் கட்டப்பட்ட அனேகமான வீட்டுச் சுவர்கள் Insulation இல்லாமலே கட்டப்பட்டிருக்கின்றன. ஆனாலும், காற் றுக் கசிவு இல்லாமல் சிறந்த முறையில் கட்டப்பட்டிருப்பதாலேயே Insulation இல் லாத குறை பாட்டை நம்மால் உணர முடிவதில்லை. இருந்தாலும், சக்தி விரய மென்பதைத் தவிர்க்க முடியாமல் போகி ன்றது. இவ்வகையான வீடுகளில் எங் கெல்லாம் Insulation இடுவதற்குச் சாதக மாக அமைகின்றதோ அங்கெல்லாம் நாம் Insulationஐ முறையாக பொருத்திக் கொள்ளவேண்டும்.

நம்மில் பலர் எங்கள் வீட்டின் நிலக்கீழ் (Basement) பகுதியை வாழக்கூடிய இட மாக்குவதைக் காணலாம். இவ்வாறு நாம் திருத்த வேலைகளைச் செய்யும் போது கட்டுமானப் பணிகளின் உள் சுவரை (Inside wall) தீர ஆராய்ந்து அதைச் சீர்ப்படச் செய்வது மிக முக்கியமானது. இவ்வாறு செய்யும் பட்சத்தில் எதிர்காலத் தில் ஏற்படும் தாங்கங்களிலிருந்தும் சக்தி விரயத்திலிருந்தும் காத்துக் கொள்ளலாம். வீட்டின் கீழ்த்தளத்தின் மறுபக்கம் நிலத் துக்கடியில் இருப்பதனால் நாம் Mois- ture Control மற்றும் Air Barrier போன்ற விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண் டும். கட்டுமானப் பொருட்களான Mois- ture Barrier, Insulation மற்றும் Air Barrier போன்ற பொருட்களை சரியாக பொருத்தி அதன் பயன்பாட்டை அடைய வேண்டும்.

இதில், Insulationல் முக்கியமான இரண்டு வகையை இங்கு பார்ப்போம்.

முதலாவது:
Batt எனும் Insulation காற்று, ஈரப்பதன் போன்றவற்றைக் கட்டுப்படுத்தாது. எனவே

தொடர்தல் 30ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி விரயக்...

29ம் பக்கத் தொடர்ச்சி...

இவ்வகையான Insulation தெரிவின்போது அத்துடன் ஏற்படக்கூடிய காற்றுக் கசிவைக் கட்டுப்படுத்த Air Barrier எனும் செயற்பாட்டை செயற்படுத்த Poly ஐ தவறாமல் இடவேண்டும். இதையும் தாண்டி வெளியேறும் காற்றும், காற்றோடு கடத்தப்படும் ஈரப்பதனையும் கட்டுப்படுத்த Moisture Barrier ஐ பொருத்த வேண்டும். இக்கட்டுரையில் முன் குறிப்பிட்டதை போல் இப்பகுதி நில மட்டத்திற்குக் கீழ் இருப்பதனால் காற்று, ஈரப்பதன் போன்றவற்றை கட்டுப்படுத்தாமல் விட்டால் அவை பூச்சணம் (mold), துர்நாற்றம், சக்தி விரயம் போன்ற பலதரப்பட்ட தாக்கங்களை உருவாக்கும்.

இரண்டாவது:

Spray Foam எனும் Insulationஐ பார்ப்போமேயானால், அது இடப்படும் இடமான சீமெந்து சுவருடன் ஒட்டி இடப்படும். இதனால் நாம் ஈரப்பதன், காற்று, சக்தி விரயம் போன்றவற்றிலிருந்து நாம் முழுமையாக விடுபட்டுக் கொள்ள முடியும். அதாவது Batt Insulation உடன் Spray Foam ஐ ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால் Batt Insulation காற்றைக் கட்டுப்படுத்தாது. ஆனால் சக்தி விரயத்தை ஓரளவு கட்டுப்படுத்தும். ஆனாலும், Batt Insulation ஐ சரியான முறையில் பயன்படுத்தும்போதே Batt Insulationன் முழுப் பயனை அடைய முடியும். இது காற்றைக் கட்டுப்படுத்தாத பட்சத்தில் இக்காற்று விரயத்தால் ஏற்படும் விளைவுகளுக்கு நாம் தனித் தனியே அவற்றைக் கவனமெடுக்க வேண்டியுள்ளது.

Spray Foam Insulation ஆனது முக்கியமாக 2LB வகையான Insulation. காற்று, ஈரப்பதன், சக்தி போன்ற எல்லா விடயங்களையும் கட்டுப்படுத்தும் தன்மையை தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே Spray Foam Insulation செய்யும்போது நாம் இவ்வகையான பக்க விளைவுகளிலிருந்து விடுபடமுடியும். இது மட்டுமல்லாமல் Spray Foam Insulation பல கட்டுமான நன்மைகளையும் கூடிய ஆயுட்காலத்தையும் கொண்டுள்ளது. இவ் Insulation ஆனாது சரியாகவும் நேர்த்தியான முறையிலும் இடப்படவேண்டும். எனவே இதற்கான ஒப்பந்தகாரர் கட்டாயமாக அங்கிகரிக்கப்பட்ட, முறையான பயிற்சி மற்றும் சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும். Insulation எனப்படும் விடயத்தில் அதிக கவனம் செலுத்தி நாம் சரியாகச் செய்யும் பட்சத்தில் சக்தி விரயத்தைக் கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் நாம் அதனால் ஏற்படும் பக்க எதிர் விளைவுகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

காற்றுச் சுற்றோட்டமும் சமநிலையும்:

இயற்கையாகவே சூடான காற்று பாரம் குறைந்ததாகவும் குளிரான காற்று பாரம் கூடியதாகவும் உள்ளது. அதனால் வீட்டில் உள்ள சூடான காற்று எப்போதும் மேல் தளத்தை நோக்கியே நகரும். அதாவது வீட்டின் சூடேற்றியால் சூடேற்றப்பட்ட காற்று வீட்டின் எத்தளத்திலிருந்தாலும் அது மேல்நோக்கிச் சென்று, வீட்டின் மேல் பகுதியிலுள்ள ceiling ஐச் சென்றடைகின்றது. இதனால் தான் Attic Insulation இச் சக்தி விரயத்தைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. நாம் Attic Insulation செய்வதால் Attic ன் ஊடாக செல்லும் சக்தியைத் தடுத்து நிறுத்த முடிகிறது. அதே நேரம், வீட்டின் மற்றைய தளங்களின் வெப்ப நிலை சற்று மாறுதலாகவே இருக்கும். உதாரணமாக: வீட்டின் மேல் பகுதி 22° இருக்கும் அதே நேரம் வீட்டின் நடுத்தளம் 20° ஆகவும் நிலக்கீழ் தளமாகிய Basement 18° ஆகவும் இருக்கும் வாய்ப்புள்ளது. இது இவ்வாறு இருக்கும் பொழுது வீட்டின் நடுத்தளத்தில் இருக்கும் நாம் 20° ஐ அதிகமாக்க Furnaceஐ கூடுதலாக இயக்குவோம். இது முதலாவதாக சத்திப் பாவனையை அதிகமாக்குவதோடு மட்டுமல்லாது வீட்டின் மேற்தளத்தை அளவுக்கு அதிகமான வெப்பமாக்குகின்றது. இச் செயலானது ஒரு அசௌகரியமான சூழலை தோற்றுவிக்கின்றது. இச் சூழலிலிருந்து விடைபெற நாம் Mechanical System ன் உதவியுடன் சீர் செய்யலாம்.

நாம் Thermostat ன் உதவியுடன் மின் விசிறியைத் தொடர்ந்து இயக்க வேண்டும் இவ்வாறு இயக்க Thermostat இல்



Fan எனும் பகுதியில் உள்ள குறியீட்டை 'ON' எனும் இடத்தில் இடும்போது அது சூடேற்றியில் உள்ள விசிறியை தொடர்ந்து இயக்கும். இச்சமயம் நெருப்பை வரவளைக்க வேண்டிய கட்டாயதில் இயங்காது அதாவது Fan - Auto எனும் குறியீடென்பது சூடு தேவைப்படும் போது அவ் மின் விசிறியானது தானாக இயங்குகின்றது. சூடேற்றியில் உருவாகும் சூடான காற்றை வீட்டின் வெவ்வேறு பாகங்களுக்கு அனுப்புகின்றது. அதே சமயம் Fan - On எனும் குறியீடு சூரேற்றி சூட்டை உருவாக்கும் போது மட்டுமல்லாது எல்லா நேரங்களிலிலும் காற்றை வீட்டின் பல பாகங்களுக்கு அனுப்புவதற்கு கட்டாயப்படுத்தப்படுகிறது. அதே சமயம் வீட்டின் வெப்பநிலை குறைவடைந்து வரும் பட்சத்தில் அது தானாக சூட்டை உருவாக்க நெருப்பை வரவளைத்து அதன் செயற்பாட்டை நிவர்த்தி செய்து கொள்ளும் இவ்வாறு இச் சூடேற்றி 'Fan - On' எனும் குறியீட்டில் இயங்கும்போது அது வீட்டினிலுள்ள எல்லாப் பாகங்களிலிருந்தும் காற்றை உள் எடுத்து வீட்டின் எல்லா பாகங்களுக்கும் செலுத்துகிறது. நாம் முன்பு கூறியதைப் போல வீட்டினுள் இருக்கும் காற்று மற்றும் அதன் சுகாதார / வெப்ப நிலை நம் வீட்டின் மற்றும் நமது சுகாதார வாழ்க்கைக்கு முக்கியமாகின்றது. எனவே இவ்வாறு நாம் வீட்டினுலுள்ள காற்றை சூரேற்றி மூலம் உள் வாங்கி வெளிவிடும்போது பல நன்மைகளை அடைய முடிகின்றது.

- வீட்டின் எல்லாத் தளத்திலுமுள்ள வெப்பநிலையை ஒரு நிலைப்படுத்துகிறது. இதனால் எல்லா தளத்திலும் ஒரே அளவான வெப்ப நிலையைத் தக்க வைத்துக் கொள்கின்றது.
- காற்றுடன் கலந்திருக்கும் ஈரத்தன்மையை ஒரு பகுதியிலல்லாது எல்ல பகுதியிலுள்ள காற்றுடன் சமப்படுத்திக் கொள்கிறது. இதனால் காற்றின் ஈரப்பதன் வீட்டில் எல்லாப் பகுதிகளிலும் ஒரே நிலையை அடைவதனால் இவ் ஈரப்பதனால் ஏற்படும் பக்க விளைவுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வழிவகுக்கின்றது. உதாரணமாக எமது சமையலறையிலோ, குழியலறையிலே காற்றினிலுள்ள ஈரப்பதன் அதிகமாக இருப்பது இயற்கையே எனவே அவ்வாறு அதிகமாக இருக்கின்ற ஈரப்பதனை ஈரப்பதன் குறைவாக இருக்கக் கூடிய வேறு பகுதிக்குப் பகிர்வதன் மூலம் ஈரப்பதன் சமநிலையை ஏற்படுத்த முடியும்.
- முன் குறிப்பிட்டதைப் போல் காற்றுக் கசிவு ஏற்பட்டு குளிராக இருக்கும் வீட்டின் ஒரு பகுதியை வெகு விரைவாக சம வெப்ப நிலைக்குக் கொண்டுவர உதவுகின்றது.
- வீட்டின் காற்றில் இருக்கும் தூசு மற்றும் நுண்ணிய கிருமிகள் மற்றும் நச்சுத் தன்மை போன்ற தீங்கு விளைவிக்கின்ற காற்றோடு கலந்திருக்கின்றவற்றை சூடேற்றிக்கு தொடர்ச்சியாக செலுத்துவதன் மூலம் கூடேற்றியிலுள்ள Filterன் உதவியுடன் அதை பிரித்தெடுத்து வெளியகற்ற உதவுகின்றது. அத்துடன் நாம் சூடேற்றியுலுள்ள Filter ஐ அட்டவனைக்கேற்ப மாற்றிக் கொள்வது மிக முக்கியமானதாகின்றது. இது எமக்கும் எம் வீட்டின் சுகாதாரத்தன்மைக்கும் மிக மிக முக்கியமானது.

Fan-Onன் பயனுடன் நாம் வீட்டின் Attic மற்றும் Air Leackage போன்றவற்றறை நேர்முறைப்படுத்தும் பட்சத்தில் சக்தி விரயத்தை கூடிய வீகிதத்தில் கட்டுப்படுத்தலாம்.

புதுவகையான சூடேற்றிகள் AC அல்லாது DC சக்தியில் இயங்கக் கூடியவை. மிகக் குறைந்த மின் சக்தியையே உபயோகிக்கின்றது. அத்தோடு மட்டுமல்லாது மின்விசிறி பழுதடையாமல் பல வருடங்களுக்கு இயங்கக் கூடியது. புது வகையான சூடேற்றிகளுக்கு நீண்ட காப்பு (Warrenty) யும் இருப்பதனால், தொடர்ச்சியான செயல்பாட்டினால் ஏற்படும் செலவீனங்களைப் பற்றி அதிகம் கவலையடையத் தேவையில்லை. அத்தோடு இது விரையம் செய்யும் சக்தியைவிட பல மடங்கு சக்தி சேமிப்பை வேறு வழிகளில் நமக்கு திருப்பித் தருகின்றது.

அதே போல் கோடை காலத்தில் குளிர் காற்று வீட்டின் கீழ்ப்பகுதியைச் சென்றடைகின்றது. எனவே தான் வீட்டின் கீழ்த் தளம் (Basement) மற்றைய தளத்தை விட குளிர் கூடியதாக இருக்கின்றது. எனவே கோடை காலத்தில் Fan - On எனும் செயல்பாட்டால் கீழ்த்தளத்திலுள்ள குளிரான காற்று வீட்டின் மேற்தளத்துக்கு செல்ல ஏதுவாகிறது. இதனால் மேற்தளம் வெப்ப சமாந்திரத்தை அடைந்து சௌகரியமாக் குகின்றது.

Insulation வீட்டினுலுள்ள சூட்டை வெளியே போகாமல் கட்டுப்படுத்துவது மட்டுமல்லாது கோடை காலங்களில் வெளியில் இருக்கும் வெப்பத்தை வீட்டினுள் வராமலும் தடுக்கின்றது. அதாவது வெப்பத்தடை (Insulation) வெப்பத்தைக் கடத்தாமல் கட்டுப்படுத்துகின்றது. அது வீட்டின் உள்ளிருந்து வெளியேயோ அல்லது வெளியிலிருந்து உள்ளேயோ செல்லாமல் தருக்கிறது. முக்கியமாக கோடை காலத்தில் வீட்டின் கூரைப் பகுதி மற்றைய காலத்தைக் காட்டிலும் பல மடங்கு அதிகமான வெப்ப நிலையை அடைகிறது. இவ்வாறுள்ள வெப்பத்தை வீட்டின் உட்பகுதிக்கு வரவிடாமல் Attic Insulation வெப்பத்தடையை ஏற்படுத்துகின்றது. ஆகையினால் Attic Insulation ஆனது குளிர் காலத்தில் மட்டுமல்லாது கோடை காலத்திலும் சக்தி சேமிப்பைத் தருகின்றது. கோடை காலங்களில் வீட்டின் மேல் தளம் ஏனைய தளங்களை விட அதிக வெப்பமாக இருப்பதன் அறிகுறி போதிய அளவு Attic Insulation பற்றாக் குறையே பிரதான காரணமாக அமைகிறது.

கோடைகாலத்திலோ அல்லது குளிர் காலத்திலோ நாம் வெளிக்காற்றை யன்னலினூடாக உள்வாங்குவதைத் தடுக்கும்போது வீட்டினுள் புதுக் காற்று இல்லாத குறை வருகின்றது. இப்படியான சூழலில் HRV (Heat Recovery Ventilator) எனும் கருவி இக்குறைபாட்டைத் தீர்க்கின்றது.

அதாவது இக்கருவி கூரேற்றியின் காற்று வழிப்பாதை (Duct) ஐ உபயோகித்து வீட்டினிலுள்ள அசுத்தமான காற்றை உள்வாங்கி வீட்டிற்கு வெளியே செலுத்துகிறது அதே சமயம் வீட்டிற்கு வெளியிலுள்ள புதிய காற்றை இக்கருவி உள் வாங்கி பின் வீட்டினுள் செலுத்துகிறது இது நாம் யன்னலை திறந்து காற்ரோட்டத்தை ஏற்படுத்துவதற்குச் சமமானதாகும். ஆனால் இக்கருவியான HRV யின் செயற்பாட்டின் முக்கியத்துவம் எதுவெனில் வீட்டினுள்ளிருந்து அசுத்தமான காற்றை வெளியேற்றும் போது இக்கருவி அக்காற்றிலுள்ள வெப்ப நிலையை உள்வாங்கி, உள்ளே வரும் சுத்தமான காற்றுக்கு செலுத்துகிறது. எனவே காற்று பரிமாற்றத்தைச் செய்யும் போது இக்கருவி சக்தி விரையத்தை குறைக்கிறது, இல்லாவிடில் இல்லாமலாக்குகின்றது. இது குளிர்காலத்திலும் மற்றும் கோடை காலத்திலும் உபயோகமானது.

மேல் குறிப்பிட்ட வழிமுறைகளும் தீர்வுகளும் ஒரு சில வகைகளே. இதனடிப்படையில் தேர்ச்சிபெற்று அனுபவமுள்ள வர்களூடாக மென்மேலும் பல விடயங்களை நீங்கள் அறிந்து கொள்ளலாம். மற்றும் மேல் குறிப்பிட்ட வழிமுறைகள் உங்களுக்கு ஒரு உந்து கோலாக இருந்து சக்தி விரயத்தைக் கட்டுப்படுத்தியும் ஆரோக்கிய சுகாதாரமான வாழ்க்கையை வாழ்வதற்கும் வழிவகுக்குமென்றும் நம்புகிறேன்.

prabha.sinna@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR YOUR BUYING & SELLING NEEDS

TOMORROW BEGINS TODAY

SOLD IS MY FAVORITE FOUR LETTER WORD

For your Convenient,
Mortgage approval/ Mortgage
Home staging & Home inspection
Can be Provided with the Additional Cost.

Homelife/future Realty Inc.
Independently Owened and Operated

SHARON KETHEESAN
Sales Representative

437 - 221 3284

realtorsharon@hotmail.com
www.homelifefuture.ca

205-7 Eastvale Drive, Markham, ON L3s 4N8 | Office : (905) 201 9977

DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION

Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills

Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca

Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
devadas@vdlaw.ca

1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Next to RBC @ Kennedy & Ellesmere

Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடைகாலமும் வாகன ஓட்டமும்

ஒரு கொடுமையான பனிக்காலம் முடிந்து இப்போது கோடைகாலம் ஆரம்பமாகியுள்ளது. எல்லோரும் நண்பர்களைச் சந்திப்பதற்கும் பொழுது போக்காகவும் தத்தமது வாகனங் களில் புறப்பட்டுப் பல இடங்களுக்கும் செல் வது இயல்பே. இம்முறை பெருமழை கொட்

டும் வேளை வாகனம் செலுத்தும்போது கவனிக்கவேண்டிய விடயங்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

பெரும் மழை பெய்யும் வேளை பாதை தெரிவது மிகச் சிரமாமாய் இருப்பது உங் களுக்கு ஏற்கனவே தெரிந்தவிடயம். வீதி தெளிவாகத் தெரிவதற்கு ஒரு சுலபமான வழி உண்டு. இதற்கான விஞ்ஞான விளக் கம் எனக்குத் தெரியாது. ஆனால் எங்கோ வாசித்துப் பின் அதை முயற்சி செய்து பயனும் கண்டதனால் இதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக பெருமழை கொட்டும் வேளை யில் wiper களை வேகமாக முடுக்கிவிடு வோம். எவ்வளவு வேகமாக wiper களைச் செலுத்தினாலும் பாதை தெளிவாகத் தெரி வதில்லை. இந்நிலையில் கண்ணாடி துடைப் பான் (wiper) பயனற்று இருப்பது இயல்பு. இந்நிலையில் உங்கள் சூரியக் கண்ணா டியை (Sun glasses) அணிந்து பாருங்கள் உங்கள் கண்களுக்கு வீதி கண்ணாடிக் கூடாக மிக தெளிவாகத் தெரிவதைக் காண் பீர்கள். வீதியில் கொட்டும் மழைநீரின் தாக்கம் ஏதும் இல்லாது பாதை தெளிவா கத் தெரியும்.

N.K.S
Drapery & Blinds Fabric LTD
திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்
உங்கள் வீட்டுக்குத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420
Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420
Fax: 416.321.2217
www.nksdrapery.ca
Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

உங்கள் வாகனத்தில் எப்போதும் ஒரு சூரியக் கண்ணாடியை வைத்திருக்கத் தவ றாதீர்கள். மேலும் இந்த மிக எளிதான விட யத்தை உங்கள் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வதனால் அவர்களுக்கு பெரும் உதவி செய்தவராவீர்கள். முதலில் நீங்கள் முயன்று பார்த்துப் பயனை அனுபவித்து மற்றவர்க ளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
ஆச்சரியப்படும் விதத்தில் கண்ணாடியில் வடியும் நீர்த்துளிகள் சூரியக் கண்ணாடி வழியாகத் தெளிவாகத் தெரியும். அது மட் டுமல்ல, பாதையில் விழுந்து தெறிக்கும் நீர்த்துளிகளும் தெளிவாகத் தெரியும். மேலும் எதிரே வரும் வாகனத்தின் ஒளியால் உங் கள் கண்கள் கூசுவதையும் அது தவிர்க் கும். அதுமட்டுமல்ல, முன்னால் செல்லும் வாகனத்திலிருந்து தெறிக்கும் நீர் எம் பார்வையைக் குறைப்பதையும் தவிர்க்கும்.

இந்த மிக எளிதான விடயத்தை ஓட்டுனர் பயிற்சியாளர்கள் கற்பவர்களுக்குக் கட்டா யம் கற்பிப்பது அவசியம். இதற்கான விளக் கம் தெரியாதபோதும் அதன் பயன் தெரியு மாதலால் தெரிவிக்கிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான விடயம் மழை கடுமையாகப் பெய்யும் வேளையில் வாகனம் நீரில் மிதக்கத் தொடங்குவது. இதனை ஆங்கிலத்தில் hydro-plane என்று குறிப்பி டுவார்கள். இந்நிலை ஏற்படும் வேளையில் வாகனம் நீரின் மேற்றளத்தில் விமானம் போல் பறக்கும். பனிக்காலத்தில் பனிக்கட்டி மழை பெய்கையில் பாதை பனிக்கட்டியாக உறைந்து போக வாகனங்கள் சறுக்குவதற்கு ஒப்ப இங்கும் நீர்த்தளத்தில் சறுக்கிக் கொண்டு செல்லும். இப்படி சறுக்கும்வேளை களில் பனியில் சறுக்குவதுபோல் சாரதியி னால் ஒன்றுமே செய்யமுடியாத நிலை ஏற் படும்.

இத்தகைய Hydro-plane சறுக்குதல் தானி யங்கி வேகக் கட்டுப்பாட்டில் செலுத்துவ தால் ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது. இப்ப டியாக Cruise Control உடன் வாகனம் செலுத்துகையில் டயர்கள் பாதையுடன் உள்ள தொடர்பை இழந்துவிடும். அத்து டன் மிக உயர்ந்த வேகவளர்ச்சி ஏற்படும்.

- செந்தூரன் புனிதவேல் -

நாம் பெரும்பாலும் தூரப்பயணம் செல் கையில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவியை (Cruise Control) பயன்படுத்தி குறித்த ஒரு வேகத்தில் அவதானமாகச் செலுத்துவோம். ஆனால் மழை பெய்யும் வேளைகளில் அதுவே யமனாக வந்துவிடும். எனவே மழை கொட்டும் வேளையில் அல்லது தரை நல்ல ஈரமாக இருக்கும் வேளைகளில் Cruise Control இனைப் பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அண்மைக் காலத்தில் சில வாகனங்களில் wiper வேலை செய்யும் வேளையில் Cruise Control இயங்காதிருக் குமாறு அமைத்துள்ளார்கள்.

இது தவிர மழை பெய்யுகையில் அல்லது நிலம் ஈரமாக இருக்கும் வேளைகளில் கவனிக்க வேண்டிய சில விடயங்கள்.

- வேகத்தை மழை பெய்யும் வேளையில் அல்லது நிலம் ஈரமாக உள்ள வேளை களில் குறைத்துக் கொள்ளுங்கள்.
- இயன்ற அளவு பாதையின் நடுவில் வாகனத்தைச் செலுத்துங்கள். கரைக- ளில் நீர் தேங்கி நிற்கக்கூடும்.
- பொதுவாக மூன்று வினாடி கோட்பாடை கடைப்பிடிக்கும்படி அறிவுறுத்துவார்கள். அதாவது முன்னால் போகும் வாகனம் ஒரு நிலையான புள்ளியை கடந்து மூன்று வினாடிகளின் பின் தான் உங்கள் வாகனம் அந்த இடத்தை அடைய வேண்டும். ஈர மான சுற்றாடலில் இந்த மூன்று வினாடி கோட்பாடை அதிகரிக்க வேண்டும்.
- முன்னால் செல்லும் வாகனச் சில்லு சென்ற தடத்திலேயே உங்கள் வாகனத் தைச் செலுத்துங்கள்.
- பெரிய வாகனங்களான பஸ்கள், லொரி களுக்கு மிக நெருக்கமாக வாகனத் தைச் செலுத்தாதீர்கள். அவர்களுடைய பாரிய சில்லுகளிலிருந்து தெறிக்கும் நீர்த் துவள்கள் உங்கள் பார்வையை மறைக்கக் கூடும்.
- பாதைகள் வழுக்கும் நிலையில் இருக் கும் வேளையில் கூடிய அவதானமாய் இருங்கள். குறிப்பாக முன்னே செல்லும் வாகனத்தின் பிரேக் ஒளியை கவனித்த வண்ணமிருங்கள்.
- உங்கள் வாகனத்தில் பிரேக்கை இயன்ற அளவு பாவிக்காதிருக்க முயலுங்கள். வேகத்தை விரைவுபடுத்தும் பொறியி லிந்து காலை எடுப்பதனால் வேகத்தை குறைத்துக் கொள்ளுங்கள்.
- சற்று மங்கலாக அல்லது இருளாக அல்லது மழை காரணமான இருட்டாக இருப்பின் ஹெட்லைட் இனை இயக்குங் கள். இது உங்களுக்குச் சுற்றாடலைத் தெளிவாகப் பார்க்க உதவுவதுடன் எதிரில் வரும் வாகனத்தையும் நீங்கள் தெளி வாகப் பார்க்க உதவும். தற்காலத்தில் பகலிலும் முன்பக்க விளக்கு எரிந்தா லும் நீங்கள் 'ஹெட்லைட்' பூரணமாக எரியுமாறு கவனித்துக் கொள்ளுங்கள். இது பின்னால் வரும் வாகனம் உங்க ளைத் தெளிவாக பார்க்க உதவும்.
- மழைக்காலம் ஆரம்பிக்கு முன்பே பனிக் காலத்தில் பாவித்த கண்ணாடித் துடைப்பானை (Windscreen Wiper) மாற்றிவிடுங்கள்.
- வாகனத்தைச் செலுத்துகையில் கண் ணியமாக நடந்துகொள்ளுங்கள். பாதை ஓரத்தில் நடப்பவர்களுக்கு நீர் தெறிக்கா மல் பார்த்துக்கொள்ளுங்கள்.

மேற்கூறியவை சிறு விடயங்கள் தான். ஆனால் பெரும் ஆபத்தில் மாட்டி விடக் கூடியவை.

தமிழாக்கம்: குமார் புனிதவேல்

senthuran.p@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dedicated & Trusted Real Estate Agent with 22 years of experience!

HOUSE FOR SALE IN WHITBY

3+1 Bedroom
Seperate Entrance
2 Kitchens

HOMELIFE HIGHER STANDARDS

HOMELIFE LANDMARK Brokerage.
7240 Woodbine Ave, Suite 103
Markham, ON L3R 1A4
Bus: 905 305 1600
nanadarajah@trebnet.com

NADA G. NADARAJAH B.V.Sc
Real Estate Sales Representative
Call me 416 - 616- 8751

HOMELIFE HIGHER STANDARDS

Buy or Sell Your Home call me 24-7

Cell: 416 856 6900
Kathir Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com

With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987

Digital Prints from 16"x20" to 40"x60"

- Family Portraits
- Children Portraits
- Business Portraits
- Passport & Citizenship Photos
- Classic Weddings
- Arangetram
- Puberty Ceremony

New Location

Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2 (BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality

Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management

Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பு மற்றும் இழையம் தானம் செய்யுங்கள்

உறுப்பு மற்றும் இழையம் தானம் வழங்குபவர் ஆவதற்கு இன்றே பதிவு செய்யுங்கள்:

உறுப்பு மற்றும் இழையம் தானம் வழங்கும் ஒருவர் ஆவதற்கு கணினி வழியாக நீங்கள் பதிவு செய்யலாம்.

இவ்வித தானம் வழங்கும் ஒருவரால் எட்டு உயிர்கள் வரையில் காப்பாற்ற முடியும் என்பதுடன் 75 அளவிலான வேறு உயிர்களுக்கும் உயர்வினை ஊட்டலாம். இதுபற்றி இன்னும் சில உண்மைத் தகவல்கள்...

- ஆரோக்கிய பராமரிப்பு தொழில் நிபுணர்களின் முதலாவது தலையாய கடமை, ஓர் உயிரைக் காப்பாற்றுதல் ஆகும். ஓர் உயிரைக் காப்பாற்ற முடியாது எனும் நிலை ஏற்படும் பொழுது மட்டுமே உறுப்பு மற்றும் இழையத் தானம் ஒரு தெரிவாகக் கருதப்படுகிறது.
- வயது மற்றும் ஆரோக்கியம் எப்படி இருந்தாலும் ஒவ்வொருவரும் உறுப்பு அத்துடன் இழையம் வழங்குபவர் ஆகும் தகைமையைப் பெற்றுள்ளார்.
- பிரதான மதங்கள் யாவும் உறுப்பு மற்றும் இழையத் தானம் வழங்குதலை ஆதரிக்கின்றன அல்லது தனியொருவரின் சொந்தத் தெரிவிற்கு மதிப்பு அளிக்கின்றன.
- உறுப்பு மற்றும் இழையத் தானம் வழங்குதல் மரணச் சடங்கு ஏற்பாடுகளில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.
- உங்களுடைய இத்தானம் வழங்கும் தீர்மானம் உங்கள் குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடன் மட்டுமே அவர்களிடம் வெளியிடப்படும்.
- தானம் வழங்குவதற்கான உங்கள் இணக்கத்தை நீங்கள் எந்த நேரத்திலும் மாற்றுவதற்கு அல்லது திரும்பப் பெறுவதற்கு முடியும்.

'ஆம்' என்று நீங்கள் பதிவு செய்வது ஒரு நல்ல மாற்றத்தை உண்டாக்கும்.

எங்களில் போதுமானவர்கள் தானம் வழங்குபவர்களாகப் பதிவு செய்து இருக்கவில்லை. இக்காரணத்தால், உறுப்பு மாற்றீடு ஒன்றுக்காகக் காத்திருக்கும் நிலையில், ஒன்ராறியோ மாகாணத்தில் மூன்று நாட்களுக்கு ஒரு நபர் மரணம் அடைகின்றார். உண்மையில் 16 வயது மற்றும் அதற்கும் அதிகமான வயதினரான ஒன்ராறியோ வாசிகளில் 25% சதவீத அளவுக்குக் குறைவானவர்களே உறுப்பு மற்றும் இழையம் வழங்குபவராகத் தமது இணக்கத்தைப் பதிவு செய்துள்ளனர்.

பதிவு செய்வது இலகுவானது:

நீங்கள் இவ்வழிகளில் பதிவு செய்ய முடியும்:

- கணினி மூலம் Beadonor.ca என்ற இணையத்தளத்தில் பதிவுசெய்யலாம்.
- நேரடியாகச் சென்று ஏதேனும் ஒரு சேவை ஒன்ராறியோ (Service Ontario) நிலையத்தில் பதிவுசெய்யலாம்.
- வாழ்வுக்கான பரிசு (Gift of Life) இணக்கப் படிவத்தினை தபால் மூலம் அனுப்பிப் பதிவுசெய்யலாம்.

தானம் வழங்குபவருக்கான அட்டையில் நீங்கள் கையொப்பம் இட்டு இருக்கிறீர்கள் என்ற போதிலும் பதிவு செய்யுங்கள்.

கையொப்பம் இடப்பட்ட, தானம் வழங்குபவருக்கான அட்டை (Donor Card), ஆரோக்கியம் மற்றும் நீண்டகாலப் பராமரிப்புக்கான அமைச்சரின் தரவுத்தளத்தில் பதிவு செய்யப்படுவதில்லை. இந்தக் காரணத்தால், தேவைப்படும் நேரத்தில் அது கைவசம் இருக்காமல் போகக்கூடும்.

உயிர்களைக் காப்பாற்றுவதற்கென நீங்கள் எடுக்கும் தீர்மானத்தைத் தெரிவிக்கின்ற, பாதுகாப்பானதும் உறுதி செய்யப்பட்டதுமான ஒரே வழி, உறுப்பு மற்றும் இழையத்தானம் வழங்குபவருக்கான பதிவினைச் செய்தல் ஆகும்.

திரில்லியம் வாழ்வுக்கான பரிசு வலையமைப்பு (Trillium Gift of Life Network) என்பது ஒன்ராறியோ அரசினைச் சேர்ந்த, ஓர் இலாப நோக்கற்ற நிலையமாகும். இது ஒன்ராறியோ மாகாணம் முழுவதும் செயற்படுகிறது.

உறுப்பு மற்றும் இழையத் தானம் மற்றும் உறுப்பு மாற்றீடு பற்றிய திட்டமிடல், ஊக்கமளித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் ஆதார உதவி வழங்கல் ஆகியவற்றுக்கும், சேவைத் திட்டத்தினை முன்னேற்றுவதற்கும் இது பொறுப்பாக உள்ளது. இதனால் மேலும் அதிக உயிர்களைக் காப்பாற்ற முடிகிறது.

பதிவு செய்வதற்கு அல்லது நீங்கள் இது பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு, www.beadonor.ca என்ற இணையத்தளம் செல்லுங்கள் அல்லது தொலைபேசியில் அழையுங்கள்: 1 800 263 2833.

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARE YOU TIRED OF DOING THE SAME JOB AND LOOKING FOR A CAREER CHANGE ?

Beta College இல்

வாரம்தோறும் FOOD HANDLER CERTIFICATE க்கான வகுப்புகள்
ஒரே நாளில் CERTIFICATE வழங்கப்படுகிறது .
தமிழிலும் பரீட்சை எழுதலாம்

CNC / Electrical துறைகளில் வேலைவாய்ப்புக்கான வகுப்புக்கள்

OFFICE / ACCOUNTING வேலைகளுக்கான வகுப்புக்கள்

ELECTRICAL LICENCE PRE EXAM COURCES -309A /442A

RESTAURANT MANAGEMENT COURSES

EI, Maternity எடுத்தவர்கள் $28000 வரை பெற வாய்ப்பு

உங்கள் உறவினர் நண்பர்கள்
கனடாவில் மேல் படிப்பைத் தொடர்வதற்கான வாய்ப்புகள்
(Now Accepting International students)

DIPLOMA COURSES
CAD/CAM TECHNOLOGY
- Autocad / Solidworks/ Inventor/Mastercam/CNC Programming
AUTOMATION TECHNOLOGY
- PLC/HMI/VFD/ Industrial
COMPUTERIZED ACCOUNTING
FOOD SERVICE WORKER
OFFICE ADMINISTRATION
ACCOUNTING AND PAYROLL

Certificate Courses
Video Editing
Sound Editing
Photoshop
QUICK BOOK
SIMPLY ACCOUNTING
MS OFFICE - word /Excel / outlook
COMPUTER PROGRAMMING - C++ / JAVA/ PYTHON/SQL

beta College
of Business & Technology

2347 Kennedy Road, Suite 301, Toronto ON, M1T 3T8, Canada
www.betacollege.ca, info@betacollege.ca
416 449 beta (2382)
(Approved as a private career college under the Private Career College Act 2005)

People don't plan to fail, but they do fail to plan

You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!

நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்

Super Visa Insurance
Disability Income Insurance
Critical illness Insurance
Mortgage Insurance
No medical exam Life Insurance
Permanent Life Insurances
Term Life Insurance
Travel & Visitor Insurance
RRSP Loan / Investment
RESP

As an Independent Insurance Broker,
I will shop around for you and get you the best rate...

Guna Thuraisingham M.A.Sc (Eng.), P.Eng.
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
Tel: 905 230 4986 | guna@gtbrokers.ca
www.gtbrokers.ca

Super Visa Insurance
100% Refund

Industrial Alliance | RBC Royal Bank | Assumption Life | Desjardins | Manulife | Canada Protection Plan | Foresters

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் பிள்ளை உறவும் கற்பதில் பங்கெடுத்தலும்

- த. சிவபாலு -

பெற்றோர் - பிள்ளை உறவுகளை வலுப்படுத்துதலும் பிள்ளைகள் கற்பதில் பங்கெடுத்தலும்:

பெற்றோர்கள் தாங்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கமுடியாது என்ற எண்ணம் உடையவர்களாகக் காணப்படு-கின்றார்கள். ஆசிரியர்கள் சிறப்பாகக் கற்பிப்பார்கள், சாதரணமானவர்களால் கற்பிக்க முடியாது என்ற பயம் பல பெற்றோரிடம் குடிகொண்டிருப்பதனால் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்குப் பின்நிற்கின்றார்கள். அதாவது கற்பிக்கும் தகமை, திறன், தன்மை அனைத்தும் ஆசிரியர்த் தொழிலுக்காகப் பயிற்றப்பட்டவர்களால் தான் முடியும் என்ற எண்ணம் இருப்பது, பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்குப் பின்நிற்பதற்கு ஒரு காரணமாகும். எந்த ஒரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் கல்வி அமைப்பு முறையில் உள்ள எந்தவொரு பாட அலகையும் இழந்துவிடுவதனை அல்லது தவறவிடுவதனை விரும்பமாட்டார்கள். எனவே ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பி அங்கு இடம்பெறும் கல்வியைக் கற்றுக்கொண்டாலே போதும் என்றே கருதுகின்றனர்.

பெற்றோர் உண்மையிலேயே தங்கள் பிள்ளைகளுக்கு வீட்டில் சொல்லிக் கொடுப்பதற்கு, கற்பிப்பதற்கான சான்றிதழ் பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்பதல்ல. அவர்கள் பிள்ளைகள் பாடசாலையால் வந்தபின்னர் வீட்டில் எதனைக் கற்பிக்க வேண்டும் என்பதனை முன்கூட்டியே ஆயத்தம் செய்துகொள்ளுதல் வேண்டும். தன்னிச்சையாக நீங்கள் ஒருபோதும் ஒரு நிபுணராகிவிட முடியாது. எதற்கும் உங்களை நீங்கள் தயார் படுத்திக் கொள்ளுதல் வேண்டும். உங்களை நீங்கள் தயார் படுத்திக் கொண்டுவரும்போது நீங்கள் ஒரு சிறந்த ஆசானாக மாறிவிடுவீர்கள் என்பதற்குப் பல பெற்றோர்கள் உதாரணமாக உள்ளனர். எனக்குத் தெரிந்த பல பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லித்தரவேண்டும் என்பதற்காக தாமாக முயற்சித்து ஆசிரியர்களை அணுகி பிள்ளைகளுக்குத் தாம் எப்படி உதவி செய்யலாம் என்பதனை கேட்டு அறிந்து, அவர்கள் எப்படி வகுப்பறையில் கற்பிக்கின்றார்கள், வீட்டு வேலைக்கு எதனை எதிர்பார்க்கின்றார்கள் என்பதனை அறிந்து அவர்களிடமிருந்து கற்பிப்பதற்கான சில வளங்களைப் பெற்றுக்கொண்டு, தம்மைத் தயார் படுத்திக் கொண்டு முன்னேறியுள்ளார்கள். இன்று கனடாவில் உள்ள கல்வித்திட்டம், கல்வி முறைகள் பற்றி அறிந்து கொள்ளுதல் மிக முக்கியமானது. அதற்குத் தேவையானவற்றைப் பாடசாலைகளிலும் கல்விச் சபையிலும் இலவசமாகவே பெற்றுக் கொள்ளமுடியும். அது மட்டுமன்றி வலையமைப்பிலும் இவற்றை இலகுவாகப் பார்த்துப் பெற்றுக்கொள்ளமுடியும். 3ம் வகுப்பு, 6ம் வகுப்பு, 10 வகுப்புக்களில் இடம்பெறும் மாகாணப் பரீட்சை முறைகளுக்குத் தங்கள் பிள்ளைகளைத் தயார் செய்வதற்காக பெற்றோர் முழுமனதோடு ஈடுபட்டு பிள்ளைகளுக்குக் கற்றுத்தரும் பணி பயன் தந்துள்ளது. அதுமட்டுமன்றி அவர்கள் பின்னர் பாடம் சொல்லித்தரும் tutor ஆக இருப்பதனை அறிவேன். பெற்றோர் மனம்வைத்து ஈடுபாடு கொண்டால் அவர்களால் பிள்ளைகளுக்கு நல்ல பெற்றோராக மட்டுமன்றி ஆசான்களாகவும் இருக்கமுடியும். Angela Mac Arthur, “The trick is to be ready to be flexible and creative. The fact is, parents can teach - and they might actually prove to be the best teachers for their children!” எனக்குறிப்பிடுவது கருத்திற்கொள்ளத் தக்கது.

வீட்டில் கற்கும் பிள்ளைகள் எந்தவித கெடுபிடியும் அற்றவர்களாக இயல்பு நிலையில் இருந்து கற்கின்ற ஒரு அகப் புறச்சூழலை வீட்டுக் கல்வி ஏற்படுத்துகின்றது. அவர்கள் அநாயாசகமாக இருந்து சுதந்திரமானவர்களாக இடையூறுகள் அற்ற நிலையில் தங்கள் எண்ணத்தை ஒரு நிலைப்படுத்திக் கற்பதற்கு மிக வாய்ப்பாக அமைகின்றது. பிள்ளைகளுக்கு நேரடியாக விடையை மட்டும் சொல்லிக்கொடுக்காது அவர்களோடு சேர்ந்து விடைகளைக் கண்டறிவதிலும் விடுவிப்பதிலும் செயற்படவேண்டும். விடையைச் சொல்லிக்கொடுக்காமல் அவர்களே கண்டுபிடிக்கும் வழியைக் காட்டி உதவலாம். அது அவர்களை உற்சாகப்படுத்துவதோடு தாமே விடையைக் கண்டுபிடித்தோம் என்ற பெருமிதத்தையும் தரத்தக்கது. இந்தத் தூண்டல், துலங்கல் செயற்பாடு கற்றல் கற்பித்தலில் மிக முக்கியமானது. இந்தச் செயற்பாடுகள் பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டத்தக்கது.

கற்பதற்கான உபகரணங்கள் பல உள்ளன. உங்கள் பிள்ளையின் ஆசிரியரோடு தொடர்பு கொண்டு எது சிறந்தது என்பதனை அறிந்து அதனை வாங்கிப் பயன்படுத்துதல் பொருத்தமானது. வழமையான பாரம்பரியக் கற்பித்தல் முறை தவறானது என நீங்கள் முன்கூட்டியே தீர்மானித்திருந்தால் அதனை நீங்கள் பயன்படுத்துவது உங்கள் பிள்ளைக்குச் சரியானதாக அமையாது. நீங்கள் ஒரு பாடத்தை அல்லது ஒரு பாடத்தின் பகுதியைக் கற்பிக்க முற்படும்போது அது உங்களுக்குப் பழக்கமில்லாத அல்லது தெரியாததாக இருந்தால் நீங்கள் உங்கள் பிள்ளைக்கு ஒரு தனிப்பட்ட வகுப்பை ஒழுங்குபடுத்தலாம். அது பாடசாலையிலோ அன்றி ஒரு சமூக நிலையமொன்றிலோ அல்லது தனிப்பட்டவர்களிடமோ ஆக இருக்கலாம். உங்கள் பிள்ளையை சமூகம் தொடர்பான விரிவுரைகள், கருத்துரைகள் நிகழும் இடங்களில் சென்று இருக்க வாய்பளியுங்கள். பேச்சு அல்லது சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்ள வையுங்கள், விடுமுறைகாலங்களில் அல்லது வார இறுதிகளில் பங்கு கொள்ளக் கூடிய விசேட அனுபவம், அறிவு, ஆற்றல் பெற்றவர்களால் நடத்தப்படும் சுற்றுலாக்கள் போன்றவற்றில் கலந்து கொள்ள வையுங்கள். உங்களுக்குத் தெரிந்த அனுபவம், அறிவு, ஆற்றல் வாய்ந்தவர்களை வீட்டுக்கு அழைத்து அவர்களோடு உங்கள் பிள்ளைகளை உறவாட, கலந்துரையாட வையுங்கள். வீட்டில் வகுப்புக்களை வைத்திருக்கும் ஏனையவர்களுக்கும் இவைபற்றி அறியத் தாருங்கள், அவர்களோடு கலந்துரையாடி அவர்களது அனுபவத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் குறைபாடுகள், செயற்பாடுகள் பற்றிப் பிறரோடு கலந்துரையாடப் பின்நிற்கின்றனர். ஆனால் பிள்ளைகளை ஏனைய பிள்ளைகளோடு ஒப்பிட்டு நோக்காதீர்கள். பிள்ளைகளின் திறன்கள் தனித்துவமானவை. ஒரு பிள்ளைக்கு உள்ள திறன் மற்றைய பிள்ளைக்கு வேறு ஒரு துறையில் இருக்கலாம். எனவே அவர்களின் திறன்கள், நாட்டங்கள், விருப்புக்களை அறிந்த அந்த வழிகளில் முன்னேற வைத்தல் வேண்டும். சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வைத்தியராக அல்லது பொறியியலாளராக வர வேண்டும் என்றே விரும்புகின்றார்கள். ஆனால் பிள்ளைகளின் திறன்களை அறியாது அவர்களை அந்தத் துறைகளில் வலுக்கட்டாயமாக ஈடுபட வைத்தால் அவர்கள் ஈற்றில் இரண்டுங் கெண்டான் நிலைக்குத் தள்ளப்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அண்மைக்கால ஆய்வுகள் வயது வந்தவர்கள் பிள்ளைகளின் முறைசார் கல்வியல் பங்களிப்புச் செய்வதனால் பாடசாலைகளில் நன்கு கற்றுக்கொள்ள முடிகின்றது. பெற்றோரின் பங்களிப்பு அல்லது தலையீடு கல்வியில் பின்வரும் பயன்களைப் பெற்றுத்தந்துள்ளன என்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

- உயர்ந்த தரத்தையும் புள்ளிகளையும் பெறுதல்
- நீண்டகால கல்விப் பெறுபேற்று அடைவு
- நல்லியல் சார்பான எண்ணப்பாங்கு மற்றும் நடத்தை
- மிகவும் வெற்றிகரமான செயல்களும் திட்டங்களும்
- மிகவும் உற்சாகத்தோடு பாடசாலையில் செயற்படுதல்

பிள்ளைகளை ஏனைய பிள்ளைகளோடு ஒப்பிட்டு நோக்காதீர்கள். பிள்ளைகளின் திறன்கள் தனித்துவமானவை. ஒரு பிள்ளைக்கு உள்ள திறன் மற்றைய பிள்ளைக்கு வேறு ஒரு துறையில் இருக்கலாம்.

எல்லாப் பெற்றோரும் தங்கள் பிள்ளை கல்வியில் மிகவும் கெட்டித்தனமுள்ளவராக இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இதனால் பெரும்பாலான பெற்றோர் தமது வழமையான முறைசார் கல்வியினை அவர்களுக்குக் கற்றுத் தருகின்றார்கள். சிலபெற்றோருக்கு எப்படி எங்கே ஆரம்பிப்பது என்பது தெரியாத வர்களாகவும் இருக்கின்றார்கள். பாடசாலையோடு எவ்விதம் ஒரு நல்லமுறையான தொடர்பினை ஏற்படுத்துவது என்பதும் தெரியாதவர்களாக இருக்கின்றார்கள்.

வீட்டில் கற்பிக்க விரும்பும் பெற்றோர் முக்கியமானவை எவை என்பதனை அறிந்து அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்தல் வேண்டும். உங்கள் பிள்ளைகளுக்கு எதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பதனை முதலில் சொல்லிக் கொடுத்தல் வேண்டும். வீட்டுப்பாடங்களில் எவற்றை முதலில் செய்ய வேண்டும். பிள்ளைகளோடு எந்தவித வாக்குவாதமும் இன்றி முன்னுரிமைப் படுத்துவதற்கு பல முறைகள் உண்டு. எனவே உங்கள் பிள்ளைகளுக்கு மனமுறிவு, வெறுப்புச், சோர்வு, உணர்வுகளைப் பாதிக்காத வண்ணம் வீட்டுப்பாடத்தைக் கற்பதற்கான முன்னுரிமையை அமைத்துக் கொள்ளுதல்வேண்டும்.

எவ்வளவு நேரம் ஒரு நாளுக்கு உங்கள் பிள்ளை கற்கவேண்டும் என்பதனை, பிள்ளையின் வயது வழமையான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஏற்ப அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். சிறு பிள்ளைகளாயின் இரவு உணவிற்குப் பின்னர் அவர்கள் சோர்வடைந்துவிடுவார்கள். தினமும், நேரம் சரியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

வீட்டுவேலை முதலில் இடம்பெற வேண்டும். வீட்டுவேலை செய்யாது தொலைக் காட்சி பார்க்க அல்லது கணினியில் விளையாட அனுமதிக்கக்கூடாது. தொலைபேசி உரையாடல், நண்பர்களிடம் செல்லுதல், அவர்களை வரவழைத்தல் என்பன வற்றை பிள்ளைகள் வீட்டுவேலை செய்யும் நேரங்களில் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

பேனா, பென்சில், கணினி, எழுதும்தாள், அகராதி போன்ற வீட்டுப்பாடத்திற்குத் தேவையான முக்கியமான உபகரணங்களை வைத்துக்கொள்ளுதல் வேண்டும். பிள்ளைகள் அறிக்கைகள், செயல்திட்டங்கள், ஒப்படைகள் போன்றவற்றைச் செய்வதற்குக் கணினியை உபயோகிக்க அனு-மதிக்கலாம். எனவே வீட்டுப்பாடங்களை முடிக்காமல் இருப்பதற்கான சாக்குப்போக்குக்களைக் கூறாதவண்ணம் உபகரணங்களை வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

அவர்கள் நாளாந்த வேலைகளைக் குறித்துவைத்துக் கொள்வதற்கான ஒரு ஒப்படை புத்தகத்தை அவர்கள் வைத்துக் கொள்ளப் பழக்கிக்கொள்ள வேண்டும். பாடசாலையிலும் வீட்டிலும் செய்ய வேண்டியன பற்றிய குறிப்புக்களை அதில் இடம்பெற வைப்பதால் அவர்கள் எப்போது தங்கள் வேலைகளை முடிக்க வேண்டும் என்பதனைத் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். நினைவூட்டுவதாகவும் இருக்கும்.

குறிப்பு எடுக்கும் திறனையும் வளர்க்க வேண்டும். அவர்கள் மிகவும் சிறப்பாக குறிப்பு எடுக்கச் சொல்லிக் கொடுக்க வேண்டும். குறிப்புக்கள் அவர்கள் இலகுவாகக் கற்க வழிவகுப்பன என்பதனை அவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். அவர்களை திட்டமிட்டுச் செயற்பட வைத்-தலும் வேண்டும்.

நாளாந்தம் மிகச் சீரியதாக மீளப்பார்க்கும், அல்லது திரும்பவும் அலசிப்பார்க்கும் திறனையும் வளர்ப்பதற்கு ஒழுங்கமைப்பு முக்கியமானது.

பேற்றோரின் அணுகுமுறை பிள்ளைகளை-களுக்கு பெற்றோர் தாம் கல்வியில் அக்கறை உள்ளவர்கள் என்பதனைக் காட்ட...

- தாமாகவே வகுப்புக்களுக்குச் செல்லுதல்
- வாசிப்பதில் மிகவும் விருப்பம் உள்ளதைக் காட்டுதல்
- கற்றல் குழுவில் பங்கெடுத்தல்
- கல்வி தொடர்பான பிரச்சினைகள்பற்றிக் உரையாடுதல்
- பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் கருத்தூன்றுதல்
- பெற்றார் சங்கம், பெற்றார் ஆசிரியர் அமைப்பு அல்லது நூல்நிலையம் என்-பனவற்றிற்கு நேரம் ஒதுக்குதல்.

பிள்ளைகளை ஓய்வு நேரங்களில் மிருகக் காட்சிச் சாலை, நுண்கலைக்கூடம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், விஞ்ஞான அருங்காட்சியகங்கள், இயற்கைப் பூங்கா, நீர்வீழ்ச்சிபோன்ற புவியியல் தொடர்பான இயற்கைக்காட்சிகள், நூல் நிலையங்கள் போன்றவற்றிற்கு அழைத்துச் செல்லுதல் அவர்களின் கல்வியறிவை விருத்தி செய்வதாகவும் பெற்றோர் பிள்ளைகளின் தொடர்பை மிக இறுக்கமாக வைத்திருப்பதாகவும் அமையும்.

பிள்ளைகளின் அறிவு விருத்திக்குப் பெற்றோரின் பங்களிப்பு மிகமிக முக்கியமான-தாகும். பிள்ளைகளோடு மிக நெருக்கமாகப் பழகிவரும் பெற்றோரின் பிள்ளைகள் நெறிபிறழாது நல்லவர்களாவும் கல்வியில் முன்னேற்றம் கொண்டவர்களாகவும் காணப்படுவர்.



sivapalu@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ.சி. நடராஜா ஞாபகார்த்த நூலக நிர்மாண நிதிக்காக

குரும்பசிட்டி நலன்புரி சபை - கனடா

வழங்கும்

அன்பளிப்பு $10

இடம்:	பெரியசிவன் ஆலய கலாச்சார மண்டபம் 1148, Bellamy Road (Bellamy & Progress)
காலம்:	22-06-2019, சனிக்கிழமை, மாலை 5.00 மணி

மாலையில் மணம் கமழும் மலர்கள்

இசை

★ கலைக்கோவில் நுண்கலைக் கல்லூரி அதிபர் மிருதங்க கலா வித்தகர் குகேந்திரன் கனகேந்திரம் அவர்களின் மாணவர்கள் வழங்கும் "கலை அமுதம் வாத்திய இசை"

நடனங்கள்

★ **வரவேற்பு நடனம்**
சம்ஸ்கிருதி நுண்கலைக் கல்லூரி
நடன ஆசிரியை சுதர்சினி திலீபனின் மணவர்கள்

★ **பரதநாட்டியம்**
கலைக்கோவில் நுண்கலைக்கல்லூரி அதிபர்
நாட்டியக்கலா குலநிதி வனிதா குகேந்திரனின் மாணவி அகினா மதுரங்கன்

★ **மேற்கத்திய நடனம்**
அஞ்சனா ஐங்கரன், ஆஷ்னா சுந்தரேஸ்வரன்

நாடகங்கள்

★ **சரித்திர நாடகம்**
ஊர்மிளா செல்வநாயகம், நு.ராஜேந்திரம் நெறியாள்கையில்
"இராஜ இராஜ சோழன்"
பிரதியாக்கம்: இ.ருக்மணிகாந்தன்

★ **சமூக நாடகம்**
ச. ரமணீகரன் நெறியாள்கையில்
"வேர்களைத்தேடி"
பிரதியாக்கம்: பொன்னையா விவேகானந்தன்

★ **நாட்டிய நாடகம்**
கலை மன்றம் இசை நடன யோகாசனக் கல்லூரி
அதிபர் நிறைஞ்சனா சந்துருவின் மாணவர்கள் வழங்கும்
"பாமா விஜயம்"

★ **நகைச்சுவை நாடகம்**
க. சிவநாசன் நெறியாள்கையில்
"அசட்டு மாப்பிள்ளை"
பிரதியாக்கம்: வரணியூரான் எஸ்.எஸ்.கணேசபிள்ளை

தொடர்புகளுக்கு:

416 333 3041 | 647 879 9490

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளற்ற கோடை விடுமுறை

- ஜீவா திசைராஜா -

பாடசாலைகளில் கோடை விடுமுறை ஆரம்பமாகிவிட்டது. பல பெற்றோர், செப்டம்பர் மாதம் எப்போது வரும் என நாட்களை எண்ணிக்கொண்டிருப்பார்கள். பிள்ளைகளை எவ்வாறு சந்தோஷமாகவும் பிரச்சினைகள் இல்லாதும் வைத்திருப்பது? உபயோகமாகவும் சிக்கனமாகவும் எவ்வாறு கழிப்பது என்பதை சற்று சிந்திப்பதற்கு இக் கட்டுரை உபயோகமாகும் என்ற எண்ணத்தில் இது எழுதப்படுகின்றது.

பொதுவாக, தமது பிள்ளைகளின் நடத்தை சார்ந்த அல்லது உணர்வு சார்ந்த பிரச்சனைகளை அவதானிக்கும் பெற்றோர் அவர்களை சரியான பாதைக்கு கொண்டு வருவதற்கு இக் கோடை விடுமுறைக் காலம் உதவும். எனினும் இத்தகைய பிரச்சனைகளைப் பற்றிக் கதைப்பதற்கு நீங்கள் கோடை விடுமுறை வரை காத்திருக்கத் தேவையில்லை. கோடை விடுமுறை விடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே நீங்கள் பிள்ளையுடன் கதைத்து விடுமுறைக்கான திட்டங்களை மேற்கொள்ளலாம். பாசறைக்கான இடங்களைத் திட்டமிடல், நேர அட்டவணைகளை அமைத்தல் என்பன விடுமுறைக்கு முன்னரே மேற்கொள்ளப்பட வேண்டும்.

உங்கள் வளரிளம் பருவ பிள்ளை (Teenager) சோபாவில் அமர்ந்திருந்து சிப்ஸ் சாப்பிட்டபடி, தொடாந்து வீடியோ விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்தால் என்னவாகும் என்று எண்ணிப் பாருங்கள். வளரிளம் பருவத்தினருக்கு கோடை காலம் வருடத்தின் உச்சகட்டமான உல்லாசமான பருவமாகும். எந்த வித பொறுப்புகளுமில்லாது, மத்தியானம் வரை தூங்கி எழுந்து நாள் முழுக்க சாப்பிட்டபடி சுதந்திரத்தை அனுபவிக்கும் காலமாகும். அநேக பெற்றோர்கள் கோடை முழுவதும் முழுநேரமாக வேலை செய்வர். சில பெற்றோர் தமது பிள்ளைகளை உறவினரிடம் விட்டு விட்டு விடுமுறையில் செல்வதுமுண்டு. சில வளரிளம் பருவத்தினர் பெற்றோர் வெளியில் செல்லும் போது தனியாக விடப்படுகின்றனர். பாடசாலை காலத்தில் காணப்பட்ட ஒழுங்குகள், கால அட்டவணை என்பன எதுவும் இல்லாது முழுச் சுதந்திரம் இந்த கோடை விடுமுறையின் போது மாணவர்களுக்கு கிடைக்கின்றது.

பெற்றோரைப் பொறுத்தவரையில் கோடை விடுமுறை ஆரம்பிக்கும் போதே செப்டம்பரில் பாடசாலை எப்போது ஆரம்பிக்கும் என நாட்களை எண்ண ஆரம்பித்து விடுவார்கள். பாடசாலை விடுமுறை காலம் அண்மிக்கும் போது பெற்றோர் 3 நீண்ட மாதங்களுக்கு தமது பிள்ளைகளை அவசரமாக ஆயத்தம் செய்வர். ஒரு சில கிழமைகள் கட்டாயமாக குடும்ப விடுமுறையில் கழிக்கப்பட வேண்டியது தான். சில வளரிளம் பருவத்தினர் கோடை பாடசாலைக்குச் செல்வார்கள். வேறு சிலர் புதிய பொழுதுபோக்கை ஆரம்பிப்பார்கள். எப்படி இருந்த போதிலும் ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு நாளும் சில மணித்தியாலங்கள் வீட்டில் எதுவும் செய்யாது இருக்க வழி வகுத்து விடுகின்றது. எவ்வளவு நாட்களுக்கு பிள்ளைகளை பிரச்சனைகளுக்குள் சிக்காது ஆர்வமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதுடன் வெளியேயும் கொண்டு செல்ல முடியும்?

ஒழுங்கமைப்பும் வளர்ந்தவர்களின் மேற்பார்வையும் கோடை விடுமுறையில் குறைந்து விடும்போது, தவறான நண்பர்கள், போதை வஸ்துக்களையும் மதுபானத்தையும் பரீட்சார்த்தமாக அருந்திப் பார்த்தல் அல்லது ஏனைய தவறுகளில் பிள்ளைகள் ஈடுபட வாய்ப்பைக் கொடுத்து விடுகின்றது. உங்கள் பிள்ளை பாடசாலைக் காலத்தின் போது பிரச்சனைகளில் ஈடுபவராக இருந்தால் கோடை விடுமுறையின் போது அதிக பிரச்சனைகளை நீங்கள் எதிர் நோக்க வேண்டியிருக்கும். 'Idle hands are the devil's tools' (சும்மா இருக்கும் கைகள் சாத்தானின் கருவிகள்) என்று ஒரு பழமொழியுண்டு. வளரிளம் பருவத்தினர் குறிப்பாக கோடை காலத்தில் துணிகரச் செயல்களில் ஈடுபட விரும்புவதுடன் ஆர்வமூட்டும் அபாயமான செயல்களிலும் ஈடுபட விரும்புவார்கள். உங்கள் ஆதரவோ அல்லது வழிகாட்டலோ இல்லாது கூட இத்தகைய செயல்களில் ஈடுபட முயல்வார்கள்.

கலிபோர்ணியாவின் Fight Crime எனும் இலாப நோக்கற்ற நிறுவனத்தின் வாக்கெடுப்பின்படி மேற்பார்வையற்ற (unsupervised) பிள்ளைகள் குற்றச் செயல்கள் புரியவும், குற்றங்களால் பாதிக்கப்படவும், மதுபானம், போதைவஸ்துப் பாவனைகளில் ஈடுபடவும் தவறான நண்பர்களுடன் குழுக்களாக (Gang) இயங்கவும் அதிக வாய்ப்புக்கள் உள்ளன என கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் அறிக்கை, இளைஞர்கள் கோடை விடுமுறையின் போது குற்றங்களைச் செய்ய ஆரம்பிக்கும் காலம் மதியத்தில் இருந்து ஆரம்பமாகின்றது எனவும், இதுவே பாடசாலைக் காலத்தின் போது பிற்பகல் 3 மணிக்குப் பின்னராக காணப்படுகின்றது எனவும் கூறுகின்றது. மேலும் வளரிளம் பருவத்தினர் கோடை விடுமுறையின் போது போதை வஸ்து தொடர்பான குற்றங்களை பின்னேரத்தில் ஆரம்பிக்கின்றனர் எனவும் இதற்கு இவர்கள் அடுத்த நாள் காலையில் பாடசாலைக்கு போவதற்காக அதிகாலையில் எழும் தேவை இராதது காரணம் எனவும் கூறப்பட்டுள்ளது. இதற்கு பாடசாலை காலத்தை விட கோடை காலத்தின் போது அதிக ஒழுங்கமைப்பும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் தேவை என்பதை எடுத்துக் காட்டுகின்றது. வேலை செய்யும் பெற்றோருக்கு மத்தியானத்திலிருந்து பின்னேரத்தின் இறுதி வரை ஒவ்வொரு நாளும் பிள்ளைகளோடு இருப்பது சாத்தியமற்றதாகின்றது.

தேசிய போதைவஸ்து கட்டுப்பாட்டு கொள்கையின் வெள்ளை மாளிகை அலுவலகத்தின் அறிக்கையின் படி (White House Office of National Drug Control Policy) அதிகமான அமெரிக்க வளரிளம் பருவத்தினர் வருடத்தின் எந்தவொரு காலத்தையும் விட கோடை காலத்தின் போதே மரிஹுவானாவை முதன் முறையாக பரீட்சித்துப் பார்க்கிறார்கள். அத்துடன் வயது குறைந்தவர்கள் மதுபானம் அருந்துதல் சிகரெட் புகைத்தல் என்பவற்றில் ஈடுபட ஆரம்பிப்பதும் கோடை மாதங்களான ஜூன், ஜூலை மாதங்களிலேயே ஆரம்பிக்கின்றது.

பொதுக் கொள்கை ஆராய்ச்சிக்கான நிறுவனத்தினால் (Public Policy Research) மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி நீண்ட பாடசாலை விடுமுறைகள் "பிள்ளைகளுக்கு கேடாகும்" எனவும் பிள்ளைகள் 6 கிழமைகட்கு மேற்பார்வையற்று விடப்படாது இருப்பதைத் தடுப்பதற்கு பாடசாலை கோடை விடுமுறைகள் குறைக்கப்படவேண்டும் என கூறப்படுகின்றது.

பாடசாலையின் ஒரு வருடமானது 5 தவணைகளாக பிரிக்கப்பட வேண்டுமெனவும் இதன் மூலம் இளைஞர்களின் குற்றச் செயல்கள் குறைக்கப்படவும் கல்வித் தரம் மேம்படவும் வாய்ப்பு ஏற்படும் என நம்பப்படுகின்றது.

தற்போதைய பாடசாலை வருடமானது, கோடை காலத்தில் வயல்களில் வேலை செய்வதற்கான ஆட்களின் தேவையைப் பூர்த்தி செய்யுமுகமாகவே ஏற்பட்டது. இது பிள்ளைகட்கு எந்த வித நன்மையையும் கொடுப்பதாக அமையாது.

இந்த அறிக்கை பின்லாந்திலும் கனடாவிலும் பாடசாலைக் கல்வி தொடர்பான ஆய்வுகள் பற்றியதாக அமைந்துள்ளது. இந்த அறிக்கையின்படி, 'சில இளைஞர் குழுக்கள் குறிப்பாக பாதகமான பின்னணிகளைக் கொண்டவர்கள் கோடை விடுமுறையின்போது முன்னெப்போதும் இல்லாதவாறு அதிக நேரத்தை மேற்பார்வையற்று செலவிடுகின்றனர். கோடை விடுமுறை காலமே இளைஞர் குற்றச் செயல்கள் அதிகரிக்கும் காலமாக உள்ளது'.

'நீண்ட கோடை விடுமுறையானது பிள்ளைகளின் கல்வியில் ஓர் பின்னடைவை ஏற்படுத்தும். குறிப்பாக பொருளாதார - சமூக நிலையில் தாழ் நிலையில் உள்ள குடும்பங்களில் இந் நிலை அதிகமாக உள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது. சமமற்ற, காலநீட்சியுள்ள பாடசாலைத் தவணைகள் கல்விச் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு பாடசாலைகட்கு மிகவும் கடினமாக இருப்பதுடன் நீண்ட இலையுதிர்கால (Autumn) தவணையானது மாணவர்களுக்கு களைப்பை ஏற்படுத்துவதாக அமைகின்றது" என இந்த அறிக்கை கூறுகின்றது.

இந்த அறிக்கையின் எழுத்தாளர்களில் ஒருவரான சோனியா சோதா, எட்டுக் கிழமையுள்ள 5 தவணைகள் அதாவது கிறிஸ்மஸ் இற்கு முன்பாக 2 தவணைகளும் கிறிஸ்மஸ் இற்குப் பின்பாக 3 தவணைகளுமாக ஒவ்வொரு தவணைகட்கும் இடையில் 2 கிழமை இடைவேளையுடன் குறுகிய 4 கிழமை கோடை விடுமுறையுடன் பாடசாலை தவணைகள் பிரிக்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றார்.
ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் கோடை கற்றலுக்கான தேசிய மையத்தின் படி (National Center for summer Learning) அநேகமான மாணவர்கள் தமது கோடை விடுமுறையின்போது கணிதபாட கணக்கீட்டு திறன்களில் பின்னடைவை அடைவதாக கூறப்படுகின்றது. இதன் காரணமாக ஆசிரியர்கள் அடுத்த வருட ஆரம்பத்தின்போது மீண்டும் பாடங்களை மீட்டல் செய்வதில் அதிக நேரத்தைச் செலவிட வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

> *செப்டம்பர் வரை*
> *நாட்களை எண்ணிக் கொண்டிராது*
> *பிள்ளைக்கு உபயோகமான வழிவகைகளை*
> *சிந்தித்து செயலாற்றுங்கள்.*
> *வீணாக்கப்பட்ட காலம்*
> *வீணாக்கப்பட்ட சந்தர்ப்பத்தையே குறிக்கும்.* ”

பெற்றோர் சரியான முன்னெச்சரிக்கைகளையும் திட்டமிடலையும் எடுப்பதன் மூலம் வளரிளம் பருவத்தினருக்கு கோடை விடுமுறையை ஓர் நன்மை பயக்கக் கூடியதும் நினைவில் வைக்கக் கூடியதுமான அனுபவமாக ஏற்படுத்தலாம்.

தற்போது நடைபெறும் பொருளாதார மந்தம் எல்லா மக்களையும் பாதிப்பதால் கோடை விடுமுறையில் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு செலவு கூடிய இடங்களுக்குச் செல்லுதல் சாத்தியமற்றதாக உள்ளது. எல்லாப் பிள்ளைகளும் இப் பொருளாதார கஷ்டங்களைப் புரிந்து கொள்பவர்களாக இருப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. இப் பொருளாதாரக் கஷ்டங்களைப் புரிந்து கொள்ளாத பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையே வாக்குவாதங்கள் ஏற்படத்தான் செய்கின்றது.

கல்லூரி மாணவர்களைப் பொறுத்த வரையில் இந்நாட்களில் செலவு குறைவான பிரயாணங்களைக் கண்டறிவது மிகவும் சவாலானதாகும். உயர்ந்து நிற்கும் பெற்றோல் விலைகளினால் மோட்டார் வாகனம், ஆகாய விமானம் ஆகியவற்றில் பிரயாணம் செய்வது முன்னெப்போதுமில்லாதவாறு செலவு கூடியதாகவுள்ளது. முக்கியமாக கோடை காலத்தில் இதன் விலை அதிகமாக உள்ளதுடன், கோடையானது மிகவும் சுறுசுறுப்பான பிரயாண காலமாக உள்ளது.

அநேகமான பெற்றோர் தம்மால் செலவுகளைப் பொறுப்பேற்க முடியாத அளவிற்கு அதிகமாக இருப்பதன் காரணமாக இத்தகைய கோடை விடுமுறை நிகழ்ச்சித் திட்டங்களைப் பற்றி அறிய முயற்சி செய்தும் பார்ப்பதில்லை. ஆனால் அவை பிள்ளைகளின் மனதையும், சமூக ஆற்றல்களையும் உடலையும் ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்க வைக்க உதவுகின்றன என்பதை மறந்து விட வேண்டாம். சில நிறுவனங்கள் இலவசமான நிகழ்ச்சித்திட்டங்கள், செலவு குறைவான பொழுதுபோக்குகள் பற்றி அறியத் தருகின்றன. சிறுவர் உதவி சமூகம் (Children's Aid Society), தென்னாசிய குடும்ப சேவைகள் (South Asian Family Services) போன்ற சமூக நிறுவனங்களில் இத்தகைய தகவல்-களைப் பெற முடியும்.

கோடை பாசறைகள் (Summer camps) செலவுடையதாக இருந்த போதிலும் இதன் பயன்பாடுகள் பெறுமதி மிக்கவையாகும். அநேகமாக வளரிளம் பருவத்தினர் தமது நண்பர்களுடன் சுற்றித் திரிவதை விட கோடை விடுமுறையின் போது எதனையும் அதிகமாக விரும்புவதில்லை. எனினும் பாடசாலைக் காலத்தின் போது படிப்பில் கவனத்தைச்

தொடர்தல் 40ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THANA INSURANCE INC

உங்கள் பிள்ளைகளின் பிரகாசமான எதிர்காலத்திற்கு
இன்றே Thana Insurance Inc ல் முதலீடு செய்யுங்கள்.

உங்கள் குழந்தைகளின் எதிர்காலக் கல்விக்காக கனடிய அரசு இனாமாக வழங்கும் மானியத் தொகைகளை பெற்றிடுங்கள்

கனடிய அரசு முதலீட்டு தொகைக்கு 20 - 40% மானியமாகவும் ஊக்குவிப்பு தொகையாக ஆரம்பத்தில் 500 கனடியன் டொலர்களும் வருடாந்தம் 100 கனடியன் டொலர்களும் வழங்குகிறது.

இவற்றுடன் மேலதிகமாக எமது காப்புறுதி நிறுவனம் மட்டுமே 15 வீதத்தை வழங்குகிறது.
இந்த மானியங்களை 25 டொலர் முதலீட்டுடனேயே பெற ஆரம்பிக்கலாம்
உங்கள் பிள்ளை புலமைப்பரிசில் பெற்றாலோ மேற்படிப்பைத் தொடரா விட்டாலோ முதலீட்டுப் பணம் தாயிடம் கொடுக்கப்படும்.
திட்டம் முடிவடையும் போது உங்கள் முதலீட்டுக்கு 100 வீதம் உத்தரவாதம்.

Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416.728.5772
office : 416.519.3896
80 Nashdene Road #D218
Toronto ON M1V 5E4

THANA INSURANCE Inc.

தொல்காப்பிய மன்றம் - கனடா

Association for Tolkappiyam - Canada

தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

அறிவித்தலும் அழைப்பும்:

பரிசளிப்பு விழாவும் ஆண்டு விழாவும்: 15-06-2019 (சனிக்கிழமை-4.00-10.00 p.m)
தலைமை விருந்தினர்: மருத்துவக் கலாநிதி இ. லம்போதரன் அவர்கள்

Place: Middlefield Collegiate Institute,
525, Highlen Ave. Markham. (Middlefield & Highglen)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்!
தொல்காப்பிய மன்றம் - கனடா

தொலைபேசி: 647–706–6124 / 647 -850 -0152 / 416-270-4303

www.tolkappiyam.cawww.tolkappiyam.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளற்ற...

38ம் பக்கத் தொடர்ச்சி...

செலுத்தாது அதிகாரம் மிகுந்தவர்களை மதிக்காது சட்டத்திற்கு முரணாக எந்நேரமும் பிரச்சனைகளில் ஈடுபட்டு தவறான நண்பர்களுடன் திரிபவர்களுக்கு கோடை பாசறைகள், ஒரு அவசியம் தேவைப்படும், மாறுபாடான அனுபவத்தைக் கொடுக்கும். பிரச்சனைப்படும் வளரிளம் பருவத்தினர் பாசறையின்போது, குடும்பத்தில் ஏற்படும் முரண்பாடுகளை அணுகும் வழிவகைகளையும் திறன்களையும் கற்கும் அதே வேளை இது முழுக் குடும்பத்திற்குமே ஒரு ஆறுதலான இடைவேளையைக் கொடுப்பதாக அமையும்.

பாசறையின்போது, புதிய திறன்களைக் கற்றுக் கொள்ளுதல், பரிச்சயமற்ற இடங்களை கண்டறிதல், புதிய மக்களைச் சந்தித்தல், கால்நடையாக இயற்கைப் பிரதேசங்களில் சுற்றித் திரிதல், சவாலான குழு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பன வளரிளம் பருவத்தினருக்கு ஆக்கபூர்வமாக நேரத்தைச் செலவிட சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. தொலைக்காட்சி, கணனிகள், வீடியோ விளையாட்டுக்கள் போன்ற வீட்டின் ஒரே மாதிரியான சௌகரியங்களில் இருந்து விடுபட்டு வித்தியாசமான பாசறை அனுபவத்தைப் பெறும் போது வளரிளம் பருவத்தினர் தம்மையும் மற்றவர்களையும் ஆழமாக அறிய ஆரம்பிக்கின்றனர். இது அவர்களுக்கு தன்னம்பிக்கையையும் பிரகாசமான எதிர்காலத்தையும் கொடுக்கின்றது.

கோடை பாசறைகள் பொதுவாக $100 இருந்து அதிகரித்துச் செல்வதாக அமையும். இது செலவு கூடியதாக இருந்தால் நம்பிக்கைக்குரிய நண்பர்களின் வீட்டிலோ அல்லது விருப்பத்திற்குரிய உறவினர்களின் வீட்டிலோ அவர்கள் விரும்பும் பட்சத்தில் ஒரு சில நாட்களை செலவிட அனுமதியுங்கள்.

உங்கள் வளரிளம் பருவ பிள்ளைக்கு இத்தகைய கோடை பாசறைகள் ஒத்துக் கொள்ளாவிடில், பிள்ளையை தன்னார்வ பணிகளில் (Volunteer work) ஈடுபடுத்துவதைக் குறித்து சிந்தியுங்கள். மிருகங்களின் புகலிடங்கள் (Animal shelters), ஆலயங்கள், வீடற்றவர்களின் புகலிடங்கள், பராமரிப்பு இல்லங்கள் (Nursing homes) போன்றவற்றில் ஈடுபடுத்தும் போது அவர்களது நேரம் பிரயோசனமாக செலவிடப்படுவதுடன் அவர்களுக்கென ஒரு நோக்கம், தன்னம்பிக்கை, தனிப்பட்ட பொறுப்புணர்வு என்பன ஏற்படவும் வழிவகுக்கின்றது. தன்னார்வ பணிகளில் ஈடுபடும்போது தன்னலமின்றி பணியாற்றுவதை அவர்களுக்கு கற்பிக்கும் அதே வேளை கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கும் போதும் அவர்களது சுயவிபரக் கோவைக்கும் (Resume) இது உதவியாக இருக்கும்.

வளரிளம் பருவத்தினரை சுறுசுறுப்பாக வைத்திருப்பதற்கான இன்னொரு நடவடிக்கை பகுதி-நேர வேலையாகும். அநேக பெற்றோர் தாம் வேலை செய்யும் இடங்களிலேயே சிறிய வேலைகளை தமது பிள்ளைகளுக்காக பெற்றுக் கொடுப்பதுண்டு. அல்லது உணவு விடுதிகள், மளிகைப் பொருட்கள் விற்கும் கடைகள் போன்றவற்றில் வேலை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க ஊக்குவிக்கலாம். குழந்தைகளை பராமரித்தல் (Baby sitting), புற்தரைகளை சுத்தம் செய்தல் போன்ற சிறிய வேலைகளின் மூலமும் மேலதிக பணத்தை பெற்றுக் கொள்ளலாம். பகுதி நேர வேலைகளின் மூலம் வளரிளம் பருவத்தினருக்கு திட்டமிடவும், நண்பர்களைப் பெற்றுக் கொள்ளவும், வேலை ஒழுங்கு நியமங்களைக் கற்றுக் கொள்ளவும், அதிகாரம் மிக்கவர்களுக்கு மதிப்புக் கொடுத்து நடக்கவும், டொலரின் பெறுமானத்தை அறிந்து கொள்ளவும் உதவி புரிகின்றது.

அண்மையிலுள்ள வாசிகசாலைக்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று புத்தகங்களை வாசிக்கும்படி பிள்ளைகளைத் தூண்டுங்கள். இது பிள்ளையின் மூளைக்கும் உணர்வுகளுக்கும் ஆறுதலை அளிப்பதோடு பிள்ளையின் எழுத்தறிவை வளர்க்கவும் பெருமளவில் உதவுகின்றது. "வாசிப்பு ஒரு மனிதனை பூரணமானவனாக்கும்" (Reading makes a full man) என்ற பழமொழியை ஒருபோதும் மறக்க வேண்டாம். கோடை விடுமுறையில் அவர்கள் ஒவ்வொருநாளும் செல்லும் இடங்கள் பற்றியும் அவர்கள் செய்யும் செயல்கள் பற்றியும் கட்டுரை எழுதும்படி கூறுங்கள். இது அவர்களது எழுத்தாற்றலுக்கு உதவுவதாக அமையும்.

அநேகமான பாடசாலை பிரிவுகள் (School district) மாணவர்களுக்கு பகல் நேர நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றன. சில கல்வி சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களுடன் பொழுது போக்கு அம்சங்களையும் கலந்து வழங்குகின்றன. உங்கள் பிள்ளையின் தேவைகளைக் கருத்தில் கொண்டு இத்தகைய திட்டங்களில் பிள்ளையைக் கலந்து கொள்ள வைப்பதையிட்டு யோசியுங்கள். இவை ஒப்பீட்டளவில் செலவு குறைவானதாகவே இருக்கின்றன.

அநேகமான ஆலயங்கள், சமூக குழுக்கள் என்பன மாணவர்களுக்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை கோடை விடுமுறையில் வழங்குகின்றன. சில சமூக கல்வி மையங்கள் அல்லது அவ்வப் பிரதேசங்களில் உள்ள தனியார் கல்வி மையங்கள் ஓவிய வகுப்புக்களையோ அல்லது ஏனைய கைவினை (Craft) வகுப்புக்களையோ நடத்தலாம். சில கிறீஸ்தவ ஆலய இளைஞர் குழுக்கள் கோடையில் பிள்ளைகளை பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருப்பதற்காக சில செயல்பாடுகள், நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்கின்றன.

புதிய மொழியைக் கற்றுக் கொள்ளல், வீட்டை ஒழுங்குபடுத்தல், வீட்டுத் தோட்டங்களைப் பராமரித்தல், நல்ல திரைப்படங்களைப் பார்த்தல், உடற்பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்றன வேறு சில வழிமுறைகளாகும்.

பூங்காக்கள், சமூக மையங்களின் நீச்சல் தடாகங்கள் என்பன செலவு குறைவான பொழுதுபோக்கு மையங்களாக அமைகின்ற அதே வேளை ரொறன்ரோ நகரத்தின் பல துறைகளில் குறிப்பாக கழிவகற்றல் (Garbage removal), சமூக மையங்கள் (Community Centres) ஆகியவற்றில் பணிப்புறக்கணிப்பு (Strike) நடைபெற்றமை உல்லாசமாக கோடை விடுமுறையை ரொறன்ரோ நகரப் பகுதி ஒன்ராறியோ ஏரிக் கரைகளில் (Beaches) கழிப்பதற்கு தடையாக அமைந்தது. இதற்கு கழிவறைகள், நீச்சல் தடாகங்கள் பூட்டப்பட்டமை காரணமாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் பின்வரும் தெரிவுகளை மேற்கொள்ளலாம்.

- வீட்டிற்கு அருகில் உள்ள பூங்காக்களுக்குச் செல்லுதல்
- கோடை விடுமுறையின்போது அநேக விழாக்கள் நடைபெறுகின்றன அவற்றிற்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லலாம்.
- செவ்வாய் கிழமைகளில் திரைப்படங்களின் நுளைவுச்சீட்டுகள் $5இற்கு விற்பனை செய்யப்படும்போது அழைத்துச் செல்லலாம் அல்லது பிள்ளைகளுக்கேற்ற காட்சிகளின் CDகளை எடுத்து வீட்டில் பார்வையிடச் செய்யலாம்.
- வீட்டினுள்ளிருந்து விளையாடக் கூடிய விளையாட்டுக்கள் விளையாடவிடலாம்.
- அடுத்த வகுப்புக்குச் செல்லுவதற்கு முன்பாக படிப்பில் ஆயத்தம் செய்தல்
- நூதனசாலைக்கு அழைத்துச் செல்லுதல் போன்றவற்றைக் கவனத்தில் கொள்ளலாம்.

இந்த விடுமுறை இன்னும் ஒரு மாதத்தில் முடிந்து விடப்போகின்றது தானே என எண்ணி செப்டம்பர் வரை நாட்களை எண்ணிக் கொண்டிராது பிள்ளைக்கு உபயோகமான வழிவகைகளை சிந்தித்து செயலாற்றுங்கள். வீணாக்கப்பட்ட காலம் வீணாக்கப்பட்ட சந்தர்ப்பத்தையே குறிக்கும்.

உசாத்துணை:

- *http://www.aspeneducation.com/Article-summer-vacation-teens.html*
- *http://www.familiesonlinemagazine.com/summer_students_camp.html*
- *http://www.wctv.tv/home/headlines/19725729.html*
- *http://pbskids.org/wayback/summer/tp.html*
- *http://www.wikihow.com/Spend-Your-Summer-Vacation-Indoors-and-Outdoors*
- *http://hubpages.com/hub/Keep_Kids_Safe_from_Strangers_in_Summer*

jeevathisairajah@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

York Region DISTRICT SCHOOL BOARD

CTMA CANADIAN TAMIL MEDICAL ASSOCIATION

CTMA மற்றும் York Region District School Board இணைந்து ஒருங்கமைக்கும்

உளவளக் கருத்தரங்கு

"உங்களது பிள்ளையும் பதின்ம வயதுடையவரா?"

நிகழ்ச்சி நிரல்:

10:00 - 12:00	"பதின்மவயதில் உளநோய்கள் மற்றும் போதைப்பொருள் பாவனை சார்ந்த உயிரிழப்புக்கள்" -மனநல மருத்துவநிபுணர் Dr. செந்தூரன் குணரட்ணம்
12:00 - 12:30	கலந்துரையாடல்
12:30 - 13:00	மதியபோசனம்
13:00 - 14:00	"பதின்மவயதினரின் உளவளம்சார் சேவைகளும் அணுகுமுறையும் – கருத்தாய்வு" -துறைசார் வல்லுனர்கள்
14:00 - 15:00	கலந்துரையாடல்
15:00 - 15:15	நிறைவுரை

காலம்:
Sunday June 23rd 2019

நேரம்:
10am - 3pm

இடம்:
Middlefield Collegiate Institute (525 Highglen Ave., Markham)

இலவச குழந்தை பராமரிப்பு உண்டு.

தொடர்புகளுக்கு :
ஜுவனீட்டா நாதன்:
416 885 3479
Juanita.nathan@yrdsb.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வீட்டை இன்சுலேசன் செய்வதனால் கோடை காலத்தில் குளிர்மையாக வைத்திருக்கலாம்

Insulate your attic now and stay Hot in winter & Cool in summer

Atticare Insulation

CARE AS IF IT'S OUR OWN

Save more than 50%

SUMMER = Cooling Bill

WINTER = Heating Bill

- Prevent ice damming
- Stop home heat loss by up to 40%
- Save on heating & cooling cost
- Increase the comfort of your home

Houses built before 1980 have an average R value of R-20 or below instead of R-50

Have your attic insulation removed professionally, the first time

ஒரே கூரையின் கீழ் எமது மற்றுமோர் சேவை

Atticare Insulation Removal

Clean your Insulation damaged by Raccoon, Squirrel, Bird, Mold or Water

We offer professional insulation removal services.

An intelligent choice of insulation for higher performance & air sealing

sprayfoam CARE

CARE AS IF IT'S OUR OWN

-Wall -Garage -Ceiling
-Basement -Crawl space

CUSTOM HOUSE

ROOM ABOVE THE GARAGE

உங்கள் garageற்கு மேல் உள்ள வீட்டின் பகுதி தற்போது அதிக வெப்பமாகவோ அல்லது பனிக்காலத்தில் அதிக குளிராகவோ இருக்கின்றனவா? அதற்கான விடையைப்பெற

PRABHA SINNA
Government certified Energy Advisor

For uncompromised
இன்றே service அழையுங்கள்

416-556-6115

Insulation is all about how you install them. Get it done right the first time. Get it done by the professional

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130 வது பிறந்த தினத்தைக் கொண்டாடும்

பாரிஸ் ஈபெல் கோபுரம்

- குரு அரவிந்தன் -

உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் பாரிஸ் நகரத்தில் உள்ள ஈபெல் கோபுரம் இந்த வருடம் தனது 130 வது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றது. பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரின் குறியீட்டுச் சின்னமாக, 'இரும்புப் பெண்மணி' என்று அழைக்கப்படும் இந்த ஈபெல் கோபுரம் இருக்கின்றது. இந்தக் கோபுரத்தை வடிவமைத்தவர் அலெக்சாந்தர் கஸ்டவ் ஈபெல் (Gustave Eiffel) என்பவராவார். அமெரிக்காவில் நியூயோர்க்கில் உள்ள லிபர்ட்டி சிலையை அமைப்பதிலும் இவரது பங்கு இருந்திருக்கிறது. இதைவிட பனாமாவில் உள்ள 'பனாமாக் கால்வாய்' அமைப்பதற்கும் தொடக்கத்தில் இவரது ஆலோசனை பெறப்பட்டதாகவும் தெரிகின்றது. அவரின் பெயரிலேயே அழைக்கப்படும் இந்தக் கோபுரம் பாரிஸ் நகரில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் முக்கிய இடமாக இருக்கின்றது. உலகில் பலராலும் கவரப்படும் ஒன்றான இந்த ஈபெல் கோபுரத்தைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு வருடமும் சராசரியாக 7 கோடி மக்கள் பாரிஸ் நகருக்கு வருகின்றார்கள்.

லண்டன் மாநகரில் உள்ள பிக்பென் மணிக்கூட்டுக் கோபுரம் போல, உரோமில் உள்ள கொலோசியம் போல, ரொரன்ரோவில் உள்ள சிஎன் கோபுரம் போல பாரிஸ் நகரில் ஈபெல் கோபுரம் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய, பலராலும் அறியப்பட்ட கோபுரமாக இருக்கின்றது.

1887ம் ஆண்டு தொடங்கி 1889ம் ஆண்டு உலகக் கண்காட்சிக்காகக் கட்டி முடிக்கப்பட்ட இந்தக் கோபுரம் தொடக்கத்தில் 984 அடி உயரமாக இருந்தது. சுமார் 300 தொடக்கம் 450 தொழிலாளர்கள் 2 வருடம் 2 மாதம் 2 நாட்கள் உழைத்த உழைப்பின் பலனாக இந்தக் கோபுரம் பாரிஸ் நகரில் அமைந்தது. சென்ற மே மாதம் 15 ஆம் திகதி சுமார் 1300 சிறுவர், சிறுமிகள் விசேடமாக அழைக்கப்பட்டு 130 வது பிறந்ததின நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வைக்கப்பட்டது மட்டுமல்ல, மின்கதிர் விளக்குகளின் ஒளி மாற்றங்கள் மூலம் விசேட காட்சியும் பொதுமக்களுக்காகக் காட்சிப்படுத்தப்பட்டது.

இந்த ஈபெல் கோபுரம் கட்டப்பட்டபோது, அங்கிருந்த ஒரு பகுதி மக்களிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியிருந்தது. 'ஒன்றுக்கும் உதவாத இரும்புத்துண்டுகளாலும், ஆணிகளாலும் ஆன இந்தக் கோபுரம் நகரின் மத்தியில் தேவையில்லாத இடத்தை ஆக்கிரமித்திருக்கிறது. கண்காட்சி முடிந்ததும் அதை உடைத்து விடுங்கள்' என்று அவர்களிடம் இருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனாலும் இந்த எதிர்ப்புக்களைத் தாண்டி கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. 20 வருடம் மட்டுமே அதாவது 1909ம் ஆண்டுவரை மட்டுமே இந்தக் கோபுரம் பாவனையில் இருக்கும் என்ற நிபந்தனையும் அப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இன்று அதிக மக்களைக் கவர்ந்து இழுக்கும் கோபுரமாக ஈபெல் கோபுரம் பாரிஸ் நகரத்தின் மத்தியில் எதற்கும் அசையாமல் தலை நிமிர்ந்து நிற்கின்றது. இந்தக் கோபுரத்தின் மூன்றாவது மாடியைத் தனது பணியகமாகவும், தனது குடும்பம் தங்கும் இடமாகவும் இதை உருவாக்கிய ஈபெல் பாவித்திருந்தார். 1929ல் நியூயோர்க்கில் கிறிஸ்லெர் கட்டடம் கட்டப்பட்டதால் ஈபெல் கோபுரம் அதி உயர்ந்த கோபுரம் என்ற தகுதியை இழந்தது.

108 அடுக்குகளைக் கொண்ட ஈபெல் கோபுரம் சுமார் 1665 படிகளைக் கொண்டிருக்கின்றது. ஆனால் பொதுமக்களை எல்லா அடுக்குகளுக்கும் படிகள் மூலம் செல்ல நிர்வாகத்தினர் அனுமதிப்பதில்லை. சுற்றுலாப் பயணிகளுக்காக பெரிய இரண்டு மின் தூக்கிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. 1957ம் ஆண்டு இதன் உச்சியில் செய்திப்பரிமாற்றச் சாதனங்கள் (Transmitter station) தேவை கருதிப் பொருத்தப்பட்டதால், இந்தக் கோபுரம் 1063 அடி உயரமானது. இந்த ஈபெல் கோபுரம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதலாவது தளம் சுமார் 189 அடி உயரத்திலும், இரண்டாவது தளம் சுமார் 379 அடி உயரத்திலும் மூன்றாவது தளம் சுமார் 905 அடி உயரத்திலும் இருக்கின்றன. முதலாவது தளத்தில் உணவு விடுதியும், நினைவுப் பொருட்கள் விற்பனை செய்யும் கடையும், ஈபெல் கோபுரப் படம் போட்ட தபால் தலை விற்பனை செய்யும் தபாலகமும் முக்கியமாக இடம் பெற்றிருக்கின்றன. இரண்டாவது தளத்தில் உணவு விடுதி, கடைகள், தொலைநோக்கிக் கருவிகள் போன்றவை அமைந்திருக்கின்றன. மூன்றாவது தளம்தான் மிகச் சிறந்த பார்வையாளர் தளமாக இருக்கின்றது. இரவிலும், பகலிலும் பாரிஸ் முழுவதையும் இங்கிருந்து பார்க்க கூடிய வசதிகளைக் கொண்டிருக்கின்றது. நாங்கள் இரண்டு மாடிகளைப் படிகள் மூலம் ஏறிச் சென்று, பின் மூன்றாவது மாடிக்கு மின் துக்கியைப் பாவித்திருந்தோம். இந்தத் தளத்தில் நின்று பாரிஸ் நகரத்தின் அழகை இரசித்த போது, இதமான தென்றல் முகத்தை வருடிச் சென்றது.

மின்தூக்கிகளின் உதவியுடன் செல்வதானால் விரைவாகச் செல்ல முடியும். உங்கள் நேரத்தையும் சேமிக்க முடியும். படிகளில் ஏறிச் செல்வதானால் சற்றுக் கூடுதலான நேரமெடுக்கும். ஆனாலும் படிகளில் ஏறிப்பார்த்தோம் என்ற திருப்தி உங்களுக்கு இருக்கும். சுற்றுலா முகவர்களுக்கூடாகச் சென்றால் அவர்களே இதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவார்கள். நீங்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியதில்லை. 130வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் முகமாக 130 சாதனையாளர்கள் சென்ற மார்ச் மாதம் படிகளால் ஏறி உச்சியை அடைந்தார்கள். மார்ச் மாதம் 30ம் திகதி பூமியின் சுற்றுச் சூழல் பாதுகாப்புக் கருதி ஒரு மணிநேரம் ஈபெல் கோபுரத்தின் விளக்குகளை அணைத்து உலக நாடுகளோடு சேர்ந்து மதிப்புக் கொடுத்தார்கள்.

இரவிலே தங்கநிற மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட இந்தக் கோபுரத்தைப் பார்ப்பது மிகவும் அற்புதமாக இருக்கும். இரவில் அதன் அழகை இரசிப்பதற்காகவே பலர் அங்கு வந்து இரவில் தங்கியிருந்து இரசிப்பதுண்டு.

1914ம் ஆண்டு, உலக யுத்தத்தின் போது கோபுரத்தின் உச்சியில் இருந்த சக்தி வாய்ந்த ஒலிபரப்பி சைகைகள் மூலம், பாரிஸ் நோக்கி வந்த ஜெர்மனிய இராணுவத்தின் வானொலி அலைவரிசைகளைத் தடுப்பதற்கும், குழப்ப நிலையை ஏற்படுத்தவும் இந்தக் கோபுரத்தின் உயரத்தில் இருந்த கருவிகள் மிகவும் உதவியாக இருந்தன. 1940ம் ஆண்டு ஜெர்மனிய இராணுவம் பாரிஸ் நகரைக் கைப்பற்றிய போது ஈபெல் கோபுரத்தை அழித்து விடும்படி கிட்லரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டாலும், இராணுவத் தளபதி அதைச் செயற்படுத்தவில்லை.

1954ம் ஆண்டு, மலை ஏறுவது போல ஒருவர் வெளிப்பக்கத்தால் இந்தக் கோபுரத்தில் ஏறியிருந்தார். கோபுரத்தின் உச்சியில் இருந்து இருவர் பரசூட்டில் குதித்த சம்பவங்களும் உண்டு.

இருபது வருடத்தில் தனது ஆயுட்காலத்தை முடிக்க இருந்த ஈபெல் கோபுரம் 1989ம் ஆண்டு தனது 100 வது பிறந்த தினத்தைக் கொண்டாடியது. ஒரு சாராரின் வேண்டுகோளுக்கு இணங்க அழிக்கப்பட இருந்த ஈபெல் கோபுரம் இன்று 130வது பிறந்த தினத்தைக் கொண்டாடுவது பெரிய அதிசயமே!

நான் நேரில் சென்று பார்த்த, மனதில் பதிந்துவிட்ட மறக்க முடியாத கோபுரங்களில் பாரிஸில் உள்ள ஈபெல் கோபுரமும் ஒன்றாகும். இதோ, ஈபெல் கோபுரத்தைப் பற்றி அதை உருவாக்கிய ஈபெல் என்ன சொன்னார் என்பதைப் பாருங்கள்:

'I ought to be jealous of the Tower. She is more famous than I am'
- Gustave Eiffel

உசாத்துணை:

- https://globalnews.ca/news/5282837/eiffel-tower-light-show/

kuruaravindan@thaiveedu.com

SP Electronics

TV, VCR, DVD, Players, Telephone-Computers அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்...

416 264 6400

2641 Eglinton Avenue East

(Brimley & Eglinton)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாங்கம் - புத்தாண்டு - புதுப்பொங்கல்

- பால. சிவகடாட்சம் -

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள் என்பவற்றின் நிலைகளை அவதானித்துக் கணிதத்தின்மூலம் பெறப்பட்ட காலக்கணிதமே பஞ்சாங்கம். நட்சத்திரம், கிழமை, திதி. கரணம், யோகம் என்னும் ஐந்தையும் கணித்துத் தருவதால் பஞ்சாங்கம் என அறியப்பட்டது. இவை எல்லாமே காலஅளவுகள். எனினும், ஒருசில மேதாவிகள் இந்தியாவுக்குப் பிரிட்டிஷ்காரன் வருவதற்கு முன் தமிழர் உள்ளிட்ட இந்தியர்களுக்குக் கலண்டர் என்ற ஒன்று இருக்கவில்லை என்று நம்புவதுதான் பரிதாபம். கிறித்துவுக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே காலத்தைக் கணிக்கும் பஞ்சாங்க முறையை உருவாக்கியவர்கள் இந்தியர்கள். சதுர்யுகங்களும் மனுவந்திரங்களும் கல்பங்களும் இந்திய காலக்கணிதரின் சிந்தனையில் உதித்தவையே.

சங்ககாலப்புலவர் ஒருவர் தனது அரசனை 'உனது ஒரு நாள் என்பது ஒரு மாதமாகட்டும், உனது ஒரு மாதம் ஒரு ஆண்டாகட்டும், உனது ஒரு ஆண்டு ஒரு யுகம் ஆகட்டும், உனக்கு ஒரு யுகம் என்பது ஒரு கல்பம் ஆகட்டும்' என்று வாழ்த்தும் பாடல் ஒன்றைப் பதிற்றுப்பத்தில் காணமுடிகிறது. ஆயிரம் மகாயுகங்கள் கொண்ட கல்பம் என்பது பிரமனுக்கு ஒருநாள் என்று இந்தியக் காலக்கணிதர் பண்டுதொட்டுக் கூறிவருவதைப் பின்பற்றி எழுந்ததே சங்கப்புலவரின் இந்த வாழ்த்துப்பாடலாகும்.

வண்டார் கூந்தல் ஒண்டொடி கணவ
நின்னாள் திங்கள் அனையவாக திங்கள்
யாண்டோர் அனைய வாக யாண்டே
ஊழி யனைய வாக வூழி
வெள்ள வரம்பன வாக

சங்ககாலத்திலேயே வானியல் பற்றிய அறிவு நிரம்பப்பெற்ற அறிஞர்கள் பலர் தம் அறிவுபற்றித் தம்பட்டம் அடிக்காமல் அடக்கத்துடன் வாழ்ந்தனர் என்பதை அறியமுடிகிறது.

செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்று அளந்து அறிந்தோர் போல
என்று இவை அனைத்தும்
அறி அறிவு ஆகாச் செறிவினை ஆகி
களிறு கவுள் அடுத்த எறிகல் போல
ஒளித்த துப்பினை ஆதலின்

'சூரியன் செல்லும் பாதை, அச்சூரியனின் இயக்கம், அந்த இயக்கம் சூழ்ந்த மண்டலம், ஒரு ஆதாரமும் இன்றித் தானே நிற்கும் ஆகாயம் என்றுசொல்லப்பட்ட இவை அனைத்தையும் தாமே நேரில் சென்று அளந்து கண்டறிந்ததுபோல் இவை இந்த அளவை உடையன என்று கூறவல்ல அறிஞர்களும் உள்ளனர்' என்ற பொருள்தரும் இப்பாடலை புறநானூற்றில் காணமுடியும்.

விண்வெளி மண்டலத்தில் சூரியன், சந்திரன் மற்றும் கிரகங்களின் அசைவுகளை அவதானித்துக் காலத்தைக் கணித்துக் கூறும் வல்லுநர்கள் கணியர், நாழிகைக் கணக்கர், காலக்கணிதர் என்றெல்லாம் அழைக்கப்பெற்றனர். காலக்கணிதத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் பற்றி சிலப்பதிகார ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். *'வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை ஆயுள்வேதரும் காலக்கணிதரும்'* கூடி வாழ்ந்தமை பற்றிய குறிப்பினை சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது.

எனினும் நமது முன்னோரின் காலக்கணித அறிவுபற்றி அறிந்து கொள்ளாமலும் அறிந்திருந்தும் அது இந்துக்கள் உருவாக்கிய கலண்டர் முறை என்பதாலும் நம்முள் ஒருசிலர் எமக்கு கலண்டர் என்று ஒன்று இருந்துள்ளது என்பதையே ஏற்க மறுக்கும் அவலத்தைக் காண்கிறோம். இதன்காரணமாகவே ஆண்டுக்கு மூன்று முறை புத்தாண்டு கொண்டாடும் அவல நிலைக்கு தமிழ்மக்கள் தள்ளப்பட்டார்கள்.

> **“ நமது முன்னோரின் காலக்கணித அறிவுபற்றி அறிந்து கொள்ளாமலும், அறிந்திருந்தும் அது இந்துக்கள் உருவாக்கிய கலண்டர் முறை என்பதாலும் நம்முள் ஒருசிலர் எமக்கு கலண்டர் என்று ஒன்று இருந்துள்ளது என்பதையே ஏற்க மறுக்கும் அவலத்தைக் காண்கிறோம். ”**

உலகெங்கும் வாழும் மக்களில் மிகப் பெரும்பாலானோர் இன, மத, மொழி பேதமின்றிக் கொண்டாடும் புத்தாண்டு தினமாக ஜனவரி முதலாம் தியதி உள்ளது. இதனை அடையாளம் காட்டும் கலண்டர் கிரகேரியன் கலண்டர் என்று அறியப்படும். இந்தக் கிரகேரியன் கலண்டர் என்பது 1582ம் ஆண்டிலேயே நடைமுறைக்கு வந்தது. இதற்கு முன்னர் இருந்தது ஜூலியன் கலண்டராகும்.

ஏறத்தாழ 300 முன்னர் ஆண்டுகளுக்கு பிரிட்டிஷ் ஆட்சியாளரால் கிரகேரியன் கலண்டர் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொள்வது அவசியம்.

கிரகேரியன் கலண்டர் பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்படு முன்னர் எமது முன்னோர் பயன்படுத்திய கலண்டரே பஞ்சாங்கம் ஆகும். அரசர்கள் தாம் போர்களில் பெற்ற வெற்றிகளையும் கோவில்களுக்கும் தனிப்பட்டோருக்கும் கொடுத்த நிலதானம் மற்றும் பிறகொடைகளையும் ஆண்டு மாதம் தியதியுடன் கல்லிலும் செப்பிலும் பதிவுசெய்ய இந்தப் பஞ்சாங்கங்களே அன்று உதவின.

பஞ்சாங்கக் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ள பழைய சாசனங்கள் இரண்டை மட்டும் உதாரணத்துக்கு இங்கு எடுத்துக்கொள்வோம்.

பன்னு கலியுக நாலாயிரத்(து)
- ஐஞ்ஞூற்(று)ஐம்
பத்தெட்டின் மேல் எவரும் பணிந்து
- போற்றச்
சென்னெல் வயல் தென்காசி நகரின்
- நல்கார்த்திகைத்
திங்கள் தியதி ஐந்தில் செம்பொன்
- வாரம்
மன்னிய மார்கழி நாளில் மதுரை
- வேந்தன் பராக்கிரம
மகிபன் வடிவெழுத(ஒ) ணாத
சொன்ன வரைபோல் திருக்கோபுரமும்
- காணத்
துடியிடையாய் உபானமுதல்
- தொடங்கினானே

'கலியுகவருடம் 4558க்குச் சென்ற கார்த்திகை மாதம் ஐந்தாம் தியதி வியாழக்கிழமை மிருகசீரிட நட்சத்திரநாளில் பராக்கிரமபாண்டியன் தன் அரசியுடன் வந்து தென்காசி விசுவநாதர் கோயிலில் கோபுரம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடத்தினான்' என்பதை மேற்படி சாசனம் தெரிவிக்கின்றது. சாசனம் குறிப்பிடும் தினம் கிரகேரியன் கலண்டரில் கி.பி. 1457 நவம்பர் மாதம் 4ம் தியதியாகும்.

ஏறிய சகாத்த மாயிரத்துநானூற்
றெழுபதின்னாலில் வருஷம் பரிதாபித
னில் மாதம்
தேறிய சித்திரை இருபத்தொன்பதாகும்
தேதி இரண்டாம்பக்கம் திங்கள் உரோ
கிணி நாள்
வீறு யர்ந்த மிதுனத்து நெல்வேலி மாறன்
வீரவேள் குலசேகர செழியனென்று சுரர்
ஆறு புனை அகிலேசர் காசியிலே விளங்க
அணி மவுலி தரித்தனன் பரராசர்
பணிந்தனரே

'சகவருடம் 1474 பரிதாபி ஆண்டு சித்திரை மாதம் 29ம் தியதி இரண்டாம் பிறையும் ரோகிணி நட்சத்திரமும் மிதுனலக்கினமும் சேர்ந்த சுபவேளையில் நெல்வேலிப் பாண்டியன் குலசேகரசெழியன் என்னும் பெயருடன் தென்காசி விசுவநாதர் ஆலயத்தில் முடிசூடிக்கொண்டான்' என்ற விபரத்தை மேற்படி சாசனம் அறியத்தருகின்றது. இச்சாசனம் குறிப்பிடும் தினம் கிரகேரியன் கலண்டரில் கி.பி. 1552 ஏப்ரல் மாதம் 26ம் தியதியாக உள்ளது என்பதைக் கணினிக் கணிப்புக்கள் உறுதிப்படுத்துகின்றன

மேற்படி சாசனங்களுள் ஒன்றில் சகவருடமும் மற்றையதில் கலியுக ஆண்டும் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். இந்தியாவின் தலைசிறந்த வானியல் நிபுணரும் காலக்கணிதருமான ஆரியபட்டர் உருவாக்கிய கலியுக ஆண்டு கிரகங்களின் நிலையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. கி.மு 3102ம் வருடம் கலியுக ஆண்டின் முதல் வருடமாகும்.

சாலிவாகன சக வருடம் கி.பி.78ல் தொடங்கப்பெற்றது. சக ஆண்டு தொடங்கிய கி.பி. 78ம் ஆண்டை சக வருடம் 0 ஆண்டாக சிலரும் சக வருடம் 1ம் ஆண்டாக வேறு சிலரும் கணக்கில் வைத்துள்ளனர். உதாரணமாகத் தற்போது நடக்கும் கிரகேரியன் வருடத்தை (2019 C.E.) சகவருடம் 1941 என்று சிலரும், சகவருடம் 1942 என்று வேறு சிலரும் குறிப்பிடுவதுண்டு. முந்தையது சென்ற (expired) சகவருடம் என்றும் மற்றையது நின்ற (current) சகவருடம் என்றும் கொள்ளப்படும்.

சாசனத்தில் குறிப்பிடப்பெறும் ஆண்டு சென்ற ஆண்டா நின்ற ஆண்டா என்பதை உறுதிப்படுத்த உதவும் நல்ல நோக்கத்தில் யாரோ ஒருவர் அறுபது சகவருடங்கள் கொண்ட ஒரு காலவட்டத்தை உருவாக்கி ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு பெயரை வைத்து ஆண்டின்பெயர் 60 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் வருவதாக அமைத்தார். இந்த அறுபது ஆண்டு வட்டத்தை உருவாக்கியவர்களுக்கு 60க்கு மேல் எண்ணத் தெரியவில்லைப் போலும் என்று தனது அதிமேதாவித்தனத்தை சிலர் வெளிப்படுத்தியிருந்தனர். ஏழு நாட்கள் கொண்ட ஒரு கிழமை வட்டம், பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட ஒரு ஆண்டு வட்டம் பற்றி இவர் என்ன நினைக்கின்றார். அவற்றை உருவாக்கியோருக்கு ஏழுக்குமேல் அல்லது பன்னிரண்டுக்கு மேல் எண்ணத் தெரியவில்லை என்று நினைக்கின்றாரா?

இந்த அறுபது ஆண்டு வட்டத்தை உருவாக்கியவர்கள் அறுபது ஆண்டுகளின் பெயர்களையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள உதவும் பொருட்டு மறக்கமுடியாத, அதிவிசித்திரமான கதையொன்றைக் கூறிவைத்தனர். பலபெயர்களை ஒரு ஒழுங்கில் நினைவில் வைத்துக்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் இந்த உத்தியை mnemonics என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள்.

Some Lovers Try Positions That They Can't Handle

இது விரசமாக எடுத்துக்கொள்ளப்படக்கூடிய ஒரு வசனம் தான். எனினும் மணிக்கட்டில் உள்ள 8 எலும்புகளின் பெயர்களை (Scaphoid, Lunate, Triquetral, Pisiform, Trapezium, Trapezoid, Capitate, Hamate) நினைவில் வைத்துக்கொள்ள இந்த வசனம் உதவும் என்கிறார்கள்.

சகவருடத்து ஆண்டுகளுக்குப் பெயர் வைத்ததன் உண்மையான நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் விட்டதுமன்றி இந்தப் பெயர்கள் சமஸ்கிருதத்தில் இருப்பதாகவும் இவர்கள் குறைப்பட்டுக் கொள்வதுண்டு. அக்காலப்பகுதியில் தமிழ்நாட்டவரும்கூட சமஸ்கிருத மொழியிலேயே காலக்கணிதநூல்களை எழுதிவைத்துள்ளனர் என்பதை இவர்கள் அறிந்திருக்கவில்லை.

எமது முன்னோர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கணித்துக் கொடுத்த பஞ்சாங்கத்தின்படி சூரியன் மேட இரா

தொடர்தல் 49ம் பக்கம்

கோலங்கள்

அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க, Floor Decoration for Arangetram Wedding and other Cultural Functions.

Bhamini:

647 294 0736, 416 491 6057.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாங்கம்...

46ம் பக்கத் தொடர்ச்சி...

சிக்குள் பிரவேசிக்கும் மேட சங்கிராந்தி நாளே சித்திரைமாதம் முதலாம் தியதியாகவும் புதிய ஆண்டொன்றின் தொடக்கமாகவும் கொள்ளப்படும்.

தமிழர் வரலாற்றில் சூரியன் மகர இராசிக்குள் பிரவேசிக்கும் மகரசங்கிராந்தி நாளே தைமாதத்தின் முதல் நாளாகக் கணிக்கப்படுகின்றது. எனினும் இந்நாள் புத்தாண்டின் தொடக்கமாக என்றுமே எண்ணப்படவில்லை. முன்னர் ஒருகாலத்தில் ஆவணிமாதமே புத்தாண்டின் முதல் மாதமாக இருந்துவந்துள்ளது என்பதை உரையாசிரியர் நச்சினார்க்கினியர் (பதினான்காம் நூற்றாண்டு) அறியத் தந்துள்ளார்.

'காலவுரிமையெய்திய ஞாயிற்றுக்குரிய சிங்கவோரை (ஆவணி மாதம்) முதலாகத் தண் மதிக்குரிய கற்கடகவோரை (ஆடி மாதம்) ஈறாக வந்துமுடியும் துணையும் ஓராண்டாம் ஆதலின் அதனை இம்முறை யானே அறுவகைப்படுத்தி இரண்டு திங்கள் ஒரு வருடம் ஆக்கினார்' என்கிறார் நச்சினார்க்கினியர்.

அதாவது சூரியன் சிங்கராசிக்குள் பிரவேசிக்கும் ஆவணி மாதம் முதலாகச் சூரியன் கர்க்கடக ராசியில் நிற்கும் ஆடிமாதம் வரையிலான கால அளவே ஓர் ஆண்டு ஆதலால் இந்த ஓராண்டுக்காலத்தை ஒவ்வொன்றும் இரண்டு மாதங்கள் கொண்ட ஆறு பருவங்களாகப் பிரித்தனர் என்கிறார் நச்சினார்க்கினியர்.

எனினும் இந்த வழக்கம் கி.மு. 500-க்கு முற்பட்டது என்பதும், கடந்த இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக சித்திரை மாதமே ஆண்டின் முதல் மாதமாக எண்ணப்பட்டு வந்துள்ளது என்பதும் கா.சு. பிள்ளை என்ற ஆய்வாளரின் கருத்தாகும்.

எழுநூறு ஆண்டுகளுக்கும் மேலாகத்தமிழரும் சிங்களரும் சித்திரை மாதத்தையே ஆண்டின் முதல் மாதமாகக் கணித்து சித்திரை வருடப்பிறப்பைக் கொண்டாடி வந்துள்ளனர் என்ற உண்மையை ஈழத்தில் எழுதப்பெற்ற தமிழ் நூலான சரசோதி-மாலை தெள்ளத்தெளிவாக எடுத்துரைக்கின்றது.

சித்திரைப் புத்தாண்டு, தீபாவலி, நவராத்திரி, விளக்கீடு போன்ற பண்டிகை நாட்கள் பற்றியும் சிவராத்திரி, கந்தசட்டி, விநாயகசதுர்த்தி, கௌரிவிரதம் போன்ற பல்வேறு தெய்வவிரத நாட்கள் பற்றியும் விரிவாக விளக்கியுள்ள சரசோதிமாலையின் ஆசிரியர் தைமுதல் நாளில் இன்று தமிழ்மக்களால் கொண்டாடப்பெறும் பொங்கல் பண்டிகை பற்றி எதையுமே குறிப்பிடவில்லை. மாறாக, நெல் அறுவடை முடிந்தபின் புதியது (புதிர்) உண்ணும் பொங்கல் நாளாக தைப்பூச நாளையே குறிப்பிட்டுள்ளார்.

திருஉலாவு தைத்திங்களில் பூசநாள்
மருவு பூரணையின் மகிழ்ந்து யாவரும்
பொருவிலாத புதியது அருந்திடிற்
பெருகு தானியம் யாவும் பெறுவரே

சரசோதிமாலை ஏர்மங்கலப்படலம்: பாடல் 24

தைப்பூசநாளன்று வயலில் முற்றிய நெற்கதிர்களைக் கொய்தெடுத்து அந்த நெல் மணிகளைக் குற்றி எடுத்த அரிசியில் பொங்கல் செய்து புதிது (புதிர்) உண்ணும் வழக்கம் இன்றும் தமிழரிடையே காணப்படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தைப்பூசத்தன்றே தைநீராடல் விழாவும் தைப்பொங்கல் விழாவும் கொண்டாடப்பட்டு வந்துள்ளன. தைப்பூசம் என்பது கார்த்திகை விளக்கீடு போன்று, மார்கழித் திருவாதிரை போன்று, சங்ககாலத் தமிழரின் மிகமுக்கியமான பெருநாளாகும். மார்கழி நீராடல் மற்றும் தைநீராடல் பற்றிய பல பாடல்களைப் பரிபாடல் உள்ளிட்ட சங்காலத்து இலக்கியங்களில் காணமுடியும்.

மார்கழி மாதத்து மதிநிறைந்த நன்னாள் சைவருக்கும் வைணவருக்கும் பொதுவான புனிதநாள் என்பதற்கு மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் ஆண்டாளின் திருப்பாவையும் சான்றாக விளங்குகின்றன.

மார்கழிமாதத்துப் பௌர்ணமி நன்னாளில் தொடங்கும் பாவைநோன்பு அடுத்த பௌர்ணமி நாளான தைப்பூச நாளன்று தைநீராடலுடன் முடிவடைகின்றது. இந்த முப்பதுநாளும் இளம்பெண்கள் அதிகாலையில் எழுந்து வீடுவீடாகச் சென்று இறைவன் புகழ்பாடித் தம்தோழியரை மார்கழிநீராட அழைத்துச் செல்வர். ஆற்றில் அல்லது குளத்தில் நீராடிவந்து ஆண்டவனை வழிபடுவர்.

'மார்கழித் திங்கள் மதிநிறைந்த
- நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ
- நேரிழையீர்'

என்று பாவையரை அழைக்கும் கோதை நாச்சியார் கண்ணுக்கு மைஇடாமல், பூச்சூடிக் கூந்தல் முடிக்காமல், நெய்யும் பாலும் அருந்தாமல், பாற்கடலில் துயில் கொள்ளும் பரந்தாமன் புகழ்பாடி விரதம் காக்கும் பாவைநோன்பு பற்றி விளக்குகின்றார்.

வையத்து வாழ்வீர்காள் நாமும்
- நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ
- பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம்
- நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம்
- முடியோம்

சங்க இலக்கியமான கலித்தொகை கன்னிப்பெண்கள் அதிகாலையில் பிறர்வீடுகள் தோறும் சென்று இறைவன் புகழ் பாடுவது பற்றியும் தைநீராடுவது பற்றியும் கூறுகின்றது.

தையில் நீர்ஆடிய தவம்
- தலைப்படுவாயோ?
பொய்தல மகளையாய்ப் பிர்மனைப்
- பாடிநீ
எய்திய பலர்க்கு ஈத்த பயம்
- பயக்கிற்பதோ

- கலித்தொகை: 59

ஒரு மாதமாகப் பாலும் நெய்யும் தவிர்த்துப் பாவைநோன்பு நோற்றுவந்த பாவையர்கள் நோன்பு முடிவுறும் தைப்பூச நாளில் கைவளை, தோள்வளை, தோடு, செவிப்பூ, காலணி என்று சொல்லப்படுகின்ற ஆபரணங்கள் பலவும் அணிந்து, புத்தாடை உடுத்து, முழங்கையால் வழியும் அளவுக்கு நெய் சொரிந்து தயாரித்த பாற்சோற்றைச் சொந்தபந்தங்களுடன் கூடியிருந்து உண்பது பற்றிக் கூறுகின்றது ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்.

பாடிப் பறை கொண்டு யாம் பெறும்
- சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்
- பூவே
பாடகமே என்றனைய பலகலனும் யாம்
- அணிவோம்
ஆடை உடுப்போம் அதன்பின்னே
- பாற்சோறு
மூட நெய்து முழங்கை வழிவாரக்
கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்

தைப்பூசநாளன்று பெண்கள் கோவில்களில் இறைவனுக்கு நெய்ப்பொங்கல் பொங்கிப் படைத்து வழிபடும் வழக்கமும் மிக நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. சம்பந்தர் (கி.பி. ஏழாம் நூற்றாண்டு) தமது திருமயிலைப் பதிகத்தில் குறிப்பிடும் திருவிழாக்களுள் தைப்பூசப் பொங்கல் திருநாளும் ஒன்றாகும்.

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார்
- மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம்
- அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார்
- கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ
- பூம்பாவாய்.

'மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சரம் என்னும் கோயிலில் கைகளில் நீறுபூசியவனாய் அமர்ந்துள்ள பெருமானுக்கு அணிகலன் பூண்டுள்ள மகளிர் நெய்யொழுகும் சிறந்த பொங்கல் படைத்துக் கொண்டாடும் தைப்பூச விழாவைக் காணாது போவாயோ பூம்பாவாய்!' என்பது இப்பாடலின் பொருளாகும். இறந்துபோன பூம்பாவை என்ற இளம்பெண்ணை உயிர்த்தெழச் செய்யச் சம்பந்தர் பாடிய தேவாரம் இது என்கிறார் சேக்கிழார்.

மாசிமகத்தைப் போல் பங்குனி உத்தரத்தைபோல் தைமாதத்தின் சிறந்தநாள் தைப்பூசம். பூசநட்சத்திரத்தின் பழந்தமிழ்ப் பெயர்களுள் ஒன்று தையம். இவற்றை நோக்குமிடத்து ஆதியில் தைப்பூசநாளே பொங்கல் திருநாளாக இருந்திருக்கவேண்டும் என ஊகிக்கமுடிகிறது. தைப்பூச நாளன்று கொண்டாடப்பெற்றுவந்த தைப் பொங்கலே தற்காலத்தில் மகரசங்கிராந்தியன்று கொண்டாடப்பெறும் தைப்பொங்கலாக மாறியுள்ளது.

தமிழரும் மலையாளிகளும் பின்பற்றும் சூரியக்கலண்டரில் தை முதலாம் தியதியாகக் கொள்ளப்படும் மகரசங்கிராந்தியன்று பொங்கல் பண்டிகையினைக் கொண்டாடும் வழக்கம் தமிழகத்தில் எவ்வாறு உருவாகிற்று என்பதை ஓரளவுக்கு ஊகிக்கமுடிகின்றது. தைமாதத்தை வருடத்தின் முதலாவது மாதமாகக் கருதும் மனப்பாங்கு தமிழர்களுக்கு ஆங்கிலக் கலண்டரான கிரகேரியன் கலண்டரின் அறிமுகத்துக்குப் பின்னரே உருவாகியது எனலாம். இன்றும் கூட கிரகேரியன் கலண்டரில் முதலாவது மாதமாக எண்ணப்படும் ஜனவரியைத் தைமாதம் என்று தவறாகத் தமிழில் மொழிபெயர்ப்பவர்களைக் காணமுடியும். பெயர்ச்சொல் ஒன்றை மொழி-பெயர்க்க நினைப்பது தவறு. ஜனவரி மாதம் வேறு. தை மாதம் வேறு. இவ் வருடம் தை மாதம் முதலாம் தியதி ஆங்கிலக் கலண்டரில் ஆங்கிலப் புது-வருடம் பிறந்து 14 நாட்கள் கழித்து (January 15) வந்துள்ளது என்பதைக் கவனிக்கவேண்டும்.

Sivakadadcham@thaiveedu.com

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594 Tel: 416-646-3422



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின அழிப்பின்

மே 18, 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10ம் ஆண்டு நினைவு நாள்

ரொறன்ரோ

நன்றி: www.seithy.com
www.ninaivukal.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அழகே அழகு

- சி. நற்குணலிங்கம் -

கல்வி என்பது ஐம்புலனை வழி நடத்துவது, கண்ணில் பார்வை தருவது, மிருகத்திலிருந்து நம்மைப் பிரிப்பது, காதில் தெளிவு தருவது, கடலையும் வானையும் கைக்குள் கொண்டுவது, ஆறாம் அறிவை அடையாளப்படுத்துவது, முழுமையாக மனிதராக்குவது. கல்வி என்பது மனிதருக்கு அறிவூட்டும் ஒளி விளக்குப் போன்றது. மனிதரிடத்தில் உள்ள அறியாமையைப் போக்கி நல்வழிகாட்டவல்லது. *'கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்'* என்கிறது திருக்குறள். கல்வி அறிவில்லாதவர் கண்கள் இருந்தும் கண்கள் அற்றவர் எனக் கருதப்படுவார்.

கல்வி என்பது வாழ்க்கையின் வழிகாட்டி. உங்களால் இந்த உலகை மாற்றப் பயன்படுத்த முடிந்த மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வி. ஒரு தனிநபரின் ஆரோக்கியத்துக்கும் சமூகத்தின் ஆரோக்கியத்துக்கும் இன்றியமையாத செல்வம் கல்வி. கல்வி சுட்டுவதை அறிந்து, நல்லவற்றைத் தேர்ந்து, அவற்றின்படி உயர்வாக ஒழுகுதலே கல்வி. கல்வி என்றால் வெறும் நூல்களைக் கற்றல் இல்லை என்பதை தனது மகன் தொடர்பாக ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தின் ஒவ்வொரு வரியிலும் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறார் ஆப்பிரகாம் லிங்கன். *'கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றயவை'* என்பது வள்ளுவம். கல்விதான் உயர் செல்வம், கல்விதான் உலகு, கல்விதான் உயர்நெறி, கல்வி என்பது ஒரு வழிமறை, ஒரு நெறியாகும். கல்வி என்பது வாழ்க்கை வாய்ப்புக்களை வழங்கும் ஒரு வலிமையான வழியாகும். *'மனிதருள் ஆழ்ந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே கல்வி'* என்றார் சுவாமி விவேகானந்தர். கல்வி என்பது 'உடலில் இருந்தும் உள்ளத்திலிருந்தும் ஆன்மாவிலிருந்தும் நல்லவற்றை வெளியே கொண்டுவருவதற்கு உதவுகின்றது' என மகாத்மாகாந்தி கல்விக்கு விளக்கம் அளித்துள்ளார். கல்வி பற்றி தாகூர் கூறுகையில் 'பண்பாடுள்ள இலட்சிய வாழ்க்கை வாழ்வதற்கு கல்வியே அடிப்படை' என்றார். கல்வி பற்றி விளக்கமளித்த காந்தியடிகள் 'கல்வியானது மக்களது வாழ்க்கையுடன் இணைந்ததாகவும், அதனைக் குழந்தைகளின் ஆளுமைக் கூறுகளின் சிறந்த பண்புகளை வெளிக்கொணரும் செயன்முறை எனக் கூறியுள்ளார். 'நல்லொழுக்கமுள்ள சமூகத்தை உருவாக்குவதே கல்வி' என்றார் பிளேட்டோ. 'பரிபூரண கல்வியே உலக விடியலுக்கு வழி' என யுனெஸ்கோ எடுத்தியம்புகிறது. கல்வி என்பது ஒரு செயலல்ல, அது ஒரு பழக்கம்' என்கிறார் அரிஸ்ரோற்றில். Education என்ற ஆங்கிலச்சொல்லின் பொருள் 'வெளிக்கொணர்தல்' எனக் கல்வியை வரையறுத்தனர் ஆங்கிலேயர்.

அறிவுடையார் வேறொன்றும் இல்லாதிருப்பினும் எல்லாம் உடையவராகிறார். அறிவு இல்லாதோர் வேறு செல்வங்கள் உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவராகவே கருதப்படுகிறார் என்கிறார் வள்ளுவர். இதை *'அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார் என்னுடையரேனும் இலர்'* எனக் கூறியுள்ளார்.

மனிதர் தனது வாழ்க்கையை உரிய விதிமுறைகளுக்கு அமைவாகவும் சுய ஒழுக்கங்களுடனும் வாழ்வதற்கு கல்வி அறிவானது அவசியமான ஒன்றாகும். கல்வித் துறைக்கு முக்கியத்துவம் அளித்து முன்னேற்றம் அடையச் செய்யும்போது அதனை அடிப்படையாகக் கொண்டே ஏனைய துறைகளும் விரைவாக வளர்ச்சியை அடைந்து கொள்ளும். *'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ் இரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு'* என வள்ளுவர் கல்வியின் முக்கியத்துவத்தை கூறுகிறார். கல்விக்கான தேவையும் அதன் வடிவமும் ஏனைய வரலாற்றுக் காலங்களைவிட மானிட மேம்பாட்டை உறுதிப்படுத்தும் தன்மை கொண்டதாக உள்ளது. உயர் பண்புகள், கலாச்சார விழுமியங்கள், சமூகப்பெறுமானங்கள் யாவும் கல்விக் கூடாகவே பெறப்படுகின்றன. கல்வியே ஒருவரின் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் கருவியாகும்.

கல்வியின் வேர்கள் மிகவும் கடினமானவை. ஆனால், அதன் பழம் இனிமையானது. இந்த உலகில் கல்வி அழகைக் காட்டிலும் உயர்ந்த அழகு வேறெதுவும் இல்லை. இதனையே நாலடியார் *'குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமை யால் கல்வி அழகே அழகு'* என்றார். ஒருவர் கருவிலிருந்து கல்லறை வரைக்கும் கற்கிறார் என்று சொல்லப்படுவதில் கல்வி தோன்றா எழுவாயாகத் தோன்றி நிற்பதும், வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே கல்வியின் முக்கியத்துவம் உணரப்படுவதையும் இதிலிருந்து அறியலாம். மனித வாழ்வியலில் கல்வியே உயர்ச்சியுடையது. அனைத்துவித இன்பத்தையும் தருவது கல்வியே ஆகும் என நாலடியார் கூறுகிறார்.

மனிதவள அபிவிருத்தியில் கல்வியறிவுடையோரின் பங்களிப்பு எப்போதுமே அதிக பயனைத் தரும். இதனை எச்சவிளைவு என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். கல்வியில் முதலீடு செய்கின்ற ஆற்றல் அதிகரிக்கின்ற போது, மனிதவளம் அபிவிருத்தியடையும். அதன்வழி பொருளாதார அபிவிருத்தி மட்டம் உயர் நிலையை அடைந்து பொருளாதார உறுதித்தன்மை அதிகரிக்கும். இத்துடன் கல்வி அறிவைப் பெறுவது நல்ல மனப்பாங்குடன் வாழ்வதுடன், நல்ல தொழில் வாய்ப்பைப் பெறுவதற்குமானது என்பதையும் மனம்கொள்ளவேண்டும்.

கற்றல் கற்பனைச் சக்தியை வளர்க்கிறது. கற்பனைச் சக்தி சிந்திக்கும் திறனைத் தூண்டுகிறது. சிந்தனை அறிவை வளர்க்கிறது. அறிவு உன்னை மகான் ஆக்கிறது என்றார் அப்துல்கலாம். வாரத்துக்கு ஒன்றிரண்டு விளையாட்டு நேரம், வருடத்துக்கு ஒரு சுற்றுலா என்பதைக் கடந்து 'பயிற்சி வழி படிப்பு, உலா வந்து உவகையுடன் கல்வி' என்பதே மாணவர் திறனை வளர்க்க உளவியல் சொல்லும் தீர்வு. கற்றல் என்ற விடயம் நீண்டகாலமாக மனித வாழ்வோடு பிணைந்து காணப்படும் ஒரு செயற்பாடாகும். மனித வாழ்க்கையின் மையப்பொருளாக கற்றல் அமைந்துள்ளது. கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து கற்கவேண்டும். கற்க மறுப்பவர் வாழமறுக்கிறார். நண்பர் ஒருவர் ஆபிரகாம் லிங்கனிடம் 'படிப்பதால் பணம் கொட்டப்போவதில்லை. பின் ஏன் நீங்கள் எப்போதும் எதையாவது படித்துக்கொண்டே இருக்கிறீர்கள்'? என்று கேட்டார். அதற்கு லிங்கன் 'நான் பணம் சேர்ப்பதற்காகப் படிக்கவில்லை. பணம் வரும்போது எப்படிப் பண்போடு வாழவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளவே படித்துக் கொண்டிருக்கிறேன்' என்றார். எதையும் கற்றுக் கொள்வதற்காக வெட்கப்படாதீர்கள். என்றேனும் ஒரு நாள் தெரியவில்லை என்பதற்காக அவமானப்பட நேரிடும்.

மாறிவருகின்ற நவதாராளமய உலகிலே தனி மனிதரின் வளர்ச்சியில் இருந்து நாட்டின் சமூகபொருளாதார, அரசியல் வளர்ச்சி நிலைகளைத் தீர்மானிக்கும் அம்சமாக கல்வி விளங்குகிறது. அறியாமையை அடியோடு நீக்கியருளி, அறிவுப் புலனைப் பொங்கியெழச் செய்து அனைவரையும் வாழ்விக்கச் செய்வதில் கல்வி எனும் அருமருந்து தனிச்சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. நன்மை தருவதும், கொடுக்கக் குறையாததும், அறம் செய்வதும், ஆற்றுப்படுத்துவதும், ஆறுதல் அளிப்பதும், ஆணவம் போக்குவதும், அரசனாவதும், அடவாடிகளை நல்வழிப்படுத்துவதும், சரி எது பிழை எது என்று தீர்மானிப்பதும், தீர்ப்புச் சொல்வதும், தீயார் நட்பை ஒட்டநறுக்குவதும், மாற்றானைச் சிந்திக்க வைப்பதும் கல்வி எனும் நல்வித்தையே. கற்றவர்கள் எந்த மூலைமுடக்கில் இருந்தாலும் அவர்கள் மேலிடத்தில் வைத்து மதிக்கப்படுவார்கள். கல்வி ஒருவரை நீடித்த ஆயுளோடு வாழ வைக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. கல்வி என்றும் அருள் போன்று பிரவாகிக்க வல்ல பொக்கிசமாக திகழ்கிறது. எவராலும் கவர்ந்து செல்ல முடியாத உயர் பண்பியல்பை உடையது. அதனைக் கொடுக்க மட்டுமே முடியும். எப்படிக்கொடுத்தாலும் இல்லாமல் போகாத அழிவற்ற செல்வம். எனவே கற்றுக் கொண்டவர் வாழ்வில் ஜெயிக்கிறார். கற்றுக்கொள்ளாதர் வாழ்வில் தவிக்கிறார்.

கல்வி என்பது அறிவூட்டும் ஒளி விளக்குப் போன்றது. கல்வி ஒளியே ஒளி. மனிதரை மனிதப் பண்புள்ளவராக மாற்றுவது கல்வியாகும். உடல், அறிவு, உணர்ச்சி என்பவற்றை சீரான முறையில் இயங்கச்செய்து தனது குடும்பம், சமூகம் என்பவற்றை முன்னேற்ற கல்வி அறிவு அவசியம். கல்வியானது புதிய விழுமியம் உடையதாகவும், மனித தத்துவத்தை வளர்ப்பதாகவும், முழுமனிதரை தோற்றுவிப்பதாகவும் அமையும். 'ஒரு முட்டாள் தன் நண்பர்களை பயன்படுத்துவதை விட ஒரு அறிவாளி தன் எதிரிகளை நன்றாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்' என்கிறார் பல்டசர் கிரியேசன். கல்வியின் மூலம் மொழித் திறன், பிறர் சொல்வதை புரிந்து கொள்ளும் ஆற்றல், பிறர் சொல்லுக்கு ஏற்ப செயற்படும் திறன், பிறருடன் பரஸ்பர புரிந்துணர்வுடன் பழகும் திறன், விடயங்களை உன்னிப்பாக கவனிக்கும் திறன், சூழலுடன் இயைந்து நடக்கும் பண்பு, தலைமைத்துவப் பண்பு, திட்டமிட்டு கருமமாற்றும் இயல்பு, போன்ற பல்வேறு நல்லியல்புகள் வளர்ச்சியடையும். இவை வாழ்க்கையை சுமையில்லாது சுவையாக வாழவும் உதவும்.

கல்வி மனப்பாங்குகளை விருத்தி செய்ய, அத்தியாவசியமான சமுதாயக் குறிக்கோளை சாதித்துக்கொள்ள, ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் கழிக்க, உளநலம் ஏற்பட, ஆளுமை விருத்தி ஏற்பட, சொந்த நாட்டின் அடையாளத்தின் பங்காளர்களாக திறமைமிக்க பிரசைகள் உருவாகவும் சர்வதேச சமூகத்தின் வெற்றியை நோக்கிய இலக்கை எட்டுவதற்கும் கல்வி அவசியம். கல்வி வெளியீடும், நடத்தை மாற்றமும் கல்வியின் முக்கிய தூண்களாகும். இன்று அறிவு மையச் சமூகம் என்பது முக்கியத்துவம் உடையதாக மாறியுள்ளது. எனவே இந்த அறிவு மையச் சமூகத்தில் வாழவும், செயலாற்றவும் ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி அவசியமாகின்றது. சமகாலச் சவால்களை வெற்றிகொள்வதற்கும், உள்நாட்டு இனத்துவ கலாசார அடையாளங்களைப் பாதுகாப்பதற்கும் உறுதுணையாக விளங்குவது கல்விதான். ஒரு குடும்பத்தின் வறுமையை மட்டுமல்ல நாட்டின் வறுமையை அழிக்கக்கூடியதும் கல்விதான்.

நல்ல அறிவு சார்ந்த பண்பாடு கூடிய வாழ்க்கை வாழ்வதுதான் வாழ்வின் இலட்சியமாகும். ஒரு மனிதர் வாழ்வில் தவறு செய்வதற்கு அடிப்படைக் காரணம் அறியாமையாகும். சமூகத்தில் கல்வி அறிவு குறைந்தமையாலும், கல்வி விழிப்புணர்ச்சி குறைந்தமையாலும் பல சீர்கேடுகளும், வறுமைகளும், குடும்பப் பிரிவுகளும், நெறிபிறழ்வான நடத்தைகளும், அரசியல் தகராறுகளும், கலாச்சார சீர்கேடுகளும், சீரற்ற பண்பாடுகளும், சமூகத்துக்கு ஒவ்வாத வார்த்தைப் பிரயோகங்களும், எங்கு எதைப் பேசுவது? எங்கு எப்படி நடந்து கொள்வது? என்பதைப் புரிந்து கொள்ளாமை இழி செயல்களையும் சந்திக்க நேரிடுகின்றது. கல்வியின் சிறப்பை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்தால் மட்டுமே 'கல்வி அழகே அழகு' என்பதை அறிந்து அதன் வழி ஒழுகவும் முடியும்.

natkunalingam@thaiveedu.com

உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்...

KENNEDY LAW OFFICE கெனடி சட்ட அலுவலகம்

- REAL ESTATE LAW
- BUSINESS LAW
- CRIMINAL LAW
- FAMILY LAW
- IMMIGRATION LAW
- ODSP APPEALS
- SMALL CLAIMS
- WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
- NOTARIZING & COMMISSIONING

W.KENNEDY BERNADIUS, LL.B
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC
கனேடிய தமிழ் வழக்கறிஞர்

Tel: 416 613 4900

2390 Eglinton Ave. East, Suite# 223 Scarborough, ON. M1K 2P5 (Kennedy & Eglinton)
Fax: 416 613 4904 E: williamkennedylaw@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திலிருந்து வெளிவரும்

புதிய சொல்

கலை இலக்கியச் செயற்பாடுகளும் பதிப்பு முயற்சிகளும் வெறும் பண்பாட்டுச் செயற்பாடு மட்டுமல்ல.
அவை ஓர் இனத்தின் ஆன்மாவை உயிர்ப்புடன் வைத்திருப்பதுடன் இருப்பையும் உறுதிப்படுத்துவன
என்கிற நம்பிக்கையுடன் ஈழத்தவருக்கான தனித்துவமான கலை இலக்கிய வடிவங்களையும்
செல்நெறிகளையும் கண்டடையவேண்டும் என்றும்
அதற்கான தளங்களை உருவாக்கவேண்டும் என்ற முனைப்புடனும்
ஈழத்திலிருந்து புதிய சொல் இதழ் வெளிவருகின்றது.

புதிய சொல் இதழ்களை கனடாவிலும் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு

தொலைபேசி 416-854-6768
மின்னஞ்சல்: **puthiyasol@gmail.com**
முகநூல்: **www.facebook.com/puthiyasol**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயர் பகிர்வு

முருகுப்பிள்ளை கார்த்திகேசு

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை தெல்லிப்பழை கொல்லங்கலட்டி, கொழும்பு வெள்ளவத்தை, Canada Westonஐ வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை கார்த்திகேசு (முன்னாள் ஆசிரியர்/உபஅதிபர் மகாஜனா கல்லூரி. தெல்லிப்பழை, விவேகானந்த கல்லூரி கொழும்பு) அவர்கள் மே 29 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - பாக்கியம் இணையரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - முத்தம்மா இணையரின் அன்பு மருமகனும் முத்துநாயகி அவர்களின் அன்புக் கணவரும் மஞ்சுளா, கஜேந்திரன், ஹரிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகநாயகம், டெபி, அனுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் செந்தூரன், சாயித்தன், தாரணி, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து சிவக்கொழுந்து, செல்லம்மா, மற்றும் விசுவலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரரும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, கந்தையா மற்றும் பொன்னம்பலம், நக்மணி, காலஞ்சென்ற செல்வநாயகி. மற்றும் செல்வநாதன், ரட்ணநாதன், ராஜநாதன் ஆகியோரின் அன்பு மைத்துணரும் ஆவார்.

தொடர்புகட்கு:
மனைவி:905 426 2603
மகன் - ஹரி: 905 424 8497

சிவக்கொழுந்து செல்வராசா

யாழ். மாவிட்டபுரம் பளையைப் பிறப்பிடமாகவும், பத்தமேனி, ரொறன்ரோ ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து செல்வராசா அவர்கள் மே 29, புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், பொன்னப்பா - முத்தம்மா இணையரின் அன்பு மகளும் சின்னத்துரை - சிவகாமிப்பிள்ளை இணையரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வராசா அவர்களின் அன்பு மனைவியும் கந்தசாமி, திருஞானசம்பந்தமூர்த்தி, தர்மராணி, சிவநேசன், இந்திரகுமாரி, சிவராசா, லலிதா(கனடா), மகாதேவன், சுப்பிரமணியம் (சுவிஸ்), சண்முகசுந்தரம், கமலேஸ்வரி(இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரி, சந்திரகுமாரி, காலஞ்சென்ற தணிகாசலம், குலமணி, கதிர்காமநாதன், றஜனி, செல்வநாதன்(கனடா), சுஜித்தா, றஜினா(சுவிஸ்), ஜெயக்குமாரி, பாலசுப்பிரமணியம் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான துரையப்பா, இராஜேஸ்வரி, மூத்ததம்பி மற்றும் தணிகாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு ஜுன் 2ம், 3ம் நாட்களில் ரொறன்ரோவில் நடைபெறும்.

சிவநேசன் - மகன்:	16472377347
கதிர்காமநாதன் - மருமகன்:	14163210459
கந்தசாமி - மகன்:	16478789238
சிவராசா - மகன்:	14165682837
செல்வநாதன் - மருமகன்:	15148803488
தேவன் - மகன்:	41332234188
மணி - மகன்:	41332215473
சண்முகசுந்தரம் - மகன்:	94774322807
பாலசுப்பிரமணியம் - மருமகன்:	94779789839
திருஞானசம்பந்தமூர்த்தி - மகன்:	14169196840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப இரகசியம்

- குமார் புனிதவேல் -

அன்று நாள் முழுவதும் ரொறன்ரோவில் பனி மழை பொழிந்து கொண்டிருந்தது. வீட்டுக் காவலில் உள்ள கைதி போல் வீட்டில் அடைபட்டிருந்தேன். பொழுதை போக்குவதற்கு யாருடனாவது அரட்டைய டிக்கலாம் என்று தொலைபேசியைத் தொட்டேன். கனடாவில் இலவசமாக உள்ள ஒரு விடயம் உள்நாட்டுத் தொலைபேசி தொடர்புகள். இதனால் பொழுதுபோக்குச் சாதனமாக தொலைபேசி மாறிவிட்டது.

எனது பள்ளி நண்பன் சுந்தரம், தொலைபேசியை எடுத்தவுடன் சுகம் விசாரித்து விட்டு தனது வாழ்க்கையைப் பற்றி அலுத்துக் கொண்டான். அவன் மீது எனக்கு அனுதாபத்திலும் பார்க்க ஆத்திரம்தான் அதிகம் வந்தது.

கனடாவுக்கு புலம் பெயர்ந்து வந்தவேளையில் எங்கள் நண்பர்கள் பலரும் உணவகங்களிலும், காவலாளிகளாகவும் (security) பணியாற்றியபோது சுந்தரம் தனது படிப்புக்கு உகந்த வேலை பெற்றுக் கொண்டதுடன் நல்ல சம்பளத்திலும் இருந்தான். ஓய்வு பெற்றபின் ஓய்வூதியமும் RRSP சேமிப்புமாக நல்ல வருவாய் வருகிறது. அவனது இரண்டு பிள்ளைகளும் நல்ல உத்தியோகத்தில் இருப்பதுடன், மணம்முடித்து மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். கடனில்லா வீடும், காரும் என எல்லா வசதிகள் இருந்தும்... அவன் மகிழ்ச்சி இல்லா வாழ்க்கை வாழ்வதாக சலித்த போது, எனக்கு இரக்கத்திலும் பார்க்கக் கோபம்தான் வந்தது. அரட்டை முடிந்து தொலைபேசியை வைத்ததும் என் மனம் நடந்த நிகழ்வை அசைபோட்டது.

சுந்தரம் ஏன் மகிழ்ச்சி இல்லாதிருக்கிறான்? செல்வம்தான் மகிழ்ச்சிக்கு காரணம் என்றால் செல்வந்தர்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமே. ஆனால், பெரும்பாலான செல்வர்கள் கவலையுடன்தான் காணப்படுகிறார்கள். ஆரோக்கியமான உடம்பு மனமகிழ்ச்சியைத் தரும் என்றால் ஏன் பலவான்கள் பலர் பரிதாபமாக வாழ்கிறார்கள். எப்படி மகிழ்ச்சியை உண்டு பண்ணலாம் என யோசித்தபோது எனக்கு பெருஞானிகளும் அறிஞர்களும் துன்பத்திற்கான காரணங்கள் கூறியது ஞாபகத்திற்கு வந்தது.

முதலாவதாக புத்தபகவான் 'ஆசைதான் துன்பத்திற்கு காரணம்' என்று கூறிய வாசகம் நினைவுக்கு வந்தது. புத்தர் கூறிய வாக்கினை உறுதிப்படுத்துவது போல் திருவள்ளுவரும் தனது 341வது குறளாக

'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்'

என்று கூறிச் சென்றுள்ளார். அதாவது, எது எதில் பற்று அல்லது ஆசை வைக்கின்றோமோ அதனில் துன்பம் இருக்கும். இவ்விருவர் வாக்கையும் உறுதிப்படுத்துவது போல் திருமூலர் 'ஆசை அறுமின் ஆசை அறுமின் இறையோடாயினும் ஆசை அறுமின்' என்று கூறிச்சென்றார்.

மூவரும் துன்பம் தவிர்க்க வழி சொன்னார்களே அல்லாமல் இன்பம் வருவதற்கான வழியைக் கூற தவறிவிட்டார்கள்?

எமக்கு இன்ப உணர்வைத் தருவது என்ன? அதை அடைவது எப்படி என்று ஆராய்ந்த போது ஏற்பட்ட சில முடிவுகளை பகிர்ந்து கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

ஹோர்மோன் (hormone) எனும் வார்த்தையை யாவரும் பலமுறை கேட்டிருப்பீர்கள். ஹோர்மோன் எனப்படும் இயக்குநீர் உடலின் ஒரு இடத்திலிருக்கும் உயிரணுக்களை அல்லது கலங்களைப் பாதிக்கக்கூடிய, வேறு இடத்திலிருக்கும் சுரப்பிகளால் வெளிவிடப்படும் வேதியப் பொருள்கள் ஆகும். ஒரு மனிதனின் உடலில் அண்ணளவாக ஐம்பது வகையான ஹோர்மோன்கள் உண்டு. அவற்றில் நான்கு வகையான ஹோர்மோன்கள் மகிழ்ச்சியைத் தருகின்றன. அவற்றை எப்படிச் சுரக்கச் செய்யலாம் என அறிவது முக்கியமாகும். இவ்விடயத்தை சற்று விளக்கமாக நோக்குவோம்.

மகிழ்ச்சியை தோற்றுவிக்கும் நான்கு ஹோர்மோன்கள்: Endorphine - என்டோர்ஃபின்,

Dopamine - டோப்பமின், Serotonin - செரடோனின், Oxytocin - ஒக்சிடோசின் ஆகும்.

என்டோர்ஃபின்: இந்த ஹோர்மோன்கள் தேகப்பயிற்சி செய்கையில் அதிகமாகச் சுரக்கின்றன. இதனால்தான் பலர் தேகப் பயிற்சியை விரும்பிச் செய்கிறார்கள். ஒரு சாரசரி மனிதன் நாள் ஒன்றிற்கு அரை மணித்தியாலம் தேகப்பயிற்சி செய்தால் உடலுக்குத் தேவையான என்டோர்ஃபின்கள் சுரக்கப்படுகின்றன.

என்டோர்ஃபின் ஹோர்மோன்கள் சிரிப்பதினாலும் சுரக்கின்றன. எனவே நல்ல நண்பர்களுடன் நகைச்சுவையாக பழகுவது மற்றும் நகைச்சுவையான படங்கள், புத்தகங்கள் போன்றவற்றாலும் இந்த ஹோர்மோனைப் பெறலாம். நம் முன்னோர்கள் 'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்' என்றார்கள். இதில் ஒரு சுவையான துணுக்கையும் பகிரலாம் என்று நம்புகிறேன். 'யோகாசனத்தின் தந்தை என்று பதஞ்சலி மாமுனிவரைக் குறிப்பிடலாம். அவருக்கும் தெரியாத ஒரு யோகாசனமாக சிரிப்பு யோகா (laughing yoga) என ஒன்றை இக்காலத்தில் ஆரம்பித்துள்ளார்கள். இது போலியாகச் சிரிப்பது. இதில் என்டோர்ஃபின் சுரக்காது. உண்மையான பயன் வேண்டுமெனின் மகிழ்ச்சி ஆழ்மனதிலிருந்து வரவேண்டும். எனவே உண்மையான மகிழ்ச்சிக்கு நண்பர்களை நாடுங்கள், அல்லது நல்ல நாடகம், புத்தகங்களை நாடுங்கள்.

டோப்பமின்: மகிழ்ச்சிக்கு காரணமான இன்னொரு ஹோர்மோன் டோப்பமின். ஒரு மனிதனின் வாழ்க்கையில் பல தடைக்கற்களை கடப்பதால்தான் வெற்றியும் பூரணத்துவமும் அடைகிறது. இத்தகைய சிறியதும் பெரியதுமான வெற்றிகளைப் பெறும் வேளையில் டோப்பமின் சுரக்கின்றது. எமது வெற்றிகளுக்கு மற்றவர்களின் அங்கீகாரமும் வாழ்த்தும் டோப்பமின் சுரப்பதற்கு காரணிகளாகின்றன.

வகுப்பில் நல்ல புள்ளி எடுப்பதில் ஆரம்பித்து வேலையில் சேர்ந்து கார், வீடு என வாங்கிப் பின் காதல், திருமணம் என்று அமைந்து இப்படியே டோப்பமின் சுரப்பதற்கான பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். வேலையில் இருந்து ஓய்வு பெற்று இப்படியாக இலக்குகள் குறைந்து, இல்லாது போகும் போது டோப்பமின் சுரப்பது நின்று போகும்.

ஆனால் நீங்களாக உங்களுக்கு இலக்குகள் வைத்து அதனை அடைவதன் மூலம் மகிழ்ச்சியை உண்டு பண்ணலாம். நீங்கள் சித்திரம் வரைய கற்றுக் கொள்ளலாம். அல்லது பின்னல், தையல் என... இலட்சியங்களை செயற்கையாக உண்டு பண்ணி அதை அடைவதனால் டோப்பமின் சுரக்கச் செய்யலாம்.

செரடோனின்: இதனை அறத்தால் சுரக்கும் ஹோர்மோன் எனலாம். இந்த ஹோர்மோன் மிக்க மகிழ்ச்சியையும் திருப்தியையும் தரும். எம்மனைவரது பாட்டியுமான ஒளவையார் மகிழ்ச்சியாக இருப்பதற்கு இந்த ஹோர்மோன் அவசியம் என்பதால் ஆத்திசூடியில் முதல் வரியாக 'அறம் செய்ய விரும்பு' என்றார். அறம் செய்தால் மகிழ்ச்சிக்குரிய ஹோர்மோன்கள் சுரக்கின்றன. இதை இன்னுமொரு விதமாக வள்ளுவர் தனது 39வது குறளில் '*அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம் புறத்த புகழு மில*' என்றார்.

அறம் என்பது என்ன? அறம் பல்வேறு பரிமாணங்களில் இருந்தாலும் அடிப்படையில் மற்றவர்களுக்குக் கொடுப்பதே அறமாகும். பொருள் உள்ளவர்கள் பொருள் கொடுத்து மகிழ்ச்சியடைகிறார்கள். ஆனால் மற்றவர்களுக்கு செய்யும் சிறுசிறு உதவிகள் கூட செரடோனின் சுரக்கச் செய்யும். முதியவர் அல்லது இயலாதவர் வீதியைக் கடக்கத் தடுமாறும் வேளையில் அவருக்கு உதவுவது, தனிமையில் வாடும் ஒருவருடன் அன்பாக அமர்ந்து பேசுவது அறச்செயல்கள் ஆகும். பின் உதவி பெற்றவர் நன்றி கூறுகையில் மகிழ்ச்சிக்கு அளவில்லை.

அதிகம் கூறுவது எதற்காக? உதாரணத்திற்கு அங்கு இங்கு செல்லத் தேவை இல்லை. இக்கட்டுரையை எழுதுவதால் நான் பெறும் ஒரே ஊதியம் செரடோனின் சுரத்தலும் அதனால் ஏற்படும் மகிழ்ச்சியுமே!

ஒக்சிடோசின்: ஒக்சிடோசின் பற்றிக் குறிப்பிடுகையில் நடிகர் கமல்ஹாசன் நடித்த படத்தில் வந்த கட்டிப்பிடி வைத்தியத்தைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஒருவருடைய உடல் இன்னொருடைய உடலில் படும் வேளைகளில் ஒக்சிடோசின் சுரக்கும். தோளில் கைபோட ஒரு தோழன் இருந்தால், கட்டியணைக்க ஒரு நெருங்கிய உறவு இருந்தால் ஒருவருக்கு போதிய அளவு ஒக்சிடோசின் சுரந்த வண்ணமிருக்கும். முன்னைய நாளில் கூட்டுக் குடும்பங்கள் மகிழ்ச்சியாக இருந்தமைக்கு இதுவுமொரு காரணமாகும்.

எம்மில் பலர் அணைப்பதில் காம உணர்வைச் செருகி விடுகின்றோம். அது தவறான கருத்தாகும். ஒரு இழவு வீட்டில் எல்லாமே போய்விட்டது என குளறி அழும் ஒருவரை அல்லது வீட்டில் அடம் பிடித்து அழும் குழந்தையைக் கட்டி அரவணைத்தால் அவர்கள் மனவேதனை ஓடி மறைவதற்கு ஒக்சிடோசின் சுரப்பதுவே காரணமாகின்றது.

இப்போது மகிழ்ச்சியின் இரகசியத்தை அறிந்து கொண்டுள்ளீர்கள். அவை உடலில் சுரக்க வழி செய்தால் நீங்கள் மகிழ்ச்சியாய் இருப்பீர்கள்.

நாளாந்தம் குறைந்தபட்ச தேவையான தேகப்பியாசத்தை செய்யுங்கள். வசதியுள்ளவர்கள் தேகப்பியாச சாலைகளில் தேகப்பியாசம் செய்யலாம். அல்லாதவர்கள் வீதியோரமாக அல்லது அருகில் உள்ள அங்காடிகளில் (mall) நடக்கலாம். இதனால் போதிய அளவு என்டோர்ஃபின் சுரப்பதை நிச்சயப்படுத்தலாம்.

டோப்பமின் சுரப்பதற்கு மற்றவர்கள் உங்கள் சாதனையை மெச்ச வேண்டும். நீங்கள் பணியிலிருந்து ஓய்வு பெறலாம், ஆனால் வாழ்விலிருந்து ஓய்வுபெற முடியாது. ஓய்வு பெறுபவர்களுக்கு பொழுது போக்கு (hobby) அவசியம். தையல், மாலை கட்டுதல், சித்திரம், சிற்பம் போன்ற பணிகளில் உங்களை ஈடுபடுத்தி உற்சாகமாக வைத்திருக்கலாம். உங்களில் பலருக்குத் தெரியும் எமது முதியவர்கள் குப்பையில் எறியப்படும் பாற்பைகளைக் கொண்டு இரண்டரை தொன் பாய்கள் செய்து பின்னடைந்த நாட்டு மக்களுக்கு கொடுத்ததால் தாமும் மகிழ்ந்தார்கள். மற்றவர்களையும் மகிழ்வித்தார்கள்.

செரடோனின் சுரப்பதற்கு கொடையும் உதவிகளும் செய்யலாம். ஒருவருக்குக் கதவு திறந்து விடுவதாலும், பாதை கடக்க உதவுவதாலும் கூட செரடோனின் சுரக்கச் செய்து மகிழ்ச்சியடையலாம். இன்று வைத்தியசாலைகள் போன்ற இடங்களில் பல முதியவர்கள் தன்னார்வத் தொண்டு செய்வதும் செரடோனின் சுரப்பதற்கே.

ஒக்சிடோசின் சுரப்பதற்கு பல தோழர்களை உடன் வைத்திருங்கள். வருந்திய வரை அணைத்து ஆதரவு காட்டுங்கள். நண்பர்களும் உறவுகளும் சூழ வாழப் பழகுங்கள்.

மகிழ்ச்சி உங்கள் வாழ்வின் அடிப்படை உரிமை. அதை மறுக்க யாராலும் முடியாது. உங்கள் மகிழ்ச்சியான வாழ்வுக்கு எனது வாழ்த்துகள். இப்படி வாழ்த்துவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

kumar.punithavel@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கடன், வியாபாரக்கடன், தனிப்பட்டகடன் தேவைகளுக்கு என்னை முதலில் அழையுங்கள்

வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்

Mortgage for:

- Self Employed
- New Immigrant
- Investment
- Transfer between family
- Bad Credit
- Second Mortgages

Business Mortgage & Loan :

Personal Line of Credit & Loan

* some conditions apply

KAPITAL CARE MORTGAGE INC. Lic:-12623

416.873.5780

கேதீஸ் சிவசுப்பிரமணியம்

Mortgage Agent - (Lic # M08006105)

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RE/MAX
NORTH REALTY

உலகின் முன்னணி காணி,
வீடு விற்பனை நிறுவனமான
RE/MAX முதல் தடவையாக யாழ் மண்ணில்
கனடாவிலிருந்து தாயகத்தில் எப்பாகத்திலும் வீடு காணி
வாங்க விற்க சிறந்த ஒரு நண்பர் உங்களை வழிநடத்த

AWESOME GUEST HOUSE FOR SALE IN NALLUR

Total land size 40 perch and 021 kulies. This house constructed in 2460 sq.ft from whole land size. This house consists of 4 bedrooms with attach bathrooms, 2 large hall and well organized kitchen. That's beautifully placed in rich, peaceful and vibrant area.
Situated in a family-friendly neighborhood and this guest house is sure to go fast.

Features & Amenities
- Electricity facilities
- Well
- A/C for each rooms
- 4 side by wall
- Attractive Fish Pond
- Exotic flower Garden
- Driver's room
- Parking space available

நல்லூரில் அற்புதமான விருந்தினர் இல்லம் விற்பனைக்கு
[illegible]

Rs 75,000,000 **CAD $577,004**



HOUSE FOR SALE IN ATHURUGIRIYA

Property with
- 3 bed rooms • Living
- Dinning • Bathroom
- Servant toilet • Car port
- Turfed garden
- Only master bed room is tilled
- Boundary wall with gate, Water/electricity

The property is situated at the main junction in Athurugiriya (On Malabe-Borrella Rd). Opposite the Sampath Bank.
Walking distance to Arpico Super Center, P&S, Keels Super Market, Main Bus Stand, Seylan Bank, NSB, NDB, NT and the Bank of Ceylon.
14.50 Perches and 10 feet concrete road, boundary wall with gate, water, electricity, approved plans and clear deed.

Rs. 14,900,000 **CAD $120,915**

BEAUTIFUL HOUSE FOR SALE IN MANNAR
Land Size - 22 Perch
Rs 16,500,000 **CAD $122,741.53**



HOUSE FOR SALE IN UDUVIL
Land size - 976 SQFT - Two bedroom house
Rs 13,500,000 **CAD 103,500**

HOUSE WITH SHOP FOR SALE IN ALAVEDDI
Land Size - 25 Perch
RS 5,000,000 **CAD $37,222.63**

HOUSE FOR SALE IN KONDAVIL
House Size - 20 Perch
Rs 4,000,000 **CAD $30,515**

SPACIOUS LAND & WITH HOUSE FOR SALE IN KODIKAMAM
Land Size - 190.5 Perch
Rs 5,500,000 **CAD $41,975**

LAND WITH HOUSE FOR SALE IN TRINCOMALEE
Land Size - 32 Perch
Rs 18,500,000 **CAD $141,289**

LAND WITH HALF BUILD HOUSE IN UPPUWELI, TRINCOMALEE
Land Size - 10.05 Perches
Rs 13,600,000 **CAD $104,582**

2 STORY HOUSE FOR SALE IN POINT PEDRO
Land Size - 7.5 Perch
Rs 4,500,000 **CAD $ 33,956**

LAND FOR SALE IN 3RD CROSS ST, PAASAIYOOR, JAFFNA
Land Size - 30 Perch
Rs 3,500,000 **CAD $25,592**

FARM LAND FOR SALE IN VASAVILAN
Land Size - 840 Perch
10 Perch Rs 350,000 CAD $2,570.96

வீடு, காணி வியாபாரம் வாங்க விற்க
நம்பிக்கையுடன் நாடுங்கள் நட்பான
விற்பனை முகவர்கள் ஒரே முகவரியில்

+94 77 566 0000 | 021 468 0780
www.remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna, Sri Lanka

LIYANA JERAD
REAL ESTATE REPRESENTATIVE
+94 77 221 5649

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரிக்கப் புழுதியும் அறியப்படாத உண்மைகளும்

- உமை பற்குணரஞ்சன் -

இருவெதிர்ப் பைந்தூறும் கூர் எரிநைப்ப
நிழத்த யானை மேய்ப்புலம் படர...
நிழல் உரு இழந்த வேனில் குன்றத்து
பாலை சான்ற சுரம் சேர்ந்து ஒரு சார்

- மதுரைக்காஞ்சி: 301-314

நிலம், நீர், பொழுது, இயற்கயோடு இழைந்தோடிய மனித வாழ்வை இயைபு-படப் பாடும் திணை இலக்கியம் மருத மும் மழையும், முல்லையும் பசுமையும், குறிஞ்சியும் குளிர்மையையும், நெய்தலும் வணிகமும் என மேற்படி நிலங்களின் வளங்களை விபரித்துவிட்டு வேண்டாத கருப்பொருளான வெப்பமும் வறட்சியும் வறுமைக்கு வித்திட்டதாலோ என்னவோ பாலையைப் புகழ்ந்து பாடவில்லை. சங்கப் பாடல்கள் பலவற்றில் பாலை நிலங்கள் கொலைத் தொழில் புரியும் கள்வர்கள் வாழும் நீரற்ற வறண்ட பகுதியென்றும் அவ்வழியால் பயணம் செய்யும் வழிப் போக்கர்கள் மிகுந்த துன்பத்திற்கு ஆளானார்கள் என்றும் கூறுகின்றன. இவ்வாறாகப் புலவர்களால் கொடிய தன்மையன வாகப் பாடப்பட்டதற்குக் காரணம், அந் நிலத்தின் சூழல், கொடிய தன்மை வாய்ந்ததாக விளங்கியமையே ஆகும். இக்கொடிய தன்மைக்குக் காரணம், வெப்பமும் வறட்சியுமே.

சாளரத்தின் வழியே நூலிழையாக கீழிறங்கி வரும் காலைவெயில், அறுவடைக்கு காத்திருக்கும் வயல்வெளிகளுக்கு தங்க நிறம் தீட்டும் உச்சி வெயில், மாலையில் மேகத்துக்கு மஞ்சள் அரைத்து பூசும் அந்திவெயில், கோடை காலத்தில் கொதிக்கும் தார்ச்சாலைகளில் கொழுந்து விட்டு எரியும் அனல் வெயில் என பன்முகம் காட்டும் வெயில், நமக்கு எப்போதுமே பரிச்சயமானதுதான். ஏனெனில் வெண்மையோ கருமையோ வெயிலோடு விளையாடிய காலங்களே எம் வாழ்வில் பசுமையானவை.

இவ்வாறு பன்முகம் காட்டும் வெயில் திக்குத்தெரியாமல் கரைகளற்று ஓடும் நதியென பரவி நின்று காலம் காலமாகத் தேக்கிவைத்த வன்மத்தைக் கக்கியபடி ஊர்ந்து திரிந்து தனது மூர்க்கத்தனமான கோர முகத்தை பாலைவனங்களில் மட்டும் முற்று முழுதாக வெளிப்படுத்துகிறது. வளைந்து நெளிந்து செல்லும் காற்றின் காலடித்தடங்களின் வழியே அலையலையாய் ஓடும் கானல் நீரோடைகளில் வெயிலைக் குடித்து வாழும் பாலை நிலங்கள் பூமியின் நிலப்பரப்பில் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பாகத்தை பற்றியிருக்கின்றன என்றால் பாலையின் பெருமை பேசும் தகவன்று. திசைகள் திறந்து, வான்வெளித்து, வெயில் குடித்துக்கிடக்கும் பாலையையும் அங்கே உஷ்ணப் பிரம்பெடுத்து ஓடோட விரட்டும் அனல்காற்றில் பறந்தெழுந்து பரவும் புழுதியையும் கீழுள்ள கட்டுரை விபரிக்கின்றது

புவியியலின் படி எப்பகுதி மிகக்குறைந்த மழைப்பொழிவைப் பெறுகிறதோ அது பாலைவனம் எனப்படுகிறது. பொதுவாக ஆண்டுக்கு 250 மி.மீ. க்கும் குறைவாக மழைப்பொழிவைப் பெறும் பகுதிகள் பாலைவனங்கள் எனப்படுகின்றன. ஆப்பிரிக்காவின் வடபகுதியில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரிய சுடு பாலைவனம் சஹாராவாகும் 9,000,000 சதுர கிலோமீட்டர்கள் பரப்பளவுடைய (3,500,000 சதுர மைல்கள்) இப்பிரதேசம் ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அளவுக்கு பெரியதாகும்

ஆபிரிக்கக் கண்டத்தின் வடக்கே அமைந்துள்ள இப்பாலைநிலத்திற்கு மேற்கில் அட்லாந்திக் கடலும் வடக்கில் அட்லஸ் மலை மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிகளும் கிழக்கில் செங்கடலும், தெற்கில் சூடானும் எல்லைகளாக உள்ளன. ஆப்பிரிக்காவின் 31% பகுதி சஹாராப்பாலை வனத்தால் சூழப்பட்டுள்ளது. அல்ஜீரியா, சாட், எகிப்து, எரித்திரியா, லிபியா, மாலி, மேரிடெனியா, மொரோக்கோ, நைகர், சூடான், டியூனீஷியா, மேற்கு சஹாரா ஆகிய பன்னிரண்டு நாடுகள் வரை இப் பாலைவனம் பரந்துள்ளது. சஹாரா தெற்கு எல்லையாக சகேலில் எனும் சவன்னா புல்வெளி உள்ளது. சகேலிலிற்கு தெற்கே தெற்கு சூடான் நாடும் காங்கோ வடிநிலப் பகுதியும் உள்ளன.

சற்று வித்தியாசமான புவியியல் அமைப்பைக் கொண்ட இப்பிரதேசம் மணற்குன்று,

மணற்கடல், கற்பீடபூமி, காய்ந்த பள்ளத்தாக்கு, உப்புத் தகடுகள், மலை, ஓடை, பாலைவன சோலை, நதிகள் என்பவற்றைக் கொண்டுள்ளது. பாலைவனத்தின் மத்திய பகுதி மிகவும் வறண்டது. பல ஆண்டுகள் மழைபெய்யாத நிலத்தில் ஆங்காங்கே வரண்ட நிலைத் தாவரங்கள் காணப்படும். வடக்கு மற்றும் தெற்கு பாலைவனப் பகுதிகளானது, மலைப்பகுதியூடாக, சிதறிய புல்வெளி மற்றும் பாலைவனப் புதர் பகுதிகள், மரங்கள் மற்றும் உயரமான புதர்கள் போன்றவற்றைக் கொண்டதாக உள்ளது.

நைகர் நதியும் நைல் நதியும் சஹாராவில் பாயும் வற்றாத நதிகளாகும் இவற்றை விட பல சிற்றாறுகள் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே பாய்கின்றன இங்குள்ள சில மிக உயரிய மலைப்பிரதேசங்களில் கோடை காலங்களிலும் பனி படர்ந்திருக்கும். இதனால் உலகிலேயே அதி வெப்பம் மிகுந்த பாலைவனமாகக் கருதப்பட்டாலும் சஹாராவானது முற்று முழுதாக வறண்ட பகுதியல்ல, சில இடங்களில் நிலத்தடி ஆறுகளும் ஓடுகின்றன. இவை நில மேற்பரப்புக்கு வரும் இடங்களில் பாலைவனச் சோலைகள் காணப்படுகின்றன. பாலைவனங்களில் பகலில் இருக்கும் வெப்பத்திற்கிணையான குளிர் இரவு நேரத்தில் காணப்படும். இப்பிரதேசத்தின் வடக்கு மற்றும் தெற்கு முனைகளில் சில புல்வெளிகளைக் கொண்டுள்ளன. குறைந்த மழைப்பொழிவைப் பெறுகின்றன. ஆனால் மத்திய சஹாரா சிலசமயம் பல ஆண்டுகளுக்கு எவ்விதமான மழைவீழ்ச்சியும் காணாத வறண்ட பிரதேசமாகக் காணப்படும்.

1200 வகையான வரள் நிலத் தாவரங்களுடனும் 70 வகையான விலங்குகளோடும் பாலைவனத்தின் சிலப்பகுதிகளில் பெர்பெர் (Berber) என்ற பழங்குடி மக்களும் வாழ்கின்றனர். இவர்களைத் தவிர துவாரக்கு (Tuareg) எனப்படும் இனக்குழுவினரும் நைஜர், மற்றும் மாலியின் சகாராவை ஒட்டிய பகுதிகளில் வாழ்கிறார்கள். ஆனாலும் இவர்கள் நாடோடிகளாக வாழ்வதால் இவர்களில் சிலர் தமது எல்லையை விட்டு வெளியேறி, தென்கிழக்கு அல்ஜீரியா, மற்றும் தென்மேற்கு லிபியா, வடக்கு புர்க்கினா பாசோ போன்ற பகுதிகளுக்குச் சென்று அங்கு குடியேறியுள்ளனர். இவர்களுள் பெரும்பாலானோர் நாடோடிகள். மதிப்பீடுகளின்படி, சஹாராவின் மொத்த மக்கள் தொகை கிட்டத்தட்ட இரண்டு மில்லியனுக்கும் குறைவானதாகும். கிழக்கு லிபியா, மேற்கு லிபியா, மற்றும் சஹாரா பாலைவனம் முழுவதிலும் பல பெர்பெர் பழங்குடியினர் உள்ளனர். இப்பழங்குடியினர் பாலைவனத்தில் பன்நெடுங்காலத்திற்கு முன் வாழ்ந்த மக்களின் சந்ததி வழி வந்தவர்களாவர்

அமெரிக்கா சிக்காக்கோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Dr. Paul Callistus Sereno எனும் தொல்லுயிரியல் துறைப் பேராசிரியரும் அவரது குழுவினரும் 2000ம் ஆண்டு நைஜர்(Niger) பகுதியில் உள்ள கோபரோ (Gobero) எனப்படும் தொல்பொருள் ஆய்வு மையபகுதியில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வு நடவடிக்கையின் இரண்டு தனித்துவமான வரலாற்றுப் பண்பாடுகளுக்கான தொல்லியல் ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை, ஆரம்பகாலமான ஹோலோசீன் காலப்பகுதிக்கான கிஃபியன் (Kiffians) கலாசாரம், நடுத்தர ஹோலோசீன் காலத்துக்குரிய டெனரியன் (Tenerians) கலாசாரம் போன்றதைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. 'Green Sahara,' என அழைக்கப்பட்ட பசுமையான 'ஆப்பிரிக்காவின் ஈரப்பதக் காலம்' (African humid period) 10,000 - 6,000 காலம் வரை நீடித்தது என ஆய்வுகள் கூறுகின்றன. அது மட்டுமன்றி தென்மேற்கு எகிப்தின் லிபிய எல்லை அருகே உள்ள Gilf Kebir எனும் பீடபூமியில் காணப்படும் வரலாறுக்கு முந்திய குகை ஓவியங் கள் இங்கு வாழ்ந்த மனிதர்கள் வாழ்க் கையினை பிரதிபலிக்கின்றன

நாசாவின் விண்வெளி ஆராய்ச்சிக்கான கோடார்ட் நிறுவனத்தைச் (NASA's Goddard Institute for Space Studies) சேர்ந்த காலநிலை விஞ்ஞானியான Gavin Schmidt சுமார் 5000 முதல் 8000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட காலநிலை மாற்றம் பூமியின் சாய்வின் கோணத்திலும் அதன் சுற்றுப்பாதையின் வடிவத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியதாக கூறுகிறார் பூமியின் சாய்வுக் கோணம் சாய்வு 24.1 டிகிரிலிருந்து 23.5 டிகிரி வரை மாறியதால் பருவநிலை மாற்றம் காரணமாக சகாரா படிப்படியாக பாலைவனமாக மாறி இருக்கலாம் என நாசாவின் மேற்படி ஆய்வறிக்கை கூறுகிறது. வறட்சி காரணமாக அங்கு வாழ்ந்த மக்கள் கூட்டம் வடகிழ ஆப்பிரிக்காவின் புராதன பகுதியான நுபியா எனப்படும் நைல் நதி பள்ளத்தாக்குகளை அண்மித்த பிரதேசத்திற்கு குடிபெயரத் தொடங்கியது. இவர்கள் மந்தைமேய்ப்பு, மட்பாண்டம், விவசாயம் போன்ற தொழில்களை மேற்கொண்டனர். நூபியாவின் நாகரிகம் இன்றைய சூடானின் எகிப்தின் தெற்கு பகுதியில் அமைந்துள்ளது. ஒரே காலப்பகுதியில் காணப்பட்ட எகிப்திய, நுபிய நாகரீகங்கள் பலவிதங்களில் ஒற்றுமை கொண்டவை. பண்டைய எகிப்தியர்கள், சஹாரா இறந்தவர்களின் நிலமாக இருப்பதாக நம்பினர், பாலைவனத்தில் சூரியன் மறையும் இடத்தில் இறந்தவர்களின் ஆன்மா இளைப்பாறுவதாகக் கருதினர்.

சுமார் கி.மு. 1000 - அதாவது இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பு தற்போதுள்ள லிபியாவை அண்மித்த பிரதேசமான Fezzan என்று அழைக்கப்பட்ட இடத்தில் வாழ்ந்த கரம்மாண்டஸ் (Garamantes) எனும் பழங்குடி மக்கள், அவர்கள் நாகரிகம் (Garamantian civilization) பற்றி கிரேக்க சரித்திராசிரியரான ஹிரோடோட்டஸ் (Herodotus) அவர்களால், சுமார் கி.மு5ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பழங்குடி மக்கள் ஒட்டகங்கள், குதிரைகள் போன்ற

தொடர்தல் 60ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரிக்கப் புழுதியும்...

59ம் பக்கத் தொடர்ச்சி...

விலங்குகளைப் பயன்படுத்தினார்கள். மந்தை வளர்ப்பு, வணிகம் போன்ற தொழிலை மேற்கொண்டனர். கோதுமை, அத்தி, திராட்சை, பார்லி போன்றவற்றை உணவுத் தேவைக்குப் பயிரிட்டார்கள். போர்த் திறனில் சிறந்து விளங்கினார்கள். செங்கல்லால் கட்டப்பட்ட வீடுகளில் வாழ்ந் தார்கள் என்றும் வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன.

மேற்படி வரலாற்றுப் பதிவை உறுதிப்ப டுத்தும் வகையில் தொல்லியல் ஆராய்ச் சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் திரிப் பொலிக்கு (Tripoli) தெற்கே 620 மைல்கள் தொலைவில் சஹாராப்பகுதியில் அமைந் திருக்கும் சிதைந்த நிலையில் உள்ள கோட்டைகள், மட்பாண்டச் சிதைவுகள் தற்போது உள்ள இஸ்லாமிய சகாப்தத் திற்கு முன்னர் இழந்த அல்லது தொலைந்து போன சஹரன் நாகரீகமான Garamantes civilization, ஹோலோசீன் காலப்பகுதிக்கான கிஃபியன் கலாச்சாரம் மற்றும் நடுத்தர ஹோலோசீன் காலத்துக் குரிய டெனரியன் (Tenerians) களின் தொடர்ச்சியாக இருக்கலாம் எனக் கரு தப்படுகிறது.

கி.மு.500 அளவில் கிரேக்கர்கள் சஹாரா வின் கிழக்கு கரையோரமாக தங்கள் வர்த்தகக் குடியேற்றங்களை நிறுவத்தொ டங்கினர். சஹாராவின் வரலாற்றில் மிகப் பெரிய மாற்றம் அரபுப் படையெடுப்புடன் ஆரம்பித்தது. ஆப்பிரிக்காவில் ஐரோப்பி யர் கால் பதிப்பதற்கு முன்னர், அதாவது 19ம் நூற்றாண்டு வரையில் சஹாரா பாலைவனத்திற்கு ஊடான சர்வதேச வர்த் தகம், துவாரக் பழங்குடி வியாபாரிகளின் கைகளில் இருந்தது. மனித அடிமைகள், யானைத் தந்தம், தங்கம் போன்றவற்றை வடக்கு நோக்கி எடுத்துச் சென்றனர். தெற்குநோக்கி உப்பை கொண்டு சென்ற னர். இவ் வணிகப் பயணங்களை பாலை வனத்தினூடாக சிரமமின்றி மேற்கொள்ள துவாரக் இனக்குழுவினருக்கு இப்பகுதி யின் நிலவியல் அறிவைக்கொண்ட பெர் பெர் இன நாடோடிகள் உதவியாகவிருந் தனர்.



உலகின் ஏனைய பாலைவனங்களுடன் ஒப்பிடும் போது சஹாராப் பாலைவனம் அதிகளவு தூசியை வளிமண்டலத்திற்கு விடுவிக்கிறது. புழுதிப் புயல் (dust storm) அல்லது மணற்புயல் (sandstorm) எனப்படுவது வறண்ட அல்லது பகுதி- வறண்ட பகுதிகளில் ஏற்படும் ஒரு வானி யல் நிகழ்வாகும். இது காற்று மண்டலத் தின் வேகம் ஒரு குறிப்பிட்ட வேகத்தை விட அதிகரிக்கும் போது மணல் மற்றும் தூசிகளை வறண்ட நிலங்களில் இருந்து அகற்றி தன்னுடன் எடுத்துச் செல்வதால் புழுதிப் புயல் ஏற்படுகிறது. பாலைவனத் தில் அடிக்கடி நிகழும் புழுதிப் புயலால் இங்குள்ள கனிமங்கள் நிறைந்த மண் காற்றோடு காற்றாக அட்டிலான்டிக் பெருங் கடலைக் கடந்து சென்று தென்னமெரிக் காவின் வடபகுதி மத்திய அமெரிக்கா வின் தென் பகுதியை அண்டிய பகுதிக- ளில் விழுகிறது. இவ்வாறு வந்தடையும் மண்ணின் ஒரு பகுதி கடலில் கலக்கிறது.

மேலும் இத்தூசுப் புயல் மத்தியதரைக் கடலோரப் பகுதியிலும் வடக்கு ஐரோப் பாவின் பல நாடுகளுக்கும் பயணிக்கிறது. காற்றின் வேகத்திற்கும் திசைக்கும் ஏற்ப மத்தியதரைக் கடலைக் கடந்து பல்கேரியா, ருமேனியா, உக்ரைன், ரஷ்யா வரை பயணிக்கும் இந்தத் தூசுப்படலம் கடந்த ஆண்டின் பிற்பகுதியில், கிழக்கு ஐரோப்பா மற்றும் ரஷ்யாவில் செம்மஞ் சள் நிற பனிப்பொழிவினை ஏற்படுத்தக் காரணமானது.

சஹாராப் பாலைவனத்திலிருந்து வருடத் திற்கு சுமார் நாற்பது மில்லியன் தொன் மணலானது காற்றில் கலந்து, அத்திலாந் திக் கடலின் மேலாக ஆயிரத்தி அறுநூறு மைல்கள் பயணித்து, உலகிலேயே மிகப் பெரிய மழைக்காடான தென்னமெரிக்க கண்டத்தில் உள்ள அமேசான் காடுகளைச் சென்றடைகிறது. இதன் மூலம், வருடத் திற்கு சுமார் 22,000 டன் பாஸ்பரஸ் (Phosphorous) அமேசான் காடுகளுக்குக் கிடைப்பதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் கூறுகிறது. அமேசான் காடுகளில் பொழியும் தொடர் மழையால் மண்ணுக்குத் தேவையான முக்கிய சத் தான பாஸ்பரஸ் மழை நீரால் அடித்துச் செல்லப்படுகிறது. இப்படி இழக்கப்படும் பாஸ்பரஸை, சஹாரா பாலைவனத்திலி ருந்து கொண்டு வரப்படும் பாஸ்பரஸ் ஈடு செய்கிறது. மேலும் இது அதிக அளவு இரும்பு ஆக்ஸைடையும் கொண்டது. இதுவே பாலைவன மண்ணின் செந்நிறத் திற்கு காரணம்.

நாசாவின் Cloud-Aerosol Lidar and Infrared Pathfinder Satellite Observation, கலிப்ஸோ CALIPSO என்ற செயற்கைக் கோளின் துணை கொண்டு தொடர்ந்து பல ஆண்டுகள் பெறப்பட்ட புகைப்படங் களை வைத்து எடுக்கப்பட்ட ஆய்வுகள், கணிப்புகள், தரவுகளின்படி வருடத்திற்கு ஏறக்குறைய 180 மில்லியன் தொன் மணல் புழுதியாக அட்லாண்டிக்கைக் கடக்கிறது என முடிவுகள் தெரிவிக்கின்றது.

ஒவ்வொரு இடத்தின் மண்ணுக்கும் ஒரு குறிப்பிட்ட வேதிக்கலவை உண்டு. புவி- வேதியியலில்(Geochemistry) இதை புவி வேதிக் கலவை அமைப்பு என்கிறார்கள். அமேசான், மத்திய அமெரிக்கத் தீவுகள், ஃப்ளோரிடா பிரதேசங்களில் இருக்கும் மண்ணுக்கு ஆப்ரிக்க மண்ணின் புவிவே திக் கலவை அமைப்பு இருப்பது மேற் கூறிய நாசாவின் ஆய்வு முடிவை மேலும் வலுப்படுத்துகிறது.

இந்தப் புழுதிப் புயல் அமெரிக்காவின் கடற்கரையை அண்டியுள்ள பகுதிகளில் நிகழும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் மற்றும் சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களின் கணிசமான அளவு செல்வாக்குச் செலுத்துகின்றது. அதாவது இப் புயல் அத்திலாந்திக் படலைக் கடக் கும் போது அப்பகுதியிலுள்ள காற்றின் ஈரம் உறிஞ்சும் தன்மையை குறைப்பதுடன் கடலில் விழும் சூரிய வெப்பத்தின் அள வையும் குறைக்கின்றது. இதனால் கடல் காற்றழுத்தம் உருவாவது குறைக்கப்படு கிறது எனவும் அறியப்படுகிறது.

மேலும் இப்புழுதியிலுள்ள இரும்புச் சத் தானது கடல் மட்டத்தில் வாழும் பைடோ பிளங்க்டன் (phytoplankton) எனும் நுண் ணுயிர் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது. இது ஒளிச் சேர்க்கையின் மூலம் வளி மண்டலத்தில் உள்ள கரியமிலவாயு வாயுவை உறிஞ்சி புவி வெப்பமடைவதை தடுக்கிறது.

சஹாரா மனிதரின் சாமர்த்தியத்துக்கு ஒரு சவால். மணற்காற்றின் வேகத்தில் காற்தடங்களின் சுவடுகள் அத்தனையும் சுத்தமாக அழிந்துவிடும். கானல் என்ற மாயலோகத்தைக் காட்டி எளிதில் ஏமாற் றிவிடும். கையளவு கூட இல்லாத ஒரு சின்னப் பறவையை நெடுந்தூர மணல் குன்றில் ஒரு ஒட்டகத்தைப் போல் தோற் றம் காட்டிப் பிரமை எழுப்பும். தட்டையான மணல் வெளியை ஒரு குளிர்ந்து பரந்த ஏரி போல் விரித்துக் காட்டும். ஒரு மனித ரின் எலும்புக் கூட்டை ஒரு பெரிய அடுக்கு மாளிகை போல் நிறுத்திக் காட்டி ஒரு நகரத்தின் சமீபம் வந்து விட்டதாக ஏமாற்றும். இவற்றையும் கடந்து மனித நாகரிகத்திற்கு வெகுதூரம் தாண்டி பரந்த பாலை வனங்களில் வெயிலையும் புழுதியையும் விருப்புடன் சுவாசித்துக் கொண்டு இன்னமும் ஒரு மக்கள் கூட்டம் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறது. பாலை வனம் அன்னியர்களை உள்ளே விடாமல் அலைக்கழிக்கும் குணம் கொண்டது. அங் கேயே பிறந்து வாழும் தன் மக்களுக்கு அதன் ரகசியங்களைப் பகிர்ந்து கொள் ளும் மனப்பான்மை கொண்டது. இதனால் தான் கற்காலம் தொடக்கம் இக்காலம் வரை வாழும் பழங்குடி இனத்தவர்களிற் கும் இப்பாலை மண்ணிற்கும் உள்ள பிரிக்க முடியாத உயிர்ப் பிணைப்பும், நேசமும் காலங்கடந்தும் உறுதியாக உள் ளது.

உசாத்துணை:

- https://oi.uchicago.edu/museum-exhibits/ history-ancient-nubiaOLD
- https://paulsereno.uchicago.edu/discoveries/ people_of_the_green_sahara/
- https://wasscehistorytextbook.com/2-trans-saharan-trade-origins-organization-and-effects-in-the-development-of-west-africa/
- https://www.sciencedaily.com/releases/2015/02/ 150224102847.htm

umai.p@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Are you **HARD TO INSURE?**

உங்களுக்கான **காப்பீட்டைப் பெற்றுக் கொள்ள கடினமாக உள்ளதா?**

*Have you ever been **REFUSED LIFE INSURANCE** in the past?*

NO MEDICAL

for up to $500,000 in coverage

தற்போது $500,000 வரையான காப்புறுதியை **மருத்துவப் பரிசோதனைகள் எதுவும் இன்றி** இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

Payments start in the 2ND MONTH*

*Applicable on monthly payment plans only.

Call us today

Bamathi Ramthas, CLU, CHS
905-999-8023

Karthiga Gnanachandran, CLU, CHS
416-909-7805

iNFORCE LIFe Financial Services Inc.
Delivering Promises. Building Trust.

Canada Protection Plan®
Simply Peace of Mind

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

MORTGAGE NESAN
416-908-5656

Residential / Commercial / Industrial / Investment Properties

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	659.62	1319.25	1429.19	2858.37
546,000	515.98	1031.96	1117.96	2235.92

1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	765.04	1530.08	1657.59	3315.17
546,000	598.44	1196.88	1296.62	2593.24

Private Mortgage ('C' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	1059.81	2119.62	2296.26	4592.52

2nd Mortgage ('D' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
98,000	179.15	358.29	388.15	776.30

3rd Mortgage ('E' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
49,000	113.72	227.43	246.39	492.77

Secure Line of Credit & Loan

Mortgage Amount	Secure Line of Credit	Home Equity Loan
225,000	1005.95 / per month	1276.51 / per month

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலிப் பிரவேசம்

- சோக்கல்லோ சண்முகநாதன் -

ஒரு கலைஞனின் கதை

1994 இன் பின் ஒருநாள் காலை நேரத்தில் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத் தின் கருமபீடத்தின் முன்நின்று, ஆங்கி லத்தில் ஒரு சிறு படிவத்தை நிரப்பிக் கொடுத்துவிட்டு ஆசனத்தில் அமர்ந்து கொள்வதற்காகத் திரும்பியபோது, 'you can go in' என்ற வரவேற்பாளரின் குரல் கேட்டு அவர் தந்த அனுமதிச் சீட்டோடு உள்ளே சென்றேன்.

இது வி.என். மதியழகனின் அறை. அங்கே மதியழகனோடு பேராசிரியர் சி. தில்லைநாதன், பிரேம்ஜி, ஞானசுந்தரம் ஆகியோரும் அமர்ந்திருந்தனர். பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இருந் தது. மூவரும் எனக்கு மிகவும் இஸ்டமா னவர்கள். மதியழகன் புதிதாகப் பணிப் பாளராக பதவி ஏற்றிருந்த காலம். நாட் டின் பிரதமராக திருமதி. ஸ்ரீமாவோ பண் டாரநாயக்கா அவர்களும், ஜனாதிபதியாக திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்களும் பதவியில் இருந் தார்கள்.

மூவரும் அகமும் முகமும் மலர என்னை வரவேற்று, குசலம் விசாரித்து, மீண்டும் வேலையைத் தொடங்கலாமே என்றனர். நானும் அந்த நோக்கத்தோடுதான் அங்கு போயிருந்தேன். நான் ஏற்கெனவே அங்கு 'கெஸ்ட் புறடியூசராக' வேலை செய்த வன்தான். அரசு மாற்றத்தால் நானாக தொடர்ந்து குறிப்பிட்ட நிகழ்ச்சியை தயா ரித்தளிக்கவில்லை. கிராமிய நிகழ்ச்சி, விவசாயிகள் சம்பந்தப்பட்டது. 'கிராமவ ளம்', 'புதிய பாதை புதிய உலகம்' என்ற மகுடங்களின் கீழ் தயாரித்து அளிக்கப் பட்டது. கிராமங்களிலும், வயற்காடுகளி லும் தோட்டங்களிலும் ஒலிப்பதிவு செய் யப்பட்டது. நிலையத்திலிருந்து காவலூர் இராசதுரை, வாசகர், ஸ்ரீஸ்கந்தராசா, பத்- மநாதன் போன்றோரின் மேற்பார்வையில் இது நடைபெற்றது. கிராமத்துக் கலை ஞர்களின் கலை வடிவங்கள், விவசாயிக- ளின் பெருமுயற்சிகள், அவரின் தேவைகள் இவற்றையெல்லாம் வாரந்தோறும் அறி- முகப்படுத்தினோம்.

மதியழகனின் வேண்டுகோளின்படி எடுத்த எடுப்பிலேயே 'நடைச்சித்திரங்கள்' எழுதி- னேன். அன்றாடம் ஊரில் நடக்கின்ற சம் பவங்களை வைத்து, கிராமிய பேச்சு வழக்கில் திண்ணைப்பேச்சு போன்ற வடி வத்தில் இது அமைந்தது. எல்லோரிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றது.

இதற்கு தயாரிப்பாளராக உருத்திராபதி நியமிக்கப்பட்டார். இவர் ஏற்கனவே லிகி தராகப் பயில்களோடு வாழ்ந்து கொண் டிருந்த ஒருவரை, வெளியுலகிற்கு தயா ரிப்பாளராகக் கொண்டுவந்தவர் மதியழ கன். பின்னாளில் இவர் இலங்கை முழு வதும் ஆலய அஞ்சல் நிகழ்ச்சித் தயாரிப் பாளராக மிளிர்ந்தவர்.

நான் காலையில் வானொலி நிலையத்தில் அமர்ந்தெழும் பிரதிகள் அனைத்தும், மாலையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, அடுத்தடுத்த நாட்களில் ஒலிபரப்பும் செய்யப்பட்டுவிடும். நான் மாலையில் வீடு திரும்பும்போது என்னுடைய பிரதிக் கான சன்மானத்தொகை கவுண்டரில் 'வவுச்சராக' இருக்கும். எத்தனையோபே ருடைய கையெழுத்துக்குப் போய்வரவேண் டிய இந்த வவுச்சர், மாலையில் றெடி யாக இருப்பதை, மதியழகன் தனது பணியாக நினைத்துச் செய்தார். பாம்பின் கால் பாம்பறியும். நான் இதற்காகத்தான் காலையில் வந்திருந்து எழுதுகிறேன் என் பதும் அவருக்குத் தெரியும். அவர் இருந்த காலத்தில் வானொலி நிலையம் எனது 'தாய்வீடு' மாதிரி. தன்னுடைய எல்லைக் குள் நின்றுகொண்டு, எனக்கு பலவிதத் திலும் அவர் உதவ முற்பட்டார். அப்படி யான முயற்சிகளில் ஒன்றுதான், என்னை ஆலய அஞ்சல்களில் ஈடுபட வைத்தது.

நல்லூரில் நான் சிறுவனாக ஆலயத்திற்கு போகும்போது, வீதியின் நாலு மூலையி லும் உயரமான கோபுரவடிவில் நாலு மேடைகள் இருக்கும். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மனிதர் வெள்ளை உடையில் கையில் மைக் வைத்துக்கொண்டு கதைப் பதைப் பார்த்திருக்கின்றேன். மேடையில் பெரிய எழுத்தில் இலங்கை வானொலி என்று எழுதியிருக்கும். கீழே இருந்து அண்ணாந்து பார்த்தபடி நீண்டநேரம் நிற்பேன். எனக்கும் ஏறிநின்று பேசவேண் டும்போல் இருக்கும்.

புகழை எடுத்துச் சொல்லும்படி கிடைத்த வாய்ப்பு என்னவென்று சொல்வது?

ஒரு ஆலயம் தனது நிகழ்வுகளை அஞ் சல் செய்ய வேண்டுமெனில் முதலில், வானொலி நிலையத்திற்கு எழுதவேண்டும். அனுமதி கிடைக்கும் பட்சத்தில் அடுத்த வேலைகளை அந்தச் சேவையைச் சேர்ந் தவர்கள் செய்வார்கள். வி.என்.மதியழகன் காலத்தில் உருத்திராபதி இந்த வேலை- களைக் கவனித்தார்.

இது எனக்குப் புகழையும், வருவாயையும், மனமகிழ்ச்சியையும் தந்தது.
மாத்தளை முத்துமாரி அம்மன் கோவிலில் எனது முதலாவது அஞ்சல் நிகழ்ச்சி இடம்பெற்றது. மாரிமுத்துச் செட்டியார் அப்போது ஆலயத்தின் அறங்காவலராக இருந்தார். அநேகமாக இந்த ஆலய அஞ்சல் நிகழ்வுக்கு மதியழகனும் வருவார். மதியழகன் அங்கு போகும்போது என் னையும் முதன்முறையாகக் கூட்டிப்போ னார். என்னிடம் ஒலிவாங்கியைக் கைய ளிக்கும்போது மதி 'இப்போது ஏழாலை சண்முகநாதனிடம் இந்த ஒலிவாங்கியைக் கையளிக்கின்றேன்' என்று சொல்லித் தந் தார். அந்தப்பெயர் கடைசிவரை அஞ்சல் நிகழ்ச்சியில் நிலைத்து நின்றது.

இந்த ஆசை பின்னாளில் என்னை மாத் தளை முத்துமாரி அம்மன் கோவில் மதில், கண்டி செல்வவிநாயகர் கோவில் கூரை, நல்லூர் தேர்முட்டி, துர்க்கை அம்மன் (தெல்லிப்பழை) தேர்முட்டி ஆகியவற்றில் ஏறி நின்று அஞ்சல் செய்ய வைத்தது.

பத்து வயசுச் சிறுவனாக மாத்தளை முத் துமாரி அம்மன் தேரில் தொலைந்து, பொலிஸ் நிலையத்தில் காத்திருந்து வீடு போன சிறுவன், தேர்முட்டியில் நின்று காண்போர் வியக்கும்படி, அம்மனின் போக்குவரவுக்கான வான் ஒன்று ஒழுங்கு செய்யப்படும். தொழில்நுட்பவியலாளர் கள், அதற்குரிய உபகரணங்கள், அஞ் சல் செய்வதற்குரிய உத்தியோகத்தர்கள் இப்படி எல்லோரும் ஒழுங்கு செய்யப் பட்டு நிலையத்திலிருந்து வான் புறப்ப டும் நேரமும் அறிவிக்கப்படும்.

அப்போது அஞ்சல் நிகழ்ச்சியில் பங்கேற் பவர்களாக இளையதம்பி தயானந்தா, நடராஜன் ஐயர், குமாரசுவாமி சோமசுந்த ரம், நடேசசர்மா, வசந்தா வைத்தியநா

தொடர்தல் 56ம் பக்கம்

நிலையான சொத்துக்களை வாங்க, விற்க அழைக்க வேண்டிய
உங்கள் வீடு விற்பனை முகவர் சுகுமாரன் சின்னையா (சுகு)
ROYAL DE MONTRÉAL 2010 INC
4372, Papineau, Montréal, Qc, H2H1T6
Sugumaran Sinniah
Chartered Real Estate Broker
திருப்தியான இல்லம்
ஆனந்தமான வாழ்க்கையின் அடிப்படை !
Direct : 514.299.3186
email: seranvib@hotmail.com Office : 514.529.0454 Fax : 514.525.4557

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலிப் பிரவேசம்...

54ம் பக்கத் தொடர்ச்சி...

தன், பேராசிரியர் கனகசபை நாகேஸ்வரன், கோமா சண்முகசர்மா, முருகேசு ரவீந்திரன், ஏழாலை சண்முநாதனாகிய நான், பேரா சிரியர் வ. மகேசன் உட்பட தயாரிப்பாள ராக சர்வானந்தா மயில்வாகனம், உருத் திராபதி, இளையதம்பி தயானந்தா சில முக்கிய நிகழ்வுகளுக்கு மதியழகன். வேறு சில சுதந்திரதினவிழா, கொரகொல பண்டாரநாயக்க சமாதி இன்னும் சில விசேட தினங்களுக்குமாக வேறு சிலரும் ஏற்பாடு செய்துண்டு. இவற்றில் தயானந்தா முக்கியமாகவிருப்பார்.

சமயத்தோடு சம்பந்தப்பட்ட நாங்கள் ஆசாரசீலர்களாக நிகழ்ச்சிகளைச் செய் வதுண்டு. வேறு சில சமய, மொழி வேறு பாடு உள்ளவர்களிடம் இவற்றை எதிர் பார்க்கமுடியாது. இப்படியான நேரங்களில் வசந்தா வைத்தியநாதன் போன்ற சமய அனுட்டானங்களைக் கடுமையாகக்கைக் கொள்பவர்கள் சங்கடப்படுவதை நான் கண்டிருக்கிறேன்.

நான் பிரசாதத்துக்காகவே மூன்று, நான்கு வயதில் திருவெம்பாவை பாடுபவர்களு டன் ஓடிச்சென்று சேர்ந்து கொண்டதால் என்னிடம் இயற்கையாகவே சில நல்ல பழக்கவழக்கங்கள் ஒட்டிக்கொண்டன. இவை வசந்தா அம்மையார் போன்றவர் களிடம் எனக்கு நல்லபெயரை வாங்கித் தந்தன.

நாங்கள் கோயில் அஞ்சல் நிகழ்ச்சிக- ளில் ஈடுபட்டிருந்த காலம், வடபகுதியில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். ஆட்சிகள் மாறியிருக்கலாம், யுத்த சூழ் நிலை மாறவில்லை. விமானத்தைத் தவிர வேறு போக்குவரத்து மார்க்கமும் இல்லை. தனியார் விமானம் ஒன்று சுட்டு வீழ்த் தப்பட்டதால், தனியார் விமான சேவை யுமில்லை. கோயில் அஞ்சல் நிகழ்ச்சிக் குப் போவதாகவிருந்தாலும் இராணுவ விமானத்தில்தான் செல்ல வேண்டும். சிங்களம் பேசுகின்ற தொழில்நுட்பவிய லாளர்கள் வடபகுதி வரப் பயம், அஞ்சல் செய்ய வருவதற்கு எம்மவருக்கும் பயம். போட்டி இல்லாத ஒரு நிலை. இளை யதம்பி தயானந்தா, உருத்திராபதி மற் றது ஏழாலை சண்முகநாதனாகிய நான். வேள்விக்கு நேரப்பட்ட ஆடுகளாக நாங் கள் போய்வந்தோம்! எல்லாம் சுமுகமான பின்பு நீங்கள் மட்டும்தானா அஞ்சல் செய்வது? என்று எங்களைக் கேள்வி கேட்டார்கள்.

ஒருமுறை செல்வச்சந்நிதி தேர், தீர்த்த அஞ்சல், பலாலி நிலையத்திலிருந்து தொழில்நுட்பவியலாளர்களும், சாதனங்க ளும் பெற்றிருந்தோம். நானும் உருத்தி ராபதியும் கொழும்பிலிருந்து சென்றோம். அங்கு நாங்கள் ஸ்ரீதயாளன், ஆறு திரு முருகன் இப்படிப் பலரை அமர்த்திக் கொள்வோம்.

கொழும்பிலிருந்து புறப்பட்ட இராணுவ சரக்கு விமானம், சில உயர் அதிகாரிகள், சில சிப்பாய்கள் இருந்தார்கள். அத்தோடு இலங்கை வானொலியைச் சேர்ந்த இரு வர் - நானும், உருத்திராபதியும். விமானம் பலாலியில் இறங்கும் நேரம் பதிந்து வந் தது, பின்பு இறங்காமல் மேலெழுந்து, வந்தபாதையில் சென்று அனுராதபுரத்தை மீண்டும் அடைந்தது.

எனக்குப் பக்கத்திலிருந்த ஐந்து ஸ்ரார், மூன்று ஸ்ரார் அதிகாரிகள் என்னை என்னவென்று கேட்கின்றார்கள். எல்லோர் முகங்களும் பேய் அறைந்தது போலிருந் தது. இரண்டு யன்னல் பக்கங்களாலும் விட்டுவிட்டு வெளிச்சம் பாய்ந்ததைக் கண்டேன். இது ஏவுகணைக்கு எதிர்ப்பைக் காட்டிக்கொண்டே விமானம் மீண்டும் மேலெழுந்து, பறந்து சென்று மறைந்தது. அன்றே கதை முடிந்திருக்க வேண்டும், கதை தொடர்கிறது.

கடலிலிருந்து ஏவுகணை வந்த பகுதி சல்லடை போட்டுத் தேடிய பிறகு, அனு ராதபுரத்திலிருந்து விமானம் பலாலி வந்து இறங்கியது. நாங்களும் காலம் தாழ்த்தி செல்வச்சந்நிதி முருகனுடைய அஞ்சல் நிகழ்வைச்செய்து முடித்தோம்.

ஒருமுறை நல்லூர் தேர் அஞ்சல் நிகழ்ச் சியைச் செய்வதற்காகவும் தொடர்ந்து தீர்த்தம், திருக்கல்யாணம் நிகழ்வுகளை அஞ்சல் செய்வதற்காகவும் நானும் உருத் திராபதியும் யாழ் சென்றிருந்தோம். தேர் அன்று காலையில்தான். பலாலி வானொலி நிலையத்தினர் ஏற்கனவே அஞ்சலுக்கான ஏற்பாடுகளைச்செய்து, காலையில் அஞ் சலையும் தொடங்கியிருந்தனர். நல்லூரில் உள்ள மிகப்பெரிய விசேடம் நேரம் 7:00 மணி. இருக்கையில் சண்முகப்பெருமான் வள்ளிதெய்வானை சமேதராய் பக்தர்க ளுக்குக் காட்சி கொடுப்பார். அந்த நேரத்தைப் பார்த்து கைக்கடிகாரங்களை நேராக்கிக் கொள்ளலாம்.

நாங்கள் அன்று நேரம் பிந்திப் போனோம். நான் இராணுவ வண்டிக்கு, வேட்டி சிவ சின்னங்களோடு முன்னால் ஓட நாங்கள் மேலதிகமாகக் கொண்டுசென்ற ஒலிபரப் புச்சாதனங்களோடு தேர்முட்டிவரை உருத் திராபதி இராணுவ வண்டியில் வந்து சேர்ந்தார். நிலையத்திலிருந்த தயானந்தா, இனி நிகழ்ச்சி கச்சிதமாக நடக்கும் என்று வானொலியில் அறிவித்தது நல்லூர் ஒலி- பெருக்கிகளில் கேட்டது.

இதே நல்லூர் ஆலயத்தில், யுத்தத்திற்குப் பின்னரான ஒரு நிகழ்ச்சியில், தயானந்தா தேர்முட்டியில் நின்றபடி தீர்த்தக்கரையில் நின்ற என்னிடம் 'சண்' கேணிக்குச் சமீ பமாக உலங்குவானூர்தி ஒன்று தாளப்ப றக்கிறது, என்னவென்று பாரும் என்றார். நானும் உற்சாகத்தில், கோள்முட்டி என்ன வெல்லாமோ போட்டது, இப்போது பூப் போடுகிறது என்றேன். இதை நிலையத் தில் சிலர் கோள்முட்ட முனைந்தார்கள். மதியழகன் சாணக்கியமாக அவர்களை மடக்கினார்.

வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம், அன்னார்
உள்ளத்தால் ஒருவ ரேமற்
றுடலினால் பலராய்க் காண்பார்
கள்ளத்தால் நெருங்கொ ணாதே
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்த நாளோ?

பாரதிதாசனுடைய இந்தப் பாடலை எந்த இடத்தில் உபயோகப்படுத்தலாம் என்று பலநாள் நான் ஏங்கியதுண்டு. இதற்கு சரியான இடம் நல்லூர் தேரிலன்று அதி காலை 7:00 மணிக்கு சண்முகப் பெரு மாளன் வள்ளிதெய்வயானை சமேதராய் எழுந்தருளுகிறபோது ஆர்ப்பரிக்கிற அந்த சனசமுத்திரத்தைப் பார்த்து இதைப் பாட லாம்.

இந்த நெகிழ்வான இத்தருணத்தில் மக் கள் வெள்ளத்தை தேர்முட்டியில் நின்று, தேரில் ஆரோகணிப்பதற்காக வருகின்ற இயற்கை ஒளியாலும், செயற்கை ஒளி யாலும் ஜொலிக்கின்ற தெய்வவிக்கிரகங் களைப்பார்த்து இன்று தேர், நாளை தீர்த்தம், மறுநாள் திருக்கல்யாணம் இவை யெல்லாம் முடிந்த கையோடு ஊரில் பல திருமணங்கள் நடக்கும். அவையெல்லாம் நல்லூரில் நிச்சயிக்கப்பட்டவை. திரும ணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவ தாகச் சொல்வது தவறு. அது நல்லூ ரில்த்தான் நிச்சயிக்கப்படுகின்றன என்று அஞ்சலில் குறிப்பிட்டேன். அடுத்தநாள் வடபகுதியில் ஒரு பத்திரிகை பெட்டிகட்டி திருமணங்கள் சொர்க்கத்தில் அல்லவாம், நல்லூரில்த்தான் நிச்சயிக்கப்படுகின்றன வாம் என்று செய்தி போட்டது.

ஒருமுறை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அஞ்சல் நிகழ்ச்சி நிறைவு பெறு கின்ற நேரம் தேர்முட்டியில் ஆலய நிர் வாக சபையைச் சேர்ந்தோர், ஊர்ப்பிர முகர்கள், வானொலி நிலையத்தைச் சேர்ந்தோர் எல்லோரும் கூடியிருந்தனர். தேரிலிருந்து அம்மன் அவரோகணித்து பச்சை சாத்தும் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. வேறு ஒரு சமயப்பிரமு கர் நிகழ்வை வர்ணனை செய்து கொண் டிருந்தார். அறங்காவலர் சபைத்தலைவி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர் கள் 'மைக்கை சண்முகத்திடம் கொடுங் கள்' என்று உருத்திராபதியை நோக்கிக் கூறினார். அதன்பிறகு மைக்கை நான் வாங்கி அங்கு அன்று நடந்த முழுநிகழ் வையும் தொகுத்துக்கூறி, ஆலயம் செய் கின்ற அறப்பணிகள், அப்பகுதி மக்கள் எப்படி ஆலய நிகழ்வோடு ஒன்றியிக்கின் றார்கள் என்பதையெல்லாம் கூறி, நன்றி கூறி நிறைவு செய்தேன். இது நான் ஆர் வத்தோடு செய்த அஞ்சல் நிகழ்வுகளுக்கு கிடைத்த ஓர் அங்கீகாரமாகும்.

வடபகுதி ஆலயங்கள் மட்டுமல்ல, மலை யகத்திலேயுள்ள பல ஆலயங்களின் நிகழ் வுகளையும் அஞ்சல் செய்தோம். கற்றன் மாணிக்கப்பிள்ளையார், நுவரேலியா சீதையம்மன் கோவில், கண்டி கட்டுக் கலை செல்வவிநாயகர் ஆலயம் இப்படிப் பல. ஒவ்வொருவரும் தங்கள் ஆலய நிகழ்வுகள் இலங்கை ஒலிபரப்புக்கூட் டுத்தாபனத்தால் அஞ்சல் செய்யப்பட்டது என்பதைப் பெருமையாக எடுத்துக்கொண் டனர். மலையக கண்டி பிரதேச வானொலி நிலைய தொழில்நுட்பவியலாளர்கள் இந்த அஞ்சல் நிகழ்வுகளுக்கு அனுசரணையாக இருந்தார்கள். ஒருமுறை கண்டி கட்டுக் கலை செல்வ விநாயகர் ஆலய அஞ்சல் நிகழ்வு நிறைவு பெற்றதும், என்னைத் தேடிவந்து வணங்கி பாராட்டி, தான் ஏற்கனவே வாங்கி பெயர் எழுதி பொதி- செய்து வைத்திருந்த திருக்குறளை எனக் குத்தந்து ஒரு அன்பர் பாராட்டினார்.

என்ன ஒரே பாராட்டாக இருக்கின்றது என்று பார்க்கிறீர்களா? பாராட்டுக்களை நான்தானே சொல்லவேண்டும். அவமானங் களை எங்களுடைய நண்பர்கள் சொல் லுவார்கள். நான் அதற்குக்கூட இடம் வைப்பதில்லை. அவ்வப்போது வாழ்வில் நடந்த பல அவமானங்களையும் சொல்லி வந்துள்ளேன். இனியும் சொல்லுவேன்.

மூலஸ்தானத்திலிருந்த மூலமூர்த்தி எனக்கு மிகவும் வேண்டியவர் என்று மற்றவர்கள் நினைத்தபடியால், என்னுடைய பணி மிக வும் சுலபமானதாக இருந்தது. யாரும் இருக்கும் இடத்திலிருந்துவிட்டால் எல் லாம் சௌக்கியமே!

வானொலி நிலையத்தோடு எனக்குத் தொடர்பு இருந்ததால் நாட்டிலிருந்த அறிஞர்கள், கல்விமான்கள் தொடர்புகள் மிகவும் சுலபமாகவே கிடைக்கப்பெற்றன. நிலையத்திற்கு வருகின்றவர்களையும் வெளியிடங்களில் சந்திக்கின்றவர்களை யும் மிகச்சுலபமாக நண்பர்களாக்கிக் கொள்ள முடிந்தது.

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு விரி- வுரையாளரை நான் அடிக்கடி வெள்ள வத்தை காலி வீதியிலும், கொழும்பு தமிழ்ச்சங்கத்திலும், வானொலி நிலையத் திலும் சந்தித்துப் பேசியுள்ளேன். அவரும் என்னோடு பல இலக்கிய விடயங்களை மனம்விட்டுப் பேசுவார். நீண்டகாலமாகவே நண்பர்களாகவே இருந்தோம். அவரின் மேடை நாடகத்திலும் நடித்துள்ளேன். மிகுந்த ஈடுபாடுள்ள ஒரு நண்பர். இவ்வ ளவுக்கும் அவர் யார் என்று தெரியாது. நீங்கள் யார் என்று அவரை எப்படிக் கேட்பது? நானும் கேட்பதைத் தவிர்த்து வந்தேன். மிகப்பிரபல்யமான ஒரு இலக் கியவாதி, திடீரென இறந்துவிட்டார். வாழ்க் கையில் நான் இவரை ஒருமுறைகூட சந்திக்கவில்லையே என்று கவலைப்பட் டேன் நான் சந்திக்கவில்லையே என்று கவலைப்பட்ட அந்தப் பிரபலமான இலக் கியவாதி நான் நித்தம்நித்தம் சந்தித்த, யாரென்று அறியாதிருந்த காரை சுந்த ரம்பிள்ளை.

(தொடரும்)



sanmuganathan@thaiveedu.com

JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.
"We provide reliable year around Tax and Accounting services."
Our Services included:
Starting from $24.90 Plus tax
* E- file
* Personal Tax Returns (T1)
* Self-Employed Tax Returns
* Business, HST and Payroll Registrations & Bookkeeping
* Corporate Tax Returns (T2)
* Canada Revenue Agency's Audit assistance
Phone: (647)- 351- 5622 / (416)- 722-5338 Fax: (647)- 351- 5620
1193A, Brimley Road, Suite 5, Scarborough, ON, M1P 3G5
jmaccfinancial@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசு பாக்கியநாதன் அவர்களின்

‘கல்விக் கண்திறந்த கோவில்கள்’ நூல் அறிமுக நிகழ்வு

கடந்த மே 4ஆம் நாள் பி.ப 2.30 மணிக்கு அறிமுக நிகழ்வு ஸ்காபறோ சிவிக் மண்டபத்தில் நடைபெற்றது. மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து செல்வி இலக்கியா கற்றலினா மொறிசியஸ், செல்வி அபிநயா பவானந்தன் ஆகியோரால் கனடியத் தேசியப் பண்ணும் தமிழ்த் தாய் வாழ்த்தும் இசைக்கப்பட்டன.

கூட்டத்தை பாலன் அவர்கள் தொகுத்து வழங்க, வரவேற்புரையை நூலாசிரியர் முருகேசு பாக்கியநாதன் வழங்கினார். அதனைத் தொடர்ந்து தலைமையுரையை எஸ். திருச்செல்வம் அவர்களும் நூல் அறிமுகவுரையை அருண்மொழிவர்மனும் வழங்கினர். வாழ்த்துரையை சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட குயின்ரஸ் துரைசிங்கம் அவர்கள் வழங்கினார். அவரைத் தொடர்ந்து கிறிஸ்தவ பாடசாலைகளின் வரலாறுகள் பற்றிய ஆய்வுரையை பேராசியர் வண. அமுது ஜோசப் சந்திரகாந்தன் அவர்களும் சைவப் பாடசாலைகள் பற்றிய வரலாறுகள் பற்றிய ஆய்வுரையை மருத்துவர் இ. லம்போதரன் அவர்களும் நிகழ்த்தினார். தொடர்ந்து நூலாசிரியர் மு. பாக்கியநாதன் அவர்களின் ஏற்புரையைத் தொடர்ந்து, சபையோர் யாவருக்கும் பிரதிகள் வழங்கப்பட்டன. திருமதி கௌரிகா பாக்கியநாதன் மொறிசியஸ் அவர்களது நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவேறியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் நவீன கல்வி வரலாறு குறித்த முருகேசு பாக்கியநாதனின் முன்னோடித் தொகுப்பு

- அருண்மொழிவர்மன் -

முருகேசு பாக்கியநாதன் சில வருடங்களுக்கு முன்னர் வெளிநாட்டரின் தமிழ்ச் சேவை என்கிற தொடரொன்றினை தாய்வீடு பத்திரிகையில் எழுதிவந்தார். அக்காலப் பகுதியில் தாய்வீட்டில் வெளிவந்துகொண்டிருந்த பல்வேறு தொடர்கள் அடிப்படையில் ஆவணப்படுத்தல் செயற்பாடுகளுடன் தொடர்புடையனவாக இருந்தன. அவற்றையெல்லாம் தொடர்ந்து படித்துவந்ததுடன் அந்த முயற்சிகள் பற்றிய எனது கருத்துகளையும் தாய்வீடு ஆசிரியர் டிலிப்குமாருடன் பகிர்ந்தே வந்தேன். அந்த வகையில் தான், எனக்கு முருகேசு பாக்கியநாதன் அவர்களுடனான நேரடி அறிமுகமும் ஏற்பட்டிருந்தது. அந்த அறிமுகத்தினூடாக அவருடன், அவர் இந்தத் தொடரினை எழுதிக்கொண்டிருந்த காலப்பகுதியிலேயே தொடர்ச்சியாயப் பேசுவதற்கும் உரையாடுவதற்குமான சந்தர்ப்பங்கள் எனக்கமைந்தன. ஆவணப்படுத்தல் பற்றியும் வரலாற்றெழுதியல் பற்றியும் பிரக்ஞைபூர்வமான புரிதலுடன் தொடர்ந்தியங்குவதுடன் தனது செயற்பாடுகளின் ஊடாக சமூகநீதிக்கான அக்கறையையும் வெளிப்படுத்துபவர் முருகேசு பாக்கியநாதன். அந்த ஆர்வத்தினதும் அக்கறையினதும் தொடர்ச்சியான ஒரு செயற்பாடாகவே கல்விக் கண் திறந்த கோவில்கள் என்கிற இந்த நூல் அமைகின்றது. ரொரன்ரோவில் இடம்பெறவிருக்கின்ற இந்த நூலின் வெளியீட்டு நிகழ்வில் அறிமுகவுரை வழங்குமாறு முருகேசு பாக்கியநாதன் என்னிடம் கேட்டுக் கொண்டார். நூலொன்றுக்கு வெளியீட்டுரை வழங்குவது என்பது அணுகாது அகலாது தீக்காய்வது போன்றது. நூலை அணுக இருக்கின்ற ஒரு வாசகருக்கு நூல் பற்றியும் அதன் உள்ளடக்கம் பின்னணி பற்றியதுமான அறிமுகமொன்றினை வழங்குவதை நோக்காகக் கொண்டு இந்த அறிமுகவுரையினை வழங்குகின்றேன்.

கல்விக் கண் திறந்த கோவில்கள் என்கிற இந்த நூலானது ஈழத்தில் நூறாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலைகளின் வரலாறு, மற்றும் விபரங்கள் அடங்கிய ஆவணத் தொகுப்பாகும். ஆரம்பத்தில் வெளிநாட்டவர்களின் தமிழ்ச் சேவை என்கிற பெயரில் ஈழத்தில் வடக்கு கிழக்கில் 100 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவப் பாடசாலைகள் பற்றிய தொடரினையே முருகேசு பாக்கியநாதன் தாய்வீட்டில் எழுதிவந்தார். கிட்டத்தட்ட 28 பாடசாலைகளை இந்தத் தொடரில் முருகேசு பாக்கியநாதன் எழுதியிருந்தார். அதன் தொடர்ச்சியாக அதே தாய்வீடு பத்திரிகை யில் வடக்குக் கிழக்கில் நூறாண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்ட சைவப் பாடசாலைகள் பற்றிய தொடரொன்றினையும் முருகேசு பாக்கியநாதன் எழுதிவந்தார். அந்தத் தொடரில் இருபது பாடசாலைகள் பற்றிய விபரங்களையும் வரலாற்றினையும் திரட்டி ஆவணப்படுத்தியிருந்தார். ஈழத்தைப் பொறுத்தவரை அங்கிருக்கின்ற பாடசாலைகள் பற்றிய இத்தகைய ஒரு ஆவணப்படுத்தல் இதற்கு முன்னர் நடக்கவில்லை என்றே கருதுகின்றேன். ஒடுக்கப்படுகின்ற ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுகின்ற மக்கள் ஆவணப்படுத்தல் என்பதை ஓர் அரசியற் செயற்பாடு என்ற புரிதலுடன் முன்னெடுப்பது அவசியமானது. அந்த வகையில் ஈழத்தின் தமிழ்ப் பாடசாலைகளின் வரலாற்றைத் தொகுப்பது என்கிற இந்தப் பெருமுயற்சியை எடுத்த முருகேசு பாக்கியநாதனுக்கு மதிப்புக் கலந்த நன்றியும் பாராட்டுகளும்.

இந்தப் நூலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டு மற்றும் அதை அண்டிய காலப்பகுதிகள் ஈழத்து சமூக, பண்பாட்டு, அரசியல் வரலாற்றுத் தளங்களில் மிக முக்கியமான காலப்பகுதிகளாகும். இந்த நூல் அந்த வகையில் வெவ்வேறு வரலாற்றெழுதியல்களுக்கான தரவுகளைத் தரவல்ல ஆவணமாகவும் அமைகின்றது. ஈழத்தின் தமிழ்க் கல்வி வரலாறு என்பது மிக நீண்ட பாரம்பரியம் உடையது. பொதுவாக மூன்று தமிழ்ச் சங்கங்கள் பற்றி அடிக்கடி பேசப்படுவது வழமை. அதன் தொடர்ச்சியாக நான்காவது தமிழ்ச்சங்கமாக மதுரை பொ. பாண்டித்துரையனார் 1901ல் உருவாக்கிய தமிழ்ச் சங்கத்தைக் குறிப்பிடுவது வழக்கம். ஆயினும் யாழ்ப்பாணத்து மன்னர்கள் நான்காவது தமிழ்ச் சங்கம் ஒன்றை 13ம் நூற்றாண்டுக்கும் பதினைந்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் உருவாக்கினார்கள் என்பதையும் அந்தத் தமிழ்ச்சங்கத்தின் நூலகமாகவே சரஸ்வதி மகாலயம் இருந்தது என்பதையும் இன்று அறியமுடிகின்றது. இது குறித்த முக்கியமான ஒரு ஆய்வுநூலினை பாலச்சந்திரன் ஞானசேகரன் அவர்கள் எழுதியிருக்கின்றார். இதன்வழியாக, மிக நீண்டதொரு கல்விப் பாரம்பரியம் ஈழத்தில் இருந்துள்ளது என்பதும் கல்வியூட்டல்கள் பல்வேறு தளங்களில் நிகழ்ந்துள்ளது என்றும் கூறலாம். ஆயினும், அந்த மரபுவழிக் கல்வியாகட்டும் பின்னர் போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர் காலத்திலும் அமைக்கப்பட்ட பாடசாலைகளும் பின்பற்றப்பட்ட கல்விமுறைமைகளும் சமூகத்தில் பெரும்பான்மையான மக்களால் எட்ட முடியாததனவாகவே இருந்தன. ஆயினும் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில், குறிப்பாக மிசனறிகளின் வருகையுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளும் அவற்றினூடாகப் பின்பற்றப்பட்ட கல்விமுறைகளும் ஈழத்தில் நவீனகல்வி வரலாற்றை உருவாக்குவதுடன் கல்வியறிவு பரவலாகக் கிடைக்கப்படுவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கிக் கொடுத்தது எனலாம். குறிப்பாக இந்தக் காலப்பகுதியில் புரட்டஸ்தாந்தியர்களும் கத்தோலிக்கர்களும் மதம் பரப்பும் தமது நோக்கிற்காக மூன்று முக்கியமான செயற்பாடுகளை முன்னெடுத்தனர்,



- பாடசாலைகளை அமைத்து அங்கு ஆங்கிலக் கல்வியை வழங்குவதனூடாக மதப்பரப்புதை பரவலாக்குவது
- அச்சியந்திரங்களூடாக மதப்பிரச்சார நோக்கிலான பிரசுரங்களையும் பைபிளையும் பரப்புதல்
- நிறுவன கட்டமைப்புகளை உருவாக்கி மதமாறியவர்களை ஒன்றிணைத்தல்

ஆரம்பத்தில் ஆங்கிலேயரால் பின்பற்றப்பட்ட இந்தமுறைமைகளை பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் இருந்து, மதமாற்றத்துக்கு எதிரான ஒரு பொறிமுறையாக சுதேசிகளான பௌத்தர்களும் சைவர்களும் பின்பற்ற ஆரம்பித்தனர். இந்தச் செயற்பாடுகளின் பிரதான நோக்கங்களாக மதமாற்றம், வணிகநலன்கள் என்பன இருந்தபோதும் இந்தச் செயற்பாடுகளின் ஊடாகவும் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக சுதேசிகள் முன்னெடுத்த பொறிமுறைகளின் ஊடாகவும் சமூகநீதிக்கான அசைவுகள் மற்றும் சமூக நீதியை நோக்கிய முன்னோக்கிய, பின்னகர்த்துகின்ற போக்குகள் குறித்தும் நாம் பிறிதாக, விரிவாக ஆராயவேண்டும். இந்நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்ற பாடசாலைகள் இந்தப் பின்னணியுடன் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ, சைவப் பாடசாலைகளாகும். இந்தப் பாடசாலைகளின் நிறுவுனர்களின் அடிப்படையில் வைத்துப்பார்த்தால் காலனியவாதிகளால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள், இந்துபோர்ட் ஆரம்பித்த பாடசாலைகள், இந்துக்கல்லூரி போர்ட் ஆரம்பித்த பாடசாலைகள், நாவலராலும் அவரின் அடியொற்றியும் ஆரம்பிக்கப்பட பாடசாலைகள், தனிப்பட்ட பிரமுகர்கள்/ புரவலகளால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் என்று வெவ்வேறு பின்னணிகளையும் நாம் அவதானிக்கலாம். ஈழத்தைப் பொறுத்தவரை அங்கு நிலவிய இறுக்கமான சாதிய ஒடுக்குமுறைகள், சமூக ஒடுக்குமுறைகள் என்பவற்றுக்கு எதிராக ஒரு சமூக அசைவியக்கம் உருவாகுவதற்கான வெளி இந்த நவீன கல்வியின் வருகையுடனும் பாடசாலைகளின் ஆரம்பத்துடனுமே உருவாகின்றது. இக்காலப்பகுதியிலான கல்விச் செயற்பாடுகள் குறித்த ஆய்வு நூல்களாக இதுவரை பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனின் தமிழின் நவீனமயமாக்கமும் அமெரிக்க மிஷனும், இலங்கையில் தமிழ் வளர்ச்சியும் அமெரிக்க மிஷனும், இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்க மிஷனும் ஆகிய நூல்களையும், பேராசிரியர் சிவலிங்கராஜா எழுதிய பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்

தொடர்தல் 71ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரூபாவின் இடாவேணி: கதைகளும் கதை சொல்லப்படும் பாங்கும்

- மைதிலி தயாநிதி -



நிரூபாவின் இடாவேணி எனும் கதைத் தொகுப்பு ரொறன்ரோவில் ஏப்பிரல் 27, 2019 அன்று வெளியிடப்பட்டது. அவ்வெளியீட்டில் நான் வாசித்த கட்டுரையின் விரிவாக்கமே இது.

அணங்கு பெண்ணியப் பதிப்பகத்தின் வெளியீடும், 128 பக்கங்களில் பன்னிரண்டு கதைகளை உள்ளடக்கியதுமான நிரூபாவின் 'இடாவேணி' எனும் கதைத் தொகுப்பு பல வகைகளில் முக்கியமான-தாகும். முதலாவது, அவரின் சில கதைகள் தொட்டுச் செல்லும் விடயங்கள் - சுய அடையாளம், பெண்ணின் பாலியல் கற்பனைகள் (sexual fantasies), அடையாளக்காமம் (fetishism), ஒருபால் உறவு முதலானவை - தமிழில் அதிகம் பேசப்படாதவை. நிரூபா இங்குள்ள எழுத்தாளர்களுள்ளே இளையதலைமுறையைச் சேர்ந்தவர். இலங்கையிலேயே முழுக்கல்வியும் பெற்றுப் பதின்மவயது கடந்த பின்னர் மேலைத்தேய நாடொன்றுக்குப் புகலிடம் தேடி வந்தவரல்லர். பதின்ம வயதில் காலடி எடுத்த வேளையில் பெற்றோர்களினால் அவர் ஜேர்மனிக்குக் கூட்டிச் செல்லப்பட்டவர். தஞ்சமளித்த ஜேர்மனியில் தனது வாழ்க்கையின் மிக முக்கியமான காலகட்டத்தினை, அதாவது உடல், உணர்ச்சி, ஆளுமை என்பவற்றில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தும் பதின்ம வயதுப் பருவத்தினைக் கழித்தவர். தமிழ்க் கலாசாரம், புகலிட கலாசாரம் என இரு வகைக் கலாசாரங்களின் செல்வாக்கிற்கும் உட்பட்டவர். எனவே, அவரின் சில கதைகள் பேசும் சுய அடையாளம் தொடர்பான சிக்கல்கள் அவருக்கு மூத்த தலைமுறை தமிழ் எழுத்தாளர்களினால் பேசப்படாதவை. (மேற்குலகில் இளை-யோர்க்கிருக்கும் அடையாளச்சிக்கல்களை இலங்கையிலே வாணாளின் பெரும்பகுதியைக் கழித்து விட்டுப் புலம் பெயர்ந்த மூத்த தலைமுறையினர்க்குப் புரிந்து கொள்வது கடினமானதாக இருக்கலாம்.) அதே சமயம் நிரூபா தனது சுயசரிதையைத்தான் கதைகளில் எழுதியுள்ளார் என்ற அர்த்தத்தில் மேற்கண்ட கருத்தை நான் கூறவில்லை. எழுத்தாளரின் வாழ்க்கைக்கும், படைப்பிற்கும் இடையில் உள்ள தொடர்பு குறித்து அண்மையில் காலமான எழுத்தாளர் தோப்பில் முஹம்மது மீரான் நேர்காணலொன்றில் கூறியிருப்பதை இங்கு நோக்குதல் பொருத்தமானது: "ஒருத்தருடைய வாழ்க்கை கதையாகாது. சமூகத்தோட சில விஷயங்களை உள் வாங்கனும். அதை நம்மளா மாத்தனும். அதோட நம்ம அனுபவங்களையும் கலக்கனும். திரும்ப அதை வெளிப்படுத்தும்போது, அது வேற ஒண்ணா வெளி வருது. அந்த வேற ஒண்ணுதான் கதை".

இரண்டாவது, பொருளாதாரச்சுரண்டலும் சமூகச் சீரழிவும்தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவனவாய் நிரூபாவின் சில கதைகள் விளங்குகின்றன. முதலா-ளித்துவ பொருளாதாரம் வளர்த்தெடுத்த நுகர்வுக்கலாசாரத்தினை சாடுவதுடன் மட்டும் நின்றுவிடாது அதற்கு மாற்றீடான வாழ்க்கை முறைமையையும் அவை காட்டுகின்றன. மூன்றாவது, அவரின் சில கதைகள் சொல்லப்படும் முறைகள் வழமையாகக் கதை கூறப்படும் பாணியிலிருந்து வித்தியாசமானவையாக இருக்கின்றன. குறியீடு, மாயா யதார்த்தவாதம் (magical realism), உணர்வுநிலையோட்டம் (stream of consciousness) முதலான உத்திகள் கையாளப்பட்டுள்ளன. மூன்றாம் நோக்குநிலையிலிருந்து (third person point of view) முதலாம் நோக்குநிலைக்கு (first person point of view) கதை இலாவகமாக மாறுவதைச் சில கதைகளில் அவதானிக்கலாம். 'கால அமுது' கதையில் முதலாம், இரண்டாம் நோக்குநிலைகள் இரண்டுமே இடம் பெற்றிருக்கக் காணலாம். நான்காவது, அவரது சில கதைகளில் உரைநடை-கவிதை, உண்மை-கற்பனை (reality vs. fantasy) என்பவற்றுக்கான எல்லைகள் மழுங்கடிக்கப்படுகின்றன. இத்தகைய எல்லை மீறலை அல்லது எல்லையழிப்பினை அவரது கதைத்தொகுப்பின் தலைப்பும் உணர்த்துகின்றது.

இடாவேணி (இடு+ஆ+ஏணி) என்பது சங்க இலக்கிய நூலான பதிற்றுப்பத்தில் இடம் பெறும் சொல்லாகும். ஏணி என்பதன் பொருள் எல்லை. 'நளியிரு முந்நீரேணி யாக' (கடலே எல்லையாக) எனப் புறநானூற்றில் (35, 1) வருகிறது. எல்லையிடப்படாதது, எல்லைகள் அற்றது என்பதே 'இடாவேணி' என்பதன் பொருளாகும். எல்லைகள் அதிகாரவர்க்கத்தினால் இடப்படுவவை. பிரிவினைகள், பாரபட்சம், மனிதரை வேறுபடுத்திப் பார்த்தல், சாதி, வர்க்கம், பால், நிற அடிப்படைகளில் தனிச்சலுகைகள் அல்லது ஏகபோக உரிமைகள் அனுபவித்தல், ஒடுக்குதல், அடக்குமுறை, வன்முறை என்பவற்றின் அடிப்படையாயும், மனித துயரங்களுக்கும், உளச் சிக்கல்களுக்கும், போர்களுக்கும் காரணமாயும் விளங்குபவை. 'தஞ்சம் தாருங்கோ' என்ற கதை 'நாட்டெல்லைகள் உயிருக்குப் பயந்து ஓடுபவர்களுக்கு அர்த்தமுள்ளவையாகத் தோன்றுமா?' எனும் வினாவை எழுப்புகின்றது. எல்லைகளினால் எழும் மனச்சிக்கல்களை 'மலர்' , 'காலஅமுது' என்பவை விவரிக்கின்றன. இடாவேணியின் கதை கூறும் பாங்கினை நோக்கும்போது 'படைப்பாளியின் கற்பனைக்கு எல்லையிடமுடியுமா? உண்மை/கற்பனை (reality vs. fantasy) இவற்றின் எல்லைகள் என்ன?' என்ற கேள்விகள் மனதில் எழுகின்றன. 'மனிதக்கற்பிதங்களான எல்லைகளைக் கடத்தல் சாத்தியமானதா?' என்ற கேள்வி அவரின் கதைகளில் தொக்கிநிற்கிறது. அவற்றை உடைத்தெறியும் சாத்தியப்பாட்டினையும் இத்தொகுப்பு உணர்த்துகிறது.

பொதுவாகக் கதைகளில் வரும் முரண்பாட்டை (conflict) மூவகையாக நோக்கலாம். முதலாவது, கதையில் இடம்பெறும் பாத்திரங்கள் தமக்குள்ளே உணரும் அகமுரண்பாடு அல்லது அகப்போராட்டம். இரண்டாவது வகை, கதையில் இடம்பெறும் பாத்திரங்களிற்கிடையே உருவாகும் முரண்பாடுகள். மூன்றாவது வகை, பலம் வாய்ந்ததொரு புறவயமான சக்தியுடன் பாத்திரம் எதிர்கொள்ளும் முரண்பாடுகள். இந்த மூவகையான முரண்பாடுகளையும் இடாவேணியில் அவதானிக்கலாம். 'மலர்', 'கால அமுது', 'கனவுச்சுரங்கம்', 'கட்புலனாகாக் காட்சிகள்' என்பன அகப்போராட்டத்தினை மையமாகக் கொண்டவை. நிரூபாவின் எழுத்தாற்றலுக்குச் சாட்சியமாக விளங்குபவை. கதை மாந்தரிடையே உருவாகும் முரண்பாடுகளுக்கு 'தஞ்சம் தாருங்கோ', 'கசப்பூ' என்பவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம். 'தஞ்சம் தாருங்கோ' எனும் கதை இலங்கைப் பெண் அகதிகளுக்கும் ஜேர்மன் பொலிசாருக்குமிடையேயான பிரச்சினைகளுடன், சக ஆண் அகதிகளால் அவர்கள் அனுபவிக்கும் பாலியல் தொந்தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டது. மூன்றாவது வகைக்குப் புறவயமான முதலாளித்துவ பொருளாதார அமைப்பு முறையினைச் சாடும் கதைகளான 'நீலச்சூரியன்', 'பச்சை மனங்கள்' என்பவற்றைக் குறிப்பிடலாம். 'பச்சை மனங்கள்' எனும் கதை படாடோபமான வாழ்க்கை வாழும் சகமாந்தரினைக் காய்வது போல் தோன்றினும், அடிப்படையில் அது நுகர்வுக்கலாசாரத்தை ஊட்டி வளர்க்கும் முதலாளித்துவ பொருளாதார முறைமைக்கு எதிராகவே குரலை எழுப்புகிறது.

இடாவேணியின் பன்னிரு கதைத் தலைப்புகளும் கதைப்பொருளைப் பெரும்பாலும் சூசகமாக உணர்த்துவன. எடுத்துக்காட்டாக, 'காவோலை', 'கையடை', 'நாலூண்டிக்கனவுகள்' எனும் தலைப்புகள் கதைப் பொருளானது முதியோர் தொடர்பானது என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றன. நாலூண்டி என்பது walker என்ற ஆங்கிலச்சொல்லின் தமிழ்ப்பதமாகும். காவோலை, கையடை என்பன இலக்கியத்தில் வழங்கும் சொற்களாகும். காவோலை என்ற சொல் 'காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும்' எனும் பழமொழியில் மட்டுமன்றிச் சங்க இலக்கிய நூலான நற்றிணை 38ம் பாடலிலும் காணப்படுகிறது. 'காவோலைகளாலான வேலி' என்ற தொடரில் அச்சொல் அங்கு வருகிறது. அதேபோன்று, கையடை என்ற சொல் கம்பராமாயணத்தில் இடம் பெற்றுள்ளது. யாகத்தினை அரக்கரிடமிருந்து காப்பதற்காக விசுவாமித்திரமுனிவர் இராமனைத் தன்னுடன் அனுப்புமாறு தசரதனைக் கேட்கின்றார். தசரதனும் இராமனையும் அவனின் இணைபிரியாச் சகோதரன் இலக்குவனையும் 'நல் தந்தை நீ, தனித் தாயும் நீ, இவர்க்கு எந்தை! தந்தனென்!' என்று கூறி விசுவாமித்திரனிடம் ஒப்படைக்கும் பகுதி கையடைப்படலம் எனப்படுகின்றது. முதியோர் பராமரிப்பு இல்லத்தில் பிறரினால் பாதுகாக்கப்படுவதற்காக ஒப்படைக்கப்பட்ட முதியவர்களைக் குறிக்கும் பதமாக இடா-வேணியில் கையடை என்ற சொல் இடம் பெறுவது பொருத்தமாகவும், நயப்பிற்குரியதாகவும் உள்ளது.

இத் தொகுப்பில் முதியோர் துயர் கூறும்

தொடர்தல் 71ம் பக்கம்

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரூபாவின்...

70ம் பக்கத் தொடர்ச்சி...

'காவோலை', 'கையடை', 'நாலாண்டிக் கனவுகள்', பெண் அகதிகளின் அல்லல் கள்பற்றிப் பேசும் 'தஞ்சம் தாருங்கோ', மனநோய் பற்றிய புரிதல் இன்மையால் குடும்பத்தில் எழும் சிக்கலைக் கருவாகக் கொண்ட 'கசப்பு' என்பன யதார்த்தவாதம் சார்ந்த கதைகளாகும். 19ம் நூற்றாண் டில் எழுந்த கலை, இலக்கிய யதார்த் தவாதம் என்பது உள்ளதை உள்ளவாறே காண்பித்தல் எனப் பொருள்படும். அதா வது, மனிதர்கள், இயற்கை, மிருகங்கள், பறவைகள் என்பன எவ்வாறு தோன்றுகின் றனவோ, அவற்றை அவ்வாறே மிகைப் படுத்தல் இன்றிக் காட்டுதல். இந்த யதார்த்தவாதப் பண்பே தமிழிலக்கியத் தினை ஆக்கிரமித்தமையால், தொன்மங் கள், இதிகாசக்கதைகள் என்பவற்றை மையமாகக் கொண்ட இலக்கிய ஆக்கங் களை எவ்வாறு இரசிப்பது என்பதையே நம்மிற் பலர் மறந்துவிட்டனர். பகுத்தறி வுக்கப்பாற்பட்ட எதுவும் இலக்கியத்தில் இடம்பெறுவதை ஒத்துக்கொள்ள இயலா தவர்களாக இருக்கின்றனர். நேரடியாக விடயங்கள் கூறப்படல் வேண்டும், இலக் கியப் படைப்பு சமூகத்தை உள்ளவாறே கண்ணாடி போன்று பிரதிபலிக்க வேண் டும், சமூகத்திற்கு உடனடிப் பயனுள்ள தாக இருக்கவேண்டும், யாவருக்கும் விளங் கும்படியாக எழுதப்படல் வேண்டும் முத லான கருத்துகள் வாசகர் மத்தியில் தீவி ரமாக நிலவுவதை உணரக் கூடியதாக உள்ளது. எனவே, அத்தகைய கருத்து கள் உடையோர் இத்தொகுப்பின் இடம் பெறும் ஏனைய கதைகளை, 'யதார்த்த மாக இல்லை' என்று ஒதுக்கக்கூடும்.

ஆனால், ஒரு படைப்பாளியாக நிரூபா ஒளிர்வது அக்கதைகளிலேயே. வெவ்வேறு நுட்பங்களை அவற்றில் அவர் பயன்ப டுத்தியுள்ளார்.

அவற்றுள் 'கனவுச்சுரங்கம்', 'பச்சைமனங் கள்', 'கட்புலனாகாக்காட்சிகள்', 'நீலச்சூரி யன்' முதலானவை மாயா யதார்த்தவாதம் (magical realism) சார்ந்தவை. இயற்கைக்கு அதீதமான விடயங்களும் மிக இயல்பான சாதாரண விடயங்கள் போன்று மாயா யதார்த்தவாதத்தில் சித்திரிக்கப்படும். இச்சித்திரிப்பு கதைகளுக்குக் கனவு போன்றதொரு நிலையை அளிக்கின்றது. [மாயா யதார்த்தவாதம் தொடர்பில் ஆங் கிலத்தில் வாசிக்க விரும்புவோர்க்கு Ken Liu எழுதிய 'Paper Menagerie' எனும் விருதுகள் பெற்ற சிறுகதையினைச் சிபார்சு செய்கிறேன். இதை இணையத்தளத்தில் வாசிக்கலாம்.] மேலும், உணர்வுநிலை ஓட்டத்தில் (stream of consciousness) கதைகூறும்நுட்பம் 'லூமினா நேபிளாவில்' பயன்படுத்தப்பட்டுள்ளது. கணவனின் பாலியல் வல்லுறவுக்குள்ளாகும் மனை வியின் மனமானது உடலுடனான தொடர் பினை அறுத்துப் பிரபஞ்சத்தினுள் சஞ் சரித்து, தன்னை லூமினா எனும் விண்மீ னாகப் பாவனை செய்து, நேபிளா எனும் விண்மீனுடன் உறவு கொள்கிறது. 'கல் வெட்டுப்' பாணியில் 'கால அமுது' எனும் சிறுகதை அழகாக எழுதப்பட்டுள்ளது. புகலிடமளித்த ஜேர்மனியை விட்டு நீங் கியமை, சொந்த இடமான இலங்கையை விட்டுச் சென்றமை, தற்பொழுது கனடாவில் பழங்குடிமக்களின் நிலத்தில் வாழ்கின் றமை என்பன தொடர்பில் எழும் குற்றவு ணர்ச்சியில் பிறந்த உணர்ச்சிப் புலம்பல் களாய் அது அமைந்துள்ளது. தாய்நாடு குறித்த ஏக்கமே (nostalgia) பொதுவாக தமிழ் அகதி இலக்கியத்தில் பதிவு செய் யப்பட்டுள்ளது. ஆனால், 'கால அமு தில்' யுத்தத்தின் கோரப்பிடிக்குள் அகப் படாது, இள வயதில் மேலைநாட்டில் புகலிடம் பெற்ற பெண்ணின் எஞ்சியிருப் பவரின் குற்றவுணர்வினைப் (survivor's guilt) பதிவுசெய்கிறது. 'மலர்' எனும் சிறு கதையில் இலங்கையிலிருந்து ஜேர்மனிக் கும் பின்னர் கனடாவுக்கும் புலம் பெய ரும் சிறுமியின் குறியீடாக மலர் இடம்பெ றுகின்றது. ஓரிடத்தில் பிறந்து இன்னோரி டத்திற்குச் சென்று வேரூன்றலின் சிக்கல் களையும், மனவலிகளையும், வெளிப் ப டையானதும், நுட்பமானதுமான (subtle) இனவாதம் (racism) பற்றியும் இக்கதை பேசுகிறது. வாழ்க்கை என்பதே கனவுக் கும் யதார்த்தத்திற்குமான போராட்டம் எனும் கருத்தை மையப்படுத்தி எழுதப் பட்டுள்ள 'கட்புலனாகாக் காட்சிகள்' எனும் கதையும், மாயக்கனவுகளைத் துரத் தாது, 'இத்தரை மீதினிலே இந்த நாளி னில் இப்பொழுதே' மனநிறைவுடன் வாழக் கூடிய சாத்தியப்பாட்டினை உணர்த்தும் கனவுச்சுரங்கம் எனும் கதையும் விசேட மாகக் குறிப்பிடத்தக்கவை.

கனவுச்சுரங்கத்தின் கதைப் பொருண் மையினைப் புலப்படுத்தும் வண்ணம் மெலிஞ்சிமுத்தன் தீட்டிய ஓவியம் இடா- வேணியின் முன் அட்டையினை அலங்க ரிக்கின்றது.

விடயம், விடயத்தைக் கூறும் பாங்கு எனும் இருநோக்கிலும் மலர், நீலச்சூரியன், லூமினா நேபிலா, கட்புலனாகாக் காட்சி கள், பச்சைமனங்கள், கால அமுது, கன வுச்சுரங்கம் எனும் ஏழு கதைகளுமே தனித்தனியாக, விரிவாக உரையாடத்தக் கவை.

சில எழுத்துப்பிழைகள், பக்கம் 19, 28, 77 என்பவற்றில் பாத்திரங்களின் பெயர் கள் மாறி வருகின்றமை என்பன ஆழ மான கருத்துகள் பொதிந்த இக் கதைத் தொகுப்பிற்குக் கண்ணூறு போல் அமை கின்றன.

ஒடுக்குமுறை, அடக்குமுறை, வன்முறை என்பவற்றிலிருந்து விடுதலை என்பது முதலாளித்துவப் பொருளாதாரப் பிடியி னுள் சிக்குண்டவர்களுக்குக் கனவாகவே இருக்கும் அதே சமயம், தனிநபர் ஒவ் வொருவரும் இயற்கையுடன் நெருங்கு தல் மூலமாகத் தம்மளவில் ஓரளவு சுதந் திரத்தை அனுபவித்தலும், எல்லைகளைக் கடத்தலும் சாத்தியம் என்பதை இத்தொ குப்பு உணர்த்தி நிற்கிறது. எவரையும் உள்வாங்கும், ஏற்றுக்கொள்ளும் எல்லை கள், வரம்புகள் அற்ற இலட்சிய சமூகம் குறித்த மனித அவாவில் விளைந்த இடாவேணி வாசிப்பதற்கு சுவாரஸ்யமாக வும், சிந்தனையைத் தூண்டும் விதத்திலும் அமைந்துள்ளது. புனிதம்-தீட்டு, உடல்- உயிர், இவ்வுலகு-மறுவுலகு (வீடுபேறு) முதலானவற்றின் எல்லையழிப்பினைக் குறிக்கோளாகக் கொண்ட சித்தர் பாடல் களை இடாவேணி எனக்கு நினைவுப டுத்துகிறது. இத்தொகுப்பின் இறுதிக் கதையான 'கனவுச்சுரங்கம்' எனும் கதை யில் வரும் சித்தவி எனும் பெயர் தற் செயலானதன்று.

maithilithayanithy@thaiveedu.com

ஈழத்தின் நவீன...

69ம் பக்கத் தொடர்ச்சி...

துத் தமிழ்க்கல்வி போன்ற நூல்களை ஓரளவு குறிப்பிடலாம், குறமகள் எழுதிய யாழ்ப்பாணத்தில் பெண்கள் கல்வி என்கிற நூலும் அண்மையில் வெளிவந்த முத்தான சொத்து என்கிற நூலும் அன் றைய காலத்திய பெண்கள் கல்வி குறித்த விபரங்களை உள்ளடக்கியிருப்பவை இதற்கப்பால் ஆங்கிலத்தில் வெளியான சில ஆய்வுக் கட்டுரைகளைக் குறிப்பிடலாம். ஆயினும் அவை எவையுமே பாடசாலை களின் வரலாற்றினை முழுமையாக ஆரா யும் நோக்குடையனவோ அல்லது அது பற்றிய பட்டியலாக்கம் செய்யும் நோக்கு டையனவோ அல்ல. ஆய்வுகளுக்கும் அவற்றிலிருந்து புதிய கண்டடைதல்களை நோக்கிச் செல்லவும் வரலாற்றெழுதிய லுக்கும் அடிப்படையான ஒரு தேவையாக தரவுகளைத் திரட்டுவதும் பட்டியலாக்கம் செய்வதும் அமைகின்றது. முருகேசு பாக் கியநாதன் அவர்கள் செய்திருப்பது அப் படியான ஓர் அரிய முயற்சியே. ஒரு முதல் முயற்சி என்றவகையில் இதில் சில தரவுள் பிழையாக இருந்திருக்கின்றன. ஓர் உதாரணமாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1890 என்று இந்த நூலில் பதிவு செய்யப்பட் டிருக்கின்றது. கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1887 ஆ அல்லது 1890 என்பது குறித்த சர்ச்சைகளும் அவற்றுக்குப் பின் னர் இருக்கக் கூடிய அரசியலும் இந்த நூலின் தொடர்ச்சியாகப் பேசப்படக் கூடி யன. அதுபோல இன்னும் பல பாடசா லைகள் தவறவிடப்பட்டிருப்பதையும் முருகேசு பாக்கியநாதன் அவர்களே குறிப் பிட்டிருக்கின்றார். இவையெல்லாம் உள் வாங்கப்பட்ட திருத்தப்பட்ட முழுமையான பதிவு வருவதும் முக்கியமானது. இந்நூ லில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற பாடசாலை களின் வரலாற்றைப் பற்றி உசாவுகின்ற போது தான் எதிர்கொண்ட சவால்கள் குறித்து இந்நூலிலேயே முருகேசு பாக்கி யநாதன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்,

"இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் இணை யத்தளங்கள் நிறையவே சேவை செய் கின்ற(ன ஆனால்) பல பாடசாலைகளின் இணையத்தளங்கள் இயங்கவில்லை. சிலவற்றில் விரிவான வரலாறுகள் பதியப் படவில்லை. சில சிறிய பாடசாலைகள் கூட இணையத் தளங்களைப் பாவிக் கின்றார்கள். சில 100 வருடங்கள் கடந்த பாடசாலைகளுக்கு இணையத் தளங்களே இல்லை என்பது வேதனையானது. பல பாடசாலைகள் முகநூல் வைத்துள்ளார் கள். ஆனால் அவைகள் ஒழுங்காகப் பேணப்படவில்லை.

தமிழரில் ஒரேயொரு குறையுள்ளது, அவர் கள் தமது வரலாறுகளை ஒழுங்காகப் பேணாததாகும். அந்தக்குறை கல்விக் கண்ணைத் திறந்த பாடசாலைகள் பற்றி இருக்கக்கூடாது என்பதற்காக இதனை முடிந்தளவில் ஒரு ஆவணமாகப் பதிவு- செய்கின்றேன். இந்த வரலாறு முழுவது மாக முற்றுப்பெறவில்லை என்பதனை ஒத்துக்கொள்கின்றேன்."

இந்த நூலினைத் தொகுப்பதற்கான உழைப்பில் முருகேசு பாக்கியநாதன் தர வுகளைப் பெறுவதற்கு எவ்வளவு சிரமப் பட்டிருப்பார் என்பது அந்தக் காலப்ப குதிகளில் அவருடன் தொடர்பில் இருந்த வன் என்றவகையில் என்னால் முழுமை யாக அறியமுடிகின்றது. அவரது பிரதான தரவு மூலங்களாக பாடசாலை மலர்க ளும், சில சந்தர்ப்பங்களில் இணையத் தளங்களும் வலைப்பங்களுமே அமைந் திருந்தன. ஆயினும் சேகரிக்கப்பட்ட தர வுகளைத் தொகுத்து ஆவணமாக்குவதில் தொழில்முறையிலான செம்மையாக்கல் கள் இல்லாமையின் பாதிப்பினையும் அவதானிக்கமுடிகின்றது. அதற்கப்பால் பட்டியலாக்கம் செய்தது, தரவுகளைத் திரட்டி தொகுத்து வெளியிட்டிருப்பது என்ற வகையிலேயே முருகேசு பாக்கியநாத னின் கல்விக் கண் திறந்த கோவில்கள் ஒரு முதல்நிலை ஆய்வுச்செயற்பாடாகும்.

மிகச் சிறிய நூலேயானாலும் பல்வேறு தகவல்களைத் தொகுத்து மிகுந்த தேட லுடனே இந்த நூலினை பாலச்சந்திரன் ஞானசேகரன் எழுதியுள்ளார். ஞானம் பதிப்பகம் வெளியிட்ட பாலச்சந்திரன் ஞானசேகரன் எழுதி ஈழமும் தமிழும் என்கிற தொடராக வெளிவந்த

- யாழ்ப்பாணத்து மன்னர் நிறுவிய தமிழ்ச் சங்கம்
- சைமன் காசிச்செட்டியின் அகராதி முயற்சிகள்
- ஈழத்தின் முதலாவது வானசாஸ்திர நூல் கிரகசார எண்ணல் (கி.பி. 1506)
- தால விலாசம்: ஈழத்தில் கிடைக்கப் பெறும் அதிபழைய விலாச நாடகம்
- மெல்ஹொ பாதிரியார் மொழிபெயர்த்த புதிய ஏற்பாடு (1759)
- சித்திரக்கவித் திரட்டு
- சமூகம் வழங்கிய புலமைத்துவ அடை யாளங்கள் (கி.பி. 1900 வரை)

ஆகிய நூல்கள் மிகவும் முக்கியமானவை. இந்த நூல்கள் அனைத்தையும் நூலகம் இணையத்தளத்தில் இருந்து ஆர்வமுள் ளவர்கள் வாசிக்கலாம். பாலச்சந்திரன் ஞானசேகரனின் நூல்களைப் பின்வரும் இணைப்பினூடாகப் பெற்றுக்கொள்ளலாம் https://tinyurl.com/y27y9e62

கணநாத் ஒபயசேகரவின் ஆய்வுகள் குறித்த ஓர் அறிமுகமாக க.சண்முகலிங் கம் எழுதிய இலங்கையில் பௌத்தமும் தேசியவாதமும் என்ற நூலில் இடம்பெற் றுள்ள "பௌத்த சமய சீர் திருத்த இயக் கமும் புரட்டஸ்தாந்திய பௌத்தத்தின் தோற்றமும் என்ற நூலில் இந்த மூன்று செயற்பாடுகளை எப்படி புரட்டஸ்தாந் தியர்களும் கத்தோலிக்கர்களும் முன்னெ டுத்தார்கள் என்றும் பௌத்தம் அதை எப்படிக் கையாண்டது என்றும் க.சண்மு கலிங்கம் சுருக்கமாக எடுத்துரைக்கின் றார். ஈழத்தின் மிக முக்கியமான ஆய் வறிஞர்களில் ஒருவராக கந்தையா சண் முகலிங்கம் அவர்களின் முக்கியமான நூல்களில் ஒன்றான இலங்கையில் பௌத் தமும் தேசியவாதமும் என்கிற நூல் சமூ கவெளி படிப்பு வட்டம் வெளியிடும் சமூகவெளி சிறுநூல் வரிசையில் முன் றாவது நூலாக வெளிவந்துள்ளது.

arunmozhivarman@thaiveedu.com

www.inayam.net
த மி ழ் நி க ழ் வு க ளி ன் ச ங் க ம ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை மக்களின் வரலாற்றுச் சாதனை

ஒவ்வொரு சித்திரை புதுவருடப் பிறப்பை முன்னிட்டு நடைபெறும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தின் நூற்றாண்டு விழா சித்திரை 1ம் நாள் தொடக்கம் 14ம் நாள் வரை வெகு விமரிசிசையாகக் கொண்டாடப்பட்டது. சர்வதேச ரீதியிலான இலக்கியப் போட்டிகள், வடமாகாண ரீதியிலான கலைப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றோடு பிரமாண்டமான கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. இந்நூற்றாண்டு விழாவினைப் பெருந்திரளான மக்கள் கலந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

அலங்கார சிகரம்

நாட்டுக்கூத்து - ‘இன்று போய் நாளை வா’

விழா மலர்

யாழ். நகர வீதிகளூடாகப் பவனித்த அரியாலையூரின் பெருமைகள் சொல்லும் அலங்கார ஊர்தி

அரியாலையூர் நவரூபன் - காண்டீபன் சகோதரர்களின் சாக்சஸ்போன் இசை நிகழ்ச்சி

யாழ். நகர வீதிகளூடாகப் பவனித்த அரியாலையூரின் பெருமைகள் சொல்லும் அலங்கார ஊர்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவின் பிரமாண்டமான மேடையில் 'பண்டாரவன்னியன்' சரித்திர நாடகம்

கண்டி வீதி மாம்பழம் சந்திக்கு அருகில் அமைக்கப்பட்ட கருங்கல்லினாலான நூற்றாண்டு தூபி

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

இலக்கியப் பேருரை - பேராசிரியை பர்வீன் சுல்தானா

விழாவினைச் சிறப்பித்த பெருந்திரளான மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருட்டுப்போன சேவல்

- நெடுந்தீவு மகேஷ் -

முற்றத்து வேப்பமரத்தில் மாலை நேரம் தத்தித்தத்திப் பறந்து ஏறிக் கிளைகளில் தூங்கிய ஐந்தாறு கோழிகள் அதி காலையிலேயே தூக்கம் கலைந்தன.

சேவலின் அதிகாலைக் கூவல் சத்தம் இன்று கண்ணம்மாவுக்குக் கேட்கவில்லை.

தூக்கம் கலைந்த கோழிகள் இறக்கை விரித்துக் கிளைகளிலிருந்து ஒவ்வொன்றாகக் கீழ்நோக்கிப் பறந்தன. நிலத்தில் இறங்கி நடந்தன. கூவல் சத்தம் மறந்தாலும் மாலையில் உறங்கச் சென்ற கோழிச்சேவலின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து வேப்பமரத்தை அண்ணாந்து பார்த்தாள் கண்ணம்மா! ஏமாந்து போனாள்.

கோழிச்சேவலைக் காணவில்லை.

கந்தசாமி கோவிலுக்குச் சேவலைத் தருவதாக வேண்டுதல் வேறு செய்திருந்தாள். அதனை மிகவும் கவனத்தோடு கண்ணம்மா வளர்த்தும் வந்தாள்.

சேவலைத் தேடியபடியே 'பாபா பாபா' என்று சொல்லி வாசலில் நின்று குரலெழுப்பிக் கூப்பிட்டாள். கூடிவந்த கோழிக் கூட்டத்திற்குள்ளே சேவலைக்காணவில்லை. வீட்டைச் சுற்றி நடந்து மீண்டும் குரலெழுப்பினாள். அடிவளவுவரை நடந்து நடந்து கூடுமானவரை கண்ணெறிந்து தேடினாள். எங்குமே அந்தச் சேவலைக் காணவில்லை. கண்ணம்மாவின் மகன் சித்திரன் அம்மாவின் தேடுதல் வேட்டையோடு தன்னையும் இணைத்துக் கொண்டு 'பாபா பாபா' என்று குரலெழுப்பிக் கொண்டே நடந்தான். தேடினான். சேவலைக் காணவேயில்லை. கண்ணம்மா கவலையுற்றாள்.

யாரோ கள்வர் தனது சேவலைக் களவாடிக் கொண்டுபோய் விட்டதாக எண்ணினாள். தனக்குச் சந்தேகமாகத் தோன்றிய காட்டான் தொடக்கம் கள்ள பாலா வரையும் எல்லோர் மீதும் தனது சிந்தனையை விழுத்தித் தேடுதல் நடத்தினாள். கள்வனென எவரையும் தீர்மானமாக முடிவெடுக்க அவளால் இயலவில்லை. மனம் சோர்ந்து கண்கள் கலங்க நின்றிருந்தாள். தனது சேவற்கோழியைக் களவாடிய கள்வரைக் கண்டறியும் வேகத்தில் பதைபதைத்துச் சோர்வுற்ற கண்ணம்மா வாசற்படியிலேயே உட்கார்ந்தாள். சித்திரன் தனது தேடுதலை நிறுத்தாமல் வீட்டைச்சுற்றிப் பலமுறை நடந்து 'பா பா' எனக் கூவிச்சலித்தான்.

முற்றத்தில் விசிறிய அரிசிக் குறுணள்களை அங்கே கொத்திக் கொத்திப் பொறுக்கி வட்டமிட்ட எஞ்சிய கோழிகளின் காட்சி கண்ணம்மாவுக்குச் சிறிது ஆறுதலைத் தந்தது. ஆனால் அடிக்கடி மனதில் தோன்றும் அந்த அழகிய சேவலின் தோற்றம், மீண்டும் மீண்டும் அவளின் சேவல் மீதான தேடுதலுக்கு உயிர்ப் பூட்டின.

“அடே சித்திரன்! பக்கத்தில் பரிமளம் வீட்டுப் பேடுகளோடு இந்தச் சேவல் போயிருக்குமோ தெரியவில்லை! ஒருக்காப் போய் அங்க பார்த்திட்டு வாடா” என்று கூறி மகனை அயல் வீட்டுக்குக் கலைத்தாள்.

தொலைந்த சேவலைத் தேடுவதில் அக்கறை குலைந்தவனாக வீட்டுக்குள்ளேயே நின்ற சித்திரனோ அம்மாவின் சொல்லுக்கு மறுப்புரைக்காமல் மௌனமாக வெளியே வந்தான். பரிமளம் வீட்டுக்குப் போகத் தனது வாசல் கேற்றைக் கடந்தான்.

கண்ணம்மா அனைத்து வேலைகளையும் மறந்தாள். மீண்டும் “பா பா” என்று குரலெழுப்பியவாறே பலமுறை வீட்டைச் சுற்றி வந்தாள். சேவல் தொலைந்துதான் போய்விட்டது.

ஒவ்வொரு நாளும் சேவலைப் பார்த்துப் பார்த்து பரவசித்த பார்வை இன்று இருண்டு வரண்டு போனது போன்றதொரு துயரம்.

சேவலைத் தேடிப் பரிமளம் வீட்டுக்குப் புறப்பட்ட சித்திரன் நல்ல முடிவோடு திரும்புவான் என்ற எதிர்பார்ப்போடு கண்ணம்மா காத்திருந்தாள். போனவன் நீண்ட நேரமாகியும் வீட்டுக்குத் திரும்பவில்லை. சித்திரனை எதிர்பார்த்து ஏமாந்த கண்ணம்மாவும் மேலும் தாமதிக்க நேரமின்றிப் பரிமளம் வீட்டுக்கு நடந்தாள்.



அங்கே பரிமளம் வீட்டில் நின்றிருந்த அவளது மகன் ராகவனும் சித்திரனுடன் சேர்ந்து இப்பொழுது சேவலைத் தேடுவது தெரிந்தது. இருவருமே ஒன்று சேர்ந்து “பா பா” “பா பா” என்று குரலெழுப்பிச் சேவலைக் கூவி அழைத்தனர். சேவலைக் காணவே இல்லை. அது அங்கே நின்றாற்தானே ஓடிவரும். அது தொலைந்துதான் போய்விட்டது.

மாலை வேளை

'குடியில்லாத சுப்பையர் வீட்டு அயற்காணிக் கொட்டிலின் அருகில் கண்ணம்மாவின் கோழிச் சேவலின் செட்டைகள் கிடக்கிறது' என்பதான செய்தி சுப்பையர் வீட்டிலிருந்து வந்தது. அது பலருக்கும் ஆச்சரியத்தையும் சிலருக்குக் கோபத்தையும் ஏற்படுத்தியது.

எல்லாருக்கும் மேலாக அயற்காணிச் சுப்பையருக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது “ஆரடா எங்கட கண்ணம்மா வீட்டில களவெடுத்த கோழியை உரிச்சு என்ர வீட்டுக்குப் பக்கத்திலேயே செட்டைகளைப் போட்டவன்?” என்று சொல்லிக் கொதித்தார். சுப்பையரின் மகன் சுந்தரனும் நீதியற்ற செயல்புரிந்த அந்த இனந்தெரியாதோர் மீதில் தனது ஆட்சேபத்தைச் சுப்பையருக்கு ஆதரவாகச் சொல்லி ஆத்திரத்தையும் வெளிப்படுத்தினான்.

கோழிச் சேவல் கொல்லப்பட்டு விட்டமையைச் சுப்பையர் கண்டெடுத்த செட்டைகள் உறுதி செய்தன.

கண்ணம்மா கலங்கிப் போனாள். பரிமளத்தின் மனமும் பதறியது. பாவம் சேவற்கோழி!

செட்டைகளைக் கண்டெடுத்த சுப்பையரின் கதையைக் கேட்கத் தனது வீட்டுக் கடப்பைக்கு வந்து திரும்பிய பரிமளத்தின் கண்களில் உரிக்காத வெங்காயங்கள் சில நிலத்தில், சிந்திக் கிடப்பது தெரிந்தது. அவை அவளின் கண்களை உறுத்தின. அவற்றைக் குனிந்து ஒவ்வொன்றாகப் பொறுக்கியவள், இவை எவ்வாறு குசினிக்குள்ளிருந்து வெளியே வந்தன? என்ற வினாவோடு ஆய்வுக்குள் மூழ்கினாள். தனது மகன் ராகவன் மீதில் அவளுக்குச் சந்தேகம் பிறந்தது.

சேவலை வெட்டிச் சமைத்துச் சாப்பிட்டு விட்டார்கள். அதில் மகன் ராகவனுக்கும் பங்குண்டு என்பதைப் பரிமளம் கண்டு கொண்டாள். எதனையும் ஆய்வு செய்து மகனைக் காட்டிக் கொடுக்க மனமின்றித் தனது குசினிக்குத் திரும்பியவள் சேவற் களவை மறக்கத் தனது வேலையில் ஆழ்ந்து மூழ்கினாள். முடியவில்லை!

சேவலை அடையாளப்படுத்திய செட்டையின் கதையைக் கண்ணம்மாவிடம் சொல்லி வீட்டுக்குத் திரும்பினார் சுப்பையர்.

வீட்டில் மனைவி சந்திரா, குசினி அலுமாரிக்குள்ளிருந்த மிளகாய்த்தூள் நிரப்பிய போத்திலைக் காணவில்லையே? என்று தேடினாள். சுப்பையருக்கு இப்பொழுது தனது மகன் சுந்தரன் மீதிலே சிறு சந்தேகம் பிறந்தது. ஆனால் எதனையும் பேசாமல் அமைதியானவருக்கு 'சுந்தரன் எங்கே?' என்று தேடும் ஆவல் மேலெழ முற்றத்திற்கு வந்தார்.

மகன் சுந்தரன் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சந்தேகம் ஏற்பட்டிருக்கும் நிலையில் கண்ணம்மாவின் சேவல் களவு போன கதையில் அதிக கவனம் எடுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து மகனைக் குற்றவாளியாகக் காணும் துணிவு அவரிடத்தில் அற்றுப் போனது.

எனினும் மனத்திலெழுந்த சந்தேகத்தால் மிளகாய்த்தூள்ப் போத்தலைத் தேடிப் பக்கத்துக் காணிக் கொட்டிலுக்குப் போன சுப்பையர் மூன்று கல் வைத்து அடுக்கிய அடுப்பின் மேல் காய்ந்த கறிச்சட்டி ஒன்று இருப்பதைக் கண்டார்.

அடுப்பைச் சுற்றிலும் சிந்திய தென்னம் பன்னாடையும் பூக்கம்பாளையும் சில விறகுத்துண்டுகளும் பரவிக் கிடந்தன. அங்கே என்ன நடந்திருக்கிறது! என்பதை அவை அடையாளப்படுத்தின. சுப்பையர் வீட்டிலிருந்து தொலைந்த தூள்ப் போத்தல் வெறுமையாக ஓர் ஓரத்தில் உருண்டு கிடந்தது.

சுப்பையர் கோழிக் கள்வனைக் கண்டு கொண்டார். அதனை வெளியே சொல்லி விசாரிக்கவோ? விபரிக்கவோ அவருக்குத் துணிவு வரவேயில்லை.

அங்கே காணப்பட்ட அடையாளங்களை அணைத்துவிட வேண்டுமென்ற எண்ணத்தோடு அவசரமாகச் செயலில் இறங்கினார். அவர் கண்டெடுத்த சேவலின் செட்டைகளைத் தவிர அங்கே இறைச்சி சமைத்தமைக்கான அனைத்து அடையாளங்களும் அழிக்கப்பட்டுவிட்டன.

மனம் அமைதி குலைந்தது. வீட்டுக்குப் போக வீதிக்கு வந்த சுப்பையரை சேவலைப் பறிகொடுத்த சித்திரனுடன், அவரது மகன் சுந்தரன் மற்றும் ராகவன், ஆகியோர் எதிர் கொண்டனர். நண்பர்களுடன் வந்த சுந்தரனைக் காணாமற்போன கண்ணம்மாவின் சேவல்பற்றி விசாரிக்கச் சுப்பையருக்கு மனம் வரவில்லை.

ராகவனும் சித்திரனும் சுந்தரனும் இந்தச் சேவல் திருட்டில் முழுமையாக ஈடுபட்டிருந்தமை உறுதியான நிலையில் சேவல் தொலைந்த கதையே மௌனமானது. தமது பல்லைக் குற்றி மூக்கில் வைக்கும் துணிவு எவரிடமும் இருக்கவில்லை.

அந்த நாள் செய்திப்பத்திரிகையைப் புரட்டிய சுப்பையர் 'காணாமற் போனோரைக் கண்டறிய அரசு ஆணைக்குழு நியமனம்!' என்ற கொட்டை எழுத்திலான தலைப்புச் செய்தியைப் பார்த்து அவர் ஆச்சரியப்படவில்லை.

mahesu@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துட்டகைமுனுவின் வீர வரலாறும் அதன் புராணவியல் முக்கியத்துவமும்

- க. சண்முகலிங்கம் -



முன்னுரை:

கணநாத் ஒபயசேகரவின் புகழ்பெற்ற ஆக்கம் எனக் கருதப்படுவது அவர் றிச்சார்ட் கொம்பிரிட்ஜ் என்னும் அறிஞருடன் இணைந்து எழுதிய (Buddhism Transformed) ‘பௌத்தத்தின் நிலை மாற்றம்’ என்ற நூலாகும். இந்நூல் 1988ல் வெளியானது. இந்நூல் வெளிவருவதற்கு முன்பே பல ஆய்வுகளை நீண்ட கட்டுரைகள் வடிவில் கணநாத் ஒபயசேகர, 1970களில் எழுதினார். அத்தகைய ஆய்வுக் கட்டுரைகளில் ஒன்றாக The Vicissitudes of the Sinhala Buddhist Identity Through Time and Change என்ற கட்டுரை அமைந்தது. இக்கட்டுரையில் கூறப்பட்ட கருத்துக்களைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் தமிழில் எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு, மூன்று வெவ்வேறு தலைப்புக்களில் மூன்று கட்டுரைகளாக எழுதியுள்ளேன். இம்மூன்று கட்டுரைகளிலும் நான் தொகுத்தளித்துள்ள விடயங்கள் கணநாத் ஒபயசேகர எழுதிய வேறுபல ஆய்வுக் கட்டுரைகளிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அடையாள உருவாக்கம்:

முதலாவது கட்டுரை துட்டகைமுனுவின் வீரவரலாற்றையும் அதன் புராணவியல் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறுகின்றது. துட்டகைமுனுவின் வரலாற்றில் நான்கு புனைவுகள் பின்னப்பட்டுள்ளன.

- துட்டகைமுனு போரிடச் சென்ற போது தனது ஈட்டியில் புத்தரின் உருவச்சின்னத்தைப் பொறித்திருந்தான்.
- 500 புத்த பிக்குகள் அவனது சேனையுடன் போர்க்களத்திற்கு அணிவகுத்துச் சென்றனர்.
- அஞ்ஞானிகளான தமிழர்களைக் கொன்றது பாவச்செயல் அன்று எனப் புத்த பிக்குகள் துட்டகைமுனுவிற்கு ஆறுதல் கூறினர்.
- துட்டகைமுனு இறப்பின் பின்னர் சுவர்க்க லோகத்தைச் சேர்ந்தான்.

என்பனவே இப்புனைவுகளாகும். இப்புனைவுகளின் முக்கியத்துவம் பற்றி கட்டுரையின் பிற்பகுதி விளக்கிக் கூறுகின்றது.

துட்டகைமுனு:

‘தென்னிந்தியாவைச் சேர்ந்த சோழவம்சத்து அரசனாகிய எல்லாளன் கி.மு. 2ம் நூற்றாண்டில் அனுராதபுரத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்தான். அவன் ஆட்சி 44 ஆண்டுகள் நீடித்தது. (கி.மு.145 - கி.மு.101). எல்லாளனுக்கு எதிராகப் படை திரட்டும் முயற்சியில் துட்டகைமுனு ஈடுபட்டான். அவன் உருகுணையை ஆண்ட காவன்தீசன் என்ற அரசனின் மகனாவான். துட்டகைமுனு தமிழர்களின் மீது படையெடுத்துச் சென்று எல்லாளனைப் போரில் வென்று முழு இலங்கையையும் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தான்’.

மகாவம்சம் என்ற பாளிமொழி நூலில் கூறப்பட்ட கதையின் சாராம்சத்தை மேலே குறிப்பிட்டோம். துட்டகைமுனு என்ற அரசன் வாழ்ந்தான் என்பதும், அவன் எல்லாளன் மீது போர்தொடுத்து வெற்றி பெற்றான் என்பதும், துட்டகைமுனுவின் வாழ்க்கை வரலாறு பற்றிய பிரதான செய்திகளும், வரலாற்று உண்மைகள் என்பதில் ஐயமில்லை. ஆயினும் மகாவம்சம் சித்திரிக்கும் துட்டகைமுனு, புனைவான புராணத்தன்மை உள்ள கதையின் நாயகனாகவே காணப்படுகின்றான்.

இலங்கை வரலாற்றில் சிங்கள பௌத்தர் என்ற அடையாள உருவாக்கத்தினை விளங்கிக் கொள்வதற்கு துட்டகைமுனு கதையின் புராணவியல் தன்மையினை விளங்கிக் கொள்ளுதல் அவசியம். இது குறித்து கணநாத் ஒபயசேகர எழுதும் போது மகாவம்சம் கூறும் துட்டகைமுனு - எல்லாளன் போரின் புராணவியல் முக்கியத்துவம் (Mythical Significance) உடைய நான்கு புனைவுகளை எடுத்துக் காட்டுகிறார். அவை வருமாறு:

- தமிழர்களை எதிர்த்துப் போரிடச் சென்ற துட்டகைமுனு தனது ஈட்டியில் புத்தரின் உருவச்சின்னத்தைப் பொறித்திருந்தான். தமிழர்களுக்கு எதிராகப் படைதிரட்டிச் சென்ற அவன் ஆற்றுக்கு மறுகரையில் நிலை கொண்டு இருக்கும் தமிழர்களைப் போரில் வென்று பௌத்தத்திற்கு புகழைச் சேர்ப்பேன் எனச் சூழ் உரைத்தான்.
- அவன் போர்க்களத்திற்குச் சென்றபோது 500 பௌத்த துறவிகளும் அவனுடன் அணிவகுத்துச் சென்றனர். துட்டகைமுனுவின் இப்படையெடுப்புக்கு முன்னரோ பின்னரோ இலங்கை வரலாற்றில் புத்தபிக்குகள் படையில் இணைந்து போர்க்களம் சென்றதற்கு சான்று கிடையாது என கணநாத் குறிப்பிடுகின்றார். துட்டகைமுனுவின் படைத் தலைவர்களில் ஒருவராக தேரபுத்தாபய என்ற பெயருடையவர் இருந்தார். இவர் முன்பு துறவியாக இருந்தவர். போரின் முடிவில் மீண்டும் துறவியானார்.
- போரில் பல உயிர்கள் பலியிடப்பட்டனவே என்ற குற்ற உணர்வு மேலிட துட்டகைமுனு புலம்பினான். அவனுக்கு ஏற்பட்ட குற்றவுணர்வையும் கவலையையும் மகாபாரதத்தில் அர்ச்சுனனுக்கு ஏற்பட்ட சஞ்சலத்திற்கு ஒப்பிடலாம். இந்துப் புராணத்தில் வரும் கிருஷ்ணரின் கீதா உபதேசம் போன்று துட்டகைமுனுவிற்கு புத்தபிக்குகள் ஆறுதலும் அறிவுரையும் கூறுகின்றனர். போரில் கொல்லப்பட்ட தமிழர்களான அஞ்ஞானிகள் விலங்குகளுக்கு நிகரானவர், அவர்கள் அரை மனிதர்கள், அவர்களைக் கொன்றதற்காக மனம் கலங்காதே என்று அவனுக்கு ஆறுதல் கூறப்பட்டது. துட்டகைமுனுவின் நற்செய்கையால் பௌத்தத்தின் புகழ் நிலை நாட்டப் பெற்றது என்பதை புத்தபிக்குகள் அவனுக்கு உணர்த்தினர்.
- துட்டகைமுனு இறந்தபின் அவன் சுவர்க்கலோகத்தில் துஸித என்ற இடத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அங்கு புத்தர் நிலையை எய்திய மைத்திரேயரைச் சென்றடைந்தான்.

இலங்கையின் வரலாற்று நூல்களில் போரை வெளிப்படையாகவே நியாயப்படுத்தியதற்கும், மனித உயிர்களைப் பலியிட்டதற்கு கவலைகொள்ள வேண்டியதில்லை என்று கூறியதற்கும் இதுபோன்ற வேறு உதாரணங்கள் இல்லை என கணநாத் ஒபயசேகர குறிப்பிடுகின்றார்.

தொடர்தல் 76ம் பக்கம்

WALK-IN CLINIC
அனைத்துக் குடும்ப வைத்தியத் தேவைகளையும் தமிழில் உரையாடி பூர்த்திசெய்துகொள்ள நீண்டகால அனுபவமுடைய குடும்ப வைத்தியர்
416.289.1212
Mon - Fri: 10am - 9pm
Sat - Sun: 10am - 3pm
OPEN 7 DAYS
no appointment required
MedCheck Clinic
1200 Markham Road, Unit 115
Toronto, ON M1H 3C3
(at Markham & Ellesmere)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
Learning Today Leading Tomorrow

MEDICAL OFFICE ASSISTANT(MOA)
32 Weeks Dipolma
Work as Health Office Admin., Medical Admin. Assitant Etc.
Starts July 15th
ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma (Co-op available)
Work as Payroll Clerk, Account Payable , Accounts Receivable etc.
Many Jobs are available
Starts July 15th
PERSONAL SUPPORT WORKER (PSW)
28 Weeks Certificate
Accredited by the National Association of Career Colleges
Immediate Job Opportunities
Starts July 15th
FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks Diploma
EARLY CHILDCARE ASSISTANT (ECA)
40 Weeks Diploma
Accredited by the National Association of Career Colleges
Immediate Job Opportunities
COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma (Co-op available)
Work as Account Payable , Accounts Receivable , Book Keeper Etc.
Jobs available in plenty

Second Career candidates & International Students Welcome

GOVERNMENT GRANT
யார் தகுதி உடையவர்கள்?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefit பெற்றவர்கள் அரசாங்க நன்கொடையாக $28000 or more பெறலாம்
திருப்பிச் செலுத்தத் தேவையில்லை
● Certain conditions may apply

PART TIME COURSES
Windows 2010, Word 2016, Excel 2016
Power Point 2016 , Access 2016
Quick Books 2017 Sage 50 Accounting 2017
Sage 300 2017 & Auto CAD
Firstaid & CPR , Food Handler Certifcation

● 100% Instructor Led Training ● Small Class Sizes
● Placement Assistance ● Ample Free Parking

416-291-5155 / 416-500-5300
4465 Sheppard Ave. East #208
(Sheppard & Brimley) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

துட்டகைமுனுவின்...

75ம் பக்கத் தொடர்ச்சி...

மகாவம்சத்தின் இக்கருத்து பௌத்த தர்ம சாத்திர நூல்களிற்கு முற்றிலும் மாறானது. அதனை பகவத்கீதையுடன் ஒப்பிடலாமே ஒழிய புத்த தர்ம சாத்தி ரங்கள் கொண்டு நியாயப்படுத்த முடியாது.

துட்டகைமுனுவின் போர்க்கள வெற்றிகளை மகாவம்சம் விரித்து உரைக்கின்றது. இவ் விபரங்களை சிங்கள மக்கள் மறந்து போயிருக்கலாம். ஆனால் சிங்கள இனத் தையும் பௌத்தத்தையும் பாதுகாத்துப் பெருமை சேர்த்த மாவீரன் துட்டகைமுனு என்ற எண்ணத்தை மகாவம்சம் சிங்கள மக்கள் மனதில் ஆழமாக வேரூன்றச் செய்தது. தமிழர்கள் சிங்களவரினதும், பௌத்தத்தினதும் எதிரிகள் என்ற கருத்தை விதைப்பதற்கு துட்டகைமுனு பற்றிய புனைவுகள் அண்மைக்காலத்தில் அரசி யல்வாதிகளால் உபயோகிக்கப்பட்டன.

இலங்கையில் பௌத்தம் பரவியபோது சிங்கள பௌத்தர்களின் நாடு இது என்ற உணர்வை ஏற்படுத்தும், நிறுவன அமைப் புக்களும் உருவாக்கப்பட்டன. இந்தியா வில் அசோக மன்னன் ஆட்சி செய்த காலத்தில் ஒரு தூதுக்குழு இலங்கையில் இருந்து அங்கு சென்றது. புத்தர் ஞானம் பெற்ற நிகழ்வோடு தொடர்புடைய புனித அரச மரத்தின் கிளை ஒன்று இங்கு கொண்டு வரப்பட்டு அனுராதபுரத்தில் நாட்டப்பட்டது. அப்புனித மரம் இன்று வரை அங்கு இருப்பதும், போற்றி வணங் கப்பட்டு வருவதும், புத்தரின் மதம் இலங்கையில் நிலைபெற்று இருப்பதன் அடையாளச் சின்னம் ஆகும். புத்தரின் தாடை எலும்பும், பிச்சாபாத்திரமும் இங்கு கொண்டு வரப்பட்டு பாதுகாத்து வழிப டப்பட்டன. எலும்பு தூபராம தாதுகோ பத்தில் வைக்கப்பட்டது. பிச்சா பாத்திரம் அரசனின் அரண்மனையில் வைக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டது. இப்புனித சின்னங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதன் முக்கியத்துவம் இலங்கையின் சிங்கள மக்களிடையே வளர்ச்சி பெற்ற இரு கருத்துக்களின் மூலம் தெளிவாகின்றது.

- புத்தர் இலங்கைக்கு வருகை தந்ததன் மூலம் இந்நாட்டைப் புனிதப்படுத்தினார். பின்னர் அவரது புனிதச் சின்னங்களை இங்கு கொண்டு வந்து வைத்திருப்ப தனால் புத்தரின் பிரசன்னம் இங்கு உள்ளது. அவர் இலங்கையில் எங் கும் வியாபகமாய் இருந்து அருள்பா லித்து வருகிறார். இப்புனிதச் சின்னங் கள் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப் படும் இடங்கள் பௌத்தர்களின் புனித யாத்திரைக்குரிய தலங்களாக உள் ளன.

- புத்தரின் புனித சின்னங்களான எலும் பும் பிச்சா பாத்திரமும் அரசனின் இறைமையோடு தொடர்புற்றனவாய் அரச அதிகாரத்திற்கு வலுச்சேர்க்கும் சின்னங்களாகவும் விளங்கின. பிச்சா பாத்திரம் அரசனின் அரண்மனையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு பூசிக்கப் பட்டது. காலப்போக்கில் பிச்சாபாத்தி ரத்தின் இடத்தை புனித தந்தம் பெற் றுக் கொண்டது. அரசுரிமையைப் பெற் றவன் இப் புனித சின்னத்தை தன் பொறுப்பில் வைத்துப் பேணிப்பாது காக்க வேண்டும். அதனை இழக்காத வரை தனது அரசுரிமைக்கு ஆபத்து இல்லை என்ற பாதுகாப்பு உணர்வு அரசனிற்கு உறுதுணையாக இருந்தது.

புனித சின்னமான புனித தந்தம் புத்தரின் பிரசன்னத்தையும் குறியீட்டு வடிவில் வெளிப்படுத்தியது. அத்தோடு அச்சின் னம் சிங்கள அரசர்களின் இறைமையை யும் சட்டப்படியான அரசுரிமையையும் குறிப்பதாயும் அமைந்தது. காலப்போக் கில் மூன்றாவது அம்சம் ஒன்றும் இவற்று டன் இணைந்தது. அரசனின் ஆட்சியுரிமை தெய்வத்தின் ஆணையின் படியானது என்ற தெய்வீக உரிமைக் கோட்பர்டின் சிங்கள பௌத்த வடிவம் என இதனைக் கூறலாம். இக்கருத்தியல் அரசனை 'பௌத்தத்தின் காவலன்' ஆக்கியது.

மேலே கூறியவற்றை பின்வரு மாறு சுருக்கிக் கூறலாம்.

- துட்டகைமுனு எல்லாளனுடன் போரிட் டபோது பௌத்த மதத்திற்கு புகழ் சேர்ப்பதற்காக போரிட்டான். அவனுடன் 500 பிக்குகள் அணிவகுத்துச் சென்ற னர். போரில் அஞ்ஞானிகளான தமி ழர்களைக் கொன்றமை கழிவிரக்கம் கொள்ள வேண்டிய செயல் அன்று, அவன் இறப்பின் பின் சுவர்க்கத்தை அடைந்தான் என்பன மகாவம்ச ஆசி ரியரால் எடுத்துரைக்கப்படும் புனைவு களாகும். இப் புனைவுகளின் துணை யுடன் சிங்கள - பௌத்த கருத்தியல் உருவாக்கம் பெற்றது.

- துட்டகைமுனு பௌத்தத்திற்குப் பெருமை சேர்த்த மாவீரன் ஆக்கப்பட் டான்.

- போதிமரம், புத்தரின் புனித சின்னங் கள், புத்தரின் பிரசன்னத்தின் குறியீடு களாகும். இச்சின்னங்கள் உள்ள இடங் கள் பௌத்தர்களின் யாத்திரைக்குரிய புனித தலங்களாயின.

- சிங்கள அரசரின் இறைமையின் குறி யீடாக முதலில் புத்தரின் பிச்சா பாத் திரமும் பின்னர் புத்ததந்தமும் விளங் கின.

- அரசனின் அரசுரிமை தெய்வத்தின் ஆணையின்படி அமைவது என்ற தெய் வீக உரிமைக் கோட்பாட்டின் சிங்கள வடிவம் இலங்கையின் அரசியல் உரி மைக் கருத்தியலில் புகுந்தது.

- சிங்கள மன்னர்கள் பௌத்தத்தின் காவலர்களாகவும் கருதப்பட்டனர்.

துட்டகைமுனு ஒரு வரலாற்று மனிதன் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. ஆயி னும் அவனைச் சுற்றிப் பல புனைவுகள் பின்னப்பட்டுள்ளன. துட்டகைமுனு கதை யின் புராணவியல் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்வதன் மூலமே இலங் கையின் வரலாற்றையும் இலங்கை சிங் கள - பௌத்தர்களின் நாடு என்ற கருத் தியல் உருவாக்கம் பெற்றதையும் புரிந்து கொள்ளலாம்.

shanmugalingam@thaiveedu.com

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594 Tel: 416-646-3422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MULTICULTURAL LADIES TALENT SHOW

UNIVERSAL CHARATER VALUE INTERNATIONAL ORG.

We have been working together for more than 22 years to support the people who needed help.

Our goals for this Special Ladies Event:

1) We have many support teams to support the ladies who live around Toronto areas with stress, without love and care.

2) In the past we made a difference in so many pre-school teachers' life, who were living in poverty. This year also, East Province in Sri-lanka we have chosen to support more than 40 pre-school teachers who live below the poverty line.

You Are A Fortunate Person If You Could Extend Your Support To This Event.

June 15,
Saturday 2019
@ 5:00 pm

Thamil Isai Kalaamanram
1120 Tapscott Rd,
Scarborough
ON M1X1E8

"Let's celebrate our life by sharing our pure love with everybody"

Contact: 647-763-2323 email:saumyp@gmail.com UCVIOrg

"மானிட சேவையே மகேசன் சேவை"

உலக ஒழுக்க நெறிக்கழகம்
பெருமையுடன் வழங்கும்

மாபெரும் கலை நிகழ்வு

"தாய்மை"

ஆன்மீகக் கருத்துக்களின் பகிர்வு.

பல்கலாச்சாரத்தைச் சேர்ந்த அதிதிறன் கூடிய 20 க்கும் மேற்பட்ட பெண்கள் குழுக்களால் நடாத்தப்படும். கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் முன்பள்ளி ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக நடாத்தப்படும் மாபெரும் நிகழ்வு.

இடம்:
Thamil Isai Kalaamanram
1120 Tapscott Rd, # 3
ON M1X1E8
Scarborough

ஜூன் - 15
சனிக்கிழமை
மாலை 5 மணிமுதல்

தொடர்புகளுக்கு:
647-763-2323
saumyp@gmail.com
UCVIORG

கலைக் குரிசில் கலாமன்றம்
சர்வதேச ஒன்றியம் வழங்கும்
"பெண்ணின் பெருமை"

தென்மோடி சமூகக்கூத்து

Ceycan Transhipping Inc.

INTERNATIONAL FORWARDING & LOGISTICS

SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA

PERSONAL EFFECTS
SHIPMENTS BY SEA & AIR
TO SRI LANKA

SRI LANKA'S
Best Clearing Facilities in
COLOMBO, KANDY & BATTICALOA

REGULAR
AIR SHIPMENTS NOW
AVAILABLE

Vancouver:
Randy - 604-273-4911
Edmonton, Calgary:
Ryan – 778-231-2038
Montreal:
Gana - 514-573-0093
Ottawa:
Cash & Carry - 613-715-0588

For further information contact
Kumar
905-673-9873

United Kingdom
Atlas Shipping
430 High Rd, Willesden
London NW10 2HA
Tel:02084596633 / 02084596633
Mobile:07949143535

Kandy
Ceylon Shipping Lines
175 Parangantota Road,
Mawilmada, Kandy
Tel: (812) 234356/57/59

Colombo
Ceylon Shipping Lines Ltd
76D, Dr. Danister De Silva Mawatha
Colombo - 09
Tel: (011) 2680301 - 308

Batticaloa
Ceylon Shipping Lines Ltd.
134 Main Street
Addalaichenai - 09
Tel: (067) 2277302

1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
Email: Ceycantrans@gmail.com web: ceycantranship.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை அமிர்தநாயகம்

ஈழத்தின் நாட்டுக் கூத்து வரலாற்றில் நெடுந்தீவுக்கு என்று தனித்துவமான இடம் ஒன்று உள்ளது. ஆனால் அந்த வரலாறு இதுவரையில் கல்விசார் புலமைத்துவ முறையின் கீழ் ஆய்வு செய்யப்படவில்லை.

மிக நீண்டதொரு கூத்துப் பாரம்பரியம் இங்கு நிலவியபோதும் அவை பொருத்தமுற இங்கு ஆவணப்படுத் தப்படவில்லை. அண்ணாவிகளின் முயற்சியால் பல கூத்துக்கள் மேடையேற்றப்பட்டபோதும் அவர்களின் கலையார்வம், கலைக்கு ஆற்றிய பங்களிப்பு என்பன தொகுக்கப்படவில்லை. இந்த தாமதத்தைக் கருத்திற் கொண்டு தற்போது நெடுந்தீவில் உள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில அண்ணாவிமார்களை நேர் கண்டு, அவர்களுக்கூடாக நெடுந்தீவின் நாட்டுக் கூத்து வரலாற்றை வடிவமைத்தலின் தொடக்க முயற்சியாக இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

அதன் முதற்படியாக அந்தோனிப்பிள்ளை அமிர்தநாயகம் அண்ணாவியார் அவர்களுடனான உரையாடல் இங்கு இடம்பெறுகின்றது.

- அ. றொனிராஜன் -

▸ உங்களுடைய பாடசாலைக்கல்வி பற்றிக் கூறுங்கள்.

நெடுந்தீவு மேற்கு சாறாப்பிட்டியில் வேதப் பள்ளிக்கூடம், சைவப் பள்ளிக் கூடம் என்று இரண்டு பாடசாலைகள் இருந்தன. 1952ல் வேதப் பாடசாலையில் நான் படித் தேன். அப்போது அந்தப் பாடசாலை தரம் 5 வரை மட்டுமே இயங்கியது. அதன் பிறகு என்னுடன் படித்த பிள்ளைகளோடு நானும் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி யாலயத்தில் தரம் 7 வரை படித்தோம். குடும்ப நிலை சரியான கஸ்ரம். குடும்ப அங்கத்தவர்கள் 14 பேர். தந்தை மட்டும் உழைத்து குடும்பத்தை காப்பாற்ற முடி யாது. நான் குடும்பத்தில் மூத்த பிள் ளையாக இருந்தபடியால் தகப்பனார் அடைந்த துன்பத்தைப் பார்த்து 13 வய சில பாடசாலையை விட்டு வெளிக்கிட்டது தான். அப்ப வேலைக்கு போனால் வேலை முடிய 65 சதம் சம்பளம் தருவார்கள்.

▸ நாட்டுக் கூத்தில் நடிக்க வேண் டும் என்ற ஈடுபாடு எப்படி ஏற்பட் டது?

பள்ளிக்கூடம் படிக்கும்போதே இதில் எனக்கு நிறைய ஈடுபாடு இருந்தது. அந் தக் காலத்தில் இங்க சினிமா படம் இல்லை. கலை நிகழ்ச்சிகள்தான் ஏராள மாக நடைபெறும். நாட்டுக் கூத்து மட் டுமல்ல. சின்ன மேளம், பெரிய மேளம், வசன நாடகங்கள், நடன நிகழ்வுகள், நட்டுவப் போட்டிகள் இவை எல்லாம் மாசம் மாசம் இங்கு மேடையேற்றிக் கொண்டுதான் இருந்தார்கள். பாடசாலை மட்டத்தில் போட்டிகள் நடைபெறும். அதில் பெண் பாத்திரமும் ஆண் பிள் ளைகள்தான் நடிக்க வேண்டும். எல்லோ ருக்கும் அடிவிழும் முடிவெட்டாமல் வந் தால், எனக்கு முடி வெட்டினால் அடிவிழும். அந்த நேரத்தில் பொய்முடி (டோப்) போடுவது கஸ்ரம். எனக்கு பாத்திரம்தான் தருவார்கள். அதற்காகவே எனது தலை முடியை அரைவாசிக்கு 'கிறில்' வெட்டாக வெட்டி வைத்துக்கொண்டேன்.

▸ நீங்கள் நடிகராக மேடையேறிய முதல் கூத்து பற்றிச் சொல்லுங் கள்?

நான் நெடுந்தீவு மேற்கில் இருந்தபடியால் இந்து நாடகங்கள் தான் அங்கு பழக் குவார்கள். வேத நாடகங்கள் பிரபல்யமாக அங்கு இல்லை. பாடசாலை மட்டத்திலான போட்டி நாடகங்கள். கடைசி வரைக்கும் என்னைக் கழிக்க மாட்டார்கள். முக்கிய மாக பெண்பால் கட்டத்திற்குத் தான் என்னை எடுப்பார்கள். என்னோடு படிக் கின்ற பெண் பிள்ளைகளைப் பார்த்து நடை, உடல் அசைவுகளைக் கற்றுக் கொண்டு, அவர்கள் சென்ற பிற்பாடு அவர்களைப் போன்று நடந்து பார்த்து,... ஏனென்றால் பூங்கா வனத்திற்கென்று ஒரு நடை இருக்கு, அரசனின் மனை விக்கு நடிக்கும்போது அதற்கொரு நடை இருக்கு, சிருங்கார காட்சிகள் வரும்போது, அதற் கொரு நடை இருக்கு, கிட்டத் தட்ட 17 வயது மட்டும் பெண் பாத்திரக் கட்டங்க ளுக்குத் தான் நடித்தேன். தோழி, அரசி போன்ற கட்டங்கள்தான் தருவார்கள். அந்த வகையில் நான் நடித்த முதல் கூத்து 'வள்ளி திருமணம்' நெடுந்தீவு மேற்கில் சின்னத்தம்பி அண்ணாவி, வேலுப்பிள்ளை பரியாரியார், சின்னத்துரைப் பரியாரியார், அண்ணாவி காத்தி, நன்னி, போன்ற அண்ணாவிமார்கள் இருந்தார்கள். இதில் வேலுப்பிள்ளை பரியாரியார் தான் 'வள்ளி திருமணம்' என்ற கூத்தைப் பழக்கி பிள் ளையார் கோவில் முன்றலிலும், அதன் பின் முருகன் கோவிலிலும் மேடையேற் றினார்கள். அதில் நான் வள்ளியாக பெண் பாத்திரம் ஏற்று நடித்தேன்.

▸ நீங்கள் நடித்த கூத்துக்களில் பெண்பாத்திரங்களை மட்டும்தான் ஏற்றீர்களா?

இல்லை, நொண்டி நாடகம், மரியதாசன் நாடகம் என்பவற்றில் அரசன், கிறிஸ் தோப்பர் நாட்டுக் கூத்தில் சேனாதிபதி, எஸ்தாக்கியார் நாட்டுக் கூத்தில் மாலுமி. வள்ளி திருமணம், நொண்டி நாடகம் இரண்டாவது தடவை மேடையேற்றும்போது வள்ளி, நொண்டியின் மனைவி. யோபூ கூத்தில் யோபூ. அரிச்சந்திர மயான காண்டம் - இதில் அரிச்சந்திரன். கரங் கொடுத்த தாய், புனித சவேரியார், சங் கிலியன், காத்தவராஜன் இதில் முறையே அரசன், சேனாதிபதி, இந்த இரண்டுக் கும்தான் பெயர் எடுத்தனான். பெண் கட் டங்களும் பரவாயில்லை.

▸ கூத்து தொடர்பாக வேறு அண் ணாவிகளிடம் பயிற்சிகள் ஏதா வது பெற்றிருக்கின்றீர்களா?

ஆம், 19 வயதில் யாழ்ப்பாணம் சென்று, வீ.வீ வைரமுத்து, பூந்தான் ஜோசேப்பு அவரிடம்தான் சில கூத்தின் அந்தரங்கங் கள் பழகினான். மிக நுட்பம். பூந்தான் யோசேப்பு, (அவர் சொல்வார் 12 விருத்தம் இருக்கு, இந்த 12 விருத்தமும் பக்கத்து பக்கத்து வீடு மாதிரி சின்னச் சின்ன வித்தியாசம் கண்டு பிடிக்கிறது கடினம். அந்த மனுஷன் சொல்லும்...'ஏறடா தீவான், செபமாலைக் கல்லுருட்டி செபமாலை சொல்வது போல்தான்டா கழில் நெடில் ஆசிரிய விருத்தம்' மிக அற்புதமான கலைஞர்கள் அவர்கள்.

▸ நீங்கள் பழக்கி மேடையேற்றிய கூத்துக்கள் பற்றிக் கூறுங்கள்?

1970ல் நான் பழக்கிய முதல் கூத்து கிறிஸ்தோப்பர். 1971ல் இரண்டாவது கூத்து மரியதாசன். அடுத்து கரங்கொடுத்த தாய், நொண்டி நாடகம், எஸ்தாக்கியார், வெடி யரசன், அரிச்சந்திர மயான காண்டம், (இசை நாடகம்) காத்தவராஜன் (இசை நாடகம்) நந்தனார் (இசைநாடகம்) நெடுந் தீவு மேற்கூர், கிழக்கூரில் அந்தந்த அண்ணாவிமார்களுடன் சேர்ந்து வள்ளி திருமணம் பழக்கி மேடையேற்றியது. கடைசியாக 2015ல் 'சங்கிலியன்' கூத்து நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும், கலா சார மண்டபத்திலும் மேடையேற்றப்பட் டது.

▸ கூத்துக் கலைஞர்களிடையே 'அறம்' தொடர்பாக ஒரு நம் பிக்கை காணப்படுகின்றது இது பற்றி உங்கள் கருத்து என்ன?

ஒரு கறட்டி ஓணானை வெட்டிக் கொண் றாலும் அது அறம். ஒரு பல்லியை கொண்றாலும் அது அறம்...

'என் கைவாளோடு பாதி பாதியாக வெட்டி
வீதி வீதி எங்கும் கொட்டி
வீதி வீதி எங்கும் கொட்டி
மீதியை தூக்குவேன் கட்டி
சத்தியமாம் மறை என்கின்றாய்
அதிலுமொரு நித்திய
தேவனுமென்கின்றாய்
அட மடையா? ...

ஒரு அர்ச்சேற்றவரை செய்ய முடியுமா? இப்படி! இந்தச் சொற்களேல்லாம் வெட் டப்பட வேண்டும். இதை வெட்டி அதற் குரிய காவிய வரிகளை அதற்குள் வைத்து...

ஒரு அண்ணாவியார் கூத்துப் பழக்கும் போது, 'உள்மணியாரத்தைக் கட்டி - மணியாரத்தைக் கட்டி என்று எழுதப்பட் டிருந்தது. மணியாரம் என்பது தொண்டை - படித்துக்கொண்டு வரும்போது தொண்டை கட்டிப் போச்சு. அவன் அடுத்த முறை பழக்கும் போது 'மணியாரத்தை தட்டி' என அதை மாற்றிப் பழக்கினான். சரித் திரம் சரித்திரமாக இருக்க வேண்டும். அது உண்மையாக இருக்க வேண்டும். அப்ப டித்தான் அர்ச்சேற்றவருடைய சரித்திரம் எல்லாம் எழுதப்பட்டிருக்கு. ஆனால் அண் ணாவிமாரில்தான் இந்த திறமைகள் கட் டாயம் இருக்க வேண்டும். அந்த சொற் களை பொருத்தமுற மாற்றியமைகிறது. வெடியரசன் கூத்தில் மீகாமன் வீரநாரா யணனை வெட்டியெறிகிறான் கண்ணகி யின் அருளால், அது அறம் இல்லை. அர்ச்சேற்ற யுவானியார் கூத்தில் ஏரோதி யாள் தூண்டுதலால் ஏரோது யுவானியா ரின் தலையை வெட்டியெறிகிறான் அது அறம். கடவுள் நம்மை அழிக்கலாம் ஆனால் நாம் கடவுளை அழிக்க கூடாது. அப்படிச் செய்தால் அது அறம்.

▸ இன்று உள்ள பயிற்சிப் பட்ட றைகள் போன்று அந்தக் காலத் தில் நாடகத்தில் நடிக்கும் நடி கர்களுக்கென விசேட பயிற்சிகள் ஏதேனும் இருந்ததா?

கூத்தில் நடிக்க வருபவர்கள் பிறவிக் கலைஞர்கள். அவர்களுக்கென்று தனிப் பட்ட பயிற்சிகள் எதையும் நாம் கொடுப் பதில்லை. ஒரு இரவு கூத்துப் பழக்கினால் மூன்று நாளைக்கு அடிவயிறு நோகும். மூன்று நாள் சென்றுதான் வயிற்று வலி, தொண்டை வலி எல்லாம் நீங்கும். அவ் வளவுக்கு துன்பப்பட்டுத்தான் ஒரு கூத்தை திறமைக்கு கொண்டு வருவது. எவ்வளவு மூச்சை அடக்கி பாடவேண்டும், குறித்த வசனம் பேசவேண்டும் என்பதெல்லாம் கலைஞன் நல்ல தேகாரோக்கியத்துடன் இருந்தால் இயல்பாகவே அவனிடம் வந்து சேரும்.

▸ 'பணக்கூத்து' என்ற சம்பிரதாயம் இங்கு இருந்ததா?

ஆம், கூத்து மேடையேற்றுவதற்கு முன்பு பணக்கூத்து நடைபெறும். அண்ணாவி

தொடர்தல் 80ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவியார்...

79ம் பக்கத் தொடர்ச்சி...

அன்று வாய் திறக்கமாட்டார். தான் பழக்கிய அனைத்தும் சரியா? என்று அண்ணாவி பார்த்துக் கொண்டிருப்பார். அன்று செலவு முழுவதும் அண்ணாவிதான் பொறுப்பார். அங்கு உற்றார் உறவினர்கள் எல்லோரும் வந்திருப்பார்கள். ஒரு செம்பை வெள்ளைத் துணியால் கட்டி, பூ வைத்து நடுவில் வைத்திருப்பார்கள். வந்தவர்கள் காசு போடுவார்கள் அன்று ஒரு நூறு ரூபாய் சேர்ந்தால் இன்று அது பத்தாயிரம் ரூபாய்க்கு சமன் தானே!

▸ கூத்தில் இடம்பெறும் கோமாளி (பபூன்) என்ற பாத்திரத்தின் முக்கியத்துவம் என்ன?

அவர் அந்தக் கிராமத்தின் ஒரு நையாண்டிக்காரனாக இருப்பான். எந்த அபிநயமும் செய்யக்கூடியவர். கூத்தின் இடையில் தோன்றி நளினமாக கதைத்து, சனங்களின் நித்திரைத் தூக்கத்தை மாற்றுவது, காட்சிகள் மாறும் இடைவெளிக்குள் இவர் தோன்றி அந்த இடத்தை தனது நடிப்பால் நிரப்பிப் செல்வார். இந்தப் பாத்திரத்தை அண்ணாவிமார்களும் செய்யலாம். பெரும்பாலும் அண்ணாவிமார்தான் செய்கிறது. அதற்கான பாடல்கள் புலவர்களால் பாடப்பாட்டுள்ளது. சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப இவர்கள் வசனங்களைப் போட்டுக் கொள்வார்கள். பெரும்பாலும் புராணத்தையும் நடைமுறை யதார்த்தத்தையும் இணைக்கின்ற வேலையை அவர் செய்வார். உதாரணமாக:

'கள்ளிருந்தாக் கொண்டு வாவோடி
சாந்தார வள்ளி
கள்ளிருந்தா கொண்டுவாவோடி

கள்ளிருந்தாக் கொண்டுவாடி
கணவாயும் சுட்டத்தாடி
கள்ளிருந்தாக் கொண்டுவாவோடி
சாந்தார வள்ளி
கள்ளிருந்தாக் கொண்டுவாவோடி

மண்டிக் கள்ளுக் குடிக்க மாட்டன்
சண்டித்தனம் செய்யமாட்டன்
பெண்டிலுக்கடிக்கமாட்டன்
தெருவில் கிடக்கமாட்டன்.

கள்ளிருந்தாக் கொண்டு வாவோடி...

இப்படி பல பாடல்கள், இது ஒரு பத்து நிமிடம் பார்வையாளரின் கவனத்தை சிதறாமல் பார்த்துக் கொள்ளும்.

▸ 'அண்ணாவி' என்ற நிலைக்குள் ஒருவர் எவ்வாறு வந்து சேருகின்றார்?

இன்று இரண்டு செத்த வீட்டுப் பாடல் தெரிந்தால் அவர்கள் எல்லாம் அண்ணாவி என்று சொல்லிக் கொள்கின்றார்கள். அசையோடு இசை, இசையோடு அசை இந்த இரண்டும் அண்ணாவிக்கு முக்கியம். பாட்டோடு ஆடவும் ஆட்டத்தோடு பாடவும் ஒரு அண்ணாவிக்கு தெரிய வேண்டும். கூத்துக்கலையின் முதல் அண்ணாவி தாய் தான். ஆரம்பக் கலை பிறந்ததே தாயால்தான். அவள் என்ன இராகத்தில் பாடினாள்? இந்த வீட்டில் ஒரு இராகம். கொஞ்சம் தள்ளிப் போனால் இன்னொரு வீட்டில் வேறொரு இராகம். அடுத்த வீட்டில் பசான். அடுத்த வீட்டில் துக்க இராகம். அடுத்த வீட்டில் அம்மானை இராகம். பெண்கள் கூத்துப் பழக்கவில்லை. ஆனால் கூத்துக்கு முன்னோடியான பல இராகங்கள், தாலாட்டு முதல் ஒப்பாரி வரையிலான இராகங்கள் அவர்களிடம் இருந்தன. பல அண்ணாவிமார்கள் தங்கள் தாயிடம் இருந்து கலைக்கான ஊற்றை நிறையப் பெற்றிருக்கின்றார்கள். கலை அன்புள்ள ஒருவன் நான்கு கூத்துக்களை உன்னிப்பாக கவனித்து, ஒத்திகைகளில் கலந்து கொள்வானாக இருந்தால் அவனால் சுயமாக ஒரு கூத்தை மேடையேற்ற முடியும். அந்த நிலையில் அவன் 'அண்ணாவி' என்ற நிலையை வந்தடைகின்றான்.

▸ உங்களிடம் உள்ள கையெழுத்துப் பிரதிகள் எவை?

எஸ்தாக்கியார், அரிச்சந்திர மயான காண்டம். மனம்போல் மாங்கல்யம், புனித சந்தோமையார், புனித சவேரியார் இது போன்று மற்றைய அண்ணாவிகளிடமும் பல கையெழுத்துப் பிரதிகள் உள்ளன. நீண்ட கால யுத்தத்தினால் எமது பல கூத்து நூல்கள் அழிவடைந்து விட்டன. எஞ்சியதை திருமறைக் கலாமன்றம்தான் பாதுகாத்து வைத்துள்ளது.

▸ அண்ணாவிமார்களிடையே போட்டித் தன்மை காணப்படுவது வழமை. இந்த நிலையில் ஒரு கலைஞன் எப்படி இருக்க வேண்டும்?

கலைஞன் பால்போன்ற நெஞ்சம் கொண்டவனாக இருக்க வேண்டும். கம்பன் ஒட்டக்கூத்தரைப் பார்த்து பாடுகின்றான் 'வஞ்சகம் நிறைந்தவனே - உன் நெஞ்சு முழுக்க நஞ்சே - பஞ்சு போன்ற நெஞ்சமே நல்லதைச் செய்திட எண்ணும்' ஒரு உண்மையான கலைஞன் பஞ்சு போன்ற உள்ளம் கொண்டவனாக இருக்க வேண்டும்.

▸ எதிர்வரும் காலத்தில் நெடுந்தீவில் கூத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

பழைய திறமையிருக்காது. காரணம் பிள்ளைகளிடம் போஷாக்கில்லை. அந்தக் காலத்தில் பத்துப் பிள்ளைகளுக்குக் குறைவாகப் பெற்றது யார்? இன்று பிறக்கும் குழந்தைகளின் நிறை என்ன? இரண்டு கிலோ, இரண்டேமுக்கால் கிலோ. பிள்ளை பெட்டிப் பாலில் வளருகின்றது. மீனைப் பிடித்து கொம்பனிக்கும், பனங்கிழங்கை ஒடியல் போட்டு விற்றுவிட்டு கோதுமை மா வாங்கி சமைத்து சாப்பிட்டால் உடம்பிற்கு எப்படி போஷாக்கு கிடைக்கும்? அடுத்தது பிள்ளைகளிடம் மரபு, பாரம்பரியம் பற்றிய சிந்தனை இல்லை. நவீன வாழ்க்கைக்கு அவர்கள் ஆட்பட்டு விட்டார்கள். எங்கள் தாத்தா எப்படி தென்னை மரம் வைத்தார்? எப்படி பணம் பாத்தி போட்டார்? என்று யாரும் இப்ப தேடிப் பார்ப்பதில்லை. 'அன்று எமது முன்னோர்கள் பயிர் செய்த சிறு தாணியங்கள் எல்லாம் இப்ப எங்கே? யார் இப்ப அதைப் பற்றி சிந்திக்கின்றார்கள். இதனால் இது பற்றி நான் யாரோடும் பேச விரும்புவதில்லை. 'முடிந்தது உலகம்' என்பதோடு நான் எல்லாவற்றையும் சுருக்கிக் கொள்கிறேன்.

▸ போஷாக்கு இல்லை என்பது கூத்தை எவ்வாறு பாதிக்கும்?

மூச்செடுத்துப் படிக்கோணும் ஐயா! எனக்கு மூச்சிருந்தால் தானே நான் பாடவும் ஆடவும் முடியும். இரண்டு தரம் துள்ளினவுடன் மூன்றாம் தரம் காலுழையுது. கூத்து என்பது ஒரு மணித்தியாலயம் இரண்டு மணித்தியாலயம் நடத்திவிட்டுப் போகிற கலை அல்ல. விடிய விடிய ஆடப்படுவது, அதை எல்லாம் ஏற்றுக் கொள்ள உடல் தயாராக இருக்க வேண்டாமா?

▸ இறுதியாக, அன்று உங்களின் உணவு முறை எப்படி இருந்தது?

ஒடியல் பிட்டு, கூழ், முசிட்டை இலைக்கறி, தாழி இலைக்கறி, கௌவ்வை இலைக்கறி, குறிஞ்சா, தும்பங்காய், எருமைப் பால், பசுப்பால், மோர், தயிர், கடலில் இருக்கிற சங்கு, மட்டி உட்பட எல்லாம். சாமிச் சோறு, வரகுச் சோறு, இந்த மாதம் முதலாம் திகதி பாண் சாப்பிட்டால் இனி அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு பிறகுதான் பாண் கிடைக்கும். ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு சாப்பாடு. இன்று புக்கை, நாளை சாமி அரிசி கஞ்சி, அடை, பழஞ்சோறு, அப்படி... நான் சுருக்கமாகச் சொல்றன் 'உணவு உற்பத்தியை சரிவர மேற்கொள்ளாத ஒரு சமூகத்தால் சமூக உற்பத்தியை சரிவர மேற்கொள்ள முடியாது.' மனிதன் அவாவுகின்ற அனைத்துமே உணவில்தான் தங்கியுள்ளது.

ronyrajan.a@thaiveedu.com

'கற்க கணிதம் கசடற'
மாணவர்களின் வீட்டுக்கு வருகைதந்து தனித்தனி வகுப்புகள் எடுக்கப்படும்.

Math Tutoring
A. Puranthagan (Puran) BSc. Eng.
Specializing in tutoring Math from Gr. 10 - 12.
Available for home visits and one-on-one sessions.
H: 905-428-1928
C: 416-819-7923
1629 Winville Rd.,
Pickering, ON L1X 0C8

ஒரே நேரத்தில் இரண்டு கலைவிழாக்கள் ஒழுங்கு செய்யப்படுவதைத் தவிர்க்க உங்கள் கலை விழாக்களை முன்கூட்டியே 'இணையம்' இணையத் தளத்தில் பதிவு செய்து விடுங்கள். உங்கள் விழாவின் திகதியைத் தீர்மானிப்பதற்கு முன்பு இணையத்தைப் பார்த்து அந்தத் திகதியில் வேறு நிகழ்ச்சிகள் ஏதும் உள்ளதா என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் செல்லவிருக்கும் விழா, நிகழ்வுகள் சம்பந்தமான தகவல்களை இணையத்தைப் பார்த்து அறிவதுடன், நிகழ்வு நடைபெறும் இடத்தின் வரைபடத்தையும் இணையத்தில் பார்க்கமுடியும். இது முற்றிலும் இலவசமான சேவை.

www.inayam.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாங்க விற்க...

10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

வாங்கப் போகிறீர்களா?

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

விற்கப் போகிறீர்களா?

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

★ Cash incentive for referrals

For Sellers

Free Home Inspection!
Free Market Evaluation!
Free Home staging Cosultation!

Please visit my new Website for Best tools

www.vela4homes.com

Detached
3+1BR
4WR, 2Kitc
Finished Bsmt
Fully renovated
Ajax

Condo
2BR
2WR
Parking + Lockers
810 sft
Best Value
Toronto

Condo
10 % Deposit only
0.00 Dev. Charges
Free assignmt
Parking+Locker
2BR, 1BR etc
Vaughan



Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2016
Chairman's Club Award Winner 2017
HOMELIFE HIGHER STANDARDS

Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கியற் கலையின் தலைமகன் ஏ.சி. தாசீசியஸ்

எழுத்தறிவித்தவன்

- ஞானம் லேம்பட் -

திரு. தாசீசியஸ் அவர்களை நினைக்கும் போதெல்லாம் அவருடைய நாடகச் சாதனைகள் வந்து என்னில் குறுக்கிடும். அவருடனான தொடர்பு பலவிதங்களில் என்னை 'நானாக' ஆக்கியது. அவரது வழிகாட்டுதலும், பாதிப்பும் என் நினைவில் நிலைத்து நிற்பவையும் எழுபதுகளின் முற்பகுதிவரை 'நான் பெரிய நடிகன்' என்ற என் நினைவை என்னிலிருந்து நீக்கியது. மூன்றாம் வகுப்பிலிருந்து, எனது பாடசாலையில் நான் நடிக்காத நாடகங்கள் இல்லை. எனது பாடசாலை ஆசிரியர்கள் தந்த ஆழமற்ற, விமர்சனமற்ற விமர்சனங்கள் என்னை அவ்வாறு எண்ண வைத்தன. எழுபதுகளின் நடுப்பகுதியின் தாசீசியஸ் அவர்களின் தொடர்பும் அவரிடமிருந்து நான் கற்றவையும் என் நினைவை முற்றாக மாற்றி நடிப்பும், நாடகமும் பற்றி நான் நினைத்தவையும், அறிந்தவையும் உண்மை அல்ல என் பதை உணர்ந்தேன். எனவே, அவர் பற்றிய உங்கள் மதிப்பீட்டிற்கு இவை உதவலாமென சிலவற்றை இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஈழத்து நவீன தமிழ் நாடக வளத்திற்கு வித்திட்ட முன்னோடிகளில் மிக முக்கிய மானவர் திரு. தாசீசியஸ் அவர்கள். எமது மூதாதையோரின் நாடகமான கூத்து இவரது இரத்தத்தில் கலந்த ஒன்று. இவரது தாத்தா ஒரு மிகச் சிறந்த அண்ணாவியார் 150 - 200 வருடங்களுக்கு முன்னரே இரண்டு மேடைகள் அமைத்து கூத்தை புதுமையாக நடத்தியவர்.

இக்கூத்து கிராம மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்தது, கூத்தின்றி அன்றைய கிராம மக்களின் வாழ்வு பூரணமடையாத ஒன்றாகக் காணப்பட்டது. அத்தகைய செழுமையும் தனித்துவமும் உள்ள கூத்தைத் தனது நாடக வாழ்வுக்கு அடித்தளமாகக் கொண்டவர். இத்தகைய உறுதியான அடித்தளமும், பல்கலைக்கழகத்தில் இவர் பெற்ற ஆங்கில நாடக அறிவும், பல்வேறு நாட்டு நாடக அறிஞர்களின் வழிகாட்டுதலும் இவரை, ஒரு செழுமையான நவீன தமிழ் நாடகத்திற்கு வித்திட வைத்தது.

'உலகின் பல்வேறு பண்புகளையும் இணைத்து முழுமையாகப் பிரதிநிதித்துவம் செய்யும் பண்பு கலைக்குரியது' என்று அறிஞர் யூ. யக்கோல் கூறியது போல, உலகின் பல்வேறுபட்ட நாடகத் தன்மைகளை இணைந்து நாடகங்களை நவீனப் படுத்துவதில் வல்லவரானார் இவர்.

பேராதனைப் பல்கலைக்கழகம், அக்குவைனால் கல்லூரி, பல நாடக அறிஞர்கள் மூலமாகப் பெற்ற அறிவும், இலங்கையின் தலைசிறந்த நாடக அறிஞர்களின் வழிகாட்டுதலும், நாடகங்களில் அரசியலையும் சமூகத்தையும் விமர்சன நோக்கோடு உற்றுப் பார்க்கும் தன்மையும் சேர்ந்து அவர் நெறிப்படுத்திய, எழுதிய நாடகங்களுக்கு ஒரு கலைவடிவத்தைக் கொடுத்து அதைச் சமூக ஆற்றல் நிறைந்தவையாகச் செய்துள்ளார்.

மனித செயல்களை அல்லது செயல் நிகழ்வுகளை, உடல் இயக்கச் செயற்பாடு, உடல் இயக்கமின்றிய பேச்சு மட்டும், அல்லது மேற்கூறிய இரண்டுமே அற்ற 'மௌனம்' ஆகியன மூலம் மேடையில் காட்டும் தன்மை உடையவர்.

இவரது உத்தி முறைகள் சமூகக் களத்தைத் தளமாகக் கொண்டபடியால், மனித நடத்தைகளை அவை தோற்றம் பெற்று முடிவு பெறும் படிநிலைகளை உள்ளடக்கிய பல பாத்திரங்களை அல்லது பல முரண்பாடுகளைக் கொண்ட ஒரு பாத்திரத்தை இவரது நாடகங்களில் காணலாம். (உ+ம்: பிச்சை வேண்டாம் - லரிசா. புதியதொரு வீடு - மாயவன், மாசிலன். பொறுத்தது போதும் - சம்மாட்டி).

இவர் தம் காலத்தைப் பற்றியும், தாம் வாழ்ந்த சமூகத்தைப் பற்றியும் சிந்தித்தவராதலால் தன் சிந்தனையில் வந்தவற்றை, அவர் நெறியாள்கை செய்த நாடகங்களில் நடமாடவிட்டார். ஆனால் தான் வாழ்ந்த காலத்தையோ சமூகத்தையோ, மதிப்பீடுகளோ, கேள்விகளோ இன்றி ஏற்றுக் கொண்டவரும் இல்லை.

இவர் எந்தக் கோட்பாட்டிற்கும் கட்டுப்படாதவர். ஆகையால் நாடகங்கள் எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்கினார். அதனால் அதற்கான பதில்களைத் தான் வாழ்ந்த சமூகத்திடம், தான் வாழ்ந்த வாழ்க்கையிடம் இருந்து பெற்றுக்கொண்டார். (இதனாலேயே மகாகவியின் கோடை நாடகம் அன்றைய மாக்சிய விமர்சகர்களால் நாடகம் அல்ல என ஒதுக்கப்பட்டிருந்த போதும், நாடக மேடையேற்றத்தின் போது அந்நாடகத்தின் சில பகுதிகளை நீக்குமாறு அவரது மேலதிகாரி கேட்ட போது அதை மறுத்தும் மேடையேற்றி அந்த மாக்சிய விமர்சகர்களின் பாராட்டைப் பெற்றார்). இதனால் இவரது நெறியாளுகைக்கு உட்பட்ட நாடகங்கள் போலி இன்றி, பிரச்சாரமாக இன்றி, கலையாகக் காணப்பட்டன. இதனால் இவரது நாடகங்களில் நடமாடிய மாந்தர்களும் நிறைவேறிய சம்பவங்களும் அனுபவங்களாகக் காணப்பட்டன. இதனாலேயே கதை சொல்லியாக அல்லாமல் கலைஞராகக் காணப்பட்டார்.

ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதற்காக மனப் போராட்டங்களுக்கு மத்தியில் ஊசலாடும் பாத்திரங்களைக் கொண்டுவர அவர் மேற்கொண்ட உத்தி முறைகள் அவரது சிறப்பான கற்பனை வளத்தைக் காட்டும். இத்தகைய உத்திகளும், நடிப்பு முறைகளும் தனிமனித துன்பமாகவன்றி மானிட சமூகத்திற்கானதாகக் காணப்படும்.

ஒவ்வொரு நடிகனும், தன் ஆளுமைக்கும், தேவைக்கும் ஏற்ப பயிற்சி பெற வேண்டும் என வலியுறுத்தும் இவர். மூச்சுப் பயிற்சி, அசைவுப் பயிற்சி என்பவற்றை முழுமையாகப் பெற வேண்டும் என்பதில் மிகக் கண்டிப்பானவர். பல சித்தர்களிடம் பெற்ற மூச்சுப் பயிற்சியைத் தனது மாணவர்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் கண்ணாயிருந்தவர்.

தனது நாடகங்களை படச்சட்ட மேடையில் மட்டுமல்லாது Forum Theatre, Invisible Theatre, Instant Theatre ஆகிய முறைகளிலும் நடத்தி வெற்றி கண்டவர்.

நாடகங்களைச் சமுதாயப் பணியாகவும் தமிழ்ப் பணியாகவும் மேற்கொள்ள வேண்டும் என்பதே இவரது குறியாகும்.

ganam.lambert@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேனா முனையின் வீரியத்தையும் சமூகப் பொறுப்பையும் கற்றுத்தந்த ஆசான்

தமிழ் இனப்படுகொலையின் சாட்சியமான ஊடகனாக நான், இன்றும் எம் மக்களுக்கான நீதிக்காக குரல் கொடுத்து வருகின்றேன் என்றால், அதனைச் சாத்தியமாக்கியவர்களில் முதன்மையானவர் தாசீசியஸ் மாஸ்ரர்.

போர்ச்சூழலின் போது நாளாந்தம் எனது பாதுகாப்புத் தொடர்பில் மாஸ்ரர் எடுத்துக் கொண்ட அக்கறை, தமிழ்த்தேசிய ஊடகக் குடும்பத்தில் ஒரு தந்தை மகன் மீது காட்டிய அக்கறையையும் கடந்தது என்றே கூற வேண்டும்.

மரணத்தின் பிடியில் இருந்து வெளியேறி 45 நாட்கள் திசை தெரியாத கடற்பயணம் மேற்கொண்டு வன்கூவர் கரையைச் சேர்ந்த பின்னும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடியாமல், கனடிய மண்ணிலும் பயங்கரவாத முத்திரை எம்மீது குத்தப்பட்டது.

ஊடகப் பணியை அச்சுறுத்தலாக்கும் போக்கு, இலங்கையில் மட்டுமல்ல, இன்று உலகெங்கும் பொது நடைமுறையாகவே இருக்கின்றது. கனடா இதற்கு விதிவிலக்கல்ல.

நான் கனடாவின் கரையை அடைந்துவிட்டேன் என்ற தகவலை அறிந்த மாஸ்ரர், பென் (PEN International) என்னும் ஊடக சுதந்திரம் மற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக் குறித்து நடவடிக்கை மேற்கொண்டுவரும் அமைப்பைத் தொடர்பு கொண்டுள்ளார்.

நாம் கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டிருந்த வேளையில், ஓர் ஊடகனை சிறைப்படுத்தியமை குறித்துத் தனது அதிருப்தியை மாஸ்ரர் வெளிப்படுத்தியிருந்தமை பற்றி 'பென் கனடா' ஊடாக பின்னர் நான் அறிந்து கொண்டேன்.

நான் நான்கு திங்கள் சிறையில் இருந்து வெளியேறிய பின்னர், எனது ஏதிலி சட்ட வழக்கு மற்றும் குடும்பத்தினரின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் தொடர்ந்தும் ஆலோசனை வழங்கி வந்தார் மாஸ்ரர். ஆனால் 'பென் கனடா'வைக் கடித்துக் கொண்டதை என்றுமே எனக்குக் கூறவில்லை.

கனடிய மைய ஊடகக் குழுவினருடன் நான் ஒரு பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டிருந்த வேளையில், பேராசிரியரும் எழுத்தாளருமான மேரி ஜோ லெட்டி, மாஸ்ரருடனான தொலைபேசி உரையாடல் குறித்தும் என் மீது மாஸ்ரர் கொண்டிருந்த அக்கறை குறித்த அவரது அன்பைப் பகிர்ந்து கொண்டபோதே அதை நான் அறிந்தேன்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஓர் ஊடகவியலாளனின் பங்கு, ஊடக அறம், மொழி ஆளுமை... இவ்வாறு எத்தனையோ விடயங்களை தொடர்ந்தும் கற்பித்து வரும் மாஸ்ரருடனான முதற் சந்திப்பு சற்றே வேறுபட்டது.

ஃபிரான்ஸ் தமிழ்த் தொலைக்காட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசிய ஊடகங்களுக்கான நிகழ்ச்சி மற்றும் செய்தித் தொகுப்புப் பணி என்று பரபரப்பாக வடதமிழீழத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த அக்காலத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட ஒரு குழுவினரைக் கொண்ட கலையகம் ஒன்றை கொண்டு நடத்தும் பொறுப்பாளனாக நான் அங்கு செயற்பட்டுக் கொண்டிருந்தேன்.

களத்தில் உள்ள வளங்களுடன் தமிழ்த் தேசிய ஊடகக் குழுமமாக நாம் வட தமிழீழத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த காலம் அது.

அன்றைய சந்திப்பின் போது அனைவரும் அமைதியாக இருக்க, ஒரு விடயத்தில் நான் களநிலவரத்தைக் அடிப்படையாகக் கொண்டு எனது கருத்தை தெரிவிக்கின்றேன்.

அந்த இடத்தில் தனது கருத்தை நிறுத்திக் கொண்டு மிகுந்த பொறுமையுடன் அமைதியாக எனது கருத்தை செவிமடுத்த மாஸ்ரர், பிறிதொருநாள் என்னை அழைத்து உரையாடினார்.

சிறு வயதில் இருந்து இலங்கை வானொலியில் மாஸ்ரரின் நாடகத் தயாரிப்புக்களை கேட்டு இயக்கம் ஏ.சீ. தாசீசியஸ் என்று அறிந்து என்னுள் படிந்து, பின்னர் பிபிசியில் ஏ.சீ. தாசீசியஸின் செய்தித் தொகுப்புக்களை கேட்டும் அவருடைய இரகசினாகவே நான் வளர்ந்தேன் என்பதைப் பிறிதொரு காலத்தில்தான் நான் மாஸ்ரரிடம் தெரிவித்திருந்தேன்.

அச்சந்திப்பில், 'நீங்கள் அனைவரும் ஒழுங்காகச் சாப்பிடுகின்றீர்களா' என்பது தான் மாஸ்ரரின் முதற்கேள்வியாக இருந்தது.

தொடர்ந்து நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கும் களநிலவரம் குறித்து பொறுமையாகவும் அக்கறையுடனும் கேட்டு அறிந்தார். குறிப்பாகப் பிரான்ஸ் தமிழ்த் தொலைக்காட்சிக்கான தயாரிப்பு தொடர்பில் மாஸ்ரருடனான அச்சந்திப்பு அமைந்ததால், எவ்வாறான நிகழ்ச்சிகளை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள் என்று நான் கேட்டேன். அதற்கான பதிலும் நான் எதிர்பாராத ஒன்றாகத்தான் இருந்தது.

'நிகழ்ச்சிப் படைப்பு, உருவாக்கம் என்று அத்தனையும் உங்களிடமே நிறைந்து கிடக்கின்றன. நான் பிரான்ஸ் கலையகத்துக்கும் உங்களுக்கும் இடையிலான ஒரு பாலமாக உள்ளேன். எவ்வித தயக்கமும் இன்றிச் சுதந்திரமாக உங்கள் சிந்தனைகளை படைப்புக்களாக உருவாக்குங்கள். எனது அனுபவத்தின் ஊடாக, உங்கள் படைப்புக்கள் ஒவ்வொன்றுக்குமான பின்னூட்டங்களை நீங்கள் விரும்பினால் தருகின்றேன்' என்று தெரிவித்த மாஸ்ரர், உன்னை மேலே தூக்கி ஏந்துகிறேன், எவ்வளவு முடியுமோ அவ்வளவை உனது இரு கைகளாலும் எடுத்துக் கொள் என்று கூறினார்.

அன்று மாஸ்ரர் எம்முள் ஏற்படுத்திய தன்னம்பிக்கை இன்றுவரை என்னை சீர்படுத்தி முன்னேற்றிச் செல்ல ஊக்கியாக அமைந்து கொண்டிருக்கின்றது.

ஊடகப் பணியையும் தாண்டி நிர்வாகப் பணிவரை மாஸ்ரர் எனக்கு கற்பித்துள்ளார்.

அடிக்கடி கூறுவார்... 'ஓர் மெயின் (பிரதான) கமெரா போன்று நீர் செயற்பட வேண்டுமே தவிர ஓர் கோணத்தில் படம் பிடிக்கும் கமெரா போன்று முடங்கி விடாதே' என்று உதாரணம் கூறுவார்.

திறமையால் அன்றி ஒருவரைத் தூற்றி, ஏறி மிதித்து முன்செல்ல போட்டிபோட்டுக் கொண்டிருக்கும் பலரைக் கொண்ட இந்த ஊடகத் துறையில், மாஸ்ரரின் நிர்வாகம் தனித்துவமாக இருந்தது. அவ்வாறானோருக்குக் கடைசி வரிசையில் கூட சிறு இருக்கையும் கிடைக்காது.

இன்னுமொருவரை பற்றி யாராவது அவதூறு பேச முனைந்தால், 'நீர் உனது பணியை செவ்வனே ஆற்றினால், மற்றவனை வேவு பார்ப்பதற்கு எவ்வாறு நேரம் கிடைக்கும்' என்ற மாஸ்ரரின் மறு கேள்விக்கு பதில் கூறமுடியாமல் தலைகுனிந்து சென்றவர்கள் அனேகர்.

செய்தி எழுதுவதில் பலகாலம் எனக்கு நிறைந்த பயிற்சிகளை மாஸ்ரர் கற்றுத் தந்தார். செய்தித் தொகுப்புக்களில் தூய தமிழ்ச் சொற்களைப் பாவிக்கும் போது செய்தி ஆசிரியர் குற்றவாளியாக நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில், மாஸ்ரருடனான காலப்பகுதியானது முற்றிலும் மாறுபட்டதாகவே அமைந்திருந்தது.

ஒரு சமூகத்தின் கண்ணாடியாக ஊடகம் அமைந்துள்ளது. எனவே மொழிச்செழுமை முக்கியமானது என்றும் பிரதான செய்தியை அனைவரும் கேட்கும் நிலையில், அதனூடாக மொழியின் செழுமையை எவ்வாறு பேணவேண்டும் என்பதையும் எனக்கு கற்றுத் தந்தவர் மாஸ்ரர்.

தமிழின அழிப்பின் ஓர் அங்கமாக திட்டமிட்ட வகையில் மொழியையும் சிதைத்து அழித்துக்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், மொழித்தூய்மை தொடர்பில், தமிழ் ஊடகங்களுக்கும் ஊடகத்துறையினருக்கும் மொழிக்கலப்பு பற்றிய அபாய நிலை தொடர்பான விளக்கமும் புரிதலும் இன்றியமையாதவை என்பது எனது பணிவான கருத்து.

தமிழ்த்தேசிய ஊடகத்துறையில் இன்றும் நிரப்ப முடியாத ஓர் இழப்பை 2005 ஏப்ரல் 28ல் நாம் சந்தித்தோம். ஊடக இமயம் என்று போற்றக்கூடிய தராக்கி சிவராம் அவர்களை நாம் இழந்திருந்த காலமது.

அந்த மாமனிதர் தராக்கி சிவராமுடனான எனது அறிமுகமும் தாசீசியஸ் மாஸ்ரினாலேயே ஏற்படுத்தப்பட்டது. அந்தநாள் முதல் போர்க்காலச் சூழலில் ஓர் ஊடகன

- மாறன் -

தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, செய்தி சேகரிப்பது குறித்து சிவராம் அண்ணா எனக்கு கற்பிக்கத் தொடங்கினார்.

நாம் இரண்டு பேரும் தென்னிலங்கையான கொழும்பைத் தளமாகக் கொண்டிருந்ததால் ஊடகப் பணி நிமிர்த்தம் கிழக்கு, வடக்கிற்கு பயணிக்கும் போது பெரும்பாலும் சேர்ந்தே பயணித்தோம்.

முக்கியமான, இறுக்கமான காலப்பகுதி ஒன்றில் கிழக்கில் இரண்டு பேரும் உந்துருளி ஒன்றில் பயணிக்கும் போது, மிகத் தவறான விடயம் ஒன்றை நாம் செய்து கொண்டு இருக்கின்றோம் என்று சிவராம் அண்ணா கூறினார்.

'இரண்டு பேரையும் ஒன்றாக போட்டுத் தள்ளப் போகிறானுகள், இனிமேல் இப்படி இரண்டு பேரும் ஒன்றாக உந்துருளியில், குறிப்பாகக் கிழக்கில் பயணிப்பதை தவிர்த்துக் கொள்வோம்' என்று என்னைக் காப்பாற்றிய சிவராம் அண்ணா, தன்னை பாதுகாப்பதில் அக்கறை காட்டவில்லை என்றே இன்றும் என் மனதில் அவரது இழப்புக் குறித்த வேதனை பதிவாகியுள்ளது.

சமூக அக்கறை கொண்ட ஊடகனான நான் ஏந்தும் பேனா வீழும் தறுவாயில் அதனை ஏந்த என் பின்னால் ஓர் ஊடகரை உருவாக்கும் பொறுப்புக் குறித்த பட்டறைப் பகிர்வை எனக்கு ஊட்டியவர்களில் தாசீசியஸ் மாஸ்ரரும், சிவராம் அண்ணாவும் இன்றியமையாதவர்கள்.

தமிழ்த் தேசியத்தில் ஊடகங்களின் பங்களிப்புத் தொடர்பிலான விடயங்கள் குறித்துக் கற்பிக்கும் போது, பூகோள அரசியல் மாற்றங்களில் முக்கிய மைய ஊடகங்கள் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்பது குறித்து, குறிப்பிட்ட காலப்பகுதியில் வெளியான அரசியல் ஆய்வுக் கட்டுரைகளை எடுத்துக் காட்டி, தமிழ்த் தேசிய விடுதலைப் பரப்பில் தமிழ்த் தேசிய ஊடகங்களும் இவ்வாறே வளர்ச்சி பெறவேண்டும் என்ற அவரது அவாவையும் இலட்சியத்தையும் என்னிடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக எமது சமூகத்தின் சொத்துக்களாக உள்ள தாசீசியஸ் மாஸ்ரர் போன்றவர்களை, 2009 மே திங்களுக்குப் பிற்பாடான எமது தமிழ்த் தேசியக் கட்டமைப்புகள் முறையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதே மறுக்க முடியாத உண்மை.

என்னைப் போன்று மாஸ்ரரால் உருவாக்கப்பட்ட அவரது மாணாக்கர்கள் அவரிடம் கற்றுக் கொண்ட பட்டறிவுகளையும் குருகுலக் கல்வியையும் மனதிற்கொண்டு இலக்கை நோக்கிப் பயணிப்பதே தற்கால சூழ்நிலையில் அவருக்கு நாம் செய்யும் பெருமரியாதையாக கருதுகின்றேன்.

மாஸ்ரரின் பொன்விழா மலர் கனடாவில் வெளியீடு செய்யும் இக்காலகட்டத்தில் மாஸ்ரருடனான எனது குருகுலவாசம் குறித்து இந்தச் சிறு தொகுப்பை எழுதியதில் நான் பேருவகை அடைகின்றேன்.

இந்த வாய்ப்பை அளித்த தாய்வீட்டுக்கு எனது உளமார்ந்த நன்றி.

maran@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அர்ப்பணித்த சாதனையாளர்

- குழந்தை ம. சண்முகலிங்கம் -

நாடகம் ஓர் அரங்கக்கலை, நிகழ்த்தப்படுவதை முதன்மையாகக் கொண்ட கலை. பார்வையாளர்களை உணர்ச்சிப் பிழம்பு களாக்கிவிடாது, அவர்களின் உணர்வுகளைத் தூண்டுவிடுவதே அரங்காற்றுகை. பல கலைகளின் சங்கமிப்பில் சமநிலையை ஏற்படுத்திப் பார்ப்போருக்குப் புதியதொரு கலா அனுபவத்தை இது வழங்கும்.

நெறியாளனின் பணியே இக்கலையில் முதன்மை பெறுகின்றது. நெறியாளன் பணியும் அவனுடைய ஆளுமையுமே இங்கு முதன்மை பெறும். நெறியாளன் தன்னை முதன்மைப்படுத்திக்கொள்வதில்லை.

நெறியாளன் பார்வையாளரின் பார்வையில் உறுத்தும்படி தன்னை முன்னிறுத்தாது, எந்த அளவுக்கு, அரங்க நிகழ்த்துகையின் அனைத்துத் துறைகளிலும் கலந்து, செறிந்து, மறைந்து தன்னை இருத்துகின்றானோ அந்த அளவுக்கு அவனுடைய கலைத்துவம் முதன்மை பெறும். அவனுடைய கலையாற்றல் உயர்ந்ததாக இருக்கும்.

இப்பண்புகள் அனைத்தையும் நன்கறிந்து, அதன்படி, செயற்பட்டு வந்த ஒரு உயர்ந்த மனிதர்தான் தாசீசியஸ்.

இப்பண்புகளையும் படைப்பு சார்ந்த உயர் குறிக்கோளையும் அவர் சும்மா இருந்து பெற்றுவிடவில்லை. மேலைநாட்டு நாடகம் சார்ந்த உயரிய நூல்களை மட்டும் வெறுமனே பயின்றுவிட்டு அரங்கத்துள் தன்னைப் புகுத்திக் கொள்ளவில்லை. கலையின் தாகங்களையும் தேடல்களையும் தன்னுள் நிறைத்து, தேடிப் பெற்ற வற்றுக்குள் தோய்ந்து தன்னைக் செதுக்கிக் கொண்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புப் பெறும்போது அங்கு இருந்த ஆங்கில நாடக அரங்கில் சேர்ந்து பயின்றார். ஏனெஸ்ட் மகின்டயர் என்னும் சிறந்த நாடகப் பயிற்சியாளரிடம் நாடகம், அரங்கக்கலை சார்ந்த சகல துறைகளிலும் தீவிரமான பயிற்சி பெற்றார். பின்னர் ஐராங்கனி சேரசிங்க என்னும் உலகப் புகழ்பெற்ற நாடக நங்கையிடம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பயிற்சி பெற்றார். ஆங்கில அரங்கத்தில்தான் ஆரம்பப் பயிற்சிகளைப் பெருமளவில் பெற்றார். அப்பயிற்சிகளால் நாடகம், அரங்கம் என்பவை பற்றிச் சிறந்த அறிவும் அனுபவமும் பெற்றதுடன். இப்பயிற்சிகளின் பயனாகப் பெறக்கூடிய மனிதப் பண்புகளையும் உள்வாங்கிக் கொண்டார்.

நாடகப் பயிற்சிகளின் இறுதி இலட்சியம் நடிகரையோ நெறியாளனையோ காட்சி, உடை, ஒப்பனையாளனையோ தயாரிப்பதல்ல, நல்ல மனிதனை உருவாக்குவதே என்பதை அறிந்தவர் அறிவர். மனிதனோடு மிக நெருங்கிய தொடர்புடைய நாடகக் கலையில் எடுபடப்போகும் கலைஞன் தான் முதலில் நல்லவனாக, சத்தியத்தின் அடிப்படையில் செயல்படுபவனாக, செம்மை நெறி தழுவியவனாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

மேலே கூறிய நாடக, அரங்கப் பயிற்சிகளுடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அளிக்கப்பட்ட, நாடகம் கற்பித்தலில் கல்விப்பட்டப்பின் பயிற்சியும் தாசீசியசுக்கு அருந்துணையாக அமைந்தன.

ஆங்கில அரங்கிலே பயிற்சி பெற்ற தாசீசியஸ் தனது நாட்டின், தனது சமூகத்தின் பாரம்பரியக் கலைகளின் சிறப்பினை உணர்ந்து கொண்டார். இலங்கைத் தமிழர்களின் நாடக மரபு எமது கூத்துக்களை அடித்தளமாகக் கொண்டுதான் உருவாக்கப்பட வேண்டும் என்பதை அவர் ஆணித்தரமாக நம்பினார். நம்பியதோடு நின்றுவிடாது இலங்கையின் பல பாகங்களிலும் கிராமங்களில் பொலிந்து கிடக்கும் கூத்துக்களை விரிவாகக் கற்கத் தொடங்கினார். ஒலி நாடகங்களின் துணையை மட்டும் கைக்கொண்டு, கிராமம் கிராமமாகச் சென்று நாட்டுக் கூத்துக் கலைஞர்களைக் கண்டு, அவர்களைக் கொண்டு ஆடுவித்துப் பாடுவித்து அக்கலையின் சகல நுணுக்கங்களையும் கற்றுக் கொண்டார்.

கற்ற கூத்துகளையும், கூத்துப் பாடல்களையும் நவீன நாடகங்களில் புகுத்தத் தலைப்பட்டார். அவரது கலையாக்கம் இத்தோடு தணிந்துவிடவில்லை. கண்டிய நடனங்களையும் முறைப்படி பயின்றார். எமது நாடகக்கலை தேசிய கலையாக மிளிர வேண்டும், வளர வேண்டும் என்ற எண்ணமே அவரது இந்த முயற்சிக்குக் காரணமாக அமைந்தது. அவரது பேரனார் அந்தக் காலத்தில் புகழ் பெற்ற அண்ணாவியார். அவரது பெயர் யோவாம் பிள்ளை என்பதாகும்.

தாசீசியஸ் தயாரித்துப் பலரின் பாராட்டுதல்களைப் பெற்ற நாடகங்கள் பல. அவற்றைப் பட்டியல் படுத்திப் பெருமைப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. நாடகத்துறையில் அருஞ் சாதனைகளைப் புரிந்தவர். தனது பெயர் பத்திரிகைகளில் வரவேண்டும், பின்னால் வருபவர் ஆராய்ச்சி செய்யும்போது பழைய பத்திரிகைகளில் பார்த்த இடமெல்லாம் தனது பெயரே இருக்கக் காண வேண்டும் என்ற கடைகெட்ட குணம் அவரிடமில்லை. நாடகத்தின் மீது உள்ள பற்றால் அவர் ஆற்றிய அரும் பெரும் பணிகள் பல.

இலங்கைத் தமிழ் நாடக வரலாற்றில் நடிகர் ஒன்றியத்தின் பங்கினையும் பணியினையும் எவரும் மறுக்க முடியாது. நடிகர் ஒன்றியத்தில் இவர் தமது நண்பர்களோடு கூடிப் பல காத்திரமான சமூக உணர்வுடன் கூடிய நாடகங்களைத் தயாரித்தார். 'விழிப்பு' என்னும் நாடகத்தில் நடித்ததன் மூலம் 1973ம் ஆண்டின் சிறந்த நடிகருக்கான பரிசையும் பெற்றார்.

யாழ்ப்பாணத்திலும் நல்ல நடிகர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நாடக, அரங்கப் பயிற்சி முறைப்படி அளிக்கப் பட்டால் நல்ல நாடகங்கள் வளரும். நல்ல நடிகர்கள் தோன்றுவார்கள் என்று சில நண்பர்கள் சிந்தித்தபோது, உடனடியாக அதற்கு ஆதரவு தந்து, தானே பயிற்சி-களையும் அளிக்க முன்வந்தார். தன் செலவில் கொழும்பிலிருந்து வாரந்தோறும் வந்து பயிற்சி அளிக்கத் தொடங்கினார். பின் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட நாடக, அரங்கக் கல்லூரி அவரது மனம் போல் நாடக முயற்சிகளில் ஈடபட்டு வந்தது.

1980ல் நடைபெற்ற 1978ம் ஆண்டுக்கான தேசிய நாடக விழாவில் நாடக, அரங்கக் கல்லூரி தயாரித்தளித்த, தாசீசியசால் எழுதப்பட்ட, நெறிப்படுத்தப்பட்ட 'பொறுத்தது போதும்' என்னும் நாடகம் நான்கு சிறந்த பரிசுகளைப் பெற்றதோடு பார்வையாளரின் பெரும் பாராட்டுதல்களையும் பெற்றது. அந்நாடகம் சிறந்த நாடகத்துக்கான ஜனாதிபதி விருதினையும்,

சிறந்த பிரதிக்கான பரிசினையும், சிறந்த நெறியாளருக்கான பரிசையும் பெற்றதோடு அதில் நடித்த அ. பிரான்சிஸ் ஜெனம் சிறந்த நடிகருக்கான பரிசையும் பெற்றுள்ளார்.

அ. தாசீசியஸ் இலங்கையில் தனியொருவர் இதுவரை பெறாத பரிசில்களைப் பெற்றுள்ளார் என்பது எமக்குப் பெருமையைத் தருகிறது. அதாவது, சிறந்த தயாரிப்பாளர், சிறந்த நாடக எழுத்தாளர், சிறந்த நெறியாளர், சிறந்த நடிகர் ஆகிய நான்கு உயர் விருதுகளை இவர் ஒருவரே பெற்றுள்ளார். இதைப் பார்க்குமிடத்துப் பொறாமை கொள்ளக் கூடியவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால் தாசீசியஸ் விருதுகளைக் கண்டு 'வெகுண்டு' விடுபவரல்ல. பிறர் விருது பெறுவதை மனதார வாழ்த்துபவர். தனக்குக் கிடைத்த பரிசெல்லாம் நடிகர் ஒன்றியத்துக்கும் நாடக அரங்கக் கல்லூரிக்கும் அதன் உறுப்பினருக்கும் உரியது என்று மனப்பூர்வமாகக் கருதிக் கொண்டு அவர்களை ஊக்குவித்து வருபவர்.

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாசீசியஸ் மாஸ்ரர்

இலங்கையில் 1980களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பின் போது, ஆந்திராவின் விஜயவாடா மத்திய அரசின் நெசவாளர் ஆராய்ச்சி மையத்தில் பணி செய்திருந்து சென்னைக்கு மாற்றலாகி வந்த நேரம். தமிழர்களுக்கு நேர்ந்த அத்துயரம், அதன் பாதிப்புடன் சென்னை வந்திருந்த நான் தமிழர்களின் பல்வேறு போராட்டக் குழுக்கள், அரசியல் செயல்பாட்டாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் என்று தமிழகம் வந்து செயல்படுபவர்களோடு உணர்வால் ஒன்றுபட்டுச் செயல்படுகிற தருணம். அனைத்துக் குழுக்களுடன் சமகாலத்து ஓவியர்களாக நானும் மூத்த ஓவியர் ஆதிமூலமும் துணைநின்றோம்.

பல்வேறு தேவைகளைச் செய்து உடனிருந்து செயல்பட்டதில் சந்தானமும் சேர்ந்து கொண்டார். பின்பு அக்காலக்கட்டத்தில் ஈழத்து கலைஞர்களும் கவிஞர்களும் எமக்குக்கிடைத்த பெரும் நட்பு.

இக்காலகட்டத்தில் - 1980 களின் இறுதியில் தாசீசியஸ் மாஸ்டரை அறிந்திருந்தேன். நாடகத்துறை சார்ந்து அவர் இயங்குவதையும், பிபிசியில் பணி புரிகிறார் என்பதையும், இலங்கையிலிருந்து தமிழகம் வந்திருந்த நண்பர்கள் எனக்கு கூறியிருந்தார்கள். நாடகம் சார்ந்த ஒரு செயற்பாட்டுக்கு, நாடக கலைஞர்கள், நடிகர்கள், சில நாடகக் குழுக்கள் எனப் பெரிய கூட்டம் சென்னை ஜெர்மன் ஹாலில் கூடியிருந்தது. நாடக விழா போன்று அது நடந்தது. அந்த நிகழ்வுக்கு வந்த போதே அவரை முதன் முதலாகச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த நாட்களில், அவருடன் மிக நீண்ட உரையாடல் ஒன்று எலியாட்ஸ் கடற்கரையில் நிகழ்ந்தது. அதிக நேரம் அவருடன் இருக்கமுடிந்தது. அவர் இங்கு தங்கியிருந்த போது அவரைப் பல முறை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. நாடகம் மற்றும் அரசியல் ரீதியான இயக்கங்களுடனான எனது தொடர்பு ஆகியவை குறித்து அவருக்குத் தெரிந்திருந்தது. இலங்கைப் பிரச்சினை சார்ந்த விடயங்களில் இயங்கும் நண்பர்களில் என்னையும் அவர் அறிந்து வைத்திருந்தார்.

தாசீசியஸ் மாஸ்ரர் என்னைச் சந்திக்கும் போது, 'நீங்கள் ஐரோப்பாவிற்குக் கட்டாயம் வரவேண்டும்' எனச் சொன்னார். நான் வெளிநாடு செல்வதற்கான ஆரம்பச்சுழியை அவர்தான் போட்டார் எனச் சொல்லலாம். அன்பின் வெளிப்பாடாக அவர் என்னை அழைத்தார், அங்குள்ள அருங்காட்சியகங்களை நீங்கள் பார்க்க வேண்டும் என என்னை ஊக்கப்படுத்திக் கொண்டே இருந்தார். அங்கு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. நான் பார்க்கிறேன் என அப்போது கூறியிருந்தேன்.

ஜெர்மனி பீலபெல்ட் வரதர் குறித்து நான் ஏற்கெனவே கேள்விப்பட்டதுண்டு. புலம்பெயர்ந்த தமிழ்ப்பிள்ளைகளுக்கென அவர்கள் வாழும் சூழலுக்கேற்ப புதிய பாடத்திட்டத்தை உருவாக்கி, அதன் வழி தமிழ்ப்பாட நூல்களைத் தயாரிப்பதில் வரதர் ஈடுபட்டிருந்தார். அதற்கான முயற்சியும் தொடக்கப்பணியும் அங்கு நடந்து வந்தது. அடுத்த தலைமுறைக்குத் தமிழைக் கொண்டு செல்ல, இயக்கம் இந்தப் பணியை வரதருக்கு அளித்தது. அவர் அதை முன்னின்று செய்தார். சிங்கப்பூர், மலேசியா, ஈழம் மற்றும் தமிழகத்திலிருந்தும் தமிழ் அறிஞர்களும் தொழில்நுட்பக் கலைஞர்களும் சென்று இதற்கான பணியில் ஈடுபட்டிருந்தனர். புலம்பெயர் நாட்டில் ஆசிரியப்பணியில் பட்டறிவு கொண்டவர்களையும் அறிஞர்களையும் வரதர் அப்பணியில் இணைத்திருந்தார்.

அக்காலகட்டத்தில் வரதர் தன் வீட்டுக்கு அறிவுமதியை அழைத்திருந்தார். புதிய பாடல்களுக்காக ஏற்கெனவே வரையப்பட்டிருந்த ஓவியங்கள் பொருத்தமாக அமையவில்லை என்பதாக அறிவுமதியுடன் வரதர் உரையாடியபோது, 'மருது வரைந்தால் நன்றாக இருக்கும்' எனப் பேச்சுக்கு இடையில் அறிவுமதி அப்போது தெரிவித்தார். நான் அவரிடம் சென்று பேசுகிறேன். அவர் இதைச் சிறப்பாக செய்வார் என்றார். வரதர் அதனை மிக மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார். தமிழ கம் வந்த போது அதே மனநிலையில் என்னிடமும் அறிவுமதி அதைக் கூறினார். செய்வோம், சேர்ந்து செயல்படுவோம் என நானும் ஒப்புக்கொண்டேன்.

அதன்பின் வரதர் என்னுடன் தொடர்பு கொண்டு, மலேசியாவிற்கு அழைத்திருந்தார். பாடநூலாக்கத் தொடர்ச்சி மலேசியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாடலாக்கத்தில் பங்குகொள்வதற்காக தாசீசியஸ் மாஸ்டரும் அங்கு வந்திருந்தார். அவரும் லாக்கத்தில் இருக்கிறார் என்பதை நான் அங்கு சென்றபின்புதான் அறிந்து கொண்டேன். நான் மிகுந்த

மகிழ்ச்சி அடைந்தேன்.

புலம்பெயர்ந்து வாழும் குழந்தைகளுக்கான தமிழ்க்கல்விச் செயற்பாட்டில் ஒரே பாடத்திட்டம், அதன்வழி தமிழ்பாடநூல் தொடர், அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி, அனைத்துலக அளவிலான பொதுத்தேர்வு போன்றவற்றை ஒருங்கிணைத்துச் செயற்படுத்த ஐரெக் என்ற நிறுவகம் உருவாக்கப்பட்டது. அந் நிறுவகத்தை வரதர் நிர்வகித்தார்.

மலேசியாவிலேயே புத்தகத்தை வடிவமைப்பது, அச்சடிப்பது என முழுத் தயாரிப்பு பணிகளையும் செய்யத் தொடங்கினர். புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் உலகம் முழுவதும் அப் பாடநூல் தொடரை விநியோகிக்க வேண்டும் என முழு வீச்சில் பணி நடந்தது. உள்ளடக்கம் ஏற்கெனவே முடிவாகியிருந்தது. நான் தொடர்ந்து ஏழு படங்களில் கிராஃபிக்ஸ் வேலையில் அப்போது பணி செய்து முடித்திருந்தேன். எனக்கு ஒரு நீண்ட ஓய்வு தேவைப்பட்டது. 2001ம் ஆண்டு தொடக்கத்தில் நானும் அங்கு சென்று பணியில் என்னை ஈடுபடுத்திக்கொண்டேன். மலேசிய விமான நிலையத்தில் என்னை வரவேற்க தாசீசியஸ் மாஸ்டரும் வரதரும் வந்திருந்தனர். அங்கு செம்பருத்தி மாத இதழ் அலுவலகத்தில் 40 நாட்கள் இருந்தேன். ஒரு சில ஓவியங்களை நான் மாற்றி அமைப்பதாக இருந்தது, ஆனால் இறுதியில் முழுமையான வேலையாக 40 நாட்களும் தொடர்ந்து செய்தேன். தேவையான ஓவியங்களைத் தொடர்ந்து தீட்டிக் கொடுத்தேன். தொடர்ந்து இங்கேயும் வேலை பார்த்து, அங்கேயும் சென்று வேலை பார்த்ததினால் அயர்ச்சியாகி விட்டது. இந்த ஓவியம் நன்றாக இல்லை, அந்த ஓவியம் நன்றாக இல்லை என ஏற்கெனவே இருந்ததை மாற்றுவதாக ஆரம்பித்து 80 சதவீதம் வேலையை நானே செய்து விட்டேன். அந்தக் காலகட்டத்தில் நான், தாசீசியஸ் மாஸ்ரர் மற்றும் வரதர் மூன்று பேரும் தொடர்ந்து ஒன்றாக இயங்கினோம். செம்பருத்தியின் ஆசிரியர் குழுவும், லே அவுட் ஆர்ட்டிஸ்ட், இளம் ஓவியர் ரஜினி ஆகியவர்களும் எங்களுக்குத் துணையாக இருந்தனர். நாங்கள் அனைவரும் கடுமையாக இரவும் பகலுமாக வேலை செய்தாலும் கூட, தேவையான இடத்தில் திருத்தங்கள் செய்து எங்களுக்கு உறுதுணையாக அனைத்திலும் தாசீசியஸ் மாஸ்டரே இருந்தார்.

எங்களால் 40 நாட்களில் இந்த வேலையை முழுவதுமாக முடிக்க இயலவில்லை. இதனைத் தொடர்ந்து ஐரோப்பாவில் செய்யலாம் என முடிவெடுக்கப்பட்டது. சென்னைக்கு திரும்பி வந்த பின்பு, எனக்கு உடல் நலம் சரியில்லாமல் போய்விட்டது. ஆறேழு மாதங்களுக்குப் பிறகு உடல் தேறிய பின் ஐரோப்பாவிற்குச் சென்றேன். மூன்று முறை தொடர்ந்து ஐரோப்பா சென்று இந்தப் புத்தக உருவாக்கத்தில் தொடர்ந்து பங்காற்றினேன். ஒவ்வொரு முறையும் மூன்று மாதங்கள் அங்கு தங்கியிருந்து பணி செய்தேன். ஒவ்வொரு பயணத்தின் போதும் வரதருடனேயே இருப்பேன், தாசீசியஸ் மாஸ்டரும் எங்களுடனே அந்த மூன்று மாதம் இருப்பார். என் வாழ்நாளில் மறக்க முடியாத நாட்கள் அவை. அவருடன் அருங்காட்சியங்களுக்கு சென்று பார்த்ததும். ஐரோப்பிய நகரங்களில் சுற்றி திரிந்ததும் மறக்க இயலாது. என்னுடைய வேலையின் பெரும் பங்கை இரண்டாம் முறை பயணித்ததிலேயே முடித்து விட்டேன். என் பணியை சிறப்பாகச் செய்ததின் பெரிய காரணமாக தாசீசியஸ் மாஸ்டரே இருந்தார்.

அடுத்த தலைமுறை தமிழ் இளைஞர்களுக்குப் பயிற்சி பட்டறை நடத்தினார் தாசீசியஸ் மாஸ்ரர். நாடகத் துறை சார்ந்தும், எப்படி உடல் மொழியைப் பயன்படுத்துவது, நெறியாளராக இருந்தால் ஒருவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான பயிற்சிகளெல்லாம் அவர் கொடுத்தார்.

- ட்ராட்ஸ்கி மருது -

இந்தப் பட்டறைகளை நானும் அமர்ந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அது ஒரு அற்புதமான அனுபவம். இலங்கையில் நடந்த அவலத்தினால் குரல் பாதிப்படைந்த ஒருவன், பின்பு ஐரோப்பாவிற்குப் புலம் பெயர்ந்திருந்தான். அவனைப் பாட வைத்தார் தாசீசியஸ் மாஸ்ரர். அவன் பாடியதை கேட்டு நான் அழுது விட்டேன். தாசீசியஸ் மாஸ்ரர் என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டார். அந்த அவலத்தைச் சொல்வதற்கான உண்மையான முழுமையான குரலாகவே எனக்கு அது இருந்தது. ராகத்தோடு அவன் பாடிய பாட்டைக் கேட்டு நான் உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன். என்னைப் பார்த்து அவரும் உணர்ச்சிவசப்பட்டார்.

கனத்த சரீரம் கொண்ட ஒரு பெண் திருமணத்திற்குப் பின் இலங்கையில் இருந்து ஐரோப்பா குடிபெயர்ந்தார். நாடகம் சார்ந்து படித்திருந்தார். அப்போது தான் அவருக்குக் குழந்தை பிறந்து இருந்தது. தாசீசியஸ் மாஸ்டரிடம் பயிற்சிக்காக வந்தார். எங்களுக்கு ஆச்சரியம், இவர் எப்படி நடிப்பார் என்று. ஆனால் தாசீசியஸ் மாஸ்டரின் பயிற்சிக்கு பின் அவர் நடிப்பைப் பார்த்து நாங்கள் பிரமித்து விட்டோம். அப்படி ஒரு அபாரமான நடிப்பு. பிற்காலத்தில் அவர் சிறந்த கலைஞராக வந்தார். அவருடன் இருந்த காலத்தில் இப்படிப் பல அசாதாரணமான அனுபவங்கள் எனக்குக் கிடைத்தது.

இயக்கத்திற்கும் இலங்கை அரசுக்குமான அமைதிப் பேச்சு வார்த்தை நடந்த நேரமது, அமைதிப் பிரகடனத்தின் பின் 2002ல் மானுடத்தின் தமிழ்க்கூடல் என்ற மாநாடு ஈழத்தில் நடந்தது. இந்த நிகழ்விற்கு இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்ட ஐந்து விருந்தினரில் நானும் ஒருவன். நான் செல்வதற்கு காரணம் தாசீசியஸ் மாஸ்டரே. தமிழ்ச்செல்வன் அவருடன் தொடர்ந்து பேசுபவர். யாரை நீங்கள் அழைக்கிறீர்களோ இல்லையோ ஓவியரை அழைக்க வேண்டும். சிதைந்து கிடைக்கும் இந்த வாழ்வைத் தமிழ் ஓவியர் பார்க்க வேண்டும், கலைஞர்கள் மத்தியில் இவை பதிய வேண்டும். இதைப் புனரமைத்து விடுவார்கள். இந்த மிகப் பெரிய சோக நிகழ்வு அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல ஒரு ஓவியர் தேவை. நம் கலைஞர்கள் இதைப் பார்க்க வேண்டும். முக்கிய காரணமாக இதைச் சொன்னவர் தாசீசியஸ் மாஸ்ரர். என்னை முன்மொழிந்தவரும் அவரே. ஐரோப்பாவிலிருந்து நான் திரும்பிய ஓரிரு மாதத்தில் நான் இலங்கை சென்றேன். முதன் முறையாக அப்போது தான் இலங்கை சென்றேன்.

நான், இன்குலாப், திருமாவளவன், புகழேந்தி தங்கராஜ், பா. செயப்பிரகாசம் ஆகியோர் சென்றிருந்தோம். இந்த ஐவரைத் தேர்ந்தெடுத்ததிலும் தாசீசியஸ் மாஸ்டரின் பங்களிப்பு இருந்தது. தமிழகம் திரும்பிய பின் மீண்டும் ஐரோப்பாவிற்குச் சென்றேன். புத்தக வேலைகளுக்காக மூன்று முறை சென்று வந்தேன்.

அதன் பிறகு ஓராண்டு கழித்து மீண்டும் ஐரோப்பா சென்றேன். பாரிஸில் உள்ள ரிரினன் தமிழ் தொலைக்காட்சி நடத்துவதற்கான பொறுப்பு தாசீசியஸ் மாஸ்டருக்கும் வரதருக்கும் கொடுக்கப்பட்டது. வரதர் நிர்வாகத்தைப் பார்த்துக் கொள்ள மாஸ்ரர் நிகழ்ச்சிகள் மற்றும் செய்தித்துறைக்கு பொறுப்பாக இருந்தார். அவர்களுடன் நானும் இருக்க வேண்டும் என இருவரும் விரும்பினர். மூன்று மாதம் அவர்களுடனே தங்கயிருந்து உதவி செய்தேன். தாசீசியஸ் மாஸ்ரர் அறைக்கு அடுத்தே எனக்

தொடர்தல் 88ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலை தண்ணீருக்கு வெளியில் உள்ளதா?

- த. சர்வேந்திரா -

அண்மையில் நண்பர் ஒருவருடன் உரையாடும் போது ஒரு விடயத்தைக் குறிப்பிடடேன். தமிழ் மக்களுடைய தேசிய அடையாளத்தை நிலைநிறுத்துவதற்கும், சுயநிர்ணய உரிமையினை வென்றெடுப்பதற்குமான போராட்டத்தில் தம்மை ஈடு படுத்தி இப்போது எஞ்சியிருப்பவர்களில் பலர் தமது வாழ்வில் 30 முதல் 50 வருடங்களை இப் போராட்டத்தில் ஈடுபடுத்தியவர்களாக உள்ளனர். இவர்கள் ஊடாக எமது அடுத்த தலைமுறைக்குப் போய்ச் சேரவேண்டிய விடயங்கள் எவை என்பதனை நாம் காலம் தாழ்த்தாது சிந்தித்துச் செயற்படவேண்டும் என்பதே அது.

இதனைப் பற்றிச் சிந்திக்கும் போது தாசீசியஸ் மாஸ்ரர் உடனடியாக நினைவுக்கு வந்தார். அரங்கம் தொடர்பாகவும், ஊடகம் தொடர்பாகவும், கல்வி தொடர்பாகவும், அரசியல் தொடர்பாகவும் இவர் திரட்டி வளர்த்து தம்முள் புதைத்து வைத்திருக்கும் அரியபல விடயங்களை எவ்வாறு நாம் அடுத்த தலைமுறைக்கு கொண்டு போய்ச் சேர்க்கப் போகிறோம் என்ற கேள்வி மனதில் ஆழமாக எழுந்தது.

ஒரு நிறுவனத்திடம் இருக்கக்கூடிய ஆற்றல்கள் சிலவேளைகளில் சில தனிமனிதர்களிடம் வந்து சேர்வதுண்டு. இதன் அரத்தம் சிலரிடம் அவை பிறப்பினால் தானாக வந்து சேர்ந்துவிடுகிறது என்பதல்ல. சில தனிமனிதர்கள் தமது கடும் உழைப்பினால், தமது அர்ப்பணிப்பால், தமது கடமையுணர்வால் சிறந்த தகைமைகளையும் திறமைகளையும் வளர்த்தெடுத்திருப்பார்கள். இத் தனிமனிதர்களில் சிலர் நிறுவனங்களை உருவாக்கி அடுத்த தலைமுறைக்கும் பயன்தரக்கூடிய அமைப்புகளை வளரத்தெடுக்கும் வகையில் செயற்படுவார்கள். அவ்வாறு வளர்த்து எடுக்கும்போது ஒரு மக்கள் சமூகம் தலைமுறை தலைமுறையாகப் பயன்பெறக்கூடிய நிறுவனங்கள் உருவாகி விடும். நிறுவனங்களுக்கும் தனிமனிதர்களுக்கும் இடையே உள்ள முக்கியமானதொரு வேறுபாடு நிறுவனத்தின் செய்றபாடுகள் தனி மனிதனின் ஆயுள் காலத்தோடு முடிந்து விடுவதில்லை. சமூகத்துக்கு தொடர்ச்சியாக பணியாற்றக்கூடிய கட்டுடைப்பாக அவை அமைந்து விடும். சில சமயங்களில் நிறுவனங்களை உருவாக்கியவர்களின் காலத்தின் பின் அல்லது உருவாக்கியவர்கள் அந்நிறுவனத்தில் இருந்து விலகிய பின்னர் குறிப்பிட்ட நிறுவனம் வேறுதிசைகளில் பயணிப்பது முண்டு.

தாசீசியஸ் மாஸ்ரர் நிறுவனங்களை உருவாக்கியர். ஐபிசி தமிழ் அவர் உருவாக்கியதொரு நிறுவனம். இந் நிறுவனம் தொடர்பாக அவருக்கு ஒரு தொலை நோக்கு இருந்தது. நிறுவனம் எவ்வாறு இயங்க வேண்டும் என்றதொரு சமூக அரசியற்பார்வை இருந்தது. தாசீசியஸ் மாஸ்ரர் ஐபிசி தமிழ் உடன் இல்லாத காலங்களில் இந்நிறுவனம் அவரது தொலை நோக்குக்கு ஏற்றவாறு, அவர் கனவு கண்ட சமூக அரசியல் இலக்குடன் பயணிக்கின்றதா என்பதனை அவர்தான் மதிப்பீடு செய்ய வேண்டும். பதிவு செய்ய வேண்டும். இதேவேளை, அவர் இப்போது செயற்படும் வகையில் ஒரு நிறுவனக் கட்டமைப்பொன்று உருவாக்கப்படாமல் இருக்கிறது என்பதனை உணர முடிகிறது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத் தமிழ் அரங்கத்தின் தனித்துவமானதொரு அடையாளமாக தாசியஸ் மாஸ்ரர் இருக்கிறார். எனது பார்வையில் தாயகத்தில் சண்முகலிங்கம் மாஸ்ரர், பேராசிரியர் மௌனகுரு, கலாநிதி சிதம்பரநாதன் ஆகியோர் ஈழத் தமிழ் அரங்கில் முக்கியமானவர்கள். அவர்கள் தாயகத்தில் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். தாசீசியஸ் மாஸ்ரர் தாயகத்தில் இருந்தால் நிச்சயம் இப்போதும் பெரும் வேகத்தோடு இயங்கிக் கொண்டிருப்பார். முதலைக்குத் தண்ணீருக்குள்தான் வலு அதிகம் என்பார்கள். தாயகம் தாசீசியஸ் மாஸ்ரருக்கு பெரும் வலு தரும் இடமாக அமைந்திருக்குமோ?

தற்போது புலம் பெயர் சமூகத்தின் முன்னால் உள்ள கடமைகளில் ஒன்றாக தாசீசியஸ் மாஸ்ரர் போன்ற பேராளுமைகள் தமது ஆற்றலையும் ஆளுமையையும் அடுத்த தலைமுறைக்கு வழங்குவதற்கான நிறுவனங்களை உருவாக்கி அவற்றைச் சரியான திசையில் வளரத்தெடுக்க வேண்டும். எம் மத்தியில் பல அரங்காடிகளை உருவாக்கக்கூடிய ஆற்றல் மாஸ்ரரிடம் புதைந்து கிடக்கிறது. ஈழத் தமிழ் மக்களுக்கான தனித்துவமான அரங்கவடிவத்தை வளர்த்தெடுக்கும் வழிமுறையினை அவர் வழிநடத்தக் கூடியவர். புலம்பெயர் தமிழரையும் தாயகத்தையும் இணைக்கவும் தலைமுறை இடைவெளியை நிரவவும் தேவையான பொறிமுறையை உருவாக்கும் சமூகப்பார்வையும் செயற்திறனும் அவரிடம் இருக்கிறது. இவற்றையெல்லாம் நாம் மாஸ்ரரிடம் எதிர்பார்கிறோம். இதற்கெல்லாம் அவர் செயற்பட களம் அமைத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் புலம்பெயர் தமிழச் சமூகத்துக்கு இருக்கிறது.

எமது சமூகத்தின் பேராளுமைகள் அவர் வாழும் காலத்தில் மதிப்பளிக்கப்படுவது மிகவும் நன்று. அதேவேளை அவர்களை நாம் ஒய்வூதியக்காரர்களாகக் கருதி விடக் கூடாது. இப் பேராளுமைகளை இயலக் கூடிய ஒவ்வொரு கணத்திலும் சமூகத்துக்கான இயக்கத்தில் அச்சமூகம் வைத்திருக்க வேண்டும். இதனை எவ்வாறு செய்வது என்பதனை சிந்தித்து உடனடியாகச் செயற்படுவது ஈழத் தமிழர் சமூகத்துக்கு நல்லது.

■ ■ ■

தாசீசியஸ் மாஸ்டர்...

87ம் பக்கத் தொடர்ச்சி...

கும் அறை கொடுக்கப்பட்டது. பாரிஸ் நகரத்தை அவருடன் சேர்ந்து சுற்றியதை என்னால் மறக்க இயலாது.

புலம் பெயர் தமிழர்கள் வாழ்வில் கலாச்சார ரீதியாக அடுத்த தலைமுறைக்கு சிலவற்றை நகர்த்திக் கொடுக்க வேண்டும் என்பதில், வரதரும் அவரும் சேர்ந்து முன்னெடுத்த செயல்பாடுகளில் நானும் இணைந்து பணிசெய்தேன். குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட ஆட்களோடு ஐரோப்பா முழுவதும் தொலைக்காட்சி தெரியும் படி தொடர்ந்து ஓடியோடி அவர்கள் உழைத்தது எனக்கு மிகப் பெரிய ஊக்கம் தந்த நிகழ்வாகும். படலைக்குப் படலை போன்ற வெற்றிகரமான நிகழ்ச்சிகள் அனைத்தும் அவர் இருந்த அந்தக் காலகட்டத்தில் தான் ஒளிபரப்பானது. அரங்க அமைப்பு, கிராஃபிக்ஸ் போன்ற வேலைகளில் அவர்களுக்குத் துணை நின்று பணி செய்தேன். மூன்று மாதம் அங்கிருந்து அதை மறு வடிவமைப்பு செய்து கொடுத்தேன். அந்தக் காலகட்டத்தில் அங்கும் இளைஞர்களுக்கு ஒரு பயிற்சிப் பட்டறை நடத்தினார் தாசீசியஸ் மாஸ்ரர். அப்போது நானும் கூடவே இருந்தேன். நானும் சில பயிற்சிகள் கொடுத்தேன். அவருடைய பட்டறையில் கலந்து கொண்டவர்களே புலம்பெயர்ந்த தமிழர்களிலேயே மிக முக்கியமான கலைஞர்களாக இந்தப் பத்து ஆண்டுகளில் உருவாகியுள்ளனர். அரசியல் ரீதியாகவும் கலாபூர்வமாகவும் சிலர் பரிணமித்துள்ளனர்.

தாசீசியஸ் மாஸ்ரர் நடத்திய அந்தப் பட்டறைகள் எல்லாம் மிக முக்கியமானவை. மறக்க முடியாத சில சம்பவங்கள் எல்லாம் நிகழ்ந்துள்ளன. அதிசயமாகப் பார்த்த பல அற்புத நண்பர்களின் தொடர்பு, இயக்கத் தொடர்புடையவர்கள், செயற்பாட்டாளர்கள் என அனைவரின் நட்பும் தாசீசியஸ் மாஸ்ரர் மற்றும் வரதராால்தான் கிடைத்தது. அவருடனே சேர்ந்து அறையிலும், வரதருடைய வீட்டிலும் இருந்த காலங்களைப் பெருமிதமாக இப்போதும் பேசிக்கொண்டிருக்கிறேன்.

2004ல் மீண்டும் நான் இலங்கைக்குச் சென்றேன். இயக்கத்தில் இருக்கும் போராளிகளுக்கு கணினிப் பயன்பாடு, போட்டோஷாப் போன்றவற்றில் பயிற்சிப் பட்டறை. என்னுடைய நண்பர் ஒளிப்பதிவாளர் பி.எஸ். தரணையும் உடன் அழைத்துச் சென்றேன். கிளிநொச்சியில் தங்கியிருந்தோம். தாசீசியஸ் மாஸ்டரின் அக்கா கணவர் இறந்து விட்டார், அதற்காக இங்கு வந்துள்ளார் என அங்கிருந்தவர் தெரிவித்தார். அவரிடம் சொல்லாதீர்கள் ஆனால் நான் அவரைப் பார்க்க வேண்டும் எனத் தெரிவித்தேன். அவரது அக்கா வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றனர். தவம் என்ற போராளியே என்னை அங்கு அழைத்துச் சென்றார். அவருக்கு வீடியோ, கேமரா, சினிமா, கணினி, டிஜிட்டல் நிழற்படம் ஆகியவற்றில் ஆர்வம் அதிகம். நாங்கள் வீட்டில் அமர்ந்து இருக்கிறோம், அவர் கடலில் குளிக்கச் சென்றிருந்தார். நான் வீட்டில் இருப்பது அவருக்குத் தெரியாது. என்னைப் பார்த்தவுடன், அதிர்ந்து விட்டார், ஆச்சரியப்பட்டார், என்ன செய்யிறீங்கள் இங்க என்றார். என்னைக் கட்டிப்பிடித்தார். அங்கு ஒரு நாள் இருந்து அவரைச் சந்தித்து விட்டு அடுத்த நாள் முல்லைத்தீவு சென்றேன்.

நான் கிளிநொச்சியில் இருந்த அன்றே சுனாமி வந்தது. அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு சென்றுவிட்டேன். மிகப் பெரிய பாதிப்பு எனத் தெரிந்த பின்பு, அன்றிரவு வீரசிங்க மண்டபத்திற்குப் பக்கத்திலுள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்தேன். திரும்பிச் சென்றாக வேண்டிய கட்டாயம் எனத் தெரிந்ததால், ஒரு நாள் மட்டும் யாழ்ப் பாணத்தில் தங்கிவிட்டு கிளிநொச்சி திரும்பிவிட்டேன். திரும்பி வரும் போது எனக்கு பெரும் கவலை, தாசீசியஸ் மாஸ்டர் இருந்த பகுதியில் பெரிய பாதிப்பு. அடுத்த மூன்று இரவு கிளிநொச்சியில் இருக்கிறேன். போராளிகள் எடுத்துக் கொடுக்கும் காணொளிகள் உலகம் முழுவதும் சென்றது. அவர் குறித்த நினைவாகவே இருந்தது. அவர் பாதுகாப்பாக இருக்கிறார், கொழும்புக்குச் சென்றுவிட்டார் எனப் போராளி ஒருவர் சொன்ன பிறகே நிம்மதியானேன். அதற்குப் பிறகு பாரிஸில் திரும்பவும் அவரைச் சந்தித்தேன்.

சமீபத்தில் கனடா சென்றிருந்த போது, தாசீசியஸ் மாஸ்டரின் உறவினர் ஒருவரைத் தொலைக்காட்சி அலுவலகத்தில் சந்தித்தேன். என்னைப்பற்றி அவரிடம் தெரிவித்துள்ளார் என்பதைத் தெரிந்து கொண்டேன். அவருடைய பயிற்சி பட்டறையில் நானும் ஓவியம், கிராஃபிக்ஸ், கலை இயக்கம், டிஜிட்டல் தொழில்நுட்பம் குறித்துப் பேசியுள்ளேன். ஆனால் நாடகம் சார்ந்த அவர் அளித்த பயிற்சி எனக்குப் பல வழிகளில் உதவியாக இருந்தது. ஈழத்தின் ஒப்புயர்வற்ற கலைஞனின் நட்பும் ஆராதிப்பும் எனது நினைவில் என்றும்
நீங்காதிருக்கும்.

trotskymarudu@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளவிழா மலர் பற்றிய கண்ணோட்டம்

ஈழக்கூத்தன் அ. தாசீசியஸ்: அளவுகளை மீறிய ஆளுமை

- பொன்னையா விவேகானந்தன் -

இ பொதுவாகவே மானுட ஆளுமைகள் குறித்து வெளியிடப்படும் மலர்கள் பெரும்பாலும் முன்னூறு பக்கங்களைத் தாண்டுவதில்லை.

ஈழத்தவரிடையே வாழும் தனித்துவ ஆளுமையான அ. தாசீசியஸ் அவர்களைப் பற்றிய மலர் எழுநூறு பக்ககளைக் கொண்டு என்னை வியப்பில் ஆழ்த்தியது. கைகளில் கனத்த அந்த நூலின் பக்கங்களைப் புரட்டியபோது, அந்தப் பக்கங்களின் கனதிகளுக்குள் நான் காணாமல் போனேன்.

அ. தாசீசியஸ் அவர்களின் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தும் எழுத்துகளைப் பல்வேறு தலைப்புகளின் கீழ் வகுத்து, அதை நேர்த்தியுறத் தொகுத்திருந்தனர். கச்சிதமான தொகுப்பும் விழிகளுக்கு வலிக்காத வடிவமைப்பும் மலரைப் பார்வையிடும் அனைவரையும் ஈர்த்துவிடும்.

தாசீசியஸ் அவர்களின் 75வது அகவையை முன்னிட்டு, இவ்வாக்கம் பவளவிழா மலர் என்றே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் நான் இதை நூல் என்றே குறிப்பிட விருப்புகின்றேன். காலகாலத்துக்கும் பயன் தரவல்ல படைப்புகளைக் கொண்ட தொகுப்பை நூல் என்று அழைப்பதே பெரிதும் பொருந்தும்.

முகப்பிலிருந்தே இந்த நூலுக்குள் சற்றே இறங்கிப் பார்க்கலாமா?

ஈழக்கூத்தன் ஏ. தாசீசியஸ் என்றுதான் முகப்பு ஆரம்பிக்கின்றது. மேற்குலக அரங்கியல் உத்திகளையும் பாரம்பரிய தமிழ் மரபுக் கலைகளையும் இணைத்து ஆளுகை செய்த தாசீசியஸ் அவகளைக் குறிக்க இச்சொல் பயன்பட்டதால் ஈழக் கூத்தன் என்ற சொல்லே பெருமை பெறுகின்றது.

நாடகர் - ஊடகர் - ஏடகர் என்ற செறிவு மிக்க சொற்களும் முகப்பில் இடம்பெற்றிருக்கின்றன. அரங்கை ஆண்டவர். குரலால் மொழியாற்றலால் ஒளி, ஒலி ஊடகங்களை ஆண்டவர். நாடகம், கவிதை, கட்டுரைகள் என எழுதி எழுத்தேடுகளை ஆண்டவர். எனவே மேற்கூறிய செறிவுச் சொற்கள் இவருக்கு மிகப் பொருத்தமே.

ஓவியர் மருது அவர்களின் மரபுக்கலையைப் புலப்படுத்தும் ஓவியம் முகப்புக்கு பேரழகு ஊட்டுகின்றது.

உள்ளே நுழைகின்றோம்.

கலைஞர்களுக்குத் தன்னைக் காணிக்கை ஆக்கிக்கொண்டு மலர்கின்றது நூல். இந்த நூலை வெளியிட்ட நிறுவனமான, தமிழர் கலை பண்பாட்டு நடுவம் அருமையானதொரு அறிமுகத்தை இந்த நூலுக்குக் கொடுத்திருக்கின்றது.

உள்ளே படைப்புகள்,

ஈழக்கூத்தன்: அறிஞர்களின் பதிவுகள்.
ஈழக்கூத்தன்: அரங்க ஆற்றுகை அனுபவங்கள்.
ஈழக்கூத்தன்: நிகழ்வுகள்.
ஈழக்கூத்தன்: நேர்காணல்கள்.
ஈழக்கூத்தன்: பேச்சுகள் எழுத்துகள்.
ஈழக்கூத்தன்: பாடல்கள்.
ஈழக்கூத்தன்: நாடகப் பனுவல்கள்.
ஈழக்கூத்தன்: ஒளிப்படங்கள்.
ஈழக்கூத்தன்: வாழ்க்கைச் சுருக்கம்.

என்ற பகுப்புகளைக் கொண்டு உள்ளடக்கம் மிகத் தெளிவாக அமைக்கப்பட்டிருந்தது.

அறிஞர்களின் பதிவுகள் என்ற பகுதி, பல்துறைகளில் சிறந்து விளங்கிய பல ஆளுமைகளால் தாசீசியஸ் அவர்களைப் பற்றி எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டுள்ளது. கார்த்திகேசு சிவத்தம்பி, குழந்தை ம. சண்முகலிங்கம், பேராசிரியர் மௌனகுரு போன்ற 28 ஆளுமைகள் எழுதிய கட்டுரைகளைக் கொண்டுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட கட்டுரைகளும் இவற்றுள் அடங்குகின்றன. அவை யாவும் ஒன்றோடு ஒன்று முரண்படாமலும் கூறியது கூறல் இல்லாமலும் தாசீசியஸ் அவர்களின் பன்முகப் பரிமாணங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

'தமிழ்ப் பாரம்பரிய கூத்து மரபின் நாடக வலுவையும் அதன் ஆழத்தையும் புத்து



ருவாக்க முறையில் எடுத்துக்காட்டி தமிழ்ச் சிங்கள நாடக அரங்கை சிலிர்க்க வைத்தவர்" என்று சிவத்தம்பி அவர்கள் தாசீசியஸ் அவர்களைக் குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் சிறந்த தயாரிப்பாளர், சிறந்த நாடக எழுத்தாளர், சிறந்த நெறியாளர், சிறந்த நடிகர் என்ற பரிசில்களை வென்ற தனியொருவர் தாசீசியஸ் எனக் குறிப்பிடுகின்றார் குழந்தை ம. சண்முகலிங்கம்.

தாசீசியஸ் மிகத் திறமையான சமூகக்கல்வி ஆசிரியர். அதற்கும் மேலாக அற்புதமான மனிதாபிமானி. இங்கிதமாக எவருடனும் பழகும் பண்பாளர். தேடித்தேடி மற்றவருக்கு உதவும் உளப்பாங்குடையவர் எனக் கூறுகின்றார் மறைந்த திரு.பொ.கனகசாபதி அவர்கள்.

இவ்வாறாகக் கட்டுரையாளர் அனைவரும் தமது அறிவுவெனும் அளவுகோலால் தாசீசியஸ் அவர்களை அளவிட்டிருக்கின்றனர். இக்கட்டுரைகள், அரங்க ஆளுமை, நெறியாளர் தகுதி, மொழி, கலைசார் பற்றுறுதி, மனிதாபிமானம் எனப் பல நிலைகளில் இவரை வெளிப்படுத்துகின்றது.

அரங்க ஆற்றுகை அனுபவங்கள் என்ற பகுப்பு பத்துக் கட்டுரைகளைக் கொண்டுள்ளது. இவை யாவும் அரங்க ஆற்றுகை வாயிலாக ஆட்கொள்ளப்பட்டவர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த நூலின் தொகுப்பாளரான பொன்ராசா அன்ரன் இவரை நாடகர்களுக்கான ஒரு முகவரி என்று குறிப்பிட்டு ஒரு கட்டுரை எழுதியிருக்கின்றார். தாசீசியஸ் அவர்களால் வழங்கப்பட்ட நாடகப் பயிற்சிகளை ஒரு பாடமாகவே எழுதியிருக்கின்றார். நாடகர் ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய கட்டுரை.

லண்டனைத் களமாக் கொண்ட களரி நாடகக் குழுவினர் தாசீசியஸ் அவர்களின் அரங்க ஆற்றுகையை புதியதொரு பரிமாணத்தில் தரிசித்ததை அவர்கள் எழுதிய கட்டுரை விபரிக்கின்றது.

சித்திரா ரணசிங்க என்பவர், பேராதனைப் பல்கலைக்கழக நாட்களில் தாசீசியஸ் அவர்களுடன் பெற்ற அரங்கியல் அனுபவத்தைச் சுவைபடக் கூறுகின்றார். இப்பகுப்பில் இடம்பெற்ற கட்டுரைகள் பலவும் தாசீசியஸ் அவர்களை முழுமையாக நாடகப்பள்ளியாக அடையாளப்படுத்த முற்பட்டிருக்கின்றன.

ஈழக்கூத்தன்: நிகழ்வுகள் என்ற அடுத்த பகுப்பு நான்கு கட்டுரைகளைக் கொண்டுள்ளது. இவை நாராய் நாராய் என்ற அரங்க ஆற்றுகைப் பயணத்தையும் ரொறன்ரோவில் இலக்கியத் தோட்டம் அமைப்பு வழங்கிய விருதைப் பெற்ற நிகழ்வையும் குறிப்பிடப்படுகின்றன.

ஈழக்கூத்தன்: நேர்காணல்கள் என்ற பகுதி பல நேர்காணல்களைக் கொண்டுள்ளது. ஏடுகளுக்காகக் காணப்பட்ட நேர்காணல்களும் வானொலி நேர்காணல்களும் இடம் பெற்றுள்ளன.

கானா பிரபா, ஞானம் லெம்பட், சி.அண்ணாமலை, ப. நந்தகுமாரன், ப. ஸ்ரீறீஸ்கந்தன் இவர்களோடு ஐ.பி.சி. வானொலிக்கு வழங்கிய நேர்காணல்களும் இடம் பெற்றிருக்கின்றன. இந்த நேர்காணல்கள் வாயிலாக திரு. தாசீசியஸ் அவர்கள் முழுமையாக வெளிப்படுகின்றார் எனலாம். செவ்வி கண்ட அனைவரும் பெரும்பாலும் ஆழமான வினாக்களை எழுப்பி தாசீசியஸ் அவர்களை முழுமையை வவழைத் திருக்கின்றனர் என்பதே உண்மை. பல நேர்காணல்கள் நீண்டவையாக இருக்கின்றன. அவையே ஈழத்து அரங்கியல் கலைகளின் வரலாறாகவும் ஆகிவிடுகின்றன.

அரங்கியல் கலைகள் சார்ந்த பாரம்பரிய மரபியல் நுட்பங்களையும், நவீன அரங்கியல் ஆற்றுகை உத்திகளின் நுட்பங்களையும் மிகத் தெளிவாக உணர்ந்து, அறிவார்ந்த நிலை சார்ந்து இவர் வழங்கியிருக்கும் பதில்கள் வியக்கவைக்கின்றன. இந்த இரு தளங்களிலும் நின்று அரங்க அறிவியலை உலகுக்கு அறிவிக்கும் முதல் தமிழராகவே இவரைக் கருத வேண்டியுள்ளது.

கால மாற்றங்களாலும் பல்வேறு அழிவுகளாலும் மாறிச் செல்லும் பண்பாட்டுத் தளங்களின் வழியே மரபுகள் மறக்கப்பட்டுவிடக் கூடிய அபாயம் நிறையவே உள்ளது. ஆனால் கணிசமான பாரம்பரிய மரபடையாளங்களை இவர் தன்னுடைய கூற்றுகள் வாயிலாகவே பதிவு செய்திருக்கின்றார். அது மட்டுமன்றி, புலம்பெயர்ந்தோரின் அரங்கச் செயற்பாடுகளின் தொடக்க வரலாறும் இந்தச் செவ்விகள் வாயிலாக வெளிப்படுகின்றன. அரங்க ஆற்றுகை தொடர்பான செயற்பாட்டாளர் ஒவ்வொருவரும் தவறாது வாசிக்க வேண்டிய செவ்விகள் இவை.

ஈழக்கூத்தன்: பேச்சுகள் எழுத்துகள் என்ற பகுதியில் ஐந்து ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் இடம்பெற்றிருக்கும் இரை மீட்டல் என்ற பகுதி தாசீசியஸ் அவர்களின் வாழ்வை எமக்குச் சுருக்கமாக அறிமுகப்படுத்துகின்றது. அவருடைய சுவடுகள் வழியே தொடரும் கலைத்தாகங்களையும் தேடல்களையும் இரைமீட்டிச் செல்கின்றது இந்தக் கட்டுரை.

தாசீசியஸ் அவர்களின் மற்றுமொரு கட்டுரை 'மடை திறந்து'. தலைப்புக்கேற்ப, மடை திறந்து பாய்கின்றது சிந்தனை ஆறு. நாடகப் பயிற்சி பற்றிய தகவல்களும் பட்டறை அனுபவங்கள் இக்கட்டுரையில் கொட்டிக் கிடக்கின்றன. அருமையான கட்டுரை.

அடுத்து இடம்பெற்ற பகுப்புகளான ஈழக் கூத்தன்: பாடல்கள், ஈழக்கூத்தன்: நாடகப் பனுவல்கள் என்ற இரண்டுமே இவருடைய கலைப்படைப்புகள் பலவற்றைத் தாங்கி வந்துள்ளன. பல்வேறு சூழ்நிலைகளில் இவரால் எழுதப்பட்ட இசைப் பாடல்கள் பல இதில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. பாடல்கள் பலவும் ஈழநாட்டின் துயரங்களையும் போர்ச் சூழல்களையுமே வெளிப்படுத்துவதாக அமைகின்றன. இவை பெரிதும் நாடங்களில் கதை மாந்தர் பாடுவதற்காக எழுதப்பட்ட இசைப்பாடல்களே.

பட்டினியும் பங்கர் வாழ்வும்
கொட்டும் பம்பர் குண்டும் ஷெல்லும்
ஊரடங்குச் சட்டங்களும்
உலுத்தர் வெறி ஆட்டங்களும்
வேண்டாம் வேண்டாம் என்றலறும்
எம்மவர் கண்ணீர் துடைக்க
அஞ்சிடாதீர் என்றுரைத்த
தம்பியரால் கெம்பி நின்ற
ஈழநாடே.

என்ற பாடல் இந்நூலில் இடம்பெற்ற பல பாடல்களுக்கு ஓர் எடுத்தக்காட்டு.

தாசீசியஸ் அவர்கள் எழுதிய ஒன்பது படைப்புகள் ஏறக்குறைய இருநூற்று ஐம்பது பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. இவை தனி நூலாகவே வந்திருக்க வேண்டியவை. இனிவரும் காலத்திலேனும் தனி நூலாக்கப்பட வேண்டிய சிறப்பைக் கொண்டவை. அவை ஒவ்வொன்றினூடாகவும் பயணம் செய்து நுட்பமான அனுபவங்களைப் பெற்று, உணர்ந்தவற்றை எழுதுவதற்கு மற்றுமொரு களம் தேவை.

அரங்க ஆற்றுகை தொடர்பில் தேடல்களை மேற்கொள்ளும் நெறியாளர்களுக்கும் நடிகர்களுக்கும் இந்தப் படைப்புகள் பாடமாகவும் பயிற்சியாகவும் இருக்கவல்லவை.

இந்த நூலின் நிறைவில் தாசீசியஸ் அவர்களைப் பற்றிய ஒளிப்படத்தொகுப்பும் அவருடைய சுருக்கமான வாழ்க்கை வரலாறும் இடம் பெற்றிருக்கின்றது.

இந்த நூலாக்கம் இலகுவான பணியாக இருந்திருக்க வாய்ப்பில்லை. திரு.பொன்ராசா அன்ரன் என்ற ஈழக்கூத்தனின் மாணவர். தன்னுடைய நீண்டகால முயற்சியாக இத்தொகுப்பை உருவாக்கியிருக்கின்றார். இந்த நூல் ஓர் உயர் ஆளுமையின் ஆழ அகலத்தை வெளிப்படுத்துவதோடு மட்டும் நில்லாமல், அரங்கை ஆற்றுகை பற்றிய கல்வி நூலாகவும் ஒரு காலகட்ட அரங்க ஆற்றுகையின் வரலாற்றை வெளிப்படுத்தும் ஆவணமாகவும் உருப்பெற்றிருக்கின்றது. இதுவே இந்த நூலின் பெருஞ்சிறப்பு.

அ. தாசீசியஸ் என்ற பேராளுமை வாயிலாக ஈழத்தின் அரை நூற்றாண்டு கலைப் பரிமாணங்களைத் தரிசிக்கும் வாய்ப்பை இந்த நூல் எமக்குத் தருகின்றது.

vivekanandan.p@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாசீசியஸ்: தோப்பான ஒரு தனி மரம்

- பொன்ராசா அன்ரன் -

நாடக அரங்கக் கல்லூரியில் தாசீசியஸ் மாஸ்ரரால் கொடுக்கப்பட்ட பயிற்சிகளில் பெரும்பாலானவை அவரால் உருவமைக்கப்பட்ட பயிற்சிகளாகவே இருந்தது. நான் சுவிற்சலாந்தில் நாடகர்களுடன் பயிற்சிப் பரிமாற்றங்களில் ஈடுபடும்பொழுது அவர்களின் பயிற்சிகள் எனக்குத் தெரிந்தனவாகவுமிருக்கும், சில மாறுபாடுள்ளதாகவுமிருக்கும். இம் மாறுபாடுகளை அவர்களுடன் பகிரும்போது அவர்கள் மிக ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டார்கள்.

தாசீசியஸ் மாஸ்ரர் மேலைத்தேய பயிற்சிகளில் கற்றுக்கொண்ட மூச்சுப் பயிற்சியையும் சித்தர்களிடம் கற்ற முச்சுப் பயிற்சிகளையும் ஒருங்கிணைத்து ஒரு நாடகருக்குத் தேவையான மூச்சுப் பயிற்சிகளையும் உடற் பயிற்சிகளையும் வடிவமைத்திருந்தார். மேற்குலகின் நாடகப் பயிற்சி நெறிக்கு ஸ்ரனிஸ்லாஸ்க்கியின் ‘த சிஸ்ரம்’ எவ்வாறு அடிப்படையோ அவ்வாறே தமிழ் நாடக உலகிற்கும் தாசீசியஸ் மாஸ்ரரின் பயிற்சிகள் முக்கியம் பெற்றவை. உண்மையில் ஸ்ரனிஸ் லாஸ்க்கியின் ‘த சிஸ்ரம்’ (The System) என்ற பயிற்சியின் அடுத்த படிநிலையாக தாசீசியஸ் மாஸ்ரரின் பயிற்சிகள் இருந்தன. அவரின் பயிற்சிகளை உள்வாகிய வெளிநாட்டுத் தொழில்முறை நாடகர்கள் அங்கீகரித்தார்கள். ஆனால் தமிழ் பேசும் நல்லுலகம் அதன் முழுப் பயன்பாட்டைப் பெறவில்லை. இன்று வரையில் அவரது நாடகம், கூத்து பற்றிய அறிவை ஐம்பது விகிதம் உள்வாங்கியிருப்போமோ என்பது ஒரு கேள்விக்குறி.

நாடகம் என்பது ஒரு நிகழ்கலை. இது நடிகரை நடுநிலைப்படுத்தி நிகழும் நிகழ்வு. இதில் நடிகரின் பேசும் மொழியிலும் அவரது உடல் மொழியே முக்கியமானது. உடல் மொழி தனித்துவமானது. இது பேச்சு மொழியின் வரம்பைத்தாண்டி எல்லோராலும் விளங்கக்கூடியது. உடல் மொழிக்கு ஆதரவாக இருப்பதுதான் பேச்சு மொழி. சாதாரணமாக எல்லோருக்கும் தனிப்பட்ட உடல் மொழியுண்டு. உடல் மொழி நபருக்கு நபர் மாறும். நாடகத்தில் நாம் ஏற்கும் பாத்திரத்திரங்களின் உடல் மொழியூடாகத்தான் பேச்சு மொழியை கொண்டு வரவேண்டும். பல்லின, பன்மொழி நாடகர்களுடன் நடிக்கும் பொழுது அங்கு பொதுவாக இருப்பது உடல் மொழி. உடல் மொழியின் வெளிப்பாடு தெளிவாக இருந்தால் பேச்சுமொழி எதுவாக இருந்தாலும் பார்வையாளர்கள் நாடகத்துடன் இணைந்து பயணிப்பார்கள். அது நான் சுவிற்சலாந்தில் பெற்ற அனுபவம்.

அவ்வாறே குரல் பயிற்சிகளும் இருந்தன. எமது தொண்டையிலிருந்து உருவாகும் குரலை அடிவயிறு, நெஞ்சு, தொண்டை, மண்டை போன்ற இடங்களுக்குச் செலுத்தி அங்கிருந்து ஒலியின் ஓசைகளை வெளிக் கொணர வேண்டும். வெளிவரும் ஓசையின் - ஒலியின் அளவுகளை நீட்டுவது, சுருக்குவது, அதன் கன அளவு பரிமாணங்களை மாற்றுவது, ஏற்ற இறக்கங்களுடன் உரையாடுவதற்கும் முக்கியமானதாக இருக்கும். இப் பயிற்சிகள் முக்கியமாக பாடுவதற்கும் உரையாடல் வழங்கலுக்கும் மிக ஆதாரமாக இருக்கும். இவ்வாறு உடல், குரல் இவை இரண்டிற்கும் பயிற்சிகளைக் கொடுத்து ஒரு நாடகர் நடிப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். இவை இரண்டும் ஒரு நாடகரின் அரங்க அளிக்கைக்கு அடிப்படையானது.

நாடக அரங்கக் கல்லூரியில் ஒருநாள்:

இடம்: யாழ்ப்பாணம் - திருநெல்வேலிச் சந்தி, வாசிகசாலை, நாடக அரங்கக் கல்லூரி.

காலம்: 1979ம் ஆண்டாக இருக்கலாம். மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர்.

வட்டமாக எல்லோரும் நிற்கின்றோம். பயிற்சியாளர் தாசீசியஸ் மாஸ்ரரின் கனத்த குரல்

‘ஒரு நடிகன் நாடகம் நடிப்பதற்கு அவனுக்கு முக்கியமாக தேவைப்படுவது என்ன?’ பதில்கள் குவிந்தன.

‘நல்ல நாடகப் பிரதி’, ‘நவீன மேடை, இயக்குநர்’, ‘உடை’, ‘ஒளி வட்டங்கள்’, ‘சிறந்த ஒலிவாங்கி’, ... இவ்வாறு நீண்டு கொண்டே போனது.

> **புலம்பெயர் மண்ணில் நாம் செய்யும் விடயங்கள் எமக்குத் தெரிந்ததை மட்டும் வைத்து எமது திருப்திக்காகச் செய்யாது, எமது அடுத்த தலைமுறைகளுக்கும், நாம் வாழும் மண்ணிற்கும் செய்கிறோம் என்ற கடமையுணர்வுடன் செய்ய வேண்டும்.**

மீண்டும் அந்த கனத்த குரல்

‘ஒரு நடிகன் நாடகம் நடிப்பதற்கு அவனது உடல், அவனது குரல் முக்கியமாக தேவைப்படுகிறது’.

‘புரியவில்லை’.

‘என்டா இந்த மனிசன் உடல், குரல் எண்டு சொல்லுது. என்ன இது நாடகத்துக்கு புதுக் கண்டுபிடிப்போ? என்ர உடலில், என்ர குரல் இது என்னோடதான் இருக்கு. இதுக்கு என்ன பயிற்சி தேவை வந்தது? இதுக்கும் நாடகம் நடிக்கிறதுக்கும் என்ன சம்பந்தம்.’ இது எனது கிண்டலான சிந்தனை.

புரிந்தது.

சுவிஸ் மண்ணில் தொழில்முறை நடிகனாக சக நடிகர்களுடன் நடிக்கும் பொழுது. தாசீசியஸ் மாஸ்ரர் அவர்களின் ஒன்றரையாண்டுப் பயிற்சிகள் என்னையறியாது என் உடலில், மனதில், சிந்தனையில் ஏற்படுத்திய மாற்றங்களை என்னால் உணர முடிந்தது. அதை உணர்வதற்கும் அப்பயிற்சிகள் தான் வழி வகுத்தது. குறிப்பாக மூச்சுப் பயிற்சி மிக அடி அத்திவாரமாக இருந்தது. என்னை நானே அறிவதற்கு, என்னை நான் கட்டுப்படுத்துவதற்கு மிக ஆதாரமாக இருந்தது. சுவாசம் என்பது நமது இருப்பின் ஆதாரம். இதை நாம் தெரிந்து செய்வதில்லை. இது இயற்கையாகவே நடைபெறும் இயக்கம். இவ்வியக்கம் நின்றுவிட்டால் நாம் இறந்து விடுவோம். எம் கட்டுக்கப்பால் இயங்கும் இவ்வியக்கத்தை எமது கட்டுக்குள் கொண்டு வருவதுதான் பயிற்சி. பொதுவாக இதற்கான பயிற்சிகள் தியானம், யோகா போன்ற பயிற்சிகளினூடாகவும் பெறுவார்கள். ஆனால் நாடகத்திற்கான மூச்சுப் பயிற்சியில் உள்ளிழுக்கும் சுவாசத்தோடு நாமும் உட்சென்று எம்மை நாமே தரிசித்து வெளிச் சுவாசத்தின் போது எம்முள்ளிருந்தும் பூமிப் பந்திலிருந்தும் பிரபஞ்சம் நோக்கிய பயணம் நடைபெறும். தாசீசியஸ் மாஸ்ரரின் பெரும்பாலான பயிற்சிகள் மூச்சுப்பயிற்சியுடன் ஒன்றிணைத்தே நடைபெறும். அவரின் மூச்சுப் பயிற்சிகளும் உடற் பயிற்சிகளும் நாடகப் பாத்திர உருவாக்கங்களுக்கும் உரையாடல் வழங்கல்களுக்கும் எவ்வளவு அத்தியாவசியம் என்பதை என் தொழில்முறை நாடக அனுபவத்தின் போது உணர்ந்து கொண்டேன்.

ஆனால் இன்று புலம்பெயர் நாடுகளில் முப்பது, நாற்பது வருடங்களாக நாம் நாடகம் செய்துகொண்டிருக்கிறோம் என்று கூறி வானொலி நாடகம் போன்று இருவர், மூவர் மேடையில் நின்று உரையாடல்களை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதைப் பார்க்க மிகவும் கவலையாக இருக்கிறது. அவர்கள் அதைத்தாண்டியும் அடுத்த தலைமுறைக்கு இதைப் பரப்புவது கடும் கோபத்தை உண்டு பண்ணுகிறது. புலம்பெயர் மண்ணின் மக்களுடன் தொடர்பாடலில்லாது குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டும் நிலையை மாற்றி, அரங்காடலின் தரத்தை உயர்த்தி நாம் வாழும் மண்ணின் மக்களுக்கும் - எமக்குமான தொடர்புப் பாலத்தை நாடகத்தினூடாக அமைக்க வேண்டும். இது சுவிற்சலாந்தில் நடைமுறையானது. இதற்கு முதுகெலும்பாக தாசீசியஸ் மாஸ்ரர் என்னுடன் இருந்தார். நாடகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அமுதசுரபியாக தாசீசியஸ் மாஸ்ரர் இருந்தார் - இருக்கிறார் - இருப்பார்.

நாடகம் இன்று கல்விமயப்பட்டு பட்டப்படிப்பாக இருக்கிறது. எம்மை நாமே புதுப்பித்துப் புதுப்பித்து மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளோம். இதற்கு அடிப்படைச் செய்முறைப் பயிற்சிகள் அடிப்படையானவை. நாடகப் புரிதலின்றி நாடகம் செய்வது நாடகக் கலைக்குச் செய்யும் தீமையாகும்.

இசை கற்றுக் கொள்ள இசை ஆசிரியரிடமும், நடனம் கற்றுக் கொள்ள நடன ஆசிரியரிடமும் செல்லும் நாம், நாடகம் என்றதும் ‘நாடகப் பிரதியைக் கொண்டு வா நான் செய்கிறேன், வசனத்தைக் கொண்டு வா நான் பாடமாக்கிறேன்’ என்பது நியாயமான விடயமா? இசை, நடனம் போன்றே நாடகமும் இன்று கல்விக்குள் உள்வாங்கப்பட்டுவிட்டது. அதனால் இதற்கான அடிப்படை செய்முறை, கற்கை முறைப் பயிற்சிகளும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஒரு நடிகருக்குத் தேவையான உடல் பயிற்சிகள், குரல் பயிற்சிகள், சுவாசப் பயிற்சிகள் பெற்று நமது உடல் மொழியையும் உரையாடல் வழங்கலையும் வளப்படுத்த வேண்டும். அவ்வாறே அரங்காற்றலுக்கு ஆதாரமான அரங்கைத் திட்டமிட்டுப் பாவிக்க வேண்டும். ஒளி, மேடை, மேடைப் பொருட்கள், உடை நாடகத்தை செறிவூட்டுபவை. இவற்றின் தொழில் நுட்பங்களையும் புரிந்திருக்க வேண்டும். நாம் பாடும் பொழுது சுருதி தவறி, தாளம் தப்பி பாடினால் அதை பாட்டென்று ஏற்றுக் கொள்ளப்படுமா? தாளத்திற்கு ஆடாமல் காலையும், கையையும் அசைத்து விட்டு நான் பரதநாட்டியம் ஆடுகிறேன் என்றால், அது ஏற்றுக்கொள்ளப்படுமா? ஒவ்வொருவரும் கலை ஈடுபாடுகளில் நாம் ஆர்வப்பட்டு உட்செல்கிறோம். பாடுவதில் ஆர்வம் உள்ளோர் முறையே பயிற்சி பெற்று, அதன் அடிப்படைத் தகுதிக்குத் தன்னை உட்படுத்திப் பாடகராக மேடையேறுகிறார். அவ்வாறே நடனத்தில் ஆர்வம் உள்ளவர், எந்த நடனக் கலையை விரும்புகிறாரோ அதைக் கற்று மேடையேறுகிறார். அவ்வாறே நாடகக் கலையைக் கற்று, அதனைத் தெரிந்து நாம் செய்ய வேண்டும். இன்று உலகம் உள்ளங்கையில் என்ற நிலை. நாம் எதை வேண்டுமென்றாலும், எங்கு வேண்டுமென்றாலும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. புலம்பெயர் மண்ணில் நாம் செய்யும் விடயங்கள் எமக்குத் தெரிந்ததை மட்டும் வைத்து எமது திருப்திக்காகச் செய்யாது, எமது அடுத்த தலைமுறைகளுக்கும், நாம் வாழும் மண்ணிற்

தொடர்தல் 92ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழக்கூத்தன் தாசீசியஸ்

நாடகக் கலையை முழுமையாகப் பயின்றவரும் மோடி ஆட்டம், கண்டிய நடனம் போன்ற ஆடல்களில் கற்றுத் தோந்தவரும் ஈழத்துத் தமிழ் நாடகச் சூழலில் புதிய பரிமாணத்தைக் கொணர்ந்தர்களில் குறிப்பிடத்தக்கவருமான ஈழக்கூத்தன் தாசீசியஸ் அவர்களிடம் நிகழ்த்திய நீண்ட உரையாடலின் சில பகுதிகள் தாய்வீடு வாசர்களுடன் இங்கு பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

▸ ஈழத்துத் தமிழ் நாடக வடிவம் மாற்றம் பெற்ற கதை என்ன? கலையரசு காலத்திலிருந்து சொல்லுங்கள்.

தென்னிந்தியாவில் இருந்து பம்மல் சம்மந்த முதலியார் நடுத்தர வர்க்கம் சார்ந்த நாடகங்களைக் கொண்டு வந்தார். அதனை கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் பின்பற்றி பெரும் விருட்சமாக நாடகக் கலையை வளர்த்தார். சங்கரதாஸ் சுவாமிகள் தெருக்கூத்தினை ஒரு இசை வடிவ நாடகமாகச் செய்தார். இதனை ஈழத்தில் நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்கள் பின்பற்றி பட்டிதொட்டிகள் எல்லாம் கொண்டுசென்றார். இதனை விலாச நாடகம் என்றும் சொல்வர். கலையரசு அவர்களின் பின்னணியிலிருந்து வந்தவர்கள் தான் குழந்தை சண்முகலிங்கம் போன்றோர்.

ஆங்கில மரபில் கற்று தமிழ் நாடகங்கள் செய்தவர்களுள் நான் வந்தேன். நா.சுந்தரலிங்கம், இ. சிவானந்தன் போன்றோர் ஒரு தனி வழியைப் பின்பற்றினார்கள். சுஹைர் ஹமீத் என்பவர் மிகவும் காத்திரமான பெரிய நாடகங்களைப் படைத்தார். இவரது பாசறையில் இருந்து வெளிவந்தவர். க. பாலேந்திரா. பின்னர் பாலேந்திரா தனியாகப் பல நாடகங்களை நெறியாள்கை செய்தார். கலாநிதி சி.மௌனகுரு கூத்து வடிவ நாடகங்களைக் கொண்டு வந்தார். இளைய பத்மநாதன் காத்தவராயன் கூத்தை மாறுதலுடன் செய்தார். இவ்வாறு பலர் வித்தியாசமான வடிவங்களில் தத்தமது பாணியில் தமிழ் நாடகங்களுக்கு மெருகூட்டினர். தவிர, தமது கிராமங்களில் எமது தமிழ் நாடக வடிவங்களைக் காப்பாற்றிய எத்தனையோ அண்ணாவிமார்கள் இருக்கிறார்கள். பல கிராமியக் கலைஞர்கள் இருக்கிறார்கள்.

▸ நாட்டுக் கூத்துக் கலைஞர் பூந்தான் யோசேப்பு அவர்கள் பற்றி...

பூந்தான் யோசேப்பு அவர்கள் கிறிஸ்தவ நாட்டுக் கூத்துக்களையே மேடையேற்றினார். இதனால் அவை எல்லா மக்களையும் சென்றடைய முடியவில்லை. இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அதாவது, யாழ்ப்பாண தென்பாங்கு இசை வடிவத்தை கடந்த முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகக் காப்பாற்றி வந்தவர்கள் கிறிஸ்தவர்களே. சிங்கள நாடகக் கலைஞர் பேராசிரியர் சரத் சந்திரா அவர்களும் இதுபற்றித் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்தவர்களாலேயே தெருக் கூத்து முதலில் ஆடப்பட்டு வந்ததாகவும், தென்மோடியை அவர்கள் தொடர, வட மோடியை சிங்களவர் பின்பற்றியதாகவும் சொல்லியுள்ளார்.

ஆமாம் அது சரியானதே மனமே, சிங்கபாகு போன்ற சரத் சந்திராவின் உலகப் புகழ்பெற்ற நாடகங்கள், தமிழிலிருந்து இசை வடிவங்களை மூலமாகக் கொண்ட நாடகங்களே. இந்தக் கத்தோலிக்க நாடகங்கள் எழுதப்பட்ட கதை சுவாரசியமானது. ஆறுமுக நாவலர் சமயத்தைச் சுத்திகரித்த நாட்களில் கூத்துக்களை முற்றாக நிராகரித்தார். நாவலருடைய தந்தையார் கூட ஒரு அண்ணாவியார். மகனுக்குப் பயந்து, தான் எழுதிய ஒரு நாடகத்தை இடையிலேயே நிறுத்திவிட்டார். பிறகு வட்டுக்கோட்டை, அராலியைச்சேர்ந்த முத்துக்குமாரசுவாமிப் புலவர் அந்த நாடகத்தை எழுதி முடித்தார். முத்துக்குமார சுவாமிப் புலவரால் கூத்து எழுதுவதை நிறுத்திக்கொள்ள முடியவில்லை. தன் மதம் தடையாக இருக்கிறதே என்பதால் அவர் கிறிஸ்தவ நாடகங்களை எழுதினார். இன்றும் தென்பாங்கு நாடகங்களுக்கு வரைவிலக்கணம் என்றால் அது முத்துக்குமாரசுவாமிப் புலவர் எழுதியவைதான்.

▸ தென்மோடி ஆட்டம், வடமோடியிலிருந்து எவ்வாறு வேறுபட்டது?

தென்மோடி மிக நுணுக்கமான ஆட்டங்களைக் கொண்டது.

வடமோடி போர்க்குணம் கொண்ட, குதியல்கள் கூடுதலாக இருக்க, வேகத்துடன் ஆடப்படுவது. ஆனால் வடபாங்கு, தென்பாங்கைப் பொறுத்த வரை நான் சொல்லுகின்ற வரைவிலக்கணம் இதுதான். எது அந்தப் பிராந்திய வழக்கோ அது தென்பாங்கு என்றும், ஏனையவை எல்லாம் வடபாங்கு என்றும் அழைக்கப்படும். இதற்கு நல்ல உதாரணம், மன்னாரில் காணப்படும் மாதோட்ட இசைவடிவங்களைக் கொண்ட நாடகங்கள். ஒரே கதையை யாழ்ப்பாணப் பாங்கில் எழுதி மன்னாரில் மேடையேற்றினால் அது வடபாங்கு எனப்படும். ஆயினும் பேராசிரியர்கள் வித்தியானந்தன், சிவத்தம்பி, மௌனகுரு போன்றோர் வெவ்வேறு வரைவிலக்கணம் கொடுத்துள்ளார்கள்.

▸ சிறுகதை, நாவல் இலக்கியம் வளர்ந்தது போல் நாடக இலக்கியம் வளர்ச்சி பெற முடியாமற் போனது ஏன்?

நாடக இலக்கியம் எப்பொழுதும் சிந்தனையோட்டத்தைத் தடைப்படுத்தித் தடைப்படுத்திக் கொண்டுபோவது. ஒரு சிறுகதை, நாவல் வாசிப்பது போல் நாடகத்தை வாசிக்க முடியாது. மற்றது, நாடகத்தை மனதில் நிகழ்த்திப் பார்த்துக் கொண்டு வாசிக்க வேண்டும். அல்லாவிடில் அதில் ரசனை இருக்காது. அதாவது நாடகம் வாசகரை பார்வையாளரை டிமாண்ட் (Demand) பண்ணுகிறது. அந்தப் பொறுமை வாசகருக்கு வேண்டும்.

▸ நீங்கள் 'அபசுரம்' நாடகத்தில் பொதுவராக நடித்திருக்கிறீர்கள். பின்னர் அதே நாடகத்தை நெறியாள்கையும் செய்திருக்கிறீர்கள். எந்த வகையில் அவை உங்களைப் பாதித்தன?

நடித்துக்கொண்டு நெறியாள்கை செய்ய முடியும் என்றால் அதனைச் செய்வதில் பிழை ஒன்றும் இல்லை. ஆனால் முடிந்தவரை நெறியாளர் வெளியில் நிற்பது தான் நல்லது. அப்போது தான் சகலவற்றையும் ஒரு தாய் என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பார். இல்லாவிடில் தனக்கென்று நிறைய விஷயங்களை ஒதுக்கிவிடுவார். அங்கு நாடகம் ஒரு சமநிலையை இழந்துவிடும்.

▸ குழந்தை சண்முகலிங்கத்தின் 'திரிசங்குசொர்க்கம்' என்ற நாடகத்தில் ஒரு குறிப்பு வருகிறது. நெறியாளன் என்ற ஒரு படைப்பாளியின் மூலப்பொருள் நடிகன். அவன் உயிரும் உணர்வும் உள்ளவன். அவை நெறியாளனின் சர்வாதிகாரத்துக்கு ஒரு எல்லை வகுக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இது பிரச்சினைக்குரிய விடயமாக காலாகாலமாக இருந்து வருகிறது. நாடகத்துக்கு முக்கியம் பிரதி, பிரதி சொல்லுகிற கருத்து அதன் ஆத்மா. அதன் ஆத்மாவை வெளிக் கொணர்கிறவர்கள் நடிகரும் நெறியாளரும். நடிகர் பிரதியை மிஞ்சிக் கொண்டு போகாமல் பார்த்துக்கொள்வது நெறியாளரின் பணி. கட்டுப்பாட்டை அதற்குள் திணிக்காமல் இருப்பது அவரின் கடமை. உயிரற்ற ஜடங்களாக நடிகர்களை செயற்படுத்த முடியாது. ஏனெனில், கடைசியில் மக்கள் மேடையில் பார்க்கப் போவது நடிகரைத்தான். நெறியாளரை மீறிய நடிகர் வெறும் ஆக்ரோஷமான நடிப்பையே கொண்டு வர முயல்வார். அது நாடகத்தைக் கெடுக்கும். எல்லோரும் ஒரு சமரசத்துடன் செயற்படுவதே நல்லது. என்னைப் பொறுத்தவரை, ஒரு நாடகருடன் ஒரு மோதல் நிலை வருமாக இருந்தால், ஆளை ஆள் தழுவிக்கொள்ளவும் இருவரும் மனம்விட்டுப் பேசவும் எனது பயிற்சின்போதே பயிற்றுவிக்கிறேன். என் வாழ்க்கையில் நண்பர்களையும் நல்ல நடிகர்களையும் நான் இன்னமும் இழக்கவில்லை.

▸ இதையொட்டிய கேள்வி ஒன்றினை உங்களிடம் கேட்கலாமென்று நினைக்கிறேன். ஈழத்து நாடக உலகில் நீங்கள் கடுமையானவராகவே சித்தரிக்கப்பட்டிருக்கிறீர்கள். உதாரணமாக, நாடக அரங்கக் கல்லூரியில் பயிற்சியின்போது கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்களையே வெளியே போய் நிற்க வைத்திருக்கிறீர்கள். ஒரு கலைஞனை, சுயாதீனத்தைப் பாதிக் காதா?

நான் அதட்டுவது, கோபிப்பது எல்லாமே முழுக்க முழுக்க நடிப்பு, கோபம் எவ்வளவு கொடியது என்பதை அவனுக்கு உணர்த்துகிறேன். பயிற்சிக்கு வருபவன் அதில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். அவனது வெற்றியில் மகிழ்கிற முதல் ஆளும் நான்தான். நாடகக் கலையை மதிப்பதற்கு அவர்களைப் பழக்கிக்கொள்ள வேண்டும் என்பது எனது அவா. உதாரணமாக, எனது நாடகம் பார்ப்பதற்குப் பிந்தி வருபவர்கள், முதற்காட்சி முடியும் வரை உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை.

▸ நடிகன், நெறியாளன் பற்றிய கேள்வி ஒன்று முன்னர் கேட்டிருந்தேன். பிரதியாக்கம் பற்றி ஒரு கேள்வி. நீங்கள் எழுதிய பிரதியை நெறியாள்வதற்கும் இன்னொருவரின் பிரதியை நெறியாள்வதற்கும் என்ன வித்தியாசத்தைக் காண்கிறீர்கள்?

இன்னொருவரின் பிரதியை நெறியாள்கை செய்வது எனக்கு சவாலாக இருப்பதோடு ஒரு திருப்தியையும் தருகிறது. அவருடைய கருத்தை முழுமையாக வெளிக் கொணர்ந்தால்தான் அது எனக்கு வெற்றி, என்னுடைய பிரதியைப் பொறுத்தவரை, நான் ஒரு நெறியாளன் என்பதால், ஒரு நெறியாளனின் கண்ணோட்டத்துடன் தான். அதனை எழுதுவேன். இதனால் எனது பிரதியை மற்றவர் நெறியாள்கை செய்யத் தயங்கலாம். நாடக ஆசிரியனே நெறியாளனாக இருப்பின், அவர் நடிகர்களின் கருத்துக்களுக்கும் இடம்கொடுத்து, 'என்னுடைய பிரதியைத் திருத்துவதோ' என்ற அகங்காரம் இல்லாமல் செயற்பட வேண்டும். அப்போதுதான் ஒரு நாடக ஆசிரியர் நல்ல நெறியாளராக இருக்க முடியும்.

▸ நீங்கள் எழுதிய பிரதியே 'பொறுத்தது போதும்' என்ற நாடகம். இதன் தோற்றுவாய் என்ன?

'புதியதொருவீடு' நாடகத்தை மஹாகவி எழுதிய நேரம் நானும் கவிஞரும் நீண்ட பயணம் மேற்கொண்டோம். மீனவர் தளங்களுக்குச் சென்றோம். அந்த இடங்களில் காணப்பட்ட பாடல் வடிவங்களில் மஹாகவி எடுத்தது போக மீதிப் பாடல் வடிவங்கள் என்னிடம் மிஞ்சிக் கிடந்தன. அவற்றை வைத்துக் கொண்டு மீனவர் களத்தை மையமாக்கி எழுதிய நாடகம் தான் 'பொறுத்தது பொதும்'. அந்நாடகம் அப்போது ஜனாதிபதிப் பரிசு பெற்றது. ஆனால் அதன் பின்னர் பார்த்தபோது, அது என்னுடைய மண்ணுக்குப் பொருந்தவில்லை. தனியே மீனவர் சமுதாயம் மட்டும் என்னுடைய மண்ணில் இல்லை. பலவிதமான மக்களைப் பிரதிபலிக்க கமம், பனை போன்ற மாற்றங்களைச் செய்தேன் வேறுபட்ட இசை, ஆட்ட வடிவங்களும் புகுத்தப்பட்டிருக்கின்றன. ஜனாதிபதிப் பரிசு பெற்றபோது, ஒரு தேசிய நாடக வடிவத்தை நோக்கி, எம்மை வாசல் படியில் நிறுத்தியுள்ளதாக ஹென்றி ஜெய சேனா கூறியிருந்தார்.

▸ நீங்கள் பரிசு பெற்ற காலகட்டத்

தொடர்தல் 92ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழக்கூத்தன் தாசீசியஸ்...

91ம் பக்கத் தொடர்ச்சி...

தில், தமிழர்களுக்கு எதிரான சிங்கள அரசின் கொடுமைகளைச் சாடி, பல எழுத்தாளர்கள் தம் பரிசுகளைப் பகிஷ்கரித்திருந்தார்கள். ஆனால் நீங்கள் நாடகப் போட்டிக்குப் போனது மட்டுமல்லாமல், ஜனாதிபதிப் பரிசை இப்பவும் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள், ஏன்?

ஜனாதிபதி பரிசு எனக்குப் பெரிதல்ல. ஆனால் அதை வழங்கிய அவை தரமானது. கோபாலபிள்ளை மகாதேவா, சிவத்தம்பி, கைலாசபதி, முருகையன் இளங்கீரன், மாத்தளை சோமு, பாலன் இவர்கள் எல்லாம் சாதாரணமானவர்கள் அல்ல. இவர்கள் எல்லாம் அவையில் இருந்து ஒன்றை நிர்ணயம் செய்கிற பொழுது அவை வழிகாட்டியாக இருக்கும். ஜனாதிபதி பரிசு முதன்முதல் அறிமுகப்படுத்தப்பட்ட போது தான் அது எனக்கு கிடைத்தது. அதற்கு முதல் யாரும் பகிஷ்கரித்தார்களா என்று தெரியவில்லை. நாங்கள் போட்டிக்குப் போனது கூட நாடக அரங்கக் கல்லூரிக்கு ஒரு அங்கீகாரம் கிடைப்பதற்காகவே. நாடக அரங்கக்கல்லூரியை அரசு அங்கீகரித்து தமிழ் மக்களின் நாடக கலா நிலையமாக செயல்பட வேண்டுமென விரும்பினோம். நாடக அரங்கக் கல்லூரி ஒரு பெரிய சாதனை என்றே சொல்லலாம்.

▸ **நீங்கள் வாரந்தவறாது கொழும்பிலிருந்து, உங்கள் செலவில் வந்து பயிற்சி அளித்த மகத்தான அந்தப் பணியை யாரும் மறந்து விட முடியாது. இதற்கான உந்துதல் என்ன?**

அந்த சாதனைக்கு முக்கியமானவர் குழந்தை சண்முகலிங்கம் அவர்கள். நான் மட்டுமல்ல, பலர் அங்கு வெவ்வேறு பயிற்சிகள் அளித்தார்கள். வள்ளிநாயகி இராமலிங்கம், கவிஞர் கந்தவனம் போன்றோர் நாடகம் பற்றிய கருத்துரைகளை வழங்கினார்கள். நான் செய்முறை அல்லது அனுபவரீதியாக பயிற்றுவித்தேன். மௌனகுரு ஆட்டம் பயிற்றுவித்தார். இவ்வாறு பல கலைஞர்களின் ஆற்றல் அங்கு பெறப்பட்டது. எனக்கு உந்து சக்தியாக இருந்தது நான் பெற்ற பயிற்சியே. பேராசிரியர் ஆஸ்லி ஷல்பே, ஏர்னலட் மெக்ன்டர் போன்றவர்களின் நாடகப்பயிற்சியும் சிங்களக் கலைஞர் ஜராங்கனியிடம் குரல் பயிற்சியும் பெற்றதோடு கண்டிய நடனத்தையும் நான் கற்றுக்கொண்டேன்.

▸ **புலம் பெயர்ந்த நாட்டுச்சூழலில் 'உடனடி அரங்கு' வசதியாக இருக்கிறது. இதனை நடிகர்கள் எவ்வாறு எதிர் கொள்கிறார்கள்? நாட்டில் நிகழும் உண்மைச் சம்பவங்களை காட்டுவதாகச்சொன்னீர்கள். வெறும் சம்பவங்கள், எமக்குச் சாதாரணமாகிவிட்ட மரணத்தையும் மிஞ்சிய ஒரு பாதிப்பை அல்லது ஒரு படிப்பினையை மக்களிடத்தே ஏற்படுத்துமா?**

நடிகர்கள் ஈழத்தவர்களாக இருப்பதால் சம்பவங்களின் தன்மையை முழுமையாகப் புரிந்து அரங்கில் ஒத்துழைக்கிறார்கள். அதில் பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை. காட்டப்படும் சம்பவங்கள் படிப்பினையைக் கொடுக்குமா என்று சொல்ல முடியாது. ஆனால், அவை எமது மண்ணைப் பற்றிச் சிந்திக்க வைக்கின்றன. எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை, துயரங்களைச் சொல்ல முயல்கிறேன். கூடிப்பாடுவோம் என்ற பாடல்களையும் இதற்குப் பயன்படுத்துகிறேன். மக்களின் துன்பங்களைச் சொல்லாத கலை ஒரு Show ஆகத்தான் இருக்க முடியும்.

('தமிழ் நாட்டுக்கரையினில் அந்தரித்த......' போன்ற சில பாடல்களைப் பாடுகிறார்)

sriskandan@thaiveedu.com

தாசீசியஸ்: தோப்பான

90ம் பக்கத் தொடர்ச்சி...

கும் செய்கிறோம் என்ற கடமையுணர்வுடன் செய்ய வேண்டும். உலக நாடகக் கலைக்கும், இலக்கியத்திற்கும் பெரும் பங்களிப்புச் செய்த பல பிதாமகர்களைப் பெற்ற ஐரோப்பிய, அமெரிக்க மண்ணில் வாழும் நாங்கள் எமது படைப்புக்களின் தரங்களில் அவர்களது சிறு தாக்கத்தையேனும் கொண்டுவருதல் தமிழ் நாடகக் கலைக்கு மேலுமொரு புதிய பாய்ச்சலைக் கொடுக்குமென நம்புகிறேன். இன்று தாய் மண்ணில் பல பரிமாணம் எடுக்கும் நாடகக் கலை, புலம்பெயர் தளத்திலும் பல பரிமாணங்கள் எடுக்க வேண்டும். தமிழ் நாடகப் பண்பாட்டின் வீச்சு, புலம்பெயர் மண்ணின் நாடகப் பண்பாட்டின் வீச்சிலும் தாக்கம் செலுத்தவேண்டும். உரையாடலை மனப்பாடம் செய்து ஒப்புவித்தலை நிறுத்தி அரங்காடலை உருவாக்க வேண்டும். நமது நாடகத் தரத்தை நாம் உயர்த்தாவிட்டால், புலம்பெயர் மண்ணில் பல விடயங்கள் எம்மை விட்டுப் பிரிந்துசெல்லும். எமது பிள்ளைகள் எமது நாடகத்தைப் பார்க்க வராத சூழல் உருவாகும்.

நாடக அரங்கக் கல்லூரியில் தாசீசியஸ் மாஸ்ரரால் கொடுக்கப்பட்ட பயிற்சிகள் மிகச் சொற்பமே. தொடர் பயிற்சிகள் இல்லாது வார விடுமுறைகளில் மட்டும் பயிற்சி கொடுக்கப்பட்டதால் பயிற்சியின் உடல், உள மாற்றங்களின் மேம்படுத்தும் தன்மையில் குறுக்கீடு, தடங்கல்கள் ஏற்பட்டன. அதனால் பயிற்சிகளின் உச்சங்களை அவரால் கொடுக்க முடியாதிருந்தது. ஒரு பயிற்சியிலிருந்து இன்னொரு பயிற்சிக்குச் செல்வதற்கு கொடுக்கப்படும் ஒவ்வொரு பயிற்சிகளும் முழுமையாக உள்வாங்கப்பட்டால் மட்டுமே அடுத்தடுத்த நிலைப் பயிற்சிகளுக்கு முன்னெடுத்துச் செல்ல முடியும்.

சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு நான் அவரை அழைத்திருந்தேன். கல்லூரி மாணவர்கள் ஏற்கனவே இரண்டாண்டுகள் தமது பயிற்சிகளை முடித்திருந்தார்கள். இறுதியாண்டான மூன்றாம் ஆண்டுப் பயிற்சிக்கு அவரை அழைத்திருந்தேன். அங்கு அவர் புதிய பயிற்சிகளைக் கொடுத்திருந்தார். எனக்கும் அவை புதிய பயிற்சிகளாகவே இருந்தது. "இவர்களது உடல், மன ஒருங்கிணைப்பு புதிய பயிற்சிகளை உள்வாங்கும் நிலைக்கு மேம்பட்டிருந்தது. அதனால் இவர்களுக்கு சில புதிய பயிற்சிகள் முதன் முதலில் கொடுத்திருந்தேன். அப் பயிற்சிகளின் விளைவுகளையும் உடன் பார்க்கக்கூடியதாக இருந்தது. முன்பு இப்படிப்பட்ட பயிற்சிகள் கொடுக்கக்கூடிய சூழல் எனக்குக் கிட்டவில்லை'' என்று தாசீசியஸ் மாஸ்ரர் கூறியிருந்தார்.

அந்நிய நாடுகளில் கலை, பண்பாட்டு அடையாளங்களே எமது அடையாளங்கள். புலம்பெயர்ந்த நாடுகளில் அந்நாட்டு மக்களுடன் உறவாட, எம்மை அறிமுகப்படுத்த கலை வடிவங்களே பாலம் அமைக்கின்றன. இதில் நாடகக் கலை வடிவத்தை ஓர் உயர் நிலையில் மேற்கத்தைய சமூகம் வைத்திருக்கிறது. அதற்கு உயர் அந்தஸ்தும் கொடுத்து வருகின்றது. அதன் தரம் மிக உயர்ந்ததாக இருக்கின்றது. எம்மிடமும் உயர் நாடக கூத்துக் கலை இருக்கின்றது. அவற்றைத் தரம் குன்றாது அரங்களிக்கை செய்யவேண்டும். இவ்வாறான முயற்சிகள் சுவிற்சலாந்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதுவும் பிரதான ஓட்ட(Mainstream) நாடக வெளியில் தொழில் நாடக மரபில் நடைபெற்று வருகின்றது. அதற்கு தாசீசியஸ் மாஸ்ரர் தனது உழைப்பையும் முழு ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தார். அவர் இருக்கும் காலத்தில் அவரின் ஆற்றல்களை, திறமைகளை நுகரும் பண்பு எம்மிடம் இல்லாதது பெரும் இழப்புக்குரிய விடயமாக இருக்கிறது.

நாடகத்துறை மட்டுமல்லாது ஊடகத்துறையின் முன்னோடியாகவும் தாசீசியஸ் மாஸ்ரர் இருக்கின்றார். அவரால் உருவாக்கி, கட்டமைப்பு செய்யப்பட்ட ஐபிசி, ரீரீஎன் எம் முன் சாட்சிகளாக இருப்பவை. அவர் எவ்வாறு ஊடகத்துறையை செயற்படுத்தினார் என்பதை அவருடன் பணிபுரிந்தவர்களிடம் கேட்டால் புரியும். ஊடகத்துறையும் இன்று கல்விமயப்பட்டு பட்டப்படிப்பாக இருக்கிறது. அதற்கும் கற்கைநெறி, செய்நெறி உண்டு. எம்மில் செய்தி சேகரித்தவர்கள் செய்தியாளர்களாகவும் கட்டுரை எழுதியவர்கள் பத்திரிகையாளர்களாகவும் இருக்கும் துர்ப்பாக்கியம் எம்மினத்தில் மட்டும் தான் உண்டு.

தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளையும் தாய்மொழி போன்று இலக்கியப் புலமையில் எழுத, பேச வல்லமை மிக்க ஓர் ஆளுமை இன்று மௌன மொழியின் ஆளுமையாக இருக்கிறது.

உலகத் தமிழர் வெளியில் நாடகத் தனிமரம் தானே வளர்ந்து விழுதெறிந்து தனியே தோப்பாக நிற்கிறது. இது உலக நாடக முறைமைகளை உள்வாங்கியும் ஈழத் தமிழ் கூத்து மரபு ஆடல், பாடல் முறைமைகளை இரண்டாண்டுகள் கிராமம் கிராமமாகச் சென்று ஆய்வுசெய்து அதை உள்வாங்கியும் வைரமேறி நிற்கிறது. இன்று இதன் நிழல் வீணாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் தமிழர் நாடகம் கடும் வெயிலில் காய்ந்து கருகிறது.

இந்த தாசீசியஸ் என்ற ஆலமரத்தின் கீழ் புலம்பெயர் தமிழ் நாடகம், ஊடகம் நிழல் பெறுமா?

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மாதம் ரொறன்ரோவில் நடைபெற உள்ள நிகழ்வுகளில் சில...

June 01, 2019

திருவாளர் தமிழ் கனடா 2019

கிளி - இராமநாதபுரம் மக்கள் ஒன்றியம் வருடாந்த ஒன்று கூட ல்

Raindrop Foundation Inc வழங்கும் Mothers 2 Mothers அன்னையர் தின நிகழ்வு

மதுரத்வனி 2019 மாதாந்த இசை கச்சேரி தொடர்

கனடியத் தமிழர் பேரவை வழங்கும் முல்லைத்தீவு முன்முயற்சியில் பொருளாதார ரீதியாக வலுவூட்டபடல் பற்றிய முக்கிய மாநாடு

வட்டக்கச்சி மக்கள் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல் 2019

June 02, 2019

ஈழத்து தமிழ் நாடக ஆளுமை திரு. தாசீசியஸ் அவர்களின் பவள விழா மலர் வெளியீடு

மிசிசாகா தமிழ் ஒன்றியத்தின் மிசிசாகா தமிழர் திறன் காண் தேர்வு

வருடாந்த பொதுக்கூட்டமும் விருந்துபசாரமும் - இலங்கை நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகஸ்தர்கள் சங்கம்

ரொறன்ரோ சங்கீத உற்சவம் - கர்நாடக சங்கீத பாடல் இசை நிகழ்ச்சி

'சினம்கொள்' திரைப்படத்தின் ரொறன்ரோ முதன்மை காட்சி

ஸ்வராலயம் நுண்கலைக் கல்லூரியின் மூன்றாவது ஆண்டு விழா

June 04, 2019

ஒட்டவா தமிழ் சங்கத்தின் ஹார்ட் **To** ஸ்ட்ரோக் அறக்கட்டளைக்கு நிதி சேர்க்கும் சைக்கிள் ஓட்டம்

சமூக கருத்துக்களம் - மாகாண அரசாங்கத்தால் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்கள் ஸ்காபரோ சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை பற்றிய கலந்துரையாடல்

June 08, 2019

பவானி தர்மகுலசிங்கம் அவர்களின் நூல், இசைத்தட்டு வெளியீடு

பிராம்ப்டன் பட்டம் ஏற்றும் விழா 2019

தமிழ்நாடு கலாச்சார சங்கத்தின் முத்தமிழ்ப் பெருவிழா

ஆளப்போறான் தமிழன் - ரொறன்ரோ பல்கலைக்கழக தமிழ் இருக்கை நிதி சேர் நிகழ்வு

CIMA கிரிக்கெட் போட்டி

June 09, 2019

தமிழ் இலக்கிய இயல் விருது விழா

வருடாந்த **B.B.Q** நிகழ்வு - அன்புநெறி மனிதாபிமான நிவாரண அமைப்பு

ஒற்றைப் பனைமரம் கனடா காட்சி

தியாகி பொன். சிவகுமாரன் 45வது நினைவுதினம்

June 11, 2019

தமிழ் கலாச்சாரம் வழங்கும் - **Pub Trivia Social: The Tamil Version**

June 12, 2019

கொம்யூரெக் கல்லூரி சிறப்பு பட்டமளிப்பு விழா 2019

June 14, 2019

கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம் மஹா கும்பாபிஷேகம் மற்றும் ராஜ கோபுர மகா கும்பாபிஷேகம்

June 15, 2019

நயினாதீவு இளையோர் கழக 4 வது வருடாந்த ஒன்று கூடல்

நாடகம் - உள்ளிருந்து - தேடகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழா

உலகத் தொல்காப்பிய மன்ற வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஆண்டு விழாவும்

மாபெரும் கலை நிகழ்வு - பெண்ணின் பெருமைதென்மோடி சமூகக் கூத்து

June 16, 2019

சிவோகம் - ஒரு இசை பயணம்

காலம் 53 - செழியன் சிறப்பிதழ் வெளியீடு

June 18, 2019

பொது கற்கை நெறிகளுக்கான உதவி தொகை குறைக்கப்படுவது தொடர்பான கலந்துரையாடல்

June 21, 2019

'சஞ்சலம்' - பரதநாட்டிய நடனம்

Darts, Karaoke & Trivia 2019 for Human Rights - கனடிய தமிழ் காங்கிரஸ்

CTB # 751 கதம்பம் - நூல் வெளியீட்டு விழா

June 22, 2019

தேன் சிந்தும் கலைமாலை - குரும்பசிட்டி நலன்புரி சபை

June 23, 2019

வல்மொறின் சுப்பிரமணிய ஐயப்பன் ஆலய முத்துமாரியம்மன் பொங்கல் திருவிழா

June 29, 2019

IBC தமிழா ரெறன்ரோ 2019

தமிழர் நாள் - கனடா தமிழ் ஊடக மன்றம்

June 30, 2019

24வது ஆண்டு ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும் 2019 - புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்

நட்சத்திர விழா 2019 - இருபதாவது ஆண்டு நிறைவு விழா - கனடிய தமிழ் வானொலி **/ CTR**

பொங்கும் பொழுது 2019 - மானிப்பாய் இந்துக் கல்லூரி மகளிர் கல்லூரி முன்னாள் மாணவர்கள் அமைப்பு

இதைவிடவும் அதிக நிகழ்வுகள் ரொறன்ரோவில் நடை பெறுகின்றன. மேலே உள்ளவை inayam.net இல் பதியப்பட்ட நிகழ்வுகளில் சில. உங்கள் நிகழ்வுகளையும் inayam.netஇல் பதிவு செய்வதன் மூலம் இன்னொரு நிகழ்வு அதே நாளில் இடம்பெறுவதை தவிருங்கள்.

inayam
www.inayam.net
416 400 6406
info@inayam.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ பிரகதி
சித்தா மூலிகைச் சிகிச்சை நிலையம்
OVER 10,000 YEARS OLD TRADITIONAL SYSTEM OF TAMIL MEDICINE.

வர்ம முறையிலும், மருந்தில்லா மருத்துவ முறையிலும் சிகிச்சை அளிக்கப்படும்.

அன்னையின் பிரகதி சித்தா மூலிகை சிகிச்சை நிலையம். இது ஒரு பாரம்பரிய பரம்பரை ராஜ வைத்தியசாலை. இந்தக் கால மருத்துவ விஞ்ஞானிகளைப் போல ஆதிகால மருத்துவ விஞ்ஞானிகளே நம் சித்தர் பெருமக்கள். தவம்,ஞானம் எனப் பல வழிகளைக் கண்டறிந்தார்கள். அதில் ஒரு பங்கு தான் வைத்தியம். வைத்தியமுறைகள் பலவகைகளாக இருந்தாலும், அவர்கள் மூலிகைகளைக் கொண்டு பல வியாதிகளைக் குணமாக்கியும், ஆராய்ச்சி செய்தும் சுவடிகளில் எழுதியும் வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் சீடர்களுக்கும், சில நல்ல உள்ளம் கொண்டவர்களுக்கும் கற்றுத் தந்தும் இருக்கிறார்கள் மக்களின் நலன் கருதியே சித்தர்கள் இவ்வாறு செய்திருக்கிறார்கள். பல மருத்துவ முறையில் வந்திருக்கும் வியாதிக்கு மருந்தில்லை. ஆனால் சித்த மூலிகை வைத்தியத்தில் அப்படியில்லை. பல வியாதிகளுக்கு மருந்து இருக்கிறது. இன்னமும் மருந்திருக்கும் அளவுக்கு வியாதிகள் உலகத்தில் உருவாகவில்லை. எப்படிச் சொல்கிறேன் என்றால் ஒரே ஒரு மூலிகை 30 விதமான வியாதிகளைக் குணப்படுத்தும் அளவுக்கு உள்ள மூலிகைகளும் உண்டு. அதைப் பரம்பரையாக கையாண்டு வந்து கொண்டிருந்த பரம்பரையில் வந்ததே அன்னையின் பிரகதி சித்தா மூலிகை சிகிச்சை நிலையம். நரம்புத் தளர்ச்சி, முடக்கு வாதம்,பக்கவாதம், சிறுநீரகம், சொரியாஸிஸ், கர்ப்பப்பைக் கட்டி, ஆண் பெண் மலட்டுத் தன்மை, குழந்தையின்மை, அல்சர், மூட்டுவலி, இருதயம் சம்பந்தமான நோய்கள், மூளைக் கட்டி, ரத்தசோகை,சர்க்கரை வியாதி, தலைமுடி கொட்டுதல், மாலைக் கண்நோய், காது, ரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால்,வெண் குஷ்டம்,முள்ளந்தண்டு வட வலி, மூட்டு வலி, மூட்டுத்தேய்மானம், மஞ்சள் காமாலை, வெள்ளைப்படுதல், அனைத்து விதமான புற்று நோய்கள், வலிப்பு (Seizure), ஆட்டிசம் (Autism), முரசு கரைதல், தூக்கமின்மை, மூலம், பௌத்திரம், நரம்பு வாதம் (Varicose Vein) மாறாத படுக்கைப்புண், தீப்புண், ஒற்றைத் தலைவலி, முடி உதிர்தல், தைராய்டு, உடல் எடையை கூட்ட, அல்லது குறைக்க, உடலில் ஏற்படக் கூடிய அனைத்து வியாதிகளையும் அன்னையின் பிரகதி சித்தா மூலிகை சிகிச்சையில் பரிபூரணமாக குணப்படுத்திட முடியும். உணவே மருந்து, மருந்தே உணவாக கடைப்பிடிக்கப்படுகிறது.
வியாதிகளில்லாத உலகை உருவாக்க விரும்புகிறது

புற்று நோய் மற்றும் மரபணு நோயாளர்களுக்கு ஓர் அறிவிப்பு:

எந்த வகையான புற்றுநோய் மற்றும் மரபணு நோயாக இருந்தாலும் நோயாளி வாயால் உணவு உட்கொள்ளக்கூடியதாக இருக்கும் போதும் உறுப்புகளை வெட்டி அகற்ற முன்னரும் நாம் உங்களுக்கு உதவ முடியும் உங்களுக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கையை முழுமையாக வாழ நாம் உங்களுக்கு உதவ முடியும்

முக்கிய எச்சரிக்கை:

எந்த வைத்திய முறையானாலும், நோய்களை சரியாகக் கண்டறிந்து, அதற்கான மருந்தை கூறப்பட்ட பத்தியத்துடன் எடுக்கும் போது, குறிப்பிட்ட சில நாட்களுக்குள் அதன் முன்னேற்றத்தினை நீங்கள் உணர முடியாது போனால் உங்களுக்கு நோய் மாறாது இருக்கிறது என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். அதனைத் தொடர்வது பற்றி நீங்கள் நிச்சயம் சிந்திக்க வேண்டும்..
வியாபார விளம்பரங்கள் மட்டுமே உங்கள் முடிவுகளை தீர்மானிக்கக் கூடாது. மூலிகைகளின் தரம், செய் முறை, அதன் ஆயுட்காலம், வைத்தியரது திறமை, நம்பகத்தன்மையையும் ஆராய்ந்து தீர்மானியுங்கள்.
இதனால் உங்கள் பணமும்,கால விரயமும், மன உளைச்சலும் தவிர்க்கப்படும்.

**சித்தர்களின் பழங்கால முறையில் ரசமணி,
ரசலிங்கம் செய்து தரப்படும்.**

PREMI.S
பாரம்பரிய சித்த வைத்தியர் (ராஜவைத்தியம்), இரசவாதி
Hereditary Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist Siddha System of Medicine (IND),
Natural Medicine Practitioner© (CAN)

Proudly Sponsored By:
Yogic Health & Food Bank
www.sivarppanamfoundation.org

நிவாரணம் பெற அழையுங்கள்
கனடா மற்றும் இந்தியா தொடர்புகளுக்கு
TEL: +1416-624-7927 | +1647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com
880 MARKHAM ROAD, SCARBOROUGH, ON, M1H 2Y2
(Painted Post & Markham Rd)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 ஆண்டுக்கான பொதுநலவாய நாடுகளின் ஐரோப்பிய, கனடிய பகுதிக்கான போட்டியில் முதற் பரிசு பெற்ற கதை, இது. The Human Phonograph. ஜொனதன் ரெட் பிரித்தானியாவைச் சேர்ந்தவர். அணுத்துகள் இயற்பியலாளர். உலகப் புகழ்பெற்ற அறிவியலாளரான ஸ்ரீபன் ஹோகின்-சுடன் ஒன்றாக அண்டவியல் பயின்றவர். ஒபரா இசை நாடக எழுத்தாளர். மூன்று புனைவு நூல்களை எழுதியுள்ளார். அதில் Freud's Alphabet என்பது ஒரு நாவல். The Beijing of Possibilities என்பது ஒரு சிறுகதைத் தொகுப்பு. இன்னொரு சிறுகதைத் தொகுப்பு Arafat's Elephant.

மனித ஒலிப்பதிவுக்கருவி

- ஜொனதன் ரெல்

தமிழில்: என்.கே. மகாலிங்கம்

ஓர் உருவம் ஒளிப்பிரதிபலிப்பு ஹெல்மெற் தொப்பி அணிந்து, அதற்கேற்ற பொருத்தமான முழு அங்கியில் ஓரளவு நடந்தும், ஓரளவு மிதந்தும் மெய்மையற்ற அந்த மேற்பரப்பில் நடந்து கொண்டிருந்தது. அந்த உருவம் தன் கணவன் என்று அவள் எண்ணிக் கொண்டாள். அவன் வசிக்கும் ஷிங்ஹாய் மாகாணம் தான் சந்திரன் என்றும் நினைத்துக் கொண்டாள். ஆங்கில மொழியைச் சிறப்பாகக் கற்றுக் கொண்ட இன்னுமொரு மொழிபெயர்ப்பாளர் சொல்கிறார்: 'மனிதர்களுக்கு இது சிறியதொரு காலடி, மனிதர்களுக்கு இது பெரியதொரு காலடி' என்று திரு ஆம்ஸ்றோங் சொல்கிறார் என்றாள். தான் அழுவதை மற்றவர்கள் பார்க்காமல் இருப்பதற்காகத் தன் கைகளால் கண்களை இவள் மறைத்துக் கொண்டாள்.

அது நடந்து ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன.

பல எண்ணங்களைப் பற்றிப் பேச முடியாது. ஆனால் அவற்றைப் பற்றிப் பாட மட்டுமே முடியும்.

அவளுக்குரிய அந்த அழைப்பாணை அவள் வேலைப் பிரிவிலுள்ள செயலாளருக்குத் தான் தந்தி மூலம் வந்தது. உடுப்புக்களை எடுத்து அடுக்கி வெளிக்கிடுவதற்கு அவளுக்கு ஒரு கிழமை இருந்தது.

அவர்கள் இருவரும் 1961ல் சந்தித்தார்கள். அவள் அப்பொழுது வெளிநாட்டு மொழிகள் கற்கும் பல்கலைக்கழகத்தில் ரஷ்ஷியன் மொழியில் மேற்படிப்புப் படித்துக் கொண்டிருந்தாள். அவன் நிலவியலில் முனைவர் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டிருந்தான். அவர்கள் திருமணம் செய்து ஒரு ஆண்டுக்குப் பிறகு அவனுக்கு அந்த ஆணை வந்தது. தூரத்தே வடமேற்கிலிருந்த ஒரு நிலப்பரப்பைப் பற்றி ஆய்வு செய்வதற்காக அவன் அனுப்பப்பட்டான். அப்படித்தான் அதைப் பற்றி அவனால் சொல்ல முடிந்தது. அவன் அங்கே நெடுங் காலம் இருந்தான். அவனுடன் போகாமல் அவள் தடுக்கப்பட்டாள். அவன் நாடுகடத்தப்பட்டவன் போலவும் இருவரும் நாடு கடத்தப்பட்டது போலவும் உணர்ந்தார்கள். ஆனால் அது வெகுமதி என்றும் மக்களுக்குச் செய்யும் சேவை.. என்றுமே சொல்லப்பட்டது. அது நடந்தது 1964 ஒக்ரோபர் மாதம். டிராகன் ஆண்டு. அப்போ சீனாவிடம் குண்டு இருப்பதாக மாவோ பிரகடனப்படுத்தினார்.

அங்கே ஒரு புகைப்படம் இருக்கிறது. (அவன் இறந்து பல ஆண்டுகளுக்கும் பின்னும் அது வெளிப்படுத்தப்பட்டது. வெளியிட்டபோது அவள் பேஜிங்குக்கு வந்து விட்டாள்.) அதில் விஞ்ஞானிகள் ஒரே மாதிரியான ஆடைகளை அணிந்திருந்தார்கள். விசுவாசமான வணக்கத்துடன் இடது கை முஷ்டிகளை மடக்கிக் கொண்டும் பிரகாசமான சூரியனின் கீழ் திறந்த சமவெளியில் நின்றார்கள். இடது பக்கமிருந்து மூன்றாவதாக அவன் நின்றான். அவன் அதில் நன்றாகத் தெரிந்தான். மிகவும் நன்றாக. படத்துக்காக நிமிர்ந்து. ஆனால் உண்மையில் நிலம் அதிர்ந்து கொண்டிருந்தபோது காதுகளுக்குள் அடைப்பான்களை வைத்துக் கொண்டு, கண்களில் பாதுகாப்புக் கண்ணாடிகளை அணிந்து கொண்டும் இருப்பார்கள். ஓர் ஒதுக்கிடத்தில் அப்படி பதுங்கி நின்றிருப்பார்கள்.

சோவியத் யூனியனிடமிருந்து பாதுகாப்பதற்கான குண்டு அது. அதிலுள்ள முரண் என்னவென்றால் அவர்கள் தான் முதலில் அதைச் செய்வதற்கு உதவினார்கள். அவள் பள்ளி மாணவியாக இருந்த போது அவர்களை உடன்பிறவா நட்பு நாடு என்பதால் அதைக் கௌரவிக்க வேண்டும் என்று அவளுக்குப் போதிக்கப்பட்டது. அவளுடைய வகுப்பு 'கற்றுஷா' -ரஷ்ஷிய போர்க்காலப் பாடல்- என்றும் 'எனது நிலம்' என்றும் பாடியது. ஆனால் அவள் பல்கலைக்கழகத்திற்குப் படிக்கச் சென்ற போது ரஷ்ஷிய மொழி எதிரியின் மொழியாக மாறிவிட்டிருந்தது. அவர்களைத் தோற்கடிப்பதற்காக நாங்கள் அவர்களைப் புரிந்து கொள்ள முயன்றோம்.

ஒரு கிழமைக்கு ஒரு தரம் இராணுவத் தளத்திற்கு வேண்டுமென்றே சாதாரணமான முகவரி என்பது போல எழுதி ஒரு கடிதம் அனுப்புவாள்: தொழிற்சாலை 221, சுரங்கப் பகுதி 210, ஷின்ஹாய். முடிந்தால் அதற்கு அவன் பதில் போடுவான். தன் வேலையைப் பற்றி எழுதுவதற்கு அவனுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அவன் காலடிக்குக் கீழுள்ள பாறாங் கற்களைக் கூட விபரிக்க தடை செய்யப்பட்டிருந்தான். காலநிலை பற்றி எழுதுவான். இன்று வெப்பம் -20 கீழே போய் விட்டது. நாங்கள் வாத்துப் பறவை இறகுகளால் செய்யப்பட்ட நீண்ட ஆடையால் எங்களைச் சூடாக்கிக் கொள்கிறோம்... (அப்பொழுது அவளைக் கட்டிப் பிடித்

தொடர்தல் 96ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித ஒலிப்பதிவுக்...

95ம் பக்கத் தொடர்ச்சி...

துச் சூடாக்க நினைத்தான்) இன்று வழக்கமான கோடைகால நாள். பேஜிங்கின் இளவேனிற் கால வெப்பம் போல. (இங்குள்ள நகரத்தில் வெப்பம் தாங்க முடியாது... வேனிற்காலத்தை நினைத்துக் கொண்டான்]

பேஜிங்கின் நீண்டு அகன்ற சாம்பல் நிற சாலைகள் அவற்றின் நினைவிடங்களாகட்டும். ஏற்கெனவே பீனிக்ஸ், ஃபோறெவர் போன்ற சைக்கிள்களில் ஆவிகளைப் போல மங்கலாகக் கீரீச்சிட்டுச் செல்லும் கூட்டம் தெரிந்தது. அதுதான் கடைசிக் காலை நேரம். கூட்டுறவு வீட்டமைப்பின் முற்றத்தில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். மறைந்து நின்று அமைதியாகவும் முடியுமான அளவு மற்றவர்களுக்குத் தெரியாமலும் நின்றார்கள். அவள் ஒரு உடுப்புப் பெட்டியை மட்டும் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தாள்.

யூலை 28, 1969.

பெஜிங் புகையிரத நிலையத்திலிருந்து வெளிக்கிட்டாள். ஐந்து நாள் பயணம். கான்சு மாகாணத்திலுள்ள லானஷோ வரை செல்ல. அங்கிருந்து ஷின்ஹாய் செல்லும் விசேட இராணுவப் புகையிரதத்திற்கு மாற்றப்பட்டாள். அதில் சென்ற மற்றவர்கள் எல்லோரும் சீருடையில் இருந்த ஆண்கள். வண்டியின் யன்னல்கள் திரையால் மூடப்பபட்டிருந்தன, போகும் வழியில் தென்படும் நிலத்தைப் பார்க்க முடியாமல். அதிலும் பார்க்க அவள் குருடாக இருந்திருக்கலாம். ஒரு நாவலை அல்லது கவிதைப் புத்தகத்தைக் கொண்டு வந்திருந்தால் நல்லாக இருந்திருக்கும். ஆனால் தலைவரின் சிந்தனைகளைத் தவிர வேறொரு புத்தகத்தையும் கொண்டு வர அவளுக்குத் துணிவிருக்கவில்லை. பகலில் வியர்த்தது. இரவில் தன் பஞ்சு மெத்தைக்குள் குறண்டிக் கொண்டாள். சத்தங்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள். இயந்திரத்தின் தாள உரசல் ஒலியும் வலிமையான ச்சு ச்சுச் சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தது. சிலவேளைகளில் எந்த வித தெளிவான காரணமும் இல்லாமல் புகையிரதம் மணிக்கணக்கில் தரித்து நின்றது. ஆற்றின் சலசலப்பு. நாயின் குரைப்பு. ஆட்டின் கதறல். மனிதனின் சத்தம்.. எட்டாவது நாட்காலை எழுந்தாள். அவள் மட்டுந்தான் அந்தப் பெட்டியில் இருந்த ஒரே பயணி. இரகசிய தளத்திற்குப் போவதற்காக புகையிரதம் இன்னொரு பாதைக்குச் செல்லுவதைக் கேட்டுக் கொண்டும் உணர்ந்து கொண்டும் இருந்தாள். கடைசியில் அன்று பின்மதியம் கதவுகள் திறந்தன. அங்கே அவள் நின்று கொண்டிருந்தாள்.

எங்கும் புல்வெளி பரந்து கிடந்தது. அதிர்ச்சிகரமான நீலநிற ஆகாயம். தடித்த சீமெந்து கட்டடங்கள். நேற்றுத்தான் கட்டியவை போலவும் நாளைக்கே இடிந்து விடுவன போலவுமானவை. இராணுவ வீரர்கள் வரிசையாக நின்றார்கள். புகையிரத்திலிருந்து கொள்கலன் பெட்டிகளை இறக்கி தரித்திருந்த றக்குகளுக்கு மாற்றி ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

கன்வஸ் இராணுவச் சப்பாத்துக்களும் மடித்த நீல ஆடையும் அணிந்த தொப்பியில்லாத மெலிந்த ஒரு மனிதன் அவளை அவதானித்துக் கொண்டிருந்தான். அவனுடைய முகம் வெப்பத்தால் கருமையாகி இருந்தது. அவன் தன் முழுப் பெயரையும் சொன்னான், அந்நிய ஒருத்தியை கண்டபோது சொல்வது போல. குரலில் பதற்றம் இருந்தது. அதில் எதிர்பாராத தொரு அதிகாரமும் இருந்தது.

சம்பிரதாயத்தை விட்டுக் கொடுக்காமல் அவளும் அவனுக்கு அதே மாதிரி முகமன் கூறினாள்-முதலில் அவனுடைய பெயரையும் பின்னர் 'தோழரே' என்றும் சொல்லி வணக்கம் தெரிவித்தாள்.

தன் அடையாள அட்டைக்குப் பக்கத்தில் வைத்து அவள் போகுமிடம் எல்லாம் கொண்டுதிரியும் புகைப்படத்தில் இருந்தது போல நேரில் அவன் இருக்கவில்லை.

மெலிந்த ஒரு மனிதன் அவளை அவதானித்துக் கொண்டிருந்தான். அவனுடைய முகம் வெப்பத்தால் கருமையாகி இருந்தது. அவன் தன் முழுப் பெயரையும் சொன்னான், அந்நிய ஒருத்தியை கண்டபோது சொல்வது போல. குரலில் பதற்றம் இருந்தது. அதில், எதிர்பாராத தொரு அதிகாரமும் இருந்தது.

அவளும் மாறி விட்டாள் தான். அவள் ஒரு வேடதாரி இல்லை என்று யாரால் சொல்ல முடியும்?

ஏழு ஆண்டுகள்.

மேலே திறந்திருந்த வாகனத்தில் அவர்கள் சென்றார்கள். அதை ஒரு சார்ஜன்ற் ஓட்டினான். அவளுடைய கணவன் பரிவான அந்நியன் போல நடந்து கொண்டான். வெப்பம் அதிகமாக இருக்கிறதா? குளிராக இருக்கிறதா? இல்லை, இல்லை. பயணத்தால் களைப்படைந்து போயிருக்கிறாயா? உண்மையில் அவள் களைப்படைந்திருந்தாள். தண்ணீர் தரவா? வேண்டாம். ஆனால் தாகமாக இருக்கிறது, பணிவானவளாக் காட்டிக் கொள்வதற்காக. மறைத்திருந்த நீர்க்குடுவை ஒன்றை அவளிடம் நீட்டினான். அவள் நீரை உறிஞ்சிக் குடித்தாள். அவளுடைய உதடுகள் அவனுடைய உதடு பதிந்த இடத்தில் பதிந்தன. அவர்களின் மேலாக உயரமாக பருந்தொன்று வட்டமிட்டுப் பறந்தது. வாகனம் திடீரென்று நின்றது. கணவனும் மனைவியும் குலுக்கப்பட்டு ஒருவருடன் ஒருவர் மோதினர். இது திருமணம் முடித்தவர்களுக்கான வீடுகள் என்றான். அவள் அவனிடம் கேட்பதற்கு முன்னரே, அவன் சொன்னான், நீ தான் இங்கே ஒரேயொரு சிவிலியன் மனைவி.

அவளை உள்ளே கூட்டிச் சென்றான். அது சிறியதொரு அறை. அவள் விரும்பினால் அதை ஒரு படிப்பறையாக பாவிக்கலாம். இன்னொரு அறையில் ஒரு கட்டில் இருந்தது. சார்ஜன்ற் அவளுடைய உடுப்புப் பெட்டியை அங்கே வைத்து விட்டு வெளியேறினான்.

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சற்றே பார்த்துக் கொண்டனர்.

கிடைத்த ஏதோ கறுத்தத் துணி ஒன்றில் தயாரித்து ஒரு நூலில் தொங்கவிட்டிருந்த யன்னல் திரையை இழுத்து விட்டான். வரண்ட காற்று உன் உதடை வெடிக்க வைத்து விடும் என்றான். அதனால் எந்த நேரமும் உதட்டுச் சாயம் பூசிக் கொண்டிருப்பது நல்லது.

உதட்டுச் சாயம்? உதட்டுச் சாயம் பூர்சுவாக்களின் பொருளல்லவா? பேஜிங்கில் பல ஆண்டுகளாக அதைப் பெறமுடியாது.

தன்னுடைய பாதத்தால் கடதாசிப் பெட்டி ஒன்றை காட்டினான். அதற்குள் உருக்கில் செய்யப்பட்ட குழாய்களில் உதட்டுச் சாயம் இருந்தது. துப்பாக்கிக் குண்டுகள் போல். நூற்றுக்கணக்கான குழாய்கள். சிவத்த உதடுகளுக்கு ஆயுள் காலம் வரை போதுமானவை.

கட்டிலில் இருந்தார்கள். எதிர் எதிர் முனைகளில். ஒன்பது மாதமே திருமணம் முடித்து ஒன்றாக இருந்தார்கள், அவனை நாடு கடத்த முன்பு. இருவரும் பழைய மனைவியும் பழைய கணவனும் என்று தங்களைச் சொல்லிக் கொண்டார்கள். தங்கள் திருமணத்தைப் பற்றி விளையாட்டாக அப்படிச் சொல்லிக் கொண்டார்கள்.

உதட்டுச் சாயக் குழாயை ஒன்றைத் திருகினாள். உதட்டில் சிவப்பை சமமாகப் பரவிப் பூசுவதற்காக உதடுகளை நெளித்துப் பிதுக்கினாள். நறுமணமான இயந்திரத்தின் எண்ணெயைப் போல அது ருசித்தது. சிலவேளை அதாகவும் இருக்கலாம்.

அவன் அவளின் உடுப்புக்களைக் கழற்றினான்.

அவன் விரல்கள் அவளுடைய மேனியின் குறிப்பிட்ட சில பகுதிகளை அழுத்தின.

அவன் விலகிச் சென்ற முதலாம் ஆண்டோ என்னவோ ஒவ்வொரு நாள் கனவிலும் இரவிலும் அவனைக் கண்டாள். அவன் இன்மையை உணர்ந்து அதிர்ச்சியுடன் எழும்புவாள். பின்னர், படிப்படியாக நகரத்து அதிகாலை நட்சத்திரங்கள் போல அவளுடைய கனவுகளிலிருந்து அவன் மங்கிப் போனான்.

அவன் அவளைப் புணர்ந்தது பிரத்யேகமானதொன ஒரு நினைவாக இருக்கவில்லை. அவர்கள் வாழ்க்கையில் அது வேறான ஒன்றாக இருக்கவில்லை. அதுவே தான் வாழ்க்கையாக இருந்தது.

அவளை படுக்கச் செய்தான். சாதாரணமாகக் கால்கள் இருக்கும் இடத்தில் அவளுடைய தலை இருந்தது. கண்கள் மூடியிருந்தன. மூக்கினால் மணந்து அவதானித்தாள். ஷின்ஹாய் பெரிய உப்புநீர் வாவியிலிருந்து தீபெத்தின் எல்லையிலுள்ள பீடபூமிவரை நீளமாகக் கிடந்தது. நிலவியலாளன் ஆய்வுப் பயணம் ஒன்றைச் செய்ய ஆரம்பித்திருந்தான். அவளைப் பரிசோதித்தான், விசாரணை செய்தான்.. முக்கிய மாதிரி ஒன்றை எடுத்தான்.. ஷிங்ஹாய் பட பட என்று அடித்தாள், அலறினாள். அவள் சிறியதோர் உருவம். மாநிலத்துக்குள் ஒரு மாநிலம். ... பேஜிங்குக்குத் திரும்பினாள், வடக்கே பார்க்கும் விலைமதிப்பற்ற யன்னலுடன் உள்ள நிறுவனத்திலுள்ள தன் மேசைக்குச் சென்றாள், ஆனால் இந்த நகரம் பரவசமானது, தலைகீழானது. சைக்கிள் கார்கள் செல்லும் சமதளமான வீதிக்குப் பதிலாக அகன்ற நெடுஞ்சாலை உயரத்தில் தூக்கப்பட்டிருந்தது, இன்னும் பல நெடுஞ்சாலைகள் தொடுக்கப்பட்டிருந்தன. ஒளியில் நிறம் மாறும் கார்கள் இருந்தன. கிடைமட்டத்தில் காணப்படும் அடுக்குமாடிக் கட்டடங்களுக்குப் பதிலாக பளபளக்கும் கோபுரங்கள் மூடுபனியால் மூடப்பட்ட சொர்க்கம் வரை நீண்டிருந்தன, வழிப்போக்கர்கள் பிரகாசமான உடுப்புக்களில் திரும்பிப் பார்த்தார்கள். அவளை அங்கே காணவில்லை.. திரும்பவும் அவள் தான் ஷின்ஹாயின் நிலப்பரப்பு... சாத்தியமற்ற பேஜிங்கிக்காக ஏங்கினாள்.. ஒரு மனைவியாக கடினமான கட்டிலில் கிடந்தாள். கணவனுடைய பாரம் அவளை அமத்திப் பிடித்திருந்தது.

அடுத்த நாட்காலை அவன் எடுத்துக் கொடுத்த வேலைக்கு அவள் சென்றாள். அங்கே அவள் ஒரு மனைவியாக வரவில்லை. (அப்படியான ஒரு வகை அங்கே இல்லை) தேவையானதொரு தொழில்நுட்ப உதவியாளாகவே வந்தாள். அவளுக்கென்றொரு கதிரையும் மேசையும் இருந்தன. இராணுவம் கொடுத்தவை. அவற்றினடியில் சிகப்பு மையால் 'நூலகர்' என்று எழுதப் பெற்றிருந்தது. புத்தகங்கள் நிறைய இருந்தன. பாடப்புத்தகங்கள் அதிகமாக ரஷ்ஷின் மொழியில் தான் இருந்தன. 1950 களைச் சேர்ந்தவை. நிலவியல் பிரிவில் பலர் கைபட்டு உருமாறிய, பாறைகளைப் பற்றிய வகைப்பாடும் அடையாளப்படுத்தலும் என்ற பெருமைக்குரிய டேவிட்டோவிற்சின் புத்தகம் இருப்பதை கவனித்தாள். அவர் தான் தன் கணவனுக்குக் கற்பித்தவர். அத்துடன் பல சஞ்சிகைகளும் அச்சடிப்பதற்கு போவதற்கிருந்த பிரதிகளும் இருந்தன. மூலவரைபடங்கள், தொழில்நுட்ப விவரக்குறிப்புகள், சிரிலிக் அடையாளங்களுடன் இருந்தன. சோவியத் நாடு நிறுவியவற்றின் புகைப்படங்கள் அடங்கிய இரகசிய கோவைகள் ஒன்றும் இருந்தன. செவ்வியல் இலக்கியங்களுக்கான முழு புத்தக அலுமாரியைக் கண்டு அவள் திகைத்துப் போனாள். டாங் வம்சக் கவிதைகளில் ஆண் நூலாசிரியன் பெண் குரலில் பேசுகிறான். லி யு வின் காமக் குறுநாவல்கள், மிங் வம்சம் நலிவுற்ற காலத்தில் தொகுத்த பூ சொங்கிளிங்கின் திகில் கதைகள்.. வெளிநாட்டுப் புத்தகங்களும் இருந்தன, பல மொழிகளில்: ஆங்கிலம், பிரெஞ், ஜேர்மன்.. அத்துடன் அவளின் நேசத்துக்குரிய ரஷ்ஷியன் மொழியிலும். புஷ்கின் இருந்தான். (அவள் ஒரு காலம் ரற்றியானாவாக, எவ்ஜெனியில் காதல் வசப்பட்டவள்) கோகோலும், டோஸ்ரோவஸ்கியும்... இந்தப் புத்தகங்கள் எப்படி இங்கே வந்தன? அவை எப்படி அனுமதிக்கப்பட்டன? சீனாவில் எங்கும் எவரும் இவற்றை வாசிப்பதைக் கண்டால் அவர்கள் கண்டனதுக்குள்ளாவார்கள்? ஆக, இந்தத் தொழிற்சாலை 221, சீனாவிலுள்ள மற்றவற்றிலும் பார்க்க வித்தியாசமானது என்று அறிந்து கொண்டாள். முள்ளுக் கம்பி வேலியால் சுற்றி வர அடைக்கப்பட்டு, ரி-59 பீரங்கி வண்டிகளால் பாதுகாக்கப்

தொடர்தல் 97ம் பக்கம்

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித ஒலிப்பதிவுக்...

96ம் பக்கத் தொடர்ச்சி...

பட்டுள்ளது இது, சிறைச்சாலைகளிலேயே பாதுகாப்பானது. முரணாக இதுவே அதிக சுதந்திரம் உடையதுமாகும். கலாசாரப் புரட்சி இங்கே உபயோகப்படாது. விஞ்ஞானிகள் சிறப்புரிமை பெற்ற விதிவிலக்குகள். அவர்கள் மிகப்பெரும் பண்டாக்களை - வெண்கரடிகளை விடப் பெறுமதியானவர்கள். அவர்களுக்கு விசேட உணவு அளிக்கப்பட்டது. அரிதான மூளை வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தும் அளிக்கப்பட்டது.

ஆண்கள் அரட்டை அடிப்பதற்காக ஏதோ சாட்டுக்கள் சொல்லி அவளிடம் வந்தார்கள். நீ ஒரு நூலகர், உன்னைப் போன்ற ஒருவர் தான் எங்களுக்குத் தேவை என்று சொல்லுவார்கள். வேறு ஒரு சில பெண்களும் அங்கே இருந்தார்கள். தங்கள் அளவில் அவர்கள் விஞ்ஞானிகள். அவர்கள் நூலகத்திற்கு வரும்போது அவளைத் தவிர்த்தார்கள். அல்லது தங்கள் உரையாடல்களைச் சுருக்கிக் கொண்டார்கள். அந்த நூலகத்தில், நிறுவனத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் உள்ளது போல, அமைதி காக்கப்படுவதில்லை. ஆண்கள் அவளைப் பார்த்து புன்னகை புரிவார்கள். அல்லது தளத்தின் ஆரம்ப கால வரலாற்றையும் கடந்து போன வீர சகாப்தத்தையும் நினைவுக்குக் கொண்டு வருவார்கள். அக்காலத்தில் விஞ்ஞானிகள் இராணுவக் கூடாரங்களில் ஆட்டிறைச்சியையும் பார்ளி பன்னையும் சாப்பிட்டுப் பிழைத்து வாழ்ந்தார்கள்... என்று சொல்வார்கள்.

ஜின் என்ற திரவ இயக்கவியலாளர் 1957 ஐ நினைவுபடுத்தினார். மாவோவும் ஸ்ராலினும் கைகுலுக்கினார்கள். பேஜிங்கிலுள்ள நண்பர்கள் உணவகம் -ஹோட்டல் ட்றுஸ்பா- சோவியத் ஆலோசகர்களால் நிரம்பி இருந்தது. ஜின், வனியுஷின்னின் நண்பன். அவரை அவன் வாங்யுகின் என்று பகிடியாக அழைப்பான். அவர்கள் இருவரும் ஒன்றாக நீண்ட நடைப்பயணம் செய்வார்கள். கவிதைகள் பற்றிக் கதைப்பார்கள். பின்னர் மாவோ ஸ்ராலினுடன் தர்க்கித்துக் கொண்டார். எல்லா ஆலோசகர்களும் திரும்பிப் போக ஏற்பட்டது. ஜின் குள்ளமான ஒருத்தன். சூத்தை அரித்த பற்கள். அவனும் வனியுஷனும் எடுத்த புகைப்படத்தை அவளிடம் காட்டினான். வனியுஷன் உயரமானவன். பொன்னிறத் தலைமுடி. அந்தப் புகைப்படம் பேஜிங்கிலுள்ள ரெம்பிள் ஒவ் ஹெவின் - சொர்க்கத்தின் கோயில் என்ற இடத்தில் எடுக்கப்பட்டிருந்தது.

அன்று மாலை உணவறையில் ஓர் இசை அரங்கு நிகழ்ச்சி இருந்தது. மாவோவின் உருவப்படத்தின் கீழ் ஓர் இயற்பியலாளர் சொப்பேயின் இசைக்கோவையை பியானாவில் வாசித்தார். அதன் பின் நாற்சர இசை நிகழ்ந்தது. வயலின் இசைஞர்கள், கணிதவியலாளர்கள். வியோலா வாசித்தவர் ஒரு மின் பொறியியலாளர், அடர்த்தியான வெண்ணிறத் தலைமுடி உடைய செல்லோ வாசிப்பவர் 1930களில் ஹார்வட்டில் படித்தவர். அவரே அணுவேதியியலை சீனாவுக்கு அறிமுகப்படுத்தியவர். அதன் பின், குடிபானம் பரிமாறப்பட்டது. மதுவல்ல. மது தளத்தில் தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஒரு தூளை நீரில் கரைத்து உடனடியாகத் தயாரிக்கப்பட்ட புளிப்பான பிளம் சாறு பரிமாறப்பட்டது.

புதிய குண்டின் பெயர் ஒபரேஷன் ச்சீலின். அது ஒரு புராண உயிரினம். அது மானின் உடலையும் எருதின் வாலையும் குதிரையின் குளம்புகளையும் தலையில் ஒரேயொரு கொம்பையும் உடையது. உண்மையில் அப்படியானதொரு உயிரினம் இருக்கிறது. அது உருக்குலைந்து போய் உள்ளது. அது தோற்பாவைக் கலைஞர் ஒருவரால் உருவாக்கப்பட்டது. உணவறைக்குப் போகும் பிரதான நுழைவுப் பகுதிக்குள் வந்தவுடன் அது வைக்கப்பட்டிருந்தது. விஞ்ஞானிகளுக்கு அது பழக்கப்பட்ட ஒன்று. அவர்கள் அதில் தம் விசேஷ கவனத்தைச் செலுத்துவதில்லை. அதன் கொம்பில் ஒரு துண்டு இருக்கிறது. அதன் இடுப்பில் யாரோ

அவளுடைய கணவன் ஏன் ஓர் ஆர்வம் ஊட்டும் ஒருவனாக இருக்கவில்லை? அல்லது அப்படி அவன் இருந்தாலும் அவன் அதைக் காட்டிக்கொள்வதில்லை. அன்றிரவு அவர்களின் கட்டிலறையில் தன் பற்களைத் தீட்டி விட்டு அவளைப் ....

ஒருவருடைய மேலங்கி போர்த்தப்பட்டுள்ளது. புராணக்கதையின்படி அதன் கொம்பைக் (உண்மையில் ஒரு கலைமானின் கொம்பா?) கொளுத்தினால் தீப்பந்தம் போல எரியும். அதைக் கொண்டு ஒருவரால் எதிர்காலத்தைப் பார்க்க முடியும், இரக்கமுள்ள பேரரசரின் ஆட்சியில் தான் ச்சிலின் தன்னை வெளிப்படுத்தும் என்று சொல்லப்படுகிறது.

அவளும் ஆர்வமூட்டும் ஒரு பொருள் தான். ஒருநாள் அவளும் இந்த ச்சீலிங்கைப் போல சாதாரணமானதொரு பொருளாகி விடக்கூடும்.

அவளுடைய கணவன் ஏன் ஓர் ஆர்வம் ஊட்டும் ஒருவனாக இருக்கவில்லை? அல்லது அப்படி அவன் இருந்தாலும் அவன் அதைக் காட்டிக் கொள்வதில்லை. அன்றிரவு அவர்களின் கட்டிலறையில் தன் பற்களைத் தீட்டி விட்டு அவளைப் புணர்ந்தான். உடனே நித்திரையாகியும் விட்டான். மல்லாந்து கிடந்தான், கைகள் ஒவ்வொரு புறம் இருந்தன. அவன் கன்னத்திலும் மூக்கிலும் சிறியதொரு சிவப்பு நிறம் இருந்தது. அது அவளுடைய உதட்டுச்சாயம். அவன் குறட்டை விடுவதில்லை. கண்ணிமைகள் துடிப்பதில்லை. அவளைக் கட்டிலிலிருந்து விலக்கியும் வைப்பதில்லை. ஆனால் அவனுக்குப் பக்கத்தில் அவள் நீட்டி நிமிர்ந்து படுப்பதற்கு வசதியிருக்கவில்லை. திருமணம் முடித்தவன் போல அவன் இருக்கவில்லை.

அப்படிப் பல கிழமைகள் நடந்தன. உண்மையில் அப்படிப் பெரிய பிரச்சினைகளும் இருக்கவில்லை. தான் நல்ல ஆரோக்கியமாக இல்லை என்றான். ஆனால் அவன் உடலளவில் நன்றாக இருந்தது போலவே தோன்றினான். அதிகமான விஞ்ஞானிகள் சற்று நிறை கூடியவர்களே. (உணவு ருசியாக இல்லாவிட்டாலும் அதிகளவு கிடைத்தது) ஆனால் அவன் மெலிந்தவனாகவே இருந்தான். எவ்வளவுதான் சாப்பிட்டாலும்.

அவனிடம் பல இரகசியங்கள் இருந்தன. அது உண்மை. அவற்றை கட்டிலில் இருக்கும்போதுகூட குசுகுசுத்துக் கூடச் சொல்லவும் முடியாது.

பின்னர், தான் ஒரு பயணம் மேற்கொள்ளப் போவதாக அவளுக்குச் சொன்னான். அதி காலையில் போகிறான் என்றும் கருக்கலுக்கு முன்னரே வந்து விடுவதாகவும் சொன்னான். அது நிலவியல்காரருக்குரிய சிறப்புரிமை. மற்ற எவருக்குமே தளத்தை விட்டுச் செல்ல அனுமதியில்லை. அவன் சாத்தியமான அமைவிடங்களை.. ஆராயச் செல்கிறான். ஏற்கெனவே அவன் அதிகம் சொல்லி விட்டான்.

காலையில் நேரத்துடன் எழும்பி அவனை வழி அனுப்பி வைத்தாள். அவன் சோவியத்தில் செய்யப்பட்ட ஒரு மோட்டோர் சைக்கிளை ஓட்டிச் சென்றான். அது ஊறல் எம்-72. போர்க்காலத்திருந்து வந்த பழைய மொடல் சைக்கிள். அதன் பக்கத்து காரில் அவனுடைய உதவியாளன் இருந்தான். கருமையான கட்டை மனிதன். உள்ளூரிலிருந்து தெரிவு செய்யப்பட்டவன். பெயர் சொட்றாக். சீன மொழியில் கௌஹுய். உதவியாளன் பாறைச் சுத்தியல் ஒன்றைக் கொண்டு வந்தான். அவளுடைய கணவன் கொகிள்ஸ் கண்ணாடியைக் கட்டினான். இயந்திரம் உறுமியது. அவர்கள் போய் விட்டார்கள்.

அன்றைய நாளை நூலகத்தில் நூல்களை அடுக்கி ஒழுங்குபடுத்துவதில் செலவிட்டாள். தளத்தில் ஒரு பூனை திரிகிறது என்று ஒரு கதை உலவியது. ஒரு காட்டுப் பூனை. அதை இயற்பியலாளர் 'ஸ்றொடிஞ்ஜர்' என்று பெயரிட்டிருந்தார். புஷ்ஷி, புஷ்ஷி, புஷ்ஷி என்று குசுகுசுத்தாள்.

அவன் நள்ளிரவுக்குப் பின் திரும்பினான். என்ன நடந்தது என்று கேட்டாள். சில காரணங்கள் சொன்னான். அவை நல்ல காரணங்களாகத் தெரியவில்லை. மலைக் கணவாயில் காலதாமதமாகி விட்டது.. பல வேலைகள் செய்ய வேண்டியிருந்தது. திரும்பவும் கெதியில் போக வேணும். அவனுடைய நெற்றியில் வெளிறிய தூசு இருந்தது. பலவீனமானவும் அதேவேளை அதிக உற்சாகமாகவும் காய்ச்சல் உடையனாகவும் இருந்தான். உன்னை நீ நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்றாள். நான் ஏதாவது உனக்குச் செய்ய வேணுமா? அவனுக்கு இப்போ தேவையானதெல்லாம் அவளுடைய உடம்பு தான். களைத்துப் போயிருந்த போதிலும் அவள் அவனுக்குத் தேவைப்பட்டாள். இந்த முறை அவள் தன் கண்களைத் திறந்து வைத்திருந்தாள். மெலிந்த, சூரிய வெப்பத்தினால் கருகியிருந்த அவன், அவளை வருடுவதைக் கண்டாள். புணரும்போது அவன் தன்னை ஏமாற்றுகிறான் என்று கண்களை மூடும்வரை நினைத்துக் கொண்டாள். சாத்தியமற்ற பேஜிங்கையும் அதன் ஒளிரும் விளம்பரப் பல-கைகளையும் கண்டாள். உண்மையான வாழ்வில் இல்லாத துள்ளல் இசையையும், தாள இசையுடன் கூடிய உயிரற்ற அலங்காரப் பாடலையும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

நீ போகும் அடுத்த பயணத்தில் உன்னுடன் நான் வரவா? அடுத்த நாட்காலை அவனைக் கேட்டாள்.

முடியாது.

ஏன் முடியாது?

உனக்கு அனுமதி இல்லை. அதைவிட, சைக்கிளின் பக்கத்துக் காரில் ஒரு பயணிக்குத் தான் இடம் இருக்கிறது.

நான் ஏன் உன்னுடைய உதவியாளனாக இருக்கக் கூடாது, சொட்றாக்குப் பதிலாக. எனக்கு நீ பயிற்சி தரலாம். அது அத்தனை கஷ்ரமாக இருக்குமா?

நீ நூலகத்திற்குத் தேவை.

உனக்கு நான் தேவை.

அவனுடைய ஒடுங்கிய நெஞ்சைத் தொட்டாள். எலும்புக் கூடான விலா எலும்பை.

அவன் நாளாந்தம் அணியும் உடுப்பை அணிந்தான்.

அடுத்த கிழமை திரும்பவும் நான் பயணம் போகிறேன்...

அப்படியானல் நானும் உன்னுடன் வரலாமா? உன்னுடன் வரலாமா இல்லையா? நான் எதைக் கற்க வேணும்? கற்றுத் தா, கணவனே?

அவன் தன் நெஞ்சைச் சொறிந்தான். பாடு என்றான்.

என்ன?

எனக்கொரு பாட்டுப் பாடு. எந்தப் பாட்டாவது?

விசித்திரமானதொரு வேண்டுகோள். இசை... அவளிடமிருந்து? அவளுக்கு நல்ல குரல் வளம் இல்லை என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். சரி, கணவன் பாட வேண்டுமென்று விரும்பினால் அவள் கட்டாயம் பாடத்தான் வேண்டும். அப்போ என்ன? திரும்பத் திரும்ப அவள் கேட்ட சில பாடல்கள் இருக்கின்றன. நிறுவனத்தில் இருக்கும்போது ஒலிபெருக்கியில் பாடப் பெற்றவை: 'கடலில் பயணிக்கும் போது படகோட்டியை நம்பு,' 'செம்படை ஆயிரம் மலைகளை கடக்கின்றது, பத்தாயிரம் ஆறுகளைக் கடக்கின்றது, ஒரு கண ஓய்வுக்காக ஏங்குகின்றது..' ஆனால் நிச்சயமாக அவன் தனிப்பட்டரீதியான ஒன்றையே விரும்புவான். அவர்களுக்கான ஒரு பாடல் இருந்ததாக தெரியவில்லை. மற்ற காதல் சோடிகளைப் போல, அவர்களை அனுமதித்த அக்காலத்தில் ஜாஸ் இசையை சோடியாகப் போய்க் கேட்டதில்லை. இசை நடனம் ஆடப் போனதே இல்லை. ரஷ்ஷிய மொழி வகுப்பில் அவளுக்குக் கற்பித்த ஒன்றை அவள் பாடுவதற்குத் தெரிவு செய்தாள். 'வொல்கா படகோட்டியின் பாடல்.' ஹோ, ஹோ இழு இழு ஹோ, ஹோ. இன்னொருதரம் இழு, திரும்பவும் இழு. இன்னுமொருதரம் இழு. ஜோ, ஜோ, ஹோ, ..

தன் பார்வையைக் கீழே பதித்தான். பின், எனது உதவியாளாக இருப்பதற்கு உனக்குத் திறமை இல்லை என்று கண்டிப்பாகச் சொன்னான்.

தொடர்தல் 99ம் பக்கம்

www.inayam.net
த மி ழ் நி க ழ் வு க ளி ன் ச ங் க ம ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித ஒலிப்பதிவுக்...

97ம் பக்கத் தொடர்ச்சி...

பின் வந்த கிழமைகளில் அவன் சொட்றாக்குடன் பலமுறை பயணம் செய்தான். சிலவேளைகளில் இரவிலும் தங்கினான். எப்பொழுதும் பலவீனமாக ஆனால் புத்துணர்வுடன் திரும்பி வருவான். வந்தவுடன் அவளைப் புணர வேண்டும் என்று வற்புறுத்துவான். எதைப்பற்றி அவள் குறைபட்டுக் கொள்வது? அவன் அவளை நன்றாகவே கவனிக்கிறான், பரிவு காட்டுகிறான், உடல்ரீதியாக அவள் கவர்ச்சி யானவள் என்று நிச்சயமாக அவனுக்குத் தெரிகிறது. இருந்தும் அவன் அங்கே இருக்கவில்லை. திருப்தியில்லாத ஆவியைப் போல.

செப்ரெம்பர் முதல் பகுதியில் முதல் முறை சிறு பனித்துளிகள் நிலத்தில் விழுந்து கிடந்தன. குளிர் காலம் ஆரம்பிக்க இருக்கிறது. அது ஒரு நிலவியலாளருக்கு கூடாத பருவம். அன்று பின் மதியத்தில் அவளைத் தன் ஆய்வுகூடத்திற்கு அழைத்துச் சென்றான். ஒரு காலத்தில் அதுவொரு விமானக் கொட்டகையாக இருந்தது. அதைப் பிரித்து உருவாக்கிய ஒரு பகுதிதான் அது. அதன் உயர்ந்த கூரை, கோண வடிவில் இருந்தது. அதற்கு இயற்கையான வெளிச்சம் இல்லை. சேமிப்புப் பெட்டிகள் வெடிபொருட்கள் வைக்கும் கொள்கலன்களாக மாற்றப்பட்டிருந்தன. குடைவுக் கருவிகள், குத்துக் கோடரிகள், உளிகள், நெம்பு கோல்கள் எல்லாம் வௌவால்களைப் போல தலைகீழாகத் தொங்க விடப்பட்டிருந்தன. அவள் ஒரு முக்காலியில் தளவிளைவு நுண்ணோக்கிக்குப் பக்கத்தில் இருந்தாள். அவளுடைய தலை நுண்ணோக்கியின் தோற்றத்தைப் போலி செய்வது போல குனிந்திருந்தது. உதவியாள் மூலையில் குந்தி இருந்து பாறை மாதிரிகளை தொட்டியிலிருந்து வகைப்படுத்தி எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தான்.

அவளுடைய கணவன் இனவமைப்பியல் விரிவுரை ஒன்றை நடத்துவது போல அவளுக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். ஷின்ஹாயிலுள்ள பல்வேறு மக்கள் கூட்டத்தினரைப் பற்றி விபரித்துக் கொண்டிருந்தான்: ஹான் சீனர், மொங்கோலியன் (சொட்றக்கை ஒரு தரம் பார்த்தான்), திபெத்திய வழிவந்தவர்கள், ரூ போன்ற பூர்வீக இனக்குழுக்கள் (அவர்களின் மொழி மொங்கோலிய மொழிக்கு உறவுள்ளது. ஆனால் அவர்களுடைய பழக்க வழக்கங்கள் திபெத்தியர்களுடையதைப் போன்றன), சாலா என்ற முஸ்லீம்கள்.

இவற்றுக்கும் நிலவியலுக்கும் என்ன தொடர்பு என்று அவள் நினைத்தாள்.

மக்கள் ஒருவருடன் தொடர்பு கொள்ளுகின்றார்கள். அவர்கள் ஒருவரில் ஒருவர் செல்வாக்குச் செலுத்துகிறார்கள், என்றான். என்னுடைய ஆய்வுப் பயணத்தில் நான் சிறு விவசாயிகளைக் காண்கிறேன். நாங்கள் உணவையும் குடிபானங்களையும் பரிமாறிக் கொள்கிறோம். அவர்கள் எனக்கு வழிகாட்டுகிறார்கள். தாம் வாழும் நிலத்தைப் பற்றி அவர்கள் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

சிலவேளை அவர்கள் பாடுகிறார்கள் என்றும் சொன்னான்.

என்ன?

ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் பாடுகின்றார்கள்.

நாட்டுப்புறப் பாடல்களையா? அதையா சொல்கிறீர்கள்?

ஓம்.

பாடசாலையில் எங்களுக்குப் படிப்பித்த பாட்டுக்களைப் போல.

பாடசாலையில் எங்களுக்குப் படிப்பித்த பாடல்களைப் போன்றதல்ல. இதை ஹுவா என்றழைப்பார்கள். ஆண் அதை பெண்ணுக்குப் பாடுவான். பெண் ஆணுக்குப் பாடுவாள். அப்படி இரவு முழுவதும் பாடிக் கொண்டே இருப்பார்கள். தன்னால் அப்படிப் பாட முடியாது என்று சொன்னான். பாடுவதற்கான நினைவுத் திறன் எனக்கில்லை. ஆனால் என் உதவியாள் பாடுவான். அவனை நான் மனித ஒலிப்பதிவுக் கருவி என்றழைப்பேன்.



அவன் மெதுவாக மூச்சு விடுவது அவளுக்குக் கேட்டது. அவன் நித்திரையாகி விட்டான். அவனை எழுப்புவது சரியல்ல. அவளால் நித்தரை கொள்ள இயலவில்லை. கட்டிலின் அருகில் புரண்டு கொண்டிருந்தாள்...

இசை நடத்துநர் போல ஒரு விரலை உயர்த்தினான்.

சொட்றாக் எழும்பாமல், குந்தி இருந்த நிலையையும் சரிப்படுத்தாமல், எந்தவித வெளிப்பாட்டையும் மாற்றாமல் பாட ஆரம்பித்தான். அவனுடைய கறுத்த முகம் எப்போதையும் போல ஒலியற்று இருந்தது. அவளால் அந்தச் சொற்களை புரிந்து கொள்ள முடியவில்லை. (அந்த மொழி எதுவாகவும் இருக்கலாம், அது சீன மொழி அல்ல) ஆனால் அதன் இசை அருமை. ஷிங்ஹாயின் மலைகளைப் போல உயர்ந்தும் தாழ்ந்தும் சென்றது. ஆனால் அது அதிக நேரம் தொடரவில்லை. அமைதியாகப் பாறைகளை வகைப்படுத்திக் கொண்டிருந்தான்.

நடத்துநர் திரும்பவும் தன் விரலை உயர்த்தினார்.

திரும்பவும் ஒருமுறை மனித ஒலிப்பதிக் கருவி அதே பாடலை பாடினான். முதல் பாடிய பாடலைப் போலவே ஒவ்வொரு விதத்திலும் அது ஒத்திருந்தது. அங்கே சில வழக்கமற்ற இடைநிறுத்தங்களும் சில இடங்களில் சுருதித் தவறுகளும் இருந்தன. அவையும் மூலப்பாடலைப் பாடியது போலவே இருந்தன என்பதை அவள் உணர்ந்தாள். கட்சி, ஹுனான் மாகாணத்தில் இளமையில் மாவோ படித்த பாடசாலையை மறுபடி கட்டியபோது கூரையிலிருந்து மழை விழுந்த ஓட்டையையும் தரையில் ஓர் போலியான எலியையும் வைத்துக் கட்டி, மாவோ எப்படியான இன்னல்களிடையயே படித்தார் என்றும் அவரை எவை எல்லாம் உருவாக்கின என்பதைக் காட்டுவதற்காகக் கட்டினார்களாம். அதைப்போலத்தான் இதுவும்.

திரும்பவும் அமைதி நிலவியது. இப்போது அவள் பேசத் தொடங்கினாள்.

நான் அதைக் கேட்க விரும்புகிறேன்.

பாடல் மூன்றாவது முறையும் பாடப்பட்டது. முன்பு பாடப்பட்டதைப் போல அப்படியே, ஏற்றமும் இறக்கமுமாக.

பாடலின் இடையில் அவள் கத்தினாள், நிறுத்துங்கள்!

பாடல் நின்றது.

தொடர்ந்து பாடு!

முதல் விட்ட இடத்திலிருந்து பாடல் திரும்பவும் ஆரம்பித்து முடிவடைந்தது.

கணவன் சொன்னான், இதுவொரு சாலா பாடல். அதை இப்படி மொழிபெயர்த்தான்: சிவத்த விடிவெள்ளி அல்லி மலர் மலர்கின்றது. பிரகாசமாக ஒளிர்கின்றது. இள நங்கை உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறாள். பகட்டான புருவங்கள்.

ஹுவா பாடலின் முதல் அரைவாசிப் பகுதி விவரணை. இரண்டாம் பகுதி அதற்குரிய விளக்கம். குனிந்து தன் காலைப் பார்த்தான். நீ பேஜிங்கில் இருந்தபோது நான் இந்தப் பாடல்களைப் பற்றி சிறிய ஆய்வொன்றைச் செய்தேன். அதுதான் என் பொழுதுபோக்கு.

அவன் அவளை நேசிக்கிறான் என்பதற்கும் அவள் இல்லாத குறையை அவன் எப்படி உணர்ந்தான் என்று சொல்வதற்காகவும் ஆகக் கூடுதலாக அவன் சொன்ன செய்தி அதுவே. அவளுக்காக அவன் எந்த ஆபத்துக்கும் தயாராக இருந்தான். காரணம், ஹுவார் பாடல்கள் ஐயமின்றி அங்கே சட்டவிரோதமானது-அது பூர்சுவா மனோபாவம். சிறு விவசாயிகள் மிகவும் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தார்கள், அவர்களுக்கு அது சட்டத்திற்கு எதிரானது என்பது தெரியாது. ஆனால் அவள் கணவனுக்கு அது தெரியும். அதனால் அவனால் அதை எந்த வழியிலும் பதிவு செய்ய முடியாது, மனித ஒலிப்பதிவுக் கருவியைத் தவிர்த்து. சொட்றாக்குக்கு அது இடரைக் கொண்டு வரப் போவதில்லையா? அவன் தன் எசமானுக்குத் துரோகம் செய்யப் போவதில்லை. அப்படியான ஆபத்து இருக்கிறதென்பதை அறியாத மிகவும் எளியவன் அவன், ஒன்றும் அறியாதவன்.

அவள் கணவன் அந்த மனித ஒலிப் பதிவுக்கருவியைப் பார்த்துச் சமிக்ஞை செய்தான். இன்னொரு வித்தியாசமான பாடல் கேட்டது. இந்த முறை அது சீன கிளைமொழியில் இருந்தது. அவளால் அதைப் புரிந்து கொள்ள முடிந்தது. நீண்ட காலம் செங்குத்தான பாறையில் தடித்த புல் வளர்ந்தது. அதை அரிவாளால் வெட்ட முடியவில்லை. அரிவாள் மொட்டை. நீண்ட காலம் நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். கூச்சத்தால் அதை அவளுக்குச் சொல்லவில்லை.

அன்றிரவு கட்டிலில், இருட்டில் அவள் அவனைத் தன் அருகில் இழுத்தாள். இருவரும் அருகருகே கிடந்தனர். தொழிற்சாலை 221ல் இருந்த தன் ஆரம்ப கால நாட்களைப் பற்றி அவன் சொன்னான். முதலில் அது எத்தனை கஷ்ரமானதாக இருந்தது. வளர்ச்சியடையாத நிலைமைகள். ஆனால் எங்களுக்கிடையே தோழமை இருந்தது. அதில் எல்லோரும் ஒன்றாக இருந்தோம்! அவனுடைய அணியிலிருந்த மற்ற நிலவியலாளர்களைப் பற்றிச் சொன்னான். நாலு கண், வளை விலங்கு, படி கைக்கல், சூ மாமா..

அந்தப் பெயர்கள் அவளுக்கு எவ்வித அர்த்தத்தையும் கொடுக்கவில்லை. அவர்கள் இப்போது அங்கிருக்கவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது என்று கேட்டாள்.

ஆ, அவர்கள் போய் விட்டார்கள்.

அவனுடைய குரலில் இருந்த பதற்றம் அவளுக்குக் கேட்டது.

அவன் அவளுக்கு எதை உணர்த்துகிறான்? அவர்களை வேலையிலிருந்து நீக்கி விட்டார்களா? ஏதோ ஒருவகையில் அவர்களைக் கண்டித்து தண்டித்து அனுப்பி விட்டார்களா? அவர்கள் எதிர்ப்புரட்சியாளர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டார்களா?

அவன் அதைத் தெளிவுபடுத்தினான். அவர்கள் நோயுற்றார்கள்.

அதனால்..?

அவர்கள் இறந்து போனார்கள். அவனுடைய பதவி உயர்வுக்குரிய காரணமும், அவளை அவன் இங்கு அழைத்து வருவதற்குரிய அவனுக்குரிய அதிகாரமும் அவளுக்குப் புரிந்தது. அவை அனைத்தும் அவனுக்குரிய சிறப்பான புத்திசாலித்தனத்தினால் அல்ல, அவன் தான் அங்கே தப்பிப் பிழைத்தவர்களில் மூத்த நிலவியலாளன் என்பதால்.

அப்படி ஏன் நடந்தது? அவள் அந்தக் கேள்வியைக் கேட்கும்போதே பயங்கரமான பதிலை அவள் ஊகித்திருந்தாள். இருந்த போதிலும் அதைக் கேட்டாள்.

வழக்கமானதுதான்.

வழக்கமானது என்றால்?

நாங்கள் ஒபரேஷன் குவிலினை அவதானித்துக் கொண்டிருந்தோம். மிக அருகில் இருந்தோம். அங்கே எல்லா இடமும் புழுதியாக இருந்தது.

அப்போ நீ?

நான் அதிர்ஷ்டக்காரன். மருத்துவர்கள் சொல்கிறார்கள் நான் இன்னும் பல ஆண்டுகள் வாழ்வேன் என்று.

எல்லோரும் சந்திர மண்டலத்தில் மனிதன் இறங்குவதைப் பார்ப்பதற்காக நிறுவனத்தின் விரிவுரை மண்டபத்தில் காத்திருந்தார்கள். ஆங்கில மொழிபெயர்ப்பாளர் திரு ஆம்ஸ்றோங்கின் பெயரை தெளிவாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அவருடைய விரல் காற்றில் ஆம் என்பதையும் ஸ்றோங் என்பவற்றின் எழுத்துக்களையும் வரைந்து காட்டிக் கொண்டிருந்தார். அப்படி என்றால் திரு அல்ட்றின் என்ற பெயர் எப்படிப்பட்டது. அவரின் பெயரும் மங்களகரமானதா? அவருடைய பெயர் பலருடைய பெயரைப் போல எதையும் குறித்துக் காட்டுவது. நல்லதையோ கெட்டதையோ.

அவன் மெதுவாக மூச்சு விடுவது அவளுக்குக் கேட்டது. அவன் நித்திரையாகி விட்டான். அவனை எழுப்புவது சரியல்ல. அவளால் நித்தரை கொள்ள இயலவில்லை. கட்டிலின் அருகில் புரண்டு கொண்டிருந்தாள். ஓரளவு கனவு கண்டு கொண்டு.... பனி மூடிய மலை.. காளான் குடை போன்ற மேகம். கழுத்துவரை ஒரு மனிதனாகவும் தலை மட்டும் பழைய பாணி ஒலிப்பதிவுக்கருவியின் கொம்பு...

இரவில் விழித்தாள். மோசம் போனதான உணர்ச்சி ஏற்பட்டது. கணவன் சொன்னது நினைவுக்கு வந்தது. எதைப்பற்றி கனவு கண்டாள். அவனைப்பற்றி அல்ல. அந்த வகையில் கணவனுக்கு அவள் துரோகம்

தொடர்தல் 100ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித ஒலிப்பதிவுக்...

99ம் பக்கத் தொடர்ச்சி...

இளைத்திருக்கிறாள்.

அவளுடைய கனவு அன்ரன் செக்கோவின் மொத்தப் படைப்புக்களின் இரண்டாம் பாகத்திலிருந்து எடுத்த ஒரு கதையின் தழுவல். அதை நூலகத்தில் வாசித்துக் கொண்டிருந்தாள். அது ஜாரின் இராணுவத்திலிருந்த கூச்சமுடைய ஓர் அதிகாரியைப் பற்றியது. அவனை மாளிகை ஒன்றில் நடந்த ஒரு கூட்டத்திற்கு அழைத்திருந்தார்கள். அங்கே இருட்டறை ஒன்றுக்கு தெரியாத்தனமாக அவன் சென்று விட்டான். அங்கே வந்த ஒரு பெண் வேறு யாரோ என்று நினைத்து அவனுக்கு முத்தம் கொடுத்தாள்... அவர்கள் திரும்ப ஒருபோதும் சந்திக்கவில்லை.

அவளுடைய கனவில் வந்த அந்தப் பெண் தான் தான் என்று நினைத்தாள். தான் வேறொரு ஆணுடன் கள்ளத்தொடர்பு வைத்திருக்கிறாள் என்றும், தவறாக தாடி மீசை வைத்த கூச்ச சுபாவமுடைய இன்னொரு ஆணுக்கு முத்தம் கொடுத்தாள் என்றும் நினைத்தாள். முதலில் அது அதிர்ச்சியாகவும் பின் அருவருப்பாகவும் இருந்தது. பின் முத்தம் கொடுக்க வேண்டும் என்று நினைத்த மனிதனைத் தேடி அவளே செல்கிறாள்.

அவர் எப்படிப்பட்ட சாடிச எழுத்தாளராக இருக்க வேண்டும்! அதுவொரு கதை தான். அந்த எழுத்தாளருக்கு கதைக்கு எந்த முடிவையும் கொடுக்கும் உரிமையும் இருக்கிறது. கதாநாயகன் முழுத் தகுதியான எந்தவொரு பெண்ணையும் சந்திக்கலாம். காதலில் விழலாம். பின் மகிழ்வாக வாழலாம். ஆனால் அந்தக் கதையை பிரசுரித்த பின் அதன் முடிவை மாற்ற முடியாது. செக்கோவ் முத்தம் என்ற கதையை எழுதியபோது அவர் காசநோயால் இறந்து கொண்டிருந்தார். அவரை அவள் புரிந்து கொண்டாள். ஆனால் அவரை அவள் மன்னிக்கவில்லை.

அவன் படு மோசமாகி விடுகிறான். அந்த செப்ரெம்பரில் தான் அவர்கள் கடைசியாக புணர்ந்தார்கள். அந்த மாதம் அவன் நிலவியல் பயணம் போனான். அந்த நீண்ட கடுமையான குளிர்காலத்தில் துன்பப்பட்டான். உயிர்வளி நீள் உருளை கட்டிலின் பின்புறம் சீறிக் கொண்டிருந்தது. அவனை அவர்கள் தள மருத்துவமனைக்கு மாற்றினார்கள்.

அவள் அவனைப் பார்க்கச் சென்று வந்தாள். மனைவி என்ற இடத்திலிருந்து அவனுக்குப் பொய் சொன்னாள். நீ தேறி வருகிறாய் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னாள்.

பேரரசன் கின் ஷிஹியாங்கை நினைத்தாள். அவன் என்றென்றும் வாழ வேண்டும் என்று தீர்மானித்திருந்தான். அதற்காக அவன் அழிவற்ற அமுதம் ஒன்றை குடித்தான். அதில் பாதரசம் கலந்திருந்தது. அதனால் அவனே தன் மரணத்துக்குக் காரணமானான்.

நூலகருக்குரிய வேலையை அவள் செய்தாள். அங்கே அமைதி நிலவியது. அவளுடைய சித்திரமொழி நூலான பூமி மாறக்கூடியது. கடல் முசுக்கொட்டைப் பழத்தோட்டம் ஆகியது (அது மாவோவின் 'மக்கள் படை நான்ஜிங்கைக் கைப்பற்றியது' என்ற நூலிலிருந்து எடுத்தது) உணவறையில் நடந்த கண்காட்சியில் பெருமையாகப் பேசப்பட்டது.

அவன் ஒருமுறை நன்றாக இருப்பான். மறுமுறை மோசமாக இருப்பான். இளவேனிற் காலத்தில் பேசுவது நின்றது. அவனால் எவருடனும் தொடர்பாட முடியவில்லை.

அவனால் என்னைப் பார்க்க முடியுமா? மருத்துவரிடம் கேட்டாள்.

இல்லை.

அவனால் நான் பேசுவதைக் கேட்க முடியுமா?

சிலவேளை இயலும்.

யூன் 18, 1970. அவளுடைய கணவன் தனியார் அறை ஒன்றில் இருந்தான். அங்கே இன்னொரு கட்டிலும் இருந்தது. அது சீர்செய்யப்படாமல் கிடந்தது. அதில் கணவனுக்குச் சமாந்தரமாகப் அவளும் படுத்திருந்தாள்.

அவனுடைய உயிர்வளி உருளை விக்கிக் கொண்டிருந்தது.

பேஜிங்கினைச் சுற்றி இருந்த புராதன-மான சுவரை இடித்தபோது அவளுடைய பாட்டியின் கையை அவள் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தாள். வெறுமனே பாதிக்கப்பட்ட நகரத்தின் தூசியின் ஒளி விலகலூடாக அவள் அதை நோக்கிக் கொண்டிருந்தாள். தொண்டர்கள் கூட்டம் இடிந்த கற்களை அகற்றிக் கொண்டிருந்தனர்.

நான் உனக்கொரு பரிசு கொண்டு வந்திருக்கிறேன், என்றாள்.

சொட்றாக் இருவரையும் பார்க்காமல் அவர்களுக்கிடையே நின்று கொண்டிருந்தான். எப்போதையும் போல உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் மனித ஒலிப்பதிவுக்கருவி பாடிக் கொண்டிருந்தான்.

செர்ரிப் பழங்களை ருசிக்க வேண்டுமானால் பழத்தோட்டத்திற்கு வா. ஆயிரக்கணக்கான வசந்த காலப் பூக்கள் பூத்திருக்கின்றன. நாங்கள் பிரிந்து கொண்டிருக்கிறோம். அதற்காகக் கவலை கொள்ளாதே. இன்னும் சில நாட்களில் நாங்கள் சந்திப்போம்.

அந்த உருவத்தை -குவோஹுவையை- அவர்களின் நடுவே கண்டாள். அவனை எப்படி அழைத்தாலும் சரி. இங்கிருந்து பார்க்கையில் கூர்மையான தொப்பியும் கருமையான நீல மேல் அங்கியும் அணிந்திருந்தான். அவன் எவனாகவும் இருக்கலாம். அவனுடைய புருவங்கள் புருவ மத்தியில் சந்தித்தன. அவனைப் பிடிப்பதற்காக கைகளை நீட்டினாள். பெரு விரலாலும் சுட்டு விரலாலும் அவனுடைய மேலங்கியின் மலிவான 'நாட்டுப்பற்றுக் கம்பளி' யைத் தேய்த்தாள். மேலங்கியிலிருந்த ஒரு பையின் இதழை உயர்த்தினாள். அதற்கிடையில் மறைந்திருந்த பொத்தான் பழுப்பு வெள்ளை நிறத்தில் தெரிந்தது.

திருமண நாள் இரவு இருந்த தன் கணவனை நினைத்துக் கொண்டாள்.

அவள் தன் கையை எடுக்கவில்லை.

பழத்தோட்டத்திற்கு வா... அவன் திரும்பவும் பாடினான்.

அவளுடைய முகத்திற்கு அருகாமையில் அந்த மனிதனுடைய வெதுவெதுப்பை உணர்ந்தாள்.

கண்களை மூடி, அற்புதமான பேஜிங்குக்குள் சென்றாள்: எஃகும் கண்ணாடியும் எங்கும் நிறைந்து அகன்றிருந்த தலைநகரை இப்போது காணவில்லை. அகன்ற ஆழமான குழியில் மஞ்சள் நிற தொப்பி அணிந்த தொழிலாளர்கள் அங்கும் இங்கும் நிறைந்திருந்தார்கள். அங்கே தான் இன்னொரு நாள் உயர்ந்து எழுந்து நிற்கப்போகும் கட்டடங்களுக்கான அடித்தளங்களை அமைக்கப் போகின்றார்கள். திரைப்படத்தில் எழும் பின்னணி இசையில். அது ஹுவா பாடல். இன்னொரு பாடலைக் கேட்டாள்.. இன்னுமொரு பாடலைக் கேட்டாள்.. மூன்றாவது பாடல்.. நான்காவது.. அது திபெத்தியர்களுடையது, மொங்கோலியர்களுடையது, சாலா அல்லது து.. அவளுக்குத் தெரியாத எத்தனை மொழிகளில்.

கேணல் லி அனுதாபப்பட்டான். ஆனால் அசையவில்லை. தொழிற்சாலை 221ல் அவளால் இருக்க இயலவில்லை.

அவளுக்கு அது புரிந்தது. அவள் எதையும் எதிர்பார்க்கவில்லை. விஞ்ஞானியாக இல்லாத ஒரு பெண்ணுக்கு அங்கே ஓர் இடமும் இல்லை.

பீச் பூக்கள் பூக்கும் வசந்தம் என்ற பழம்பெரும் இடத்தை நினைத்துக் கொண்டாள். அதுவொரு சொர்க்கம். அந்த இடத்தை ஒரு மீனவன் எதேச்சையாகக் கண்டுபிடித்தான். தன் பயணத்தைத் தொடர்ந்தான். திரும்பவும் வந்தபோது அவனால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அந்த இடத்தை விட்டுச் செல்வதற்கு அவளுக்கு ஒரு கிழமை அவகாசம் கொடுத்தார்கள்.

ஓகஸ்ற் 21, 1970ல் அவளை அனுப்பி விட்டார்கள். ஃபெங்குவாங் காரில் அவள் தான் ஒரு பயணி. மற்ற அரச வாகனங்களுடன் அவளும் சென்றாள். பாதுகாப்புடன் சென்ற அரச வாகனங்கள் ஷின்ஹாய் ஊடாக நேரில்லாத வழியாகச் சென்றன. வழியில் ஷீனிங் பகுதியிலுள்ள பல இராணுவத் தளங்களில் நின்று நின்று சென்றன. அத்துடன் கொல்முட்டிக்கு அருகிலிருந்த ஒரு சுரங்க முகாமிலும் நின்றது. பூட்டிய யன்னல் கண்ணாடி ஊடாக பெரியதொரு உப்புநீர் குளத்தைக் கண்டாள். சமுத்திரத்தைப் போல அத்தனை விசாலமானது, அது. வடக்கே ஒரு மலைத் தொடரைக் கண்டாள்.. அங்கிருந்த நிலவியல் அம்சங்களை அடையாளம் கண்டாள். (அவளுடைய கணவன் அந்த திறன்களை அவளுக்குக் கற்பித்திருந்தான்): கெட்டிபட்ட உருண்டையான லாவாக்கள், எரிமலைக் கருங்கல் பாறைகள். பச்சை நிற பாம்புத் தோல் அமைப்புக் கனிமங்கள், கெட்டிபட்டு மாறிய கருங்கற்கள். சமுத்திரத் தட்டுத் துண்டுகள். ஒரு காலத்தில் அது சமுத்திரத் தரையாக இருந்து மேலெழும்பியது என்பதை நிருபித்தது. தன் கைகளை வயிற்றில் வைத்திருந்ததால் அதன் இயக்கத்தை அவள் உணர்ந்தாள். அங்கே மலைவாழ் செம்மறிக் கூட்டம் ஒன்றை கண்டாள். சடைத்த மயிரும் கொம்பும் உள்ள மான் ஒன்றைக் கண்டாள். அது வாகனங்களின் சத்தத்தைக் கேட்டு விட்டு ஓடியது. இழுத்திழுத்து நடக்கும் ஒரு கரடியையோ மனிதனையோ தூரத்தில் கண்டாள். பெண்ணொருத்தி பெரிய சடைத்த யக் பசுவிலிருந்து பால் கறப்பதையும் முகத்தை வெள்ளை ஆக்குவதற்காக ஒரு துளியால் பாலை முகத்தில் துடைப்பதையும் கண்டாள். ஓரிடத்தில் கான்சுவுக்குப் போகும் கணவாயில் - கான்சுவிலிருந்து தான் பேஜிங் போவதற்கான புகையிரத வண்டியை அவள் எடுப்பாள் இளம் ஆண், பெண் கூட்டம் ஒன்றை அவர்களின் பாரம்பரிய ஆடையில் கண்டாள். பெண்கள் கறுத்தக் குடைகளை சூரிய வெப்பத்திலிருந்து தங்களைக் காப்பதற்காகப் பிடித்திருந்தார்கள். பெண்களும் ஆண்களும் இருவர் இருவராகச் சென்றார்கள். அவள் இருந்த யன்னலிலிருந்து அவர்கள் பாடுவதை அவளால் கேட்க முடியாது. ஆனால் ஒவ்வொரு ஆணும் தன் பெண்ணுக்கு பாடுகிறான். ஒவ்வொரு பெண்ணும் தன் ஆணுக்குப் பாடுகிறாள் என்று எண்ணிக் கொண்டாள்.

mahalingam.k@thaiveedu.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Brand New Never Lived In 1 Bm Condo In pickering for Sale

ASSIGNMENT SALE **$359900.00** ..... Occupancy closing May 2019

EXCELLENT INVESTMENT ....Rental Guarantee!!!!!

Absolutely Stunning Rarely Offered** In The Highly Anticipated San Francisco 3 Tower. Lavish , State Of The Art Recreation Facilities! Including Outdoor Pool, Hot Tub, Cabanas, Loungers And Fire Pits. Light Infused Lobby With 24 Hour Concierge. Fitness Area With Change Rooms And Sauna. <><>2 Mins To Pickering Go Station<><> And 401 Access, 4 Mins To Pickering Lake front-Marina, And Waterfront Trail, 5 Mins To Pickering Town Centre. VISIT patpush.com for more details..

Broker protected.....
PATPUSH 416-894-1187

EASY TO RENT MINUTES AWAY FROM GO TRAIN... MINUTES TO DOWNTOWN TORONTO

BRAND NEW CONDO APT IN PICKERING

Cottage. $488K

Lake Front ,2 Garage 100X200 ft

Scarborough

3 bm home with sep entry to Bsmnt excellent location, close to everything

INVESTMENT

Commercial Retail Unit/ Own or invest

HOME SWEET LOAN

*BUY OR SELL THROUGH PAT in 2019 & WIN 1WEEK TRIP FOR TWO in CARIBBEAN***

WIN WIN

Century 21 Affiliate Realty Inc.
Brokerage
80 Corporate Dr 208 Toronto On
416-290-1200

Pat Pushpakanthan
Broker
416-894-1187

MASTERS HALL OF FAME

5% Mortgage
TJT financial
Interest rate from
2.79%
416-894-1187

SEELAN RANGER SPORT CLUB
OUT DOOR TRAINING 2019

WE TRAIN KIDS AND ADULTS FOR FREE

www.seelanrangerssportsclub.com

TORONTO SEELAN RANGERS S.C SINCE 2001

RAGI: 416 400 7344 | VARATHAN : 416 559 2565 | ARUN : 416 414 6071 | JEY : 416-417-6593

SCARBOROUGH
ST. JOHN PAUL II CATHOLIC SECONDARY SCHOOL
685 Military Trail, Scarborough, ON M1E 4P6
TUESDAY, THURSDAY 7-9 PM
SUNDAY 5-8 PM

MARKHAM
ST. BROTHER ANDR CATHOLIC HIGH SCHOOL
6160 16th Ave E, Markham, ON L3P 3K8
MONDAY, FRIDAY 7-9 PM

STOUFFVILLE
PARK
Line 9 north,
whitchurch-stouffville, ON L4A 1C2
SUNDAY 9:30AM-11:30 AM

BRAMPTON
CASTLEBROOKE SECONDARY SCHOOL
10 Gardenbrooke Trail, Brampton, ON L6P 3L1
WEDNESDAY 7-9 PM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை விருத்தியின் சில படிகள்

வானொலி என்றவுடன் அறிவிப்பாளரென்ற ஒரு பணியை மட்டுமே பொது மக்கள் பரவலாக அறிந்துவைத்துள்ளார்கள். அறிவிப்பாளராவதற்கு நல்ல குரல்வளம் இருக்கவேண்டுமென்பது மட்டுமே சகலருமறிந்த தகுதியாக இருக்கிறது. ஒலிபரப்பென்பது அறிவிப்புச் செய்வது மட்டுமல்ல, அவர்களுடன் தயாரிப்பாளர்கள், ஒலிபரப்பு நிர்வாகிகள், மற்றும் தொழில்நுட்பவியலாளர்களென்று பல முக்கிய பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். அறிவிப்பாளருட்பட அனைவருக்குமே எம்மைச் சூழவுள்ள சகல விடயங்களையும் பற்றிய ஆழமான அறிவும் நியாய சிந்தையும் படைப்பாற்றலும் நுட்பமான இரசனையும் மிகமிக முக்கியம். படைப்பாற்றல், நுட்பமான இரசனை என்பன பிறப்பிலிருந்தே வருபவை. நியாயசிந்தை அனுபவத்தால் வருவது. ஆனால் சகலவற்றிலுமான ஆழமான அறிவு அவையனைத்தையும் மேலும் விருத்திசெய்யும். இந்த அறிவைப்பெறுவதற்கு இடையறாத தேடல் சகல ஊடகவியலாளர்களுக்கும் இருக்கவேண்டும். சகல துறைகளைப் பற்றியும் அறிந்துகொள்வதற்கு எமக்கு உதவக்கூடிய மொழி ஆங்கிலம். தமிழ் ஊடகவியலாளர்களுக்குத் தமிழ்மொழியில் ஆழ்ந்த அறிவும் மொழியை மிகச் சிறந்தமுறையில் பயன்படுத்தக்கூடிய ஆற்றலும் மிகவும் அவசியமானது. அந்தளவுக்கு இல்லாவிட்டாலும்கூட ஆங்கிலத்தை வாசிப்பதற்கும் புரிந்துகொள்வதற்கும் அந்தமொழியில் உரையாடுவதற்குமான அறிவும் இன்றியமையாதது.

எனக்கு சிறுவயதுமுதலே ஆங்கிலமொழியில் நாட்டமிருந்தது. பாலர் பிரிவிலிருந்தே தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் பேச்சுப் போட்டிகளில் கலந்துகொள்வேன். எமது கல்லூரியில் ஆசிரியராகவிருந்த சபாபதி மாஸ்டர் ஆங்கிலப் பேச்சுப்போட்டிக்கு எங்களைத் தயார்செய்வார். நான் மத்தியபிரிவு, மேற்பிரிவுக் பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டபோது அவரே பேசப் பழக்கினார். அந்தப் பயிற்சி காரணமாக ஆங்கிலத்தை யாழ்ப்பாணப் பேச்சுத் தொனியில் உச்சரிக்காது ஓரளவு சரியான தொனியில் உச்சரிக்கப் பழகிக் கொண்டேன். பின்னர் குறிப்பாக, எட்டாம் வகுப்பிற்கு வந்ததும் எமக்கு ஆங்கிலக் கவிதைகளின் தொகுப்பு நூலொன்றும் றொபின்சன் குருசோ, கிங் ஆதர் அன்ட் ஹிஸ் நைற்ஸ் ஆகிய கதைப்புத்தகங்களும் பாடநூல்களாக அமைந்தன. இராஜதுரை மாஸ்டர் அப்போது அந்தக் கவிதைகளையும் கதைகளையும் வாசித்து மிக சுவாரஸ்யமாக விளக்குவார். இயல்பாகவே கதைகள் வாசிப்பதில் மிக்க ஆர்வம்கொண்ட நான் இந்த ஆங்கிலக் கதைகளை மிக ஆர்வத்துடன் படித்தேன்.

பின்னர் க.பொ.த.ப. சாதாரண தரத்தில் உலகப் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் ஜேன் ஒஸ்ற்றீனுடைய ப்றைட் அன்ட் ப்றஜுடிஸ் பாடநூலாக இருந்தது. பாலசிங்கம் மாஸ்டர் படிப்பித்த ஆங்கில வகுப்பு எப்போது வருமென்று காத்திருப்போம். நண்பர்களும் நானும் சேர்ந்து அந்தக் கதையைத் தமிழ்த் திரைப்படமாக எடுப்பதானால் யார்யாரை நடிக்கப் போடலாமென்று நடிகர் தேர்வுசெய்து உரையாடுவது எமது சுவாரஸ்யமான பொழுதுபோக்காக இருந்தது. வீட்டில் எனது மாமா வாங்கும் றீடேர்ஸ் டைஜஸ்ட் சஞ்சிகையில் வரும் விளம்பரங்களைப் பார்ப்பது, ஆங்கிலப் பத்திரிகைகளில் குறிப்பாக அப்போது புதிதாக வெளிவரத்தொடங்கியிருந்த வீக்கென்ட் சண் பத்திரிகையின் தலையங்கங்களை வாசிப்பது, லிஃப்கோ ஆங்கில-தமிழ் அகராதியை வாசிப்பது என்று ஆங்கிலத்தில் ஈடுபாடு இருந்தாலும் இயல்பாகப் பேசுவதற்கோ அல்லது காத்திரமான விடயங்களைக் கட்டுரைகளாக எழுதுவதற்கோ போதுமான ஆங்கில அறிவு இருக்கவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் அவற்றைச் செய்யவேண்டுமென்ற ஆசை மட்டுமே இருந்தது. அத்தகைய ஆங்கில அறிவோடுதான் நான் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிக்குச் சேர்ந்தேன். நேர்முகப் பரீட்சையில் கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதிலளிக்க முடிந்தது. ஆனால் ஊடகவியலாளராகப் பிரகாசிப்பதற்கு அந்த அறிவு போதுமானதல்ல. அறிவிப்பாளர் ஜோர்ஜ் சந்திரசேகரன் தடித்த ஆங்கில நூல்களை எப்போதுமே வைத்திருப்பார். அவர் வாசிப்பது மிகக் கடினமான விடயங்கள். சாதாரண ஆங்கில அறிவைக்கொண்டு அவற்றைப் புரிந்துகொள்ளமுடியாது.



சினிமா பற்றிய நூல்களின் முகப்பு

நான் பணிக்குச் சேர்ந்த காலத்தில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சூழலில் ஆங்கில அறிவில்லாமல் பணியாற்றுவது ஒரு தாழ்வுமனப்பான்மையைத் தோற்றுவிக்கும். எனக்குப் பிடித்தமான உலகசினிமா பற்றிய நூல்களைப் படிப்பதற்காவது ஆங்கில அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தேன். அதற்கு ஆங்கிலத்தில் நிறைய வாசிக்கவேண் டும். எனக்கு விருப்பமான சுவாரஸ்யமான விடயங்களென்றால் வாசிப்பதில் ஈடுபாட்டை ஏற்படுத்துமென்று கருதியதால் ஆங்கிலத்தில் இந்திய சினிமா பற்றிய சஞ்சிகைகளைக் கிரமமாக வாங்கத் தொடங்கினேன். இந்திய வடநாட்டு சினிமா சஞ்சிகைகளான ஃபிலிம்ஃபெயர், ஸ்ரார் அன்ட்ஸ்ரைல் என்ற இரண்டு சஞ்சிகைகள் அப்போது மிகப்பிரபலமானவையாக இருந்தன. அவற்றில் வரும் நடிகர்களின் செவ்விகள் சாதாரண உரையாடல் வடிவில் இருந்ததால் அவற்றை வாசித்துப் புரிந்துகொள்ள முடிந்தது மட்டுமல்ல, எனது சம்பாஷணைகளிலும் அவற்றைப் பிரயோகிக்கக்கூடியதாக இருந்தது. அந்த சஞ்சிகைகளை வாசிக்கும்போது முதல் வாசிப்பில் அர்த்தம் தெரியாத வார்த்தைகளுக்கு அடிக்கோடிட்டுக் குறித்துவிட்டுப் பின்னர் அவற்றுக்கான அர்த்தத்தை அகராதியில்ப் பார்த்து பக்கத்தில் எழுதிவிட்டுத் திரும்ப வாசிக்கும்போது மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடிந்தது. ஆனால் மிகுந்த நேரத்தைச் செலவிட வேண்டிய சிரமமான செயலாக இருந்தது. இருந்தாலும் ஆங்கிலத்தைக் கற்கவேண்டுமென்ற ஆர்வத்தால் அதைச் சளைக்காது செய்தேன். முயற்சி செய்ததில் நாட்கள் செல்லச் செல்ல அந்த சஞ்சிகைகளைச் சரளமாக வாசித்துப் புரிந்துகொள்ளமுடிந்தது. எனது ஆங்கில அறிவு விருத்தியடைந்துவருவதை உணர்ந்தேன். ஆங்கிலப் படங்களை முன்பு பார்க்கும்போது அதில் இடம்பெறும் சம்பவங்களை வைத்து ஓரளவு ஊகித்துக் கதையைப் புரிந்துகொண்டது போலல்லாமல் உரையாடல்களை இப்போது விளங்கிக் கொள்ள முடிந்தது. சினிமாபற்றிய ஆங்கில நூல்களை மிக ஆவலுடன் வாசிக்கத் தொடங்கினேன். ஜோர்ஜ் சந்திரசேகரன் அப்போது இரண்டு புத்தகங்களைத் தந்தார். ஒன்று, The Cinema as Art. இதை விளங்கிக்கொள்வதற்கு அப்போது எனக்குச் சிரமமாக இருந்தது. மற்றைய புத்தகம், Film Makers on Film Making. உலகின் தலைசிறந்த இயக்குநர்கள் தமது அனுபவங்களை விபரிக்கும் நூல். இது வாசிப்பதற்கு சுவாரஸ்யமானதாகவும் சற்று இலகுவானதாகவும் இருந்தது. இந்த இரண்டு புத்தகங்களுமே 1960களின் நடுப்பகுதியில் வெளியிடப்பட்டவை. இவை இப்போதும் என் கைவசம் இருக்கின்றன.

நான் கொழும்பில் தங்கியிருந்த மாமாவின் வீட்டிற்கு அரசியலில் ஈடுபாடுடையவர்கள் வந்துபோவது வழக்கம். அப்படி யாழ்ப்பாணத்திலிருந்து அடிக்கடி வந்து அங்கு தங்கிச்செல்பவர் ரஷ்ய சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் பரம் என்று அறியப்பட்ட திரு. பரமநாதன் என்பவர். அவர் எனது சினிமா ஆர்வத்தையறிந்து சோவியத் யூனியன் தூதரக மூலமாக சோவியத் ஃபில்ம் என்ற மாதாந்த சஞ்சிகை எனக்குக் கிரமமாகக் கிடைப்பதற்கு ஒழுங்குசெய்தார்.

இவ்வாறு சினிமாவிலிருந்து எனது வாசிப்பு ரைம், நியூஸ்வீக் போன்ற உலக சஞ்சிகைகளுக்கு விரிவடைந்தது. இந்த சஞ்சிகைகள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வாசிகசாலையில் கிடைத்தன. ஆங்கில வாசிப்பும் புரிதலும் எனது பார்வையையும் சிந்தனையையும் நிச்சயமாக விசாலமாக்கியது. இருந்தபோதிலும் தமிழில் நினைத்தவற்றைப் பேசமுடிவதுபோல் ஆங்கிலத்தில் பேசக்கூடிய ஆற்றல் ஏற்படவில்லை. சிறுவயதுமுதலே தமிழில் கல்விகற்றுத் தமிழ்ச் சூழலிலேயே வளர்ந்த நாம், எப்போதுமே தமிழில் சிந்தித்து அதை மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் பேசவேண்டியிருப்பதால் எமது ஆங்கிலப் பேச்சுநடை இயல்பாக இருப்பதில்லை. நான் சாதாரணமாக அன்றாட வாழ்க்கையில் ஆங்கிலத்தில் உரையாடுவதை இங்கு குறிப்பிடவில்லை. காத்திரமான விடயங்களை ஆழமாகத் தமிழில் உரையாடுவதுபோல் ஆங்கிலத்தில் உரையாட முடிவதில்லை. ஆனால் அதை அப்போது பெரிய பிரச்சினையாக நான் எடுத்துக்கொள்ளவில்லை. ஆங்கிலத்தில் எழுதப்படுவதையும் பேசப்படுவதையும் புரிந்துகொள்ளக்கூடியளவு அறிவிருந்தாலே போதுமென்று நினைத்தேன்.

எவ்வளவுக்கெவ்வளவு பிறமொழிகளைப் பயில்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு எமது அறிவும் உலகின்மீதான பார்வையும் விருத்தியடையும். எந்தமொழியைப் பேசும்போதும் அந்த மொழிக்குரிய சரியான உச்சரிப்புடன் பேசவேண்டும்.

நான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வேலைக்குச் சேர்ந்தபோது ஜேம்ஸ் மேதர் என்பவர் ஆங்கில அறிவிப்பாளராக இருந்தார். இவர் ஆங்கில தேசியசேவையில் (சேவை-1) ஆங்கில சாஸ்திரிய (classical) இசை நிகழ்ச்சிகளைச் செய்வார். ஆங்கில இசைத்தட்டுக் களஞ்சியத்தில் பெருமளவில் இருக்கும் க்ளாசிக்கல் இசைத்தட்டுகளை முறைப்படி தொகுத்து அதற்குரிய விளக்கங்களுடன் ஒலிபரப்புவார். ஆரம்பத்தில் தொழில்நுட்பப் பிரிவில் பணிக்குச் சேர்ந்து பின்னர் ஆங்கிலத்தில் அறிவிப்பு, நிகழ்ச்சித் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டவர். இவர் ஒரு தமிழர். யாழ்ப்பாணம், மானிப்பாய்ப் பகுதியில் வசித்த முக்கிய கிறிஸ்தவக் குடும்பமொன்றிலிருந்து வந்தவர் என்று பேசிக் கொள்வார்கள். அவர் ஆங்கிலத்தில் தான்

தொடர்தல் 106ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை விருத்தி...

105ம் பக்கத் தொடர்ச்சி...

எப்போதுமே உரையாடுவார். அப்போது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றியவர்களில் தனது தனித்துவமான குணத்தால் எமது கவனத்தைப் பெற்றவர். அவருடைய தனித்துவமான குணம், மேலதிகாரிகளைக் கிண்டல் செய்வது. கூட்டுத்தாபன நடைசாலைகளில் எங்கேயோ சிந்தனையைவிட்டவராக ஒரு புன்சிரிப்புடன் தனக்குள் பேசியவாறு நடந்து வருவார். எதிரே தென்படுபவர்களை நிறுத்தி, ஒரு நையாண்டிச் சிரிப்புடன் யாரேனும் ஒரு மேலதிகாரியைக் கிண்டலடித்துப் பேசுவார். சிலவேளைகளில் என்னை வழிமறித்து ஏதாவது சொன்னால் விளங்காவிட்டாலும் சிரித்துக்கொண்டே கேட்பேன். என்னுடன் மட்டுமல்ல, என்னுடன் பணிக்குச்சேர்ந்த தமிழ் இளைஞர்கள் எல்லோருடனும் இப்படி உரையாடுவார். தமிழ் இளைஞர்கள்மீது உள்ளூர ஒரு பற்று வைத்திருக்கிறாரென்பதை அவர் எம்முடன் பேசும்விதத்திலிருந்து உணர முடியும்.

ஒருநாள் ஆங்கிலசேவை -1 நிகழ்ச்சிகள் ஒலிபரப்புச் செய்யப்படும் சீ-1 கலையகத்தில் நான் பணியாற்றிக்கொண்டிருந்த போது அன்று அறிவிப்பாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்த ஜேம்ஸ் மேதர் தனது இசைத்தட்டொன்றுக்கு அறிவிப்புச் செய்துவிட்டு வழமைபோல் கலையகத்தில் நிகழ்ச்சி உதவித் தயாரிப்பாளர் பகுதிக்கு வந்து அமர்ந்து என்னுடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது மேதர் சொன்னார், ''ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்ற ஒரிடத்தில் தொழிலில் முன்னேற்றமடையவேண்டுமானால் நல்ல ஆங்கில அறிவிருக்கவேண்டும். அதிலும் ஆங்கிலத்தைப் பேசும்போது சிங்கள, தமிழ்க் கிராமியத் தொனிகளில் பேசாது, சரியான உச்சரிப்புடன் நாகரீகமான முறையில் பேசவேண்டும். என்னதான் சுதேசியம் பேசினாலும் கொலோனியல் ஆட்சியின் பெறுமானங்கள்தான் இன்னமும் இங்கே உயர்ந்த இடத்தில்வைத்து மதிக்கப்படுகின்றன.'' என்றார்.

உண்மைதான். இலங்கையில் அறுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வந்த தாய்மொழிமூலக் கல்வியின் முதல் மாணவர்கள் நாங்கள். நாங்கள் தொழில் புரியத் தொடங்கியபோது மேலதிகாரிகளாக இருந்தவர்கள் ஆங்கிலமூலம் கல்விகற்றவர்கள். தமிழரோ சிங்களவரோ ஆங்கிலத்தில்தான் உரையாடினார்கள். நிர்வாகக் கூட்டங்கள் ஆங்கிலத்தில்தான் இடம்பெற்றன. ஆங்கிலசேவையில் பணிபுரிபவர்களை மேம்பட்ட ஒலிபரப்பாளர்களாகக் கருதும் மனப்பாங்கு அங்கு நிலவியது. ஆனால் எனது காலத்திலேயே அந்தநிலை சிங்களத்திற்குச் சிறிதுசிறிதாகக் கிடைக்கத்தொடங்கியது. 1982ம் ஆண்டு ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்ட போது நிர்வாகக் கடிதங்கள் சிங்களத்தில் இருந்தபோதிலும் நிர்வாகமட்டத்தில் பெரும்பாலும் ஆங்கிலமே உபயோகிக்கப்பட்டது. நாளாந்தம் நடைபெறும் நிர்வாகக் கூட்ட அறிக்கைகள் ஆங்கிலத்திலேயே வெளிவந்தன. எனக்கு சிங்களத்தை நன்றாகப் புரிந்துகொள்ளவும் ஓரளவு சரளமாகப் பேசவும் முடியுமென்றாலும் நான் சகலருடனும் ஆங்கிலத்திலேயே உரையாடினேன். ஏனோ தெரியவில்லை, கீழ்மட்ட ஊழியர்களைத்தவிர தொழில்நுட்பவியலாளர்களுட்பட சகலரும் என்னுடன் ஆங்கிலத்திலேயே உரையாடினார்கள். அந்தநிலை இப்பொழுது முற்றாக மாறி முழுவதுமே சிங்களமயமாகியிருக்குமென்று நான் நினைக்கிறேன்.

நான் ஆங்கிலம் படிக்கவேண்டுமென்ற மேதர், ''நீங்கள் ஆங்கிலத்தைச் சரியான உச்சரிப்புடன், அதற்கான தொனியில் பேசக் கற்றுக்கொள்ளவேண்டும்'' என்றார். அதற்கு என்னசெய்யவேண்டுமென்று நான் அவரிடம் கேட்டபோது, ''கொழும்பில் ஆங்கிலத்தைச் சரியானமுறையில் பேசுவதற்குப் பயிற்றுவிக்கும் (elocution) பல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அப்படியொரு ஆசிரியரிடம் கற்றுக்கொள்ளுங்கள்'' என்று கூறியவர், அத்தோடு நின்றுவிடாமல் இரண்டுமூன்று நாட்களின் பின்னர், ஆங்கில வர்த்தகசேவையில் பகுதிநேர அறிவிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த கிறிஸ்டோஃபர் பெரேரா என்ற அறிவிப்பாளரிடம் என்னை அறிமுகம்செய்துவைத்தார்.

கிறிஸ்டோஃபர் பெரேரா ஒரு பறங்கியர். வெள்ளவத்தை அர்த்தூஸா லேனில் அறிவிப்பாளர் சந்திரமோகன் வீட்டிற்கு நேரெதிராக உள்ள வீட்டில் அப்போது வசித்தார். தனது வீட்டிலேயே ஆங்கில



சினிமா பற்றிய நூல்களின் முகப்பு

வகுப்புகளையும் நடத்தினார். அவரிடம் சென்று ஆங்கில உச்சரிப்புப் பழகும் வகுப்பில் இணைந்துகொண்டேன். நான் பள்ளிக்கூட நாட்களிலேயே ஆங்கிலப் பேச்சுப்போட்டிகளில் பங்குபற்றியதாலோ என்னவோ எனது உச்சரிப்பு அவ்வளவு மோசமானதாக இல்லையென்று கிறிஸ்டோஃபர் பெரேரா கூறி எனக்குப் படிப்பிக்கத் தொடங்கினார். பல மாதங்கள் தொடர்ந்து வகுப்புக்குச் சென்ற எனக்கு, எனது தன்னம்பிக்கை மட்டம் உயர்வதை உணரமுடிந்தது. சிலகாலம் படிப்பித்த பின்னர் கிறிஸ்டோஃபர் பெரேரா, அப்போது இலங்கையில் வசித்த பறங்கியர்கள் போலவே அவரும் குடும்பத்துடன் அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்துவிட்டார்.

ஆங்கிலத்தை ஓரளவு கற்றுக்கொண்ட பின்னர் மேலும் பல மொழிகளைக் கற்க வேண்டுமென்ற உந்துதல் ஏற்பட்டது. ஜோர்ஜ் சந்திரசேகரனுடனான உரையாடல்களின்போது கலை, இலக்கியம் செழித்துவளர்ந்த ஃப்ரெஞ்ச் மொழியைப் பற்றிச் சிலாகித்துக் கூறுவார். ஃப்ரெஞ்ச் ஓவியர்கள், கவிஞர்கள் போன்றோரது கதைகளைக் கூறுவார். குறிப்பாக, ஃப்ரெஞ்ச் சினிமா பற்றி மிகவும் சிலாகித்துக் கூறுவதால் எனக்கு அந்த மொழியைப் படிக்கவேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது. ஃப்ரெஞ்ச் தெரிந்திருந்தால் சப்ரைட்டில்களை வாசிக்கும் இடையூறின்றி ஃப்ரெஞ்ச் திரைப்படங்களை இரசிக்கலாமென்ற எண்ணமே ஃப்ரெஞ்சைப் படிப்பதற்கான பிரதான தூண்டுகோலாக இருந்தது. அப்போது கொழும்பில் நான் தங்கியிருந்த லொறிஸ் றோட்டிலுள்ள வீட்டின் அயலில் ஒரு மூதாட்டி தனது வீட்டு வாசலில் ஃப்ரெஞ்ச், இத்தாலியன், ஜேர்மன் (டொச்) மொழிகள் கற்றுக்கொடுக்கப்படுமென்ற அறிவிப்புப் பலகையை வைத்திருந்தார். அவரிடம் ஃப்ரெஞ்ச் படிக்கலாமென்று சென்றேன். ஒன்றிரண்டு கிழமைகளிலேயே அவருடைய ஃப்ரெஞ்ச் அறிவில் எனக்கு சந்தேகமேற்படவே ஃப்ரெஞ்ச் படிப்பதை நிறுத்திவிட்டேன். கனடா வந்தபின்னர் ஃப்ரெஞ்ச் கற்கும் முயற்சியில் ஈடுபட்டபோதும் எனக்கு அதற்கான பொறுமையும் ஈடுபாடும் இல்லாது போய்விடவே அதைத் தொடரவில்லை. நான் வடநாட்டு சினிமா இதழ்களைப் படித்த காலம்தொடக்கமே ஹிந்தி மொழி கற்கவேண்டுமென்ற ஆவல் இருந்தது. ஆனால் இதுவரை அதற்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

ரூபவாஹினி ஜப்பானின் நன்கொடையாக இலங்கைக்கு வழங்கப்பட்டதென்பதை நீங்கள் அறிவீர்கள். ரூபவாஹினிக் கட்டடத்தைக் கட்டித்தந்து, சகல உபகரணங்களையும் வழங்கிப் பயிற்றுவித்ததோடு மட்டுமன்றி, ஆரம்ப நாட்களில் தொழில்நுட்பத்திற்கும் நிகழ்ச்சித் தயாரிப்புக்கும் ஆலோசகர்களாக இரண்டு ஜப்பானிய விற்பந்நர்கள் ரூபவாஹினியில் பணியாற்றினார்கள். அதில் நிகழ்ச்சித் தயாரிப்பு ஆலோசகராகப் பணிபுரிந்தவர், மாலை வேளைகளில் ரூபவாஹினியில் ஜப்பானிய மொழி கற்பிக்கும் வகுப்புகளை நடத்தினார். அதற்கும் சென்ற நான் சிலநாட்கள் ஜப்பானிய மொழியைப் படித்தேன். ஆனால் தொடரமுடியவில்லை. பின்னர் திரைக்கதைப் பிரதியெழுதும் பயிற்சிக்காக ஜேர்மனி சென்றபோது அங்கு எமக்கு ஜேர்மன் மொழி கற்றுத்தரப்பட்டது. நான் தங்கியிருந்த ஹொட்டேலிலேயே மாலை வேளையில் ஓர் ஆசிரியை ஜேர்மன் மொழி கற்பித்தார். மிகவும் கண்டிப்பானவர். நாம் எமது பாடநெறிக்கமைய ஜேர்மனி முழுவதும் பிரயாணம் செய்தபோது, செல்லுமிடங்களில் காண்பவற்றைப்பற்றி சிறுகுறிப்புகளை ஜேர்மன் மொழியிலே தபாலட்டையில் எழுதியனுப்ப வேண்டுமென்று பணித்திருந்தார். அதன்படியே செய்தோம். பின்னர் ஜேர்மனியைவிட்டுப் புறப்பட்டபின்னர் ஜேர்மன் மொழி படிப்பதும் தடைப்பட்டுவிட்டது.

நான் எனது அறிவையும் திறமையையும் விருத்திசெய்து ஒரு பூரணமான ஊடகவியலாளனாக மிளிரவேண்டுமென்று விரும்பினாலும், எனது தொழிலுக்கு வேண்டிய மிக அத்தியாவசியமான செயற்பாடுகளில் நான் காட்டும் அக்கறையும் தீவிரமும் மற்றைய எனது விருப்பங்களை நிறைவேற்றுவதில் காட்டவில்லை. பல மொழிகளைக் கற்பதற்கு எடுத்த முயற்சிகள் இடைநடுவில் கைவிடப்பட்டமைக்கு அதுவே காரணம். அதைப்போலவே நான் தீவிர விருப்பம்கொண்டிருந்த மற்றுமொரு துறை இசை. எவ்வளவுக் கெவ்வளவு இசையை ஆழமாக விரும்பி இரசித்தேனோ அந்தத் தீவிர இரசனைக்கு ஈடாக அதைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற முயற்சியில் தீவிரம் காட்டவில்லை. சிறுவயதில் இசையைக் கற்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் இசையை இரசிக்கின்ற ஒரு சூழலில் வளர்ந்த காரணத்தால் இசையின் மீது ஆழமான பற்றும் அந்தப் பற்றின் காரணமாக இசையைக் கற்கவேண்டுமென்ற ஆவலும் அவ்வப்போது தோன்றுவதுண்டு. ரூபவாஹினியில் பணியாற்றியபோது இசையமைப்பாளர் செல்வராஜா மாஸ்டர் தனது ஹார்மோனியப் பெட்டியையே எனது வீட்டில் கொண்டுவந்து வைத்து அதை எவ்வாறு பயில்வதென்பது பற்றிச் சில நாட்கள் சொல்லித்தந்தார். ஆனால் அது தொடரவில்லை. அதேபோல் வடஇந்திய சங்கீதத்தில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்த நான் ரவிஷங்கரின் சித்தார் இசையில் மயங்கியிருந்தேன். சித்தாரை இசைப்பதற்குக் கற்கவேண்டுமென்று கொழும்பில் சித்தார்வாத்தியக் கலைஞரான ஒரு தமிழரிடம் சிலநாட்கள் சென்று, அதையும் தொடரவில்லை. பின்னர் கனடா வந்து எனது வாழ்வுக்கான உழைப்பில் ஓயாது உழன்றுவிட்டு அண்மையில் பியானோ கற்பதற்காக ஒரு ஆசிரியையிடம் சில மாதங்கள் கிரமமாகச் சென்றேன். தொடரவில்லை. ஆசை இருக்கும் அளவுக்குப் பொறுமை இல்லாமையே இதற்குக் காரணம் எனலாம். பியானோவில் கையை வைத்தவுடனேயே இசை பிரவாகிக்க வேண்டுமென்பது எனது எதிர்பார்ப்பு. ஆனால் நடைமுறை அப்படி இல்லையென்பதும் இசையைக் கற்பதற்குப் பொறுமையும் நீண்டகாலப் பயிற்சியும் அவசியமென்பதும் அதைக் கற்பதின்மீதுள்ள ஆர்வத்தை மழுங்கடித்துவிடுகின்றன.

நான் ஊடகத்துறையில் பிரவேசித்து ஐம்பது ஆண்டுகளை நெருங்கிக்கொண்டிருக்கும் இந்த நீண்டகாலப்பகுதியில், பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதும், தொழில்ரீதியாக நான் ஏற்றுக்கொண்ட பணியினை மிகவும் நேர்த்தியாகச் செய்திருக்கிறேன் என்ற எண்ணம் எனக்கிருக்கிறது. ஆனால் எனது ஆசை காரணமாக மேற்கொண்ட எந்த முயற்சிகளையும் சரிவரச்செய்ததில்லை. ஆங்கிலத்தைக் கற்பதில் மாத்திரம் தீவிரம் காட்டியிருக்கிறேன். ஏனெனில், அது எனது தொழில்வாழ்க்கைக்கு மிகமிக அவசியமானதென்று நான் கருதியதால். அதிலும் நான் ஆசைப்படுவது போல ஆழமான விடயங்களை சரளமாகப் பேசுவதற்குரிய ஆற்றல் கைவரப்பெறவில்லையென்றாலும் எனது ஆங்கில அறிவைக்கொண்டு மிக முக்கியமான இரண்டு விடயங்களை நிறைவேற்றியிருக்கிறேன். ஒன்று, உலகப் புகழ்பெற்ற அபத்த நாடகமான இயூஜின் அயனஸ்கோவின் 'த செயர்ஸ்' என்ற நாடகத்தை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து மேடையேற்றியமை. அதுபோல் உலகப் பிரசித்திபெற்ற நாடக எழுத்தாளர் ஹென்றிக் இப்ஸனின் 'ஏ டோல்ஸ் ஹவுஸ்' என்ற நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து மேடையேற்றியமை. இந்த இரண்டு மொழிபெயர்ப்புகளும் சிறந்த முறையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன என்று எல்லோரும் பாராட்டும்பொழுது, நான் ஆங்கிலம் கற்றதில் ஓரளவு தேர்ச்சியடைந்திருக்கிறேன் என்ற மன ஆறுதல் ஏற்படுகிறது.

தொடரும்....



wikneswaran.p@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர்கால இலக்கியம்: கம்பராமாயணம்

- நா. சுப்பிரமணியன் -

இத்தொடரிலே முன்னைய கட்டுரையில் கம்பராமாயணம் பற்றிய அறிமுக நிலையிலான முக்கிய குறிப்புகள் பதிவாகின. அவ்வாக்கம் வைணவ மரபில் மட்டுமன்றி பொதுவான இலக்கியச் சூழலிலும் தன்னை ஒரு 'நிகரற்ற இலக்கிய சிகர'மாக நிருபித்து வந்துளது - நிருபித்து வருகிறது என்பது அங்கு சுட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து இங்கு கம்பரது 'படைப்பாளுமை' நமது கவனத்துக்கு வருகின்றது.

கம்பரின் படைப்பளுமை:

காவிய வகைசார்ந்த பேரிலக்கியப் படைப்புகளில் ஈடுபடும் ஒருவருக்கு இயல்பாகவே அமைந்திருக்கவேண்டிய 'படைப்பாளுமை' என்பது இரண்டு முக்கிய அம்சங்களைக் கொண்டதாகும். முதலாவது அம்சம் அவருடைய நோக்குநிலை ஆகும். 'இந்த உலகத்தையும் சமூகத்தையும் அவர் எவ்வாறு புரிந்துகொண்டுள்ளார்?' என்பதும், 'அப்புரிதலின் தளத்தில்

இலக்கியத் திறனாய்வியலின் இயங்குநிலை: 65

நின்றவாறு அவர் யாருக்கு, எதனை, எவ்வகையில் உணர்த்த விழைகிறார்?' என்பதுமான அவருடைய சிந்தனைகளின் தெளிவே இங்கு படைப்பாளியின் நோக்குநிலை எனப்பட்டது.

படைப்பாளுமையின் இரண்டாவது அம்சமானது அவருடைய எடுத்துரைப்பு நிலையிலான ஆற்றல்கள் சார்ந்ததாகும். குறிப்பாக, உணர்த்த விழைந்தவற்றை வெளிப்படுத்துவதற்காக அவர் மேற்கொள்ளும் உத்திமுறைகள் மற்றும் மொழிநடை ஆகியனவே இங்கு எடுத்துரைப்பு நிலை சார் ஆற்றல்கள் எனப்படுகின்றன. மேற்படி இரு அம்சங்களும் கம்பரிடம் நிறைவாகவே அமைந்திருந்தன என்பதையே அவரது பெருங்காவியம் நமக்குத் தெளிவாக உணர்த்திநிற்கிறது.

வடமொழியிலமைந்த வால்மீகியின் கதையம்சத்தையே தமது காவியப்பொருளாக அவர் தேர்ந்துகொண்டார் என்பதறிவோம். அவ்வகையில் கதையம்சத்தில் புதுமையில்லை. மேலும் அது இன்னொரு பண்பாட்டுத்தளத்தின் - சம்ஸ்கிருத பண்பாட்டுத்தளத்தின் உருவாக்கமுமாகும். ஆனால் கம்பர் அதனைத் தமிழில் இட்டுவந்துள்ள வகையில் அது, 'புதுமையானதாகவும் தமிழரது பண்பாட்டின் ஊடாக உருவு பெற்றதாகவும்கூடத் தன்னை அடையாளங் காட்டிநிற்ப'தாகும். இது, கம்பருடைய நோக்குநிலையின் தெளிவை அடையாளங்காட்டுவது. இத்தொடர்பில் சில மேலதிக விளக்கங்களை இங்கு முன்வைப்பது அவசியமாகிறது.

வால்மீகியின் கதையானது 'ஒரு இலட்சிய மனிதனை - புருஷோத்தமனை - முன்னிறுத்தியது' என்பதையும் அந்நிலையில் அது 'இந்திய மரபுசார்ந்த ஒரு இலட்சிய வாழ்வியலை காட்சிப்படுத்தியது' என்பதையும் முன்னைய கட்டுரையில் நோக்கியுள்ளோம். 'வட இந்திய மண்ணிலே பேரரசுகள் உருவாகிவந்த சூழலிலே அரசுரிமை குறித்த சிக்கல் எழுந்த வரலாற்றுக்கட்டங்களிலே இயற்கையோடொட்டியதும் மனித நேயப் பண்புகள் மிக்கதுமான பண்பாட்டுணர்வை வால்மீகி கட்டமைத்துக்காட்ட விழைந்தார்' என்பதே அவருடைய படைப்பாக்கம் நமக்கு உணர்த்தும் செய்தியாகும்.

ஆனால் கம்பருடைய காவியக் கதையானது வால்மீகியின் மேற்படி அடிப்படை அம்சங்களைத் தழுவியதோடு மட்டும் நில்லாது தன்னை மேலும் ஆழப்படுத்தியும் அகலப்படுத்தயும் அமைத்துக் கொண்டதாகும். 'ஆழ-அகலப்படுத்தல்கள்' என்ற வகையில் ஒரு குறிப்பு:

அது, 'அவதாரபுருஷனின் கதை'யாக - அதாவது 'இராமனைத் திருமாலின் அவதாரமாகக் காட்சிப்படுத்துவதாக'ப் புதிய பரிமாணத்தை எய்தியதென்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அத்துடன் மட்டுமன்றி அதற்கு மேலான ஒரு பரிமாணமும் கம்பருடைய காவியக் கதைக்கு உளது. அது, 'சராசரி மாந்தரின் 'குடும்ப - சமூக'நிலைகளிலான நடைமுறை வாழ்க்கையில் எழும் சிக்கல்கள் பலவற்றுக்கும் தீர்வுகாட்டும் வகையிலான அதன் எடுத்துரைப்புமுறை' ஆகும்.

அதாவது, கம்பரின் காவியமானது இராமன் என்ற 'அவதாரபுருஷ'னின் வாழ்வியல் அனுபவங்களைப் பேசுவதாக மட்டும் கட்டமைக்கப்பட்டதன்று. மாறாக, 'வாசிக்கும் ஒவ்வொருவரும் தம்முடைய சூழலுடனும் தத்தமது நிலைப்பாடுகளுடனும் அக்காவிய நிகழ்வுகளைப் பொருத்திப் பார்க்கத்தக்கவகையிலும்' அது கட்டமைதிபெற்றுள்ளது என்பதே அக்காவியம் தொடர்பாக இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டிய முக்கிய செய்தியாகும்.

மேலும் விளக்கமாகக் கூறுவதானால், கம்பரது காவியத்தில் இராமன் மற்றும் சீதை ஆகிய தலைமைக் கதைமாந்தர்கள் மட்டுமே முக்கியமானவர்களல்ல. தசரதன், கோசலை, கைகேயி, சுமித்ரை பரதன், இலக்குமணன், சத்ருக்னன் ஆகிய குடும்ப உறுப்பினர்கள் மாத்திரமன்றி, குகன், அனுமன், சுக்ரீவன், வீடணன் ஆகிய துணை மாந்தரும் சூர்ப்பணகை, வாலி, இராவணன, கும்பகருணன் ஆகிய எதிர்நிலை மாந்தருங்கூட முக்கியமான வர்களேயாவர். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கான 'விருப்பு வெறுப்பு'களையும் தர்ம - நியாயங்களையும் கொண்டிருந்தனர் என்பதையுங்கூட கம்பர் தெளிவாகவே அடையாளங்காட்டுகிறார். அவர்களுட் சிலர் தத்தம் 'தர்ம-நியாய'ங்களின் எல்லைகளையுங்கூட அறிந்தவர்களாகத் திகழ்ந்தனர் என்பதையும் கம்பரின் சித்திரிப்புகளின் ஊடாகக் கண்டுணர முடிகின்றது. இவ்வகையில் கம்பகாவியமானது சமூகத்தின் பலநிலை மாந்தரையும் அவ்வவர்களுக்குரிய இயல்பான குணாம்சங்களுடன் நாம் தரிசிப்பதற்கு வாய்ப்பளிக்கும் ஒரு 'கதையரங்க'மாக - இன்றைய மொழியில் கூறுவதானால் ஒரு 'நாடகவெளியாக'வும் அமைந்தமை வெளிப் படை. இக்கதைமாந்தருள் எவரையும் கம்பர் ஆசிரியருக்குரிய தமது அதிகாரநிலையில் நின்று இயக்க முற்படவில்லை. அவர்களை அவர்களுடைய சமூகத்தளநிலைகள்சார் குணாம்சங்களுடன் சுயமாகவே இயங்கவைக்கிறார்.

இவ்வாறான செயற்பாட்டால் காவியக் கதையின் முக்கிய கட்டங்கள் மற்றும் திருப்புமுனைகள் ஆகியன நாடகக் காட்சிப்படிமங்களாக நம்மனக்கண்ணில் விரிகின்றன. இதனால் மேற்படி கதை மாந்தரின் பொதுவான உணர்வு நிலைகளுடன் மட்டுமன்றி உணர்ச்சிக் கொந்தளிப்புகளுடனுங்கூட எம்மால் ஒன்றிப்போக முடிகின்றது. மேலும், அம்மாந்தர்கள் ஒருவரோடொருவர் முரண்பட்டு விவாதங்கள் மேற்கொள்ளும் இடங்களில் எமது சிந்தனைகள் கூர்மை எய்துகின்றன என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். இவ்வகையில் குறிப்பாக 'வாலி - இராமன் விவாதம்' மற்றும் 'கும்பகருணன் - வீடணன் விவாதம்' ஆகிய கட்டங்கள் குறிப்பிடத்தக்கன.

> "வால்மீகியின் ஆதிகாவியத்திலே வில்லை வளைத்த வீரன் என்ற தகைமையே இராமனைச் சீதை மணாளனாக்கியது. அங்கே சீதைக்கு எவ்வித தேர்வுச் சுதந்திரமும் சுட்டப்படவில்லை. இராமன் தவிர வேற யார் வில்லை வளைத்திருந்தாலும் கூட அவள் மாலையிட்டிருக்க வேண்டியவளேயாம். வீரத்துக்கு முன் அவள் ஒரு 'பணயப்பொருள்' மட்டுமே. வால்மீகியின் சித்திரிப்பு நமக்கு உணர்த்திய செய்தி இது தான்."

மேற்சுட்டியவாறான கதைமாந்தர்களின் குணாம்ச சித்திரிப்புகளுக்கான அடிப்படைகள் பலவும் வால்மீகியின் ஆதி காவியத்தில் நுண்ணிய வகைகளில் அமைந்திருந்தன என்பதை நாம் இங்கு முதலில் நினைவில் இருத்திக்கொள்வது அவசியம். அவ்வாறான அந்நுண்ணிய அம்சங்களுக்கு நடைமுறை வாழ்வியல் அநுபவங்களுடனானவையும் உளவியலடிப்படைகள் கொண்டவையுமான இயங்குநிலைப் பரிமாணங்களைத் தரத்தக்க வகைகளில் கம்பருடைய சிந்தனையாற்றலும் எடுத்துரைப்புத்திறனும் அமைந்திருந்தன என்பதே கம்பருடைய படைப்பாளுமை அம்சங்கள் தொடர்பாக இங்கு நாம் கருத்தில் இருத்திக் கொள்ளவேண்டிய விடயமாகும்.

கதைமாந்தரின் குணாம்சங்களுக்கு மேலதிக பரிமாணங்களைத் தரவிரும்பியவிடத்து, கம்பர் வால்மீகியாற் சுட்டப்படாத சில மேலதிக நிகழ்வுகளையும் கதைப் பகுதிகளையுங்கூடத் தற்துணிபுடன் புதியனவாகப் பொருட்பொருத்தமுற இணைத்துக்கொண்டு காவியத்தை வளர்த்துச் செல்கிறார். குறிப்பாக வீடணனின் குணாம்சசித்திரிப்புப் பகுதிகளில் இதனைச் சிறப்பாக நோக்கமுடிகிறது. யுத்தகாண்டத்தில் வீடணனின் கூற்றாக அமைந்த இரணியன் வதைப்படலம் என்ற பகுதியும் கும்பகருணன் வதைப்படலத்தின் முற்பகுதியில் இடம்பெறும் 'வீடணன்- கும்பகருணன் விவாத'ப் பகுதியும் இவ்வாறு புதிய இணைப்புகளாக அமைந்தவையோம். (இவை பற்றிப் பின்னர் விரிவாக நோக்கவுள்ளோம்.)

கம்பரின் மேற்படி ஆளுமையம்சங்கள் அவருடைய படைப்பிலே புலப்பட்டு நிற்கும் முறைமை தொடர்பான விளக்கங்கள் தமிழ் இலக்கியச் சூழலிலே மிக விரிவான தளத்தில் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்துள்ளன. பல்வேறு தலைப்புகளில் பட்டிமன்ற நிலைகளிலான விவாதங்களும் நடந்துள்ளன - நடந்துவருகின்றன. இவை தொடர்பில் நானும் பல ஆண்டுகளாகப் பேசியும் எழுதியும் வந்துள்ளேன். இவ்வாறான உரைகள் மற்றும் எழுத்துகளின் உள்ளீடுகளாக அமைந்தவற்றுள் முக்கியமான சிலவற்றை மட்டுமாவது இங்கு சுருக்கமாகவேனும் சுட்டவேண்டியது அவசியமாகிறது.

இவ்வகையில் முதலில் குறிப்பிட வேண்டிய விடயம் அவ்வாக்கம்(கம்பராமாயணம்) தமிழ்ச் சூழலுக்கு மிக நெருக்கமானதாக அமைந்தமை' பற்றியதாகும். இரண்டாவதாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது அவ்வாக்கத்தின் எடுத்துரைப்பு முறைமையிலே கம்பர் மேற்கொண்டதான 'நாடகப் பண்பு சார்ந்த சித்திரிப்புமுறையின் சிறப்பு' ஆகும். இவ்விரண்டையும் தவிர அவ்வாக்கம் தொடர்பாக இங்கு கவனத்துள் கொள்ளப்பட வேண்டியவை அதில் பயின்றுள்ள கற்பனைத்திறன் மற்றும் மொழியாளுமை முதலியனவாகும். இவற்றை வரிசைப்படி நோக்குவோம்.

தமிழ்ச் சூழலுக்கு மிக நெருக்கமாக அமைந்தமை:

இத்தொடர்பிலே இரண்டு விடயங்கள் இங்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையனவாகும். ஒன்று, கம்பர் தமிழின் பண்டைய இலக்கிய மரபின் மீது - குறிப்பாக, அதன் அடிப்படையம்சமான 'திணைமரபு' மீது - புலப்படுத்திநின்ற பேரீடுபாடு ஆகும். இரண்டாவது விடயம் கம்பரது இவ்வாக்கமானது தமிழகத்தில் கி.பி. ஆறாம் நூற்றாண்டையடுத்து உருவான வைணவபக்திப் பேரியக்கத்தின் - தொடர்நிலையிலான ஒரு இலக்கியச் செயற்பாடாகவே நமது காட்சிக்கு வருகிறது என்பதாகும். இவ்விரு விடயங்கள் தொடர்பான சில விளக்கங்களை இங்கு பதிவுசெய்வது அவசியமாகிறது.

தமிழரின் பண்டைய திணை மரபானது அகம் மற்றும் புறம் என்ற இரு பகுதிகளைக் கொண்ட தென்பதும் அவை முறையே, 'ஆண் - பெண் ஆகிய இரு பாலாரின் காதல்சார் உணர்வம்சங்கள்' மற்றும் 'புறநிலையிலான சமூக வாழ்வியல்சார் உணர்வம்சங்கள்' ஆகியவற்றை அடையாளப்படுத்தி நிற்பன என்பதும் நாம் முன்னரே அறிந்த செய்திகளோம். மேற்படி அகமரபிலே மையப்பகுதியாக அமைந்த சிறப்புப் பகுதியான 'அன்பின் ஐந்திணை' என்பது பருவ வயதுடைய ஆண்-பெண் ஆகிய இருபாலாரும் ஒருவரையொருவர் விரும்பி இணைந்து கொள்வதான காதல்சார் வாழ்வியலுக்கு முக்கியத்துவமளிப்பதாகும். தூய காதலொழுக்கம் எனச் சிறப்பித்துப் பேசப்படுவதான இந்த 'அன்பின் ஐந்திணை' மரபைப் பொதுவாக 'ஐந்திணை' என்று மட்டும் சுருக்கமாகச் சுட்டும் மரபும் உளது.

இவ்வாறான அகத்திணைமரபுக்கான தொன்மையான பாடற்சான்றுகளும் விளக்கங்களும் முறையே சங்க இலக்கியங்கள் மற்றும் தொல்லிலக்கண நூலான தொல்காப்பியம் முதலியவற்றில் உள்ளன என்பதை முன்னரே பலமுறை நோக்கியுள்

தொடர்தல் 110ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர்கால இலக்கியம்...

109ம் பக்கத் தொடர்ச்சி...

ளோம். இவ்வாறான அகத்திணை மர பைக் கம்பர் நன்கறிந்திருந்தார் என்ப தோடு அதனைக் கதையம்சத்திலும் உரி யவாறு பயன்படுத்திக்கொண்டுள்ளார் என்பதே இங்கு பதிவுபெறவேண்டிய முக் கிய செய்தியாகும். கம்பர் அதனை அறிந் திருந்தார் என்பதற்கான முக்கிய சான்றா கத்திகழும் பாடல் வருமாறு:.

புவியினுக்கு அணியாய் ஆன்ற
- பொருள்தந்து புலத்திற்றாகி
அவி அகத்துறைகள் தாங்கி
- ஐந்திணை நெறி அளாவி
சவி உறத்தெளிந்து தண்ணென்
- ஒழுக்கமுந் தழுவிச்சான்றோர்
கவி எனக் கிடந்த
- கோதாவரியினை வீரர் கண்டார்.

- கம்பராமாயணம்: 2732

ஆரண்யகாண்டத்திலே கவிக்கூற்றாக இடம்பெறும் இப்பாடல் கோதாவரி நதிச் சூழலை வருணிப்பதாக அமைந்ததாகும். கோதாவரி நதியானது சான்றோர் கவி போல அழகும் பயன்பாடுமுடையதாகத் திகழ்கிறது' என்பது இப்பாடலின் தெளி-பொருள். இதிலே 'ஐந்திணை நெறி' எனவும் சான்றோர் கவி எனவும் அமைந்த தொடர்களே இங்கு நமது முக்கிய கவ னத்துக்குரியவை. இவற்றுள் சான்றோர் கவி என்ற தொடர் முதற் கவனத்துக்குரி யது. இத்தொடரானது சங்கப் பாடல்க ளைச் சுட்டிநிற்பதாகும். சங்கப் புலவர்க ளைச் சான்றோர் என வழங்குவது தமிழ் மரபு என்பதை இங்கு நாம் நினைவிற் கொள்ள வேண்டும். கம்பர் அம்மரபைத் தானும் அறிந்து மதித்துப் போற்றிநின்ற வர் என்பதை இப்பாடல் தெளிவாகவே உணர்த்திநிற்கிறது.

'ஐந்திணை நெறி' என்ற தொடர் இரு பொருள் தருவது. அவற்றுளொன்று பண் டைய அகத்திணை மரபின் முக்கிய கூறான, 'அன்பின் ஐந்திணை மரபு' ஆகும். சங்கச் சான்றோர் கவிதைகளில் ஒருசாரானவை இம்மரபுசார் வெளிப்பாடு களாகும். ஐந்திணை என்ற தொடரின் இன்னொரு பொருள் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐவகை நிலப்குதிகள் ஆகும். மேற்சுட்டிய கோதா வரியாறானது மேற்சுட்டிய நிலப்பகுதி-களைத் தழுவிச்செல்வது என்பது இங்கு உணர்த்தப்பட்ட பொருளாகும். 'சங்கப் பாடல்கள் ஐந்திணை உணர்வம்சங்க ளைத் தழுவி அமைந்தது போல இந்த நதியும் ஐவகை நிலங்களைத் தழுவிச் செல்கிறது' என்பதே இப்பாடலில் சிலேடை என்ற உத்திமூலம் இங்கு உணர்த்தப் பட்டுள்ள செய்தியாகும். கம்பர் பண் டைத்தமிழ் இலக்கிய மரபின் சிறப்பை எந்த அளவுக்கு உணர்ந்திருந்தார் என் பதற்கான ஒரு சான்றாகவே மேற்படி பாடல் இங்கு நோக்கப்பட்டது.

இவ்வாறு பண்டைய அகத்திணை மரபின் சிறப்பை உணர்ந்திருந்த அவர், தமது காவியக் கதையம்சத்திலும்கூட அதனைச் சிறப்பாக உள்வாங்கிக் கொண்டுள்ளார் என்பதே இங்கு நாம் கவனத்துள் கொள்ள வேண்டிய சிறப்புச் செய்தியாகும். இரா மனுக்கும் சீதைக்குமான கணவன் மனைவி உறவை, "காதல் சார் இணைப்பாக' அவர் காட்சிப்படுத்தியுள்ளார் என்பதே அச்சிறப்புச் செய்தி.

வால்மீகியின் ஆதிகாவியத்திலே வில் லைவளைத்த வீரன் என்ற தகைமையே இராமனைச் சீதை மணாளனாக்கியது. அங்கே சீதைக்கு எவ்வித தேர்வுச் சுதந் திரமும் சுட்டப்படவில்லை. இராமன் தவிர வேற யார் வில்லை வளைத்திருந்தாலும் கூட அவள் மாலையிட்டிருக்க வேண்டிய வளேயாம். வீரத்துக்கு முன் அவள் ஒரு 'பணயப் பொருள்' மட்டுமே. வால்மீகி யின் சித்திரிப்பு நமக்கு உணர்த்திய செய்தி இது தான்.

ஆனால், கம்பரின் சித்திரிப்பு முற்றிலும் வேறுவிதமானது. அவர், வில்வளைத்தல் என்ற நிகழ்வுக்கு முன்பாகவே இராமனும் சீதையும் ஒருவரையொருவர் காண்பதும் காதல்கொள்வதுமான ஒரு காட்சியைக் கதையோட்டத்திலே அமைத்துக்கொண்டு விடுகிறார். 'பாலகாண்ட'த்தில் அமைந்த மிதிலைக் காட்சிப் படலம் என்ற கதைப் பகுதியில் இக்காதல் முகிழ்ப்பு காட்சிப் படுத்தப்படுகிறது. விஸ்வாமித்ர முனிவ ருடனும் தம்பியான இலக்குவனோடும் மிதிலை நகருக்கு வந்த இராமன் அந் நகரின் அரண்மனையின் கன்னி மாடத் திலே நின்ற சீதையைக் காண்பதாகவும் அச்சந்தர்ப்பத்திலே இருவருடைய கண்க ளும் இணைந்த நிலையில் காதல் முகிழ்த் ததாகவும் இக்காட்சிப் படுத்தல் அமைந் துளது.

எண்ணரு நலத்தினாள் இனையள்
- நின்றுளி
கண்ணொடு கண்ணிணை கவ்வி
- ஒன்றையொன்று
உண்ணவும் நிறைபெறாது உணர்வும்
- ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும்
- நோக்கினாள்

பருகிய நோக்கு எனும் பாசத்தால்
- பிணித்து
ஒருவரை ஒருவர் தம் உள்ளம்
- ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண்
- நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம்
- எய்தினார்

- கம்பராமாயணம்: 514,516

என வரும்பாடல்களின் ஊடாக இக்காட் சிப்படுத்தல் விரிகிறது. 'பார்வைகளின் ஊடாக இதயங்கள் பரிமாறிக்கொள்ளப் பட்டன' என்கிறார் கம்பர். இவ்வாறான சித்திரிப்பானது தமிழரின் தூய காதலொ முக்கம் எனப்படும் ஐந்திணைமரபுக்குக் கம்பர் அளித்துள்ள மாபெரும் கௌரவ மாகவே கொள்ளப்பட வேண்டியதாகும்.

அடுத்து, 'வைணவ பக்திப் பேரியக்க'த் தின் - தொடர்நிலையிலான இலக்கியச் செயற்பாடாகவே கம்பராமாயணம் உரு வானது என்பது தொடர்பான ஒரு குறிப்பு வருமாறு:

தமிழகத்தில் இராமாயணம், மஹாபாரதம் ஆகிய இதிஹாஸங்களின் கதையம்சங் கள் சங்க இலக்கியகாலத்திலேயே அறி யப்பட்டிருந்தன என்பது பொதுவாக அறி யப்பட்ட செய்தியேயாகும். கம்பராமாய ணம் எழுவதற்கு முன்பே தமிழில் ஆசிரி யப்பாவிலும் வெண்பாவிலும் அமைந்த சில இராமாயண நூல்கள் எழுந்திருந்தன வென பேராசிரியர் மு. ராகவையங்கார் சுட்டியுள்ளார். (நூல்: ஆராய்ச்சித் தொகுதி-1938 ப.19) மேற்படி இராமாயண ஆக் கங்கள் முழுநிலையில் கிடைக்கவில்லை என்பது இங்கு பதிவுபெறவேண்டிய வர லாற்றுக் குறிப்பாகும். இங்கு நாம் கம் பராமாயணத்தை அது எழுந்த வரலாற் றுப் பின்புலத்தை மையப்படுத்தி நோக்க முற்படும்போது அது கி.பி. ஆறாம் நூற் றாண்டையடுத்து உருவான மேற்படி வைணவ பக்தியியக்கத்துடன் தொடர்பு டைய ஒன்றாகத் திகழ்வது தெளிவாகவே தெரிகிறது. அது பற்றிய ஒரு சுருக்கக் குறிப்பே இங்கு முன்வைக்கப்படவுள்ளது.

மேற்படி வைணவ பக்தி இயக்க காலத் திலே திருமாலின் அவதார நிகழ்வுகளில் - குறிப்பாக, கிருஷ்ணன், இராமன் ஆகிய இரு அவதார நிலைகளின் இயங்குநிலை கள் பற்றிய கதையம்சங்களில் ஆழ்வார் கள் ஈடுபட்டுத் திளைத்தனர் என்பதை முன்னரே(47வது கட்டுரையில்) நோக்கி யுள்ளோம். குறிப்பாக, இராமன் பற்றிய கதையம்சங்களில் உளம் பறிகொடுத்த வர்களாக குலசேகராழ்வார் மற்றும் திரு மங்கையாழ்வார் ஆகியோர் திகழ்ந்துள் ளனர் என்பதையும் அங்கு நோக்கியுள் ளோம். இவ்வகையில் 'மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!' எனத் தொடங்கும் குலசேகரரின் தாலாட் டுப்பாடல் அங்கு எடுத்துக்காட்டப்பட்டது. இங்கு அவ்வாழ்வாரின் புலம்பல் வகை யிலமைந்த பாடலொன்று வருமாறு:

கொல்லணைவேல் வரிநெடுங்கண்
- கௌசலைதன்
குலமதலாய் குனிவில் லேந்தும்
மல்லணைந்த வரைத்தோளா
- வல்வினையேன்
மனமுருக்கும் வகையே கற்றாய்
மெல்லணைமேல் முன்துயின்றாய்
- இன்றினிப்போய்
வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக்
- கற்றனையோ?
காகுத்தா கரிய கோவே.

- திவ்யபிரபந்தம்: 732

இப்பாடல் இராமன் அரசுரிமையைத் தம்பி பரதனுக்களித்து வனம் சென்ற சந்தர்ப் பத்தில் அவனது தந்தையான தசரதர் எய்திய 'புத்திரசோக'த்தின் வெளிப்பா டாக அமைந்ததாகும். இதிலே குலசேக ராழ்வார் தம்மைத் தசரதராகக் கற்பித்து நின்று பாடுகிறார்.

இவ்வகைப் பாடற் பகுதிகள் தொடர்பாக இங்கு குறிப்பிடப்படவேண்டிய சிறப்பம் சம், அவை 'இராமனது பிறப்புமுதல் இராவண வதம்' வரையான பல்வேறு நிகழ்வுகள்சார் கதையம்சங்களையும் தொகுத்துரைக்க முற்பட்டுள்ளன என்ப தாகும். அதாவது அவ்வப்பாடற் பகுதிக-ளின் அனைத்துப் பாடல்களிலும் (11பாடல் கள்) மேற்படி கதையம்சங்கள் இடம்பெற் றுள்ளமையை நோக்கமுடிகிறது. அவ்வ கையில் அப்பாடற் பகுதிகள் 'இராமா யணச் சுருக்க'ங்களாக - அதாவது 'குட்டி ராமாயணங்களாக'த் திகழ்வன.

இவ்வாறான பகுதிகளை நோக்கும் போது, ஆழ்வார்கள் வாழ்ந்த சூழல்களிலே இரா மாயண நிகழ்வுகள் நன்கறியப்பட்டிருந் தன என்பதை மட்டுமன்றி அவற்றைச் சுவைபட உணர்வுபூர்வமாக வெளிப்படுத் தும் கவித்துவமும் சிறப்பான வளர்ச்சியை எய்தியிருந்ததென்பதையும்கூட உணரமு-டியும். அவ்வகையில், 'பின்னாளில் கம் பர் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாடல் களில் இராமாயண காவியத்தைப் பாடு வதற்கான மூலவித்துக்களாக' ஆழ்வார்க ளின் மேற்படி 'குட்டிராமாயண'ப் பாடற் பகுதிகளை நாம் கருத இடமுளது. இதனை உறுதிசெய்யத்தக்க வகையிலான சான்றுகளை இவ்விடத்தில் சுட்டுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகி-றேன்.

இவற்றுள் முதலாவது குறிப்பு, 'ஆழ்வார் களின் பாடல்கள் தொகுத்துப் பேணப்பட்ட வரலாறு' மற்றும் 'அவற்றைக் கம்பன் கற்றுச் சுவைப்பதற்கு அமைந்திருந்த வாய்ப்பு' ஆகியன பற்றியதாகும். கி.பி. 600-900 காலப்பகுதியிலெழுந்த ஆழ்வார் களின் பாடல்கள் பின்னாளில் (10ம் நூற் றாண்டிலே) நாதமுனி (கி.பி. 915-977) என்ற பெரியாரால் தொகுத்துப் பேணப் பட்டன. இந்நிகழ்வையடுத்து, 'அவற்றைப் பொருள் விரித்துரைத்தல்', 'அவற்றின் உணர்வம்சங்களையும் தத்துவார்த்தங்க ளையும் நயத்தல்' மற்றும் 'வழிபாடுகளில் அப்பாடல்களைப் பயன்படுத்துதல்' ஆகிய செயற்பாடுகள் தொடங்கித் தொடர்ந்தன.

மேற்படி செயற்பாடுகளை மேற்கொண்ட வர்கள் 'ஆசாரியர்கள்' எனவும் 'குருபரம் பரையினர்' எனவும் வழங்கப்படலானர். இவ்வாசாரியாரர்களுள் பேரறிஞர் என்ற சிறப்புடன் திகழ்ந்தவர் கி.பி.11-12ம் நூற் றாண்டுகளில் வாழ்ந்தவராக அறியப்படும் இராமானுசர் ஆவார். வைணவத்தின் முக்கிய தத்துவப் பிரிவான 'விசிட்டாத் வைத'த்தின் முதன்மை விளக்கவுரைகார-ராகத் திகழ்ந்தவரான இவர் ஆழ்வார்க ளின் பாடல்களைப் பரந்த அளவில் வைணவ சமூகத்தில் இட்டுச் சென்றவரா கவும் அறியப்படுகிறார்.

இராமாயணம் பாடிய கம்பர் ஏறத்தாழ இராமானுசரின் சமகாலத்தவராகவே அறி யப்படுகிறார். அவ்வகையில் அவர், 'தமது சூழலில் பெருமதிப்புடன் பேணப் பட்டுநின்ற ஆழ்வார்பாடல்களில் மூழ்கித் திளைப்பதற்கான வாய்ப்பைப் பெற்றி ருப்பார்' என்பதும் 'அவை தந்த அருட் டுணர்வில் இராமாயணத்தை இயற்றும் உணர்வூந்துதலைப் பெற்றிருப்பார்' என் பதும் ஊகித்துணரக்கூடியனவேயாம். இதனை உறுதிசெய்யும் வகையில் அமைந்த பாடற்சான்றொன்று வருமாறு: கம்பராமாயணத்தின் 'சுந்தர காண்ட'த் திலே இடம்பெறும் அப்பாடலானது சிறை யிருந்த செல்வியான சீதை, அத்துயரச் சூழலிலே இராமனுடனான தனது வாழ் வின் முக்கிய நிகழ்வுகளை நினைவில் மீட்பதான சந்தர்ப்பத்தில் அமைவதாகும். அவ்வகையில், வனம் சென்றகாலத்தில் கங்கைக் கரையிலே குகன் என்ற பட கோட்டியை இராமன் தோழமைகொண்ட நிகழ்வை அப்பாடல் நினைவுக்கு இட்டு வருகிறது. அப்பாடல் வருமாறு:

ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பி நின் தம்பி நீ
தோழன் மங்கை கொழுந்தி எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்

- கம்பராமாயணம்: 5091

குகனைப்பார்த்து இராமன் "என்னுடைய தம்பி இலக்குவன் உனக்கும் தம்பியாவான். நீ எனது தோழன். எனது துணைவி உனது கொழுந்தி (மைத்துனி)யாவாள்" என்று கூறி உறவுரிமை கொள்கிறான் என்பதே இப்பாடலின் தெளிபொருளாகும். இப்பா டல் தொடர்பிலே நாம் இங்கு கவனத்திற் கொள்ளவேண்டிய விடயம் இது உணர்த் தும் இராமனது பண்புநிலையை இதே வகையான சொற்களிலும் தொடர்களி லும் ஏற்கெனவே திருமங்கை யாழ்வார் பாடியுள்ளார் என்பதேயாகும். அப்பாடல் வருமாறு:

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்றவர்க்கு இன்னருள் சுரந்து
மாழை மான்மட நோக்கியுன் தோழி
'உம்பி எம்பி'யென் றொழிந்திலை உகந்து
தோழன் நீ யெனக் கிங்கொழி' என்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட
ஆழி வண்ணநின் அடியிணையடைந்தேன்
ஆணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே

- திவ்யபிரபந்தம்: 1418

மேற்படி இரு பாடல்களையும் நோக்கும் போது திருமங்கையாழ்வாரின் பாடல் தந்த அருட்டுணர்வின் தளத்திலேயே கம் பரது கற்பனை தொழிற்பட்டுள்ளமையைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். 'இராமனுடைய பண்புநிலை மீதான வியப்பு' என்ற உணர்வம்சம் மட்டுமன்றி ஆழ்வார் கையாண்ட சொற்களும் தொடர் களும்கூட அப்படியே கம்பரால் உள் வாங்கப்பட்டுள்ளமை வெளிப்படை. வைணவ பக்தி மரபிலே - குறிப்பாக, இராமன்பற்றிய ஆழ்வார்களின் பக்திய-நுபவ வெளிப்பாடுகளிலே - ஆழமாகக் காலூன்றி நின்றே கம்பர் தனது காவி யமாளிகையைக் கட்டமைக்க முற்பட்டுள் ளார் என்பதை உறுதி செய்து நிற்கும் முக்கிய சான்றாக இதனைக் கொள்ளலாம்.

(தொடரும்.)



subramanian.n@thaiveedu.com

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்வலை - 43

'தாய்வீடு' சமுகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

பெயர்:

முகவரி:

தொலைபேசி எண்:

மின்னஞ்சல்வரி:



தமிழ்வலை-43 வினா

இடமிருந்து வலம்

1 ஒரு குறளின் தொடக்கம்

5 வாருங்கள்

6 அறிவிலிகள்

7 அதிர்ச்சியடை

8 படி

9 ஒரு வனவிலங்கு

11 மாலுமி

12 புதுமைப்பித்தனின் சிறந்த கதை

15 மேலதிகம்

16 வேப்பம்வடை

17 அதிரடி மாற்றம்

மேலிருந்து கீழ்

1 பாக்கு நீரிணையை முதன்முதல் நீந்திக் கடந்த சாதனையாளர்

2 ஆசான்

3 ஓர் உலோகம்

4 ஓர் இயல்

6 ஒரு பிரித்தானிய நகரம்

9 முடியரசுமுறை

10 புழுகுப்பூனை

11 ஓர் இராசி

13 எதிரிகள்

14 ஒரு சிற்றுண்டி

17 உலகு

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.

பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

விடைகளை அனுப்பவேண்டிய மினன்னஞ்சல் முகவரி
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: 416 849 0594

விடைகளை அனுப்பவேண்டிய அஞ்சல் முகவரி

Thaiveedu
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

தமிழ்வலை - 42க்கான விடைகள்

மே	த	கு		வி	டு	த	லை		
	க	மு	கு			ரை		தொ	
		த	ம்	பு	ரா		ஊ	ட	ல்
	ஆ	ம்	ப	ல்		கூ		ரு	
க			கோ			றை		ந்	
தி	ரு	கோ	ண	ம	லை		வ	து	வை
ர்			ம்			ப	மு		ண
வ	ட	ம்			பா	தை		மு	வ
ஜு			நே		ட				ம்
	சு	டி	சி	ற்	கி	ளி	யா	ளே	

தமிழ்வலை-42 பெறுபேறுகள்

முன்னணிப் போட்டியாளர்

சாந்தி அரவிந்தன், கியூபெக்
ஜெயா கந்தசாமி, ஒசாவா
நவம் கனகலிங்கம், ஒட்டாவா
கலாவதி இராமநாதன், மொன்றியால்
திரு. அனலைமணி, பிரம்ரன்
நா. குமரகுரு, மார்க்கம்
அருளப்பு தேவநேசன், ஸ்கார்பரோ
விநோதா வசீகரன், மார்க்கம்
சசி இரவீந்திரன், மார்க்கம்
சாந்தி மயில்வாகனம், ஏஜக்ஸ்
மணிஸ்வரன் மகிந்தா, நோத்யோர்க்
அழகரத்தினம் பவளராணி, நோத்யோர்க்
காரை. சு. குலசிங்கம், ஸ்கார்பரே
நாகேஸ்வரி கயிலாயபிள்ளை, மார்க்கம்
செல்வரட்ணம் ஆறுமுகம், மார்க்கம்

பரிசுபெறும் போட்டியாளர்

சர்வதனன் ஜெகதீசன்,
ஸ்கார்பரோ

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டியில் பரிசுபெறும் ஒருவருக்கு 25 டொலர் பெறுமதியான நூல்கள் வாங்குவதற்கான கொள்வனவு அட்டை வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொறன்ரோ தமிழ்ச்சங்கம்

ஆனி மாத இலக்கியக் கலந்துரையாடல்

"தமிழர் பண்பாட்டின் தொன்மை தமிழகத் தொல்லியலாய்வுகளை மையப்படுத்திய பார்வை"

சிறப்புப் பேச்சாளர்கள் உரை:

"ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வுகள்" - கலாநிதி செல்வநாயகி ஸ்ரீதாஸ்

"கூடியம் குகைகள் பற்றிய ஒரு பார்வை" - வைத்திய கலாநிதி மேரி கியூரி போல்

" கீழடி அகழ்வாய்வால் வெளிக்கொணரப்பட்டவை" - கனி விமலநாதன் B.Sc

ஐயந்தெளிதல் அரங்கு

இடம்: றொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
Unit 7, 5633, Finch Avenue East
Scarborough, M1B 5K9
(Dr. Lambotharan's Clinic - Basement)

நாள்: 29-06-2019
நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை

தொடர்புகளுக்கு: அகில் – 416-822-6316

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அனுமதி இலவசம்!

றொறன்ரோ தமிழ் சங்கத்தின் மாதாந்த இலக்கியக் கலந்துரையாடல் நிகழ்வு 25.05.2019 அன்று றொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் 'உளநல நோய்களும் உயிரிழப்புகளும்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அந்நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சில...

கலாநிதி செந்தூரன் குணரட்ணம்

கலாநிதி பார்வதி கந்தசாமி

யுனிட்டா நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் காட்டூன்களும் காட்டுனிஸ்டுகளும்

இராசிபுரம் கிருஷ்ணசுவாமி லக்ஷ்மன்

இந்தியக் காட்டூன் உலகில் பிரபலம் பெற்றவர் ஆர்.கே. லக்ஷ்மன் (R.K.Lakshman) ஆவார். இவரது காட்டூன்கள் சிந்தனையைக் கவருபவை. ‘You said it’ (நீயே சொன்னாய்) எனும் தலைப்பில் காட்டூன் வரையத் தொடங்கினார். இவரது



You said it காட்டூன் கதாநாயகன் திருவாளர் பொதுசனம் தான்.

இவர் 24.10.1921ல் இந்தியாவின் மைசூரில் பிறந்த பிரபல காட்டூர் கலைஞராவார். இவர் புகழ் பெற்ற எழுத்தாளர் ஆர்.கே. நாராயணனின் இளைய சகோதரர். இவர் பல்வேறு பத்திரிகைகளில் கேலிச்சித்திரம் வரைந்து பிரபல்யம் பெற்றவர். இவர் முதன்முதலில் கன்னட நகைச்சுவை இதழான ‘கோரவஞ்சி’க்காகக் கேலிச்சித்திரங்கள் வரைந்தார். பின்னர் ‘Times of India’வில் ‘You said it’ என்ற தலைப்பில் திருவாளர் பொதுஜனம் (Common man) என்கின்ற கதாபாத்திரத்தை 1951 முதல் அறுபதாண்டு காலமாக வரைந்ததன் மூலம் பட்டி தொட்டி எங்கும் பேசு பொருளாக மாறினார்.

சென்னையில் ஜெமினி ஸ்ருடியோவில் ஆறு மாதம் பணிபுரிந்தார். பின் மும்பைக்குச் சென்று பிளிட்சு இதழில் பணி புரிந்தார். 1946ம் ஆண்டு ‘Free press journal’ல் சேர்ந்தார். அங்கு பணியாற்றும் போது அதன் சார்பு இதழான ‘பாரதஜோதி’, வார இதழான ‘State’s people supplemeny’ இலும் காட்டூன்களை வரைந்தார். அங்கு நிர்வாகத்துடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக அங்கிருந்து வெளியேறி 1947ல் ‘Times of India’ எனும் பத்திரிகையில் இணைந்தார். 1952ல் Common man ‘Times of India’வின் முதற்பக்கத்தில் இடம் பிடித்தது.

இவர் பிரிபிரிசு சனலில் பணியாற்றிய போது இவருடன் சிவசேனாவின் நிறுவுனர் ‘பால்தார்கரே’வும் கேலிச்சித்திரக் காரராகப் பணியாற்றினார். Times of India வின் ஒன்றரை நூற்றாண்டு முடிவடைந்த நிலையில் Common man நினைவாக ஒரு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. ஆர்.கே. நாராயணனின் ‘மால்குடி நாட்கள்’ எனும் தொலைக்காட்சித் தொடருக்கான ஓவியத்தின் சொந்தக்காரர் இவரே. மற்றும் இவர் ஏசியன் பெயின்ற் நிறுவனத்தின் முத்திரை (Mascot)யையும் இவரே வடிவமைத்தார். அத்துடன் இவர் உருவாக்கிய ‘திருவாளர் பொதுஜனம்’ எனும் கதாபாத்திரம் சிலை உருப்பெற்று இப்பொழுதும் மும்பையில் காணப்படுகின்றது.

இவர் Times of India வில் வரைந்த ஓர் காட்டூன் இந்திய அரசியலில் ஒரு பிரளயத்தை ஏற்படுத்தியது எனலாம். அதாவது ‘இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்’ குறித்தான இவரது காட்டூன் ஒன்று பல் வேறு அரசியல்வாதிகளைத் தாக்கத்திற்கு உள்ளாக்கியது எனலாம். இக் காட்டூனானது NCRD யின் பன்னிரண்டாம் வகுப்புப் பாடப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளமை கூடுதல் சிறப்பாகும். இவரின் இக் கேலிச்சித்திரம் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாக அமைந்து காணப்படுகின்றது என்றும், இதைப் பாடத்திட்டத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்றும் பல்வேறு அரசியல் தலைவர்கள் கோரியுள்ளமையும் இங்கு கவனிக்கத்தக்கது. ஏனெனில் இக் காட்டூனின் வெளிப்பாடானது இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டக் காரர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்றும், அவர்கள் படிப்பறிவு அற்றவர்கள் என்றும் கூறுகின்றது.

இவரின் சாதாரண இந்தியன் அபிப்பிராயங்கள் அற்ற ஓர் அப்பாவி. இந்த அப்பாவியை அரசியல் மேடைகளிலும், வீதிகள், காரியாலயங்கள், விமான நிலையங்கள், சேரிப்புறங்கள் என எல்லா இடங்களிலும் காணமுடியும்.

அப்பாவித்தனமாக விளித்தபடி எல்லாமே தன் கையை மீறி நடக்கின்றன என்பதை ஒரு கையாலாகாத மௌன சாட்சியினூடாக லக்ஷ்மன் சாதாரண இந்தியனின் அபிலாஷைகளையும், கையறு நிலையையும் வெளிக்கொண்டு வருகின்றார்.

இவரது திருவாளர் பொதுசனம் கால் நூற்றாண்டு வாழ்க்கையில் இதுவரை ஒருமுறை கூடப் பேசியது இல்லை. இதைப்பற்றி ஒருமுறை லக்ஷ்மனிடம் கேட்ட போது ‘ஒரு புத்திசாலியின் புத்திசாலித்தனமே அவனது மௌனத்தில் தான் அடங்கியிருக்கிறது. நமது அரசியல்வாதிகள் இதைப் பின்பற்றினால் இந்த நாடு எப்படி மாறிவிடும் தெரியுமா’ என்றார்.

இந்திய கார்டூன் உலகின் மாமேதை இராசிபுரம் கிருஷ்ணசுவாமி லக்ஷ்மன் 2015.01.26ல் புனே நகரில் காலமானார்.

tharmathas.s@thaiveedu.co

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய சர்வதேச சிறுகதைப்போட்டி - 2019

போட்டி முடிவுகள்:

முதலாம் பரிசு

'தாள் திறவாய்'
இலங்கை ரூபாய் 50,000)
சுந்தரேசன் நந்தகுமார்
வெருகம்பாக்கம் சென்னை - 600092

இரண்டாம் பரிசு

'மலர்'
இலங்கை ரூபாய் 30,000
டலின் இராசசிங்கம்
கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம்
இலங்கை

மூன்றாம் பரிசு - இரண்டு

தலா இலங்கை ரூபாய் 20,000

'ஒரு முழு நாவல்'
இரட்ணசிங்கம் விக்னேஷ்வரன்
வீரவநல்லூர் திருநெல்வேலி தமிழ்நாடு

'உறவின் தேடல்'
விமலாதேவி பரமநாதன்
றுஸ்லிப் மிடில்செக்ஸ் இங்கிலாந்து

பாராட்டுப் பரிசுகள் - ஏழு

இலங்கை ரூபாய்கள் தலா 5000

நான் யார்
தேவகி கருணாகரன்
நியூசவுத்வேல்ஸ் - 2065 அவுஸ்ரேலியா

கமழி
கோவிந்தராயு அருண்பாண்டியன்
அண்ணாநகர் மேற்கு, தமிழ்நாடு

இடுக்கண்களைவதாம்
சுமதி பாலையா
காமராசர்நகர் பாண்டிச்சேரி -605006

காணாமலே
ஹரண்யா பிரசாந்தன்
பற்றிமாகிரிவீதி மட்டக்களப்பு இலங்கை

கனடாவில் அம்மா
இராமேஸ்வரன் சோமசுந்தரம்
சோலேஸ் றோட், மார்க்கம் கனடா

நிர்ப்பந்தம்
இதயராஜா சின்னத்தம்பி
ஶ்ரீசரணங்கார வீதி, தெகிவல இலங்கை

போ வெளியே
அருண்சந்தர்
அல்சல்மானியா **Kingdom of Bahrain**

ஊக்கப் பரிசுகள் - 5

இலங்கை ரூபாய்கள் தலா 3000

சுயகெளரவம்
சசீலா ராஜ்குமாரன்
வரோதயநகர் திருகோணமலை இலங்கை.

களவும் கற்று மற
பரமேஸ்வரி இளங்கோ
ஹேகித்த வத்தளை இலங்கை

தீக்குருவி
மொகமட் ராபி
பாலையூற்று திருகோணமலை இலங்கை

மெல்ல திறந்தது கதவு
ஜெயபால் நவமணிராசையா
அண்ணா நகர், சென்னை-600101

ஐந்தறிவு விதவை
அண்ணாதுரை பாலு
ராஜபாளயம் விருதுநகர் 626117 தமிழ்நாடு

போட்டியில் பங்கு பற்றிய அனைவருக்கும் முதற்கண் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எம்மவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தி அதன் மூலம் சிறந்த ஆக்கங்களை வெளிக்கொண்டுவந்து தமிழ் இலக்கியத்திற்கு அணி சேர்ப்பதற்காகவே இந்தப் போட்டியை நடத்தினோம். இதற்கு உதவியாக இருந்த நன்கொடையாளர்களுக்கும், ஊடகங்களுக்கும், பரிசு பெற்றவர்களுக்கும், பங்குபற்றியவர்களுக்கும், நடுவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துக்களுடன்

குரு அரவிந்தன் (தலைவர்)
ஆர். என். லோகேந்திரலிங்கம் (செயலாளர்)
கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்கடன்

- செல்வம் அருளானந்தம் -

சொல்வது எழுதல்: 12

நானும் நாயகமும் கதைச்சுக்கொண்டிருக்கிறம். கதை சுவாரசியமாய்ப் போய்க்கொண்டிருக்கேக்க, இரண்டு பேர் யோவான் அப்புவைத் தேடி அங்க வந்திட்டாங்கள். அவையக் கண்டவுடன நாயகம் கதையை நிப்பாட்டிப் போட்டார்.

கதை பாதியில நிக்க, எனக்கு விசராப் போட்டுது. வந்தங்களக் கடுப்போட பாத்திட்டு, 'வளத்த நாய் முகத்தப் பாத்த மாதிரி' நான் நாயகத்தின்ர முகத்தைப் பாத்துக்கொண்டிருந்தன்.

வந்வங்களோ, பக்கத்தில குந்தி வளவள வெண்டு தங்களுக்குள்ள கதைச்சுக்கொண்டிருந்தாங்கள்.

நான் பொறுமையில்லாம, நீங்கள் கதையின்ர மிச்சத்தை சொல்லுங்கோவன் எண்டு கெஞ்சுறமாதிரிக் கேட்டன். நாயகம் வந்தவங்கள உத்துப் பாத்தார். அவங்கள் நாயகத்தைப் பெரிசாக் கவனிக்கேல்ல.

நாயகம் மிச்சக் கதையைச் சொல்ல வெளிக்கிட்டார். ஆனா ஆங்கிலத்திலை. எனக்கு நல்லா ஆங்கிலம் தெரிஞ்சிருக்கும் எண்டிறது அவற்றை நினைப்பு. தமிழில கதை கேட்கிற சுவாரசியம் இனி இருக்காது. அதோட நான் அரைகுறையா விளங்கி, அவரிட்ட விளக்கமோ, கேள்வியோ கேட்க ஏலாது. என்ர முகம் சுருங்கிப் போச்சுது. கண்ணும் பிதுங்கத் தொடங்கிட்டுது.

நாயகத்துக்கு விளங்கிட்டுது.

உங்களுக்கு இங்கிலிஸ் தெரியாதோ? எண்டு கேட்டார். 'ஓம்' எண்டு உண்மையை சொன்னேன். என்ன... கனடாவில் இருக்கிறன் எண்டு சொன்னியள்? எண்டு நாயகம் ஒரு கிண்டல் தொனியில இழுத்தார்.

ஓம்... கனடாதான். ஆனா நான் இருக்கிற இடம் ஸ்காபரோ எல்லே. நான் இருக்கிற இடத்திலையும் செய்யிற வேலையிலையும் ஆங்கிலத்துக்கு தேவையில்ல. அதால அதைப் பெரிசாத் தெரிஞ்சுகொள்ளேல்ல எண்டன்.

அது சரி, அண்ண, நீங்கள் எப்பிடி தெளிவாப் பிரஞ்சு பேசுறியள், ஆங்கிலம் பேசுறியள்? எண்டு அவரை ஒரு தூக்குத்தூக்கி நான் தப்பிச்சன்.

'நான் பிரான்சுக்குப் போய் மூண்டு மாதத்திலை பிரெஞ்சு பேசத் தொடங்கிட்டன். வேறை வழியில்லை. ஆங்கிலம் பேசப் பழகினது ஒரு காதலாலை... சரி அதை விடுங்கோ' எண்டவர் கொஞ்சம் அமைதியாயிட்டார்.

கொஞ்சம் பொறுத்து, நான் 'மிச்சத்தையும்...' எண்டு மெதுவாய் இழுக்க...

பக்கதிலை இருந்த இரண்டு பேரையும் கண்ணால காட்டி, ஆங்கிலத்தில சொன்னார்.

'இனி என்னால பேச ஏலாது. என்ர கதை என்ற கதையை நாலு தலைமுறைக்குக் காவிக்கொண்டு திரிவாங்கள். வேண்டாம் இண்டைக்குக் காணும்' எண்டார்.

இந்த விடயங்கள இந்தப் பாவி, பேப்பரில எழுதப்போறன் எண்டுற விசயம், பாவம் நாயகத்துக்குத் தெரிஞ்சிருக்கேல்ல.

நாளைக்கு வெள்ளன வரட்டோ... நீங்கள் நிற்பியளோ? எண்டு பவ்வியமாய்க் கேட்க, வந்து பாருங்கோவன் எண்டார்.

அடுத்த நாள் காலையில மரியதாசைக் கழட்டி விட்டிட்டு நான் பஸ் ஏறி நாயகத்திட்டை வந்திட்டன்.

இங்க ஆருக்கும் தெரியாது. தெரியிறது எனக்கு விருப்பமும் இல்ல. நீங்கள் வெளிநாட்டுக்காரர். எனக்கு உங்களத் தெரியாது. உங்களுக்கு என்னைத் தெரியாது. ஏதோ கதைப்புத்தகம் படிச்சமாதிரி என்ர கதையக் கேட்டு, பிறகு மறந்தும் போயிருவியள். நீங்கள் பிரான்சிலையும் இருந்தனீங்கள் எண்டவுடன, ஏதோ பழைய வாழ்க்கையத் திருப்பிப் பார்க்க வேணும் போல இருந்தது. அதால என்ர கதைய உங்களுக்குச் சொல்லாம் எண்டு நினைச்சன், சொன்னன். ஆனா எங்கட ஊர்க்காரர், நான் மண்ணுக்க போனபிறகும்

நேத்து மாதிரியே யோவான் அப்புவோட நாயகம் கதைச்சுக்கொண்டிருந்தார். என்னைக் கண்டவுடன, எனக்குத் தாறதைத் தந்திட்டு, நீங்கள் கதைச்சுக்கொண்டிருங்கோ எனக்கு வேலையிருக்கு எண்டு அப்பு அங்கால போயிட்டார்.

நான் நாயகத்தின்ர முகத்தைப் பார்த்தன். அவர் உற்சாக மனநிலையிலதான் இருந்தார்.

நேத்து எங்க கதையை விட்டனான்? எண்டு அவர் யோசிக்க...

நீங்கள் தத்துப்பிள்ளையாய் பிரான்சுக்குப் போறதிறத்துக்கு வெளிகிட்ட இடத்தில.. கதை விட்டனீங்கள் எண்டு நான் தொடக்கி விட, ஓம் ஓம்.. தத்துப்பிள்ளை எண்டவர், மிச்சக்கதையைச் சொல்லத் தொடங்கினார்.

அந்தப் பிரான்ஸ்காரர், மூண்டு மாதத்துக்குள்ள என்னை தங்கட தத்துப்பிள்ளையாய் சட்டப்படி எடுத்திட்டிச்சனம். என்ர அப்பரும் கையெழுத்தெல்லாம் போட்டுக் கடிதங்கள் குடுத்திட்டார்.

நானும் அவையோட பிரான்சுக்குப் போய்ச் சேந்திட்டன்.

பிரான்சில எங்க இருந்தனியள்? எண்டு நான் கேட்க, 'சுவேசோன்' எண்ட ஒரு ஊர் பாரிசிலை இருந்து ஒரு முன்னூறு கிலோ மீற்றரிலை இருக்கு. சொல்லி ஒரு பெருமூச்சோட நிற்பாட்டினார்.

அதுக்குப் பிறகு ஏன் இங்க வந்து பிப்பிலியில நிக்கிறியள் எண்டு கேக்க, அதுக்கு நான் கனக்க அத்தியாயங்கள் சொல்ல வேணும் எண்டார். நான் திடுக்கிட்டுப் போனன். நான் எழுதிறவன் எண்டு இவருக்கு விளங்கிட்டுதோ? நான் அசடு வழிய, என்ற முகபாவத்தை கொஞ்சம் மாத்திக்கொண்டன்.

அவர் என்ர முகத்தைப் பார்க்காமல் வேறை எங்கையோ பார்த்துக் கொண்டு இருந்தார்.

பிறகு 'அது அற்புதமான காலங்கள்'

தொடர்தல் 116ம் பக்கம்

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

Delta Academy Inc.

Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.

BSID # 667561

Grade 10	
English	ENG2D
Principle of mathematics	MPM2D
Science	SNC2D
Grade 11	
English	ENG3U
Functions	MCR3U
Biology	SBI3U
Chemistry	SCH3U
Physics	SPH3U
Accounting	BAF3M
Economics	CIA3U
Grade12	
English	ENG4U
Advanced Functions	MHF4U
Calculus and Vectors	MCV4U
Data Management	MDM4U
Biology	SBI4U
Chemistry	SCH4U
Physics	SPH4U
Accounting	BAT4M
Economics	CIA4U

ART COURSES

Grade 10	
Tamil	LITBD1
Vocal	
Violin	
Veena	AMU20
Piano Keyboard	
Dance	ATI201
Miruthangam	AMP20
Grade 11	
Tamil	LITCU1
Vocal	
Violin	
Veena	AMU3M
Piano Keyboard	
Dance	ATI3M1
Miruthangam	AMP3M
Grade 12	
Tamil	LITDU1
Vocal	
Violin	
Veena	AMU4M
Piano Keyboard	
Dance	ATI4M1
Miruthangam	AMP4M

Classes begins on
February, July, September
Register with us early as the space is limited.
All courses are 110 hours.
Course fee is $500 (Including registration)

KINDERGARTEN TO GRADE 12
TUTORING & HOMEWORK HELP

Special Classes For:

- Functions
- Physics
- Advanced Function
- English
- Chemistry
- Calculus & Vectors

Evening and weekend classes available
Qualified and experienced teachers to help your children to do better

416.751.2011
deltaacademyinc@hotmail.com
1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8

மண் கடன்...

115ம் பக்கத் தொடர்ச்சி...

எண்டபடி தொடங்கினார்.

அந்தக் குடும்பம் எனக்கு ஒரு குறையும் வைக்கேல்லை. தனி றூம். ரீவி, டெக் வசதிகள் எல்லாம் இருந்துது. அந்த பையன் படிக்கிற பள்ளிகூடத்திலையே என்னையும் சேர்த்துவிட்டிச்சினம்.

பின்னேரம் பிரெஞ்மொழி படிக்கிறத்துக்காக பக்கத்திலை இருந்த ஒரு ஆங்கிலம் தெரிஞ்ச ரீச்சரையும் ஒழுங்குபடுத்தி விட்டிச்சினம்.

அப்பப்ப ஆனைக் கோட்டையில இருந்து, அப்பா கடிதம் போடுவார். 'எங்கள மறக்காதை. வீட்டிலை இரண்டு குமர் இருக்கு. உன்ன இன்னொருவருக்குப் பிள்ளையாக் குடுத்ததே நீ உன்ர சகோதரங்களுக்கு உதவி செய்யத்தான். இப்ப நாட்டில பிரச்சினை கூடிப்போச்சு. நீ திருப்பி வரேக்க எங்களுக்கு எண்டு ஒரு நாடு இருக்கும்.' இப்படித்தான் அப்பற்ரை எல்லாக் கடிதங்களும் இருக்கும்.

நான் இருந்த இடம் ஒரு கிராமம் மாதிரித்தான். அங்க இருந்தவங்கள் எல்லாம் நல்லவங்கள் எண்டு சொல்ல முடியாது. சிலபேர் இந்த ஊருக்குள்ள ஆர் இந்த கறுவல் பொடியன் எண்ட மாதிரிப் பார்ப்பினம். எனக்கு பிரஞ்சு மொழி பிடிபடத் தொடங்கேக்க, சில மனவருத்தங்களும் வந்திச்சு.

ஆனா என்னைப் பெறுப்பெடுத்த குடும்பம் ஒரு தெய்வக் குடும்பந்தான். அவை சாமியக் கும்பிட்டதையோ கோவிலுக்குப் போனதையோ நான் காணேல்ல. வீட்டில ஏதும் கடவுள் சம்பந்தமான படங்களோ புத்தகங்களோ இல்ல. நானும் அதைப் பத்தி ஆராயேல்ல. என்னைத் தங்கட ஒரு பிள்ளையாவே பாத்திச்சினம்.

சனி ஞாயிறு நாட்களில வேலைக்குப் போய், நீ உன்ர வீட்டுக்கு உதவி செய் எண்டு சொல்லி ஒரு பேக்கரியிலை வேலைக்கும் சேர்த்து விட்டிச்சனம்.

கதை கேட்டுக்கொண்டிருந்த எனக்கு மெல்லிசா அலுப்புத் தட்டிச்சுது. அங்க என்ன நடந்தது? ஏன் இவர் திரும்பி வந்தவர் எண்டு சொல்லாம.. கதையை எங்கையோ இழுத்துக்கொண்டு போற மாதிரிக் கிடந்தது.

குறுக்கால நான் கேட்டன், இப்பவும் அந்தக் குடும்பத்தோட தொடர்பு இருக்கோ?

அவர் உணர்ச்சிவசப்பட்டார். 'என்ர வாழ்க்கையில் இன்னொருக்கால், உன்னர முகத்தை நான் பார்க்கவோ, குரலைக் கேட்கவோ விரும்பேல்ல' எண்டு மூண்டு தரம் சொன்னார்.

அந்தளவோட நான் பேசாமல் இருந்திட்டன்.

நாயகம் சொல்லிக்கொண்டே போனார். 'என்ன அற்புதமான மனிதர் என்ர பிரெஞ்சு அப்பா.'

பேக்கரியிலை வேலை செய்யிற காலத்திலை ஒரு பிரெஞ்சு அழகி என்னில விழுந்திட்டாள். பேசத்தொடங்கின பிறகுதான் அவளுக்குத் தெரிஞ்சுது... அந்த மூண்டு சொல்லுக்கு மேலாலை வேறு சொல் பேசுறத்துக்கு தடுமாறுற ஆள் நான் எண்டு. அவளிட்டத்தைன் நான் முறையான ஆங்கிலத்தை தெரிஞ்சுகொண்டன்.

நான் எல்லாத்தாலையும் வேறுபட்ட ஆளா இருந்தன். அவளோ, அங்கை வேலை செய்ய அத்தனை பிரஞ்சுப் பொடியளையும் தாண்டி என்னிலை விழுந்தாள். எனக்கு உள்ளுக்குள்ள ஒரு அச்சம் இருந்தாலும் அவளில அளவில்லாத அன்பு ஏற்பட்டது.

ஊர் மாதிரி, கண்காட்டி, கடிதம் குடுத்து, கைபிடிக்கக் கனகாலம் செல்லும். இது அதுமாதிரி இல்ல. உங்களுக்குத் தெரியுந்தானே.

நான் படிக்கேக்க, ஒரு பெட்டைக்குக் கடிதம் எழுதி, மூண்டுமாசம் கொண்டு திரிஞ்சனான். அது சரிவராது எண்டு தெரிஞ்சு, பெயரை மாத்தி, இன்னொரு பெண்ணின்ர கொம்பாசுப் பெட்டிக்குள்ள வைச்சுக் குடுத்தன். அண்டைக்குப் பொழுதுபட, பெட்டையின்ர தாய் வீட்டுக்கு வந்து... அப்பாடி... ஒழுங்கை முழுக்க அண்டைக்கு நாய் குரைப்புச் சத்தந்தான்.

ஒருநாள் வேலை முடிய அவள் என்னோட என்ர வீடுவரைக்கும் நடந்து வந்தாள். அப்பிடியே கதைச்சுக் கதைச்சு இரண்டு பேரும் உணர்ச்சியின்ர எல்லைக்கு வந்திட்டம்.

நான் வீட்டுக்குள்ள போய் அப்பாவின்ர வான் திறப்பை எடுத்துக்கொண்டு வந்து, அவளையும் கூட்டிக்கொண்டு, வானுக்குள்ள போயிட்டன். அந்த சுகம் எனக்கு பிடிபட்டுப் போச்சு. இது ஒவ்வொரு கிழமையும் நடக்கத் தொடங்கிட்டுது.

இப்பிடி ஒருநாள் நாங்கள் சந்தோசமாய் இருக்கேக்க, அவசரத் தேவைக்காக வெளியில வந்த அப்பா எங்களைக் கண்டிட்டார். ஒண்டும் சொல்லாமல் மற்றக் காரை எடுத்துக்கொண்டு போயிற்றார்.

அதுக்குப் பிறகு அவர் வான் கதவைத் திறந்தே விட்டிருந்தார்.

வேறை ஒருநாள் பேச்சில, நீ தனியாய்ப் போய் வாழுறத்துக்கு இன்னும் காலம் இருக்கு எண்டார்.

பிறகு எனக்குக் கார் ஓட்டப் பழக்கி, கார் ஓட்டுற உரிமத்தையும் வாங்கித் தந்து, பிரஞ்சுப் பாஸ்போட்டும் எடுத்துத் தந்தார். 'இனி நீ நிறைவான பிரஞ்சுக்காரன்' எண்டு சொன்னார்.

ஒருநாள் ரீயுசன் முடிஞ்சு இரவு வீட்டுக்கு வரேக்கை அம்மாதான் சொன்னா..

சிறிலங்காவிலை ஏதோ பிரச்சினையென்று செய்தியிலை சொன்னவங்கள், நீ நாளைக்கு தபால் நிலையம் போய் தொலைபேசியில உன் அண்ணனோட கதை. அங்க என்ன நடக்குது எண்டுறதை விசாரி. என்ன ஒரு அழகான நாடு. இனி விடுமுறைக்கு அங்க போகலாமோ தெரியேல்ல. எண்டார்.

நான் தொலைக்காட்சியில, செய்திகளைக் கவனிக்கத் தொடங்கினன்.

மறியலிலை வைச்சு தமிழர் கனபேரைக் கொண்டதாகவும் தமிழரின்ர கடைகளை எரிச்சுக்கொண்டிருக்கிறாங்கள் எண்டும் சொன்னாங்கள். முதன்முதலான பிரஞ்சுத் தொலைக்காட்சியில இலங்கையப் பாத்தன்.

அடுத்தநாள் அண்ணனிண்ட அலுவலுகத்துக்குத் தொலைபேசி எடுத்தன். ஒருவரும் எடுக்கேல்ல. மானிப்பாய்க்கும் தொடர்பு கொள்ள முடியேல்ல. ஏதோ சின்னக் கலவரம் எண்டு நினைச்சிட்டு நானும் இருந்திட்டன்.

நாயகம் சின்னனொரு இடைவெளி விட்டிட்டு, ஒரு மிடறு கள்ளை வாயில விட்டார்.

selvam.a@thaiveedu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

261 Cosgrove Dr
Oshawa

16 Erintown Cres
Brampton

புதிய வீடு வாங்க அரிய வாய்ப்பு

OWN A
100% FREEHOLD
TOWN HOME

PAYING $1000 /PER MONTH

Gopi THE REALTOR
GOPI K SHANMUGAM
SALES REPRESENTATIVE
Dir: 647.296.4624

HOMELIFE HIGHER STANDARDS
HomeLife /Future Realty Inc., Brokerage, Independently Owned And Operated
205-7 Eastvale Dr., Markham Ont. L3S 4N8 OFF: 416.477.0444

கடன் பிரச்சனைகளா?

- கடன் அட்டை சிக்கல்கள்
- வங்கிக்கடன் சிக்கல்கள்
- கலக்சன் கம்பனி போன் தொல்லை
- ஊதிய கையகப்படுத்தும் சிக்கல்கள்
- இது போன்ற கடன் பிரச்சனைகளால் தினந்தோறும் வீட்டில் சண்டை

நல்ல செய்தி

எம்மிடம் தீர்வு உண்டு

நம்மால் 80% வரை உங்கள் கடன்களை குறைக்க முடியும், உங்களால் முடிந்த குறைந்த மாதக்கட்டணம் மட்டும் செலுத்தலாம். இது ஒரு கடன் ஒருங்கிணைப்பு பெறுவது போல.

இலவச ஆலோசனை பெற

JANNET FINANCIAL SERVICES INC.

Ms. Jennet Sam & Mr. Stalin Dominic

Tel: 647-894-3876

FaX: 905-471-8080
Email: jennet_renni@hotmail.com

உடன் அழையுங்கள் உடனடியாக உங்கள் புதிய வாழ்க்கையை தொடங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே நிறுத்தக்கூடாது

- அ. முத்துலிங்கம்



ஒரு நாள் எப்படி தொடங்கி எப்படி முடியவேண்டும் என்பதை தீர்மானிப்பது அவன் மனைவிதான். 1983ல் கனடா வந்த போதும் அவர் மனைவிதான் முடிவுகளை எடுத்தார். இப்போது 2010லும் அவர்தான் எடுப்பார். அன்றைய நாளை நினைத்தபோது கொஞ்சம் நடுக்கம் எடுத்தது. அவருடைய பெயர் பரமேஸ்வரன். அதைச் சுருக்கி பரமேஸ் என்றார். இப்பொழுது பரம் எனத் தன்னை அழைக்கிறார். மனைவி இன்னும் சுருக்கி அது ‘பர்’ என ஆகிவிட்டது. அதிகாலையிலேயே பர் என அழைத்தபோது அன்றைய நாள் சரியாகப் போகாது என்று பட்டது.

தயங்கியபடியே சொன்னார். ‘என்னுடைய கார் பட்டரி போய்விட்டது. கார் திருத்துபவர் புது பாட்டரியோடு வந்து சில நிமிடங்களில் மாற்றிவிடுவார். இன்று மட்டும் உம்முடைய காரை எடுக்கிறேன். அவசர வேலை என்று நீர்தான் சொன்னீரே.’ ‘அய்யோ என்னுடைய காரா? அது புதுக் கார் அல்லவா? கவனமாக ஓட்டுங்கோ’ என்று சொன்னபபடி கார் சாவியை ஒரு பொன் திறப்பை தருவதுபோல தந்தார். ‘நான் சொன்ன கலர் ஞாபகம் இருக்கிறது தானே. நல்ல திறம் பெயிண்டரை பிடித்து அடியுங்கோ. புதுக்கடை மக்களை கவர்ந்து இழுக்கவேண்டும்.’

பழைய மருந்துக் கடையை மூடிவிட்டு புது மருந்துக் கடையை தயார் பண்ண வேண்டும். என்ன என்ன செய்யவேண்டும் என மனைவி ஒரு நோட்டுப் புத்தகத்தில் நேற்றே எழுதி வைத்திருந்தார். ஆக எளிமையான வேலைகள் அவருக்கு தரப்பட்டிருந்தன. பழைய மருந்துக்கடையில் உட்காரவே இடமில்லை. பலவிதமான பல அளவு பெட்டிகளில் சாமான்கள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. நாளைக்கு அவை பெரிய கனரக வண்டிகளில் புதுக் கடைக்கு மாற்றப்படும். வர்ணம் பூசுபவனை ஒன்பது மணிக்கு பரமேஸ்வரன் வரச்சொல்லியிருந்தார். அவன் வருவதற்கு பத்து நிமிடம் இருந்தது. ஒரு பெட்டியில் உடகார்ந்துகொண்டு காலை உணவு பக்கட்டை திறந்த சமயம் ‘ஐயா என்று குரல் கேட்டது. புதுப் பெயிண்டர் ஆக இருக்கும். எட்டிப் பார்த்தவர் திகைத்துப் போனார். அவருடைய நண்பர் நடத்தும் பராமரிப்பு கம்பனியில்தான் சொல்லியிருந்தார். வழக்கமான பெயிண்டர் இல்லை. இவன் ஒரே எலும்பாக இருந்தான். இவனை புதிய கடைக்கு அழைத்துப் போய் வேலையை ஆரம்பிக்கவேண்டும். அவரிலும் பார்க்க ஓர் அடி கூடிய உயரமானதினாலே வாசல்படியை வளைந்து கடந்தான். முக்கோணங்களினால் ஆன உடம்பு. முதல் பார்வையிலேயே அவனை அவருக்கு பிடிக்கவில்லை. அவருடைய மனைவி என்றால் அவனை உடனேயே திருப்பி அனுப்பியிருப்பார். ரோட்டிலே படுத்து தூங்கி எழுந்து வந்தவன்போல காணப்பட்டான். கரிய நிறம். புழுதிபடிந்த சுருண்ட தலைமுடி. இனியில்லை என்ற அழுக்கு உடை. அவன் கிட்ட வரும் போது அவனுடன் சேர்ந்து ஒரு நாற்றமும் வந்தது. பிரச்சினைகளை உண்டாக்கத்தான் அவருக்கு தெரியும் தீர்க்கத் தெரியாது. மனைவியிடம் ஆலோசனை கேட்கலாம் என நினைத்தார். ஆனால் அவன் வெகு சமீபமாக வந்துவிட்டான். பெட்டியில் உட்கார்ந்தபடி காலை உணவுப் பார்சலை திறந்துவிட்டார். ஏதாவது பேசவேண்டுமே என்று ஒரு பேச்சுக்கு ‘சாப்பிடுவாயா?’ என்றார். அவன் சரி என்று தயங்காமல் சொன்னதுமே ஒரு பேப்பரிலே ஒரு ரொட்டியை வைத்துக் கொடுத்தார்.

அவர் பெட்டிமேல் உட்கார்ந்தபடியே சாப்பிட, அவன் நின்றபடியே சாப்பிட்டான். இது என்ன ரொட்டி ஐயா புதிதாக இருக்கிறதே. அவர் சொன்னார் ‘எல்லா ரொட்டியும் வட்டமாக இருக்கும். இது சதுர ரொட்டி, எங்கள் நாட்டு ரொட்டி.’ அவன் ரொட்டியை இழுத்து இழுத்து பிய்த்து ரசித்து சாப்பிட்டு, கையை தன் உடுப்பிலேயே துடைத்துக் கொண்டான்.

இத்தனை வேகமாக ஒருவர் ரொட்டி சாப்பிட்டதை அப்போதுதான் பரமேஸ்வரன் பார்த்தார். அவன் இரண்டு நாட்களாக சாப்பிடாதது அவருக்கு தெரியாது.

பெயர் என்ன என்று கேட்டார். மூசா என்றான். பூச்சு வேலை செய்திருக்கிறாயா? நல்லாய்ச் செய்வேன், ஐயா. பல வருடங்களாக வேலை செய்கிறேன். பெரிய பெரிய கட்டடங்களில் எல்லாம் சாரம் வைத்து ஏறி நின்று பெயிண்ட் வேலை பார்த்திருக்கிறேன். பரமேஸ்வரனின் மூளையில் இன்னொரு பிரச்சினை ஓடியது. இவனை எப்படி மனைவியின் காரில் அழைத்துச் செல்வது. மனைவி பலநாள் திட்டமிட்டு அவருடைய சிறுவயது லட்சியத்தை நிறைவேற்ற 250,000 டொலர் காசு கொடுத்து வாங்கிய புது பெண்ட்லி கார். மனைவி அவரிடம் சாவியை கொடுக்கும்போதே உயிரை கொடுக்கக் கேட்டதுபோல தயங்கினார்.

என்ன செய்யலாம் என்று யோசித்த படியே எழுந்தார். மருந்துகள் சுற்றி வந்த பிளாஸ்டிக் விரிப்புகளை காரின் பின்சீட்டில் விரித்தார். சரி புறப்படலாம் என்றார். அவனுடைய நீண்டமுகத்தில் வாய் திறந்து பற்கள் வெள்ளையாக பளிச்சிட்டன. எலும்புகள் சத்தமிட அவன் மூட்டையை தூக்கிக்கொண்டு ஓடி வந்தான். ‘மூட்டையில் என்ன?’ ‘பூச்சுவேலை செய்யும் போது அணியும் ஊத்தை உடுப்பு. அல்லாவிட்டால் நல்ல உடுப்பு கெட்டுப் போய்விடும்.’ பரமேஸ்வரனுக்கு அதிர்ச்சியில் வார்த்தை எழவில்லை. அவன் ஏற்கனவே அணிந்திருக்கும் உடையிலும் பார்க்க மோசமான உடுப்பு இருக்கிறதா? அந்த உடுப்பை பார்க்கவாவது அவனை கூட்டிப் போகவேண்டும். ‘என் மனைவியின் புதுக்கார்’ என்று சொல்லி கதவை திறந்து பிடித்தார். அவன் காருக்குள் ஏறி அமர்ந்து பக்கவாட்டிலோ பின்சீட்டிலோ உடம்பு படமல் ஒடுங்கி உட்கார்ந்து கொண்டு தன் மூட்டையை பக்குவமாக மடியில் வைத்தான். அவரே கதவை பூட்டிவிட்டு காரை எடுத்தார்.

அவர் மனைவி வாங்கிய புது மருந்துக் கடை 40 மைல் தூரத்தில் இருந்தது. பழைய மருந்துக்கடையிலும் பார்க்க நாலு மடங்கு பெரிதானது. 24 மணிநேரமும் திறந்திருக்கும். பல வேலைக்காரர்களையும், உதவியாளர்களையும் தேர்வு செய்தாகிவிட்டது. சமான்களை புதிய கடைக்கு மாற்றுவதும், பூச்சு வேலையை மேற்பார்வை செய்வதும்தான் அவருக்கு கொடுக்கப்பட்ட வேலை. மீதி எல்லாவற்றையும் அவருடைய மனைவியே பார்த்துக்கொள்வார்.

கண்ணாடி வழியாக பின்னால் பார்த்தார். இரண்டு பக்கமும் வேகமாக ஓடும் கார்களை மாறி மாறி கழுத்தை திருப்பி திருப்பி மூசா பார்த்துக்கொண்டே இருந்தான். பரமேஸ்வரனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. கார் ரோட்டிலே ஓடுவது போலவே இல்லை. ரோட்டில் இருந்து ஓர் இஞ்சி மிதப்பது போல அத்தனை சுகமாக இருந்தது. மனைவி சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. ‘இந்தக் காரை ஒருமுறை ஓட்டினால் அதற்கு பிறகு வேறு ஒரு கார் ஓட்டவே முடியாது.’

‘மூசா, உனக்கு எந்த நாடு?’ ‘ருவாண்டா.’ ‘எப்பொழுது கனடாவுக்கு வந்தாய்?’ ‘1997.’ ‘ஓ, நீ குடிபெயர்ந்து 13 வருடங்கள் ஆகிவிட்டனவா? நேற்று கனடாவின் கவர்னர் ஜெனரல் மிசேல் ஜீன் மன்னிப்பு கேட்டாரே! செய்தி பார்த்தாயா?’ ‘ருவாண்டாவில் கொடிய இன ஒழிப்பு நடந்தபோது கனடா ஒன்றுமே செய்யவில்லை. அதற்காக கவர்னர் ஜெனரல் இப்பொழுது மன்னிப்பு கேட்டார். என்ன பிரயோசனம்? கனடா மட்டுமல்ல, ஒரு நாடும் கவனிக்கவில்லை. 100 நாட்களில் 8 லட்சம் டுட்சிகள் கொல்லப்பட்டனர். 11 லட்சமாக இருந்த டுட்சிகளின் எண்ணிக்கை 3 லட்சமாகக் குறைக்கப்பட்டது. இத்தனை வேகமாக உலகத்தில் ஓர் இனம் அழிக்கப்படவே இல்லை என்று சொல்கிறார்கள்.’

‘உன்னுடைய குடும்பம் எங்கே?’ ‘என்னுடைய மூன்று அண்ணன்மார்களும் கொல்லப்பட்டார்கள். அம்மாவும் தங்கையும் என்ன ஆனார்களோ தெரியாது. பல மாதங்களாகத் தேடினேன். இரவில்தான் தேடுவேன். பகலில் காட்டுக்குள் ஒழிந்திருந்தேன். எனக்கு 19 வயது. நாலு இளைஞர்கள் கிவூ வாவியை நீந்திக் கடப்பதென்று முடிவு செய்தார்கள். நானும் புறப்பட்டேன். 12 மணிநேரம் நீந்தினேன். என்னுடன் வந்தவர்கள் ஒவ்வொருவராக சோர்ந்துபோய் என் கண்முன்னால் இறந்துபோனார்கள். என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. நல்லவேளையாக மீன்பிடி படகு ஒன்று என்னைக் காப்பாற்றி கொங்கோ நாட்டைச் சேர்ந்தேன். அங்கேயிருந்து கனடாவுக்கு குடிபெயர்ந்தேன்.’ ‘அங்கிருந்து எப்பொழுது குடிபெயர்ந்தாய்?’ ‘நான் கொங்கோவுக்கு போனது 1995ல். அங்கேயிருந்து 1997ல் புறப்பட்டு அதே வருடம் கனடாவுக்கு வந்து சேர்ந்தேன். நான் அங்கே போனபோது கொங்கோவின் பெயர் சயீர். நான் புறப்பட்ட போது கொங்கோ என மாறிவிட்டது. அடுத்த கேள்வியாக எப்படி வந்தாய் என்று அவர் கேட்கவில்லை. அதற்கு பதில் தெரிந்ததுதான். கள்ள பாஸ்போர்ட்டில் வந்திருப்பான். கப்பலில் வந்திருப்பான். கனரக வண்டிகளில் ஒளித்து பயணித்திருப்பான். ‘உன் அப்பாவைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே.’ ‘அவர் விவசாயி, ஆனால் வீட்டுக்கு ஒன்றுமே கொண்டுவரவில்லை. சூதாடி தொலைத்து விடுவார். எத்தனையோ பேர் அறிவுரை சொன்னார்கள். அவர் சொல்வார், ‘சூதாட்டத்தில் ஒருவித கேடும் இல்லை, அதுவும் விவசாயமும் ஒன்று என விவாதிப்பார். விவசாயத்தில் விளைவதை சிலவேளை மழை அழித்துவிடும். சில வேளை வெய்யில் அழித்துவிடும். அதுவும் ஒருவித சூதாட்டம்தானே’ என்பார்.

‘ஹூட்டுக்கள் டுட்சிகளைக் கொன்றார்கள் அல்லவா? இரண்டும் வெவ்வேறு மதமா?’ ‘இல்லையே, ஒரே மதம்தான்.’

‘வெவ்வேறு மொழியா?’ ‘இல்லை ஒரே

தொடர்தல் 120ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே நிறுத்தக்...

119ம் பக்கத் தொடர்ச்சி...

மொழிதான்.' 'அப்ப என்ன பிரச்சினை?'

'வேறு ஒன்றும் இல்லை. ஹுட்டுக்களுக்கு டுட்சிகளைப் பிடிக்காது. ஒரு காலத்தில் சில டுட்சிகள் தங்கள் அடையாள அட்டையில் ஹுட்டு என்று பதிந்தார்கள். சில ஹுட்டுகள் அடையாள அட்டையில் டுட்சி எனப் பதிந்தார்கள். அப்படி ஒற்றுமையா இருந்த இனம்தான்.'

சிறிது நேரம் பேச்சு ஒன்றுமில்லை. பழைய நினைவுகள் அவனை அலைக்கழித்து விட்டன எனப் பட்டது. நெடுநேரம் ஆழ்ந்து யோசித்தான். 'ஐயா, என்னை மன்னிக்க வேண்டும். நான் பராமரிப்பு கம்பனியை சேர்ந்தவன் அல்ல. ஒரு நண்பன் சொல்லி இந்த வேலைக்கு வந்திருக்கிறேன். என்னுடைய அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது. மேன்முறையீடும் தோல்வி. என்னை நாடு கடத்த போலீஸ் தேடுகிறது. என் பசியை போக்க இந்த வேலை தேவை. மன்னித்து விடுங்கள்.'

பரமேஸ்வரன் ஆழ்ந்து யோசித்தார். போலிசாரால் தேடப்படும் ஒருவனுக்கு அடைக்கலம் கொடுத்தால் அவரும் மாட்டிவிடுவார். மனைவிக்கு சொன்னால் இன்னும் பெரிய பிரச்சினையாகிவிடும். சிறிது நேரம் ஒன்றுமே பேசாமல் காரை ஒட்டினார். அவர் ஒன்றுமே செய்யவில்லை. கார் தானாகவே வழுக்கிக்கொண்டு ஓடியது. திடீரென்று அவர் மூளை பிரகாசித்தது. அவருக்கே ஆச்சரியம். 'நீதான் டுட்சியாச்சே. உனக்கு என்ன பிரச்சினை? உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாவியை நீந்திக் கடந்தவன் அல்லவா? உன் மேன்முறையீட்டை எப்படி நிரகரித்தார்கள்?' 'பெரிய தவறு நடந்துவிட்டது ஐயா. என்னுடைய அடையாள அட்டையில் ஹுட்டு எனப் பதிந்திந்திருந்ததை அகதி நீதிபதி கண்டுபிடித்துவிட்டார்.'

மனைவியிடம் சொன்னால் பிரச்சினை இன்னும் பெரிசாகிவிடும். அவரே முடிவு எடுப்பதென்று தீர்மானித்தார். மூளையிலே யோசனை தோன்றியது. அவருக்கு பெரும் திருப்தி அளித்த யோசனை. தன்னால் இப்படி யோசிக்க முடிந்ததையிட்டு அவருக்கே பெருமையாக இருந்தது. இப்படிச் சொல்லலாம் என நினைத்தார். 'என் மனைவியுடன் ஆலோசித்திவிட்டு உன்னை மறுபடியும் அழைக்கிறேன். இதோ இரண்டு நாளுக்கான முழுச் சம்பளம்.' ஒரு முறை வாய்க்குள் அந்த வசன அமைப்பை சொல்லிப் பார்த்தார். அதுதான் சரியென்று தோன்றியது.

திடீரென்று பின்னாலிருந்து கர்முர் என்ற சத்தம் எழுந்தது. அவரால் மூசாவினுடைய முகத்தை பார்க்க முடியவில்லை. அது சரிந்து சீட்டின் பின்னால் மறைந்து கிடந்தது. 'என்ன, என்ன? மூசா என்ன?' பதில் இல்லை. விலங்கின் உறுமும் சத்தம் பின்னால் எழுந்தது. கடமுடா என்று பற்கள் கடிபடும் சத்தம். மூசா கதவை உதைத்தான். பின்னர் வளைந்து காலால் கூரையில் ஓர் உதை விட்டான். உடல் முறுகி எழுவதும் விழுவதுமாக இருந்தது. கால்கள் தொடர்ந்து உதைத்தாலும் நெடுஞ்சாலையில் கார் வேகம் குறையாமல் சென்றது. அவருக்கு ஓரளவு விளங்கியது. மூசாவுக்கு வலிப்பு வந்து துடித்துக் கொண்டிருக்கிறான். நாக்கு தொண்டையில் உள்ளே போனால் இறந்துவிடுவான். அவருக்கு நடுக்கம் பிடித்தது. ஆம்புலன்ஸை அழைக்க முடிவு செய்தார். நெடுங்சாலையில் ஓடியபடியே அழைப்பதால் என்ன பிரயோசனம். முதலில் நெடுஞ்சாலையில் இருந்து வெளியேறி காரை நிறுத்துவோம் என நினைத்தார். கைகள் நடுங்கத் தொடங்கின. வெளியேறும் வீதி வர இரண்டு நிமிடம் ஆனது. நெடுஞ்சாலையை விட்டு வெளியே காரை வேகமாக எடுத்து நிறுத்திவிட்டு காரிலே உள்ள டெலிபோனில் அவசர உதவியை அழைக்க தொடங்கியபோது பின்னாலிருந்து ஐயா என்ற குரல் கேட்டது. 'ஐயா, இது ஒன்றும் பயப்படும்படியான விசயமல்ல. சாதாரண வலிப்புதான். சிலவேளைகளில் வரும். வந்தது போலவே போய்விடும்.' ஆம்புலன்ஸ் வேண்டாம் என்றால் சரி. ஆஸ்பத்திரிக்கு போவோம்.' ஐயா எனக்கு இது அடிக்கடி வருவதுதான். ஆஸ்பத்திரிக்கு போனால் என்னை நேரே விமானத்தில் ஏற்றி அனுப்பிவிடுவார்கள்.'

அது உண்மைதான். பரமேஸ்வரனுக்கு பயம் பிடித்தது. கதவை திறந்து பின் சீட்டைப் பார்த்தார். அவனுடையை வாந்திக்கு மேல் அவன் உட்கார்ந்திருந்தான். மணம் குமட்டிக்கொண்டு வந்தது. அவன் அணிந்திருந்த உடுப்பிலும் வாந்தி சிந்தியிருந்தது. இடது பக்க கதவு நெளிந்து போய் விட்டது. கார் கூரையில் மூசாவின் வலது கால் அடையாளம் கறுப்பாக ஆழமாகப் பதிந்துபோய் கிடந்தது. பரமேஸ்வரனுக்கு வேகமாகச் சிந்தித்து பழக்கமில்லை.

மனைவியை அழைப்போமா என்று மறுபடியும் யோசித்தபடியே ஒரு கோப்பிக் கடையை தேடினார். மனைவி சொன்னது ஞாபகம் வந்து அவருக்கு சிரிப்பை வரவழைத்தது. ஏப்ரல் மாதம் வந்துவிட்டது. பனிக்காலத்தில் அடைந்து கிடந்த புறாக் கூட்டம் வெளியே வந்து கூட்டம் கூட்டமாக தின்றுவிட்டு எச்சமிடும். காரை நிறுத்தும்போது பார்த்து நிறுத்துங்கள். மின் விளக்கு கம்பத்திற்கு கீழே நிறுத்த வேண்டாம். மேலே பார்த்தார். விளக்கு கம்பம் இல்லை. புறாக்கூட்டமும் தென்படவில்லை. காரை அவசரமாக நிறுத்திவிட்டு கோப்பி கடைக்குள் நுழைந்தார். யோசிக்க ஓர் இடமும், கொஞ்ச நேரமும் அவசர தேவையாக இருந்தது. 'மூசா, நீ கழிவறைக்குசென்று முகத்தை கழுவி உடையை சுத்தம் செய்துவிட்டு வா. நான் இரண்டு கோப்பிக்கு ஆணை கொடுக்கிறேன்.' பரமேஸ்வரனால் முடிவுக்கு வர முடியவில்லை. 'ஐயா, ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். என்னால் ஒரு பிரச்சினையும் வராது. பூச்சு வேலைக்கு ஐந்து நாள் எடுக்கும். நான் ஒருநாள் வேலைக்கு கூலி வாங்கமாட்டேன்' என பெருந்தன்மையாகச் சொன்னான். சரி மனைவியிடம் சொல்லிவிடவேண்டும் என தீர்மானித்தார். இப்படியான பெரிய பிரச்சினைகளை அவருடைய மனைவிக்குத்தான் தீர்த்து பழக்கம். சட்டவிரோதமாக தங்கி இருப்பவனுடன் தொடர்பு வைத்தால் போலிஸ் அவர்களையும் சந்தேகப்படும். விசாரணைக்கு அலைய நேரிடும். புது மருந்துக் கடையை திறக்கமுடியாமல் போய்விடும்.

இருவரும் கடுதாசிக் குவளையில் கோப்பியை காவிக்கொண்டு வெளியே வந்தார்கள். காரைக் காணவில்லை. கார் நிறுத்திய வெறும் சதுரம்தான் இருந்தது. 'இங்கே நிறுத்தக்கூடாது' என்று ஓர் அறிவிப்பு பலகை மாத்திரம் காணப்பட்டது. மேலே பார்த்தாரே ஒழிய பலகையை பார்க்கவில்லை. சிகரெட்டை பல்லினால் கடித்தபடி நின்ற ஒருவன் 'நகரசபை ஆட்கள் இப்பதான் காரை இழுத்துப் போனார்கள்' என்றான். செல்போனில் நகராட்சி அலுவலரின் தொலைபேசி எண்ணைக் கண்டுபிடித்து அவருடன் பேசினார். பேசியவர் குரல் குதூகலமாக இருந்தது. ஒருவருடைய அழிவில் இன்னொருவருக்கு எத்தனை மகிழ்ச்சி. அவர் சொன்ன இடத்துக்கு வாடகைக் காரில் புறப்பட்டார்கள். அபகரித்த கார்களை நிறுத்தியிருந்த இடத்தில் ஏறக்குறைய இருபது கார்கள் தங்கள் தங்கள் உடமையாளர்களுக்கு காத்துக்கொண்டிருந்தன. ஒரு பெண் கூண்டுக்குள்ளே தொலைபேசி முன்னால் உட்கார்ந்திருந்தாள். அழகு முடிந்து போன பெண். இவர்கள் ஒன்றுமே கேட்கவில்லை. அவளாகவே கையினால் ஒருவரை காட்டினாள். பரமேஸ்வரனுடைய மனைவியின் breeze blue கார் அத்தனை கார்களிலும் பளபளத்துக் கொண்டு நின்றது தெரிந்தது. அவரிடம் கார் நம்பரைச் சொல்லி தண்டப் பணம் எத்தனை என்றார். கம்புயூட்டரில் விவரங்களை அடித்துவிட்டு அந்த அலுவலர் நிமிர்ந்து பார்த்து வாய் கூசாமல் 320 டொலர் என்று இளித்துக் கொண்டே கூறினார். பரமேஸ்வரனிடமிருந்து தோல்விச் சிரிப்பு ஒன்று வெளிப்பட்டது. பற்றுச்சீட்டை தரும்போது 'நாங்கள் தூக்கி வந்த முதல் பெண்ட்லி கார்' என்றார் எதையோ சாதித்தது போல.

கார் நெடுஞ்சாலையில் ஏறியதும் மூசாவிடம் பேச்சுக் கொடுத்தார். 'உனக்கு ஒரே நாளில் இரண்டுதரம் வலிப்பு வருமா? 'வராது ஐயா.' 'வலிப்பு வரமுன்னர் ஏதாவது அறிகுறி தெரியுமா?' 'அப்படி இல்லை, ஐயா. என்னுடைய அம்மா சொல்லுவார் எந்த ஒரு மாதத்தில் இரண்டு பௌர்ணமி வருகிறதோ அந்த மாதத்தில் எனக்கு வலிப்பு வரும் என்று. மார்ச் மாதம் இரண்டு பௌர்ணமி வந்தது. வலிப்பு வரும் என்று எதிர்பார்த்தேன். வரவில்லை. கொஞ்சம் தள்ளி இப்ப ஏப்ரலில் வந்திருக்கிறது. உங்களுக்கு பயமாயிருக்கிறதா?' 'இல்லை, அப்படி ஒன்றுமில்லை' என்றார் பரமேஸ்வரன்.

இனிமேல் போய் வர்ணம் வாங்க வேண்டும். மனைவி ஒலிவ் பச்சை என்று வர்ணித்தார். அது என்ன ஒலிவ் பச்சை? சரியான வர்ணத்தை வாங்காவிட்டால் அது வேறு பெரும் பிரச்சினை ஆகிவிடும். ஐயா என்ற சத்தம் பின்னாலிருந்து எழுந்தது. 'ஐயா, காரை ஒரு பெட்ரோல் ஸ்டேசனில் நிறுத்துங்கள். அங்கே கார் கழுவும் மெசின் காரின் வெளிப்புறத்தை கழுவட்டும். நான் காரின் உள்பகுதியை சுத்தமாகக் கழுவிவிடுவேன். புதுக்கார் போலவே இருக்கும். ஒருவரும் கண்டு பிடிக்க முடியாது. உங்கள் மனைவி காரில் எவ்வளவு பற்று வைத்திருக்கிறார் என்பது எனக்கு தெரியும்.' 'நன்றி, உனக்கு பசிக்கிறதா?' 'இது என்ன கேள்வி ஐயா? பசிதான் என் இயற்கை நிலை.' 'என்ன சாப்பிட விருப்பம்?' 'சதுர ரொட்டி கிடைத்தால் நல்லாயிருக்கும்.' 'சதுர ரொட்டியா?' 'ஆமாம் ஐயா. ஒரு ரொட்டியை இழுத்து இழுத்து இரண்டு ரொட்டி சைசாக மாற்றிவிடலாம்.' அவருக்கு மறுபடியும் சிரிப்பு வந்தது.

முதலில் காரைக் கழுவி, பின்னர் நாலு ரொட்டியை வாங்கிக் கொடுத்து, இரண்டு நாள் சம்பளப் பணத்தையும் தந்து ஆளை அனுப்பிவிடலாம். மனைவிக்கு எதை சொல்வது, எதை மறைப்பது என்பதை அவர் பின்னர் முடிவு செய்யலாம். அவருடைய மூளையின் எல்லை வரை யோசித்துவிட்டார். ரோட்டிலே கார்கள் குவிந்துவிட்டன. மணி மூன்றை நெருங்கிக்கொண்டிருந்தது. முதலில் வந்த பெட்ரோல் தரிப்பிடத்துக்குள் காரை திருப்பினார். கண்ணாடியில் பின்னால் பார்த்தால் ஆளைக் காணவில்லை நெஞ்சம் பதை பதைத்தது. கார் எஞ்சின் ஓடிக்கொண்டிருக்க, அவசரமாக இறங்கி பின் கதவை திறந்து பார்த்தார். மூசாவின் வாய் சற்று திறந்திருந்தது. வாயிலிருந்து நூல்போல நீர் இறங்கி தொடையை தொட்டுக்கொண்டு நின்றது. ஒருவிதமான சத்தத்துடன் மூச்சு ஏறி இறங்கியது.

காரைக் கழுவி புதிது போல ஆக்கித் தருவதாக உறுதி அளித்தவன், ஒரு ரொட்டியை இழுத்து இழுத்து இரண்டு மடங்காகச் செய்யப்போவதாகச் சொன்னவன், பன்னிரெண்டு மணிநேரம் கிவு வாவியை நீந்திக் கடந்தவன், ஏறக்குறைய 5000 டொலர் கார் சேதத்தை ஈடு செய்ய ஒருநாள் சம்பளத்தை இலவசமாகத் தருவதாக வாக்குக் கொடுத்தவன், எப்பொழுது போலீஸ் பிடித்தாலும் நாடு கடத்தப்படக் கூடியவன் தன்னை மறந்து ஒரு குழந்தைபோல உறங்கிக்கொண்டிருந்தான்.

muththulingam.a@thaiveedu.com

ஒரே நேரத்தில் இரண்டு கலைவிழாக்கள் ஒழுங்கு செய்யப்படுவதைத் தவிர்க்க உங்கள் கலை விழாக்களை முன்கூட்டியே 'இணையம்' இணையத் தளத்தில் பதிவு செய்து விடுங்கள். உங்கள் விழாவின் திகதியைத் தீர்மானிப்பதற்கு முன்பு இணையத்தைப் பார்த்து அந்தத் திகதியில் வேறு நிகழ்ச்சிகள் ஏதும் உள்ளதா என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் செல்லவிருக்கும் விழா, நிகழ்வுகள் சம்பந்தமான தகவல்களை இணையத்தைப் பார்த்து அறிவதுடன், நிகழ்வு நடைபெறும் இடத்தின் வரைபடத்தையும் இணையத்தில் பார்க்கமுடியும். இது முற்றிலும் இலவசமான சேவை.

www.inayam.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஒரு பிறைவேட் மோட்கேஜ் கொடுப்பவரா?

உங்கள் முதலீட்டை மீள பெற சிக்கலாக உள்ளதா?

அப்படியானால் இப்படிப்பட்ட சில சிக்கல்களை எதிர்கொள்கிறீர்களா?

அடமானம் எடுத்தவர்கள் மாதாந்த கட்டுப்பணம் செலுத்த தவறுதல்.

மற்றைய மோட்கேஜ்களுக்கு ஒழுங்காக பணம் செலுத்த தவறுதல்.

வீட்டுக் காப்புறுதி கட்டணம் ஒழுங்காக செலுத்த தவறுதல்.

கொண்டோ காசு, புறப்பட்டி ரக்ஸ் செலுத்த தவறுதல்.

வேறு மோட்கேஜ் கொடுத்தவர்கள் பவர் ஒப் சேல் நோட்டீஸ் அனுப்பி இருப்பது.

அடமானம் பெற்றவர்கள் மீளத்தர முடியாமல் மறுக்கும் நிலைமை.

வருமுன் காப்பதே சிறந்தது

தயா PK கந்தையா
வழக்கறிஞர்



STATEMENT OF CLAIM (MORTGAGE ACTION) Court File No.

ONTARIO
SUPERIOR COURT OF JUSTICE

[redacted]

Plaintiff

- and -

[redacted]
and [redacted]

Defendants

STATEMENT OF CLAIM (MORTGAGE ACTION – FORECLOSURE)

TO THE DEFENDANT(S)

A LEGAL PROCEEDING HAS BEEN COMMENCED AGAINST YOU by the Plaintiff. The claim made against you is set out in the following pages.

IF YOU WISH TO DEFEND THIS PROCEEDING, you or an Ontario lawyer acting for you must prepare a statement of defence in form 18A prescribed by the Rules of Civil Procedure, serve it on the Plaintiff(s) lawyer or, where the Plaintiff(s) do(es) not have a lawyer, serve it on the Plaintiff(s), and file it, with proof of service, in this court office, WITHIN TWENTY DAYS after this statement of claim is served on you, if you are served in Ontario.

If you are served in another province or territory of Canada or in the United States of America, the period for serving and filing your statement of defence is forty days. If you are served outside Canada and the United States of America, the period is sixty days.

Instead of servicing and filing a statement of defence, you may serve and file a notice of intent to defend in Form 18B prescribed by the Rules of Civil Procedure. This will entitle you to ten more days within which to serve and file your statement of defence.

IF YOU PAY THE PLAINTIFF(S) CLAIM and $1,000.00 for costs, within the time for serving and filing your statement of defence, you may move to have this proceeding dismissed by the court. If you believe the amount claimed for costs is excessive, you may pay the Plaintiff(s) claim and $400.00 for costs and have the costs assessed by the court.

SPECIMEN

NOTICE OF SALE UNDER CHARGE

TO: THE PARTIES SHOWN ON SCHEDULE "A" ATTACHED HERETO

TAKE NOTICE that default has been made respecting payments and other covenants under a certain charge of land made between [redacted] and [redacted] as chargor and [redacted] as chargee, on the security of:

[redacted]

[redacted]

Municipally known as [redacted]

and registered in the Land Registry Office for the Land Titles Division of Durham (No. 40), on the 31th day of May, 2018 as Instrument No. [redacted] (the "Charge").

And [redacted] hereby gives you notice that the amounts now due on the Charge for principal, interest and costs, are as follows:

Principal Balance	[illegible]
Interest to September 28, 2018 ([illegible] days @[illegible])	[illegible]
Three Months Interest Penalty as per the Terms of the Charge	[illegible]
Dishonoured Payment Fee	[illegible]
Legal Action Administration Fee	$1,500.00
Statement Preparation Fee	[illegible]
Legal Fees and Disbursements [illegible]	$2,500.00
TOTAL:	[illegible]

And unless the said [illegible] together with any further [illegible] at the rate of [illegible] per cent per annum and any further costs and disbursements incurred [illegible] proceedings are paid on or before the 4th day of November, 2018, the chargee shall sell the [illegible] by the Charge under the provisions contained in it.

THIS NOTICE is given to you as you appear to have an interest in the charged property and may be entitled to redeem the same.

DATED at Toronto, Ontario this 25th day of September, 2018.

[redacted]

SPECIMEN

Book a free consultation online at
www.kandiahlaw.com
416-333-1001

KANDIAH LAW

PROFESSIONAL CORPORATION

T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002

Credit Recovery - Mortgage Enforcement - Real Estate Law - Family Law

Legal Advise - Legal Research - Legal Analysis - Legal Referrals - Document Review - Document Drafting

Thaya PK Kandiah BAS, LLB (Hon)
Barrister, Solicitor & Notary Public

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIFEPLAN INVESTMENTS
Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CEO
905-294-PLAN (7526)
www.lifeplaninvestments.ca
416-894-2009
How can we help you plan your future?
. Tax and Estate Planning
. Wealth Management
. Financial Planning
. Retirement Planning
. Personal Insurance
. Business Insurance
Download Free MyLifePlan APP

இணையம்
inayam.com

Mega Financial Group
உங்கள் அனைத்து விதமான காப்புறுதித் தேவைகளுக்கும்.
Call Now
Raj Nadarajah
President & CEO
416-666-1120

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

CUSTOM BUILT HOMES COMING SOON
2019 SUMMER CLOSING • DETACHED HOMES
MEADOWVALE RD AND ELLESMERE RD
2 CAR GARAGE • 4 BEDROOMS • 4 WASHROOMS
NO HOMES AT THE BACK • 4 CAR PARKING
30 MINS WALK TO U OF TORONTO SCARBOROUGH
MORE INFO CALL 416-670-6467

Supen Subramaniam
Manager, Residential Mortgage
Real Estate Secured Lending
Your Mobile Mortgage Specialist
சகல மோட்கேஜ் தேவைகளுக்கும் அழையுங்கள்.
TD Canada Trust
C: 416.844.8692
supenthiran.subramaniam@td.com
www.tdcanadatrust.com/mst/subensubramaniam

COURTYARDS
Vaughan நகரில் புதியதோர் பல் வைத்திய நிலையம்
Dr. Annahvathany Sivakumaran, DMD
Dr. வதனி சிவகுமாரன்
Tel: 905-553-5266 | courtyardsdental@gmail.com
அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
All Procedures including:
• Braces • Cosmetic Dentistry • Root Canal Treatment
• Implants • Wisdom Tooth Extraction • Oral Diseases
2396 Major Mackenzie Dr. W., Unit #6, Vaughan,
(Keele & Major Mackenzie) Parking available

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX முதல் தடவையாக யாழ் மண்ணில்
RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna
LATHAN VARATHARAJAH
Broker Owner
+94 76 493 3331
+1 416 230 7007
lathan@remaxnorth.lk

Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling/ Leasing/ Investing
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
Homelife/Future Realty Inc.,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8
*Independently owned And Operated

Kugaraj Ratnasabapathy
Sales Representative
Dir: 416-786-3332
RE/MAX ACE
BROKERAGE
Independently owned and operated
416-270-1111
3-1286 Kennedy Road, Toronto, ON M1P 2L5

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir: 416-276-9999
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Progress Ave, Suite 210, Toronto ON, M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM CHS
President & CEO
INFORCE LIFe Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
QUALITY ADVICE YOU CAN TRUST

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532
Office: 416 321 6969
Fax: 416 321 6963
tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario

Criminal Summary Offences
Provincial offences / Traffic Tickets
Landlord & Tenant Matters
Immigration & Refugee Matters
Anjeline J Thisairajah
B.A(Hons), M.Sc., Ph.D.
Paralegal, Advocate,
Commissioner of Oaths, Interpreter & Translator
T: 647-291-1357

Maliny Bridal
Bridal makeup, Arangretram makeup
And for all your makeup needs
for auspicious ceremonies
Maliny Bridal
H 416 497 0052 | C 416 670 6942
malinyb@hotmail.com
Specialized in saree pleating
Professional makeup expert with 25 years

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org